தம்பிக்கு

# அண்ணாவின் கடிதங்கள்

[முதற் பகுதி]

C. N. அண்ணாதுரை, M. A.

பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை - 600001

முதற் பதிப்பு: ஜனவரி, 1963
இரண்டாம் பதிப்பு: மார்ச், 1979

விலை : ரூ. 8-50

அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.

# பொருளடக்கம்


| கடித எண் | | | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி | ... | 2 |
| 2. | புதிய உற்சாகம் | ... | 15 |
| 3. | மத்தாப்பூ | ... | 19 |
| 4. | ஆவடியும் காவடியும் | ... | 25 |
| 5. | வளை ஒலி கேட்கிறதா! ! | ... | 36 |
| 6. | மானே ! தேனே ! ! | ... | 45 |
| 7. | மகுடி ஊதும் மகானுபாவர்கள் | ... | 57 |
| 8. | பேசட்டும், தம்பி, பேசட்டும் | ... | 66 |
| 9. | குருபீடம் | ... | 80 |
| 10. | அங்கே பவனம், இங்கே படம் ! | ... | 89 |
| 11. | போர் ! போர் ! ! | ... | 98 |
| 12. | சிறை அனுபவங்கள் | ... | 106 |
| 13. | அளவுகோல் எது? | ... | 116 |
| 14. | ஆலையில்லா ஊரில்... | ... | 129 |
| 15. | இந்திராணி சேலை ! | ... | 130 |
| 16. | எழிலோவியம் | ... | 134 |
| 17. | துறவி—காவியில்லை ! | ... | 147 |
| 18. | 'ழ' கரமும் 'ற' கரமும் | ... | 171 |
| 19. | ''எங்கள் நாடு !'' | ... | 180 |
| 20. | கண்ணீரும் பன்னீரும் | ... | 194 |
| 21. | உலாவும் ஊழலும் ! | ... | 204 |
| 22. | ஆரியம் இருக்கும் இடம் ! | ... | 212 |
| 3. | அத்தர் வியாபாரம் | ... | 222 |
| 24. | போலீஸ் ! போலீஸ் ! | ... | 229 |
| 25. | போலீஸ் ! போலீஸ் ! | ... | 235 |
| 26. | குன்றெல்லாம் கேட்கிறது ! | ... | 245 |

# பதிப்புரை

பத்திரிகைக் கடைகளில் 'திராவிடநாடு' வருவதை ஆவலோடு எதிர்பார்த்திருந்து, வந்ததும், அதில் 'தம்பிக்கு' வந்திருக்கிறதா எனப் பார்த்து, அதைக் கடைமுன்னலேயே நின்று ஆர்வத்தோடு படிக்கும் தம்பிமார் பலரைப் பார்த்திருக் கிறேன். அதில்வரும் கருத்தோவியங்களை மனப்பாடம் செய்து, பொன்மொழிகளாகச் சொல்லிச் சொல்லிப் பூரிக்கும் தம்பிகளையும் கண்டிருக்கிறேன். 'திராவிடநாடு' இதழ்களைப் 'பைண்டு' செய்து, அதில் கடிதப் பகுதிகளைக் கோடிட்டு வைத்து, நினைக்கும் போதெல்லாம் படித்துப் படித்து மகிழும் தம்பிகளையும் கண்டிருக்கிறேன். இக் கடிதங்கள் இளைய தம்பி மார்கள் உள்ளங்கள் தோறும் நிறைந்திருப்பதுபோலவே தலைவர்களையும் கவர்ந்திருக்கிறது என்பதை நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்நூலுக்கு வழங்கியுள்ள முன் னுரையில் கண்டு இன்புற்றேன். தம்பிமார்களையும் தலைவர் களையும் ஒருங்கே கவர்ந்துள்ள இக் கடிதங்களை நூல்வடிவில் வெளியிடும் வாய்ப்பு எங்கள் நிலையத்துக்குக் கிடைத்திருப் பதை எண்ணி இன்பம் அடைகின்றேன்.

அறிஞர் அண்ணு அவர்கள் 1955-ஆம் ஆண்டிலிருந்து 'திராவிடநாடு' இதழில் இக்கடிதப் பகுதியைத் தொடங்கி எழுதி வருகிருர்கள். இவை வாரந்தோறும் தொடர்ந்து வெளிவரவில்லை. சில வாரங்கள் தொடர்ந்தும், சில சமயங் களில் இடையிடையேயும், ஒருசில சமயங்களில் நீண்டநாட்க ளுக்குவராமலும்கூட இருந்திருக்கின்றன. இதில் நாடு, மொழி, அரசு, சமயம், சாத்திரம், கலை, விஞ்ஞானம், நாட்டு நடப்பு போன்ற பலதுறைச் செய்திகள் பற்றியும், கழகத் தலைவர்கள், கழகத் தோழர்கள், தமது நண்பர்கள், உலகத் தலைவர்கள்

பற்றிய தமது கருத்துக்களையும், கழகப்பணி வெற்றிபெற—அதன் உயர்ந்தநோக்கங்கள் நிறைவேறக் கழகத்தொண்டர் கள் நடந்துகொள்ள வேண்டிய முறை—செய்ய வேண்டிய தியாகம்—ஆற்றவேண்டிய தொண்டுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள். இவற்றை அந்த அந்தத் துறைகளுக்கு ஏற்பத் தனித்தனியாகப் பிரித்துத் தனித்தனி நூலாக வெளியிட எண்ணி இருந்தேன். அப்படிச்செய்வதால் நாட்கள் கழிவதை எண்ணி, முதலில் 'திராவிடநாடு' இதழ்களில் வெளிவந்த வரிசைப்படி வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறேன். இதுவரை வெளிவந்துள்ள கடிதங்கள், 250 பக்கங்கள் கொண்ட தொகுதியாகப் பத்துத் தொகுதிகள் வெளிவரும் அளவிற்கு உள்ளன. தற்பொழுது முதல் இரண்டு தொகுதிகள் வெளி வருகின்றன. தமிழ்ப் பெருமக்களின் பேராதரவினுல் மற்றத் தொகுதிகளையும் விரைவில் வெளிக்கொண்டுவர முனைந்துள்ளேன்.

அறிஞர் அண்ணு அவர்கள் முன்னமே அவர்களுடைய நூல்களை வெளியிட எங்கள் நிலையத்திற்கு வாய்ப்பளித்தார்கள். இக்கடிதங்களையும் நூல்களாக்கி வெளியிட இசைவளித்துள்ளார்கள். அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்நூலுக்கு முன்னுரை அளித்து எங்களைப் பெருமைப் படுத்தியுள்ளார்கள். திரு. டி. எம். பார்த்தசாரதி அவர்கள் இந்நூல் வரிசை உருப்பெறுவதில் எங்களுக்குப் பலவகையிலும் உதவியுள்ளார்கள். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரி நிலையம்,
சென்னை-1.
7—1—'63

க. அ. செல்லப்பன்

# முன்னுரை

## திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

'அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள்' நூல் வடிவம் கொண்டு, அழகும் கவர்ச்சியும் ஒருங்கே ஏற்று, என் கைக்கு வரப்பெற்று மிக்க பேருவகையுற்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிடநாடு' இதழ் மூலம் அருமைத் தம்பிமார்களுக்கு எழுதிவந்த முடங்கல்கள் அனைத்தும் நூல் வடிவம் பெற்றால், அந்த நூல் கருத்துக்கருவூலமாகத் திகழப்பெறுமே என்ற வேணவா என் உள்ளத்தில் நீண்ட நாட்களாக எழுந்ததுண்டு. என்னைப்போன்றே பல்லாயிரக்கணக்கான தம்பிமார்களுக்கும் வேணவா கிளர்ந்தெழுந்திருக்கும் என்பது உறுதி. அந்த வேணவாவை இனிது நிறைவேற்றி வைக்கும் அரும்பெருந் தொண்டை, 'பாரி நிலையத்தார்' செய்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன். பாரி நிலையத்தாரை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையையும், அவரது எழுதுகோல் முனையிலிருந்து உருப்பெற்றெழுந்து நாடெங்கணும் வெற்றியுலாவரும் கதைகள்—கட்டுரைகள்—நாடகங்கள்—திரைப்பட வசனங்கள்—எழுத்தோவியச் சுவரொட்டிகள்—துண்டு அறிக்கைகள் ஆகியவற்றையும், அவற்றில் தமிழ்மணம் மிகச் சிறந்த முறையில் கமழ்வதையும், இனிய ஓசை பயக்கும் சொற்கள் அருவியின் வீழ்ச்சியெனத் தங்கு தடையின்றிப் பாய்ந்து துள்ளிக் குதித்து ஓடுவதையும், கருத்துக்கள் செறிந்து காணப்படுவதையும், உவமைநயங்கள் பெருவாரியாக ஆங்காங்குப் பளிச்சிட்டு மின்னுவதையும், அறிவும் ஆற்றலும்—உண்மையும் உயர்வும்—திண்மையும் திட்பமும்—சொல்லழகும் பொருளாழமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு துள்ளிக் குதிப்பதையும் தமிழ் கற்றறிந்த நல்லறிவு படைத்தார் அனைவரும் நன்கு உணர்வர். தமிழின்பத்தை எல்லா வகையிலும் சுவைக்க விரும்புவோர், இந்நூலைச் சுவைத்தாலே போதும். எல்லா

வகையான இனிய சுவைகளும் இதனுள் பொதிந்து கிடக்கின்றன.

படித்து மகிழ்ந்து பயன் பெறுவதற்குரியவைகள் பலப்பல இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் 'கடிதத்தைப் படிப்பதற்கு பேராவல் காட்டுகிறோம். அஞ்சலை அன்றாடம் வழிமேல் விழிவைத்துப் பார்க்க நாம் தவறுவதில்லை. அஞ்சல் வந்தவுடன் மற்றப் பணிகளையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டுப் பரபரப்புணர்ச்சியுடன் அவற்றைப்பிரித்துப் படிக்கிறோம்; பலதரப்பட்ட செய்திகளையும், கருத்துக்களையும் அறிந்து கொள்கிறோம்.பொதுவாகக் காதலியிடமிருந்தும்,நண்பர்களிடமிருந்தும், நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வரும் முடங்கல்களைப் படிப்பதில் ஒருவன் எவ்வளவு ஆர்வமும்,அக்கறையும், அகமகிழ்ச்சியும் காட்டுவானோ, அவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களைப் படிப்பதிலும் ஒவ்வொருவரும் காட்டுவர். அவ்வளவு கவர்ச்சியும், அறிவுத்தெளிவும், ஆராய்ச்சித்திறனும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களில் காணப்பெறும். அறிஞர் அண்ணா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை எழுத்துக்களின் மூலம் எளிதில் கண்டறிய இந்நூல் பெரிதும் பயன்படும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் 'தம்பிக்குக் கடிதம்' என்றுதலைப்பிட்டு எழுதிய கடிதங்களைப் பத்துத் தொகுப்புகளாகக் கொண்டுவர முயற்சிஎடுத்து, இப்பொழுது இரண்டு தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றனர். இந்தப் பத்துத் தொகுப்புகளும் தமிழகத்தின் அரிய பெரிய கருத்துக் கருவூலங்களாகும். இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டு தொகுப்புகளைப் போலவே, விரைவில் ஏனைய எட்டுத் தொகுப்புகளும் வெளிவருவனவாக!

அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லமுதைக் கொண்டு இலக்கிய விருந்துபடைக்க முன்வந்த 'பாரி நிலைய'த்தாரைப் பாராட்டுகிறேன். தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த இலக்கிய விருந்தை உண்டு, மகிழ்ந்து, பயன்பெற்று, இனிதுற வாழ்வார்களாக!

இரா. நெடுஞ்செழியன்

4—1—'63

# காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி

*இரண்டாவது மாநில மாநாடு—*
*பொதுச் செயலாளர், நாவலர் நெடுஞ்செழியன்*

தம்பி,

"கப்பலிலா போகப்போகிறீர்கள்—எந்தெந்தத் தேசம்—எவ்வளவு நாளாகும் திரும்பிவர—மாநிலமாநாடு நடைபெற வேண்டுமே"—என்றெல்லாம் கேட்டிருக்கிறாய்,—கனிவு ததும்பும் கடிதம் மூலம். தினத்தந்தியிடம் மட்டும் சொல்லி விட்டா நான் வெளிநாடு பயணமாவேன்—உன்னிடம் கூறுமலா—என் உள்ளத்துக்கு மகிழ்வும் நம்பிக்கையும் ஊட்டும் தம்பிமார்களின் 'அனுமதி' பெருமல், வெளிநாடு போகத்தான் முடியுமா?

ஆமாம்—வெளிநாடுகளுக்குப் போய்வருவது என்பது என்ன எளிதான காரியமென்று எண்ணுகிருய்—பத்திரிகைகளில் தலைப்புப் போடுவதும்—படம் போடுவதும் எளிது—பாஸ்போர்ட் கிடைப்பது அவ்வளவு எளிது என்று எண்ணுகிருய்! நான், அவ்வளவு சுலபத்தில் பாஸ்போர்ட் கிடைத்து விடும் என்று எண்ணவில்லை. வேண்டுமானுல், அடுதத பொதுத் தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பு 'பாஸ்போர்ட்' கேட்டால் கிடைக்கக்கூடும்! பிறகு? பணம்வேண்டும். 'பாஸ் போர்ட்' போலவேதானே அதுவும்.

"அண்ணு! இப்படியா கூறுவது, நாங்கள் இருக்கிறேம்" என்று, அடுத்த கடிதத்தில் எழுதிட எண்ணுவாய்—

ஆனால், முதலில் பணம் திரட்டு தம்பி, என் வெளி நாட்டுப் பயணத்துக்காக அல்ல, மாநில மாநாட்டுக்கு!

ரூபாய் இருபத்து ஐயாயிரம் தேவை!

ஒரு ஆயிரம் மட்டுமே தரப்பட்டிருக்கிறது—இந்த இலட்சணத்தில், பொருளாளர் என்று பட்டம் தரப்பட்டுவிட்டிருக்கிறது.

நான் வெளிநாட்டுக்கு போவது என்பது இப்போதைக்கு இல்லை—இருபத்து ஐயாயிரம் சேர்த்து—இரண்டாவது மாநில மாநாட்டைச் சிறப்புற நடத்திவிட்டு, பொதுத் தேர்தல் குறித்துக் கலந்தாலோசித்து, பணியாற்றிவிட்டு—பிறகே வெளிநாடு—இடையில் சிறைக்குள் தள்ளப்படாமலிருந்தால்!

எனவே நடைபெற வேண்டிய காரியத்தைக் குறித்து, நண்பர்களுடன் கலந்தாலோசித்துக் காரியமாற்று; நான் போகும் கப்பல் தினத்தந்தியில் படமாக வரும்—வேடிக்கையாகப் பார்த்துக் கொள்ளலாம்!

நடைபெற்றுகிவிட்ட பிறகு, சர்வசாதாரணமாகத் தோன்றும்; ஆனால் சிறிது எண்ணிப் பார்த்தால்தான், நாம் எவ்வளவு அருமையான 'கட்டம்' வந்திருக்கிறோம் என்பது விளங்கும்.

நாவலர் நெடுஞ்செழியன், இப்போது நமக்குப் பொதுச் செயலாளர்!

தஞ்சையிலும் மதுரையிலும் நான், பொதுச் செயலாளர் பதவிக்கு வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியபோது, புயலே கிளம்பிற்று—எனக்குச் சிறிது சீற்றம் கூடப் பிறந்தது. ஆனால் மெள்ளமெள்ள ஆனால் வெற்றிகரமாகச் சபலத்தைக் கடந்து விட்டோம். கழகம் புதியதோர் கட்டம் வந்து சேர்ந்திருக்கிறது—நாம் வலிவும் பொலிவும் கொண்டதோர் அமைப்புப் பெற்றிருக்கிறோம் என்கிற நம்பிக்கை நமக்கெல்லாம் ஏற்பட்டுவிட்டது பெருமைக்குரிய செய்தி.

தோழர் நெடுஞ்செழியன் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பது இரண்டாண்டுக் காலமாகவே என் உள்ளத்திலே வளர்ந்த வண்ணம் இருந்த எண்ணம்.

ஓராண்டுக்கு முன்பு இலங்கை 'சுதந்திரன்' ஆசிரியர் சென்னை வந்திருந்த போது, அவரிடம் கூறினேன்—அவர் தமது இதழில் வெளியிட்டிருந்தார்.

நான் மட்டுமல்ல, நமது கழகத்திலே பெரும்பாலானவர்கள் புதிய பொதுச் செயலாளராகத் தோழர் நெடுஞ்செழியன் வர வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றனர்.

இந்த எண்ணம் எனக்குத் தோன்றிய நாள்தொட்டு நான் தோழர் நெடுஞ்செழியனை இந்தப் பொறுப்புக்குப் பக்குவப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, அவருடைய இல்லத்தை என் இருப்பிடமாக்கிக் கொண்டேன்! சிறிதளவு, என்னிடம், பழகுவதில் கூச்சமுள்ள சுபாவம் அவருக்கு— எனவே, அவருடைய இல்லத்தை இருப்பிடமாக்கிக் கொண்டால்தான், என் எண்ணங்கள், நான் சரியென்று கருதும் முறைகள், என் ஆசைகள், எனக்குள்ள அச்சங்கள், இவை பற்றியும், துணைக்கழகங்கள், துளைக்கும் கழகங்கள், தூது விடும் கழகங்கள், வம்புக்கு இழுக்கும் கழகங்கள் ஆகியவை பற்றி என் கருத்து யாது என்பது பற்றியும், உரையாடி உரையாடி எடுத்துக்காட்ட முடியும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, அவர் வீட்டுச் 'சைவத்'தைத் தாங்கிக்கொண்டிருந்தேன்! !

அவரிடம் நேரடியாகக்கூட பிரச்னைகளைப்பற்றிப் பேசுவதில்லை—பிரச்னைகளை நான் மற்ற நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் உடன் இருப்பார்! மிக முக்கியமான கட்டங்களின் போது, புன்னகையாவது பிறக்கும், புருவத்தையாவது நெறிப்பார்! இவ்வண்ணம் இரண்டாண்டுகள். துவக்கத்திலே நான் கொண்ட நம்பிக்கை வளர்ந்து, கனியாகி விட்டது. நமது கழகத்தை அதன் கண்ணியம் கெடாத வகையில் மட்டுமல்ல, வளரும் வகையில், நமது புதிய பொதுச் செயலாளர் நடத்திச் செல்வார் என்ற உறுதியை என்னால் நிச்சயமாக அனைவருக்கும் அளிக்க முடியும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேதான் நான் நெடுஞ்செழியனைக் கண்டது.

உங்களில் பலரும் பார்த்திருப்பீர்கள்—நல்லவேளை அவருடைய துணைவியார் கண்டதில்லை என்று எண்ணுகிறேன்—தாடியுடன் நெடுஞ்செழியனை!

அப்போது, தோழர் அன்பழகன் தீவிரமாகக் கட்சிப் பணியாற்றி வருபவர்—தோழர் நெடுஞ்செழியன் தானுண்டு தன் படிப்புண்டு என்று இருக்கும் போக்கினராகத் தோற்றமளித்து வந்தார். நான் அப்போது தோழர் அன்பழகன், கல்லூரியிலிருந்து வெளியேறியதும் கழகத்தில் வந்து சேருவார், தோழர் நெடுஞ்செழியன் எங்காவது கல்லூரியில் கம்பனின் கவித்திறமை பற்றி (கட்டாயத்தாலும்) இளங்கோ அடிகள் பற்றி (விருப்பத்துடனும்) எடுத்துரைத்துக் கொண்டு, தமிழின் எழிலைக் கண்டும் காட்டியும் பணியாற்றி வருவார் என்றே எண்ணிக்கொண்டேன். அதுபோல நடந்திருக்கக் கூடாதா என்று ஆயாசத்துடன் கேட்கும் அவர் துணைவியார் தெரிகிறார்கள்! ! என்ன செய்யலாம்! அவரோ புயலில் குதித்து விட்டார்! !

தமிழ் எப்படி எப்படி பேசுவதற்குரியது, இலக்கியம் பேச்சுடன் கலந்து வரும்போது எத்தகைய இன்பமளிக்கும் என்றெல்லாம நான் பலமுறை எண்ணிப் பார்த்ததுண்டு - மனதிலே உருவெடுத்துக கொண்டிருநத ஆசை நடமாடக் கண்டேன், தோழா நெடுஞ்செழியன, கழக மேடையில் பேசத் தொடங்கியதும.

கருவூர் ஆற்று மணலில்—நினைவிருக்கிறது - பெரியாரும் இருந்தார—தோழர் நெடுஞ்செழியன் இலக்கியத்தை இனிய முறையிலே எடுத்தளித்தார். நல்ல விருந்து— ஆயினும் என்ன செய்வது? நாளாவட்டத்தில், தரத்தைச் சிறிதளவு தளர்த்தச் சொல்லி வற்புறுத்த வேண்டித்தான் வந்தது. தரத்தை வளரச் செய்யும் போக்கிலா ஆளவநதார்கள் நமமை விட்டு வைக்கிருர்கள்! !

நடை இருக்கட்டும், நணபரின் திறம் இருக்கிறதே, அது கண்டு நான வியப்புற்றேன்.

என்னிடம் இல்லாத—நான் விரும்பாததால் அல்ல, இயலாததால்—ஒரு அருங்குணம் அவரிடம் உண்டு—கண்டிருப்பீர்கள். ஓயாது உழைப்பது! எப்போதும எங்கேயும எதையாவது, எப்படியாவது செயது கொணடே இருப்பது. என்னுலே இதைக் கண்டு இரசிக்க முடியும்—ஆனுல் என்னை அந்நிலைக்கு மாற்றிக் கொள்ள இயலவில்லை. நான் அடிக்கடி கனவு காண்கிறேன், சோலையில சொகுசாக உலவுவதுபோல அல்ல—அந்தக் காலம் மலே ஏறிவிட்டது பொதுப் பிரச்னைகளைப்பற்றி. தோழர் நெடுஞ்செழியன் எப்போதும் காரியமாற்றிக் கொண்டே இருககும இயல்பினர். நேரம வீணுகிவிட்டது என்று கூறததக்க போககிலே, அவா இருந்ததை நான் கண்டதே இல்லை. இந்த இயல்பு, கழகததுக்குப் பெருந்துணையளிக்கும என்பதைக் கூறத் தேவையில்லை. வீட்டிலே என் குறும்புப் பார்வையைக் கண்டு தளருவார், எனினும் இயல்பு அவரை விடாது, மறுகணம், ஏதாவது வேலையைத துவககிக கொள்வார்.

சிறையில் மூன்று திங்கள் இருவரும் ஓரே அறையில் தங்கி இருநதோம—அங்கு என்ன செவனறு கருதுகிறீர்கள்— ஆச்சாரியார் ராஜினுமாச் செய்வது போல, அவசர சட்டம் பிறப்பிப்பது போல, பாதுகாப்புக் கைதியாக ஆக்கப்படுவதைப் போல, பெரியார் கட்டித் தழுவிக் கொள்வது போல, இபபடிப் பலப்பல 'கனவுகள்'—விழித்தபடி—நான கண்டு கொண்டிருப்பேன். அவா?—வேலை! வேலை! வேலை! ஏதாவது செயதபடி இருப்பார்.

இந்த அருங்குணத்தை நாம் நன்ருகப் பயன்படுத்தி, கழகததை மேனமையுறச் செய்து கொள்ள வேண்டும்.

என்னிடம் சில குறைபாடுகள் உண்டு—குறைபாடுகள் என்று சம்பிரதாய முறையில் சொல்கிறேன்—அதிலே ஒன்று தான் கனவு காண்பது; மற்றொன்று மிகக் கஷ்டமான நெருக்கடியின்போதும் சர்வ சாதாரணமாகக் கருதிக் கொண்டு சிரித்துக் கிடப்பது. இதிலே எனக்குச் சரியான ஜோடி சம்பத்துதான்! பெரியாரின் 'சர்டிபிகேட்டே' உண்டு இதற்கு.

திருச்சியிலே திராவிடர் கழக மாநில மாநாடு-அதற்காக வேலை செய்வதற்காக ஒரு மாளிகையில் தங்கியிருக்கிறோம், நானும் சம்பத்தும் பெரியார் வேலை செய்கிறார்—விசாரப்படுகிறார்—தொல்லைப் படுகிறார். நானும் சம்பத்தும் மாடியில் ஏதேதோ பேசுகிறோம், சிரிக்கிறோம், பாடுகிறோம். (யாரும் கேட்கமாட்டார்கள் என்ற தைரியத்தில்) கவலையற்று! பெரியாருக்குக் கோபம் பொங்கி வழிந்தது! எப்படிப்பட்ட சமயம்! இந்த இரண்டு பசங்களும் சிரித்துக் கொண்டு இருக்கிறார்களே! துளியாவது கவலை இருக்கிறதா? ஒரு பெரிய மாநாடு நடக்கவேண்டும், அது பற்றித் துளியும் கவலைப்படாமல், தின்பதும், திரிவதும், ஆடுவதும், பாடுவதும், செச்சே!—என்று பேசினார். அப்போது நான் செல்லப் பிள்ளை! இகழப்பட்டபோதும் பழிக்கப்பட்ட போதும், அன்பு காட்ட வேண்டியவர்கள் பகைக்கும்போதும், சிரித்துச் சோகத்தைச் சிதறடிப்பது என் முறை—மிகச் சிறியவனாக இருந்தது முதலே சம்பத்துக்கும் இது முறை. 'விளையாட்டுப் பிள்ளைகள்' என்று இதனைக் கொண்டு பெரியார் கூறுவதுண்டு. அதற்கும் நாங்கள் இருவரும் சிரித்தோம். அவரால் சகிக்கவே முடியவில்லை. எனவே, டிக்கட் விற்பனை என்ற ஏற்பாட்டின்படி, சம்பத்தைக் கரூருக்கே அனுப்பிவிட்டார்!

சிரிக்கத் தெரியாமலிருந்தால் எனக்குப் பொதுவாழ்க்கையிலே ஏற்பட்ட சங்கடங்களால், பைத்தியமே பிடித்துவிட்டிருக்கும். விளையாட்டுத்தனமல்ல அது—விசாரத்திலே மூழ்கிக் குழப்பமடைந்து போகாமலிருக்க, அது தகுந்தமுறையாக அமைந்திருந்தது.

குறைபாடுகள் என்று இவைகளைக் கருதலாம்—விவரம் கூறப்படா முன்பு.

தோழர் நெடுஞ்செழியனைப் பெரியார், தமது மேற்பார்வையில் வைத்திருந்து பார்த்தார்—அவரால் யார்மீதும் குற்றம் காணமுடியும் ஆனால், தோழர் நெடுஞ்செழியனிடம், அவராலும் ஒரு குறைகூடக் கண்டறிந்து கூற இயலவில்லை. அத்தகைய பணியாளர் நமக்குக் கிடைத்திருக்கிறார்.

அவருக்குக் கிடைத்திருக்கும் கழகமோ, சாமான்யமானதல்ல!

ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைகள்!

இடைவிடாத பொதுமக்கள் தொடர்பு கொண்ட இயக்கம்.

களம் கண்ட காளைகள், தியாகத் தழும்பேற்ற தீரர்கள், கண்ணியத்தைக் காப்பாற்றும் பண்பினர் எண்ணற்றவர்கள்.

விழியில் நீர் வழிய வீதியில் விரட்டப்பட்டோம்—இன்று நமக்கென்று ஒரு தலைமை நிலையம், நம்முடையது என்று பெருமையுடன் கூறிக்கொள்ளத் தக்க ஒரு அச்சகம், நாம் செய்தோம் என்று மகிழ்ச்சியுடன் பேசிக்கொள்ளத் தக்க செயல் பட்டியல்—இவைகளைப் பெறுகிறோம் தோழர் நெடுஞ்செழியன்—பன்மடங்கு இந்த வனப்பை, வலுவை, அதிகமாக்கிக் காட்டப் போகிறார்.

நமக்கென்று ஒரு தலைமை நிலையம், என்றேன்—மகிழ்கிறீர்கள்—நானோ, அந்த இடத்தில் சில பகுதி கலனாகி வருவதையும், ஆகவே கட்டிடம் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியத்தையும் அதற்கானசெலவினையும் எண்ணிக் கவலைப்படுகிறேன். தோழர் நெடுஞ்செழியனை, அந்த இடத்திலே அழைத்துக் கொண்டுபோய் அமர்த்திவிட்டோம். அவருடைய 'நாட்களில்' நிலையம் புதிய உருவும் எழிலும் பெற வேண்டும்—அதற்கான வசதியை நாம் அவரிடம் தேடித் தர வேண்டும்.

நமக்கென்று ஒரு அச்சகம் என்று பெருமையுடன் பேசுகிறோம்—ஆனால் நான் எவ்வளவு முயன்றும் 'நம் நாடு' பெரிதாகி விடவில்லை. அந்தப் பொறுப்பும், அவரிடம், இப்போது. அதற்கான ஆதரவு திரட்டி அவரிடம் ஒப்படைக்க வேண்டியது, நமது கடமை.

*மாநில மாநாடு!* மிகப் பெரிய பொறுப்பு, நம்மை எல்லாம் அறைகூவி அழைக்கிறது. அதற்கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டு நமது பொதுச் செயலாளருக்கு நாம் துணை நிற்க வேண்டும்.

இவைகளையும் இவை போன்ற வேறுபல கடமைகளையும் நாம் நிறைவேற்றிக் கொடுத்தால்தான், நமது பொதுச் செயலாளர் மூலம் நமது கழகம் பெறவேண்டிய புதிய பொலிவுக்கும் வலுவுக்கும் வழி செய்தவர்களாவோம்.

நேற்றுத்தான், கண்ணீருடன் வெளிவந்தது போல் இருக்கிறது.

இதற்குள் என்னென்ன கட்டங்கள்!! எவ்வளவு எதிர்ப்புகளைத் தாண்டி, இந்தக் கட்டம் வந்திருக்கிறோம்!

இதுகளாவது—கட்சி நடத்துவதாவது—என்ற ஏளனம் ஈட்டி போலக் குத்திற்று. இதோ இரண்டாவது பொதுச் செயலாளர்—இரண்டாவது மாநில மாநாடு!!

இது களாவது ஒன்று கூடி வாழுவதாவது—என்ற சாபம் மிரட்டிற்று.

ஒன்று கூடி வாழ்வது மட்டுமா—ஒருவரை நம்பி ஒருவர் வாழக் கற்றுக் கொண்டோம்—தனி மனிதர்களைவிட ஒரு அமைப்பே முக்கியம் என்ற தத்துவம், நடைமுறைக்கு வந்து விட்டது. வளர்ச்சி சாதாரணமானதல்ல!!

ஏ! அப்பா! பாரேன், இதுகளுக்குள் மூண்டுவிடப் போகிற வம்பு வல்லடிகளை, போட்டி பொறாமைகளை, பூசல் ஏசல்களை என்று கருவினர்—இதோ ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்து உடனிருந்து பணியாற்றுகிறோம், புதிய பொதுச் செயலாளருடன்.

தம்பி! நான் இந்த மகிழ்ச்சியிலே திளைத்திருக்கிறேன். வெளிநாடு போகும் திட்டம் பற்றி எண்ணிக் கொண்டில்லை.

ஒரு திங்கள் ஓய்வு கொடு—பிறகு மாநில மாநாட்டுக்கு நிதி திரட்டி வைத்துக் கொண்டு, எந்தப் பட்டி தொட்டிக்கு வேண்டுமானாலும் கூப்பிடு, வருகிறேன்.

ஓய்வு எடுத்துக் கொண்டு உல்லாச வாழ்வு நடத்தவா, உள்ளத்திலே ஓராயிரம் ஈட்டிகள் குத்துவது போல, மாற்றார் நடந்து கொண்டதைச் சகித்துக் கொண்டும், தாங்கிக் கொண்டும், கழகத்தை அமைத்து, இந்தக் கவர்ச்சிகரமான கட்டத்திற்கு வந்திருப்பது! கழகம் பணியாற்ற வேண்டிய துறைகள் பல உள-வெளிநாடு சென்று தெரிந்துகொண்டு வந்து பணியாற்ற வேண்டிய கட்டம் இது அல்ல—இப்போது உள்ள கட்டம், நமது நாட்டை முழுதும் நாம் பார்த்துப் பாடம் பெறும் கட்டம். அந்தக் கட்டத்தில், நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி உன் சீரிய யோசனையைக் கூறுவதுடன்—சிறிதளவு பணமும் சேர்த்துத் தர வேண்டுகிறேன், மாநில மாநாட்டுக்கு. புதிய கட்டம், புதிய பொதுச் செயலாளர், அவர் தலைமையில் இரண்டாவது மாநில மாநாடு—அதைச் சிறப்புற நடத்தித் தருவதிலேதான், கழகத்தின் மற்றோர் கட்டம் மலர இருக்கிறது.

அணிவகுத்து நின்று, நாம் நம் கடமையைச் செய்ய வேண்டும். சில்லரைத் தகராறுகளைச் சிரித்து விரட்டுங்கள்—பெரிய இலட்சியத்திற்காகப் பாடுபடுகிறோம் என்ற எண்ணம் கொழுந்து விட்டெரியட்டும்.

புதிய பொதுச் செயலாளரின் திறத்தையும் அருங் குணத்தையும் கழகம் முழுவதும் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமானால், நாம் ஒவ்வொருவரும் நமது கடமையைத் தவறாமல் செய்து முடிக்க வேண்டும், முயற்சி எடுக்க வேண்டுமென்று மட்டுமே கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், தம்பி! முயற்சி


எடுத்தால் போதும்; முடித்தே காட்டுவீர்கள் என்பதை அனுபவத்தில் கண்டவனல்லவா நான், அதனால்தான்.

சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டிலே கூடியது போல, குறைந்தது இரட்டிப்பு மடங்கு மக்கள் கூடுவர், திருச்சியில்—நடு நாயகமல்லவா, அதனால்.

அவ்வளவு பெரிய மாநாட்டை நடத்திக் கொடுக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள நேரத்தில், காகிதக் கப்பலின் மீது கவனம் செலுத்தலாகாது; மாநாட்டுக்கான யோசனைகளை நண்பர்களுடன் கலந்து பேசி, தலைமை நிலையத்துக்குத் தெரியப்படுத்து. மாநில மாநாட்டிலே கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகளை இப்போதிருந்தே உள்ளூர்க் கிளைக் கழகத்தில் கலந்து பேசுங்கள்-திட்டம் தயாரித்து அனுப்புங்கள்—தம்பி!—பணமும் அனுப்பு!

அன்புள்ள,

8—5—1955



கடிதம் : 2

# புதிய உற்சாகம்

*மாஸ்டர் தாராசிங்கும் பாஞ்சாலமும்—கழகத்தில் தோழமை*

தம்பி,

முன்பு எழுதிய கடிதம் கண்டு மகிழ்ச்சி தெரிவித்ததற்கு என் நன்றி. நமது இயக்கம் நன்றாகத் தழைத்திருப்பதுகண்டு அருவருப்பு அடைபவர் பலர் உண்டல்லவா-அவர்கள், அவர்களின் பண்புக்குத் தக்கபடி பழிசுமத்துவதும், புகார் கிளப்புவதும், வதந்திகளை உலவ விடுவதும், வம்புக்கு இழுப்பதுமாகத்தான் இருப்பர், நாம் அவைகளைப்பற்றிக் கவலைப்படக் கூடாது; நாம் கவலைப்பட வேண்டும், கோபமடைய வேண்டும் என்பதற்காகத்தானே அவர்கள் அவ்விதமெல்லாம் பேசுவதும் எழுதுவதும்! அந்த வலையில் நாம் விழலாமா? நமக்கு நிரம்ப வேலை இருக்கிறதே தம்பி! நமது சக்திக்கு மீறிய காரியத்தை அல்லவா நாம் மேற் போட்டுக் கொண்டிருக்கிறோம். உன் நினைவு முழுவதும் அதிலே செல்லவேண்டும், ஆமாம், சில்லரைகளில் சிந்தனையைச் செலவிடக் கூடாது.

நாட்டு நடவடிக்கைகள் பலவற்றிலும் தொக்கிக் கிடக்கும் உண்மைகளைக் கண்டறிந்தால் நாம் எடுத்துக் கொள்ளும் முயற்சி எவ்வளவு தூய்மையும், வாய்மையும் கொண்டது என்பது விளக்கமாகும்.

சென்ற கிழமை வடக்கே ஒரு கிழவர் சிறைக் கோட்டம் அழைத்தேகப்பட்டார். மாஸ்டர் தாராசிங் பன்முறை சிறை சென்றவர். சீக்கிய பெருங்குடி மக்களின் ஒப்பற்ற தலைவர்—காங்கிரஸ்காரரர் அல்ல. அவர் காங்கிரஸ்காரராகி இருந்தால், பாபு ராஜேந்திரப் பிரசாத், அபுல்கலாம் ஆசாத் போன்றாரின் வரிசையில் இடம் பெற்றிருப்பார். ஆனால் அவருக்குக் குறிக்கோள் இருக்கிறது—கருவிலே உள்ள குழவி போன்றதாகத்தான் இன்னமும் இருக்கிறது—முழு வளர்ச்சி அடையவில்லை. அந்தக் கருவையே சிதைத்திடத்தான் அவர்மீது கடுமையான அடக்குமுறை வீசப்பட்டு வருகிறது.

தாராசிங், சீக்கியர்களுக்காக ஒரு தாயகம் கேட்கிறார். சீக்கிய மொழி, கலாச்சாரம், மார்க்கம் ஆகியவைகள் பாது காக்கப்பட்டு வளமடைய வேண்டுமானால், 'பஞ்சாபி மொழி பேசும் பிராந்தியப்' ஏற்படவேண்டும் என்று கிளர்ச்சி செய்து வருகிறார்; சில ஆண்டுகளாகவே, சீக்கியர்களிலே, காங் கிரஸ் கட்சிக்குப் பலதேவ்சிங்குகள் அடிக்கடி கிடைக்கத் தான் செய்கிறார்கள்; நேரு பண்டிதரும் அடிக்கடி அந்தப் பகுதி சென்று பவனி வரத்தான் செய்கிறார் என்றாலும், தாரா சிங்கின் 'தாரகம்' பஞ்சாபில் வெற்றி பெற்று வருகிறது.

பஞ்சாப் மாகாணம், வங்காளம் போலவே, பாகிஸ்தான் அமைப்பின் போது, இரண்டாக்கப்பட்டது, உனக்குத் தெரியும். இந்திய பூபாகத்துடன் இணைந்து இருக்கும் பஞ்சாபிலே அமிர்தசரஸ் இருக்கிறது—இது சீக்கியர்களின் காசி! தங்கக் கோயில் ஒரு தடாகத்தின் நடுவே இருக்கிறது. கோயிலில், இராமன்—கிருஷ்ணன்—முருகன்—நான்முகன் இப்படிச் சிலைகள் கிடையாது—சீக்கியரின வேத புத்தகம் வைக்கப் பட்டிருக்கிறது—சீக்கியர்கள் அங்குச் சென்று தூய மன நிலை பெறுகிறார்கள் காலைச் சூரியன் ஒளியில், தங்கக் கோயிலின் நிழலுருவம் தடாகத்தில் தெரிகிறது. காண்பதற்கு அருமையானதோர் காட்சி நான் அக்காட்சியைக் கண்டு களித்திருக்கிறேன். சீக்கியர்களிடையே உள்ள ஒற்றுமை உணர்ச்சியையும் அதுபோது காணமுடிந்தது.

மொழி வழி அரசு அமைந்தால்தான், சுயராஜ்யம் பொலிவும் வலிவும் பெறும் என்று காங்கிரஸ் தலைவர்களே பேசி வந்தனர். அந்த முறையிலே பார்க்கும்போது, தாராசிங் கேட்கும் 'பாஞ்சாலய' அமைக்கப்பட வேண்டியதுதான் நியாயமாகும். ஆனால் காங்கிரஸ் சர்க்கார் இதை எதிர்க்கிறது பிடி ஆட்களைப் பெற்று, இந்தக் கிளர்ச்சியை ஒழித்துக்

கட்டப் பார்கிறது. தாராசிங் பணிய மறுக்கிறார்! சிறையில் தள்ளுகிறார்கள்—தணலில் தங்கமாகிறார். சீக்கியர்களிலேசிலரைப்பிடித்து அவரை நிந்திக்க வைக்கிறார்கள்; அவர், அவர்களின் நிலைமையைக் கண்டு பரிதாபப்படுகிறார். அவர் எப்போது கிளர்ச்சி துவங்கினாலும் இளைஞர் அணிவகுப்புத் துணைக்கு நிற்கிறது. அறப்போரில் ஈடுபட ஏராளமானவர்கள் முன்வருகிறார்கள். எனினும் மாஸ்டர் தராசிங் பற்றியும், அவர் நடத்திவரும் இயக்கத்தைப் பற்றியும், நமக்கெல்லாம் அதிகமாகத் தெரியாது—தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுவதில்லை. இருட்டடிப்பு! ஆமாம் இங்கே, திராவிடநாடு பிரிவினை எவ்வளவு வேகமாக வளர்ந்திருக்கிறது என்பது எப்படி மற்ற பகுதியினருக்குத் தெரியாதபடி 'இருட்டடிப்பு' இருக்கிறதோ, அதுபோல பாஞ்சாலக் கிளர்ச்சி பற்றிய முழுத் தகவலும் நமக்குத் தெரிவது இல்லை—இருட்டடிப்புத்தான்!

நாகநாடு கிளர்ச்சி பற்றி ஒவ்வோர் சமயம் துண்டு துணுக்குகளாகச் செய்திகள் வருகின்றன — தொடர்ந்து அங்கே என்ன நடைபெறுகிறது என்பது தெரிவதில்லை-காரணம் இருட்டடிப்புத்தான்!

மணிப்பூரில் தனிநாடு கிளர்ச்சி அரும்பியிருக்கிறது—சேதி தாராளமாகக் கிடைப்பதில்லை—இருட்டடிப்பு!

பர்மாவில், பல ஆண்டுகாலமாகக் கிளம்பி, படை பலத்துடன் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, கரேன்நாடு கிளர்ச்சி—இதுவும் இருட்டடிப்பின் காரணமாக, முழுவதும் நமக்குத் தெரிவதில்லை.

இந்தோனேஷியாவில் தாருல் இஸ்லாம் என்றோர் கிளர்ச்சி இருக்கிறது.

பயங்கரமான நிகழ்ச்சிகள் ஏற்படும்போது மட்டுமே இவைபற்றி ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது—தொடர்ச்சியாகச் செய்திகள் தரப்படுவதில்லை.

திராவிடநாடு கிளர்ச்சி குறித்தும் இது போலத்தான்—எப்போதாவது திடுக்கிடக்கூடிய சம்பவங்கள் நேரிட்டால், இந்திய பூபாகத்தின் மற்றப் பகுதிகளில் ஒரு சிறிது தெரியும்; மற்றச் சமயத்தில் இருட்டடிப்பு! சென்ற ஆண்டு, 'இரயில் நிறுத்தக் கிளர்ச்சி' நடைபெற்றபோது, இந்தியாவின் எல்லாப் பகுதியிலும், திராவிடநாடு கிளர்ச்சி பற்றி, ஓரளவு தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. பிறகு, எப்போதும் போல மூடிவிட்டனர்.

இந்தக் குறைபாடு நீங்க, திராவிடநாடு கிளர்ச்சி பற்றி, பிற இடங்களில் அறிந்து கொள்ளத்தக்க வகையில், ஆங்கில ஏடு நடத்துவது என்ற எண்ணம் எனக்கு நீண்டகாலமாக

உண்டு. இருமுறை அதற்கான முயற்சி எடுத்து முறிந்து போனதுமுண்டு இப்போதும் அந்த எண்ணம் இருந்தபடிதான் இருக்கிறது—தக்க வாய்ப்பு ஏற்படவில்லை. தம்பி! நமக்கிருக்கும் குறைபாடுகள் இவை போன்றவையேதவிர, இல்லாததும் பொல்லாததுமாக நம்மைப் பற்றி இடுப்பொடிந்ததுகளும், இஞ்சி தின்றதுகளும், பேசுவதாலும் எழுதுவதாலும் இல்லவே இல்லை என்பதை முதலில் மனதிலே நன்கு பதிய வைத்துக் கொள்ள வேண்டுகிறேன். அந்தக் கட்டத்தைத் தாண்டிவிட்டோம். வீசப்படவேண்டிய பழிச்சொல் அவ்வளவும், எவ்வளவு வேகமாகவும் திறமையுடனும் வீசப்படவேண்டுமோ அவ்விதம் வீசிப் பார்த்தாகிவிட்டது. இப்போது கிடைப்பதெல்லாம் மறுபதிப்புகள்—எளிய பதிப்புகள்—இலவச வெளியீடுகள்!! இவைகளைப் பற்றிக் கவலைப்படவேண்டிய நிலையில் நாம் இல்லை.

அங்கே வெடிப்பு,இங்கே கொந்தளிப்பு,இங்கே குழப்பம், என்றெல்லாம் எழுதுகிறார்கள். படிக்கும்போது ஆத்திரமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறாய். தம்பி! இதற்கு ஏன் ஆத்திரம்,ஆயாசம்? நம்மைப்பற்றிய 'செய்திகள்' பிற கட்சிக்காரர்களும் இதழ்களும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய அளவுக்கு, நாட்டில் முக்கியத்துவம் பெற்றுவிட்டன என்பது தானே அதன் பொருள். இதற்கு ஆயாசப்படுவதா!! பேதமும் பிளவும், வெடிப்பும் குழப்பமும் ஏற்பட்டால்தான், நமது இயக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்று கிலி கொண்டவர்கள், இப்போது கீறலைக் கண்டு வெடிப்பு என்று கூவிக் களிப்படைகிறார்கள்! இங்கிருந்து செல்பவர்களும், இங்கு இருந்துவிட்டு வந்தவர்கள் என்ற காரணத்தாலேயே வாழ்த்தும் வரவேற்பும் பெறுகிறார்கள்—இந்த உபசரிப்பும் உலாவும் சிலநாட்களுக்கு நடைபெறும். நமது மாஜி நண்பர்கள் என்ற முறையில் அவர்கள் எப்படியோ ஒன்று மகிழ்ச்சி பெறட்டும் என்பதுதான் என் எண்ணம். அவர்களை எத்தனை நாளைக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது தெரியாததா!! இவ்விதம் 'பயணம்' நடத்தியவர் பலர்; அவர்களிலே யார் இன்று,உருவம் தெரியும் நிலையில் இருக்கிறார்கள்? ஆயினும் எனக்கு—உண்மையில் கூறுகிறேன்—நமது இயக்கத்தைவிட்டு யாராவது பிரிந்து செல்கிறார்கள் என்றால்,வருத்தந்தான். கூடுமான வரையில் கூடி வாழ்வதைத்தான் நான் விரும்புகிறவன்—சுவரிலிருந்து சிறு ஆணி பெயர்க்கப்பட்டாலும், ஆபத்து இல்லை என்றாலும், பார்க்க நன்றாக இராது என்று எண்ணுபவன். இந்த நோக்குடனேயே நான், சிலர் வெளியேற எண்ணும்போதெல்லாம், சமரசத்திற்காக முயன்றிருக்கிறேன். அவர்கள் ஏற்கனவே, வேறு இடத்தில், 'அச்சாரம்' வாங்கி விட்டார்கள் என்று தெரிகிற வரையில், சம

ரசம் பேசுவேன்—'கைமாறி விட்டது' என்று தெரிந்தால், என்ன செய்வது.சரி அவ்வளவுதான்! என்றுஎண்ணிக்கொள் வது. அவர்கள் வெளியேறி வேறிடம் சென்றதும், அங்கு கொஞ்சம் காரசாரமாகப் பேசி, கண்டித்துத்தானே 'சபாஷ்' பட்டம் பெறவேண்டும். எனவே பேசுகிறார்கள். ஏசுகிறார்களே என்று வருத்தப் படலாமா—இங்கே இருந்தபோது எவ்வளவு புகழ்ந்திருக்கிறார்கள்! எவ்வளவு பற்றுப் பாசம் காட்டியிருக்கி றார்கள்! வழியே போகிறதுகள், வம்புக்கு வருபவர்கள், தொடர்பே அற்றதுகள், இப்படிப்பட்டவர்களெல்லாம், எடுத் தேன் கவிழ்த்தேன் என்று நம் இயக்கத்தைப் பற்றிப் பேசித் திரியும்போது, இருந்துவிட்டுப் போனவர்கள், இயன்றதைச் செய்தவர்கள், நண்பர்களாயிருந்தவர்கள், பிரிந்த காரணத் தால் இரண்டோர் இடத்தில் கடுமையாகத் தாக்கினால், குடி முழுகிவிடாது. அவர்கள் ஆசையும் தீர்ந்து போகட்டுமே, பாவம்!

இந்தச் சம்பவங்களைப் பற்றி எல்லாம் படிக்கும்போது தம்பி! நாம் இயக்கத்தை நடத்திச் செல்வதில் இதுவரை காட்டிவரும் தோழமையைவிட, அதிக நேர்த்தியான தோழ மையைக் காட்டிவரவேண்டும் என்ற பாடத்தைத்தான் பெற வேண்டும். மற்ற எந்த இயக்கத்திலும் இல்லாத அளவு தோழமை உணர்ச்சி நமது கழகத்திலே இப்போது இருக்கத் தான் செய்கிறது. அந்தப் பண்பு மேலும் வளரவேண்டும். தேர்தல் எனும் முறையே இன்றி, ஒரு இயக்கத்தின் தலைவர் பார்த்து வைத்ததுதான் சட்டம் என்றிருக்கும்போது, தோழ மை உணர்ச்சி அல்லது, பயம் போதும் நாமோ, சிற்றூர் கிளைக் கழகம் முதற்கொண்டு, பொதுச் செயலாளர் வரையில் தேர்தல் முறை வைத்திருக்கிறோம். தேர்தல் என்றால், போட்டி, கட்சி சேர்த்தல் என்பதுதான் உடனடிப் பொருள். எனவே தேர்தலின் காரணமாகச் சிறுசிறு சச்சரவுகள் எழத் தான் செய்யும். இந்தச் சச்சரவும் தேர்தல் சூழல்களும், நம்முடைய கழகத்திலே மிகமிகக் குறைந்த அளவிலேதான் இருக்கிறது—வேறு அமைப்புகளுடன் ஒப்பிடும்போது. சின்னாட்களுக்கு முன்பு மதுரையில் நடைபெற்ற தேர்தலின் போது—வாய்ச் சண்டை வளர்ந்து மேஜை நாற்காலிகள் வீசிக்கொள்ளப்பட்டன என்று படித்திருப்பாய். இது, காங் கிரஸ் கமிட்டித் தேர்தலில். அதுபோலவே வடாற்காடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தேர்தலிலும் 'ரசாபாசம்' நேரிட்டதாகச் செய்தி வந்தது. இலங்கையில் தொழிலாளர் அமைப்பிலே நடைபெற்ற தேர்தலிலும், போட்டி, பூசல் அள வுக்குச் சென்று, தேர்தல் வேலையே வெற்றிகரமாகச் செய்ய முடியாமற் போய்விட்டது. இவைகளை எடுத்துக் காட்டு வதன் காரணம், நமக்குள்ளாகத் தேர்தல் தகராறு எழுவது

சரிதான் என்று வாதாட அல்ல. தேர்தல் தகராறுகள் நம்மில் பிறரிடம் இருக்கும் அளவுக்கு இல்லை என்பதை நினைவு படுத்தி, இப்போது எழும்பியுள்ள சிறு தகராறுகளும் எழாத வகையில் இனிநாம் பணியாற்ற வேண்டும் என்பதைக் கூறத்தான். ஏனெனில், நமது இயக்கத்திலே காணக் கிடக்கும் மாண்புகளை, மாற்றார்கள் போற்ற மாட்டார்கள்; ஆனால், ஒரு சிறு தகராறு தெரிந்தாலும் போதும், சுட்டிக் காட்டிச் சிரிப்பார்கள். இதற்கு இடமளிக்கும் முறையில் யாரும் நடந்துகொள்ளக்கூடாது. தேர்தல் காரணமாகச் சிறு மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டிருந்தாலும், தாங்கிக்கொள்ளும் பெரிய மனமும், மீண்டும் ஒன்றுபட்டுப் பணியாற்றும் தோழமையுள்ளமும் வேண்டும். கழகத்தின் பொதுப் பிரச்சினை பற்றிக் கவனம் செலுத்திக் காரியமாற்ற, நமது பொதுச் செயலாளருக்கு நேரமும் நினைப்பும், திறனும் வாய்ப்பும் பயன்பட இடமளிக்க வேண்டுமேயல்லாமல், இத்தகைய தேர்தல் தகராறுகள், இடம் பிடிப்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகள் ஆகியவற்றையெல்லாம் கவனித்துஆவனசெய்யும்தொல்லையை, அவருக்கு நாம் தருவது முறையாகாது. இதிலே, தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்குத்தான் முழுப் பொறுப்பு இருக்கிறது. அவர்கள்தான் தத்தமது வட்டாரத்தில் காணப்படும் மனத்தாங்கலைத் துடைத்திட முயற்சிக்க வேண்டும்.கழகத்துக்குள் அடிப்படை பிரச்சினைமீது அல்ல, தவறான எண்ணம், மனச் சங்கடம் ஆகியவற்றின் காரணமாக எழும் சிக்கலைத் தீர்க்கும் திறம் இல்லாமற் போய்விட்டால், பிறகு எங்ஙனம், பொதுமக்களை அணுகி,அவர்களின் சந்தேகங்களைப் போக்கி, அவர்களை இயக்கத்தில் கொண்டுவந்து சேர்ப்பது? எனவே, வெற்றி பெற்ற தோழர்கள், தத்தமது வட்டாரத்தில் ஒற்றுமையும் தோழமையும் மலருவதற்குப் பாடுபட்டு, அதிலே வெற்றி காணவேண்டும்—தேர்தலில் பெற்ற வெற்றியைவிட இந்த வெற்றியையே பெரிதென்று எண்ணவேண்டும்.

வடநாடு தென்னாட்டைச் சுரண்டிக் கொண்டுதான் வருகிறது; ஐந்தாண்டுத் திட்டத்திலே ஓரவஞ்சனையாகத்தான் நடந்து கொண்டது என்ற கருத்தும்,

இந்தியைத் திணிப்பது, எதேச்சாதிகார முறை, மொழி வெறி, ஏக பாஷைப் பித்தம், இதைக் கண்டித்தே தீர வேண்டும், இந்த முயற்சியை எதிர்த்தேயாக வேண்டும் என்ற கருத்தும்,

இப்போது காங்கிரஸ் வட்டாரத்திலேயே வெகுவாகப் பரவிவிட்டது—வெளிப்படையாகவே பேசப்படுகிறது.

இந்த நல்ல சூழ்நிலையைக் கழகத் தோழர்கள் தக்கவிதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

திராவிட நாடு கேட்பதற்கான காரணங்களை, முன்பு, காதால் கேட்பதும் 'பாபம்', தேசீயத்துக்கு விரோதமான காரியம் என்று எண்ணிக்கொண்டிருந்த காங்கிரஸ்காரர்களி லேயே ஒரு பகுதியினர், இப்போது திராவிட நாடு பிரச்சினை யைத் தெரிந்துகொள்ள ஆவல் காட்டுகிறார்கள். அவர்கள் உணரும்படியும் ஒப்பும்படியும் எடுத்துக் காட்ட நம்மிடம் ஏராளமான காரணங்கள், புள்ளி விபரங்கள் உள்ளன. அவர் களின் மனதைப் பக்குவப்படுத்தும் முறையில், நாம் அவை களை எடுத்துக் கூறவேண்டும். இந்தப் பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் நாம், அதற்கேற்றபடி பெரிய மனம் படைத்தவர்களாகித் தீரவேண்டும்.

இருட்டடிப்புப் பற்றிக் குறிப்பிட்டேன்.

அது, வெளியே நமது கருத்தும் வளர்ச்சியும் தெரிய விடாமல் செய்வது பற்றி மட்டுமல்ல, இங்கேயே உள்ள இருட் டடிப்பு பற்றியுந்தான்.

இங்குள்ள 'பத்திரிகைகள்' நமது மூலாதாரக் கொள் கையை மறுப்பன. எனவே, அந்தக் கொள்கையை இருட் டடிப்பு மூலம் சாகடிக்கலாம் என்று எண்ணுகின்றனர். இதி லிருந்து நாம் தப்ப வேண்டுமானால், ஒவ்வொரு கிளைக் கழகமும் தனிப்பட்டவர்களும் கூட, இயக்கக் கருத்துக் களையும், அக்கருத்துகளுக்கு ஆக்கம் தரும் நிகழ்ச்சி பற்றியும், அவ்வப்போது துண்டு அறிக்கை வெளியிட்டு, வீடு தோறும் வழங்க வேண்டும். நமது இயக்கக் கருத்துக்கள் பொதிந்த பாடல்களையும், நாடகங்களையும் மேலும் வளமும் வண்ணமும் உள்ளதாக்க வேண்டும். புள்ளி விவரங்களைத் தயாரித்து, முச்சந்திகளில் பொறித்து வைக்க வேண்டும். கழகத் தோழர் ஒவ்வொருவரும் இம்முறையில் ஏதேனும் ஒரு பணியாற்றி, இயக்கத்துக்குத் தொண்டாற்ற வேண்டும். ஒரு திங்கள் இம்முறையில் பணியாற்றிப் பாருங்கள். உங்கள் மன துக்கே புதியதோர் உற்சாகம் பிறக்கும். நோக்கம் இவ்வகை யில் திரும்பினால், பிறகு, சிறு சச்சரவுகள் பற்றிய சிந்தனையும் அற்றுப்போகும், சீரழிவானவர் வீசும் சிறு சொல்லும் நம் மைச் சுடாது.

அன்புள்ள,

22—5—1955

அண்ணாதுரை

# மத்தாப்பூ

***நேருஜியின் புகழ்!—டிட்டோவிற்கு வரவேற்பு!—ஐந்தாண்டுத் திட்ட ஊழல்.***

தம்பி,

உலகமெல்லாம் எங்கள் நேருஜியைப் புகழ்கிறது—உதவாக்கரைகளே! நீங்கள் அவருடைய ஆட்சியை, அவர் நடத்திச் செல்லும் காங்கிரஸ் கட்சியைக் கண்டிக்கிறீர்களே, இது முட்டாள்தனமல்லவா, போக்கிரித்தனமல்லவா, என்றெல்லாம் மேடை அதிர அதிரக் காங்கிரசார் பேசுகிறார்கள் என்று எடுத்துக் காட்டியிருக்கிறாய். உலகம் புகழ்கிறதே, என்பதற்கு ஆதாரமாக, நேரு பண்டிதர் சர்வ தேச விவகாரங்களிலே கலந்து கொள்வதையும், அவர் பல்வேறு நாடுகளிலே பவனி வருவது, ராஜோபசாரம் பெறுவது ஆகியவற்றையும் சுட்டிக் காட்டுகிறார்கள். அமெரிக்கா சென்றார், சீனா சென்றார், இந்தோசீனா சென்றார், இந்தோனேஷியா சென்றார், சீமைக்குப் பலதடவை சென்றார்,இதோ இப்போது ரஷ்யாவுக்குப் போகப் போகிறார் என்று பெருமிதத்துடன் கூறுகிறார்கள்.

உலகம் இருவேறு முகாம்களாகி இருப்பது உனக்குத் தெரியும்.

ஒரு முகாமில் கம்யூனிஸ்ட் ஆட்சிமுறை நாடுகளும், மற்றொரு முகாமில் அதற்கு எதிரிடையான ஆட்சி முறை நாடுகளும் உள்ளன.

இரு முகாம்களும், தத்தமது கட்சிக்கு ஆள் பிடிக்கும் காரியத்தில் ஈடுபட்டுவிட்டிருக்கின்றன. தம் கட்சியில் சேராவிட்டாலும் பரவாயில்லை, எதிர்க் கட்சியில் சேராதிருந்தால் போதும், நடு நிலைமை வகித்தால் போதும் என்று பாடுபடுகின்றன.

இதற்காக, புகழுரை, பாராட்டுரை, உபசாரம், விருந்து இவைகளை அள்ளி அள்ளி வீசுகின்றன.

பணம் தேவையா, தாராளமாகத் தருகின்றன! நிபுணர்கள் வேண்டுமா, கப்பல் கப்பலாக அனுப்பி வைக்கிறார்கள்!

இந்தப் புகழுரை, போதை தருமளவு தரப்படுகிறது! நேரு பண்டிதர் இதிலே மயங்கிவிட்டாரோ இல்லையோ தெரியவில்லை. காங்கிரஸ் ஏடுகளிலே வெளியிடப்படும்

படங்களையும் செய்திகளையும் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகிறார்கள். இதே விதமான உபசாரம் நேரு பண்டிதருக்கு மட்டும் அல்ல, இலங்கை கொத்தலாவலைக்கும், பிலிப்பைன் தீவு ராமுலோவுக்கும் வழங்கப்படுவதைக் காங்கிரசார் கவனிக்கவில்லை. நேரு பண்டிதரின் பீக்கிங் விஜயத்தின் போது ராஜோபசாரம் நடந்ததென்றால், அதே விதமான உபசாரம் பர்மிய பிரதமர் சென்ற போதும் நடக்கிறது!

தம்பி! டிட்டோ இங்கு வந்தார்! ராஜோபசாரம் எப்படி எப்படிச் செய்தார்கள்! அவர் வருகிற கப்பலை நமது கப்பல்கள் சென்று எதிர்கொண்டு அழைத்தன! டில்லியில் மக்கள் கூடி டிட்டோ ஜிந்தாபாத் போட்டனர்! மாலைகள் குவிந்தன! விருந்துக்கு மேல் விருந்து! வரவேற்பு வைபவம், டிட்டோவைத் திணரடிக்கும் அளவுக்கு நடந்தது. ஆவடி காங்கிரசிலும், ராஜபவனத்திலும் அவருக்கு நடைபெற்ற பல்வேறு வகையான விருந்துகளும், கலா காட்சிகளும் சாமான்யமா!

இப்போது ஆறு நாட்கள் நேரு பண்டிதர் டிட்டோவின் விருந்தாளியாக, யுகோ நாடு செல்கிறார். டிட்டோ என்ன, பண்பு அறியாதவரா! நேரு பண்டிதரின மனம் குளிரும் வண்ணம், தனக்கு இந்தியாவிலே கிடைத்த வரவேற்பு சாமான்யம் என்று கூறத்தக்க விதமாக, விருந்தும், உபசாரமும் ஏற்பாடு செய்யாமல் இருப்பாரா?

பார், பார்! எங்கள் பண்டிதருக்கு யுகோவில் கிடைக்கும் ராஜோபசாரத்தை என்று பேசிப பூரித்துப் போவதால் என்ன பலன்! டிட்டோ இங்கு வந்திருந்த போது, இங்கே அவருக்கு நடைபெற்ற ராஜோபசாரத்தைப் பற்றி, யுகோ நாட்டுப் பத்திரிகைகள் சக்கைப் போடு போட்டன!

*டிட்டோவுக்கு இந்தியாவில் இணையில்லா வரவேற்பு!*
*ராஜபவனத்தில ரசமான விருந்து!*
*மகாராஜாக்கள் மலர்மாரி பொழிந்தனர்!*
*மதுரமான இசை விருந்து அளிக்கப்பட்டது!*
*நேர்த்தியான நாட்டியம!*
*இந்தியாவின் தொழில் முயற்சியை டிட்டோ பார்வையிட்டார்*

இவ்விதமெல்லாம் யுகோ நாட்டுத் தினமணிகள் தலைப்புகள் தரத்தான் செய்தன தம்பி!

இவ்வளவு என்ன, இங்கே உள்ள பத்திரிகைகள், பாண்டுங் மகாநாடு நேருவின் வெற்றி என்று புகழ்ந்தன அல்லவா, எகிப்து நாட்டிலே நாசிர், பாண்டுங் மகாநாட்டுக்குப் பிறகு சென்றதும், அவரை வரவேற்க மோட்டாரிலும் குதிரை மீதும் ஒட்டகை மீதும் கால் நடையாகவும்

பல்லாயிரக் கணக்கான எகிப்தியர் வந்தனர். அவர்கள் என்ன முழக்கம் இட்டனர் தெரியுமோ?

*பாண்டுங் வீரரே வருக!*

*இந்தியாவை வசீகரித்த இணையில்லாத் தலைவரே வருக!*

இப்படித்தான்.

இந்தோனேசியாவில் தெரியுமா! இருபத்தொன்பது நாடுகளும் பெருமைப்படுத்திய தலைவர்களே, வாழ்க! என்று அந்த நாட்டு இதழ்கள் சுகர்னே, ஜோஜோ ஆகிய தலைவர்களை புகழ்ந்து எழுதின!

ஒருவர்க்கொருவர் உபசாரத்தைப் பொழிந்து கொள்வது, இன்றைய உலகிலே கொழுந்துவிட்டெரியும் புதுமுறை. இதைக் கொண்டு, தப்புக் கணக்குப் போடுகிறார்கள் தம்பி! அவ்வளவுதான்!

அமெரிக்கா உறவு பற்றியும், அந்த நாட்டினிடம் உதவியும் கடனும் பெறுவதால் ஏற்படக்கூடும் இழிவு, ஆபத்து பற்றியும் ஆச்சாரியாரே சொல்லிச் சோதிக்க வேண்டி நேரிட்டதைக் காங்கிரஸ் நண்பர்கள் மறந்து விடுகிறார்கள்.

உலகமே உள்ளன்புடன் நேரு பண்டிதரைப் புகழ்கிறது என்றே வைத்துக்கொள்வோம். அதனால் அவருடையஆட்சியிலே காணக்கிடக்கும் அவலட்சணங்களை, அதனால் ஏற்படும் அவதிகளை, குறிப்பாக திராவிடத்திற்கு ஏற்படும் தீமைகளை எடுத்துக் காட்டாமல் இருக்க முடியுமா! எடுத்துக் காட்டாதிருப்பது அறிவுடைமை தானாகுமா?

'மத்தாப்பு' கொளுத்தும்போது பார்த்திருப்பாயே தம்பி! எவ்வளவு வண்ணம்! எத்துணை ஒளி! ஆனால் தம்பி! எவ்வளவு சீக்கிரத்தில் தீர்ந்து போய் விடுகிறது! அது போலத்தான் ராஜ தந்திர முறை காரணமாக நடத்தப்படும் உபசாரம் தரும் ஒளி! சிறு அகல் விளக்கானாலும் பரவாயில்லை, மத்தாப்புப் போல அல்ல, நின்று நிதானமாக ஒளிவிட்டு இருளை அகற்றும். அதுபோலத்தான் உள்நாட்டிலேமக்களின் உள்ளம் குளிரும்படி ஆட்சி நடத்தினால், நிரந்தரமான பெருமையும் நிலையான செல்வாக்கும் கிடைக்கும். வெறும் நேத்திரானந்தத்தால் பலன் என்ன?

நேரு பண்டிதரின் "உலகப் புகழ்" பற்றி ஓயாமல் பண்பாடும் பத்திரிகைகளே, உள்நாட்டு விவகாரத்தில், ஆட்சியின் கோணல் காரணமாக ஏற்படும் அவதிகளைச் சுட்டிக் காட்டி, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடித் திணறுவது தெரியாததா! பழமொழி சொல்வார்களே, உப்புக் கண்டம் பறிகொடுத்த பார்ப்பனத்தி என்று. அது போலல்லவா தேசீய ஏடுகளின் நிலைமை ஆகிவிடுகிறது!

நாற்றமடிக்குமளவுக்கு ஊழல்கள் நிர்வாகத் துறையில் நாலு நாளைக்கொரு முறை மாற்றித் தீர வேண்டியவிதமாக அவசரமாகத் தீட்டப்படும் திட்டங்கள்.

முன்யோசனை இல்லாததால் ஏற்படும் கோடிக்கணக்கான பொருள் நஷ்டம்.

வீண் ஆடம்பரத்துக்காக விரயமாகும் பெரும் பணம்.

காகிதத் திட்டங்கள்! அவரைப் பற்றிக் கவைக்குதவாப் பாராட்டுரைகள்!

தம்பி! பார், பார், பண்டிதரின் புகழொளியைப் பார்! என்று படம் காட்டுகிறார்களே காங்கிரஸ் நண்பர்கள், அவர்கள் மறந்து விட்டிருப்பார்கள், அல்லது தெரியாததுபோலப் பாவனை காட்டுவார்கள். நீ மறந்திருக்கமாட்டாயே, பத்து நாட்களுக்குமுன்பு பத்திரிகைகளிலேவெளிவந்த செய்தியை.

உலகமே கண்டு வியக்கிறது. எங்கள் பெரும் பெரும் அணைத்திட்டங்களை என்று பெருமை பேசினார்களே. அதிலே காணக்கிடக்கும் கோளாறு வெளிவந்து விட்டது.

கோடி கோடியாகப் பொருள் செலவிட்டு, பெரும் பெரும் நூதனமாக யந்திரங்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன, இந்தத் திட்டங்களுக்காக.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே செலவிடப்பட்ட பணத்திலே பெரும்பகுதியை, அணைகள் கட்டும் திட்டம்தான் விழுங்கிவிட்டன! அதிலே நடைபெற்றுள்ள அவலட்சணத்தைக் கேள் தம்பி! பொறுப்பும் திறனும் உள்ள ஆட்சியிலே இப்படி நடைபெறுமா என்று யோசித்துப் பார்! கோபம் அடையாத காங்கிரஸாரைக் கேட்டு வேண்டுமானாலும் பார்! இந்த அணைத்திட்டங்களுக்காக, கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்து வாங்கினார்களே யந்திரங்கள், அவைகளில் கிட்டத்தட்ட பாதி சும்மா கிடக்கின்றனவாம்! கேட்டாயா, விபரீதத்தை! ஏழை மக்களின் வியர்வை, பணமாக்கி இந்தக் கருவிகள் வாங்கப்பட்டன! ஆனால் வேலைக்கு உபயோகமாக வில்லை. பொய்க்கால் குதிரை! அச்சு முறிந்த வண்டி! அஸ்திவாரமற்ற கட்டிடம்! இது போலாகி விட்டது. ஏன்? கல்யாணம் செய்தும் பிரமச்சாரியாக இருக்கக் காரணம்? இந்தக் கருவிகள் பழுதாகிப் போனால், பொருத்தக்கூடிய சில்லறை சாமான்கள் கிடைக்கவில்லையாம்! எப்படி இருக்கிறது நிர்வாகம்! இலாடம் கிடைக்கவில்லை, குதிரை கொள்ளு தின்கிறது, கொட்டிலில் கொழுக்கிறது. வண்டியும் மேட்டில் கிடக்கிறது! ஆணி கிடைக்கவில்லை, அதனால் ஆயிரம் ரூபாய் போட்டு வாங்கிய அழகான படம், பரணில் கிடக்கிறது! சாவி இல்லை, எனவே பூட்டு மூலையில் போட்டு வைக்கப்பட்டி

ருக்கிறது! ஓடு கிடைக்கவில்லை; ஆகவே தளத்துக்குத் தேவையான சாமான்கள் துருப்பிடித்துக் கொண்டு கிடக்கின்றன! பாய்மரமில்லை; எனவே கப்பல் பாழாகிக் கொண்டிருக்கிறது! கூந்தல் இல்லை, மலர் வாடி உதிர்கிறது. இப்படி இருக்கிறது அணைத்திட்டத்திற்கென்று பெரும் பொருள் செலவிட்டு வாங்கிய யந்திரங்கள் சிறு துணைச் சாமான்கள் கிடைக்காததால், தூங்கித் துருப்பிடித்து போகும் காட்சி! எந்த நாட்டிலாவது இந்த அக்கிரமம் நடக்குமா? இவ்வளவு திறனற்று, அக்கறையற்று எந்த தனிப்பட்ட முதலாளியாவது நடந்து கொள்வானு? பொதுமக்களின் கோபத்துக்கு ஆளாக நேரிடுமே? அவர்களுக்குப் பதில் கூற வேண்டி வருமே? என்ற அச்சம் கொண்ட எந்த சர்க்காரிலாவது இப்படி ஊழல் நடைபெறுமா? இன்னேரம் பொது மக்கள் சீறி இருப்பார்கள் பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள் தேளாகி இருக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவியிலிருந்து விரட்டப் பட்டிருப்பார். இங்கு? இதோ பண்டிதரின் அடுத்த பவனி, ரஷ்யாவில்என்று வேடிக்கை காட்டுகிருர்கள். பணம் பாழாகிறது, ஊழல் தலைவிரித்தாடுகிறது.

இது மட்டும்தான் என்று எண்ணிவிடவேண்டாம்—இது இப்போதுதெரியும் ஊழல். இது போல் ஏராளம்! ஆட்சி—அப்பழுக்கற்றது, அதைக் குறைகூறுவது கூடாது, என்று கூறுகிருர்களே காங்கிரஸ் நண்பர்கள், சரியாகுமா!

*அரசாங்க நிர்வாகம் ஒழுங்காக இல்லை. நாடகமேடையில் நடிக்கப்படும் கேலிக்கூத்தாக இருக்கிறது, சர்க்காரின் போக்கு. பொது மக்களின் பணம் விரயமாகிறது!*

இவ்விதம் சொன்னல், காங்கிரஸ் நண்பர்களுக்குக் கண்கள் சிவந்து விடுகின்றன.

*அரசாங்கம் திறமைக் குறைவாக நடந்து கொள்கிறது!*

என்று கூறுங்கள். பக்கத்தில் கல்இருக்கிறதா நம்தலை மீது தூக்கிப்போட, என்று தேடுவார்கள், தெளிவை இழந்துவிடும் அளவுக்கு தேசீயம் கொண்டுள்ள காங்கிரஸ்காரர்கள்!

*முட்டாள்தனம்.*

என்று சொல்லுங்கள்...! ஏ! அப்பா. ஆவேசம் வந்தவர் போல் ஆடி, அடிப்போம், உதைப்போம் என்றெல்லாம் ஏசுவர்.

ஆனல் இவ்வளவும் உண்மை. நாம் சொன்னல் கோபம் கொப்பளிக்கும்-அடக்கி வைக்க முடியாமல் ஒருகாங்கிரஸ் ஏடு நேரு ஆட்சியைப் பற்றி சில தினங்களுக்கு முன் இவ்விதமாகவெல்லாம் கூறியிருக்கிறது. காங்கிரஸ் நண்பர்கள் போலவே இந்த ஏடு எமது பண்டிதருக்கு உலகமே பாதபூஜை

செய்கிறது என்று பராக்குக் கூறுவதுதான்! எனினும்,அதனு லேயே சகித்துக் கொள்ள முடியாமல்,ஆட்சி கேலிக்கூத்தாக இருக்கிறது; பொதுமக்கள் பணம் விரயமாகிறது; திறமைக் குறைவாக நடந்து கொண்டிருக்கிறது என்று கண்டித்து எழுதிவிட்டது. முட்டாள் தனத்துக்கு முதல் பரிசு பெறுகிற தாம் சர்க்கார்!! நாம் கூற அஞ்சுகிரேம். ஆனுல் இதோ, ''கல்கி''யின் கண்டனத்தைப் பாருங்கள்:—

''ஏழு வருஷ காலமாக பாங்கிச் சிப்பந்திகள் கிளர்ச்சி செய்யும் போதெல்லாம் இந்திய சர்க்கார் பாங்கி முதலாளி யின் கட்சியில் இருக்கிருர்கள் என்று புகார் சொல்லி வந்தார் கள். இதை அவ்வளவாக பொதுமக்கள் நம்பவில்லே.

ஆனுல் ஸ்ரீ வி. வி. கிரியின் ராஜிஞமா மேற்படி புகாரை இதுவரை நமபாதவர்களேயும் ஓரளவு நம்பும்படி செய்து விட்டது.''

0 0 0

இந்த பாங்கிச் சிப்பந்திகள் தகராறு விஷயமாகக் கையா ளப் பட்டிருக்கும் மௌடிகத்தனம் எல்லாவற்றையும் தூக்கி அடிப்பதாக இருக்கிறது. அரசாங்க நிர்வாகச் சரித்திரத்தில் திறமை இன்மைக்கும் மௌடிகத்துக்கும் முதற் பரிசு கொடுப் பதாக இருந்தால் இதற்குத்தான் கொடுக்க வேண்டும். டிரிபு னலுக்குமேல் டிரிபுனல் நியமிப்பது,விசாரணேக்கு மேல் விசா ரணே நடத்துவது, இதற்காக கோடிக்கணக்கில் பொது மக்க ளின் பணம் விரயமாவது, கடைசியாக வெளியாகும் தீர்ப்பை அவசரஉத்தரவு போட்டு நிறுத்தி வைப்பது என்ருல்,இவை யெல்லாம் உண்மையில் அரசாங்க நிர்வாகத்தைச் சேர்ந் ததா, நாடக மேடையில் நடிக்கப்படும் கேலிக்கூத்தா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

0 0 0

இப்போது என்ன சொல்கிருர்கள், நம்மீது எரிந்து விழும் காங்கிரஸ்காரர்கள்.


கோபுரமேறி கொடி காட்டுவது பற்றிக் குதூகலிப்பது இருக்கட்டும், நண்பர்களே! இதோ கூரையேறிக் கோழி பிடிக் காததற்கு என்ன சமாதனம் சொல்கிறீர்கள்!

உலகம் புகழ்கிறது என்கிறீர்கள் —மெத்தச்சந்தோஷம்— ஆட்சியிலே இந்த அவலட்சணம்இருக்கிறதே அதற்குஎன்ன சொல்கிறீர்கள்? ஊர்க் கோடியில் கோதானம் கொடுக்கிருர். என்று புகழ்கிறீர்கள்!இங்கே மாதா மடிப்பிச்சை எடுக்கிருளே இதற்கென்ன சொல்கிறீர்கள்! என்றெல்லாம் கேட்டால்,காங் கிரஸ் நண்பர்களுக்கு வெட்கமும் துக்கமும் சேர்ந்துதாக்கும்.

வேறென்ன செய்வார்கள், நம்மீது சீறி விழுகிறார்கள்! ஒரு உண்மையைத் தெரிந்து கொள் தம்பி! நம் மீது கோபிக்கிறார்களே தவிர அவர்கள் மனதிலேயும் உண்மை உறுத்தாமலில்லை. ''இந்தப் பாவிகள் நடந்து கொள்வதும், இந்தப் பயல்கள் கேலி செய்வது போலத்தான் இருக்கிறது. பண்டித நேருகூட அடிக்கடி அந்த மாநாடு இந்த மாநாடு என்று அலைந்து கொண்டிராமல், ஆட்சியை ஒழுங்காக்கி ஊழலை ஒழித்து, நிர்வாகத்தைச் சரிப்படுத்தி, மக்கள் சுபிட்சமடையும்மார்க்கத்தை கவனித்தால் நன்றாகத்தான் இருக்கும் அந்தப் பயல்கள் குத்திக் கிளறிக் காட்டும்போது கோபமாகத்தான் இருக்கிறது. ஆனால், ஆர அமர யோசித்துப் பார்த்தால், வெட்கமும் துக்கமுமாகத்தான் இருக்கிறது'' என்று அவர்கள் மனம் எண்ணாமல் இல்லை. அதை மறந்து விடாதே!! உண்மை, அவர்களையும் நம் பக்கம் மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாகக் கொண்டுவந்து சேர்த்துவிடும். அந்த பக்குவம் ஏற்படுகிற வரையில், பழித்துத்தான் பேசுவார்கள், பகைவர் போல் தான் நடந்து கொள்வார்கள். நாம் தான் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். குழந்தை பிறக்கும் வேளை நெருங்க நெருங்கத் தாயின் கூச்சல் அதிகமாகத்தான் இருக்கும்.

அன்புள்ள,

29—5—1955.



கடிதம் : 4

# ஆவடியும் காவடியும்

*ஆவடிக் காங்கிரஸ் மாநாடு*
*பாண்டுங் மாநாடு.*

தம்பி,

ஆவடியில் நடைபெற்ற காங்கிரசின் அலங்காரத்தைக் கண்டாலே சொக்கிப் போனேன்! அங்கு நேரு பண்டிதரைப் பலாப்பழத்தை ஈ மொய்ப்பது போல ''தலைவர்கள்'' மொய்த்துக் கொண்டிருந்தனர். மோட்டார்கள் மட்டும், இதுவரை யாரும் பார்த்திராத அளவு அங்கு! ஏ! அப்பா அப்படிப்பட்ட ஒரு மகாநாட்டை இதுவரை யாரும் கண்டிருக்க முடியாது. லலிதா பத்மினியின் நாட்டிய நாடகமென்ன, வேறு பல கலா நிகழ்ச்சிகள் என்ன—நேர்த்தியான காட்சிகள்,

மிக நேர்த்தியான காட்சிகள்! அப்படிப்பட்ட மகத்தான செல்வாக்கை எதிர்த்து வேலை செய்ய முடியுமென்று எண்ணுகிறீர்களே, அப்பாவிகளே! முடிகிற காரியமா!

இவ்விதம் சில காங்கிரஸ்காரர்கள் பேசுவது பற்றி குறிப்பிட்டு எழுதியிருக்கிறாய்; தம்பி! நீயேகூட ஆவடியால் ஓரளவுக்கு மயக்கம் அடைந்திருக்கிறாய் என்று தெரிகிறது. இது சகஜமும் கூட!

இன்று காங்கிரஸ், சர்க்கார்! எனவே, எப்போதும் சர்க்காரின் தயவினாலே, சொத்து சுகம் ஆகியவற்றை காப்பாற்றிக் கொள்ளவும் அதிகமாக்கிக் கொள்ளவும் விரும்பும் ''கனதனவான்கள்'' யாவரும் அங்கு சென்று, கட்டியம் கூறி நின்றனர். அதனாலே அங்கு பெரிய திருவிழா! அதைக் கண்டு சிலர் சொக்கி விடுவதும் சகஜந்தான்! ஆனால், இலட்சியத்துக்காகப் போரிடும் யாரும், இத்தகைய திருவிழா கண்டு மயக்கமடைந்து விடமாட்டார்கள்.

தம்பி! எங்கள் ஊர் ''கருட சேவை'' உற்சவத்துக்கு இலட்சக் கணக்கிலே மக்கள் வருகிறார்கள்! கும்பகோணம் மகா மகம், மதுரைச் சித்திரைத் திருநாள், திருவண்ணாமலை தீபம், திருமலை புரட்டாசி, தில்லை ஆருத்ரா இப்படி இருக்கிறது ஒரு பெரிய பட்டியல்! இதிலே கூடும் மக்கள் இலட்சக் கணக்கில். இவைகளைக் கண்ட பிறகும், ஆண்டு தோறும் இவை நடைபெற்றுக் கொண்டிருப்பது தெரிந்தும் தான், சுயமரியாதை இயக்கம் துவக்கப்பட்டது என்பதை மறந்துவிடாதே! இவ்வளவு இலட்சம் இலட்சமாக மக்கள் தேர் திருவிழாவுக்குக் குவியும் போது, சுய மரியாதை இயக்கம் நடத்துவதாலே பயன் என்ன என்று ஆயாசப்படுவது சரியல்ல—இவ்வளவு கோலாகலமான திருவிழாக்கள் நடைபெற்றும், சுயமரியாதை இயக்கம் எழுவது தடைப்படவில்லை! அதை எண்ணிப்பார் உண்மை விளங்கும். இலட்சக் கணக்கான பொருள் செலவிட்டு இரசமான விழாக்களை நடத்துகிறார்கள். தங்க மயிலில் தகப்பன் சாமி வருகிறார்! தையல் நாயகியோ தங்கப் பல்லக்கில்! வெள்ளித்தேர்! தங்க ரிஷபம்! பொற்கவசமிட்ட கருடன்! இப்படிக் கண்ணுக்குக் கவர்ச்சிகள்! வேத கோஷ்டிகள்! பஜனைக் கூட்டங்கள்! பக்தர்கள் வெள்ளம்போல்! சீமான்கள் சீமாட்டிகள்! வேல்விழி, சுழற் கண், குழல் அழகி, குயிலி இப்படிப்பட்ட பட்டாளம் பவனிவரக்காண்கிறோம். அமெரிக்காவில் ஆறு ஆண்டு, இங்கிலாந்தில் ஏழாண்டு, சென்ற மாதம் ஜெர்மனி, இப்படி மேல் நாடுகள் சென்று திரும்பிய மேதாவிகள் கலந்துகொள்வதைக் காண்கிறோம். கவர்னரின் காரியதரிசி, சர்க்காரின் பிரதம இஞ்சினீயர், டாக்டர், பிரபல வக்கீல், உயர் நீதி மன்றத்

தின் அதிபர் இப்படிப்பட்ட பதவியாளர்களைக் காண்கிறோம். ஆடை அணிகள் அலங்காரங்கள் அமோகமாக! நாத வெள்ளம்! வாணவேடிக்கை!-இவ்வளவும் இருந்திடக் காண்கிறோம். எனினும், இவைகளாலே நாம் மயக்கம் அடையவில்லை சொக்கிப் போகவில்லை, சோர்வு கொள்ளவில்லை, கும்பலோடு கோவிந்தா போட்டுவிடவில்லை, இவைகளைக் காண்கிறோம். என்னே இவர்தம் போக்கு! எரியும் தணலில் கற்பூரக் கட்டியைத் தேடிக்கொண்டிருக்கிறார்களே! என்னே இவர் தம் விசித்திர சித்தம்! என்று எண்ணிக் கொள்கிறோம். —இவ்வளவும் வீண் ஆரவாரம், கவைக்குதவாதவை, என்று எடுத்துக் கூறுகிறோம். இங்கு சென்றீரே இன்னவிதமாகத் தொழுதீரே, அங்கு சென்றீரே அந்தத் தேவனை வேண்டிக் கொண்டீரே, வேலழகன் விழாவிலும் வேழ முகத்தான் உற்சவத்திலும் கலந்து கொண்டீரே, அன்பரீர்! கண்ட பலன் இன்னது என விண்டிட இயலுமா? உலகுக்குக் கிடைத்த பலன் இன்னது என எடுத்துரைக்க இயலுமா? என்று கேட்கிறோம். திருவிழா சென்று திரும்பியவரும்கூட அசட்டுச் சிரிப்புடன்—ஆமாம்—ஒரே கூட்டம்—இடியும் இடர்ப்பாடும்தான் கண்டோம் என்று கூறிடக் கேட்கிறோம். சுயமரியாதைப் பணியினை தொடர்ந்து நடாத்துகிறோம். ஒரு ஆவடி கண்டு, சொக்கிப் போனவர்கள் பேசுவது கிடக்கட்டும். ஒவ்வோர் தலத்திலும் ஆண்டுக்கோர் ஆவடி நடைபெற்ற வண்ணமிருக்கிறது எனினும் பகுத்தறிவு பரப்பும் பணி பட்டுப் போகவில்லை, வளர்ந்த வண்ணம் இருக்கிறது. உனக்குத் தெரியுமோ தெரியாதோ, இலட்சக் கணக்கான மக்களை இழுக்கும் வைகுண்ட ஏகாதசி, சீரங்கத்தில் ''ரொம்பப் பிரமாதம்'' என்கிறார்கள் அல்லவா, அந்த ஏகாதசியின்போது, அந்தஊரிலே உள்ள சுயமரியாதை இயக்கத் தோழர்கள்,ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு என்று நினைவு, இரயில் நிலையத்துக்கு எதிர்ப்புறத்தில், ஒரு பெரிய ஓவியம் தயாரித்து வைத்திருந்தனர். என்ன ஓவியம் என்று எண்ணுகிறாய். ஏசுநாதர் சிலுவையில் அறைபடும் காட்சி ஒரு புறமும், புன்னைமரத்தில் அமர்ந்து புல்லாங்குழல் ஊதும் கண்ணனிடம், களவாடிய சேலைகளைத் தந்தருளும்படி, கோபிகையர் குளத்திலிருந்தபடி கேட்கும் காட்சி மற்றோர் புறமும்! ஏகாதசி காண வந்தவர்கள், இந்தப் பகுத்தறிவு ஓவியக் காட்சியைக் கண்டு,

அடெ!<br>
அடடே!<br>
இதைப் பாருடோய்!<br>
அட, இப்படித்தான் இருக்கு!<br>
**செச்சே. மானத்தை வாங்கித் தொலைக்கிறானுங்க!**

*இப்படிக் கடவுள் செய்வாரா?*
*இப்படிச் செய்பவர் கடவுள் ஆவாரா?*
*இப்படி என் கதை கட்டினுர்கள்?*
*நாம் என்னத்தைக் கண்டோம்!*

என்று அவரவர் மனப்பக்குவத்திற்குத் தக்கபடி, பேசிச் சென்றனர்.

ஆவடியில் நடைபெற்ற திருவிழாவைப் பிரமாதப்படுத்திப் பேசுவதாலே, காங்கிரசிலே மலிந்துகிடக்கும் குறைபாடுகளை ஓரேயடியாக மறைத்து விடவும் முடியாது; ஆட்சியிலே காணக் கிடக்கும் அவலட்சணங்களையும் மறுத்துவிட முடியாது.

ஒரு ஊரிலே தொடர்ந்து ஒரு பத்து நாளைக்கு நாடகம் நடைபெற்ருல், அந்த ஊரிலே உள்ள "சபல புத்தி" படைத்தவர்கள், நடை நொடிபாவனை, உடை, உரையாடல் ஆகியவைகளிலே, தங்களையுமறியாமல் நாடக பாணியைக் கலந்து கொள்வார்கள்! ஒட்டுவார் ஒட்டிபோல, நாடகபாணி வேலை செய்யும்—சில நாளைக்கு—பலர் பார்த்துக் கேலிபேசி அதைப் போக்கும் வரையில்.

ஒரு சர்க்கஸ் கம்பெனி வந்துவிட்டால் போதும், அந்த ஊரில் உள்ள வாலிபர்களுக்கு, உடலிலே "காயம்" ஏற்பட்டே விடும்—உயரத் தாண்டுதல், தாவிக் குதித்தல், சைகிள் சவாரியில் வேலை காட்டுவது, இப்படிச் சர்க்கஸ் செய்வதால்!

அதுபோலவே தம்பி, ஆவடி போய்விட்டுவந்தவர் சில நாளைக்கு அந்தப் பாணியில்தான் பேசுவார்கள். பிறகு, நிலைமை அவர்களுக்கும் உண்மையை உணர்த்தும்.

நேரு பண்டிதருடைய பிரத்யேகத் திறமையே, இத்தகைய "சொக்க வைக்கும்" காரியத்தைச் சோர்வில்லாமல் செய்வது தான்!

பாண்டுங் மகாநாடு பற்றிப் பத்திரிகைகளிலே பார்த்தாயல்லவா!

இதிலே காட்டிய வர்ண ஜாலங்களுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகையின் அளவு தெரியுமா என்று கேளுங்கள் காங்கிரஸ் நண்பர்களை!

தலைவர்கள் தங்குவதற்காக இரண்டு பெரிய ஓட்டல்கள் ஒதுக்கப்பட்டன. அந்த ஓட்டல் அறைகளைப் புதுப்பித்து வசதிகளைப் பெருக்க 15 இலட்சம் ரூபியா அதாவது 80 இலட்சத்து 60 ஆயிரம் வெள்ளி (மலாய்நாணயம்) செலவிட்டனர்.

மகாநாட்டுக்காக மொத்தம் 6 கோடி ரூபியா, அதாவது 160 இலட்சம் வெள்ளி இதுவரை செலவாகி இருக்கிறது என்று, ஏப்ரல் 9 தேதி மலாய் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இப்படிப் பணத்தை வாரியிறைத்து நடத்தப்படும் மகாநாடுகள், பவனிகள், கண் காட்சிகள், இவையாவும் அடிப் படைக் குறைபாடுகளை மக்கள் சில காலம் உணராமல் இருக் கச் செய்ய உதவுமே தவிர, கடைசிவரை காப்பாற்றிவிடாது.

திறமைமிக்க ஓவியனொருவன், பழக் கொத்து தொங்கு வதுபோலத் திரையிலே தீட்டித் தொங்கவிட்டிருந்தாலும். பறவைகள் சில பழத்தைக்கொத்தித் தின்பதற்காக வட்டமிட் டனவாம்! ஓவியனுடைய கைத்திறனை அனைவரும் பாராட் டத்தானே செய்வர். ஆனால், பறவைகளும் பாராட்டுரை வழங்கினோரும், ஓவியத்திலே கண்ட பழமே போதும் என்று இருந்து விட முடியும். பாராட்டுவர், பிறகோ பழச்சுவை தேடி வேறிடம் செல்வர். பறவைகளே கூடப் பறந்துபோகும் பழத்தோட்டம் நோக்கி.

அதுபோலத்தான் ஆவடிகள்! ஆவடிபோல வேறு எந்த கட்சியினாலும் நடத்திக் காட்டவே முடியாது என்பதல்ல. ஆவடிபோல விமரிசையாக மாநாடுகள் நடத்தவே கூடாது என்பதல்ல தம்பி! ஆவடி நடத்திக் காட்டிவிட்டு, இத்துடன் திருப்தி பெறுக! இன்னலை மறந்திடுக! இன்பம் பெற்றதாக எண்ணிக் கொள்க! என்று கூறுவது கூடாது என்பதைத்தான் கூறுகிறேன். 'ஆவடி கண்டேன், ஆனந்தம் கொண்டேன், இனி நான் காவடி தூக்கி ஆடிடுவேன், களிப்புச் சிந்து பாடிடுவேன், காங்கிரஸ் கட்சியினருடன் கூடிடுவேன்' என்று பேசிடும் போக்கினர் பற்றிக் கவலை கொள்ளாதே. நமக் கென்று ஒரு மகத்தான குறிக்கோள் இருக்கிறது—அதிலே வெற்றி பெறுவதற்காகப் பணியாற்றும் நாம், ஆவடி கண்டு அயர மாட்டோம், பாண்டுங் பசப்புக்கும் பலியாகி விட மாட்டோம்.

ஆவடியிலும் பாண்டுங்கிலும், அலங்காரம் கண்டு அன்பர் சிலர் சொக்கிப் போகின்றனர். நாமோ இவ்வளவு ஆவடி களுக்குப் பிறகும்கூட, அங்கோர் சமயம் இங்கோர் சமயம் என்ற அளவிலாவது, சிலர்பலர், அரசியலில் இன்று காணப் படும் அவலட்சணத்தையும், வடநாட்டு ஆதிக்கத்தையும், கண்டிக்க முன்வருவது காண்கிறோம், மகிழ்ச்சியும் நம்பிக்கை யும் கொள்கிறோம். ஆவடி, அனைவரையுமல்ல, வழி தவறி யோர், வழுக்கி விழுந்தோர், வாழ்த்திப் பரிசு பெறுவோர் ஆகியோரைத்தான் சொக்கிடச் செய்கிறதே தவிர, கொள் கையில் உறுதி படைத்த எவரையும் காவடி தூக்கியாக் கிடாது—மாறாக, காவடி தூக்கிடும் போக்கினை அத்தகை யோர் கண்டித்த வண்ணம்தான் இருக்கிறார்கள்.

''ஐயன்மீர்! ஆவடி நடத்திக் காட்டினீர், இருபது இலட் சம் செலவிட்டீராம்! உங்களிடம் வசதி இருக்கிறது, செலவிட் டீர்கள்! பாண்டுங் பற்றிப் பேசுகிறீர்கள் பரவசத்துடன்.

கோடி என்கிருர்கள் அதற்கான செலவு! சரி! ஆனல் இவைகளின் பலனுக, ஏழை கண்டது என்ன? இடர்ப்பாடு எது களையப்பட்டது? எதேச்சாதிகார முறை ஒழிக்கப்பட்டதா! இல்லாமை இயலாமை துடைக்கப்பட்டதா! ஓவியத்தில் உள்ள பழக்கொத்துதானே, உங்கள் ஆவடிகள்,'' என்று கேட்கிருர்கள், சொக்குப்பொடியால் மயக்கமடையாதவர்கள்.

''இங்கே நடைபெறும் ஆவடியைக் காட்டி, இந்நாட்டிலே செல்வாக்கு எவ்வளவு செழிப்பாக இருக்கிறது காணீர் என்றும், பாண்டுங் காட்டி வெளி நாடுகளில் கிடைக்கும் மகத்தான செல்வாக்கைக் காணீர் என்றும் விளம்பரம் பேசி வருகிறீர்கள்—எனினும் காய்ந்த வயிறுடன் இங்கும், கண்ணீருடன் வெளிநாடுகளிலும், இந்நாட்டு மக்கள் வதைபடுகின்றனர். அதை இம்மியளவு போக்கவும் இந்த ஆவடிகளும், பாண்டுங்குகளும் பயன்படக் காணுேமே'', என்று கேட்கின்றனர், திருவிழாக் கண்டு தெளிவை இழக்காதவர்கள்.

பர்மியப் பிரதமர் இருக்கிருரே நூ, அவர் நேரு பண்டிதருக்கு அத்யந்த நண்பர்!

சமயம் கிடைக்கும்போதெல்லாம் அவர் அங்கு வந்து அளவளாவுகிருர். பண்டிதரும் அந்தப் பக்கம் போகும் போதெல்லாம், நூவினுல் உபசரிக்கப்படுகிருர். பத்திரிகைகள் பத்தி பத்தியாக இந்த ''நேசம்'' பற்றிச் செய்திகளைத் தருகின்றன.

ஆசியாவிலே கொழுந்துவிட்டெரியும் பிரச்சினைகளை மட்டுமல்ல, ஆப்பிரிக்காவிலே மூண்டு கிடக்கும் பிரச்சினைகளையும் ஒரு சேரத் தீர்த்துவைக்கும் ''அபாரமான'' வேலையின் நிமித்தம் கூடினரே, பாண்டுங்கில். அதற்காகப் புறப்பட்ட போதுகூட நேரு பண்டிதர், இரங்கூனில் தங்கி,அங்கு நடைபெற்ற திருவிழாவில் கலந்து கொண்டார். நூவுடன் பண்டிதர் பர்மிய உடையில், சிரித்துப் பேசி மகிழும் சினிமாக் காட்சி போன்ற படம் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. இவ்வளவு நேசம், பாசம், இருக்கிறது இரு தலைவர்களுக்கு. இது தந்துள்ள பலன் என்னவென்று கேட்டுப் பார்த்ததுண்டா, தம்பி! இவ்வளவு தோழமையின் விளைவாக, பர்மா வாழ் மக்களுக்குக் கிடைத்துள்ள உரிமைகள், வசதிகள், சலுகைகள் என்னவென்று கேட்டுப் பார்த்திருக்கிறீர்களா?

> ''இந்தியர்கள் விட்டுவந்த பிறகு பர்மாவில் அநேக விஷயங்கள் நடந்து விட்டன. வீடுகளையும் நிலங்களையும் பர்மியர்கள் வந்து ஏற்றுக் கொண்டு அனுபவிக்கத் தொடங்கிவிட்டார்கள்; யுத்தம் காரணமாக விட்டுச் சென்ற நிலபுலன்களை, வீடு வாசல்களை சுவான்தார்கள்

ஏற்றுக் கொள்ளலாம் என்று சட்டம் இருப்பினும், இரங்கூனில் மட்டும் அது செல்லுபடியாகாது. நகருக்கு வெளியே விஷயம் எப்படி யென்றால், வீட்டுக்காரர்களுக்குக் குடித்தனக்காரர்களை வெளியேற்றும் உரிமை சட்ட பூர்வமாக மறுக்கப்பட்டது. பார்க்கப்போனால் வீட்டுக்குடையவர்கள் எல்லாரும் இந்தியர்கள். அதிலே வசிப்பவர்கள் பர்மியர்கள். இப்போது இன்னொரு பெரிய கண்றாவி. ஒரு குடித்தனக்காரன் தன் ஜாகையை மற்றொரு குடித்தனக்காரனுக்கு மாற்றி விடுவான். வீட்டுக்காரன் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். ஒன்றும் சொல்வதற்கில்லை. அட, வீடே வேண்டாம், நிலமே வேண்டாம், விற்றுவிட்டுப் போவோம் என்றாலும், இன்னொரு சட்டம் இருக்கிறது. பர்மியப் பிரஜைகளுக்குத் தவிர வேறொருவனுக்கு ஸ்தாவார சொத்துக்களை விற்பனை செய்யவோ அடைமானம் வைக்கவோ குத்தகைக்கு விடவோ அனுமதிகிடையாது. இந்தியரிடம் விலைக்கு வாங்கவும் பர்மியர் எவரும் தயாராக இல்லை இதனால் அங்கு அடைமானத்தில் கடன் வாங்கியுள்ள இந்தியர்கள்கூட தங்கள் ஸ்தாவரச் சொத்துக்களைக் கடனுக்கு ஈடாக மாற்றிக் கொள்ள முடியாத நிலையில் செய்வதின்னதென்றறியாமல் இருக்கிறார்கள். சுதந்திர சட்ட அரசியல் சட்டப்படி உத்தியோகம் இனி பர்மியர்களுக்கே என்று ஆகிவிடவே, அனேகர் வேலை இழக்கும் திண்டாட்டத்திலும் சிக்கியிருக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்த மாதிரி ஒரு புதிய பெரிய மசோதாவையும் பர்மியப் பார்லிமெண்டுகொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டிராத நிலச்சுவான்தார்களின் நிலங்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக் கொண்டு விடுவது என்பதே இதன்சாராம்சம். விவசாயிகளாக இருந்தால் தலா ஐம்பது ஏக்கர் வைத்துக் கொள்ளலாம். இங்கே சுமார் ஐயாயிரம் இந்தியர் வரை 26 இலட்சம் ஏக்கராவுக்குச் சொந்தக்காரர்கள். அதன் வருமானம் நாற்பது கோடி வரை மதிக்கப்படலாம். பர்மிய விவசாயி மந்திரி சட்டதிட்டமாக, நிலம் எல்லாம் ராஜ்ய சர்க்காருக்கே சொந்தம்; நிலச்சுவான்தாரருக்கு அதை வைத்துக் கொண்டு அதில் சாகுபடி செய்வதற்கு மட்டுமே உரிமை இருக்கிறது; சர்க்கார் உசிதம் போல் இந்த ஏற்பாட்டை ஒழுங்கு செய்யவோ, மாற்றவோ, ரத்துச் செய்யவோ உரிமை பெற்றது... என்றார்.

பொதுவாக இந்தியர் நிலைமை திருப்திகரமாக இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அவர்கள் அந்நிய நாட்டவர்களாகவே மதிக்கப்படுகிறார்கள்; வருமானம் மிகவும் குறைவு; ஆகையால் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படுகிறது; எனவே பர்மியரிடையே அந்தஸ்து என்பது அவர்களுக்கு அதிகம் இல்லை.

தம்பி! பர்மாவில் உள்ளவர்களில் தமிழரே அதிகம். பர்மாவில் இன்றுள்ள நிலைமை இது. அறுபது நாட்களில் ஐந்து நாடுகளைச் சுற்றிவிட்டு வந்த ஆனந்த விகடன் எழுத்தாளர் ஒருவர் தீட்டியதைத்தான் தந்திருக்கிறேன்.

இத்தனை இன்னலுக்கு ஆளாகி யிருக்கிறீர்களே, இங்கிருந்து சென்றவர்கள், நேரு பண்டிதருக்கு பர்மிய முதல்வரிடம் உள்ளநேசமும்பாசமும் என்னபலன் கொடுத்திருக்கிறது? நேரு பண்டிதரைக் காணும்போதே, பர்மிய முதல்வரின் முகம் மலருகிறது, கட்டித் தழுவிக் கொள்கிறார், ஆசியாவின் வழிகாட்டி நீரே என்று உபசாரம் பொழிகிறார், விருந்து நடத்துகிறார், ஆனால் தன் சொந்த நாட்டுப்பிரச்சினை எழுகிற போது, இந்த நேசமும் பாசமும் ஓடி ஒளிகிறது. பர்மியரின் உரிமைகளுக்காகவே பணியாற்றுகிறார். எமது பண்டிதருக்குள்ள செல்வாக்கினைப் பாரீர், அவர், 'செக்கு மாடென உழைத்திடுவீர், செல்வம் கொழித்திடச் செய்திடுவீர், அதை டாடாவும் பிர்லாவும் செல்லாக அரித்தாலும் சீறி எழாதீர்' என்று கூறினாலும் அதுதான் சோஷியலிசம் என்று எண்ணிப் பூரித்திடுவீர் என்று பேசுகிறார்கள். ஒருநாட்டின் தலைவருக்கு வேறொரு நாட்டிலே அபாரமான செல்வாக்கு இருக்குமானால், செல்வாக்குள்ள தலைவரின் நாட்டவருக்கு அந்தவேற்று நாட்டிலே, மதிப்பு உயரும், வசதிகள் கிடைக்கும், சலுகைகள் கூடப் பெறவழி ஏற்படும். இவர்களோ, பர்மாவில் பண்டிதருக்கு மிகுந்த செல்வாக்கு என்று பண்இசைக்கிறார்கள் என்று ஆனந்த விகடனைச் சேர்ந்தவரே ஆயாசத்துடன் கூறுகிறார். பண்டிதரின் செல்வாக்கின் பொருள்தான் என்ன?

ஆவடி காட்டியும் பாண்டுங் பற்றிப் பாராட்டிப்பேசியும் தென்னாட்டவர் காணும் பலன் என்ன? காவடி தூக்கித் திரியவேண்டி இருக்கிறது, எதற்கும் எப்போதும்!

டில்லி நிதி மந்திரி தேஷ்முக் நாமெல்லாம் ஏதோ விளக்கமறியாதார் என்ற எண்ணத்தோடு பேசுகிறார். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே வடநாட்டுக்கே அதிகத் திட்டங்கள் செய்து தரப்பட்டன என்று குறை கூறுகிறார்கள் — ஏன் அப்படிச் செய்ய நேரிட்டது என்றால், திட்டம் முதலில் வடநாட்டுக்காகத் தீட்டினோம், என்கிறார். இது சமாதானம் என்று அவர் கருதுகிறார். அவ்வளவு பெரியவர் சொல்லுகிறாரே என்பதற்காக, இங்குள்ள அடிவருடிகளும், "ஆமாம் சாமி"

போடுகிருர்கள். திட்டம் தீட்டும்போது, ஏன் வட நாட்டின் கவனம் மிகுந்திருந்தது. தென்ளுடுபற்றி ஏன் அக்கறை யற்ற போக்கு, அலட்சியம் ஏற்பட்டது என்பதற்கு அவரும் காரணம் கூறவில்லை; இங்கு உள்ளவர்களும் கேட்கக் காணும். உங்களுக்கு இரண்டாவது பந்தியிலே சாப்பாடு போடப்படும் என்று விருந்து சாப்பிட்ட ''தெம்பில்'' ஏப்பம் விட்டபடி தேஷ்முக் கூறுகிருர். இங்குள்ள ''பிக்ஷாந்தேஹி'' களும் ஏதோ பின் கட்டில் உட்காரவைத்துப் போட்டாலும் பரவாயில்லை, பசி வயிற்றைக் கிளறுகிறது என்று கூறுகிருர்கள்!! இது தானே ஆவடி தந்த அந்தஸ்து!

''பிக்ஷாந்தேஹி'' என்று நாம் சொன்னால் காங்கிரஸ் நண்பர்களுக்குக் கோபம் கொதித்தெழுகிறது. ஆஹா! எங்களையா பிச்சைக்காரர்கள் என்று ஏசுகிறீர்கள், என்பார்கள். மைசூர் ராஜ்ய முதலமைச்சர் பேசியிருக்கிருர் இது போல! ! டில்லி சர்க்காரின் போக்கை மைசூர் சட்ட சபையில் மிக வன்மையாகக் கண்டித்துப் பேசுகிருர்! டில்லி, தென்னட்டுத் தலைவர்களை, அவர்களை இங்கு நாம் படேல் என்று புகழ்ந்தாலும் சரி, திலகர் என்று கொண்டாடினலும் சரி, அவருக்காகக் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு மேலே விழுந்து வேலை செய்தாலும் சரி அவர் மேனியில் துளி தூசி பட்டாலும் என் கண்ணிலே மிளகாய்ப்பொடி விழுவது போல உருகி இருக்கிறது என்று உருகிப் பேசினலும் சரி, 'அவருடைய ஆட்சியை ஆதரிப்பதையே என் தவமாகக் கொண்டுவிட்டேன்' என்று பேசிப் பணியாற்றி வந்தாலும் சரி, எப்படிப்பட்ட செல்வாக்கை இங்கே பெறக்கூடியவராக இருந்தாலும், அந்தத் தலைவர்களை அங்கு பிச்சைக்காரர்கள் போலத்தான் நடத்துகிருர்கள் என்பதை உணர்ந்து, சற்றுக் கோபமாகவே பேசுகிருர்.

> ''மத்திய சர்க்காரிடம் நாம் சொல்லும் போதெல்லாம், நாமும் நமது யோசனையைக் கூற வேண்டும்; ஏதோ பிச்சைக்காக வாங்கப் போகும் போக்கிலே நடந்து கொள்ளக் கூடாது.''

என்று இடித்துரைக்கிருர். இதன் பொருள் விளக்கமாக இருக்கிறதே, தம்பி! ஏன் காங்கிரஸ் நண்பர்களுக்கு மட்டும் விளங்கவில்லை! டில்லியில் தென்னகத்துத் தலைவர்களைப் பிச்சை வாங்க வருபவர்களை நடத்துவதுபோல நடத்துகிருர்கள் என்பதைத் தோழர் அனுமந்தையா, தனியானதோர் பாணியில் எடுத்துரைக்கிருர்.

> ''அவ்வப்போது, கடன் வேண்டும், மானியம் வேண்டும் என்றெல்லாம், மத்தியசர்க்காரிடம் கெஞ்சிக் கேட்டபடி இருக்க வேண்டிய நிலைமை எப்படி இருக்கிறதென்ருல், மத்திய சர்க்கார் ''வசதிகளை'' குவித்து

வைத்துக் கொண்டிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு இராஜ்ய சர்க்காருக்கே உரிமையானதான விஷயங்களில்கூட, இப்படிச் செய்யுங்கள் அப்படிச் செய்யுங்கள் என்று வற்புறுத்துகிறது, கடன் தருகிறேன் மானியம் தருகிறேன் என்று ஆசைகாட்டி!!

தன்னிடம் உள்ள ஏராளமான ''வசதிகளை'' வைத்துக் கொண்டு, மத்திய சர்க்கார், மெள்ள மெள்ள, ஆனால் வெற்றிகரமாக, இராஜ்ய சர்க்காரின் நடவடிக்கைகளிலே புகுந்து, ஆதிக்கம் செலுத்துகிறது.

மத்திய சர்க்காரின் போக்கு எப்படி இருக்கிறது என்றால், அமெரிக்கா, பணம் கடனாகவும் இனமாகவும் கொடுத்துத் தன் ஆதிக்கத்தை இங்கும் வேறு பல நாடுகளிலும் புகுத்துகிறதே, அதுபோல இருக்கிறது.''

தம்பி! இவ்வளவும் கூறுபவர், வகுப்புவாதி, விஷமி அல்ல. பிற்போக்கு வாதியல்ல; காங்கிரஸ்காரர் தான்! ஆனால் இவருக்கு முதுகெலும்பு இருக்கிறது. வடநாட்டுத் தலைவர்களுக்கு வால்பிடித்தால் நமது அரசியல்வாழ்வு ஒளிவிடும் என்ற அடிமைப் புத்தியில்லை. ஆகவே, அஞ்சாமல் நிலைமையைக் கூறுகிறார். ஆவடி பார்! அதன் அற்புதம் கேள்! என்று தெம்மாங்கு பாடிக் காட்டினாலும், காவடி தூக்கித் திரியும் நிலைக்குத் தென்னாடு வருவது கண்டு மனம் வெதும்பிப் பேசுகிறார்.

பிச்சைக்காரரை நடத்துவது போல நடத்துகிறார்கள்.

இராஜ்ய விவகாரங்களிலே நுழைந்து ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

அமெரிக்கா பணத்தை வீசி, பல்லிளிக்கச் செய்து, தன் படைவீடாகப் பல நாடுகளை அமைத்துக் கொள்வது போல, டில்லியும் செய்கிறது.

இவ்வளவு குற்றச்சாட்டுகளை ஏவுகிறார் தோழர் அனுமந்தையா!

ஆவடிகள் நடத்துவதால் கிடைக்கும் பலன் இது தானே, தம்பி! வேறென்ன?

திருவிதாங்கூர்-கொச்சியில், முதலமைச்சராக முன்பு இருந்த தோழர் கேசவன் என்பவர் ஓரிரண்டு திங்களுக்கு முன்பு மலாய் நாடு சென்றார். கோலாலம்பூரில் மலையாளிகள் அவருக்கு வரவேற்பும் விருந்தும் நடத்தினர். அங்கு அவர் பேசியது என்ன தெரியுமா? ஆவடியின் பெருமையைப்பற்றியும் அலகாபாத் பண்டிதரின் அளவற்ற செல்வாக்கைப்பற்றியுமா? இல்லை; இல்லை! டில்லியின் மாற்றாந் தாய்ப் போக்கினைக் குறித்துத்தான் பேசினார். தாயகத்திலிருந்து வந்த தலைவரை, வாழ்த்தி வரவேற்று, ஏதோ நாங்கள்தான்,

பிழைப்புக்கு வழிதேடிக் கொண்டு இந்தக் கண்காணுச் சீமைக்கு வந்து சேர்ந்தோம், அங்கே தாயகம் தளைகள் ஒடித் தெறியப்பட்ட நிலையில் தன்னரசு நடாத்துகிறதே, தரணியெங்கும் பரணி பாடிவரும் நேரு பண்டிதரின் ஆட்சி நடக்கிறதே, எப்படி இருக்கிறது? தாயகம் இன்பம் வழிந்தோட வேண்டுமே? என்று கேட்கிறார்கள். தோழர் கேசவன் முன்னாள் முதலமைச்சர், அதையா கேட்கிறீர்கள் அன்பர்களே? என்று கூறி பெருமூச் செறிகிறார்.

"நாங்கள் புதிய கைத்தொழில்களைத் தொடங்க இடையறாது மத்திய சர்க்காரின் உதவியை நாடி வந்திருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு புதிய கைத்தொழிலும் வட இந்தியாவிலே தொடங்கப்படுகிறது. பிரம்மாண்டமான பெட்ரோல் சுத்திகரிப்பு நிலையம் தற்போது, பம்பாய்க்கு அருகில் உள்ள டிராம்பேயில் அமைக்கப்பட்டு வருவதையும், மண் ஆராய்ச்சிப் பாக்டரியும் அப்பகுதியில் அமைக்கப் படுவதையும் இதற்கு உதாரணமாகக் காட்டலாம். மத்திய அரசாங்கம் இத்தகைய மாற்றாந்தாய்ப் போக்கை அனுஷ்டிப்பது கண்டிக்கத் தக்கதாகும்." தோழர் கேசவன் என்பவரின் பேச்சு, இது!! கண்டிக்கத்தக்கது என்கிறார், காரணமும் காட்டுகிறார். கண்டனம் பிறக்கிறது, அது பிறவாதிருக்கத்தான் ஆவடி அலங்காரம் காட்டப்பட்டது.

ஆவடி மூலம், காவடி தூக்கிகளாக இருக்கத் தென்னாடு இசைகிறதா, இணங்குகிறதா, என்பதுதான் பரிக்ஷை பார்க்கப்பட்டது. இந்தச் சூட்சமத்தைப் புரிந்து கொள்ளாமல் ஆவடியைப் பார்த்தீர்களா, என்று கண்ணையும் வாயையும் அகலத் திறந்து கொண்டு, அன்பர் சிலர் கேட்கிறார்கள். என்ன செய்யலாம் தம்பி! அவர்களின் மனமயக்கம் தெளிய வேண்டும்—அதற்கான முறையில் நாம் பணியாற்ற வேண்டும்.

அன்புள்ள,

5—6—1955

அண்ணாதுரை

கடிதம் : 5

# வளை ஒலி கேட்கிறதா!!

*அண்ணாவின் வடநாட்டுப்பயணம்—அரித்துவாரமும் சாதுக்களும்*

தம்பி,

சில தினங்களுக்கு முன்னர் நேருபண்டிதர் ஹரித்துவாரம் எனும் ஊருக்குச் சென்றிருந்தார்; இமயமலையின் அடிவாரத்திலே இருக்கிறது இந்த ஊர்; இந்துக்கள் இதைப் புண்ணிய ஸ்தலம் என்று கொண்டாடுகிறார்கள். இங்கு வந்து இமயத்திலே இருக்கும் ரிஷிகேசம் போன்ற ஸ்தலங்களுக்குப் போகிறார்கள். சிறிய ஊர்தான். நான் அங்குப் பத்து நாட்களுக்கு மேல் தங்கியிருந்திருக்கிறேன், பெரியாரின் அன்புப் பாத்திரனாக இருந்தபோது!—அந்தப் பழைய நாட்களில். அப்போது நான் ''விடுதலை''யில் எழுத்தாளன். பெரியாருடன் வரும் பேச்சாளன். ஆமாம், மறந்து போகிறேன் பார் தம்பி, திராவிடர் கழகச் செயலாளனாகவும் இருந்து வந்தேன். பார்ப்பனரை இந்த நாட்டை விட்டு ஓட்டும் ஒரே அபார சேவை செய்வதற்காகவே, இன்று அல்லும் பகலும் கடுமையான நோயைத் தாங்கிக் கொண்டு, எவ்வளவோ லாபகரமான தொழில்கள் வருந்தி அழைத்தும், வருக! வருக! என்று பலர் பணத்தைக் கொட்டி ஆசை காட்டியும், 'லட்சியத்தைக் கைவிடேன்! துரோகிகளை ஒழித்துக்கட்டியே தீருவேன்! என்று முழக்கம் (ஆறு திங்களில் நான்கு முறையேனும்!) செய்து கொண்டும், நாள் தவறாமல் எழுதிக் கொண்டும் வரும் சிலம்புக் கூட்டத்தார், என்னைக் கேலி பேசியும் பெரியாரைப் பின்பற்றும் ''பேதமை''யை எடுத்து விளக்கிக் கொண்டும், இதை நாம் உட்கொள்வதற்காக வேண்டி, இடையிடையே சுவையுள்ள விருந்து (அன்புடன்தான், மறக்க முடியுமா!) அளித்துக்கொண்டும் இருந்த நாட்கள்! திடீரென்று ஒரு தினம் பம்பாயிலிருந்து எனக்கோர் தந்தி வந்தது. ''உடனே கிளம்பி ஹரித்துவாரம் வந்து சேரவும்'' என்று. தந்தி தந்தவர் பெரியார்; அவர் பம்பாய் பகுதி சென்று அங்கிருந்து ஹரித்துவாரம் சென்றுவிட்டு, வடநாட்டிலே வேறு பல ஊர் போக திட்டம் இட்டு இருந்தார் போலிருக்கிறது, எனக்கென்ன தெரியும்? யாருக்குத்தான், எப்போதுதான் அவர் போடும் திட்டம், அவராகச் சொல்லுமுன் தெரிகிறது?

ஹரித்துவாரம் வந்து சேர்—எனக்கு இப்படி ஒரு தந்தி.

என் சுபாவம், 'உனக்குத் தெரியும், ஏன், ஏறக்குறைய கழகத் தோழர்கள் அனைவருக்கும் தெரிந்ததுதானே. பக்கத்திலே உள்ள ஆற்காடு போவதானாலும் நாலு நண்பர்கள் கூட வேண்டுமே எனக்கு. அப்படிப் பழகிப்போன என்னை ஹரித்துவாரம் வரச் சொல்கிறார்: என்ன செய்வது? கிளம்பினேன்: தோழர் குருசாமி இரயிலடி வந்திருப்பதாக நினைவு.

பத்து நாட்கள் ஹரித்து வாரத்தில் இருந்தோம், ஒரு ஐயர் வீட்டில்.

அவர் காலஞ் சென்ற பேரறிஞர் எம்.என். ராய் அவர்களின் இயக்கத்தவர். எனவே, எங்களை அன்புடன் தமது இல்லத்தில் வைத்து, உபசரித்தார்.

உங்களில் பலருக்குத் தெரிந்திராது தம்பி! பெரியார் அங்குதான், வால்மீகி இராமாயணம் பற்றிய குறிப்புரைகள் தயாரித்தார். அவர் சொல்லச் சொல்ல நான் எழுதின கவனம் இருக்கிறது.

அந்த ஹரித்துவாரம் "சாதுக்களின்" கோட்டை! எந்தத் தெருவுக்குச் சென்றாலும், சந்நியாசிகள்! எவ்வளவு "கம்பீரமாக" நடந்து செல்கிறார்கள் தெரியுமா! அவர்களும் சரி, கொழுத்துக் கிடக்கும் பெரிய பெரிய பசுக்களும் சரி. ஹரித்துவாரத்து வீதிகளிலே நடமாடும் உரிமை தமக்கே என்ற தீர்மானத்துடன் இருப்பதுபோலத்தான் தோன்றும்.

கங்கை—நடுப்பகல் இரண்டு மணிக்குக் கால் வைத்தாலும் "ஐஸ்" போல இருக்கிறது, கொட்டுகிறது.

ஹரித்துவாரத்தில், ஆற்றோரத்தில் அழகான சோலைகள் —பழ முதிர் சோலைகள்! சோலைகளை வேலிகளாகக் கொண்ட பெரிய மடங்கள் —ஒவ்வொரு மடத்திலும் நூற்றுக்கணக்கான சாமியார்கள்: உலக மாயையை மிக நன்றாக உணர்ந்து உலகோர்க்கு உபதேசம் செய்யும் "புனிதத் தொண்டு" புரியும் அவர்களுக்காக, நாள்தோறும் மூட்டை மூட்டையாகக் கோதுமை மாவும், டின் டின்னாக மணம் கமழும் நெய்யும்! இந்த மடங்களில் ஒரு குறையும் இருத்தல் ஆகாது என்பதற்காக ஏராளமான "சொத்து" சாசனப்படுத்தப் பட்டிருக்கிறது.

மாலை வேளைகளிலே பெரியார் உலாவச் செல்வார். சாலையில் உடன் நான்செல்வேன். வெண்ணிறத் தாடி;பொன்னிற மேனி; ஆரஞ்சு நிறச் சால்வை நான் கொட்டும் குளிருக்குப் பயந்து முரட்டுத்துணிச் சட்டை போட்டுக் கொண்டு, அதற்குள் கரங்களை விட்டுக் கொண்டு, கை கட்டிய வண்ணம் அவர் பின்னால். சாது சந்நியாசிகளைக் காண்பதையே

வேலையாகக் கொண்ட அந்த நாட்டு மக்கள், ஹரித்துவாரம் இதுவரை காணாத மகிமை பொருந்திய குரு மகான், தன் பிரதம சீடனுடன் செல்கிறார் என்று எண்ணிக் கொண்டு, பக்தியுடன் கைகூப்பித் தொழுவர். இப்போதும் மனக்கண் முன்னால் அக்காட்சியைக் காண முடிகிறது; எங்களுடன் மணி இருப்பார். ஓஹோஹோ! மணி என்றதும், ஆச்சரியத் தால் கண்களை அகலத் திறக்கிறாயா தம்பி! விடுதலை அச்சகத் தில் மணி என்றோர் அச்சுக் கோர்ப்போர் இருந்தார். அவர் பெரியாருக்குப் பணிவிடை செய்வதற்காக வந்திருந்தார், அவரைக் குறிப்பிட்டேன்; அப்போது ஈ.வெ.ரா. மணி யம்மையார் பற்றிய நிழல் உருவச் செய்தியும் கிடையாது.

இவ்வளவு மடங்கள்—கவாத்துக் கொடுத்து, காக்கி உடை அணிவித்து, கையில் துப்பாக்கியைக் கொடுத்து விட்டால், பட்டாளத்திலே "சர்தார்களாக"க் கூடிய உடற் கட்டமைந்த சன்னியாசிகள் கூட்டம் கூட்டமாக—அவர் களின் பராமரிப்புக்காக இலட்சக் கணக்கில் பொருட் செலவு —அவர்களோ இகலோகத்தின் இழிதன்மையைப் பற்றியும் பரலோகத்தின் பெருமையைப் பற்றியும் உபதேசம் செய்வர். இந்த விசித்திரக் காட்சி, என் உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்களைக் கிளறும். இப்படியும் ஒரு நாடா? ஊரார் உழைப்பைத் தின்று கொழுத்துக் கொண்டு, முக்திக்கு வழி காட்டுவதாகக் கூறிக் கொண்டு, ஒரு "பட்டாளமே" இருக்கி றதே! எந்த நாட்டிலாவது இப்படி ஒரு பயனற்ற கூட்டத்தை அனுமதிப்பார்களா! இங்கு அடிதொழுது கொண் டிருப்பதைப் பெறற்கரிய பேறு என்றல்லவா கருதுகிறார்கள்; வேதனை நிரம்பிய விசித்திரமாக இருக்கிறதே, என்றெல் லாம் எண்ணிக் கொள்வேன்.

சம்சாரி உழைத்து
சன்யாசி கொழுக்க
தருமம் புரி எனல் ஆஸ்திகமா?
அது சரியில்லை என்பது நாஸ்திகமா?

என்று உடுமலை நாராயணகவி "சொர்க்கவாசல்" படத்துக் குப் பாடல் தீட்டினார். கே.ஆர். ராமசாமி பாடினார். நண்பர் கள் சிலரும் கேட்டு இன்புற்றோம். நீ கேட்டிருக்க முடியாது தம்பி. சென்சார் அதைக் கத்தரித்து விட்டு பாரதப் பண்பை காப்பாற்றி விட்டதாகப் பூரிப்படைந்தனர். அந்தப் பாடலும் அதற்குரிய காட்சியும் தயாரிக்கப்பட்டபோது, எனக்கு ஹரித்துவாரக் காட்சி நன்றாகத் தெரிந்தது.

நேரு பண்டிதருக்கு, இந்த "மாமிசமலைகளை"க் கண்ட தும், உண்மையிலேயே கோபம் கொந்தளித்திருக்கிறது. ஆனால், பாமர மக்களின் அன்பை இழக்க நேரிடுமே என்ற

அச்சம்அவரை வாட்டி வதைத்தும் இருக்கிறது ;எனவேதான் அவர்அரித்துவாரத்தில் கண்ட ''ஆள்விழுங்கிகளை''ப்பற்றிய கண்டனத்தை, வேறொரிடம் சென்று, ஜாடைமாடையாகக் குறிப்பிட்டுப் பேசினார்-50 இலட்சம் சாதுக்கள் இருக்கிறார்கள் நமது நாட்டில் — இவர்களில் ஒரு சிலர் உண்மையானவர் களாக இருக்கலாம்,—பெரும் பாலானவர் பிறர் உழைப்பைத் தின்று கொழுப்பவர்கள்—இவர்கள் நாட்டுக்குப் பெரியதோர் சுமை — நஷ்டம்—என்ற கருத்துப்பட நேரு பண்டிதர் பேசினார்.

அதுமட்டுமல்ல! அரித்துவாரத்தைப் பற்றியே அலட்சிய மும் அருவருப்பும் கலந்த முறையில் குறிப்பிட்டார்.

அவர் பேசினார், ''ஹரித்துவாரம் இந்துக்களின் புண்ணியஸ்தலமாகக் கருதப்பட்டு வருகிறது'' என்று.

கவனித்தாயா, தம்பி! அவர் பேச்சை. ஹரித்துவாரம். புண்ணியஸ்தலம் என்று கூறவில்லை - அப்படிக் கருதப்பட்டு வருகிறது! நான் கருதவில்லை, பாமரர்கள் கருதுகிறார்கள் அவ்விதம் என்ற கேலி அதிலே தொக்கி நிற்கிறது, தெரி கிறதா. அவர் அப்படி ஒன்றும் கேலி பேசவில்லை. நீயாகக் கற்பனை செய்கிறாய் என்று பக்தர்களும் கூறக்கூடும். காங் கிரஸ் நண்பர்களும் கூறக்கூடும். ஏன் வீண் சந்தேகம்? பண்டிதரின் பேச்சு முழுவதையுமே கூறுகிறேன், அப்போது விளக்கமாகிவிடுகிறது.

> ''அரித்துவாரம் இந்துக்களின் ஸ்தலமாகக் கருதப் பட்டு வருகிறது. ஆனால் எனக்கு நாட்டில் எங்கெங்கு அபுவிருத்தி வேலைகள் நடந்து வருகின்றனவோ அந்த இடங்களே புண்ணியஸ்தலங்களாகத் தோற்றமளிக் கின்றன.''

நேரு பண்டிதர் சொகுசான வாழ்க்கை நடத்துவதற் காகச் சாமியார் கோலம் பூண்ட சோற்றுத் துருத்திகளைப் பற்றி, நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பதை அறி யும்போது, உண்மையிலேயே மகிழ்ச்சி பிறக்கத்தானே செய் யும்—அவர்களுக்கு வெண்சாமரம் வீசிக்கொண்டு காலம் கழித்துவிடுவோம் என்று வேதியத் தலைவர் இங்கு நடந்து கொள்ளும் முறையுடன் இதை ஒப்பிடும்போது,நேரு பண்டி தரிடம் மதிப்புக்கூட பிறக்கிறது. ஆனால் அந்தோ! மறு கணமோ, அவர் பிரச்சினையை விட்டுவிட்டு, வெகு வேகமாக வேறு பக்கம் சென்றுவிடுவதைக் காண நேரிடுகிறது. கோபமும் வருகிறது. வருத்தமாகவும் இருக்கிறது.

நச்சரவம் புரளுகிறது என்று தெரிந்து,தெரிவித்துவிட்டு, என்ன செய்யச் சொல்லவேண்டும்—நச்சரவம் நெளியும் இடம் இது. இதைப்போய் நாதன் அருள் பெறும் தலம் என்கிறார்களே. நல்லவர்களே! நாசத்துக்கு இடமளிக்காதீர்

கள். நச்சரவத்தை ஒழித்திட வாரீர். நச்சரவம் குடிபுகும் புற்றுக்களை ஒழிப்போம். புற்றுக்கள் தோன்றக்கூடிய காட்டினையே அழிப்போம், கிளம்புங்கள், என்று சொல்லத்தானே வேண்டும். தண்டச் சோற்றுத் தடிராமன்கள் இலட்சக்கணக்கிலே உலவுகிறார்கள், இவர்களை நம்பி உழைத்துச் சேர்த்ததைக் கொட்டி அழ வேண்டாம்,என்று தானே அறிவுரை கூற வேண்டும்; ஏமாளிகளை ஏய்த்துப் பிழைப்போரைச் சாட வேண்டும்; சட்டத்தின் துணையையும் நாடி, இத்தகைய சழக்கர் கூட்டத்தைக் கலைக்கவேண்டும்; மக்களுக்குத் தெளிவும் துணிவும் பிறந்திடத் தக்கவகையில் பகுத்தறிவு புகட்ட வேண்டும். நேரு பண்டிதர் இதைச் செய்கிறார் இல்லை!! நச்சரவம் உலவுகிறது. நாவற் பழமும் தின்போம் வாரீர்! என்று ஒன்றுக்கொன்று ஒட்டாத முறையில், எதையோ கூற விரும்பி, இடையே பயந்து, வேறு எதையோ பேசிவிட்டுப் போயிருக்கிறார்.

ஹரித்துவாரத்தை அவர் புண்ணியஸ்தலமாகக் கருதவில்லை—கூறுகிறார்.

நீங்களும், பேதமை கொள்ளாதீர்கள். புண்ணியஸ்தலமாவது பாப பூமியாவது என்று மக்களுக்கு அறிவுரை கூறுகிறாரா—இல்லை!! மாறாக, கும்பமேளம கண்டு களிக்கும் பெரும் கூட்டத்தை, இவர் கண்டு களிப்படைகிறார்!!

சாது சன்யாசிகள் என்றபேரால் சோம்பித்திரிந்து,சொகுசாக வாழும் சழக்கரைக் கண்டித்துவிட்டு, அடுத்த கணம், ஐந்தாண்டுத் திட்டம், அணுதண்டு யுகம், ஐசன் அவர் போக்கு என்று, வேறு பிரச்சினைகளை எடுத்துக் கொள்கிறார்!!

புண்யஸ்தலம் எனக்கு ஹரித்துவாரமல்ல, எங்கெங்கு அபிவிருத்தி வேலைகள் நடக்கிறதோ, அவைதாம் எனக்குப் புண்யஸ்தலம் என்கிறார்; ஆனால், இவர் பெற்றுள்ள இந்தப் புத்தறிவை மற்றவரும் பெற வேண்டும் என்று விரும்புவதாகத் தெரியவில்லை! எனக்குச் சீரகச் சம்பாவில் சாதம், தக்காளி சூப், கோழிக் கறி வறுவல் இவைதான் பிடிக்கும் என்று, புளித்த காடியும் புழுத்துப்போன கருவாட்டையும் சுவையான உண்பண்டம் என்று எண்ணிக் கிடப்போனிடம் கூறிப் பயன் என்ன?

அவர்களின் மனப்போக்கை அல்லவா மாற்றவேண்டும்.

அவர்களைச் சாது சன்யாசிக் கோலத்தில் உலவும் சடலங்களைக் கொழுக்கச் செய்யும் 'சேவை 'யில் ஈடுபட விட்டுவிட்டு, எனக்கு இது பிடிக்காது, என் காசி சிந்திரி, என் கங்கை பக்ரா நங்கல், என் கயா சித்தரஞ்சன்,என் புண்ணியஸ்தலம் அபிவிருத்தி வேலை நடக்கும் இடம் என்று பேசிப் பயன் என்ன?

இங்குதான், நாம் தேவைப்படுகிறோம், தம்பி! பெரிய இடத்திலே உள்ளவர்கள், பாமரரின் சீற்றத்தைக் கிளறிவிடக் கூடிய ஒரு சொல்லும் கூறமாட்டார்கள்! உலகுக்கு உபதேசம் செய்வார்கள்! ஊராரிடம் பகுத்தறிவு பேசமாட்டார்கள். ''ஓட்டு'' இருக்கிறதே தம்பி, அது ''வாய்ப்பூட்டு''போட்டு விடுகிறது!! நாம்தான் இந்தப் பிரச்சினைகளை எடுத்துக் கூறும் பணியினைத் தொடர்ந்து செய்கிறோம், துணிந்து செய்கிறோம், தூய்மையின் நோக்கத்துடன் செய்கிறோம். தக்க பலன், மலரவும் காண்கிறோம், மகிழ்கிறோம்.

பட்டவர்த்தனமாக, மூடத்தனத்தைக் கண்டித்துப் பேசினால், பாமர மக்கள் சீறிப் பாய்வர், அரசியல் பீடத்திலிருந்து உருட்டிவிடக் கிளம்பக்கூடும்—எனவே ஜாடைமாடையாக மட்டுமே கூற முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்; அறிவு முதிர்ச்சியின் காரணத்தால் அல்ல, தம்பி, அச்சத்தால்தான். நமக்கு அவ்விதமாக அச்சம் எழக் காரணம் இல்லை. நாமோ அரசியல் ஆண்டிப் பண்டாரங்கள்! எனவே பிறர் அச்சத்தால் வாயடைத்துப் போகும் நிலையிலும், நாம் பேசுகிறோம்; ஏசுகிறார்கள், மேலும் பேசுகிறோம்; கல் வீசுகிறார்கள், தொடர்ந்து பேசுகிறோம்; காலிகளை ஏவுகிறார்கள், எனினும் பேசுகிறோம். நாம் இம்முறையில் துணிந்து செயலாற்றினால் தான், அச்சம் காரணமாக வாயடைத்துக்கிடப்போரும், நமக்கென்ன என்று ஒதுங்கிக் கொள்வோரும், நம்மால் ஆகுமா என்று பெருமூச்செறிவோரும், நாம்தானா இதற்கெல்லாம் என்று சலிப்படைவோரும், மெள்ளமெள்ளத் தமது போக்கை மாற்றிக் கொண்டு, ஜாடைமாடையாக முதலிலும், வெளிப்படையாகவே பிறகும், வீரத்துடன் எதிர்காலத்திலும் பேச முற்படுவர்;

குன்றக்குடி அடிகளாரின் போக்கைக் கவனித்து வருகிறாயல்லவா தம்பி! பார்க்கிறாயல்லவா அவர் சைவ மாவட்டத்தில் *சுயமரியாதை மாநாடு நடத்திவரும் வேடிக்கையை— பயனுள்ள வேடிக்கையை.*

அதுபோல எண்ணற்ற சம்பவங்கள் எடுத்துக் காட்ட உள.

அரித்துவாரத்தை புண்யஸ்தலம் என்று ஏற்றுக்கொள்ள மறுத்து எங்கெங்கு அபிவிருத்தி வேலை நடக்கிறதோ அவைகளே என் புண்யஸ்தலங்கள் என்று பேசிடும் பண்டிதரின் கருத்துரையை அலசிப் பார் தம்பி. புண்யம் என்றால் என்ன? எதைப் பாமர மக்கள் புண்ணியம் என்று எண்ணி ஏமாறுகிறார்கள்? அறிவுத் தெளிவுள்ளோர் எதைப் புண்ணியம் என்று கொள்வர்? மக்கள் வாழ வழி செய்வதும், வாழ்வின் வளத்தைப் பெருக்குவதும்தான் "புண்ணியம்''. அதற்கான வேலைகள் நடைபெறும் இடமே புண்ணியஸ்தலம். மடங்களிலே

உள்ள சடலங்களாலல்ல, தொழிற்சாலைகளிலே நரம்பு முறியப் பாடுபடும் பாட்டாளிகளால்தான் நாடு செழிக்கும். புண்ணிய தீர்த்தத்தால் அல்ல, புதிய புதிய நீர்த் தேக்கங்களால் தான் பாலைவனம் சோலைவனம் ஆகும். ஆறுகால பூஜை, அபிஷேகம், ஆராதனை இவைகளால் அல்ல, அணைக்கட்டு, மின்சார நிலையம், உர உற்பத்தி இவைகளால்தான் மக்களின் வாழ்வு மேம்பாடு அடையும் என்ற இன்னோரன்ன கருத்துக்களெல்லாம் ஊற்றெடுத்து ஓடிவரும்! ஆனால் அலசிக் காட்டும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தம்பி! ஐந்தாண்டுத் திட்டத்திலே நடைபெற்ற ஓரவஞ்சனையைப்பற்றி, நாம் உள்ள உரத்துடன், ஊராள்வோரின் பகைபற்றிக் கவலைப்படாமல் காங்கிரசில்.இருப்போரும் நுழைவோரும் கண்டிப்பது பற்றிச் சட்டை செய்யாமல் எடுத்துக் காட்டியதால்தான், இப்போது காங்கிரஸ் வட்டாரமேகூட அதுபற்றிப் பதைத்தும் பதறியும் துக்கம் தொண்டையை அடைக்க, வெட்கம் பிய்த்துப் பிடுங்கும் நிலையில் பேசிடக் கேட்கிறோம். சுதேசமித்திரன் கேலிச்சித்திரம் போட்டிடக் காண்கிறோம். தலைமை நிலையத்திலிருந்து உங்கள் ஊருக்கு வந்திருக்குமே படம்!!

தம்பி! இடையே இதையும் சொல்லி வைக்கிறேன்.

எவ்வளவோ செலவாகிறது, எதெதற்கோ செலவாகிறது, எதையாவது குறைத்து பணம் சேர்த்து அந்தக் கேலிச் சித்திரத்தைப் பெரிய அளவில் பத்தாயிரம் மக்கள் கொண்ட கூட்டத்திலும், கோடியில் உள்ளவருக்குப் பளிச்சென்று தெரியும் வகையில் துணியில் ஓவியமாக்கி வைத்துக்கொண்டு, நமது கழகக்கூட்டங்கள் நடைபெறும்போது மேடைஅருகில் அதைத்தொங்கவிடு-ஒரு மணிநேரச் சொற்பொழிவை அந்தப் படம் தந்துவிடும்.

காங்கிரஸ் வட்டாரமே இப்போது துணிந்து கிளம்புகிறது தம்பி, வடநாட்டின் போக்கைக கண்டிக்க. ஆமாம், வீணுக்கா உழைத்தோம், தூவிய விதை என்ன. பதரு? காங்கிரஸ் நண்பர்களின் மனம்தான் என்ன வறண்ட பாலையா? பலன் தெரிகிறது மெள்ள மெள்ள!

பல இதழ்கள், சில சோகமாகவும், சில கோபமாகவும், மத்திய சர்க்காருக்கு அநீதியை எடுத்துக் காட்டுகின்றன.

வடநாட்டுச் சர்க்கார் என்று விளக்கமாக நாம் சொல்கிறோம். இந்த ஏடுகள், மத்திய சர்க்கார் என்று விநயமாகச் சொல்கின்றன.

ஆரம்பக் கட்டமல்லவா, கூச்சம், அச்சம், இருக்கிறது.

காதல் கனிரசமா, துவக்கத்திலேயே கிடைத்துவிடுகிறது, கடைக்கண் வீச்சுதானே, தம்பி, அது என்ன சாமான்ய மானதா!! எத்தனை இன்பக் கனவுகளைக் கிளறிவிடுகிறது!!

அதுபோலத்தான், இந்த இதழ்கள் அச்சத்துடனும், கூச்சத்துடனும் இப்போது எழுதுவது!!

யாராவது பார்த்துவிட்டால்!! வெட்கமாக இருக்கிறது!; உஹூம், நாளைக்கு! சோலையில்!? என்று கொஞ்சுமொழி பேசி விட்டுக் காதலன் பிடியிலிருந்து தப்பிச் செல்லும் தத்தை, என்று வைத்துக்கொள்ளேன்!

சமயம் கிடைக்கும் போதெல்லாம், இந்த ஏடுகள் இப்போது மத்திய சர்க்காரின் போக்கைப் பற்றி எழுதுகின்றன- கவனித்தாயா!!

*அரித்துவாரம் பற்றிப் பேசிய நேரு பண்டிதர், புண்யஸ்தலம் என்பதுபற்றி தமது கருத்துரையை அளித்தவரல்லவா. அதையே, சாக்காக வைத்துக் கொண்டு* ஒரு காங்கிரஸ் ஏடு மத்தியச் சர்க்காரின் போக்கை இடித்துரைத்திருக்கிறது. கன்னத்தில் இடித்து "காலை பிறந்ததும் என் நினைவே போய்விடு மல்லவா, கண்ணாளா" என்று கேட்கும் காரிகை போல, கதைகளில் இந்த ஏடு எழுதுகிறது—இத்தனைக்கும், விகடன் செய்யும் வேலையை மேற்கொண்டுள்ள ஏடுதான்!! ஆனந்தவிகடன், அது எழுதுகிறது.

"*அரித்துவாரம் இந்துக்களின் புண்யஸ்தலமாகக் கருதப் பட்டு வருகிறது. ஆனால் எனக்கு நாட்டில் எங்கெங்கு அபி விருத்தி வேலைகள் நடந்து வருகின்றனவோ அந்த இடங்களே புண்யஸ்தலங்களாகத் தோற்றமளிக்கின்றன என்று கூறித்* தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் அனைவரும் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

புண்யஸ்தலங்கள் என்னும்போது வட இந்தியாவை விடத் தென் இந்தியாவிலேயே இவை அதிகம் என்று கூறலாம். எனினும் பொருளாதாரத் துறையில் தென்னிந்தியா பின்னணியிலேயே இருந்துவருகிறது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும், தென்னிந்தியா நேருஜியின் அர்த்தப்படி புண்யஸ்தலங்களாகச் சீர்படவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்லேயும் தென்னிந்தியா பொருளாதாரப் புண்யஸ்தலமாகத் திகழும் பாக்யம் பெறுமோவென ஐயுற வேண்டியிருக்கிறது. பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் வடஇந்தியாவிலேயே நிர்மாணிக்கப் படுவதைப்பற்றியும், தென்னிந்தியா அலட்சியம் செய்யப்படுவதைக் குறித்தும் வினவினால், நிதி மந்திரி தேஷ்முக் உட்பட இந்திய சர்க்கார் மந்திரிகள் அனைவரும் சரியான பதில் அளிப்பதில்லை.

தம்பி! எப்படி, எந்த இடத்திலிருந்து நமது பிரச்சாரம் பலன் அளித்திருக்கிறது பார்!!

காரம் இல்லை என்பாய்—ஆமாம்—எப்படி இருக்கமுடியும் —இப்போது?

எழுதுகிற பாணிகூட அரசியல் எழுச்சி ஊட்டத்தக்க தாக இல்லை—தெரியாததால் அல்ல, ஏ அப்பா! வெளிநாட்டு விவகாரங்களைப் பற்றி எழுதும்போது பார், புரட்சி படமெடுத்தாடும் இந்த ஏடுகளில்! ஆனால் நேருஜியை பற்றி எழுதும்போது, நாம் நெளிய வேண்டியிருக்கிறது, "நெஞ்சில் இடம் கொண்டான்" ஆயிற்றே அதனால்.

'அவளுக்குத்தானா கண்ணா! பாரிஜாதம்! எனக்குக் கிடையாதா! என்னிடம் அன்பு இருந்தால் எனக்குப் பாரிஜாதம் தரவேண்டும்' என்று, ராதா கேட்கிறாள் கண்ணனிடம். பாரிஜாத புஷ்ப ஹரணம் பார்த்திருப்பாயே நாடகம். பத்துப்பதினைந்து வருஷங்களுக்கு முன்பு நடக்கும். அந்தப் பாணியில் எழுதுகிறது விகடன்-என்றாலும், விஷயத்தைச் சொல்ல வேண்டிய கட்டம் வந்துவிட்டது அல்லவா, இதற்காக நாம் பட்ட கஷ்டம் கொஞ்சமா?

***எல்லாத் தொழிற்சாலையும் வடநாட்டில், தென்னிந்தியா அலட்சியப்படுத்தப் படுகிறது.***

விகடனிடமிருந்து இந்தக் கருத்துரை—இடித்துரை—வருமென்று யார் எதிர்பார்த்திருக்க முடியும்?

திராவிடம் என்ற சொல்லையே கூற முடியவில்லை விகடனால். தென்னிந்தியா என்று எழுதுகிறது,—பரவாயில்லை. அதனால் என்ன—அத்தான் என்று அன்பு சொட்ட அழைத்திட ஆரணங்கால் முடிகிறதா? "அப்பா எங்கேடா கண்ணு!" என்று குழந்தையைப் பார்த்துக் கேட்பதுதான் தெரியுமே நமக்கு. அதுபோல் இது என்று எண்ணிக் கொள்வோம்.

விகடன் மட்டும் அல்ல, வேறு வேறு வேலையாகக் கூறிடும்போது, யாராருக்கோ இந்தக் கருத்துதான் வருகிறது! யார் உள்ளத்தையும் இந்தக் கருத்துச் சும்மா விடுவதில்லை-புகுந்து குடைகிறது!?


தங்களுக்கு இப்போதுள்ள அதிகாரம் போதாது, மேலும் சில பல அதிகாரம் வேண்டுமென்று கேட்க மாநாடு நடத்துகிறார்கள், சென்னை ராஜ்ய நகராட்சி மன்றத் தலைவர்கள்! அங்கு "ஏகமனதாக" நிறைவேறியிருக்கும் தீர்மானம் இது தான்—***முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது எல்லா பெரிய தொழிற்சாலையும் வடநாட்டிலேயே அமைத்து விட்டார்கள். இந்த இரண்டாவது திட்டத்திலாவது தென்னாட்டில் அதிகமான பெரிய தொழிலும், திட்டமும் வேண்டும்.***

சாலையிலே, சோலையிலே, ஆற்றோரத்தில், அக்கிரகாரத்தில், பத்திரிகை நிலையத்தில், கமிட்டிக் கூட்டங்களில், வியாபாரச் சங்கத்தில், விசேஷ மாநாடுகளில், அமைச்சர் மாளிகையில், அரசாங்க அலுவலகங்களில், எங்கும் பேசப்படும் பிரச்சினையாகிவிட்டது—எங்கும் நிறைநாதமாகிவிட்டது—செங்கொடிக்காரன் இடம் தவிர. அவர்களுக்குப் பாவம், ஒரே அதிர்ச்சி, அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி, எனவே இந்த எழுச்சி புக இடமில்லை—நேரமுமில்லை. அந்த ஒரு இடம் தவிர, மற்ற எல்லா இடத்திலும், சிந்தனையைக் கிளறி விட்டிருக்கிறது நாம் எடுத்துக் காட்டியிருக்கும் பிரச்சினை.

ஐயே! உங்களைத்தான், காதிலேயே விழலையா நான் கூப்பிடறது—இந்தாருங்கோ காப்பி!—என்று கதவிற்குப்பின்புறம் மறைந்து நின்றபடி, காரிகை அழைக்கும்காட்சி தெரிகிறதா, கைவளை ஒலி கேட்கிறதா!!

அன்புள்ள,

12—6—1955



கடிதம்—6

# மானே! தேனே!!

*தென்னவர் பற்றி வடவர் பசப்பு! திராவிடத்தின் சிறப்பு—வட நாடு, தென்னாடு வேற்றுமை—*

**தம்பி,**

“ஏனோதானோ” என்று அந்நாள் வரை இருந்து வந்தவன், ‘மானே! தேனே!’ என்று மயக்க மொழி பேசினான். அடிமூச்சுக் குரல் அன்பின் அறிகுறியாக மட்டுமல்ல, நம்பினோரை நாசமாக்கவும் பயன்படும் என்பதை அறியாமல், நாரீமணி, பூங்கொடி தென்றலில் ஆடுவது போலானாள். புது வாழ்வு பிறந்தது என்று எண்ணிக் கொண்டாள். அவனோ, அவளை இன்பபுரிக்கு அழைத்துச் செல்லவில்லை; அவளிடமிருந்து இருபது பவுன் “செயினைப்” பெற்றுக்கொண்டு, நடையலங்காரி ஒருவளை நாடிச் சென்றான்!

கதை, தம்பி கதை. காதலின்பம் பெறவேண்டிய காரிகையர் சிலர் கருத்தழிவதைக் காட்டும் கதை.

''கொழந்தே, உனக்கு மிட்டாய் வேணுமா, ஊதுங் கோல் வேண்டுமா, ஆடும் குதிரை, பாடும் பறவை எல்லாம் வாங்கித் தரட்டுமா?''

''மிட்டாயா, வாங்கிக் கொடுங்கோ மாமா, எனக்கு ரொம்ப இஷ்டம்.''

''கடைத் தெருவுக்குப் போகலாம வா, கண்ணு.''

''ஐயோ, அம்மா அடிக்குமே. நான் போய் அம்மாவிடம் சொல்லிவிட்டு..... ''

''அம்மாவிடம் சொன்ஞ, உன்னை அனுப்பமாட்டாங் களே, மிட்டாய் தின்னப்படாதுன்னு சொல்லுவாங்க.''

''அம்மாவுக்குத் தெரியாமெ, ஓடிப்போய் மிட்டாய் வாங் கிக் கொண்டு வந்துவிடலாமா?''

நஞ்சு நிறை நெஞ்சினன் என்பதறியாத அந்தப் பிஞ்சு, வயலோரத்தில்கசக்கிப்போடப்படுகிறது-கையிலே மிட்டாய் இருக்கிறது—ஆனல் கைவளையும் காது லோலாக்கும் இல்லை.

திருவிழாக்களின் போது கேள்விப்படுகிறோம், இது போன்ற நிகழ்ச்சிகளை.

கனி மொழி. சுவையுள்ளதுதான், ஆனல் நஞ்சுக்கு அதனை உரையாக்கிடும்போக்கினரும் உண்டு—எனவேதான் எச்சரிக்கையாக இருக்கவேண்டு மென்கிருர்கள்.

அழகும் மணமும் கொண்ட செந்தாழை இருக்கிறது பார் தம்பி, அதிலே, இதழ்களின் இடையே, ஒட்டிக்கொண்டிருப் பதுண்டாம் சிறுநாகம்—தீண்டினல் தீர்ந்து போவார்களாம்! அதனல், அனுபவமுள்ளவர்கள் செந்தாழையைப் பிரித் தெடுக்கும்போது,ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பர்.

தம்பி, முரட்டுத்தனத்திலே மட்டுமே, தீயகாரியங் களைச் சாதித்துக்கொள்வது என்ற முறை, இப்போது வெகு வாகக் குறைந்துவிட்டது—தீய காரியம் குறையவில்லை! முறை மாறிவிட்டிருக்கிறது.

''கழட்டடி கழுதே! உங்கள் அப்பன் வீட்டிலே போட்டா என்னவாம்? இப்ப கழட்டிக் கொடுக்கறயா, இல்லையானு, இடுப்பை முறிச்சிக்கப் போறியா?''

இந்தக் ''கணவன்'' இப்போது—

''என்ன செய்யறது; வேற எங்கேயும் கிடக்கலையாம், என் உயிரை வாங்கருன் வேலாசாமி. கலியாண வேலையை முடிச்சிட்டு உடனே திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்னு கெஞ்சருன்; பரிதாபமாயிருக்கு; நம்மிடம் இருக்கவே நானும் அவனுக்கு வேண்டியவனுக இருக்கிறதாலே, ஒரு நாலு நாளைக்கு இரவல் கொடுன்னு கேட்கருன்.இதுக்கு என்னமோ

மூக்காலே அழறியே. எடு! எடு! கொடு! கொடு! நேரமா வுது, ரயிலுக்கு'' என்று பேசி நகையைப் பறித்துக் கொள்ள வும், அதைக் கிண்டி ரேசுக்குப் பயன்படுத்தவும், பயிற்சி பெற்றுவிட்டான்.

முரட்டுத்தனமாக அவன் இருந்த போதாவது பரவா யில்லை. அடி உதை கிடைத்தாலும், அண்டை அயல் பஞ்சா யத்துக்கு வருகிற முறையில், அழுகுரல் கிளம்பி இருக்கும். சில வேளைகளில், அதற்கு அஞ்சி, அவன், புற்றுக்குள் புகுந்து கொள்ளும் பாம்பாகிவிடவும் கூடும்.

மானே! தேனே! என்று அவன் தித்திப்பு ஊட்டும்போது, பாபம், அவள் தப்ப வழியே கிடைக்காதல்லவா!

ஆதிக்கக்காரர்களின் போக்கிலே இப்போது இதுபோன்ற மாறுதல் ஏற்பட்டுவிட்டிருக்கிறது—இதன் பயனாக ஆபத்தும் வளர்ந்துகொண்டிருக்கிறது.

புலி, உறுமும்—அந்தச் சத்தம் கேட்டு, கிலி பிறப்பினும், ஒரு படை திரட்டிவிடவும், அதை வேட்டையாடிக் கொன்று போடவும், வழியும் கிடைக்கக்கூடும். ஆனால், முல்லை பறித் திட மலர்த்தோட்டம் சென்று, பச்சைப் பட்டோ என்று பரவசப் படத் தக்க பசும் புற்றரையில் நடந்து செல்லும் போது, அரவமின்றி ஊர்ந்து வந்து தீண்டிடும் நாகமாக இருந்தால், என்ன கதியாவது?

ஆதிக்கக்காரர்கள் புலியாக இருப்பதாலே ஏற்படும் ஆபத்தை உணர்ந்து கொண்டு, இப்போது புற்றரைப் பாம் பாகி இருக்கிறார்கள்.

எல்லோருமே அவ்விதம் எப்போதுமே அவ்விதம், என்று சொல்லவில்லை; இப்போதும் பழைய முறையே சாலச் சிறந் தது என்று எண்ணும், போர்ச்சுகீசிய ஆதிக்கக்காரர் இருக் கத்தான் செய்கிறார்கள்—கொக்கரிக்கிறார்கள், சுட்டெரிக் கிறார்கள். ஆனால் குறிப்பிடத் தக்க அளவிலே, புலி, பாம்பாகிவிட்டிருக்கிறது.

கதை படித்திருப்பாயே, சிறு வயதில்?

பல்லின் கூர்மையும், நகத்தின் கூர்மையும் பட்டுப்போன கிழப்புலி பாய்ந்து சென்று தாக்கி, பிய்த்து ரத்தம் குடித்துப் பசி தீர்த்துக் கொள்ள முடியாது என்று தெரிந்துகொண்டு தங்கக் காப்பைக் காட்டி, ஆசையை மூட்டி, அருகே வரு பவனை அடித்துத் தின்றது, என்றோர் கதை உண்டு.

பேராசைக்காரப் பார்ப்பான் ஒருவன். இப்படி ஒரு கிழப் புலியிடம் சிக்கிக் கொண்டான் என்பது கதை.

பேராசைக்காரப் பார்ப்பான் என்று சொல்லக்கூட, இந்த சர்க்காரிலே அனுமதி கிடைக்காது போலிருக்கிறது, தம்பி!

இதற்கோர் கண்டனக் கூட்டம் போட்டு, இருபதாம் தேதி மாறடித்தழுவோம் என்று 'இந்து' தீர்மானித்துவிடக் கூடும்! நாடு அவ்வளவு முன்னேறிவிட்டிருக்கிறது. "நம்ம காமராஜா" என்று சொல்லிச் சொல்லி நாக்குக்கூடத் தழும் பேறிவிட்டிருக்கும்; எனினும், 'அவர்களின்' போக்கிலே மாறுதல் காணோம்.

அது கிடக்கட்டும்—அந்தப் பிரச்சினை தீர, விருதுநகர் வித்தகரிடமா மருந்து கிடைக்கப்போகிறது?

ஆதிக்கக்காரர்களின் போக்கிலே ஏற்பட்டு வரும் மாறுதலைக் கூர்ந்து கவனித்த வண்ணம் இருக்கவேண்டும் என்பதைக் கூறததான் விரும்புகிறேன். தம்பி! இடையே இந்த சர்க்கார் கவனம் வந்தது, விட்டுத் தள்ளு.

சென்னையில் ஒரு பகுதிக்கு Black Town கருப்பர் ஊர் என்று துணிந்து பெயரிட்டனர், வெள்ளையர்!

அது, கொடுக்கிறாயா, கொல்லட்டுமா? என்று கேட்கும் நிலை.

பிறகு, கருப்பர் பட்டினம் ஜார்ஜ் டவுன் என்று ஆயிற்று—வேலாசாமி இரவல் கேட்கிறான் என்று புளுகி, நகையைப் பறித்த கட்டம் போன்றது.

கருப்பர் - இன்று, அன்பர், நண்பர், தோழர், என்றெல்லாம் ஆகிவிட்டது!

ஏகாதிபத்யம் போக்கை மாற்றிக் கொண்டது—நீதி, நேர்மை. நியாயம் இவைகளுக்காகவா?செச்சே! அதற்கல்ல; நோக்கம் நிறைவேறப் பழைய முறை உதவாது என்று புரிந்து விட்டதால்.

திராவிடத்தைத் தமது ஆதிக்கத்துக்கு உட்படுத்திக் கொண்டுள்ள வடநாட்டுத் தலைவர்கள் சிலர், வரலாறு காட்டும் இந்த நிலைமைகளை நன்கு அறிந்து கொண்டிருக்கிறார்கள்; எனவே அவர்கள், அச்ச மூட்டுவதால் பலனில்லை, ஆசை காட்டவேண்டும் என்று புரிந்து கொண்டு, செயலாற்றத் தொடங்கியுள்ளனர்.

காட்டு மிருகங்களை வேட்டையாடுவது போல நாட்டு மக்களைச் சுட்டுத்தள்ளிய வெள்ளைக்காரனே, காலம் தெரிந்து, கருத்தை மறைத்திடவும், கனி மொழி பேசிடவும் கற்றுக் கொண்டான் என்றபோது, "அதிர்ஷ்டப் பரிசு"ச் சீட்டு வாங்கியவனுக்கு ஆறு இலட்சம் கிடைத்ததுபோல, களத்தில் கடும் போரிட்டு அல்ல, வீர தீரத்தைக் காட்டியல்ல, நமது கோட்டைகளைத் தாக்கித் தகர்த்து கொடி மரங்களை வெட்டி வீழ்த்தி, நம்மைப் புறமுதுகிட்டு ஓடச்செய்து அல்ல, வெளியேறிய வெள்ளையனுடைய கண் பார்வையில் இருந்த ஒரே காரணத்தால்,திராவிடத்தை ஆளும் நிலையை வடநாட்டுத்

தலைவர்கள் பெற்றனர்—அப்படிப்பட்டவர்கள், கனிமொழி பேசித்தான் காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டும் என்று முறை அமைத்துக் கொள்வதிலே, ஆச்சரியம் என்ன இருக்கிறது.

வெள்ளையன் இங்கு நுழைந்த நாளிலிருந்து வெறியேறிய நாள் வரை, நடை, நொடி, பாவனை, மதம், மொழி, வாழ்க்கை, வழி ஆகிய எல்லாவற்றிலும்தான் வேறுபட்டவன் மட்டுமல்ல, மேம்பட்டவன் என்று நம்பிக்கொண்டிருந்தான்; கூசாமல் சொல்லியும் வந்தான்.

வடநாட்டுத் தலைவர்கள் அப்படியல்ல—காங்கிரஸின் துணைகொண்டு, "பந்த பாசம்" இருப்பதாகச் சொல்லி, பாரத தேசம், பாரத மக்கள், இந்தியர் என்ற இனிப்புப் பண்டமளித்து, திராவிடரை மயக்கி வைத்திருந்தனர். நாடகங்களிலே பார்க்கிறோமல்லவா இருவகையான கொலைக் காட்சிகள்—ஒன்றில், வாள் வாளைச் சந்திக்கும், இரத்தம் கொட்டப்படும், ஓடிஓடிப் போரிடுவர், உயர இருந்து கீழே குதிப்பர், கூடம் களமாகும், எதிரேயிருக்கும் சாமான்கள் உடைபடும், கடைசியில் ஒரு கொலை! மற்றோர் வகையிலே, வாள் உறையிலே தூங்கும், வாட்கண் அவன் நெஞ்சத்தைத் துளைக்கும்; அவள் இடை அசையும், இவன் இதயம் விம்மும்; அவள் கடைகாட்டுவாள், இவன் கருத்திலே ஏதேதோ கொந்தளிக்கும்: கண்ணாளா! என்பாள்; இவன் கட்டிக் கரும்பே! என்பான்; மாமோகம் கொண்டேன் என்பாள்; இவன் கனவல்லவே கட்டழகி! என்று குழைந்து கூறுவான்; அவள் புன்னகை புரிவாள். இவன் புத்தி தடுமாறும்; அவள் இதோ கனி ரசம் என்று அளிப்பாள், அவன் அவள் கரம் தொட்டு அதைப் பெற்றுப் பருகுவான், கண்ணிலே ஒரு திரை போடுவது போலாகும், கால் நடுங்குறும், அழகால் அழிவு தரும் ஆரணங்கை ஆசையுடன் பார்த்தபடி அருகே நெருங்குவான்; அவள் "இலாவகமாக" ஒதுங்கிக் கொண்டு ஒரு பசப்புச் சிரிப்பொலி கிளப்புவாள்; இதற்குள் இவன் பார்வை மங்கும், பூமியில் கால் பாவாது, கீழே சாய்வான், பிணமாவான்!

தென்னாட்டவர், தீரர், வீரர், தேச பக்தர்!

தென்னாட்டவர், என்னாட்டவரும் வியக்கத்தக்க நுண்ணறிவு படைத்தவர்கள்; எதையும் சாதிக்கவல்லவர்கள். எத்துணை கஷ்டத்தையும் பொருட்படுத்தாதிருக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள்.

தென்னாட்டவருக்கு எத்தனை மொழி கற்பதானாலும், சிரமமிராது—பாண்டித்யம் பெறமுடியும்.

தென்னுட்டவர் இந்தியைக் கற்பது மட்டுமல்ல, வெகு விரைவில் வடநாட்டுக்கே இந்தி ஆசிரியர்களாகி விடக்கூடிய திறமைசாலிகள்!

தென்னுடு! அறிவாளிகள் நிரம்பிய இடம்!

எல்லாக் கலையும் கொஞ்சி விளையாடும் பூந்தோட்டம் தென்னுடு!

அழகிய மங்கையரின் முக விலாசமும், அறிவாளர்களின் முக தேஜசும், இயற்கை எழிலுடன் சேர்ந்து, தென்னுட்டைக் காந்தர்வபுரி யாக்குகிறது!

தென்னுட்டின் அருமை பெருமைகளை அறியாதார் அறியாதாரே!

முல்லை காட்டி, பாகு கலந்த சொல்லமுது ஊட்டி, பாவை பம்பரமாக ஆட்டிவைக்கிருள்!

மாவ்லங்கர், தத்தர், தேபர், மகதாப் என்று வந்த வண்ணம் இருக்கிருர்கள் வட நாட்டுத் தலைவர்கள், இத் தகைய மயக்க மூட்டும் நோக்குடன்.

ஒருவர் இயற்கை வளத்தைப் புகழ்கிருர். இன்னொருவர் மொழி வளத்தைக் கண்டு வியப்படைகிருர். தேச சேவையை பாராட்டித் தேன் கொட்டுகிருர் ஒருவர். தெய்வ பக்திமிகுந்த இடமல்லவா என்று பரவசம் பாய்ச்சுகிருர் இன்னொருவர். அனைவருக்கும் ஒரே நோக்கம். ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வது என்பதுதான்! அதற்கு ஆர்ப்பரிப்பு பலனில்லை, அன்பு ஆலாபனமும், புகழ் பல்லவியும் 'தாஜா'' செய்யும் தாளமும் தேவை என்பது முறையாக்கப் பட்டிருக்கிறது.

பன்னெடும் காலமாகவே திராவிடர், இப்படி பசப்புவோரிடம் நம்பிக்கை வைத்து நாசமாகி இருக்கிருர்கள். இல்லையானுல், காய்ந்த புல்லைக் கையிலே கொண்டிருந்த கூட்டத்திடம், கட்கமேந்திப் போரிடுவதைக் காதலுக்கு ஈடான நிலையில் வைத்துப் புகழ் ஈட்டிய திராவிட இனம், அடிமைப் பட்டிருக்கவே முடியாதே!

வடநாடு, ஒழுங்கு முறைக்கு உட்படுத்தப்படாமலிருந்த நாட்களிலேயே, இங்கு திராவிடம் ஒழுங்கு படுத்தப்பட்டு, ஒழுக்கத்தை ஓம்பி வளர்த்திடும் திருநாடாக இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன.

செல்வம் கொழிக்கும் நிலையும், செங்கோல் ஓச்சும் மன்னர்களும் பெற்ற நிலையில், வடநாடு சித்தரிக்கப்படும் கட்டத்தைக்கூட, வேண்டுமானுல் திராவிட நாட்டு வரலாற்றுச் சம்பவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்லு, தம்பி, திராவிடத்தின் தனிச் சிறப்பு விளக்கமாகத் தெரியும்.

மன்னர் இருந்தனர். இங்கும், அங்கும் மணிமுடி இருந்தது, இரு மன்னர் முடியிலும். எனினும் இரு வேறு முறையன்றோ காண்கிறோம் அவர் தம் போக்கில்.

மக்களுக்காக அரசு. அரசு செம்மையாக நடந்துவர மன்னன் என்பது திராவிடத்தில், தத்துவமாக மட்டுமல்ல, திட்டமாக இருந்து வந்தது அந்த நாட்களிலும்.

மன்னன் செம்மையாக வாழ ஒரு அரசு, அந்த அரசு வளமுடன் இருக்க மக்களின் உழைப்பு என்ற தன்மை இருந்து வந்தது வடக்கில்.

வெட்டிப் பேச்சல்ல, தம்பி. மன்னன் தன்னிடம் அரசாளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கருதிப் பணியாற்றினான் இங்கு. அங்கு அங்ஙனமல்ல! நாடு,மன்னன் உடைமை! அதன் பயனைப் பெறும் அனுமதியை மன்னன் மக்களுக்கு அளிக்கிறான் அங்கு. எனவேதான் காண்கிறோம், நாடு மன்னனால் எப்படி வேண்டுமானாலும் ஆக்கப்பட்டு விடும் அக்கிரமத்தை!

கேகயன் மகள் ஒரு கோகிலம்! தசரதமன்னன் நரைத்த தலையினன்!! அங்கம் தங்கம், அந்த அரசிளங்குமரிக்கு; உடலெங்கும் காலம் தந்த சுருக்கம் இந்த அரசனுக்கு. எனினும் அந்த சிற்றிடைச் சிங்காரியைச் சரசக் கருவியாகக் கொள்ள வேண்டுமென்று இந்த சத்திழந்தவர் விரும்பினார்—என்ன செய்தார்? என்னைக் களிப்பிக்கும் தொண்டு புரிய இந்தத் தோகை இசையட்டும். நான், அவள் வயிற்றில் உதிக்கும் மகனுக்கே என் இராஜ்ஜியத்தைத் தருகிறேன்—இப்போதே, இதோ என் இராஜ்யத்தைத் தந்து விடுகிறேன் என்று வாக்களிக்கிறான்.

வயோதிகருக்கு அந்தக் கணை புகுந்தால், கருத்து எப்படி ஆகிவிடுகிறது என்பதைக் கவனிக்கச் சொல்லவில்லை—இதை அறிய இராமாயண காலத்துக்கா போக வேண்டும், நமது நாட்களிலேயே பார்க்கிறோமே!!

கொடுத்த வாக்குறுதியைத் தசரதன் காப்பாற்றாதது குற்றமல்லவா என்று "இராமதாசர்களை"க் கேட்கும்படி கூடச் சொல்லவில்லை—இதைவிடக் காரசாரமான கேள்விக் கணைகளால் தாக்குண்டு, அவர்கள் வைகுண்ட வாசனிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நான் உன்னை கவனிக்கச் சொல்வது எது தெரியுமா தம்பி, தசரதன் தன் ஆட்சியில் இருந்து வந்த இராஜ்யத்தை, தன் இஷ்டப்படி யாருக்கு வேண்டுமானாலும் தர முடிகிறது.

இது வடநாட்டில்தான்; இங்கு இதுபோல் நடைபெற்றதில்லை.

சூதாடித் தோற்கிறுன் இராஜ்யத்தை—நளன்—தருமன்.

தானமாகக் கொடுத்து விட்டுச் சுடலை காக்கச் செல்கிறுன் அரிச்சந்திரன்.

இவை வடநாட்டு மன்னர்களின் முறை—மன்னர்களிடம் நாடு உடைமையாக்கப்பட்டு விடும்—கேடான கொள்கையைத் தென்னகம் ஏற்றுக் கொண்டதில்லை.

பெரிய தத்துவத்துக்குப் போவானேன் தம்பி, ஐவருக்கு ஒரு மாது பத்தினியாக இருக்கலாம் என்பதைக் கற்பனைக்கும் ஒத்ததாகத் திராவிடர் கருதவில்லை—வடக்கே அப்படிப்பட்ட பத்தினி பற்றிய காதை எழுதி, அந்த அம்மையின் உற்ற "இரக்ஷகராக" பகவானே உடனிருந்து வந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது.

பண்பு நிச்சயமாக இங்கே வேறுதான்—அங்கே இருந்து வந்த "ஆசாபாசங்களை" பண்பு என்று கூறக் கூசுகிறது.

எல்லாம் சரி! ஆனுல் இன்று என்ன நிலைமை?

வடநாட்டுத் தலைவர்கள் வாழ்த்துகிறுர்கள், புகழ்கிறுர்கள், நமது அருமை பெருமைகண்டு அகமகிழ்கிறுர்கள், ஏன்?

இப்படிப்பட்ட பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரிய தான பொன்னுடு, தங்களின் பிடியில் இருக்கிறது என்ற பூரிப்பு!!

ரோம் நாட்டவர் கிரேக்க நாட்டைத் தோற்கடித்து அடிமைப்படுத்தினர். பொன்னும் மணியும் வண்டிவண்டியாகக் கொள்ளையடித்துச் சென்றனர். அவற்றுடன் கிரேக்கர் பலரை அடிமைகளாகக் கொண்டு சென்றனர்.

மாளிகையில் மந்தகாசமாக, ரோம் வீரன் அமர்ந்திருப்பான்; நண்பர் அவனுடன் உரையாடுவதும், தங்கக் கோப்பையிலே வார்த்துத் தரப்படும் திராக்ஷை ரசத்தைப் பருகுவதும், போதை ஏறிய நிலையில், பொழிலில் கண்ட கடைக் கண்ணழகி பற்றியும், செம்பஞ்சுக் குழம்பு பூசப்பட்ட காலால் சேயிழை தன் மார்பகத்தே உதைத்த போது அடைந்த உவகை பற்றியும், பேசிக் களிப்பர். "ஆஹா! மறந்தேபோனேன், நண்பர்களே! வெண்ணிலவில்வேல்விழியாளுடன் ஆற்றோரம்உலவினுல்அடையும்ஆனந்தம் பற்றிய அரும் கவிதை ஒன்று இருக்கிறது, கேட்டதில்லையே நீங்கள்—சுவையுள்ள கவிதை என்பான் விருந்தளிப்போன், "அப்படியா! கவிதையா! பாடிக் காட்டு நண்பா!" என்று கேட்பர் விருந்துண்போர். "நானு பாடுபவன்! என்னிடம் இருக்கிறுன் ஒரு அடிமை அழகழகாகப் பாடுவான்" என்று கூறி அழைப்பான். புலமைமிக்ககிரேக்கன், அடிமைக் கோலத்திலே வந்து நிற்பான், "ஏ! கவி! நேற்று பாடிக்காட்டினுயே

கவிதை, அதைப் பாடு இப்போது, இவர்கள் கேட்கட்டும்' என்று கூறுவான். அடிமை பாடுவான். கீர்த்தி மிக்க கிரேக்க நாடு தாழ்ச்சியுற்ற போது நேரிட்ட, நெஞ்சைப் பஞ்சாக்கும் சோகச் சம்பவம்.

இப்போது. பரதநாட்டியம், கருநாடக சங்கீதம்,கதகளி, திராவிடமொழி, திராவிடச் சிற்பம், இவைகளை இன்னும் பதம்கெடாமல் பாதுகாத்திடும் வித்தகர்களின் திறமை, புலமை ஆகியவற்றை வடநாட்டவர் பாராட்டிப் பேசும் போது, எனக்குத் தம்பி! ரோம் நாட்டின் மாளிகையிலே கண்ணீரையும் கவிதையையும் சேர்த்து வடித்துக் கொடுத்த கிரேக்க அடிமையின் கவனம்தான் வருகிறது.

'மிகப் பழங்கால முதற்கொண்டே வளமாக இருந்த திராவிடம்' என்று அவர்கள் புகழ்கிருர்கள். திராவிடரோ மலேயா காடுகளிலே மிருக வாழ்க்கையில் இருக்கிருர்கள் — கடல் கடந்து சென்று கைகட்டிச் சேவகம் செய்வது மட்டு மல்ல, கட்டை வெட்டுகிருர்கள், கல் உடைக்கிருர்கள், குப்பை கூட்டுகிருர்கள்.

மிக உயர்ந்த மொழி திராவிடத்தில் இருக்கிறது என்று அவர்கள் பாராட்டுகிருர்கள். பாராட்டிவிட்டு, எனினும் ''இந்தி'' படித்தால்தான் வாழ்வு உங்களுக்கு என்று துணிந்து கூறுகிருர்கள்.

அறிவாளரின் வாழ்விடம், கலையின் பிறப்பிடம் என்றெல் லாம் பேசுகிருர்கள்—பேசிவிட்டு. இவ்வளவு தகுதி இருப்ப தால், தனி அரசு அமைத்துக் கொண்டு தரணியில் ஒரு மணி விளக்காகத் திகழ்வீர் என்ரு கூறுகிருர்கள்? ''இந்தியப் பேர ரசின்'' ஒரு பகுதி என்று பசப்புரை கூறி, அடிமைப்படுத்தி வைத்திருக்கிருர்கள்.

பொன் விளையும் பூமி என்கிருர்கள்—தரித்திரம் போக நாங்கள் திட்டம் தீட்டுகிருேம் அவசரப்படாதீர்கள் என் கிருர்கள்.

அவர்களின் புகழுரை நாணயமானதாக இருந்தால், ஏன் திராவிடம் தனி நாடாகத் திகழ்வதற்கு இசைவு தரக் கூடாது?

இவ்வளவு புகழுரைகளுக்கு ஏற்றதாக ஒரு எழில் நாடு இருக்க, ஏன் அதனை அடிமைக்காடாக்கி வைத்திக்கிருர்கள்?

நல்ல பெண்! மிக நல்லவள்! கொஞ்சம் கூச்சம்! பயம்!! அடே அப்பா! கரத்தைப்பிடித்திழுத்ததும் சிவந்தேவிட்டது? கன்னத்தைத் தொட்டேன், மலர், மலரே தான்! மஞ்சம் சென்றபோது, சிறு குழந்தை போல, விக்கிவிக்கி அழுதாள்! பிறகு மயங்கிக் கீழே வீழ்ந்தாள்! தரையில் அவள் கிடந்த

போது, சிற்பி செதுக்கிய சித்திரப்பாவை தவறிக் கீழே விழுந்துகிடந்தது போல இருந்தது.

இப்படி ஒரு காமுகன் பேசினால், அதைக் கேட்டுக் காரிகையின் பெற்றோர், பெருமையா கொள்வர்? பூரிப்பா அடைவர்? சிறிதளவு ரோஷமுள்ளவர் சீறிப் போரிடுவர்—அது அற்றவர்கள் தற்கொலை செய்து கொள்வர்.

அமைச்சர் சுப்பிரமணியம் வட நாட்டுத் தலைவர்கள் வழங்கும் புகழுரைகளைக் கேட்டுப் பூரித்துப் போகிறார், புளகாங்கித மடைகிறார்!

அவரால் முடிகிறது! அவர் போன்றோரால் முடிகிறது! நம்மால் முடியவில்லையே? நமக்குத் திராவிடம் அன்றுவாழ்ந்த பெருவாழ்வுடன் இன்று அடைந்துள்ள அவல நிலையை ஒப்பிடும் போது, அணி மணி பறிகொடுத்த ஆரணங்கு, கழுத்து நெறிக்கப்பட்ட பேசும் பதுமை, மானமழிககப்பட்ட மாது—இத்தகைய கொடிய காட்சிகளல்லவா நினைவிற்கு வருகிறது! நெஞ்சு நெருப்பிலிட்ட புழுவாகாமலிருக்குமா? அவர்கள் மகிழ்கிறார்கள் —அத்தனைக்கும் ஈடாக அமைச்சர் பதவி கிட்டி விட்டது என்று! நமக்கோ அரசு இழந்தோம், முரசு இழந்தோம், வளம் இழந்தோம்.வகை இழந்தோம், தன்மானமுமா அழிந்து படவேண்டும்? என்று எண்ணம் பிறக்கிறது.

''பைத்தியக்காரர்களே! என்னைப் பாருங்கள்! நான் உங்களைப் போல உதவாக்கரைக் கருத்துகளுக்கு என் மனதில் இடமளித்து இருந்தால், இந்த நிலையிலா இருந்திருப்பேன்? மூலையிலல்லவா முக்காடிட்டு அழுதபடி இருந்திருக்க வேண்டி நேரிட்டிருக்கும்?'' என்றகருத்துப்பட 'கனமான' சுப்ரமணியம் கழறுகிறார்!

புகழுரையை அபினாகத்தரும் புதுமுறையில் ஈடுபட்டுள்ள வடநாட்டுத் தலைவர்களிலே ஒருவர், தத்தர் என்பார் பேசிய கூட்டத்திலே, அமைச்சர் சுப்பிரமணியம தீப்பொறி பறக்கப் பேசி, 'தீகா' வாவது என்று ஏசினாராம்!

அரிய உண்மையையும் அருளியிருக்கிறார் அது போது.

பார்ப்பனரல்லாதார் இயக்கத் தலைவர் பேச்சைக் கேட்டு இருந்தால் நான் என்ன கதியாகி இருப்பேன்? இப்போது இந்த தீகா தீமுகா தலைவர்கள் இருக்கிறார்களே அதுபோல எங்கோ ஒரு மூலையில் அல்லவா கிடந்திருக்க வேண்டி நேரிட்டிருக்கும்? என்று பேசியிருக்கிறார்.

இதிலே ஒரு அரிய உண்மை இருக்கிறது, தம்பி; நிச்சயமாக இருக்கிறது.

காங்கிரசில் சேர்ந்தால்தான், சுப்பிரமணியம் போன்றார், சபை நடுவில் சன்னத்துடன் இருக்கமுடிகிறது! இல்லையேல், மூலை முடுக்குதான்; சந்தேகம இல்லை! காங்கிரசின் தயவு இருக்கிறது என்ற தகுதி தவிர,தமது நிலைமைக்கு வேறுதகுதி

இல்லை என்பதை அவர் நெஞ்சார உணருகிறார்! நேர்மையாகச் சொல்லியும் விட்டார்! ஆனால் மற்றோர் பேருண்மை அவருக்குப் புலப்படவில்லை—இன்று அவர் இருக்கும் நிலையில் புலப்படாது!

''அது சரிடி அம்மா! அந்தப் பாவியோடு குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தா, இன்னேரம் கூலிக்காரியாகி, புளித்த கூழுக்கும் அழுகல் மாங்காய்க்கும் அலைந்து திரிந்து கிடக்க வேண்டித்தான் வந்திருக்கும்'' என்று துணிந்து கூறுகிறார்; கொண்டவன் வறுமையின் பிடியில் இருப்பது கண்டு குலுக்கி நடந்து குட்டிக் குபேரனை வலையிட்டு, அவனுடன் வாழ்க்கை நடத்தி, வங்கி ஓட்டியாணத்துடன் மாங்காய் மாலையும் வைர ஓலையும் பச்சை மோதிரமும் பத்து ஏகர் நஞ்சையும் பங்களா தோட்டமும், ''சம்பாதித்த'' சல்லாபி! ஆனால் உலகம், காரி உமிழ்கிறது! ஆஹா! அப்படியா! அம்மணீ! வாழும் வழி கற்றுக்கொடுத்த வனிதா மணியே! வாழி! வாழி!! என்று கூறி வாழ்த்துவதில்லை. அவளிடம் வண்டி ஓட்டி வயிறு கழுபவன் கூட, வாழ்த்த மாட்டான்—பாழும் அங்கத்தை வளர்க்க இந்தப் பங்கப்பட்ட பாவியிடம் அல்லவா வேலை செய்ய வேண்டி ''விதி'' இருக்கிறது என்றெண்ணி வேதனைப்படுவான்.

ஆனால் இதெல்லாம் சாமானியர்கள் விவகாரம்!

பேசினவர் அமைச்சர்; உன்னையும் என்னையும் போல ''உருப்படத் தெரியாத'' வரா!

எனக்கும் உனக்கும் தம்பி! அவர் போல ''அந்தஸ்து'' பெறுவதற்கு என்ன வழி என்பது தெரிய வேண்டாம்—நாடு பொலிவு பெற, தன்னரசு பெற்றுத் திகழ வழி என்ன என்ற விஷயம் புரியட்டும்—போதும்.

புகழுரை பொழிவதன் மூலம் மயக்கி விடலாம் என்று மனப்பால் குடிக்கும் வடநாட்டுத் தலைவர்களுக்கு, நாம் ஏமாளிகள் அல்லவென்பதை எடுத்துக்காட்ட வேண்டும்.

வந்த வண்ணம் இருக்கிறார்கள் வட நாட்டுத் தலைவர்கள்.

அவர்களின் உண்மை நோக்கத்தை உணர்ந்ததாலேதான், சேலத்தில் தோழர்கள், சீறி எழுந்து கண்டனக் குரலைக் காட்டினர். மேலும் விளக்கமாவதற்காகக் கருப்புக் கொடியும் காட்டினர்.

''அடிக்கடி செல்வோம், அன்பாகப் பேசுவோம், புகழ்பாடுவோம், புன்னகை காட்டுவோம், அவர்கள் ஏமாந்து போவார்கள், ''எடுபிடி''யாகி விடுவார்கள்!'' என்று எண்ணுகிறார்கள், முறையை மாற்றினால் ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு இல்லாமல் செய்து விடலாம் என்று எண்ணும் வடநாட்டுத் தலைவர்கள்.

சாகஸத்துக்குப் பலியாக மறுத்திடும் அணிவகுப்புஒன்று இருக்கிறது. அது வளர்ந்த வண்ணமும் இருக்கிறது, என்பதைக் காட்டியாக வேண்டும்.

எனவே இனி திராவிடம் வந்து "தந்தினம்" பாடி மேலும் தளைகளைப் பூட்டிட எண்ணும் வடநாட்டுத் தலைவர்களுக்கு, கழகம் கருப்புக்கொடிமூலம் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்ற கருத்தைத் தோழர்கள் பலர் கூறியுள்ளனர்—நான் முறைப்படி அதனை நமது பொதுச் செயலாளருக்குத் தெரிவித்திருக்கிறேன்.

தடியடி! துப்பாக்கி! சிறை! கலகம்! குழப்பம்! கல்லெறி! எனும் பலப்பல கிளம்பக் கூடும்—எனினும் இவைகளைக் கண்டு கண்டு நாம் பழக்கப்பட்டவர்கள் தம்பி! உன் கருத்து என்ன?

கண்ணே! மணியே! கற்கண்டே! என்று அன்புடன் பேசுகிறோம்; அக்ரமக்காரர்களே, எங்களுக்குக் கருப்புக் கொடியா காட்டுகிறீர்கள், என்று வடநாட்டுத் தலைவர்கள் நெருப்பைக் கக்கக் கூடும்.


காட்டு மிராண்டிகள்! பைத்தியக்காரர்கள்! சிறுபிள்ளைகள்! என்று மீண்டும் ஒரு முறை நேரு பண்டிதர் நாக்கைத் தீக் கோபமாகக்கக் கூடும்.

ஆனால், நமக்கு. வடநாட்டுத் தலைவர்கள் நம்மைப்பற்றி எப்படிப் பேசுகிறார்கள், புகழ்ந்தா? இகழ்ந்தா? வெல்லமா? வெடிமருந்தா? என்பதல்ல, கவனிக்க வேண்டிய பிரச்னை. தம்பி! மலத்தை மிதித்து விட்டாலும், கழுவி விட்டால் நாற்றம் போய் விடுகிறது; பூசிய சந்தனம் வியர்வையில் கரைந்து காற்றோடு போய்விட்டாலும், மணம் மடிந்து படுகிறது!

நம்மை வடநாட்டுத் தலைவர்கள் புகழ்கிறார்களா, இகழ்கிறார்களா—சந்தனம் பூசுகிறார்களா, நரகல் நடையில் ஏசுகிறார்களா, என்பதல்ல பிரச்னை.

நமக்குள்ள பிரச்னை—நம்மைப் போன்ற சாமான்யர்களுக்குத்தான் தம்பி, அமைச்சர்களுக்கு அல்லவே அல்ல—வடநாட்டார் நமது தாயகத்தை எப்படி நடத்துகிறார்கள் என்பதுதான்! அடிமைத்தளை பூட்டியா, அல்லது நேசநாடாக்கிக் கொண்டா என்பதுதான் பிரச்னை. வழுக்கி விழுந்த வனிதாமணிகள் வந்தார்க்கு விருந்தளிக்கட்டும்; தாயகத்தின் தளை ஒடித்திட நாம் பணியாற்றுவோம்—நமது பங்கினைச் செலுத்துவோம்.

அன்புள்ள,



19—6—1955.

# மகுடி ஊதும் மகானுபாவர்கள்!

*கலையைப் பிரசாரத்திற்குப் பயன்படுத்துதல்—*
*ஆச்சாரியாரின் இலக்கிய நுழைவும் குழப்பமும்*

தம்பி,

"ஆமாம். இவர்கள் பூஜையும் பக்தியும் பத்தி எரிஞ்சாப் போலத்தான் இருக்கு சுட்ட செங்கல்லே வைத்துச் செய்கிற பூஜைக்கு எதுக்கு இவ்வளவு ஆர்ப் பாட்டம்?" என்றாள். அவர்கள் பூஜித்த தெய்வம் செங் கல்லால் ஆனதுதான்.

எனக்குக் கோபம் வந்தது. "நீ கோவிலிலேபோய்க் கும்பிடுகிற கருங்கல் சாமியிடம் மாத்திரம் என்ன இருக் கிறதாம்?" என்றேன்.

'போதும்' பேசாமல் இருங்கள். கோவில்களிலே மந்திரங்கள், யந்திரங்கள் எல்லாம் செய்து விக்ரஹங் களைப் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள். அந்த விக்ரஹங் களும் இந்தச் சுட்ட செங்கல்லும் ஒன்றாய்விடுமாக்கும்?" என்றாள்.

"அது எனக்குத் தெரியாது முன்பு கஜனி மகமதும் அவனுடைய ஆட்களும் கோயில்களை இடித்துத்தள்ளி, விக்ரகங்களை எல்லாம் மசூதிகளில் வாசற்படிகளாகப் போட்ட காலத்தில், இந்த யந்திர மந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லை. தூணிலும் துரும்பிலும் இருக்கும் கடவுள், நரசிம்மாவதாரத்தில் வந்ததுபோல், அந்த வாசற்படி களிலிருந்து வந்து. கஜனியின் ஆட்களை; ஹிரண்யனைக் கிழித்தது போல கிழித்துவிடவில்லை. பூஜைக்குக் கருங் கல்லாய் இருந்தாலென்ன? தெய்வம் கல்லுக்குள்ளேயா இருக்கிறது? நெஞ்சுக்குள்ளே வேண்டும்" என்றேன்.

ராணியும் நானும் இப்படிப் பேசிக்கொண்டோம் என்று எண்ணிவிடாதே—வாதாடும் அளவுக்கு நேரம் கூடக் கிடைக் கிறதா! இது சில நாட்களுக்குமுன் நான் படித்த கதையில், ஒரு புருஷனும் மனைவியும் நடாத்தும் உரையாடல்,சிறுகதை பெரிய தத்துவ விளக்கத்துக்காகத் தீட்டப்படும் "ரகம்" இது என்று முன்னுரை சிபாரிசு செய்கிறது.

கதை கூறுகிறேன் ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்க் கிறான் ஒரு இலக்கிய ஆய்வாளன்! வெளியில் ரிக்சாக்காரர்கள் செங்கல் ஒன்றை நிறுத்திவைத்துப் பூச்சொரிந்து பூஜை செய்

கிருர்கள். சரஸ்வதி பூஜை!! இந்த இலக்கிய ஆய்வாளரும், சரஸ்வதி பூஜையை முடித்துவிட்டுத்தான் உட்காருகிருர். ரிக்ஷாக்காரர் நடத்தும் பூஜையில் உண்மையான பக்தி இருப்பதை இவர் உணருகிருர். (இவர் உணர்ந்து என்ன பலன்! கடவுளல்லவா உணர வேண்டும்! உணர்ந்தால் இந்த ஜென்மங்களை ஏன் மனித மாடுகளாக்கி வேதனைப் படுகுழியில் தள்ள வேண்டும்? என்று-கேட்பாய், தம்பி.) உணர்ந்து உவகையுடன் தன் இல்லாளைக் கூப்பிட்டு, 'இதோ பார்! இவர்கள் நடத்தும் பூஜையை. இதிலல்லவா உண்மை பக்தி இருக்கிறது'' என்று கூறுகிருர். அந்த அணங்கு, செங்கல்லை வைத்துக் கும்பிடுவதைக் கேலி செய்கிருள். உடனே இவர், இலக்கிய ஆய்வாளர் அல்லவா, ஒரு தத்துவத்தை எடுத்து வீசுகிருர்; ''கடவுள் கல்லிலா இருப்பார், நெஞ்சிலல்லவா இருக்கிருர்'' என்கிருர். கூறிவிட்டு ''மறுப்பாயோ இதனை'' என்று கேட்கிருர்; மாது சிரோமணி ''எனக்கு எதுக்கு இந்த வம்பெல்லாம். இட்டிலிக்கு அரைக்கணும்'' என்று கூறிவிட்டு உள்ளே செல்கிருர்கள்.

சுயமரியாதைக்காரர் தவிர வேறு யாரால் இப்படிப்பட்ட கருத்துக் குலுங்கும் கதை தீட்ட முடியும் என்று எண்ணிக் கொள்வாய். நீ மட்டும் என்ன தம்பி, நானும் அப்படித்தான் எண்ணினேன்; எழுதினவரும், நாமெல்லாம் அவ்விதம் எண்ணிக்கொள்ள இடம் வைத்துத்தான் எழுதினுர். ஆனல், கதையின் நோக்கம் முற்றிலும் வேறு!!

எழுதியவர், சுயமாரியாதைக்காரராக இருக்கத் துணியவில்லை; ''மேதை'' யாகிவிட விரும்புகிருர். எனவே கடவுள் எங்கு உறைபவர்? கருத்திலா, கல்லிலா, என்ற விவாதத்தைத் துவக்கி, முடிவு கூருமல், அம்மையை மாவு அரைக்க அனுப்பி விட்டு, ஐயாவைக் கொண்டு, கார்ல் மார்க்ஸைத் தோற்கடிக்கச் செய்கிருர்!!

ஜன்னலுக்கு வெளியே இருந்து பார்த்தாரல்லவா, பக்தியுடன் பூஜை செய்யும் ரிக்ஷாக்காரர்களை. அவர்கள் அன்று இரவு குடித்துவிட்டு, அடிதடியில் இறங்கி, ஆபாசமாக நடந்து கொண்டார்களாம். இதைக் கண்டு இவர் மிக வருந்துகிருர். இவ்வளவுதானு இவர்களின் பூஜையும் பக்தியும் என்று எண்ணி உள்ளம் நைந்து போகிறது. இந்தக் கட்டத்தோடு கதையை முடித்துப் பூஜைகள் செய்து விடுவதாலேயே, போக்கு மாறி விடுவதில்லை, பூசல் ஒழிந்து போவதில்லை, புத்தி தெளிவாவதில்லை என்று அறிவுரை தருகிருரா என்று கேட்கிருய், தம்பி? அது நமது 'முறை' — மேதைகள் அப்படிச் செய்வார்களா?

இலக்கிய ஆய்வாளர். இல்லக்கிழத்தியுடன், கல்லிலா கடவுள் இருப்பார், இருந்திருந்தால் கஜனி மகமது கண்டதுண்டமாக்கப்பட்டிருக்க மாட்டானு? என்று வாதாடினுரல்லவா!

அதே முறையில், கல்லைக் கடவுளாகக் கருதிக் கும்பிடுவதும், பூஜை செய்வதும், கன்னத்தில் அடித்துக் கொள்வதும், காப் பாற்று சாமி என்று வேண்டிக் கொள்வதும், நல்லறிவையும் நன்னெறியையும் தரக்கூடுமானால், காலையிலே (இவர் பார்த்து மெச்சத்தக்க வகையில்) பூஜை செய்த ரிக்ஷாக்காரர் கள், மாலை குடித்துவிட்டு வந்து கும்மாளமடிக்கும் நிலை வந் திருக்கலாமா, என்றெல்லாம் ஆராயவில்லை

ஆராய்வாரா! 'மேதை'யாக இருக்க வேண்டுமானால், அத்தகைய ஆபத்தான ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடாதே! சுயமரியாதைக் காரனாக்கி விடுமே!

இவருடன் வாதாட முடியாமலோ, விருப்பமில்லாமலோ, மனைவி, இட்லிக்கு மாவு அரைக்கச் சென்றுவிட்டார்கள்; இவர், இந்தக் காட்சி கிளறிவிடக் கூடிய கருத்துக்களைச் சந் திக்க அஞ்சி, தூங்கச் செல்கிறார்.

காலையில் மார்க்கட்டுக்குச் செல்கிறார்

குடிபோதையிலே, எந்தச் சாமி, பந்தலை ரிக்ஷாக் காரர் பிய்த்துப் போட்டனரோ, அதை அவர்கள் செப் பனிட்டுக் கொண்டிருக்கக் காண்கிறார்!

இவர்,உங்கள் மனதிலே நேற்றைய பூஜை உயரிய எண் ணங்களைத் தரவில்லையா! மனிதன் தேவனாகக் கூடும் பூஜா மகிமையால் என்று கூறப்படுகிறது. நீங்களோ கேவலம் மிருகமாகி விட்டீர்களே நேற்றிரவு—என்று விரிவுரையாற்றி னாரா? இல்லை! சிறிதளவு பயம் இருந்திருக்கலாம், ''சரிதான், போசாமி! சும்மா என்னமோ எங்களைத் திட்டறே! வா,சாமி, என்கூட! எத்தினி பெரிய பார்ப்பானுங்களெல்லாம் குடிச்சிப் போட்டு மில்ட்டேரி ஓட்டல்லே பிரியாணி குர்மாவைத் தின்னு ஏப்பம் விடறானுங்கோன்னு காட்டறேன்'' என்று ரிக்ஷாக்காரன், 'வம்பு தும்பு' பேசிவிடக் கூடும். எனவே, இவர் இதமாக அவர்களிடம் பேசி, குடிக்கக்கூடாது என்று உபதேசிக்க, அவர்களும் சாமி சாட்சியாகக் குடிப்பதில்லை என்று சத்தியம் செய்கிறார்கள்.

இதுதான் கதை! இதிலிருந்து இவர் பெற்று, படிப்போ ருக்குத் தரும் பாடம் என்ன தெரியுமோ? கபந்த தத்துவத் தைப் போதித்த கார்ல் மார்க்சின் போதை சித்தாந்தம் கொஞ்சமும் உண்மையில்லை - என்பது பாடம்—பாடமாம்!!

இவர் தீட்டிய கதைக்கும் மார்க்சின் தத்துவத்துக்கும், என்ன தொடர்பு? எந்தச் சம்பவம் மார்க்சின் தத்துவத்தைப் பொய்ப்பிக்கிறது?—இவை பற்றி விளக்கினாரா—இல்லை! ஏன் விளக்க வேண்டும்! மேதைகளுக்கு அதுவா வேலை! !

மார்க்ஸ், மதம் மக்களுக்கு அபின் என்றார்.

அபின் போதை தருவது, மதமும் மக்கள் மனதிலே ஒரு மயக்க மளிக்கிறது, என்பது பொருள்!

அந்தத் தத்துவம் பொய் என்று கதை எங்கே காட்டு கிறது?

மதம்—பூஜை செய்ய வைத்தது—செய்தனர்.

குடி—சண்டையைக் கிளப்பிற்று—சண்டை போட்டனர்.

சண்டையை நிறுத்தி சன்மார்க்கத்தில் ஈடுபடுத்த மதமா பயன்பட்டது? இல்லை! குடிக்காதீர்கள் என்ற அறிவுரை பயன்பட்டது.

குடித்துவிட்டுக் கூத்தாடிய ரிக்ஷாக்காரர்கள் தெளிவு பெறுகிறார்கள், இவர் 'போதை' கொள்கிறார்—மதபோதை!!

இதைக் கக்க, ஒரு கதை!

இந்தக் கதையின் இடையே கடவுள் எங்கே இருக்கிறார், கல்லிலா, நெஞ்சிலா என்று ஒரு விவாதம்—முடிவு பெறாமல்!!

மேதைகளென்றும், மறுமலர்ச்சி எழுத்தாளர்களென்றும் தங்களைக் கூறிக் கொள்பவர்கள், பெரும்பாலும், இதே 'பாணி'யில் தான் எழுதுகிறார்கள்.

முற்போக்குக் கருத்துகள் தூவப்படும்! பிறகு, அது மறைக்கப்படும் அளவுக்குப் பழைமை கொட்டப்படும்!!

இந்தப் போக்கினர்தான், கதை, நாடகம், சினிமா இவைகளிலே பிரச்சாரம் கூடாது—பொதுவாகக் கலையைப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தினால், அதன் மேன்மையே குலைந்து போகிறது, தூய்மை நாசமாகிறது என்று "இலக்கிய உபதேசம்" செய்பவர்கள்.

கார்ல் மார்க்சின் தத்துவத்தைக் கண்டிக்கவேண்டும் என்ற அவசியம் என்ன வந்தது இதிலே? ஏன் அதைச் சொருகிக் காட்டுகிறார்! ! இது பிரசாரமல்லவா?

பிரசாரத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்று பேசுப பவர்கள், தமது ஒவ்வொரு முயற்சியிலும் பிரசாரத்தில்தான் ஈடுபடுகிறார்கள்—வெற்றி பெறுவதில்லை, பாபம். அதனால் தான், வெந்த உள்ளத்துடன், பிறர் வெற்றிகரமாகக்கலையை நல்லறிவுப் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவது கண்டு வெகுண்டு, கலையைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்று கூறுகிறார்கள்.

"அது என்ன வழக்கம், சார்? எனக்குத் துளியும் பிடிப் பதில்லை, மனைவியைக் கூட்டிக் கொண்டுதான், 'பீச்'சுக்கு வர வேண்டுமா? பொம்பனாட்டிங்களோடு அவளை வரச் சொல்லிவிட்டு, வரப்படாதோ! நான் அப்படித்தான்" என் கிறார் எம்பெருமாளய்யங்கார்! காரணம் இருக்கலாம்—அவ

ரைப் பொறுத்த வரையில்! அம்மையின் திருப்பாதங்கள். கஜமுகன் அருள் பாலிக்கப்பட்டவையாக இருக்கலாம், வெளியே அழைத்து வந்தால், ஆபாசமாக இருக்குமென்று ஐயங்கார் சுவாமிகள் கருதியிருக்கலாம்.

''இந்த ''ஜட'' த்தோடு யார் போவா, பீச்சுக்கு? இது மூஞ்சியும் முகரக் கட்டையும் பார்த்தாலே, 'பீச்'சுக்கு வர்ரவா, கேலியான்னு பேசுவா? இதனேட 'தொண தொணப்பை' ஆத்திலே சகிக்கிறது போதாதுன்னு, பீச்சுக்குப் போய்வேறே பிராணனை விடணுமா?—வேண்டாம் டிம்மா நான் போகல்லே, அவரோட'' என்று சகதர்மணி கூறிவிட்டிருக்கலாம்.

அநாகரிகமான வேறு பல காரணங்களும் இருக்கலாம்.

அவர், தமது துணைவியை உடன் அழைத்து வராததாலேயே, அதுதான் முறை, தமது இல்லக்கிழத்தியுடன் வருபவர்கள், நாகரீக மற்றவர்கள் என்று பேசுவது அறிவுடைமை யாகுமா!

அதுபோலத் தான், இவர்களால் கலையைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்த முடியவில்லை.

அந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கிட்டவில்லை.

இதைக் கொண்டு, கலையை நல்லறிவுப் பிரசாரத்துக்கு வெற்றிகரமாகப் பயன்படுத்தும் மற்றவர்களைப் பார்த்து, பொம்மனாட்டிகளை ஏன் அழைச்சிண்டு வரணும் என்று கேட்கும் போக்கில், கலையில் பிரசாரம் இருக்கலாமா, என்று இந்த 'மேதைகள்' பேசுகிறார்கள்.

தம்பி! நான் இப்படிச் சொல்வதால், சுவையும் அழகும் கொண்ட வகையில் எழுதக்கூடியவர்கள் நம்மவர்கள் மட்டும் தான், மறுமலர்ச்சி எழுத்தாளர்களுக்கு அவ்விதம் எழுதவே தெரியாது, என்று அகம்பாவம் கொள்கிறேன் என்று எண்ணிக் கொள்ளப்போகிறார்கள்—சொல்லிவிடு அவர்களுக்கு நான் அப்படிப்பட்டவனல்ல என்பதை!

அவர்கள் தோல்வி அடைவதற்குக் காரணம் அழகாக, அருமையாக எழுதத் தெரியாததால், அந்தத் திறமை இல்லாததால் அல்ல! அவர்களின் தோல்விக்குக் காரணம், அவர்கள் மனதிலே, தெளிவான திட்டமான கொள்கையும், அதைக் கடைப்பிடித்தாக வேண்டும் என்ற நேர்மையும் இருப்பதில்லை.

பழைமை செத்து விடுகிறதே என்ற துக்கம் குடைகிறது. அதேபோது இந்த நாட்களில் பழைமையை ஆதரிப்பதா என்று வெட்கமும் வேலாகிக் குத்துகிறது. எந்த முகாமில் இருப்பது, என்பது பற்றி முடிவெடுக்க இயலாமல், அவர்கள் குழம்பிக் கிடக்கிறார்கள்! அந்தக் குழப்பம், அவர்களின் திறமையை மண்ணாக்கி விடுகிறது.

இந்தக் கதையையே பாரேன்? கல்லுக்கு மந்திர சக்தி ஊட்டுகிறார்கள் தெய்வம் ஆகிறது—என்ற பழைமையைப் 'பாரியாள்' கூறிடக் கேட்டோம். இது நமக்குப் புரிகிறது! ஓஹோ! இது பத்தாம் பசலி! எவ்வளவு சொன்னாலும் ஏறாது! ! என்பது தெரிகிறது. ஆனால் இலக்கிய ஆய்வாளராகவும், அந்த மாதுசிரோமணியின் மணவாளனாகவும் இருப்பவரின் போக்கு எப்படி இருக்கிறது? பழைமையின் பக்கம் நிற்கிறாரா! புதுமைக்காகப் போர்முரசு கொட்டுகிறாரா? என்று பாருங்கள்; குழம்புகிறார், வேறென்ன!

புதுமைக் கருத்திலே திளைத்தவர் போல மனைவியிடம், "கஜனி மகமதும் அவருடைய ஆட்களும் கோயில்களை இடித்துத்தள்ளி விக்ரஹங்களை எல்லாம் மசூதியிலேவாசற்படிகளாகப் போட்ட காலத்தில் இந்த யந்திர மந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லை. தூணிலும் துரும்பிலும் இருக்கும் கடவுள், நரசிம்மாவதாரத்தில் வந்தது போல, அந்த வாசற்படிகளிலிருந்து வந்து கஜனியின் ஆட்களை ஹிரண்யனைக் கிழித்தது போலக் கிழித்து விடவில்லை," என்று கூறி, ஏன் என்று கேட்கிறார்? எவ்வளவு தீவிரத் தன்மை சுடர்விடுகிறது! எத்துணைப் பகுத்தறிவுக் கதிர் தெரிகிறது! ஆனால் எற்றுக்கு! !

நேக்கு இந்த வம்பு தும்பு தெரியாது என்று கூறிவிட்டு அந்த அம்மை இட்லிக்கு மாவு அரைக்கச் சென்று விடுகிறார். நான் அந்த அம்மையை மதிக்கிறேன். நமக்குத் தெரியாது தேவையற்றது இந்தப் பிரச்னை என்ற தன்னடக்கம் இருக்கிறது, இவர்களிடம். சரியோ, தவறோ, பழமைதான் பிடித்தமாக இருக்கிறது! அதற்கு ஆதாரம் தேட வேண்டும் என்ற அவசியமும் தோன்றவில்லை! ! அவர்களின் நிலை, புரிகிறது, நன்றாக. ஆனால் இவர்! அசகாயசூரர் போல ஒரு பிரச்னையைக் கிளப்புகிறார். தூணிலிருந்து வெளிப்பட்ட துளசிமாலையோன், ஏன் கஜனி மகமதைக் கிழித்தெறியக் கல்லிலிருந்து வெளிவரவில்லை என்று கிளப்பி விட்டு, பதில் அளிக்கிறாரா, எந்தப் பக்கமாகவாவது? அதுதான் இல்லை! அம்மை சுட்டுத் தரப்போகும் இட்லிக்குக் காத்துக் கொண்டிருக்கிறவராகத் தெரிகிறதே தவிர, கடவுள் எங்கு இருப்பார், கல்லிலா, நெஞ்சத்திலா என்ற சிக்கலான பிரச்னையைக் கிளப்பி விட்டோமே, ஒரு கதையில்; இதற்கு ஏதாவதோர் சார்பில் பதில் தரவேண்டாமா என்ற பொறுப்புக் கொண்டவராகத் தெரியவில்லை.

"தெற்கே போகிற வண்டிங்களா! நீங்க எங்கே மதுரைக்குப் போகிறிங்களா?" என்று பன்னிப் பன்னிக் கேட்டு விட்டு, "அந்த ரயில் வந்ததும் வராததும் எனக்குத்

தெரியாதுங்க'' என்று பேசும் திம்மப்பன்போல, "யாருக்கு? உன் மக கலியாணமா! ஆவணி பதினேந்தா! ஆற்காட்டிலா! ஆறு பவுனிலா செயின் போடணும்! செலவு ஆயிரத்துக்கு மேலே ஆகுமோ! நல்ல மனுஷன், உனக்குச் சகாயம் செய்ய யாருக்கும் இஷ்டம்தான், பகவான் எல்லாக் காரியத்தையும் சுபமாக முடித்து வைப்பார், கவலைப்படாதே'' என்று உபசாரத்தை வாரி வழங்கிவிட்டு, கடைசியில், ''இப்ப என்னிடம் பணம் இல்லையே, வேறே இடம் பாரப்பா!'' என்று கடன் தந்து உதவாமல் விரட்டிவிடும் திமிரப்பன் போல், கடவுள் கல்லில் இருந்தால் கஜினியைக் கிழித்தெறிந்திருக்க வேண்டாமா என்று சூரத்தனமான கேள்வியைக் கிளப்பிவிட்டு, சுட்டுக் கொண்டு 'வா, இட்டிலியை என்று கூறிவிட்டுச் சும்மா இருந்து விடுவதா!!

இந்தப் போக்கினால்தான், இவர்களைவிட இலக்கியத் திறமையும் எழுதும் திறமையும் குறைந்த அளவு பெற்றுள்ள நம்மவர்கள் பெறுகிற வகையான அளவுள்ள வெற்றியை இவர்களால் பெற முடிவதில்லை ஆச்சாரியாரல்லவா இந்தக் 'கோஷ்டிக்'க்குத் தலைமை வகிக்கிறார்! எவ்வளவு பரிதாபம் பாருங்கள்? இந்தத் தள்ளாத வயதில், இதுநாள் வரை, தாம் பெற்ற அனுபவத்தின் காரணமாக பெறக் கிடைக்கும் அரசியல் நுணுக்கங்களை எழுத வேண்டியவர், அனுமனின் வாலில் மூட்டப்பட்ட தீ பற்றி எழுதிக் கொண்டிருக்க வேண்டி நேரிடுகிறது!

பழமைக்கு ஏதோ புது விளக்கம் கொடுத்து, நம்மவர்களின் வாதங்களைத் தவிடு பொடியாக்கி விடுவதாக மனப்பால் குடிக்கிறார்கள்; புதுமையோ எந்தத் திக்கிலும் இவர்களைத் தாக்கித் தகர்த்த வண்ணம் இருக்கிறது!

இவர்களின் பழைமைப் பிரசாரத்தின் காரணமாக, 'பக்தர்'களாக இருந்து வருபவர்கள், இவர்கள் நமக்குச் சமாதானம் கூறுவதற்காக விளக்கங்கள், தத்துவார்த்தங்கள் தருகிறார்களே. அவைகளையாவது ஏற்றுக்கொண்டு, அவைகளின் படியாவது தங்கள் போக்கை மாற்றிக் கொள்கிறார்களா என்று பார்த்தால், அதுவுமில்லை

> வயலில் விளைச்சல் அதிகம் வேண்டும்—அதற்கு வனதேவதைக்கு நரபலி கொடுக்க வேண்டும் என்ற பழைமை எண்ணம் பிடித்த ஆதிவாசிகள், கடந்த கிழமைதான், எட்டு வயதுப் பாலகனைக் கொன்று படைத்திருக்கிறார்கள்!

எத்தன் இவன், பணத்தை எடுத்துக் கொண்டு கம்பி நீட்டினான் என்கின்றனர் போலீசார்;பிடிபட்ட பாஸ்கரராவ் என்பவனோ, நான் பக்தன்,எத்தனல்ல!பணத்தை எடுத்தேன்; செலவிட்டேன்;எதற்கு? பகவானைப் பிரத்யட்சமாகக் காட்டு

வதாகப் பக்கிரிசொன்னான், அவன் சொன்னபடி பூஜை பல செய்யவே செலவிட்டேன்! களவு என்கிறீர்கள், கடவுளைத் தேடிக் காணச் சென்ற என் புண்ணிய காரியத்தை! என்று வாதாடுகிறான்.

புதுமையின் வேகத்தையும் தடுக்க முடிவதில்லை—பழைமையாளர்களையும், நாசுக்காகவாவது திருத்தமடையச்செய்ய முடிவதில்லை. காரணம், இவர்கள் திறமையற்றவர்கள் என்பதல்ல; உள்ள சரக்கு மகாமட்டம். ஊசல் சரக்கை உண்மை அறிந்த மக்கள் குப்பைக்குப் போடுகிறார்கள்; இவர்கள் அதைக் குனிந்தெடுத்து, கூவிக் கூவி விற்கிறார்கள்! வியாபாரம் மிக மந்தமாக இருக்கிறது!

தம்பி, ஆச்சாரியார் போன்ற அதிமேதாவிகளுக்கே ஏற்படும் குழப்பத்தைப் பாரேன், நிலைமை விளங்கும்.

சேக்கிழார் திருநாளில் பேசுவதற்காக, ஆச்சாரியாரை அழைத்தனர். சென்ற கிழமை. சைவர்களுக்கு அவ்வளவு ஆள்பஞ்சமா என்று கேட்காதே தம்பி! அவர்களுக்கு அவ்வளவு சமரச ஞானம் என்று எண்ணிக்கொள்! இப்போதெல்லாம், அரியும் அரனும் ஒண்ணு! சென்ற இடத்தில்ஆச்சாரியாருக்கு உள்ள குழப்பம், அவர் பேச்சிலே, எப்படி பளிச்செனத் தெரிகிறது பார், வேடிக்கையாக இருக்கும்.

திருநீறு, திருநாமம், இவைகளை அணிந்து கொள்ள வேண்டும். அது பக்திக்கு அடையாளம்,பரிகாசத்துக்கு உரியதல்ல, என்று வலியுறுத்துகிறார் ஆச்சாரியார். கேள்,அவர் பேச்சை,

> "சைவம் வைஷ்ணவம் என இரண்டு விதமான சமயம் நாட்டில் பரவி வருகிறது, முக்கியமாக முகத்தில் போடும் நாமக் குறியிலிருந்து தெரிகிறது. இதில் மறைவு கிடையாது. எல்லோருக்கும் தெரியும்படியாகப் போட்டுக் கொள்ளும்படி ஆச்சாரியார்கள் சொல்லியிருக்கிறார்கள்."

இவ்விதம் பேசி, திருநாமம் அணிந்தாக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். சைவர்களிடமா, என்று ஆச்சரியப்படாதே. அவர்கள் திருநீறு பூசட்டும், வைணவர் திருநாமம் தரிக்கட்டும் என்பது பொருள், என்று பெருந்தன்மையுடன் ஒப்புக்கொள்வோம்.

திருநாமத்தின் அவசியத்தை இவ்வளவு வலியுறுத்தி ஆச்சாரியர்கள் ஆக்ஞையிட்டுள்ளனர் என்று ஆதாரம் காட்டிப் பேசினாரே தவிர,அவருக்குக் குழப்பம் வராமலில்லை.அவர் நெற்றியில் நாமம் இல்லை! மற்றவர்களுக்கு நாமம் போடச் சொல்லி வலியுறுத்துகிறார். அதன் மகிமையை எடுத்துக் கூறுகிறார். அவர் நெற்றியிலே நாமம் இல்லை. என்ன எண்ணிக் கொள்வார்களோ, என்று குழம்புமல்லவா! எனவே சொல்கிறார், அதேபோது,

“எனக்கு நாமக்குறியில்லேயே என்று நீங்கள் யோசிக்கலாம். வேஷத்தில் பக்தி இல்லை” என்று கூறுகிறார்!

எப்படி இருக்கிறது வாதம்? எவ்வளவு குழப்பம், எவ்வளவு பெரியவருக்கு?’

திருநாமம் தரித்தல் அவசியம்—ஆச்சார்யாள் ! சொல்லியிருக்கிறார்கள்! இதைச் சொல்வதும் ஆச்சாரியார்தான் —நாமக்குறி இல்லாவிட்டால் என்ன, வேஷத்தில் பக்தி இல்லை என்று சொல்பவரும், அவரேதான்!

வேஷம் பக்தியல்ல என்பதை நம்பினால், நாமம் போட்டாக வேண்டும், அதுவும் எல்லோருக்கும் தெரியும்படி போட்டுக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கத் தேவையில்லை!

நாமம் தரித்தாக வேண்டும், ஆச்சார்யாளின் கட்டளை அது, அதனை மீறக் கூடாது என்பதிலே உறுதியும் நம்பிக்கையும் இருந்தால், நாமம் தரித்துக்கொண்டு சென்றிருக்க வேண்டும்.

எதிலும் உறுதிப்பாடும், உத்வேகமும் இல்லை, எனவே உள்ளத்தில் ஒரே சேறு!!

இந்நிலை இவருக்கு என்றால், சில்லரைகள் சிரமப்படுவதிலே ஆச்சரியமென்ன.

தம்பி! இவைபற்றி நான் எழுதுவதற்குக் காரணம்,இவர்களைக் கேலி பேசிக் களிப்பூட்ட வேண்டும் என்பதல்ல. நாம் பெற்றுள்ள கருத்துகள், மேற்கொண்டுள்ள பணி, எவ்வளவு மாண்புள்ளது என்பதை விளக்கத்தான்! திறமை முழுவதையும், ஆற்றல் அவ்வளவையும், தந்திரம் அத்தனையையும் உபயோகித்தாலும், வெற்றி காண முடியாத நிலையில் ஆச்சாரியார் போன்றோர் தள்ளப்பட்டுள்ளனர்—காரணம், அவர்கள் செத்த பாம்பின் முன்பு மகுடி ஊதிப்பார்க்கிறார்கள்!! இவர்களைவிட “எனக்கொன்றும் தெரியாது. இட்லி மாவு அரைக்க வேண்டும்” என்று கூறிவிட்டுச் சென்ற அம்மையார் எவ்வளவோ மேல், என்பேன். செத்த பாம்பைப் படமெடுத்தாடச் சொல்லி மகுடி ஊதும் இந்த மகானுபாவர்களைவிட இந்த மாதுசிரோமணி எவ்வளவோ மேல்தான், சந்தேகமின்றி!

அன்புள்ள,

அண்ணாதுரை

26—6—1955

# பேசட்டும், தம்பி, பேசட்டும்

*ராஜா சிதம்பரத்தின் காங்கிரஸ் நுழைவு—அமைச்சர் சுப்ரமணியம்—தொழில் துறையில் சென்னையின் பின் தங்கிய நிலை.*

தம்பி,

அமைச்சர் சுப்ரமணியம் ரொம்ப ரொம்ப ரோஷக்காரர்!

நிறுத்து அண்ணா! யார் ஒப்புக்கொள்வார் இதை? துளி யாவது அவருக்கு ரோஷம் இருப்பதாகக் காணேமே? என்று கூற எண்ணுகிறாய்.

தம்பி, சென்ற கிழமை அவர் லால்குடியிலும் திருச்சியி லும் பேசியதைப் பத்திரிகையில் பார்த்திருப்பாயே, அதற்குப் பிறகுமா. அவர் ரோஷக்காரர் என்று ஒப்புக்கொள்ள மறுக்கி ருய் என்கிறேன் நான்.

போ! போ! அண்ணா! ஏதோ இரண்டோர் கூட்டத்திலே தலைகால் தெரியாமல் அந்த ஆசாமி துள்ளிக் குதித்து, கண் மண் தெரியாமல் பேசிவிட்டதாலேயே, அவரைரோஷக்காரர் என்று கூறிவிட முடியுமா? எத்தனையோ வில்வங்கள், துளசிகள் விதவையானதுகள், இதைவிடக் கடுமையாகத் தாக்கிப் பேசி, தமது எரிச்சலைக் குறைத்துக்கொள்ள முயன் றன: இதை ஒரு காரணமாகக் கொண்டு, அமைச்சர் சுப்ரமணி யத்தை ரோஷக்காரர் என்று கூறினால், நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ரோஷக் காரர்தான் என்பதை நாட்டுக்கு எடுத்துக்காட்டும் வாய்ப் பொன்று அவருக்குக் கிடைத்தது—ஆனால், அவரோ தமது ரோஷத்தைச் சுருட்டி வைத்துக்கொண்டு, அகப்பட்டதை விடுவேன் என்று கூறினாரே தவிர, ரோஷக்காரராக நடந்து கொள்ளவில்லை, என்று கூறுவாய்.

தம்பி! கிடக்கட்டும்; நமக்குள் ஏன் தகராறு? அவர் கோபக்காரர், அதை ஒத்துக்கொள்கிறாயா? என்று கேட்கி றேன்—மறுக்க முடியாதல்லவா உன்னால்!! அதிலும் சென்ற கிழமை 'கோபாதிபதி' அவருக்கு உச்சஸ்தானத்தில் இருந் திருக்கிருன்! எப்படி இல்லாமலிருக்க முடியும்? குடந்தையில் வரவேற்பு, திருச்சியில் விழா, சென்னையில் கொண்டாட்டம், கோவையில் குதூகலம், மதுரையில் மகத்தான வரவேற்பு

என்றெல்லாம் பத்திரிகையில் செய்திகள் வருகின்றன—எல்லாம் தீறு மூறு 'காறுக்களுக்கு! இதோ அவர் இருக்கிறர், அமைச்சர் வழக்கறிஞர், ஆச்சாரியாரின் அத்யந்த நண்பர்; அவரை அல்லவா நாடு இப்படிக் கொண்டாடவேண்டும். நாவலர் நெடுஞ்செழியனுக்கா இப்படிப்பட்ட நல்வரவேற்புகள் என்று எண்ணும்போதே உள்ளம் எரிமலையாகிறது—கக்கிவிட்டார்!!

சப்தரிஷீஸ்வரர் கோயில் அதிகாரிகள் பூர்ண கும்பம் எடுத்து வரவேற்க, எடயாத்து மங்களந்தைச் சேர்ந்த ஸ்ரீ ஹாலாஸ்யநாத குருக்கள், லால்குடி தாலூகா அர்ச்சகர் சங்கத்தின் சார்பில்வரவேற்பு உபசாரப் பததிரம் வாசித்தளிக்க, வருக! அமருக! மாலை அணிந்து கொள்க! என்று வட்டாரப் பெரியவர்,ராஜா சிதம்பரம் அன்பு ஒழுக ஒழுக உபசரிக்கப் பவனிவந்த, சென்னை ராஜ்ய நிதி அமைச்சர் கனம் சுப்ரமணியம் அவர்கள், பிரம்மானநதமடைந்து, 'ஓஹோ ஹோ! நமக்கும் இவ்வளவு அமோகமான ஆதரவு இருக்கிறதா, இனி என்ன தயககம், இதுகளை இதே நேரத்தில் தீர்த்துக் கட்டிவிடவேண்டியதுதான்' என்று தீர்மானித்து, நமது கழகங்களின் மீது பாய்ந்திருக்கிறர் சென்ற கிழமை!! ஆஹாஹாரம் செய்து தமது மலைபோன்ற உடல் குலுங்கக் குலுங்க ராஜா சிதம்பரம் நகைத்திருப்பார்; அவ்வளவு காரசாரமாகப் பேசினராம் அமைச்சர், ராஜா சிதம்பரம் அவர்களின் வீரதீரத்தைப் பாராட்டினராம்!!

*ராஜா சிதம்பரம் முன்பு காங்கிரசை எதிர்த்துவந்தார்; இப்போது காங்கிரசில் சேர்ந்துவிட்டார்; இது கோழைத்தனமல்ல; இதுதான் வீரம்!* மந்திரியின் மணிவாசகம் இது.இதன் பொருள் பற்றிய விளக்கத்தைப் பிறகு கவனிப்போம், தம்பி! முதலில், இவர் இது போலப் பேசவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதுபற்றி எண்ணிப் பார்த்தால், ருசிகரமான பல விஷயங்கள் தெரியும்.

யாராரோ ஏதேதோ பேசி இருக்கிறர்கள், ராஜா சிதம்பரத்தின் போக்குப்பற்றி! அமைச்சரிடமே சிலர் கூறியிருக்கக்கூடும்--பலர் அவர் காதில் படும்படி பேசி இருக்கவேண்டும். அல்லது, தன் போக்கைக் கேவலமானது, நாணய மற்றது நயவஞ்சகமானது என்று பலரும் கூறி ஏசுகிறர்கள் என்று ராஜா சிதம்பரம் அவர்களே, அமைச்சரிடம் கூறி அழுதிருக்க வேண்டும்.

"பாரப்பா பார்! இந்தப் பெரிய மனிதர்களுடைய யோக்கியதை எப்படியிருக்கிறது பார்? ராஜா சிதம்பரம், காங்கிரஸ் மந்திரியை வரவேற்கிற காட்சியைப் பார்! காங்கிரசை முழுமூச்சாக எதிர்த்த கனவானப்பா இவர்! இப்போது பார், காவடி தூக்கி ஆடுகிறர்."

"காங்கிரஸ் கவிழ்ந்துவிடப் போகிறது. எதிர்க் கட்சிகளுக்குத்தான் சான்சு. அதிலே இருந்தால்தான் நமக்கு ஒரு மந்திரி வேலைகிடைக்கும் என்கிற ஆசை மனுஷனைப் படாத பாடு படுத்திற்று—பிறகோ, காங்கிரஸ், பீடத்திலே உட்கார்ந்து கொண்டது. ஆசாமிக்குச் சப்பிட்டுவிட்டது—இனிக் காங்கிரசிலே சேர்ந்தாத்தான் ஏதாச்சும் துண்டு துணுக்காவது கிடைக்க முடியும் என்கிற எண்ணம் ஏற்பட்டது—இப்போது, எங்கள் மந்திரி! எங்கள் மந்திரி! என்று மங்களம் பாடுகிறார்! பதவிப்பித்தம் இருக்கே, அடே அப்பா! ஆட்டிப் படைக்குது!"

"பெரிய வீராதிவீரர்போலே பேசி வந்தார், காங்கிரஸ் பதவிக்கு வராது என்கிற தைரியத்திலே! இப்போது ஒரே பயம் பிய்த்துத் தின்னுது. எதிர்க்கட்சியிலே இருந்தா ஒரு காசுக்கும் பிரயோஜனமில்லே என்கிற பயம் வந்து விட்டது. எனவே சரணுகதிப் படலம் ஆரம்பமாகிவிட்டது"

இப்படிப் பலர் பலவிதமாகப் பேசாமலிருந்திருக்க முடியுமா!

இவ்வளவு சாவதானமாகவும் அமைதியாகவும் பேச முடியாதவர்கள்,சுருக்கமாகப்பேச, சுடு சொற்களைப் பயன்படுத்தி இருக்கக் கூடும்.

*கோழைத்தனம்—பதவிப்பித்தம்—சுயநலவெறி*

என்பனபோன்ற பட்டங்களைச் சூட்டியிருக்கக்கூடும். இது பற்றி ஏதோ ஓர் அளவுக்குத் தெரிந்ததால் தான், அமைச்சர் சுப்ரமணியம், ராஜா சிதம்பரத்தின் போக்கை ஆராய்ந்திட வேண்டிய அவசியம் வந்தது. அந்த அறிஞர் பெருமானின் அபார ஆராய்ச்சியின் முடிவு யாதெனின், ராஜா சிதம்பரம் காங்கிரசிலே வந்து சேர்ந்தது கோழைத்தனமாகாது, அது தான் வீரம் என்பதாகும்.

காட்டிக்கொடுத்தவர்—கட்சி மாறியவர்—என்றெல்லாம் கண்டிக்கிறார்கள் ஊரார், இதோ ஒரு 'கனம்' வருகிறார். வாழ்க வீராதி வீரனே! என்று வாழ்த்துகிறார், விருதளிக்கிறார்.

பொதுமக்கள், ராஜா சிதம்பரத்தின் போக்கை, எப்படி வரவேற்றனர், எத்தகைய தீர்ப்பளித்தனர், என்பது மாவட்ட ஆட்சிமன்றத் தேர்தலில் தெரிந்தது. மிகமிகச் சாமான்யர் தர்மு, நமது கழக மாவட்டச் செயலாளர், அவர் தூக்கி அடித்தார் இந்த கிங்காங்கை! இப்போது குப்புற விழுந்தவருக்குத் தங்கத் தோடா தருகிறார்,அமைச்சர்! நல்ல ஜோடி! பொருத்தமான கூட்டாளிகள்! அமைச்சர் ராஜா சிதம்பரத்தைப் பாராட்டி, வீரராக்கி, உபசரித்ததுடன்இருந்திருந்தால் நமக்கு வேலையே எழாது. அமைச்சர் அத்துடன்

விடாமல், பெரியாரென்றும் அறிஞர் என்றும் சொல்லிக் கொண்டால் போதுமா? அவர்களுக்கு இத்தகையவீரம் வர வேண்டாமா!! என்று கேட்டிருக்கிருர்! அருமை, அருமை!! அமைச்சர் பெருமானே! உமது அறிவின் முதிர்ச்சி இருக்கிறதே, அருமையினும் அருமை!! ராஜா சிதம்பரத்தைப் பிடித்துக்கொண்ட வீரம் எமக்கும் பிடிக்கவேண்டும் என்கிறீர்; எவ்வளவு அழகாக, வட்ட வடிவமாக, வெண்ணிலவு போல உடலெங்கும் காட்சி அளிக்கிறது, என்று குஷ்ட நோயாளியைப் பாராட்டிவிட்டு, அதுபோல உமக்கும் வரலாகாதா என்று வேறு கூறுவதுபோல இருக்கிறது,உமதுபேச்சு. —என்றெல்லாம் கூறத் தோன்றவில்லை, தம்பி! எனக்கு. நான் முறுக்குத் தளராத வாலிபனுக இருந்தபோது கேள்விப் பட நேரிட்ட ஒரு கதை—நிஜச்சம்பவம்-நினைவிற்கு வந்தது.

மணி பத்தாகும்—பாவை பாகு கனிமொழி தருவாள், பாலில் சீனியும் சேர்த்துத் தருவாள்—பருகுவான், என் நண்பன். எனினும் அவன் நினைவு பத்மாவின் பஞ்சணை மீதிருக்கும்—பத்மா அவன் மாதவி, அவன் கண்ணகியின் பெயர் குணவதி, அவனுக்குப் பெயரோ அன்பரசன்! கொட்டாவி விடுவான். கோகிலம், அவன் குறிப்பறிந்து வெற்றிலை மடித்தளிப்பாள்! குதட்டிவிட்டு,கடைவீதி சென்று நொடியில் வருகிறேன்—ஒரு கப் சாயா சாப்பிட்டுவிட்டு என்பான்! குணவதி, இதற்கு ஏன் வெளியே போக வேண்டும், இதோ நொடியில் நான் தயார் செய்கிறேன், என்பாள். செச்சே! காலை ஆறு முதல் இரவு பத்துவரை தான் வேலைசெய்து அலுத்துக் கிடக்கிருயே, இனியும் உனக்கேன் சிரமம், இதோ ஒரு அரைமணி நேரம் வந்து விடுகிறேன், என்று கூறுவான். பத்மா அழைக்கிருள் அவன் என்ன செய்வான்! சீக்கிரம் என்பாள், குணவதி கொஞ்சுமொழியில்! 'இதோ' என்பான், அவனும் கொஞ்சுவதுபோல; எதற்கும் கதவைத் தாளிட்டுவை, என்று கூறிவிட்டு,கோடிவீதிக்கு, ஓட்டம் பெருநடையாகச் செல்லுவான். சாயாக் கடை திறந்திருக்கும், அங்கு அவன் செல்லான். நில்லான், நேரே அங்கு!!

கதவு தாளிட்டிருக்கும், இடுக்கின் வழியாகப் பார்த்தால் விளக்கொளி மினுக்கிடும்.

மெள்ளத் தட்டுவான், "பத்மா! பத்மா!"

பத்மா படுக்கையில்—தூக்கமல்ல. கோபம்!

கதவு தட்டுவான், அவள் கண் மூடுவாள்! இதழில் புன்னகை இருந்திடும்!!

பத்மா!பத்மா!—மெல்லிய குரலில்தான் கூப்பிட முடியும். அண்டை அயலார் காதில் விழக்கூடாது.

பத்மா, அவன் படும்பாடு அறிவாள். எனினும், தான் படும் பாடு அறியாமல் நடந்துகொள்வதற்குத் தண்டனை தருவதாக எண்ணிக்கொண்டு, நீண்ட நேரம் கதவு திறக்கவே கூடாது என்று துணிவாள்.

பத்மா! பத்மா! ஏ! பத்மா!

அவள் மனம் இளகிவிடும். இன்ப இரவு இப்படி சங்கடத்தோடு தொடங்கலாமா! அப்போதுதான் விழித்துக் கொண்டவள் போல. யாரது? என்பாள், 'நான் தான்......... பத்மா.. நான் தான்' என்கிறான். சாயா சாப்பிடக் கிளம்பியவன். "நான் தான் என்றால்" என்று கேட்டபடி, பூங்கொடி அசைந்தாடி வருகிறது, கதவு திறக்கிறது, கைவளை ஒலிக்கிறது, கன்னம் படாதபாடு படுகிறது.

"போதும் உங்களோட கொஞ்சுதலும், சரசமும்!"

"என்ன பத்மா! ஏன் ஒரு மாதிரியா இருக்கறே?"

"மணி என்ன இப்ப?"

"பத்து இருக்கும்"

"குணு கடியாரத்திலே பத்து—பத்மாவீட்டுக் கெடியாரம் இப்ப பன்னிரண்டு அடித்தது"

"இருக்காதே!"

"சரி, ஒரு அரையோ காலோ குறைவாக இருக்கட்டும்—ஆனா, ஏனுங்க இப்படி என் மனசைச் சங்கடப்படுத்தறிங்க. எவ்வளவு நேரம் விழிச்சிக்கிட்டு இருக்கறது—பத்து மணிக்காச்சும் வரப்படாதா."

"எப்படி, பத்மா, அவ்வளவு பொழுதோடு வரமுடியும். யாராவது பார்த்து விட்டால்.........."

"பார்த்துவிட்டால்தான் என்னவாம்! அட அடா! இந்தப் பாழாய்ப்போன பயம் ஏன் உங்களுக்கு இவ்வளவு இருக்கிறதோ?........"

"கண்டவர் கண்டபடி பேசுவார்களே என்கிற பயம் தான்.. ......"

"பயம்! பயம்! பயம்! செச்சே, இவ்வளவு கோழையாக இருக்கக் கூடாது—ஆண்பிள்ளைதானே நீங்கள்...பக்கத்து வீட்டு மக்கு இருக்கே, சொக்கு, உங்க சினேகிதர் சிதம்பரத்தோட ஜோடி.......அவர் எத்தனை மணிக்கு வந்தார் தெரியுமா, எட்டுக்கூட அடிக்கல்லே அவர் வருகிறபோது ...உங்களைப் போல பயந்து பாதிராத்திரிக்குத் திருடன் போலவா அவர் வருகிறார். அவருக்கு இருக்கிற தைரியம் ஏன் உங்களுக்கு வரக்கூடாது. பயந்து பயந்து சாகிறீர்களே—செச்சே இவ்வளவு கோழைத்தனம் கூடாது........"

இப்போது கனம் சுப்ரமணியனர் பத்மா பாணியில் பேசு, கிருர்; கதை நினைவிற்கு வந்ததும் எனக்கு இப்படித்தான் தோன்றிற்று. ராஜா சிதம்பரம் எவ்வளவு தைரியமாகக் கட்சி மாறினர். மக்கள் எக்கேடோ கெட்டும், எப்படி வேண்டுமானலும் பேசட்டும். காரியம் பெரிதே தவிர, கண்ணியம், நாணயம் இவைகளெல்லாம் அல்ல, என்று துணிந்து கதராடைக் கூடாரத்துக்குள் நுழைந்திருக்கிருர். இதைப் பார்க்கிறீர்களே, ஏன் உங்களுக்கு அந்தத் தைரியம், வீரம் வரவில்லை என்கிருர். வழிதவறி நடந்திடும் வாலிபனுக்கு விருந்தளித்து வசியப்படுத்த முனையும் வழுக்கி விழுந்த வனிதையின் பேச்சுப்போல, நாட்டில் மாபெரும் போராட்டம் நடாத்தி விடுதலைபெற்றுத் தந்ததென விருது படைத்த காங்கிரசில் கலந்து, கனமானவர் பேசுவது, ஆசை வெட்கமறியாதாமே!!

அமைச்சர் பெருமானின் அகராதிக்கு, நாம் மதிப்பளிக்க மறுக்கிரும்; அவருடைய அழைப்பு, ராஜா சிதம்பரம் போன்ருரோடு நிற்கட்டும். தமக்கென்று ஒரு கொள்கையும் அதிலே வெற்றிகாணப் பணியாற்ற வேண்டும் என்ற உறுதியும் திறமையும் பெற்ருேர்களிடம் இத்தகைய அழைப்பும் அங்கலாய்ப்பும்,நிந்தனையும் நையாண்டியும்வீசிப்பயனில்லை.

இதை ஓரளவுக்கு உணர்ந்து, அமைச்சர், கடைக் கண் காட்டுவதை நிறுத்திக் கொண்டு, கனலை உமிழ்ந்து பார்த்திருக்கிருர்; கனிமொழி கேட்டுச் சொக்கிடாத நிலை மட்டுமல்ல, கனலைக் கண்டு கலங்கிடாத உள்ளமும் நாம் பெற்றிருக்கிருேம் என்பதை, அவர் அறியார் போலும்! அவருடைய குருநாதரின் அக்கினியாஸ்திரங்களைக் கண்டு கெக்கலி செய்தவர்களிடம், இவர் தீக்குச்சியாஸ்திரங்களை வீசிப் பார்ப்பது விந்தைதான்!

அமைச்சர், நாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே காட்டப்பட்ட ஓர வஞ்சனை பற்றிக் கூறிவருவது கண்டு, பீதி அடைந்திருக்கிருர்.

இவர் மட்டுமல்ல, காங்கிரஸ் வட்டாரத்தை, ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் கூட்டங்கள், ஒரு கலக்கு கலக்கிவிட்டிருக்கிறது.

மந்திரிகளாம், மந்திரிகள்! சுளை சுளையாகப் பணம்மட்டும் வாங்குகிருர்கள் சம்பளமாக! துளியாவது சூடுசொரணை காணேம். சூருவளிபோலப் பிரசாரம் நடைபெறுகிறது, வடநாடு, தென்னுடு என்று! தடுத்திடும் ஆற்றல் காணேம்—நம்மைக் காணும்போது மட்டும், தாசானுதாசன் என்று தோத்தரிக்கிருர்கள்! ஏன் அந்தப் பிரிவினைக் கிளர்ச்சிக்காரருக்கு

எதிர்ப்பிரசாரம் செய்யக்கூடாது? இதைவிட வேறு என்ன வேலே இவர்களுக்கு? இதையும் செய்ய முடியவில்லையானல், இவர்களுக்கென்ன பட்டம், பதவி! என்று மேலிடம் இடிக்கும்போலத் தெரிகிறது—அந்த இடி தாங்காமல், இப்போது கனம்கள் 'வடநாடு, தென்னடு' பேதம் பேதமை, அதைப் போக்குவதே எமது கடமை என்று பேச ஆரம்பித்துள்ளனர்.

"புது டில்லியில் இருந்துகொண்டு மத்ய சர்க்கார் ஆட்சி செய்து வருகிறது. ஆகையால் தென்னடு முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறது என்று தென்னட்டில் பலத்த சந்தேகத்தைப் பலர் கிளப்பி வருகின்றனர். இதில் என்ன விசேஷமென்றால், சமீபகாலத்தில் நன்கு படித்தவர்கள்கூட இந்தப் பிரசாரத்தினுல் ஓரளவு பாதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது."

அழகேசனர் திருவாய் மலர்ந்தருளுகிருர் இதுபோல, குடந்தையில் இந்தத் திங்களில்-தமது திக்விஜயத்தின்போது. —மன்னிக்க வேண்டுகிறேன்-தீர்த்த யாத்திரையின்போது!!

*பலத்த சந்தேகம் பரவி இருக்கிறது.*

*நன்கு படித்தவர்கள்கூட இந்தப் பிரசாரத்தால் பாதிக்கப் பட்டிருக்கிருர்கள்.*

*தெரிகிறதா நிலைமை!!*

இந்தப் பிரசாரம் பரவாது 'பிசுபிசுத்து' விடும் என்று எண்ணிக் கொண்டிருந்தோம், இப்போது பார்த்தாலோ, இது பரவிக்கிடக்கிறது. நன்ருகப் படித்தவர்கள்கூட இதைஒப்புக் கொண்டு பேசுகிருர்கள்—என்பது அழகேசனரின் கருத்துரை. அம்மி நகருகிறது என்று பொருள்!! பாடுபட்டு வருகிருேம் பலன் தெரியத் தொடங்கிவிட்டது! அமைச்சர்கள் 'ஜல்லடம்' கட்டுகிருர்கள்—அவர்களை அந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறது, நமது பிரச்சாரம்!!

என்னதான் சமாதானம் சொல்லுங்கள், வடநாடுதான் ஆதிக்கம் செலுத்துகிறது.

இந்திய அரசியல் சட்டதிட்டமே வடநாட்டு ஆதிக்கத்துக்கு வழிவகுப்பதாகத்தானே அமைந்திருக்கிறது.

ஐந்தாண்டு திட்டத்தின் புள்ளிவிரம் கூறும் கதையைப் பார்த்தால், நன்ருகத் தெரிகிறதே தென்னடு புறக்கணிக்கப்படுவது.

இவ்விதமெல்லாம் படித்தவர்கள், அழகேசனர் காதுபடச் சொல்லியிருக்கிருர்கள் போலிருக்கிறது. இவர்களுக்கு மறுப்புரை, தெளிவுரைகூற முடியாமல் திண்டாடி இருக்கிருர் என்றும் தெரிகிறது—எனவேதான் திடுக்கிட்டுப்போன நிலையில் பேசுகிருர் திருவாளர் அழகேசனர், நன்ருப் படித்தவர்

களும்......! இப்படி எண்ணுகிறார்களே, என்று கூறி, ஆயா சப்படுகிறார். அடுத்த கட்டம் அச்சம்!! வேறென்னவாக இருக்க முடியும்!!

அமைச்சர் சுப்ரமணியம் திகைப்புக்கு இடமளிக்கவில்லை; தீ மிதிக்கிறார்! தென்னாடு ஐந்தாண்டுத் திட்டத்திலே புறக் கணிக்கப்பட்டது, ஓரவஞ்சனையாக நடத்தப்பட்டது என்ற புகாரை, நான் அதிகார பூர்வமாக மறுக்கிறேன், என் கிறார்!!

அமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறது, அதனால் மறுக்கி றார் என்பதுதான் இதற்குப் பொருள்!

அமைச்சர் அதிகாரம் இவருக்கு அளிக்கப்பட்டிருப்பதே இப்படி மறுப்புரைகள் பேசத்தான் என்பதும் நமக்குப் புரிகிறது.

ஆனால், மக்கள் அறிய விரும்புவது, இவருக்கு உள்ள அதிகாரம் எத்தகையது என்பது அல்ல; அவர்கள் இன்று நினைவுப் பரணையிலே, பல மாஜி அமைச்சர்களை அடுக்கி வைத்திருக்கிறார்கள்—வர்க்கியும் மாதவமேனனும், குருபாத மும் ஜோதியும், அவினாசியாரும் வேங்கடசாமியாரும், ராஜா ராமரும் பிறரும், அதிகாரம் பெற்றிருந்தவர்கள்—இன்று, ......பார்மோசாக்களிலே வாசம்! கனம் சுப்ரமணியம் அவர்கள் மட்டும் என்ன! கனமாவதற்கு முன்பு அவரை நாடு அறியாது; கனம் குறைந்ததும் நாடு நாடாது! எனவே, அவர் நமது குற்றச்சாட்டுகளை 'அதிகாரபூர்வமாக' மறுக்க முனையவேண்டாம். நமக்கு நல்லறிவு கொளுத்தவா வது புள்ளி விவரம் காட்டி மறுக்க முன்வரட்டும்! வக்கு ஏது அதற்கு? திருச்சிக் கூட்டத்துச் சுப்பிரமணியனாரை, பெரிய நாயக்கன்பாளையத்தில் பேசிய சுப்ரமணியனார், இழித்தும் பழித்தும், என்னே இச்சிறுமதி! ஏனோ இந்தக் கெடுமதி! இங் கொன்று அங்கொன்றா? உள்ளொன்று புறமொன்றா?—என்று இடித்து இடித்துக் கேட்பாரே!

ஒரு அநீதியும் இழைக்கப்படவில்லை என்று திருச்சியில் பேசிய திருவாய், ஏன் பெரியநாயக்கன்பாளையத்திலே, வேறு விதமாக மென்றது என்று அறிய நாட்டார் விரும்பு கிறார்கள். அங்கு அவர்,

வடநாடு சென்றறியாதவர்கள்தான், இப்படிப் பேசு கிறார்கள் என்று பேசி, நம்மை நிந்திப்பதாக எண்ணிக் கொண்ட இவரை ஒத்த நிலையிலுள்ள பலரைப் பழித்துப் பேசுகிறார்.

வடநாடு செல்கிறார், இவர்; அறிவோம்: காவடி தூக் கிடும் கனம் செல்லவேண்டும் அடிக்கடி, அறிந்திருக்கிறோம்.

வடநாடு நாம் சென்றறியோம் என்று பேசி, தமது ஞான சூன்யத்தைக் காட்டிக் கொள்ளட்டும், குறுக்கிடவில்லை: ஆனால் நாம் போனதில்லை என்றே வைத்துக்கொள்வோம், அம்புஜம் அம்மையாரென்ன, அனுமந்தையா என்ன, கேசவ மேனன், அன்று மஸ்கரினீஸ், சுதேசமித்திரன் ஆசிரியர் சீனுவாசனென்ன, இவர்களெல்லாம் கண்டித்திருக்கிறார்களே வடநாட்டு ஆதிக்கத்தை - அமைச்சர் அப்போதெல்லாம், ஏன் வாயடைத்துக் கிடந்தார்!!

> "தொழில் முறையில் சென்னை மாகாணம் பின் தங்கிய நிலையிலிருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எந்த அளவுக்கு இந்திய அரசாங்கத்தின் கவனத்தைத் தென்பகுதி பெறவேண்டுமோ அந்த அளவுக்குப் பெறவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை" என்று தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது தமிழ் நாடு 24—6—55-இல்!!

அமைச்சர் என்ன பதிலளிக்கிறார் இதற்கு!! அடுக்கடுக்காக ஆதாரங்களைக் கொட்டிக் குவித்துக் காட்டி வருகிறோம். எதை மறுத்தார் — எதை மறுத்திட முடியும்? நாள் தவறாமல் வந்த வண்ணமிருக்கிறதே, நன்றாகப் படித்தவர்களையும் கவரும் வகையில்! எப்படி இதனைத் தடுத்திடப் போகிறார் வாய்ப்பறை கொண்டு ஊர்ப்பகை தேடிக்கொள்ளும் இந்த உத்தமர்!

காரமான ஒரு சிறு துண்டு தருகிறேன்—இப்போதுதான் பறித்தெடுத்தது அமைச்சர் பதவியைச்சுவைத்திடும் வாயால் இதையும் சிறிதளவு சுவைத்துப் பார்க்க வேண்டுகிறேன்.

இங்கு, மிளகாய் உற்பத்தி அதிகமாகிச் சரக்குத் தேங்கிக் கிடக்கிறது.

இதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடும் அனுமதி டில்லிதான் தரவேண்டும்! ஆதிக்கம் அவ்விதம் அமைக்கப் பட்டிருக்கிறது.

மிளகாய்க்கு மட்டுமல்ல, எதற்கும் இதேதான் நிலைமை.

மிளகாயைப் பொறுத்த மட்டில் இங்கு சரக்குக் குவிந்து கிடக்கிறது, வெளிநாடுகளுக்கு அனுப்பும் அளவு டில்லி நிர்ணயித்திருப்பது போதுமானதாக இல்லாததால்.

எனவே, டில்லி பாதுஷாக்களே! அருள் கூர்ந்து, மிளகாய் ஏற்றுமதியின் அளவைச் சற்றே அதிகப்படுத்தித் தருவீராக! —என்று சென்னை வர்த்தக சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்ற செய்தி, அமைச்சர் தீப்பொறி பறக்கத் திருச்சியில் பேசிக்கொண்டிருக்கும்போது வெளிவருகிறது. ஜூன் 21 தேதிய பத்திரிகைகளைப் பார்க்கலாம்—தேசிய இதழ்களையே!!

தென்னாட்டின்மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதற்கு இது சான்று அல்லவா!

வடநாட்டு ஆதிக்கம் இருப்பது மட்டுமல்ல, இந்தச் செய்தி மூலம் தெரிவது.

வர்த்தக சபை கூறுகிறது. இங்கிருந்து மிளகாய் வெளி ராஜ்யங்களுக்கு (வடக்கே உள்ள ராஜ்யங்கள் சென்று அங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.

தம்பி, தெரிகிறதா இதிலே காணப்படும் அக்ரமம்!

வெளிநாட்டுக்கு, மிளகாய் நாம் நேராக அனுப்ப முடியாது; டில்லி அனுமதிக்க வேண்டும்.

டில்லியோ, மிகக் குறைந்த அளவுதான் ஏற்றுமதிசெய்யு அனுமதி அளிக்கிறது.

இங்கே சரக்குத் தேங்கிவிடுகிறது.

தேங்கிக் கிடக்கும் சரக்கை, வடநாட்டு ராஜ்யங்கள் இங்கிருந்து தருவித்துக் கொள்கின்றன.

அங்ஙனம் தருவித்திடும் சரக்கை, அந்த ராஜ்யங்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இலாபத்தை அனுபவிக்கின்றன.

"அனுகூலம் இங்குள்ள உற்பத்தியாளருக்கோ வியாபாரிக்கோ கிடைப்பதில்லை." என்று வர்த்தக சபை தெரிவிக்கிறது, நாசுக்காக. பச்சையாகக் கூறுவதானால், இங்குள்ள விவசாயி வயிற்றிலும், வியாபாரியின் வாயிலும் அடித்து, வடநாடு மிளகாய் ஏற்றுமதி மூலம் இலாபம் பெறுகிறது, என்பது தான்!

இதற்கு என்ன பெயரிடுவது—பாரத்வர்ஷத்தின் விரிந்த பரந்த மனப்பான்மை என்றா?—நேரு சர்க்காரின் நேர்மை என்றா?—அல்லது அமைச்சர் பதவியை சுப்பிரமணியனார்கள் ஆண்டு அனுபவிப்பதற்காக, நாட்டு மக்கள் தரும் 'மூறிப் பணம்' என்பதா—என்ன பெயரிடச் சொல்கிறார் அமைச்சர்—எப்படி இந்த அக்ரமத்தைச் சகித்துக்கொள்ள முடியுமென்கிறார். வடநாடு தென்னாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தாமலிருந்தால், இந்த அநீதிக்கு இடம் ஏது?

மிளகாய் பற்றிய சம்பவம் காரம் அதிகம் கொடுத்திடும்; 'கனம்' தாங்கமாட்டார். எனவே, தம்பி, அவருக்குச் சிறிது ருசியும் பசையும் உள்ள பண்டம் குறித்த சம்பவத்தைத் தருவோம்.

பஞ்சாப், ராஜஸ்தான் பகுதிகளிலிருந்து, இங்கு, பருப்பு நவதானியம் தருவிக்கப்பட்டு வருகிறது. தம்பி! இதற்கு இரயில்வே வாகன்கள் போதுமான அளவு கிடைப்பதில்லை. ஏன்? வாகன்களின் அளவு குறித்து அனுமதி அளித்திடும்

அதிகாரம் அங்கே இருக்கிறது—டில்லியில்! இதனால் போது மான அளவு வாகன்கள் கிடைக்காமல், திகைப்பும் பொருள் இழப்பும் ஏற்படுகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்பு அங்கு வாங்கி வைக்கப்பட்டுள்ள சரக்கு, வாகன்கள் கிடைக்காததால், பஞ்சாபிலும் ராஜஸ்தானிலும் கிடக்கின்றன—வெயிலும் மழையும், எலியும் பிறவும் பண்டத்தைப் பாழாக்குகின்றன—இங்கு மார்க்கட்டில் விலை சூடு பிடிக்கிறது, அங்கே வாங்கிய சரக்கு, முடமாகிக் கிடக்கிறது, ஏன் தம்பி! இத்தநிலை வரவேண்டும்? வடநாடு பார்த்து வைப்பதுதான் சட்டம், திட்டம் என்று இருப்பதால்தானே, வாகன் கிடைக்குமா என்று இங்குள்ளவர்கள் தவம் கிடக்கவேண்டி வருகிறது, வரம் தாருமய்யே என்று தென்னிந்திய வர்த்தக சங்கம் அறிக்கை மூலம் இறைஞ்சுகிறது டில்லியை! ஜூன் 21-ஆம் நாள் இதழில் இதையும் காணலாம்.

அக்ரமம், இன்னும் வெளிப்படையாகவே தெரிகிறது தம்பி, அந்த அறிக்கையில்.

> பம்பாய்—கல்கத்தாவுக்கு மட்டும் வாகன்கள் தேவையான அளவு ஒதுக்கப்பட்டு சென்னை புறக்கணிக்கப்படுகிறது என்றும் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

பதவியைச் சுவைத்திடும் மகிழ்ச்சியில், 'கனம்' இங்கு நம் மீது காய்கிறார். பாய்கிறார்!

தம்பி! 'கனம்' சைவரோ, சுவையும் சத்தும் தேவை என்பதற்காக 'அன்னிய பதார்த்தம்' சாப்பிடுகிறவரோ, எனக்குத் தெரியாது– சைவராக இருந்தால் சிறிது நெடியாக இருக்கும்; இல்லையானால் நாவில் நீர் ஊறும், இப்போது தரப்போகும் சம்பவத்தைக் கவனித்தால்.

ராட்டு என்கிறார்கள்—இரு என்பார்கள்—அந்தக் கடற்கனி ஏராளமாகப் பர்மாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது, திருவிதாங்கூர் கொச்சிப் பகுதியிலிருந்து, பெரும் அளவில். இதை நம்பி வாழும் மீனவர்கள் ஏராளம்—வியாபாரிகளும் உளர். இப்போது பர்மா சர்க்கார், இதற்கான அனுமதி வழங்கும் முறையிலே நட்டுத் திட்டம் கடுமையாக ஏற்படுத்திவிட்டிருக்கிறது; இந்த ஏற்றுமதி சிதைந்துவிட்டது. இதன் பயனாக இலட்சக்கணக்கான சிறியதல்ல குடும்பங்கள் அல்லற்படுகின்றன. பிரச்சினை சிறியதல்ல தம்பி! பண்டம் வேண்டுமானால், சாதாரணம் என்பர். எட்டு இலட்சம் மீனவர்களின் வாழ்வு பாதிக்கப்பட்டிருக்கிறது. மூன்று கோடி ரூபாய் பெருமானமுள்ள பண்டம் தேங்கிக் கிடக்கிறது. அஜீத் பிரசாத் ஜெயின் எனும் வடநாட்டு மந்திரியிடம்தான் முறையிட்டுக்கொள்ள வேண்டி

இருக்கிறது. பர்மா போன்ற வெளிநாட்டுச் சர்க்காரிடம் பேசவும், வசதி வாய்ப்பு, சலுகை உரிமை இவைகளைப் பெற வும் இங்கே உள்ள அமைச்சர் அவைக்கு அதிகாரம் ஏது? எல்லாம் டில்லியப்பன்தானே! எதற்கும் டில்லியப்பன் துணை யும் தயவும் இருந்தால்தான் நடக்கும். எனவே, அஜீத் பிரசாரத்துக்கு விண்ணப்பம் அனுப்பப்படுகிறது, ''ஐயனே! மீனவரைப் பாரீர்! அவர் குறை தீர்த்திட வாரீர்! பட்டினி யால் வாடுகிறோம், பண்டம் பாழாகிறது, பிழைப்பிலே மண் விழுகிறது'' என்று கெஞ்சுகிறார்கள். ''அப்படியா, உமக் குற்ற குறை பற்றி நாம் இனி எண்ணிப் பார்த்திடுவோம். எமது அண்டை நாடாம் பர்மாவின் இந்தப் போக்குக்கு உள்ள காரணம் யாவை என ஆராய்ந்த பின், யாது செய் திடல் முறை என்பது பற்றி எண்ணித் துணிவோம்!'' என்று பேசுகிறார் அஜீத்! அவரா பேசுகிறார், வடநாட்டு ஆதிக்கம் பேசுகிறது!! திருச்சியில்பாருங்கள், திரிலோகமும் புகழும் சுந்தரன்! வீரன்! சூரன்! யானே'' என்று கனம் பாடுகிறார்.

ராஜா சிதம்பரனார்,

''ஆமாம்! இதை அறியேன் முன்னாலே.

ஆகவே என் பிழை பொறுத்து ஆதரிக்க வருவீர், ஐயே!'' என்று 'ட்யூட்' பாடுகிறார்!

செக்கிழுத்தார் சிதம்பரனார் என்ற நெஞ்சை நெக்குருகச் செய்யும் சேதியை எடுத்துச் சொல்லிச் சொல்லி, பெரும் பலன் கண்டனர் காங்கிரசார். ''கப்பலோட்டிய தமிழன்'' வாழ்க்கைக் கலம் சுக்கு நூறாயிற்று. அந்தச் சோகக் காதை யைக் கூறிக்கூறி, இன்று அரசியல் உல்லாசப் படகினிலே ஒய்யாரமாகச் செல்கின்றனர் பலர்! இதோ கேள், தம்பி, ஒரு கப்பலின் கதை கூறுகிறேன்.

சென்னை—ரங்கூன் செல்லும் கப்பலொன்று, சிந்தியா கம்பெனியார் நடத்தி வந்தனர்.

முன்பு வெள்ளைக்காரக் கம்பெனி நடத்திவந்த தொழில், சுதேசி இயக்க தத்துவம் காரணமாக, சிந்தியாவுக்குக் கிடைத்தது.

சிந்தியா கப்பல்விட ஆரம்பித்ததும், வெள்ளைக்காரக் கம்பெனி விலகிக்கொண்டது.

இருபது நாட்களுக்கு ஒரு முறை சிந்தியா கப்பல் செல்லும்.

இதிலே இங்கிருந்து, ஏழை எளிய மக்களே ஏராளமாகச் செல்வர்—கட்டணம் அதற்குத் தகுந்தபடி இருந்து வந்தது.

பர்மாவுக்கு இங்கிருந்து பண்டங்கள் போகும்.

பர்மாவிலிருந்து தேக்கு முதலிய பண்டங்கள் இங்குவரும்.

மொத்தத்தில், தென்னாட்டவருக்கு வசதியானது இந்தக் கப்பல் போக்குவரத்து.

நஷ்டம் என்று காரணம் காட்டியும், கப்பல் பழசு பழுதாகிவிட்டது, புதுப்பிக்கப் பெரும் பொருள் செலவாகும், என்று கூறியும், சிந்தியா இந்போது இந்தக் கப்பலை நிறுத்தி விட்டது.

ஏழைக்கு இடி! சென்னை-ரங்கூன் வியாபாரத் தொடர்புக்குத் தாக்குதல் — கண்டனம் கிளம்பி இருக்கிறது.

இனி, சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குக் கப்பலில் சென்று, அங்கிருந்து பர்மாவுக்குக் கப்பல் தேட வேண்டும்.

அந்தக் கப்பலில், ஏழைகளுக்கான 'மேல் தட்டு' பிரயாணவசதி மலிவான கட்டண வசதி—அதிகம் கிடையாது.

இப்போது செலவாவது போல இரட்டிப்புச் செலவாகும்.

பண்டங்களை அனுப்புவதிலும், பாரம் ஏறும்.

பாரம் ஏறினால், வடக்கே வங்கம், வங்கத்துக்கு அருகே உள்ள இடங்களிலிருந்து கிளம்பும்சரக்குடன், தென்னகத்துச் சரக்கு போட்டியிட்டுச் சமாளிக்க முடியாது.

இவ்வளவு இன்னல் இருக்கிறது! ஏன் என்று கேட்கவோ, சிந்தியா போனால் என்ன, இதோ ஒரு விந்தியா என்று கூறிக் காரியமாற்றவோ, சென்னையால் முடியாது! டில்லி கண் திறக்க வேண்டும்!

> நஷ்டஈடு தந்து சிந்தியாவைத் தொடர்ந்து கப்பலை நடத்தச் சொல்லலாம்.
>
> புதிதாகக் கப்பல் உதவலாம், அல்லது பழுது பார்க்க வசதி செய்து தரலாம்.
>
> எதையாவது இந்திய சர்க்கார் செய்ய வேண்டும்.

*தினமணியின்* அழுகுரல் கேட்கிறது, இது போல, ஜூன் 23-ல். ஏன் சிதம்பரனாரின் கண்ணீரும் செந்நீரும் சிந்திப் புனித புரியாக்கப்பட்டுள்ள தென்னகத்துக்கு, அந்த அவல நிலை, என்று நாம் கேட்கிறோம்? வடநாடு தென்னாட்டை அடிமைப்படுத்திற்று? யார் சொன்னது? இதோ என்னைப் பாருங்கள், என்று கேட்கிறார். அமைச்சர் சுப்பிரமணியனார், "பார்க்கிறேன்! பெருமூச்சு எறிகிறேன்! பாவியேன் இந்தப் 'பரிசு' கிடைக்குமா கிடைக்குமா என்று ஏங்கித் தவிக்கிறேன்! கனமாகும் காலத்தை, கடவுளே! சீக்கிரம் தாருமே" என்று மலைபோன்ற உடலை வில்போல வளைத்தபடி, வரம் கேட்கிறார், வாங்கிய கடனைத் திருப்பித் தராமல் 'இன்சால்வென்ட்' போட்டிடும் போக்கில், தேர்தலின்போது மக்களிடம் அளித்திட்ட வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிட்டு

விட்டு, சேற்றை வாரியும் நம்மீது வீசிட முற்பட்டிருக்கும் ராஜா சிதம்பரனார்! அந்தச் சிதம்பரனார் பிறந்த அதே நாட்டில் இப்படியும் ஒரு சிதம்பரனார்!

தம்பி! நமது கழகத்துக்கு நாட்டிலே வளர்ந்து வரும் செல்வாக்குக் கண்டு, ரோஷம் பொங்கி இப்படிப் பேசுகிறார் போலிருக்கிறது இந்த 'கனம்'—ஒப்புக்கொள்ள மறுக்கிறாய்—துவக்கத்திலேயே தான் சொல்லிவிட்டாயே, காரணம் எனக்கும் தெரிந்ததுதானே—ரோஷக்காரராக இருந்திருந்தால் இவர் ஆச்சாரியாருடைய தொண்டரடிப்பொடி ஆழ்வாராக இருந்தபோது புகுத்திப் போற்றிப் பாராட்டிய குலதர்மக் கல்வித் திட்டத்தை, காமராஜர் கட்டளையிட்டதும் குழிதோண்டிப் புதைத்துவிட்டுச் சுடலைக் காசுபோலப் பதவியைப் பெற்றுக்கொண்டிருப்பாரா? "என் திட்டம் இல்லையா. அப்படியானால் நான் பதவியில் இரேன். நான் ரோஷக்காரன், கொங்கு வேளாளர் குடிப்பிறந்த எவரும், இப்படிக் குட்டக் குட்டக் குனிந்து கொடுத்து, எட்டுக் குட்டுக்கு ஆறணா எடு, ஆறுறு முப்பத்தாறு இரண்டேகால் ரூபா, என்று கேட்கும் போக்கில் இருக்கமாட்டார்கள். அதற்கு வேறு ஆளைப் பாருமய்யா. நான் இதோ பதவியை விட்டுப் போகிறேன். கோர்ட் அழைக்கிறது, கொங்கு நாடு அழைக்கிறது, மானம் கட்டளையிடுகிறது, ரோஷம் குத்திக் குடைகிறது"—என்று கூறியல்லவா, வெளி ஏறியிருந்திருக்க வேண்டும். மந்திரியாகத்தானே இருக்கிறார்.

"அவர் கட்டிய தாலியை இதோ அறுத்தெறிந்துவிட்டேன், சுவரேறிக் குதித்து வந்த சுந்தரனே! கட்டுதாலி உன் கையாலே! அதற்கும் விருப்பம் இல்லையேல், அதுவும் வேண்டாம், வேளைக்குச் சோறு, சாயம் போகாச் சேலை, சாயந்திரத்தில் மல்லி, சாய்ந்துகொள்ள மெத்தை..." என்று பட்டியல் கூறிடும் கண்வெட்டுக்காரி, மன்றம் ஏறிவாழும் வழி பற்றிப் பேசிடுவதில்லை; அமைச்சரல்லவா, பேசுகிறார்! பேசட்டும், தம்பி! பேசட்டும்! பூர்ணகும்பம், அர்ச்சகர் சங்க வரவேற்பு, நிலப்பிரபுவின் விருந்துபசாரம். இது கூடவா, பேசக் கூடாது? பேசட்டும் தம்பி, பேசட்டும். நமது வேலையை இந்தப் பேச்சும் ஏச்சும், துளியும் பாதிக்காது.

அன்புள்ள,

3—7—1955

அண்ணாதுரை

கடிதம் : 9

# குருபீடம்

*தோழர் என்.வி. நடராசன் அவர்களின் காங்கிரஸ் வாழ்க்கை—காங்கிரசில் புதியதோர் நுழைவு—செட்டி நாட்டு அரசர்.*

தம்பி,

வடநாட்டு ஆதிக்க ஒழிப்புக்கான காரணங்களை நான் விளக்கி எழுதியதை, பண்புள்ள காங்கிரஸ் நண்பர்களுக்குப் படித்துக் காட்டியதாக எழுதியிருப்பது கண்டு, மகிழ்கிறேன். அவர்களிடம், நீ படித்துக் காட்டியபோது, நிச்சயமாக அவர்கள் பெருமூச்செறிந்திருப்பார்கள்—அவர்களால் இப்போதைக்கு வேறெதுவும் செய்யமுடியாது. இன்னமும் பண்டிதர் ஊட்டும் மயக்கம் வேலை செய்கிறது. அவர்களாலே அவ்வளவு சுலபத்தில், எளிதாக அந்தமயக்கத்திலிருந்து விடுபட முடியாது. மெள்ள மெள்ளத்தான் உண்மை அவர்கள் உள்ளத்திலே நுழையும். அதுவரையில் நமக்குத்தான் பொறுமை வேண்டும். நமக்கு நமது கொள்கையில் திடமான நம்பிக்கை இருக்கும் போது பயமென்ன? எப்படியும் இன்றுமாற்று முகாமில் உள்ளவர்களிலேயே பலர், நம்மோடு சேரும் நாள் வரத்தான் போகிறது! உனக்கு நமது நண்பர், ஓயாதுஉழைக்கும் என்.வி.நடராசன் தெரியுமல்லவா! அவரை என்ன வென்று எண்ணிக் கொண்டாய்! ! ஏ! அப்பா! அதி தீவிரக்காங்கிரஸ் காரராச்சே! சண்டமாருதச் சிங்கம் சத்தியமூர்த்தியின் பிரத்யேகப் பயிற்சிக் கூடத்தில் பல ஆண்டுக்காலம் இருந்தவர்! சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிலே உறுப்பினர் எதிர்கால கார்ப்பரேஷன் மெம்பர் என்றும், ஒருசான்சு அடித்தால் எம்.எல்.ஏ ஆகலாம் என்றும் கூறி வந்தனர்—சென்னையில் எங்கு பார்த்தாலும் இந்த 'எலும்பு மனிதர்' காங்கிரசல்லாத கட்சிகளின்மீது கண்டனம் பொழிவார்! வசை மொழியால் என்னை அர்ச்சிப்பதில் அவருக்கு அப்போது அலாதி ஆசை!! நான் கார்ப்பரேஷன் தேர்தலில் ஈடுபட்டபோது என்னைத் தோற்கடிக்க, முழுமூச்சாக வேலை செய்தவர். அப்போதெல்லாம், அவரிடம் 'நாலாம் தமிழ்' நடமாடும்! நாலாம் தமிழ் என்றால், தெரியவில்லையா, இயல், இசை, நாடகம்—முத்தமிழ்! வசை, நாலாம் தமிழ்!! என்ன அப்படி பிரத்யேகப்பெயரிட்டு அழைக்க வேண்டிய அளவுக்கு வசை இருந்தது, என்கிறாயா

கேள், தம்பி; சொல்கிறேன்! நீ, எத்தனையோ விபூதி வில்வங்கள் ஏசிப் பேசக் கேட்டிருப்பாய், இதுபோலக் கேட்டதுண்டா சொல், பார்ப்போம்.

"நெஞ்சிலே இருக்கிற மஞ்சா சோறு வெளியே வரும்—ஆமாம்."

இதற்கு நாலாம் தமிழ் என்று தனிச் சிறப்பு அளிக்காமலிருக்கலாமா, சொல்லு.

பொருள் என்ன தெரியுமோ இதற்கு—ஒரு தாக்குத் தாக்கியதும் கிறுகிறு என்று தலைசுற்றி, வாந்தி எடுக்க வேண்டி நேரிடும்—அப்போது உண்ட சாதம் மஞ்சள் மஞ்சளாக வெளியே வரும்! இது தான் பொருள்!

பேசினது—நம்ம நடராசன்! எனக்குத்தான் இந்த அர்ச்சனை! தேர்தல் காலம்! தேச பக்தி அவருக்குத் தலையில் ஏராளமாக! தூபம் போட சத்திய மூர்த்திகள்; எனவே நாலாம் தமிழைத் தாராளமாகப் பொழிந்தார்; எனக்கு அவர் எப்படி அந்த நடையை இப்போது மறந்துவிட்டார் என்று கூடச் சில சமயங்களிலே ஆச்சரியமாக இருப்பதுண்டு.

நடை இது; உடை கதர்! படையும் உண்டு. மாலைக் கலகத்துக்கு ஆறணு; இரவுக் கலகத்துக்கு எட்டணு; நோட்டீசைக் கிழிக்க ஒரு ரூபாய்; சாணிவீச இரண்டணு; கனைத்துக்காட்ட ஒரு அணு; முண்டா தட்ட மூன்றணு; மூலை முடுக்கிலே நின்று வம்புச் சண்டை போட மூன்று ரூபாய். இப்படி 'ரேட்' பேசிக் கொண்டு, பாரதமாதாவுக்குச் சேவை செய்யும் படை வீரர்கள் உண்டு! இத்தனைக்கும் எனக்கு அவர் அப்போதும் நண்பர் தான்! தொழிலாளர் இயக்கக் காரியத்தில் ஒன்றுகவே வேலை செய்வோம். உன்னிடம் உண்மையைச் சொல்வதிலே தவறு என்ன, ஆங்கிலத்திலே ஏதாவது தொழிலாளர் சங்கத்துக்குக் கடிதம் வந்துவிட்டால், என்னிடம் தான் கொண்டுவந்து காட்டுவார்!! காலையில் இது—மாலை வந்தாலோ 'போலோ பாரத்மாதாக்கீ' யாகி விடுவார்!

அப்படிப்பட்டவர் இன்று, எவ்வளவு அரும்பணியாற்றி வருகிருர், திராவிடர் இயக்கத்தில், என்பதைப் பார்க்கிருயல்லவா!

கட்டாய இந்தியை நுழைத்தார் ஆச்சாரியார்.

இந்தி எதிர்ப்புப் போர் துவங்கிற்று! நாம் பதருமல் பகை வளர்த்துக் கொள்ளாமல், தமிழ்ப் பண்பு கெடாமல், கொள்கை வழுவாமல், குறிக்கோள் மறவாமல், எதிர்ப்புக்கு அஞ்சாமல், பணியாற்றினேம்-காங்கிரஸ் வட்டாரத்திலேயே நமக்கு ஆதரவு அரும்பிற்று; நடராசன் போன்ற பல காங்கிரஸ் நண்பர்கள். நாங்களும் தமிழர்களே! எங்களுக்கும் தமி

மூர்வம் உண்டு! நாங்களும் இந்திக்கு அடிமையாக மாட்டோம்' என்று பேசினர்—முதலில் நம்மவர்களைச் சந்திக்கும் போது—பிறகு தங்களுக்குள்ளேயே—அதற்கும் பிறகு காங்கிரஸ் மேடைகளிலேயே!!

இந்த நான் மிகவும் ரசித்திருக்கிறேன்.

இந்தி எதிர்ப்பும் பேசும் காங்கிரஸ்காரர்களை அடக்கியாக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது, சத்தியமூர்த்திகளுக்கு.

சத்தியமூர்த்திகள் தடை விதித்தாலும் மீறி, தாய்மொழியைக் காக்கும் பணிபுரிந்தாகவேண்டும் என்ற கட்டம் வந்து விட்டது, நடராசன் போன்றோருக்கு.

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் இந்தப் பிரச்சினை கிளம்பிவிட்டது! நல்ல வார்த்தை சொல்லி நடராசனைக் கோட்டையில் பூட்டிவிடச் சத்தியமூர்த்தி திட்டமிட்டார்! தாய்மொழிப்பற்றுக்கு இடமளித்து விட்ட பிறகு, நடராசன் காங்கிரசின் கட்டுதிட்டத்தை உடைத்தெறிந்து விட்டு வெளி வந்து விடுவார் என்று எனக்கு நன்ருகத் தெரிந்து விட்டது.

எனவே, சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெறும் நாளே, நான், நமது நண்பர்கள், சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் நடத்தும் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில், காங்கிரசை விட்டு விலகிய என்.வி. நடராசன் பேசுவார் என்று துண்டு அறிக்கை அச்சிட்டு, காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடைபெறும் இடத்துக்கே நண்பர் கணேசன் மூலம் அனுப்பி விட்டேன்.

உள்ளே, கெஞ்சுதல், கொஞ்சுதல், மிரட்டல், சபித்தல் ஆகிய எல்லா ரசமான கட்டமும் நடந்தேறி, நடராசன் ராஜிநாமா செய்துவிட்டு வெளியே வந்தார்—அவரிடம் இந்த 'நோடீஸ்' தரப்பட்டது—'எப்படி இதற்குள் அச்சிட்டு விட்டீர்கள்' என்று கேட்டார்—இது காலையிலேயே அச்சாகிவிட்டது. இதுபோலத்தான் நடக்கும் என்று தெரிந்து அச்சிடப்பட்டது என்று கணேசன் கூற, நடராசன், அப்படியா? என்று கேட்டு விட்டு, நேரே, இந்தி எதிர்ப்புக் கூட்டத்துக்கு வந்தார். அன்று துவக்கப்பட்ட அரும்பணி, நாளாகவாக, தரமும் திறமும் வளரும் வகையில் நடைபெற்றவண்ணம் இருக்கிறது, எனவே தான் தம்பி, 'நான் சொல்வது, காங்கிரஸ் நண்பர்களிடம், நமது கொள்கையை எடுத்துக் கூறுவதிலே, பண்புவேண்டும் என்று. அவர்கள் இன்று கோபம் கொண்டவர்களாக இருக்கிருர்களென்ருல், நாம் இன்னும் அவர்கள் உள்ளத்தில் புகத்தக்க விதமாக, நமது கொள்கையை எடுத்துரைக்கவில்லை என்று தான் பொருள்! நடராசர்கள், எங்கும் இருக்கிருர்கள்!!

அவர்களை 'நம்மவர்'களாக்கிக் கொள்ளும்திறமை நமக்கெல்லாம் வளரவேண்டும்!! அவர்கள் எப்போதுமே எதிர் முகாமிலேயே இருந்து தீருவார்கள் என்று எண்ணி, அவர்களைக் கண்டதும் முகத்தைச் சுளித்துக் கொள்வதும், அவர்கள் உருட்டு விழி காட்டினுல் நாமும் அது போலாவதும் கூடாது. நாளாகவாக அவர்களுக்கு, காங்கிரஸ் இன்று யாருடைய கூடாரமாகி வருகிறது என்பது புரியத்தானே போகிறது! உழைக்க ஒரு கூட்டம், அரசியல் உல்லாச வாழ்வு நடாத்த வேருேர் கூட்டமல்லவா வந்துவிட்டது! தடியடியும் சிறைவாசமும், முத்து ராமலிங்கத் தேவருக்கு! மந்திரிப் பதவியும் அதனுல் கிடைக்கும் மதிப்பும், ராமநாதபுரம் ராஜாவுக்கு— அதாவது ராஜாவாக இருந்தவருக்கு!! பட்டேல் வருகிருர்— பணப்பை ஜாக்கிரதை!! என்று லட்சக்கணக்கில் எச்சரிக்கை நோடீஸ், அபாய அறிவிப்புத்தாட்களை அச்சிட்டு வழங்கிய வட்டி வேந்தர்கள், காங்கிரஸ் வட்டாரத்திலே இன்று வட்டமிடுகிருர்கள். உண்மை ஊழியம் செய்து, காங்கிரசை ஊராளும் கட்சியாக மாற்றி அமைத்த காங்கிரஸ்காரர்களுக்கு இந்தக் காட்சி, பெருமையும் பூரிப்புமா தரும் என்று எணணுகிருய்! அவர்களும் மனிதர்கள்தானே, தம்பி! மனம் படாத பாடு படத்தான் செய்யும்.

செட்டிநாட்டு அரசர் இன்று காங்கிரசுக்கு ஒரு செல்லப் பிள்ளையாக இருக்கிருர்! இது காங்கிரசின் வளர்ச்சியையா காட்டும்!! தியாகத் தழும்பேற்ற காங்கிரசார்களைப் பார்த்து, கேலி பேசும் கண்களல்லவா, செட்டி நாட்டரசருக்கு இருந்திடக் காண்கிருேம்! ஆளுங்கட்சிக்கு எந்நாளும் ஆதரவாளர் நாங்கள்—முன்பு வெள்ளையன் ஆண்டு வந்தான், வெண் சாமரம் வீசி நின்ருேம்.இடையே தமிழார்வம்ஓங்கி நின்றது, ஆட்சி தமிழரிடம் வந்து சேரும்போல் தோன்றிற்று, உடனே அவர்களோடு குலவினேம். செங்கோட்டையில் காங்கிரஸ் கொடி ஏறிற்று, உடனே எங்கள் கோட்டையிலும் மூவர்ணக் கொடி ஏற்றிவிட்டோம்—எப்போதும் ஆளவந்தாரின் ஆதரவாளர் நாங்கள் என்று தானே செட்டி நாட்டரசரின் புன்னகை பேசுகிறது. இது காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரியாதா!

கொடியைக் கரத்தில் ஏந்திக்கொண்டு, தமிழர் வாழ்க! இந்தி ஒழிக! என்று முழக்கமிட்டுக் கொண்டு ப்யூக்கும் செவர்லேயும் இருக்க, தங்கசாலைத் தெருவிலிருந்து,கடற்கரைவரையில் நடந்து வந்தார்,இன்றைய செட்டி நாட்டரசர், அன்று குமாரராஜா. நாமாவது அவரை ஓரளவுக்கு வேலை வாங்கினேம்—மணிமாடத்துக்குச் சொந்தக்காரர் அவர், எனினும் மணல்மேடுகளுக்கு இழுத்து வந்தோம்!வியர்வைஅரும்புமோ

என்று எண்ணிஞலே வெட்டிவேர் விசிறி கொண்டு வீசிட ஏழெட்டுபேர் எப்போதும் தயாராக இருந்தனர் அவருக்கு—கொட்டிடும் வியர்வையைத் துடைக்கவும் கூச்சப்பட்டுக் கொண்டு, கொடி பிடித்து ஊர்வலத்தில் நடந்தார் குமார ராஜா! நாம், குமாரராஜாவுடன் கூட்டுறவு வைத்துக் கொண்டதால், அவருக்கு ஏற்றபடி கொள்கையைக் குறுக்கிக் கொள்ளவில்லை, கொள்கையின் குணமும் மணமும் வளர்ந்தது—வளருகிறது—காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது, அவர் அந்தப் பக்கம் திரும்பினுர், அங்கு அழைப்புக் கிடைத்தது. சென்ருர், வென்ருர்; வென்ருர் என்ருல் உண்மைக் காங் கிரசைக் கொன்ருர் என்று பொருள்—நாமோ, இருந்தார், சென்ருர்; நாம் இலட்.சியபுரி நோக்கி நடைபோடுவோம், என்று தொடர்ந்து நமது பணியினை ஆற்றி வருகிரேம் காங்கிரஸ் நண்பர்களுக்கு இதெல்லாம் தெரியாமலா இருக் கும்! இவை தெரியாதது.போல இருக்கிருர்கள்—ஆனுல் நம்து கழகம் மக்கள் மன்றமாகி விட்டதையும், காங்கிரஸ் சிங்காரச் சீமான்களின் மாளிகையாகி விட்டதையும் அவர்கள் அறியா மலில்லை—அறிந்தோர் மனதிலே ஆயாசம் எழாமலில்லை! வெளியே காட்டிக் கொள்ளமாட்டார்கள்—அதுவும் கொஞ்ச காலம் வரையில் தான்!

தம்பி! சென்ற கிழமை, காங்கிரசின் உண்மை உழைப் பாளியின் உள்ளன்பைப் பெற்று உயர்இடத்தில் அமர்ந்துள்ள காமராஜரின் திருவுருவப்படத்தை, மத்திய சர்க்கார் மந்திரி டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் திறந்து வைத்து,பாராட்டுரை வழங்கியிருக்கிருர், என்ருேர் செய்தி வந்தது, பார்த்திருப் பாய். யார்,இந்த, டி.டி.கி.? காமராஜர் வனவாசம் செய்த போது உடன் இருந்தவரா? இல்லை! இல்லை! அப்போது சுக வாசம் செய்து கொண்டிருந்தவர்! சிறையில் தோழரோ? இல்லை! உப்புச் சத்தியாக்கிரகத்துக்குத் திட்டம் தீட்டிய தீரரோ? கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்ட கர்ம வீரரோ! அன்னியச் சாமான்களை பகிஷ்கரித்த ஆற்றல்மிக்க தேசபக்தரோ? இல்லை, தம்பி, இல்லை. சோப்புச் சீமான்; சொகுசான வாழ்க்கை நடத்தி வந்தவர், அன்னிய நாட்டு லக்சும்,விஞேலியாவும் அவருடைய கதர், கைராட்டை.காங் கிரசைத் தேர்தலிலே எதிர்த்து முறியடித்து, ஒரு முறை சென்னை சட்டசபையில் எதிர்க்கட்சியிலும் வீற்றிருந்தார். ஆகஸ்டுப் புரட்சி, செப்டம்பர் சத்யாக்கிரகம், எதிலும் அவர் ஈடுபட்டதில்லை.ஆனுல் இன்று,அவர் மத்திய சர்க்கார் மந்திரி யாளுர்! அவர் திருக்கரம் பட்டால் மதிப்பு, அவருடைய திரு வாயால் புகழுரை சொரிந்தால் பெருமை என்று கருதும்

வகையில் அவரைக்கொண்டு காமராஜரின் திருவுருவப்படத்தைத் திறக்கச் செய்தனர். அந்த நேரத்தில், அந்நாள் இந்நாள் நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் உள்ளம் கொண்ட உண்மைக் காங்கிஸ்காரர் வெட்கமும் வேதனையும் அடையாமலிருக்க முடியுமா? வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்கள்-உள்ளத்திலே வேதனை அரித்தபடிதான் இருக்கும். அவர்களெல்லாம், ஒரு கொள்கை புனிதமானது, திட்டம் தேவையானது, என்று உணரும் வரையில்தான் நம்மீது காய்வர், பாய்வர். ஆனால் நாம் எடுத்துரைக்கும் கொள்கை நியாயமானது, திட்டம் தேவையானது என்று உணர்ந்து விட்டால், நிச்சயமாக, நம்மைப்பின்னணியில் தள்ளிவிட்டு, முன்னணியில் நின்று, வீரப்போர் புரியக்கூடியவர்கள்-இதை அவர்களிடம் பேச நேரிடும் போதெல்லாம் மட்டுமல்ல, நம்மைப் புரிந்து கொள்ளாததால் அவர்கள் நம்மை ஏசும் போதெல்லாம்கூட நினைவிலே வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

மேடை தவறாமல் நம்மை நிந்தித்துத்தான் வருகிறார்கள்—ஐந்தாண்டு திட்டத்தை நாம் கண்டிப்பது அக்ரமம் என்று பேசத்தான் செய்கிறார்கள். ஆனால் குற்றாலத்திலேகூடி என்ன தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதைக் கவனித்தாயா, தம்பி. தென்னாட்டிலே சில பெரிய கனரகத் தொழிற்சாலைகளையாவது அமைத்தாக வேண்டும் என்று, வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்கள்.

"இப்படியாவது ஒரு தீர்மானம் போடாவிட்டால் மக்களின் மனம் எரிமலையாகும்."

"வடநாட்டாருக்கு, நாமும் விழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டியாக வேண்டும்."

"குட்டக் குட்ட குனிந்து கிடப்பது, அறிவுடைமையுமல்ல, ஆண்மையுமாகாது."

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் துரோகம் செய்தனர்-ஏமாற்றப்பட்டோம்-இரண்டாவது திட்டத்திலாவது நியாயம் கிடைக்கவேண்டும்"

"கழகக்காரர்கள் மானம்போகிற மாதிரிப் பேசுகிறார்கள்—அவர்கள் சொல்வதும் உண்மையாகத்தான் இருக்கிறது. வடநாடு, நம்மைக் கேவலமாகத்தான் நடத்துகிறது"

"கழகம் கிடக்கட்டும், சுதேசமித்திரன் கார்ட்டூனுக்கு என்ன சொல்கிறீர்கள்?"

"அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும்; தூங்குபவன் துடையில் கயிறு திரிக்கத்தான் செய்வார்கள்"

இதுபோலவும், இதைவிடக் கடுமையாகவும் பேசினவர்கள், எத்துணை பேரோ, யார் கண்டார்கள்.

*ஒரு தீர்மானம் போட்டாக வேண்டிய நிலைமை பிறந்திருக்கிறது—சாதாரணமொன்ற இதற்குப் பொருள்!*

குற்றுலத்துத் தீர்மானம், கண்களை இறுகமூடிக்கொண்டு, காதுகளையும் அடைத்துக் கொண்டு இருப்பதுபோலக் காணப்பட்டு வந்த காங்கிரஸ் நண்பர்கள், உண்மையில், நாம் கூறி வந்ததை மிகக் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள் என்பதையும், நம்மைக் கண்டித்துப் பேசியவர்கள், அதேபோது உள்ளூர வடநாட்டு வஞ்சனையைக் கண்டித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதையும்தானே, காட்டுகிறது. இல்லையானல், இப்படி, ஒரு தீர்மானம் தீட்டவேண்டிய அவசியமும் அவசரமும் என்ன வந்தது? தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற உண்மை உள்ளத்தை உறுத்துவதாலேதான், இரண்டாவது திட்டத்திலாவது நியாயம் கிடைக்கச் செய்யுங்கள் என்று கேட்கவேண்டி வந்தது இல்லையானல் வீரதீரமாக, வடநாடு தென்னாட்டுக்கு ஐந்தாண்டுத்திட்டத்தில் துரோகம் செய்தது என்று கூறுவது தேசத்துரோகம்—என்று கனல் கக்கிடும், தீர்மானம் நிறைவேற்றிவிட்டல்லவா மறு காரியம் பார்த்திருப்பார்கள்.

தம்பி! நம்மைவிட அடிக்கடி, வடநாடு போய் வருகிறவர்கள்தானே, காங்கிரஸ் தலைவர்கள்! அங்கே பொங்கிடும் வளமும், அதன் பயனுக ஓங்கிடும் கர்வமும் அவர்கள் காணுமலா இருக்கிறார்கள்! கண்டு, வெட்கமும் வேதனையும் கொண்டு, பிறகு, கட்சி கட்டு திட்டம் இவைகளை எண்ணி விம்முகிறார்கள்! வீறுகொண்டெழும் காலம் வெகு தொலைவில் என்று கருதாதே—விரைவிலே வரக்கூடும். நீயும் நானும், அவர்களுடைய இதயத்தைத் தொடும் வகையில், விஷய விளக்கம் தரவேணடும்.

*எங்களுக்கும் தெரியும்*—என்று ஆரம்பத்தில் ஆதீன கர்த்தா பாணியில் பேசுவர்.

*எங்களுக்கு மட்டும் தெரியாமலா இருக்கிறது* - என்று அன்பாகப் பிறகு கூறுவார்.

எங்களுக்குத் தெரியும். நாங்கள் இதற்காவன செய்வோம்—என்று உறுதி அளிக்க முன்வருவார்கள் அடுத்த கட்டத்தில்.

*நாம் ஒன்றுபட்டுக் கேட்டால்தான், வடநாடு வழிக்கு வரும்!*

கொஞ்சியது போதும்—இனி கிளர்ச்சிதான்!

மயிலே மயிலே இறகு போடென்றல் போடுமா!

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தையே ஒருகை பார்த்தோம்; இந்த மார்வாடி ஏகாபதித்யத்தை வீழ்த்துவதா முடியாத காரியம்!

*விழித்தெழுவீர் விடுதலைப் போரில் ஈடுபடுவீர்!*

*திராவிடநாடு திராவிடருக்கே!*

இவ்விதமெல்லாம், படிப்படியாகத்தான், பிரச்சினை உருவெடுக்கும்.

அந்த நம்பிக்கையுடன் பணியாற்ற வேண்டியது தான் நமது பொறுப்பு.

திருவாவடுதுறை ராஜரத்தினம் பாணி, தம்பி, உனக்குத் தெரியுமோ என்னமோ!

அவருடைய உள்ளத்தில் நன்றாக வாசிக்கவேண்டும் என்ற எண்ணம் பிறந்துவிட வேண்டும், பிறகு, கேளேன் அந்த நாத இன்பத்தை! வீணையும் பிடிலும், குழலும், ஷஞயும், கோட்டும் பிறவும் ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டு, வெளியே உலவி, கேட்போரின் மனமெல்லாம் இசைமயமாக்கி விடுகிறது. அவரிடம் உள்ள நாயனம் நமக்கு நல்ல இசை அமுது அளிக்க வேண்டுமானால், நமக்கு மகிழ்வளிக்க வேண்டும் என்று அவர் எண்ணினால்தானே! கால் ஆயிரம் தருகிறேன் காமபோதி வாசித்துக் களிப்பூட்டு; ஆயிரம் தருகிறேன், தோடி நடக்கட்டும்; மேலும் தருகிறேன், மோகனம் நடக்கட்டும், என்று கூறினால், இசையா கிடைக்கும்? காங்கிரசிலுள்ள உண்மை ஊழியர்கள், இதுபோலத்தான், அவர்களின் உள்ளம், நமது கோரிக்கைக்கு இடமளிக்கவேண்டும்—பிறகு பாரேன், அவர்களின் தீவிரத்தை! தீரத்தை! அந்த நிலையைப் பெற, நாம்தான், முறையாகப் பணியாற்ற வேண்டும்.

இழிமொழி, பழிச்சொல், ஈனத்தனமான தாக்குதல், இட்டுக்கட்டிப் பேசுவது, இல்லது புனைதல், ஏசல் வீசுதல், என்பன போன்ற எத்தகைய கணையும் நம்மை நிலை இழக்கச் செய்யக்கூடாது. இந்தப் பரிபக்குவம் நமக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்கள் இல்லாமற் போகவில்லை—இருந்து விட்டு வந்த இடத்தில் நுழைந்துகொண்டு, நோட்டம்பார்க்கும் நண்பர் வீசும் நரகல் நடை நமக்கு வேறு எதற்குப் பயன்படுகிறது என்று எண்ணுகிறாய்! இந்தப் பரிபக்குவம் பெறத்தான்! ஒரே கலத்தில் உண்டவர்கள் என்று சொல்லிக் கொள்ளத்தக்க அளவுக்கு உறவு இருந்த இடத்திலிருந்தே நித்த நித்தம், குறி தவறினாலும் கவலைப்படாமல், ஏசல் பாணங்கள் சரமாரியாகக் கிளம்புகிறது —துவக்கத்தில் தம்பி, உன் போன்றவர்களுக்குக் கோபமாகக்கூட இருந்தது இப்போது நாலு நாளைக்கு அவ்விதமான பாணம் கிளம்பாவிட்டால், ஐயோ பாவமே; என்ன உடம்புக்கு, என்று கேட்கும் பரிதாப உணர்ச்சி அல்லவா வருகிறது —அந்த தூற்றல் பாணங்களைப் பார்த்துப் பார்த்து பழகி

விட்ட நமக்கு, காங்கிரஸ் வட்டாரம் ஏவும் கண்டனக் கணை பிரமாதமானதாகத் தெரியக் காரணமில்லை. நம்மைப் புரிந்து கொள்ளாததால், காங்கிரஸ் வட்டாரம் கணைவிடுகிறது; நாம் பிரிந்துவிட்டதால் குருபீடம் கணைவிடுகிறது!! பொறுமை, அமைதி, கண்ணியம் எனும் அருங்குணத்தையும் பெறவும்; தூற்றுதலைத் தாங்கிக் கொள்ளும் மனத் திடத்தையும்; நோக்கத்தை மாற்ற முனைவோர் வீசும் நிந்தனையைப் பொருட்படுத்தலாகாது என்ற உள்ளப் பாங்கையும் நாம் பெற இப்போதும் குருபீடம் அருள் புரிகிறது!! இன்னும் நமக்கென்ன குறை!!

குருபீடத்தில் நாமெல்லாம் குற்றேவல் புரிந்துகொண்டு கேட்டறிந்த உபதேசத்தை மறவாமல், நாம் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்.

என்னைப் பொறுத்த வரையில், தம்பி! நான் அங்கு இருந்தபோது கிடைத்த பாடத்தைவிட, அரும்பெரும் பாடத்தை, இப்போது குருபீடத்திலிருந்து பெறுகிறேன். ஏசல் கணைகள் மூலம்-என் உள்ளம், தாங்கும் சக்தியைமிகத் திறம்படப் பெற்று வருகிறது. எனவேதான், என்னால் மாற்றுக் கட்சிக்காரரிடம் மனமாச்சரியம் துளியும் கொள்ளாமல், கொள்கைகளை எடுத்துச் சொல்லும் பக்குவம் நிரம்பத் தேவைப்படும் வகையான பணியாற்றும்படி, உன்னைக் கேட்டுக் கொள்ளமுடிகிறது; அண்ணனுக்குக்கிடைத்துள்ள மனப் பாங்கு, தம்பிக்கும் உண்டு என்ற நம்பிக்கையுடன்தான் இவ் விதம் கூறுகிறேன்.

அன்புள்ள,

அண்ணாதுரை

3—7—1955

# அங்கே பவனம் இங்கே படம்!

*பம்பாயில் பிரஹத் பாரதீய சமாஜம்—வெளிநாடுகளில் திராவிடர் நிலை—நம் நாட்டில் அகதிகள் உயர்நிலை.*

தம்பி,

ஆறடுக்கு மாடிகொண்ட மாளிகை எழும்பப் போகிறது—பன்னிரண்டு இலட்ச ரூபாய் செலவில்!

சர்க்காரின் திட்டங்களிலே ஒன்று போலும் என்று எண்ணிவிடாதே தம்பி! ஒரு சமாஜம் கட்டப்போகும் அரண்மனை இது. அரண்மனை மட்டுமல்ல, ஆராய்ச்சிக் கூடமுங் கூட!

*பிரஹத் பாரதீய சமாஜம்* என்பது இதன் பெயர்—இதன் பணி, வெளிநாடுகளிலே சென்று தங்கியுள்ள இந்தியர்களுக்கும் இடையே தொடர்பு, தோழமை ஏற்படுத்தி வைப்பது. இது மட்டுமல்லாமல், வெளிநாடு சென்றோரின் வரலாறு பற்றிய நுணுக்கங்கள், செல்லவேண்டிய காரணம் என்ன, சென்றபோது அடைந்த சிரமம் எப்படிப்பட்டது, சென்று அங்கு கண்ட அனுபவம் எத்தகையது என்பன போன்றவைகளைக் குறித்து ஆராய்ச்சிகள் நடத்தப்படும்.

இத்தகைய நேர்த்தியான நோக்கத்துக்காக, அண்ணாந்து பார்ப்போரின் கழுத்து வலி எடுக்கும் அளவு உயரமாக, அன்னிய நாட்டினர் பார்த்து ஆச்சரியப்படத் தக்கவகையில், சமாஜக் கட்டிடம் சமைக்கப் போகிறார்கள்.

மாளிகை அமைக்க 12 இலட்சம், அதிலே மற்ற வசதிகள், ஒரு படிப்பகம் உட்படக் காண மற்றோர் நாலு இலட்சம்.

இதற்கு நிதி குவிகிறது.

இந்திய சர்க்காரிடமிருந்து இரண்டு இலட்ச ரூபாய் நன்கொடை எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்தறிந்தால் போதாதா, நன்கொடை வாயு வேகம் என்கிறார்களே, அவ்விதம் வந்து சேரப்போகிறது.

*பம்பாயில்!*—இங்கா கட்டுவார்கள்! பம்பாயில்தான்.

கோடீஸ்வரர்களின் கோட்டத்தில்தானே, இத்தகைய கொலு மண்டபம் அமைக்க முடியும்; அமைக்கிறார்கள்.

இந்த பவனத்தில், வெளிநாட்டார் வந்து தங்க, வகை வகையான ஏற்பாடுகள்.

வெளியிலிருந்து இங்கு வரும் மாணவர்களுக்கு அறுசுவை உண்டி.

செவிச் சுவை உண்டு.

சிந்தனைக்கும் விருந்து தருவார்கள்—படிப்பக மூலம்.

இவைகளுக்கான நிதிதிரட்டும் ஏற்பாடு, விமரிசையாகத் துவக்கப்பட்டு வேகமாக வளர்ந்து, இப்போது வெற்றிக் கட்டத்தை நோக்கித் துரித நடைபோட்டுச் செல்கிறது.

*வெளிநாடுகளிலே வதியும் இந்தியர்கள்!*—என்ற சொற்றொடரைக் கவனித்தாயா, தம்பி. பொருள் எளிதாயிற்றே, இதை ஏன் 'கவனப்படுத்துகிறாய், என்று கேட்டுவிடாதே. பொருள் எளிதுதான், ஆனால் இதிலே புதை பொருளும்இருக்கிறது, அதைக் கண்டெடுப்பது அவ்வளவு எளிதல்ல.

இந்தியர்கள் என்ற பட்டியலில் நாமும் இருக்கிறோம்.

நம்மவர்கள் வெளிநாடுகளிலே இருக்கிறார்கள்—ஆமாம். பல இலட்சம்! வடக்கத்தியர்களும் வெளிநாடுகளிலே இருக்கிறார்கள். வெளிநாடுகளிலே சென்றுள்ளவர்களை, வடவர் திராவிடர் என்று இரு பிரிவாக்கிக் காட்டுவதற்குக் காரணமும் இருக்கிறது - அதிலே நாடு அறியவேண்டிய கருத்தும் நிச்சயமாக இருக்கிறது. வடவர் வெளிநாடுகள் சென்று வதிகிறார்கள்—திராவிடர் வெளிநாடு சென்று வதைபடுகிறார்கள். வெளிநாடு சென்றுள்ள வடவரில் பதினைன்கணு பாகம், முதலாளிகளாய், நிலச்சுவான்தார்களாய், ஆலைகளின் சொந்தக்காரர்களாய் வாழ்கிறார்கள்.

அவர்கள் சென்று வாழும் இடங்களிலே, அரசியல் சூத்திரக் கயிறுகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள்.

வெளிநாடு சென்றுள்ள வடவரிலும். கிழக்கு ஆப்பிரிக்கா மத்திய கிழக்கு நாடுகள் ஆகிய பகுதிகளிலே சென்று தங்கி, சீரும் செல்வாக்கும் பெற்றுள்ள வடவர்களுக்கு அங்கே உள்ள பிரச்சினை; சொத்துகள் வாங்க உரிமை தரப்படவேண்டும்; அரசியல் ஆதிக்கத்திலே கிடைக்கும் பங்கின் அளவு அதிகமாகிக்கொண்டிருக்க வேண்டும்; வேறு வேறு நாட்டவரிடமிருந்து கிளம்பக்கூடிய வியாபாரப் போட்டிகளை வேரறக் களைவதற்கு இந்திய சர்க்கார் தக்க திட்டம் தயாரித்துக் கொண்டு பணியாற்ற வேண்டும்; என்பவைகளாகும்.

கூலி போதவில்லை, கும்பி நிரம்பவில்லை, கொட்டும் குளிரைத் தாங்கிக் கொள்ளச் சக்தி இல்லை, கொடுக்கும் கசையடியால் பீறிட்டு வரும் குருதியைத் துடைக்கவும் நேரமில்லை, வேலையில் நிம்மதியுமில்லை, அது நிலைத்து இருக்கும் என்பதற்கும் உறுதி இல்லை,—இவைகளல்ல, பவனபுரியினருக்குள்ள பிரச்னைகள்.

இந்தப் பிரச்சினைகளெல்லாம் நம்மவர்களுக்கு—நாடாண்ட இனம் என்று கூறுகிறோமே, அந்தத் திராவிட மக்களுக்கு—வெளிநாடுகளிலே வாழ்பவர்களுக்கு அல்ல—வதைபடுவர்களுக்கு!

*பவனம் அமைகிறது, அவர்களுக்கு*
*படகு அழைக்கிறது, நம்மவர்களை!*
*பல்வேறு நாடுகளிலே பரங்கியர் போலாகி*
*விட்டுள்ளனர், அவர்கள்.*
*சென்ற இடமெங்கும் வறுமைச் செந்தேள்*
*கொட்டுகிறது, திராவிடரை.*

தேயிலைத் தோட்டம் அமைக்கிறார்கள், மோட்டார் பஸ்கள் நடத்துகிறார்கள், பல சரக்குக் கிடங்குகள் அமைக்கிறார்கள், அவர்கள்.

தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து, அட்டைக்கடி அரணைக்கடி பெற்று, ஆவி பிரியாதது ஒன்றுதான் பாக்கி என்று கூறத்தக்க அவல நிலையில் இருக்கிறார்கள், திராவிடர்!

ராஜாங்கத்திலே நாங்கள் ஏன் நடு நாயகர்களாக்கப் படக் கூடாது? என்று கேட்டு, புருவத்தை நெரித்துக் காட்டுகிறார்கள், அவர்கள்.

ரப்பர் பாலை எடுத்துவிட்டு, இராத்தூக்கமின்றி, கைகளைப் பிசைந்தும், கண்களைக் கசக்கிகொண்டும், கலங்கி நிற்கிறார்கள், திராவிட மக்கள்.

அவர்கள் எதிர் காலத்தை மேலும் எழிலுள்ளதாகவும், நிலையை ஏற்றமுள்ளதாகவும் செய்ய, பவனம்!

நம்மவர்களுக்கு, இந்த ஒரு வேளைக் கஞ்சியும் ஏன் தரவேண்டும் என்று சிங்களம் பேசிக்கொண்டு, சிங்கக் கொடிசர்க்கார் படகுகளைக் காட்டுகிறது, ஏறிச்செல்—எங்கள் நாட்டிலே இடமில்லை, போ, போ! என்று.

இவர்களுக்கு, ஒரு குடில் இல்லை இங்கு.

அவர்களுக்காக அககறை காட்டும் அன்பர் குழாம், ஆறடுக்கு மாடி கட்டுகிறது—ஆனந்தத்துடன் சிந்து பாடுகிறது!

*ஏன்?*

***அவர்கள், ஆளும் இனத்தினர்! திராவிடர், அடிமை இனத்தவராக்கப்பட்டுவிட்டனர்!***

வேங்கைக் காட்டிலேதான் நரி ஆட்சி நடக்கிறதே—நரிக்குத்தானே பிறகு, எல்லா வைபவமும் கிடைக்கமுடியும்.

திராவிடர்கள் இலங்கையில், பர்மாவில், மலாய் நாட்டில், எங்கும் இன்று இடர்ப்பட்டு, இழிமொழிகளைத் தாங்கிக் கொண்டு உள்ளனர். அவர்களின் வாழ்வு துலங்க, வகை என்ன, வழி என்ன என்பதற்கு, ஓர் அறிவியற்கூடம் இல்லை, ஆற்றல் அரங்கு காணேம். அங்கே ஆறடுக்கு மாடி அமைத்து அந்தப் பவனத்தில் ஆராய்ச்சி நடத்தப்போகிறார்கள், ஏன் சென்றனர்? எப்படிச் சென்றனர்? சென்று எவ்வகையில் அங்கு வாழ்வு பெற்றனர்? என்பன பற்றி! துரத்தி அடிக்கிறதே இலங்கை சர்க்கார், அந்தத் துயரக் கடலில் மூழ்கித் தவிக்கும் திராவிட மக்களுக்கு, மீட்சிக்கு மார்க்கமுண்டா, என்று கேட்க நாதியில்லை, கவனிக்க நேரமில்லை. கண் இருக்கிறது, கருத்தும் இருக்கிறது, ஆனால் இந்தப் பிரச்சினையைக் கவனிக்க அல்ல.

இலங்கை சர்க்கார், திராவிட மக்களைத் தேளெனக் கொட்டி, அம்மக்கள் தேம்பித்தவித்துக் கொண்டிருந்தபோது, விஜயலட்சுமி பண்டிட் அங்கு பவனி சென்றதும், அதுபோது ஆசியாவின் ஜோதியின் குடும்பக் குமரிகள், குதூகல விருந்திலே கலந்து கொண்டது மட்டுமல்ல, கொத்தலாவலையுடன் மேனாட்டு முறையில் நடனமாடி ரசித்ததும் தம்பி, நாடு கண்ட காட்சி! கண்ணீர் பொழிகிறான், காவிரிக் கரைக்காரன்; பன்னீரில் குளித்தெழுந்து, பரிமள கந்தம் பூசி, பட்டுப் பட்டாடை அணிந்துகொண்டு, பரங்கியர் முறையிலே 'பால் டான்சு' ஆடினர், பண்டிதரின் இல்லத்துச் செல்வக் குமாரிகள்—படாடோபம் கூடாது—ஆர்ப்பாட்டம் ஆகாது—செல்வச் செருக்கு கூடாது—ஏழை மக்கள் புழுப் போலத் துடிக்கும் போது பணக்காரர்கள் பகட்டாக வாழ்ந்து காட்டுவது வெந்த புண்ணிலே வேல் சொருகுவதாகும் என்று மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் பண்டிதர், இந்த அக்ரமத்தைக் கண்டித்தாரில்லை.

பிரான்சுப் புரட்சி வெடிக்கு முன்பு இது போல நடைபெற்ற துண்டு—மாளிகையிலே மதுக்குடம் உருளும், இடை நெளியும், கடைசிவக்கும், கனவான்கள் கனகப் பந்துகளைப் பெறுவர், காரிகையர் கோலமயில் போலாடுவர், குயிலெனக் கூவுவர், சாகசச் சமரில் யாருக்கு யார் தோற்பது என்பதறிய முடியாதது பிரச்னையாகும், இந்த அநீதியைத் தடுத்திட "காய்கதிர்ச் செல்வனே! நீ யாவது முயன்று பார்" என்று கூறிவிட்டு, நிலவு மங்கை மறைவாள். கோழி கூவும், கோகிலங்களின் குறட்டை கேட்டு அஞ்சும்—அதே நாட்டில், வயலில் செந்நீரும் கண்ணீரும் சேருகும்; கருவுற்ற காரிகையின் கதற

லொலியைக் கேட்கச் சகியாத கணவன், கர்த்தனின் ஆலய மணிச் சத்தத்தைக் கிளப்பி, சிந்தனையை வேறு பக்கம் திருப்பிட முயல்வான். சவுக்கடி ஒரு புறம், சகதியில் வீழ்தல் மற்றோர் புறம், பட்டினிச் சாவு ஒரு பக்கம், பயங்கர நோய் மற்றோர் பகுதியில், என்று இவ்வண்ணம் ஏழை எளியோர் வதைபடுவர்.

பவனம் அமைக்கிறார்கள், பம்பாயில். திருட்டுப் படகேறியா வந்தாய், திரும்பிப் போ, என்று துரத்துகிறார் கொத்தலாவலை, திரு இடத்தவரை.

வடநாட்டினன் என்றால் அவன் அகதியாகட்டும், அன்னிய நாடுகளில் வசிப்பவனாகட்டும், ஆளும்இனத்தவன் என்ற காரணத்தால், மதிப்பும் சலுகையும் பெறுகிறான்.

அகதிகளுக்காக இந்திய சர்க்கார் அள்ளித் தந்த பணம் கொஞ்சமா?

அகதிகளுக்கு இங்கு எல்லாவகையான வியாபாரமும் செய்து கொள்ள, வழியும், வசதியும் தரப்பட்டன.

புதிய அங்காடிகளே அமைக்கப்பட்டன.

அலுவலகங்களிலே நுழைவர் அகதிகள்—ஆடவனாக இருந்தால் ஆத்திரத்தோடு சொல்வான், நானோர் அகதி—என் சொத்து அத்தனையும் பாகிஸ்தானில் பறிபோய் விட்டது—பத்து ரூபாய் தருவாயா—என்று கேட்பான். இரண்டோ மூன்றோ கிடைக்கும், இவ்வளவு அற்பனா நீ, என்று கேட்பது போல, நம்மை முறைத்துவிட்டு, பணத்தைப் பெற்றுக் கொண்டு போவான் ஆரணங்குக்கோ இதழில் கீதம், கண்ணில் நடனம்,—நம்மவர்களோ, நாலோ ஐந்தோ அதிகம் தர இயலவில்லையே என்ற கவலையுடன் தருவர். ஒரு நமஸ்தே, கிடைக்கும்; ஒரு பெருமூச்சுப் பிறக்கும்.

அகதிகளுக்காக ஆற்றோரத்தில் அழகு நகர்கள் உண்டாக்கப்பட்டன திராவிடத்தில் அவர்களுக்கு வாய்ப்புகள் தரப்பட்டன.

இதோ இலங்கையில் இடர்ப்படுகிறார்கள் திராவிடர்—நாடற்றவர்கள் என்று நையாண்டி செய்யப்படுகிறார்கள்—யார் அவர்களைக் காப்பாற்றக் கவலை கொள்கிறார்கள்?

இந்தப் பிரச்சினையைச் சென்னை சர்க்கார் கவனித்துக் கொள்ளும் என்று தேஷ்முக் தெளிவளிக்கிறார். எவ்வளவு திகைப்பூட்டும் பிரச்சினையையும் மிகச் சாதாரணமாகக் கருதி மிகத் தாராளமாக வாக்களித்துக் கொண்டு வரும் காமராஜரோ, இது ஒரு பிரச்சினையே அல்ல—இலங்கையிலிருந்து வருபவர்கள், தாங்களாகவே இங்கு வேலைதேடிக்

கொள்வார்கள், பிழைத்துப் போவார்கள் என்று கூறிவிடுகிறார்.

பம்பாய் மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் படீல், கிழக்கு ஆப்பிரிக்கா சென்று, அங்கு வாழும் இந்தியர்களிடம் பல இலட்ச ரூபாய் வசூல் செய்து கொண்டு வந்திருக்கிறார்— இந்த பவனம் அமைக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறார்.

இலட்சக் கணக்கிலே பணம் தந்து, பட்டீலை மகிழ்விக்கச் செய்ய முடிகிறது, வடவரால்.

கண்ணீரைத்தான் காண்கிறோம் இலங்கையில் இடர்ப்படும் திராவிடரிடம்—அதைக் காண வெட்கமும் வேதனையும் அடைகிறோம்.

அவர்களுக்கென்று இங்கோர் தாயகம் இருக்கிறது.

எல்லா வளமும் கொஞ்சும் நாடு.

எனினும், அவர்களுக்கு இங்கு ஒரு கவளம் சோறு இல்லை.

அவர்கள் படும் அவதியைத் துடைத்திடும் ஆற்றல் படைத்த ஒரு சர்க்கார் இல்லை.

அவர்கள் சொந்த நாட்டிற்கே அகதிகளாக வந்து சேரும் போது, விதவை மகளைக் கட்டித் தழுவி விம்மிடும் நலிவுற்ற தாய் போலாகிறது நாடு.

வாழ்கிறார்கள் வளமாக வெளி நாடுகளிலேயும், வடவர்; அந்த வசீகரத்தின் மெருகு கெடாதிருக்கச் செய்வதற்காக பம்பாயில் பவனம் கட்டுகிறார் படீல்.

"தாராவி எங்கே இருக்கிறது?—" என்று நான் கேட்டேன்—என்னை அழைத்துச் சென்ற பெரியாரிடம். பம்பாய் சுயமரியாதை இயக்கத் தோழர்களின் அழைப்பின் பேரில் அங்கு போயிருந்தோம்.

"தாராவியா?..." என்று கேட்டபடி, இப்புறமும் அப்புறமும் பார்த்தார் அவருடைய நாசி விரிந்தது, குவிந்தது.- என்ன இது என்று நான் கூர்ந்து கவனித்தேன். "இதோ அருகாமையில் தான் தாராவி- நாற்றமடிக்கிறதே, தெரியவில்லையா?" என்று கேட்டார்—கேட்டுவிட்டு விளக்கமளித்தார். தோல் பதனிடுகிறார்கள், அந்தத் துர்நாற்றம் அடிக்கிறது இப்படிப்பட்ட இடம்தானே நம் மக்களுக்குக் கிடைத்திருக்கும், அதனால் தான தாராவி அருகாமையில் இருக்கிறது என்று கூறினேன் என்றார். உண்மையாகவே, தாராவியை நெருங்கிக் கொண்டிருந்தோம்.

திராவிடர் வடநாடு ஆனாலும் இலங்கையானாலும், சென்று வாழ்கின்றார்கள் என்பதல்ல பொருள், வதைபடுகிறார்கள்.

கங்கைகொண்டான், இமயத்தில் கொடி பொறித்தான்' ஈழம் சென்றான், கடாரம் வென்றான், சாவகம் சென்றான், யவனம் கண்டான் என்றெல்லாம் ஆராய்ச்சி அறைகிறது— உண்மையிலேயே, நமது இதயத்திலே அறைவது போலத் தான் இருக்கிறது, ஆராய்ச்சியாளர் கூறும் போது. இன்றோ! பம்பாயில் பவனம் கட்டுகிறார்கள், பதினாறு இலட்சம் செலவிடு கிறார்கள்—பாண்டியன் பரம்பரை என்ற பட்டயம் பெற் றுள்ள திராவிடர்கள் 'கள்ளத் தோணிகள்' என்று நிந்திக்கப் படுகிறார்கள்.

தொழிலெல்லாம் அங்கே, துரைத்தனம் அங்கே என்று ஆகிவிட்ட போது, ஒரு பவனம் தானா கட்ட முடியும்!

வடநாடு, தென்னாடு என்று பேதம் பேசாதே, பவனம் பம்பாயில் இருந்தால் என்ன, அதற்குச் சாக்கடை சுத்தம் செய்யும் மேஸ்திரி யார் தெரியுமா? நான் தான்; தெரிந்து கொள்—என்று நம்மை மிரட்டுகிறார் அழகேசனார். அவர் களின் கருத்திலே, இலங்கைத் திராவிடர் பிரச்சினை என்று ஒன்று இருப்பதாகக்கூடத் தெரிவதில்லை—பிரன்சுப் பிரபுக் களிடம் பிடிலைச் சேவகம் பார்த்துப் பிழைத்து வந்தவர்கள், பிரபு போதை மிகுதியால் மயங்கிக் கிடக்கும் நேரத்தில், கோப்பையில் மிச்சமாக இருந்த பானத்தைப் பருகிவிட்டு, நானும் இப்போது பிரபுதான என்று குளறுவராம். கேளுங் கள் கோவைக் கோமானை, விருதுநகர் அண்ணலை, சோப்புச் சீமானை, தண்ணீரில்லாத ஆறுக்கு இரும்பே சேராத பாலம் கட்டிப் பரவசப்படும் ஒமலூர் கனவானை—செச்சே! தொழில் எங்கே வளர்ந்தால் என்ன, எல்லாம் இந்தியாவில்தானே— என்று சமரசம் பேசுகிறார்கள்—அதற்காகச் சம்பளமும் தரு கிறார்கள்!

*ரகுபதி ராகவ ராஜாராம்—*
*பதீத பாவன சீதாராம்—*
*ஜெயகர்ண பகவான்—*
*வைஷ்ணவ ஜனதோ*

இப்படிப் பஜனைப் பாடுகிறார்கள்; பகவத் நாமத்தைக் கூறுகிறார்கள் பாலகர்கள்.

பாபா! மாராஜ்! பாய்யோ! சேட்ஜீ! நமஸ்த்தே; நமஸ்த்தே! என்று கூவிப் பிச்சை எடுக்கிறார்கள்.

உத்தரப் பிரதேசம், அசாம், பீகார், மேற்குவங்கம் இங் கிருந்தெல்லாம், சிறார்களை ஒரு கயவாளிக் கூட்டம் ஏய்த்து அழைத்துக் கொண்டு போகிறதாம். உங்களுக்கு நல்ல சாப் பாடு; நல்ல துணிமணி, படிப்பு சொல்லித் தருகிறோம் எங்க ளோடு வந்து விடுங்கள் என்று ஆசை வார்த்தை சொல்லி

ஏழை எளியவர் வீட்டுப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போகிறார்கள். தொலை தூரத்தில் அழைத்துச் சென்று அந்தச் சிறுவர்களை பிச்சையெடுக்கச் சொல்லிப்பயிற்சியளிக்கிறார்கள். பஜனை பாட, பல்லைக் காட்டிக் கெஞ்ச, நமஸ்த்தே சொல்ல, கண்ணீர் சிந்த—இத்தகைய பாடம் சொல்லிக் கொடுத்து, சிறார்களை பிச்சை எடுக்கச் செய்கிறார்கள். அந்தச் சிறுவர்கள், இம்சை தாளாமல், பிச்சைக்காரர்களாக, குழல் ஊதிக் கொண்டும், மேளம் கொட்டிக் கொண்டும், உண்டி குலுக்கிக் கொண்டும், உள்ளம் உருகச் செய்யும் பாடல்கள் பாடிக் கொண்டும், தெருத்தெருவாகப் பிச்சை எடுத்து, அந்தக் கய வர்களிடம் பணத்தைக் கொடுக்கிறார்களாம்—சோறு, கந்தல் —இவை கிடைக்குமாம் சிறுவர்களுக்கு. ஓடிவிட முயன்றால், உதை, குத்து. பிச்சைக்காசு குறைந்தால் தலையில் குட்டு, கன்னத்தில் அறை, இப்படிக் கொடுமைகள்!

1400—சிறுவர்கள்; 147—சிறுமிகள் காப்பாற்றப்படும் ஒரு ஆஸ்ரமத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள்—நீங்கள் தரு கிற பணம் அந்த ஆசிரமத்துக்குத்தான் என்று புளுகிப் பிச்சை எடுக்கும்படி, சிறுவர்களை, அக் கயவர்கள் மிரட்டி வேலை வாங்கி வருகிறார்கள். போலீசுக்கு, இந்த அக்ரமம் தெரிந்து, இப்போது கயவர் சிலர் பிடிபட்டதாகச் செய்தி வந்தி ருக்கிறது.

டில்லி சர்க்காரில் மந்திரி வேலை பெற்றுக் கொண்டு, இங்கே அடிக்கடி பவனிவந்து வடநாடு தென்னாடு என்று பேசுவது கூடாது, அகில பாரதம், ஏக இந்தியா, என்ற தத்து வத்தைத் தாரகமாகக் கொள்ள வேண்டும் என்று இங்கு 'பிர சங்கம்' செய்பவர்களின் மீது நினைவு சென்றது எனக்கு, இந்தச் செய்தியைப் படித்தபோது.

ஏய்த்துப் பிழைப்பவர்கள் ஏமாளிச் சிறுவர்களைப் பிச் சைக் காரர்களாக்கி, பணம் பறிக்கிறார்கள்.

பதவிக்குப் பல்லிளிப்போரை, பசப்பிடத் தெரிந்த வட நாட்டுத் தலைவர்கள், மந்திரி வேஷம் போடச் செய்து, தொண்டரடிப்பொடி ஆழ்வார்களாக்கி, திராவிடத்திலே 'பஜனை' செய்யச் சொல்கிறார்கள்.

இங்கே வரி வசூலித்துத் தருகிறார்கள்—பஜனையும் நடத்து கிறார்கள்—பாதி தேங்காய் மூடியும் ஒரு பிடி சுண்டலும் கொஞ்சம் வெண் பொங்கலும் கிடைக்கிறது—உண்டு, உருசி உருசி! என்று கூவி ஆனந்தத்தாண்டவம் ஆடுகிறார்கள் இந்த அடிவருடிகள். இவர்களின் இனத்தவர், திராவிடர், வெளி நாடு சென்றுவது வாழ்வு நடத்துவோம் என்று கடல் கடந்து சென்றும், வறுமையையே கண்டு வேதனைப்படுகிறார்கள்.

அவர்கள் சார்பாக வாதாடவும் வகையற்றுக் கிடக்கிருர்கள். —அதேபோது, வெளிநாடுகளிலே வியாபாரக் கோமான்களாகி வடவர் கொழுக்கிருர்கள்—வெளிநாடு சென்றுள்ளவர்களின் சீர்சிதையாதிருக்கப்பாதுகாப்புத் தேடப்படுகிறது, ஆறடுக்குப் பவனம் கட்டப்படுகிறது.

அங்கே பவனம்!

இங்கே?

தம்பி, அழகேசர்களின் கவனமெல்லாம், தங்களுக்கு அடுத்த முறை என்ன பதவி கிடைக்கும் என்று ஆருடம் பார்ப்பதிலும். நேருவின் தயவைப் பெற்ருல் எங்காவது ஒரு ராஜபவனத்தில் கொலுவிருக்கும் பாக்யம் கிடைக்குமே என்று ஏங்கிக் கிடப்பதிலும்தான் செல்லும். அவர்கள், ஏன் வடநாடு, தென்ருடு என்று பேசுவது பேதமை என்று கூறுகிருர்கள் என்ற சூட்சமம் மக்களுக்கு நன்ருகத் தெரிந்து விட்டது; எனவே, அவர்களின் பேச்சுப் பற்றிக் கவலைப் படாமல், நீ, வடநாட்டவர்கள் பவனங்களில் வாழ்வதைக் எடுத்துக் காட்டி, இது நியாயமா? ஏன் இதனை அனுமதிக்க வேண்டும்? எத்தனை காலத்துக்கு இதைச் சகித்துக் கொள்ள முடியும்? நமக்கென்று ஓர் நாடு இல்லையா? அது ஏன் அன்னியரின் வேட்டைக்காடாகி இருக்கிறது?என்று கேட்டுக் கேட்டு அவர்களின் முகம் கேள்விக் குறியாக மாறும்படி செய். தம்பி! பிறகு பார், இந்த அழகேசர்களின் நிலையை! ஆப்பசைத்த மந்தி கதை தெரியுமல்லவா—சிறுவனுக இருக்கும் போது சொல்வார்களே—அந்த நிலைதான்!


அங்கே பவனம், தம்பி, இங்கே படகுப் பயணம்.

அங்கே ஆறு அடுக்கு மாளிகை, இங்கே சேரி.

இதை எடுத்துக் காட்டு, தம்பி; நித்த நித்தம் எடுத்துக் காட்டு; தொடுக்கப்படும் தூற்றல் கணைகளைத் தூச்சமென்று எண்ணி தூய உள்ளத்துடன் தாயக விடுதலைக்கான தன்னிகரற்ற தொண்டாற்றிக் கொண்டிரு. பிறகு பார், நாட்டிலே புதியதோர் பொலிவு பூத்திடுவதை; உன் பணியினுல், நம் நாடு பொன்ருடு ஆகத்தான் போகிறது. ஒப்பற்ற பணியிலே தம்பி, நாம் ஈடுபட்டிருக்கிருேம்; உன் அருந்திறனை நம்பித் தான், மார்தட்டி நின்று மாற்ருரிடம் சொல்லி வருகிறேன், திராவிட நாடு திராவிடருக்கே என்று.

அன்புள்ள,

17—7—1955



# போர்! போர்!!

*பெரியாரின் கொடி எரிப்புப் போராட்டமும் தி.மு.க.வும்.*

தம்பி,

*போர்! போர்! போர்!*—இப்போது உலகிலே ஒரு பயங்கரமான போர் மூண்டு, மனிதகுலமே அழிக்கப்பட்டுப் போய் விடுமோ என்று அறிவாளர்களெல்லாம் அச்சப்பட்டுக்கொண்டிருந்தார்களே, அத்தகைய போர் எழாது, என்று தைரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் கூறிக்கொள்ளக்கூடிய சூழ்நிலை மலர்ந்திருக்கிறது—துள்ளித் திரியும் குழந்தைகள், மொட்டுகள், பிஞ்சுகள், சமர்ச் சூறுவளியால் பாழாகா என்ற தைரியம் பிறந்திருக்கிறது.

இது, உலக நிலையைப் பொறுத்துக் காணப்படும், களிப்பூட்டும் செய்தி.

ஆனால் இங்கே, நமது மாநிலத்தில், போர்! போர்! போர்! என்ற முழக்கம், பல்வேறு முனைகளிலிருந்து கிளம்பி விட்டது.

ஜல்லடம் கட்டி, சங்கம் ஊதி, கட்கமேந்தி, களம்குதித்தோட, கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டு கணக்கற்றவர்கள் (போர் முடிவு பெற்ற பிறகுதானே கணக்குத் தெரிய முடியும்) உள்ளனர்.

போர்! போர்! எல்லையைக் காத்திடும் ஏற்புடையதோர் போராட்டம் வருகுது! தொல்லைகளைத் துடைத்திடுவோம், துடை தட்டிக்கொண்டு வாரீர், துந்துபி கேளீர், துரிதமாக வாரீர்—என்றோர் புறமிருந்து முழக்கம் கேட்கிறது.

கோவா அட்டூழியத்தைக் காணீரோ! அந்த அக்ரமத்தை ஒழித்திட அனைவரும் ஒன்று சேரீரோ! என்று மற்றொருபுரம், முழக்கம் கிளம்புகிறது!

ஆலயங்களிலே அர்ச்சனை நம் அருந்தமிழ் மொழியிலன்றோ இருத்தல் வேண்டும், அத்திக அன்பர்காள்! அஞ்சாது போரிட வாரீர், அரன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு வெஞ்சமரில் ஈடுபட வாரீர். என்று வேறோர் போர் முழக்கம் கேட்கிறது.

பாட்டாளிகளின் துயர் துடைக்கும் போரன்றோ போர்! மற்றவை பேரளவு போர் என்ற பெயர் பெறுதலும் ஆகுமோ! ஆண்மையாளர்களே! அணிவகுத்து நில்லுங்கள்! அழைப்பைச் செவியில் கொள்ளுங்கள்! போர்! போர்! புத்துலகம் காணப் பெரும் போர்! புனிதப் போர் ஒரே போர்! ஒப்பற்ற போர்!—என்று கம்யூனிஸ்டுக் குரல் கணகணவென ஒலிக்கிறது.

பெரியாரின் ஆகஸ்ட்டுப் போர் பற்றிய அறிவிப்பும் வந்துவிட்டது.

ஆகஸ்ட்டு முதல் நாளன்று தேசியக் கொடிகளைத் கொளுத்தி, அதன்மூலம் வடநாட்டுச் சர்க்காரை, திராவிடத்தின் மனநிலையை அறியும்படி செய்வது என்பது, போர்த் திட்டம் என்று அறிவிக்கப்பட்டிருககிறது.

காமராஜர் ஆட்சியை ஆதரித்துக் கொண்டிருக்கும் போக்கிலேயே பெரியார் சென்று கொண்டிருப்பார், திராவிட நாட்டுக்கான பிரச்சினைகளைக் காலாவதி ஆகும்படி செய்துவிடுவார் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் திடுக்கிட்டுப் போயிருப்பர், இந்தப் போர்த் திட்டம் கேட்டு. இந்தத் தீனா மூனா கானாக்களுக்கு அரசியல் நாகரீகமேதெரியவில்லை-பெரியார், கம்யூனிஸ்டுகளை ஒழித்தாக வேண்டும் என்ற புனிதமான(!) கோட்பாட்டுக்காக, இடைத் தேர்தல்களில் காங்கிரசை ஆதரித்து வருகிறார் இது அல்லவா யூகம் அரசியல் கண்ணியம்—ஜனநாயகம-என்றெல்லாம் பேரிகை கொட்டினர், காங்கிரசின் சின்னசாமிகள் அவர்கள் கண்டார்களா பெரியாரின் மனதிலே உருவாகிக்கொண்டுள்ள போர்த் திட்டம் பற்றி. இப்போது ஆகஸ்ட்டுப் போர்பற்றி அவர் அறிவித்ததும், அந்த வட்டாரம், திகைத்துப்போய்க் கிடக்கிறது.

தம்பி, நமது வட்டாரத்திலே என்ன கருத்து நிலவுகிறது என்பதைக் கேட்க ஆவலாக இருப்பாய்; கேள்.

0 0 0

(1) ஆகஸ்ட் கிளர்ச்சியில் ஈடுபடும்படி எல்லாக் கட்சிகளையும் அழைக்கிறேன் என்று பெரியார் கூறுவதன் பொருள் என்ன?

ஓஹோ! எல்லாக் கட்சிகளும் என்றதும், உனக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது: சகஜந்தான்! எல்லாக் கட்சிகளும் என்றால், நாட்டிலே உள்ள கட்சிகள் எல்லாம் என்று பொருள் கொள்ளலாமா! பொருத்தமாக இராது! காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பிரஜா, இந்து மகாசபை, தமிழரசு ஆகிய கட்சிகள் யாவும், இந்திவிஷயமாகக் கொண்

டுள்ள எண்ணம், இந்தி கூடாது என்பதல்ல; கட்டாயப் படுத்த வேண்டாம்;அவசரப் படுத்தவேண்டாம் என்பது தான். பெரியார், இந்தி கூடாது,ஏனெனில் இந்தியா வின் ஆட்சிக்குள் திராவிடம் இருத்தல் கூடாது என்று கொள்கை வகுத்துக் கொண்டவர். எனவே இந்தியை எதிர்த்து பெரியார் நடத்தும் கிளர்ச்சியில் அந்தக் கட்சி கள் எதுவும் ஈடுபடாது; அக்கறை காட்டாது.

(2) அப்படியானல், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபடக் கூடிய நிலையில் உள்ள கட்சி, திராவிட முன்னேற் றக் கழகம் மட்டும் தானே! ஏன், பெரியார், தி. மு க.வுக்கு அழைப்பு என்று பேசவில்லை.

என்னைக் கேட்கிருயே!

(3) கட்சிகள் பல ஒன்று கூடி, ஒரு கிளர்ச்சியில் ஈடுபடு வது உண்டா?

ஏன் இல்லை! உண்டு!! இலட்சியம் ஒரேவிதமாக இருந்தால், ஒன்று கூடுவது சாத்தியமே

(4) அதற்கு ஏதேனும் முறை இருக்கிறதா?

நிச்சயமாக இருக்கிறது! அந்தக் கட்சிகள் ஒன்ருகக் கூடிக் கலந்துபேசித் திட்டம் வகுத்துக்கொண்டு பிறகு செயலில் ஈடுபடுவது.

முன்பு ஒரு முறை நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்பு இயக்கத்துக்கான திட்டமும் முறையும் வகுத்துக்கொள் வதற்காக, இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக ஒத்த கருத்தை வெளியிட்டு வந்த ம. பொ. சிவஞானம் அவர்களை அழைத்து, மாநாடுகளிலும், கமிட்டிக் கூட்டங்களிலும் கலந்துபேசி, திராவிடர் கழகம் (அப்போது நாம் அங்கே தான்) பணியாற்றி - ஜனநாயகப் பண்பை எடுத்துக் காட்டி இருக்கிறது. ம பொ.சி அப்போதும் தமிழரசுக் கழகம் தான் நடத்திக் கொண்டிருந்தார்.

(5) பெரியார் அப்படி ஏதும் செய்யக் காணேமே?

தேவையில்லை என்று அவர் கருதியிருக்கலாம். தி.மு.க. பொதுச் செயலாளரை அழைத்துப் பேசி, திட்டம் வகுத்தால், ஒன்று கூடிக் கிளர்ச்சி நடத்தும் ஆர்வம் ஏற்படும் என்று கூட வேண்டுகோள் விடப்பட்டது.

(6) ஏன் அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது?

ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா?

(7) இப்போது, எல்லாக் கட்சிகளையும் அழைப்பதன் பொருள்?

நல்ல திட்டம் என்று நம்பி, வருவதானல் வரட்டும் என்பது தான்.

(8) வராவிட்டால்?

வராவிட்டாலா! அழைத்தும் வரவில்லை, அற்பர்கள் என்று எப்போதும் ஏசுவோர் ஏசுவர்!

(9) வருவதானால்?

வந்தார்கள்—என் திட்டத்தின் படி கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்! வேறு வழி, இதுகளுக்கு? என்று குத்தல் பேச்சு கிளம்பும். அவ்விதமாக இந்தி எழுத்து அழிப்புப் போரில் ஈடுபட்டபோது ஏசினர் என்று நமது துணைச்செயலாளர் துயரத்துடன் கூறுகிறார்.

(10) அப்படியானால் என்ன செய்யலாம்?

அதென்ன என்னைக் கேட்கிறாயே! உனக்கென்று ஒரு கட்சி இருக்கிறது—அது அழைக்கப்படவில்லை—ஒரு பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுத்திருக்கிறாய் அவரை அழைக்கக் காணோம்—வேறோர் கட்சி, தன் நிர்வாகக் கமிட்டியில், தனக்கு சரியென்று பட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்றி கிளர்ச்சி துவக்குகிறது—நாம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறாயே— நீதான் சொல்லேன்—!

(11) அப்படியானால் ......

போர் நடைபெறப் போகிறது—இதிலே நாங்கள் காட்டப்போகும் அபாரமான ஆற்றலையும், அடையப் போகும் வெற்றியையும். அறிவிலிகாள்! ஆற்றலற்றது காள்; காண்மின், காண்மின்!-என்று கூறிவிட்டுக் களம் செல்லும் கர்ம வீரர்களைக் காண நேரிட்டால், நான் கைகூப்பித் தொழுவேன்!

போர் நடைபெறப் போகிறது—அதன் நோக்கம் இது—முறை இவ்விதம் இருக்கும்-இதிலே கலந்து பணி யாற்ற வருவாயா, உனக்கு இந்த நோக்கமும் முறையும் புரிகிறதா, பிடிக்கிறதா என்று கேட்டால் கைகூப்பித் தொழுவது மட்டுமல்ல, காலைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு, இது தான் கண்ணியமான முறை, காரிய சித் திக்கு ஏற்ற வழி, பகைவர் கண்டு திடுக்கிடத்தக்க வகை யான திட்டம், போர் முறை பற்றிக் கலந்து பேசுவோம், என்று கூறி, ஆர்வத்துடன் பணிமனையில் நுழைவேன்.

இருவிதமுமின்றி, போர் போர்! போரிடும் ஆற்ற லுள்ளவர்களெல்லாம், வரலாம்! வருவோர் சேர்த்துக் கொள்ளப்படுவர்—விளக்கம் கேட்போர், கலந்துரை யாட வேண்டுமென்று கூறிடும் துணிவு கொண்டோர் தேவைப்படார். கலந்து கொள்ளாதவர்கள், ஈனப்பிறவி கள், நாட்டுத் துரோகிகள்—அவர்கள் அழிக, அழிக, அடியோடு அழிந்துபடுக! என்று சபித்துக் கொட்டினால், நான் என்ன செய்ய முடியும். நீயும்தான் என்ன செய்ய முடியும்.

(12) நெருக்கடியான சமயம்—இறுதியான போர்—தீவிரமான கிளர்ச்சி—இதிலே நாம் ஈடுபடாமலிருக்கலாமா?

நாமும் ஒரு கட்சிக்குப் பொறுப்பானவர்கள்! நாமும் பிறர் பார்த்து மெச்சத்தக்க கிளர்ச்சிகளை நடத்தி, கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறோம். அப்போது உதவிதர், உபசாரம் கூற, ஒரு சிறு புன்னகை காட்ட யாரும் வரவில்லை! மாறாக, அற்பமான கிளர்ச்சி—பயனற்ற வேலை என்று கேலியும் கண்டனமும் பிறந்தது. மேலும், ஆகஸ்ட்டு கிளர்ச்சியோடு எல்லாப் பிரச்னைகளும் முடிந்து விடுகின்றன என்ற பொருள்! எவ்வளவோ கிளர்ச்சிகள் கருவில்! ஒரே நோக்கம் கொண்ட இருவேறு அமைப்புகள் கலந்து பேசி ஒரு திட்டம் தீட்டி, தக்கவிதமான கிளர்ச்சி நடத்தும் காலம் ஒன்று வரத்தான் போகிறது என்ற நம்பிக்கையுடன் இருக்க வேண்டியதுதான். அது வரையில் அந்தந்த அமைப்பும், அதனதன் சக்திக்கும் சுபாவத்துக்கும் ஏற்றவகையான கிளர்ச்சியில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. நாம் துவக்கிய மும்முனைப் போராட்டத்தின் போது 'விடுதலை' யில் கிளர்ச்சிகள் என்ற அருமையான கட்டுரையில், இந்தக் கருத்துப்பட பெரியார் எழுதியுமிருக்கிறார்.

(13) போர்முறை பற்றி என்ன கருதுகிறீர்?

கொடி கொளுத்தும் போர் முறைபற்றித் தானே! அதுபற்றி நமது கருத்து என்ன, நமக்கு அது உடன்பாடானதா அல்லவா என்று எங்கே கேட்டார்கள்—எப்போது கேட்டார்கள்? பொதுச் செயலாளரை அழைத்துப் பேசியிருந்தால், அவர், திராவிட முன்னேற்றக் கழகம் இதுபற்றி என்ன கருதுகிறது என்று தெரிவித்திருக்கக்கூடும். பொதுவாக, இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக நடத்தப்பட்ட கிளர்ச்சிகளை எல்லாம் வடநாட்டுச் சர்க்கார் அலட்சியப்படுத்திவிட்டதால், இப்போது வடநாட்டு சர்க்கார் பரபரப்படையக்கூடிய வகையில், கொடியைக் கொளுத்தப்போகிறோம் என்று அவர்கள் காரணம் காட்டுகிறார்கள்; இந்தி எதிர்ப்புக்கான கிளர்ச்சியை வடநாட்டுச் சர்க்கார் அலட்சியப் படுத்துவதை நாமும் கண்டிருக்கிறோம்; வடநாட்டுச் சர்க்காருடைய கவனத்தைக் கவரும்படி இருக்க வேண்டுமென்று தான் நாம் இரயில் நிறுத்தக் கிளர்ச்சி நடத்தினோம். நாம் கலந்து பேச அழைக்கப்பட்டிருந்தால், கிளர்ச்சி எப்படி இருக்க வேண்டுமென்றால், இந்தி எதிர்ப்பு விஷயத்தில் அனுதாபம் கொண்ட காங்கிரஸ்காரர்களையும் நமது பக்கம் சேர்க்கும்படியானதாக இருக்க வேண்டும்; கொடி கொளுத்துவது போன்ற முறைமூலம், காங்கிரஸ்காரர்

களுக்கும் திராவிட இயக்கத்துக்கும் நேசம் ஏற்படவே முடியாத ஓர் மோசமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும்; எனவே வேறு முறையைக் கொள்வோம் என்று எடுத்துச் சொல்லி இருப்போம். இன்று நமது கருத்தினை ஏற்றுக் கொள்ளாமலிருக்கும் காங்கிரஸ்காரர்களே, நமது கோரிக்கையை உணர்ந்து, மனம் மாறி நமது இயக்கத்துக்கு ஆக்கம் தேடுவதற்கான உதவி அளிக்க முன்வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதாக நமது கிளர்ச்சி இருக்க வேண்டும். அவர்கள் கேட்டாலே வெறுப்பும் வேதனையும் அடையதக்க முறை சரியாகாது, அவர்களை நம்மோடு அழைத்துச் செல்லும் வழியுமாகாது, இந்தக் கொடி கொளுத்துவது என்பதை எடுத்துச் சொல்லி இருந்திருப்போம். நாம் இப்படிச் சொல்லக்கூடும் என்பதை அறிந்துதானோ என்னமோ கொடி கொளுத்தும் திட்டம் தீட்டும் கமிட்டிக்கு நமது பொதுச்செயலாளரை அழைக்கவில்லை. பிள்ளையார் உடைப்பின் போதே, நாம், நம்மோடு நாளாவட்டத்தில் வந்து சேர வேண்டியவர்களை, வீணாக வெறுப்படையச் செய்துவிடும் என்றதனால்தான், ஒதுங்கி இருந்தோம்.

(14) ஒதுங்கி இருந்தால் ஒழிந்து விடுவார்கள் என்று பேசுகிறார்களாமே!

திராவிட முன்னேற்றக் கழகம், போராட்டங்களை நடத்தி இருக்கிறது—தனித்து நின்று.

திராவிட முன்னேற்றக் கழகம், பிறர் துவக்கிய போராட்டம், தாங்கள் தீட்டிய திட்டத்துக்கு ஒத்ததாக இருந்த நேரத்தில், துணையாக இருந்திருக்கிறது.

வடநாட்டு மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி காட்டி, தடியடி, சிறை இவைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் தாங்கிக் கொண்டது. துணை யாரும் கிடையாது! அழைக்கவும் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகம், பிறர் நடத்திய போராட்டத்தில் கலந்துகொள்ளாமல், ஒதுங்கியும் இருந்திருக்கிறது.

144 தடையை மீறி, தடியடி சிறைமட்டுமல்ல, துப்பாக்கிக் குண்டுகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்-தனியாகக்களத்தில்இறங்கி.

இரயில் நிறுத்தம், ஆச்சாரியார் வீட்டின்முன் மறியல்—என்பவைகள், மாற்றுக் கட்சிக்காரரெல்லாம்கூட மறக்கமுடியாத சம்பவங்கள்—தனியாகத் தான் நடத்தினோம்—சர்க்காரின் குண்டுகள் மட்டுமல்ல, ஏசலையும்

தாங்கிக் கொண்டோம்; இரத்தம் பீறிட்டது; பிணமும்வீழ்ந்தது.

எனக்குத் தெரிந்த அளவில் நமது சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து கவனத்தில் வைத்துச் சொல்கிறேன், நாம் நடத்திய கிளர்ச்சியை ஒடுக்க சர்க்கார் துப்பாக்கியின் துணையைத்தேடியதே, இரயில் நிறுத்தக் கிளர்ச்சியின் போதும், குன்றத்தூரில் தடை உத்தரவை மீறிய நேரத்திலும் தான்!

மதுரை கருப்புச் சட்டைப் படை மாநாட்டிலே துப்பாக்கிச் சத்தம் கேட்டது—அது நம்மை நோக்கி அல்ல, அக்ரமமாக நமது மகாநாட்டிலே தீ வைத்த காங்கிரஸ் காரரை நோக்கி.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் வடிவம் கொண்ட பிறகு, நாம் ஒரே குடும்பமாக இருந்த போது கண்டதைவிட, கடுமையும் கொடுமையும் மிகுந்த அடக்கு முறையைச் சந்தித்திருக்கிறோம்.

அதுபோலவே, அவர்கள் நடத்திய, இந்திஎழுத்து அழிப்புப் போரில் நாமும் ஈடுபட்டோம்-அதற்கான திட்டம் தீர்மான உருவில் நம்மிடம் ஏற்கனவே இருந்ததால்.

அதுபோலவே, அவர்கள் வடநாட்டுத் துணிக் கடை மறியல் செய்தனர்!

அதிலே அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறினர்!

கலந்து கொள்ளாதவர்கள் கல்லாவர், மண்ணாவர், கால்தூசு ஆவர், என்று சாபம் கொடுத்தனர்.

இனி, இதுகள் இருக்குமிடம் தெரியாது ஒழிந்து போகும் என்று எச்சரித்தனர்.

எனினும், நாம் அந்தக் கிளர்ச்சியில் கலந்து கொள்ளவில்லை—மடிந்துபடவில்லை!!

அதுபோலவே, பிள்ளையார் உடைப்பு! நாம்அதிலே ஈடுபட்டோமில்லை! இனி இதுகள் செல்லாக் காசுகள் என்று அவர்கள் ஆருடம் சொல்லாமலில்லை! எனினும், திராவிட முன்னேற்றக் கழகம், இந்தப் போக்கினால், வளர்ச்சி குன்றிப்போனதாக, அவர்களே கூறமுடியாது.

(15) இவர்கள் கொடி கொளுத்தும் கிளர்ச்சியில் ஈடுபடா விட்டால் என்ன, நாங்கள் அதிலே வெற்றி காண்போம்—கண்டு வெட்கப்படட்டும் என்று பேசுகிறார்களாமே!

பேசட்டுமே, அதனால்என்ன;நம்மைக்கலந்து வகுக்கப்பட்ட திட்டமல்ல அது; அதை நடத்தும் முழுப்

பொறுப்பும் அவர்களைச் சார்ந்தது; அதிலே வெற்றி கிடைத்து, கீர்த்தி கிடைத்தால், நமக்கு நிச்சயமாகப் பங்கு வேண்டாம்; அவர்களே அதற்கு உரியவர்கள் என்று நாமே கூறிவிடுவோம்—அவர்கள் களத்திலே, எல்லாத்திசைகளிலும் பாய்ந்து முன்னேறிவெற்றி பெறுகிறார்கள். அவர்கள் பெறும்வெற்றி எத்தகையது என்றால் இனிவேறு யாருக்கும் எந்தவகையான வேலையும் இல்லை என்று சொல்லத்தக்க வகையான முழுவெற்றி என்றே வைத்துக் கொள்வோம், அதனால் என்ன, நஷ்டம்; நமக்கென்ன கஷ்டம்? நந்தவனத்துக்கு நாள் பூராவும் நீர் பாய்ச்ச வேண்டும் என்று எண்ணிக்கொண்டு, கிணற்றடி போகிறான்—பெரு மழைபெய்தால், என்ன கஷ்டகாலம்! நாம் நீர் பாய்ச்ச முடியாமல் போய்விட்டதே என்று ஆயாசப்படுவான்? நமக்கு வேலை இல்லை, மழை வந்தது நல்லதாயிற்று, மழையே வாழி! என்று வாழ்த்துவான்; வேறென்ன!!


0 0 0

தம்பி! இவைகள் தானே நீ கேட்க விரும்புவாய்-நீ கேட்பதாக வைத்துக்கொண்டு நானே பதிலும் எழுதிவிட்டேன்.

இது போதாது! நமது கழகப் பொதுச் செயலாளரின் கருத்து என்ன என்று கேட்பாய். பொதுச் செயலாளரும் துணைச்செயலாளரும் இதே கருத்தினைத்தான் என்னிடம் கூறினார்கள்; நான் உன்னிடம் கூறிவிட்டேன்; நீ, தம்பி! மற்றவர்களுக்குச் சொல்லிவிடு!!

அன்பன்,

24—7—1955



கடிதம்: 12.

# சிறை அனுபவங்கள்

*அபிதான சிந்தாமணி படித்தமை—பெரியாரின் அன்பு—குஞ்சிதம் குருசாமியின் பாசம்*

தம்பி,

உச்சி முதல் உள்ளங்கால்வரை ஓரே புளகாங்கிதமடைய லாம்—வீரத் தமிழனின் பழைய வரலாறு மீண்டும் ஓர் முறை காணும் வாய்ப்பு நேரிடும், கோட்டை கொத்தளங்கள் தூளாகும், கொடிமரங்கள் பெயர்த்தெறியப்படும், முரசு கொட்டுவர், சங்கம் ஊதுவர், பாவாணர் வெற்றிப் பண் இசைப்பர், திருமதிகள் 'திருஷ்டி' கழிப்பர், மக்கள் தெந்தினம் பாடுவர், ஆகஸ்டுப் போரின் அலாதியான அருமை கண்டு என்று எவ்வளவோ மனப்பால் குடித்தேன். இப்படி ஒரேயடியாக என்னையும் அவரை நம்பிக் கிடக்கும் ஆயிரம் ஆயிரம் வீரர்களையும் நட்டாற்றில் விட்டுவிடுவார் என்று துளியும் எண்ணவில்லை; எனினும், என்ன செய்வது, தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தமது ஆகஸ்டுப் போராட்டத்தை நிறுத்திவிட்டார்.

என்னைக்கூடச் சேர்த்துக்கொள்வதாகச் சொன்னார்—அழைப்பு வருமென்று எதிர்பார்க்க வேண்டாம், சேருக! சீர் பெறுக! என்றார் நானும் நீயும் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் அவர் கூறிடும் எல்லைப்போர் நடைபெறட்டும், தமிழரின் தொல்லை ஒன்றுக்கு முடிவு தெரியட்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். பிடிமண் அள்ளிப் போட்டு விட்டார், செங்கோலார்.

தக்க காரணம் உண்டு கேண்மினோ! என்றும் அறிக்கை விடுகிறார்.

நேருபண்டிதரிடமிருந்து அவருக்குக் கடிதம் வந்திருக்கிறதாம்—கடிதத்தில் என்ன எழுதி இருக்கிறது என்று என்னைக் கேட்காதே தம்பி, அவரே கூறவில்லை. இரகசியம் இருக்குமல்லவா! பாரதத்தின் தலைவரும் தமிழ்மாநிலத்தின் தலைவரும் நடத்திக்கொள்ளும் கடிதப் போக்குவரத்து என்ன சாதாரணமாகவா இருக்கும், நம்மைப் போன்ற சாமான்யர்களுக்குக் கூற! ஏதேதோ இருக்கும். நேரு பண்டிதர் கெஞ்சி இருக்கக் கூடும்—கொஞ்சி இருக்கக் கூடும்—எல்

லைக்கு ஒரு போரா? ஏனய்யா தலைவரே! அதற்காக ஒரு குழு வேலை செய்ய இருக்கிறதே தெரியுமா? என்று கேட்டிருக்கலாம். என்ன இருக்கிறதோ கடிதத்தில், தெரியாது—கடிதம் பெரிய இடத்தது—எனவே விஷயம் பெரிதாகத்தான் இருக்க வேண்டும் என்று அனைவரும் எண்ணிக்கொள்வார்கள் என்று ம. பொ. சி. நம்புகிறார், மறுத்தீர்களோ, தமிழின்மீது ஆணையிட்டுவிடுவார்!

எப்படியோ ஒன்று, காண்போரும் கேட்போரும் மயிர்க்கூச்செறியும் நிலை பெற இருந்த மகத்தான வாய்ப்புப் போய் விட்டது—ஆகஸ்ட்டுப் போர் நிறுத்தப்பட்டுவிட்டது.

இவருடைய போர்ப் பிரகடனம், பிறகு அதை நிறுத்தி விட்டதாகத் தரும் அறிவிப்பு இதைக் கவனிக்கும் போது, தஞ்சையில் மாணவத் தோழர்கள் நடத்திய கிளர்ச்சி என் நினைவிற்கு வருகிறது.

மாணவர்கள் அங்கு ஒரு தலைமை ஆசிரியர் சம்பந்தமாகக் கிளம்பிய பிரச்சினைக்காகக் கிளர்ச்சி செய்தனர்; இப்போது கிளர்ச்சி நிறுத்தப்பட்டிருக்கிறது—காரணம், மாணவர்களின் கோரிக்கையைக் கவனித்து, குறையினைக் களைந்துவிடுவதாக ஊர்ப்பெரியவர்கள், பல கட்சிகளிலும் உள்ள பிரமுகர்கள்—கடிதம் கொடுத்து அல்ல—பொதுக்கூட்டம் போட்டு வாக்களித்தனர் தங்கள் கிளர்ச்சி பலன் தந்தது என்று மாணவர்கள் கிளர்ச்சியை நிறுத்தி விட்டனர்.

ஆகஸ்ட்டுப்போராட்டத்தை அன்பர் சிவஞானம் நிறுத்தி விட்டாரே, அத்துடன், மாணவர்கள் தமது முயற்சியில் வெற்றிபெற்ற தன்மையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்படிப்பட்ட போர் அறிவிப்பாளர்களுடன் கூடி இருப்பதைக் காட்டிலும், மாணவனாக இருப்பது எவ்வளவோ மேலானது என்று உனக்குத் தோன்றுகிறதல்லவா—எனக்கு அவ்விதம் தான் தோன்றுகிறது, தம்பி.

தம்பி, இதைவிட மகத்தான முறையிலே அகாலிகள் கிளர்ச்சி நடத்தி வெற்றிபெற்றுள்ளனர்—பதினாயிரம்பேர் சிறை புகுந்தனர்—நாலைந்து M.P. க்கள் பத்துப்பன்னிரண்டு M.L.A.க்கள்—இவர்களை நடத்திச் செல்ல தாராசிங் எனும் முதுபெரும் கிழவர். தடை உத்தரவை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தப்பட்டது—தடை உத்தரவை சர்க்கார் 'வாபஸ்' பெற்றனர். கிளர்ச்சி நிறுத்தப்பட்டது—தாராசிங்கோ இன்னும் சிறையிலேதான் இருக்கிறார். அகாலிகள் நடாத்திய இந்த அரும்பெரும் போராட்டம்பற்றி அதிகம் தெரிந்திருக்காது நமது மக்களுக்கு—தாராசிங் பாஞ்சாலத்தில் இருக்கிறார்—அவருடைய போர் குறித்து இங்கு முழக்கம் செய்ய எந்த இதழும் இல்லை!

நமது நினைவெல்லாம் ஈர்த்திடக் தக்க வகையிலே, இரு கிழமைகளாக இங்கு புயலென வீசி வருவது, பெரியாரின் ஆகஸ்டுக் கிளர்ச்சிதான்.

இந்தக் கிளர்ச்சி எந்த வகையில் உருவெடுக்கும் என்று கூறிடும் நிலை, மெல்லிய கோடுகளே தெரிவதால், இப்போதைக்கு, (அதாவது நான் உனக்குக் கடிதம் தீட்டும் போது) இல்லை. உன் கருத்து இக்கடிதத்தில் பதியும் நேரத்தில், பெரியாரின் கிளர்ச்சி, எந்தக் கட்டத்தை அடைகிறது என்பது தெரிந்து விடக்கூடும்.

தம்பி, இப்படி, போர்! போர்! என்ற முழக்கமும், போர் எப்படி எப்படி எல்லாம் இருக்கப்போகிறது தெரியுமா என்ற ஆர்வமூட்டும் அறிவிப்புகளும் கிளம்பி, என் உள்ளத்தை ஒரேயடியாகக் கிளர்ச்சி வயத்ததாக்கிவிட்டன.

பெரியாரின் ஆகஸ்ட்டுப் போரில் நாம் கலக்கவில்லை என்றாலும், போர் பற்றிய முழக்கம் கிளம்பியுள்ள இந்த வேளையில், என் மனமும் உன் மனமும்கூடத்தான், போராட்டங்களில் ஈடுபடும் வாய்ப்புகள் நமக்கெல்லாம் கிடைத்தபோது கண்ட அனுபவங்களைப் பற்றித்தானே எண்ணிடும்! இயற்கை அல்லவா!! நாம் திராவிடர் கழகமாக இருந்தபோதும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். முன்னேற்றக் கழகமாகி வெளிவந்தபோதும் போராட்டங்களை நடத்தி இருக்கிறோம். எனவே, எங்கும் போர்! போர்! என்று பரணி பாடப்படும் நேரத்தில், பழைய நாட் காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக மனத்திரையிலே பளிச்சுப் பளிச்செனத் தோன்றத்தான் செய்கிறது.

எனவே என் சிறைஅனுபவங்களிலே சில உனக்குக்கூறுகிறேன்—உன் சிறை அனுபவத்தை எனக்குக் கூறிடுவாய், என்ற நம்பிக்கையுடன்.

*அபிதான சிந்தாமணி*

'நாலுமாதம்' என்றார் மாஜிஸ்டிரேட்! நாலு மாதம்! என்று லேடி டாக்டர் கூறிடுவது கேட்டு மகிழும் ஆரணங்கு போலானேன். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி 1938-ஆச்சாரியார் ஆட்சிக் காலம்- என்மீது,குற்றம் புரியும்படி தூண்டிவிடுதல். உடந்தையாக இருத்தல் எனும் குற்றங்கள்—வழக்கு நடைபெற்று, அன்று சென்னை எழும்பூர் கோர்ட்டில், நாலுமாதம் என்று தீர்ப்பளிக்கப்பட்டதும், கொள்கைக்காகக் கஷ்ட நஷ்டம் ஏற்கும்உள்ளம் இவனுக்கு உண்டு என்று இயக்கமும் இயக்கத்தின் போக்கைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பொதுமக்களும் நல்ல தீர்ப்பு அளித்துவிட்டனர்—பரீட்சை

யில் தேறிவிட்டோம் என்றெண்ணினேன். விவரிக்க முடியாததோர் மகிழ்ச்சி—வெற்றி பெறுகிறோம் என்ற நம்பிக்கை.

சென்னைச் சிறையில், பெரியாருடன் ஒரே வரிசைக் கட்டிடத்திலே தங்கியிருக்க நேரிட்டதை ஒரு வாய்ப்பாகவே கொண்டேன்.

குற்றாலத்துக்கோ, கொடைக்கானலுக்கோ செல்பவர்கள், உள்ளே நுழைந்ததும், தனக்கு வேண்டியவர்கள்—இருப்பது கண்டால், எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள்—எனக்கு, உள்ளே நுழைந்ததும், வந்துவிட்டாயா? வா! வா! ஆறு, எட்டா? நாலா, மூன்று?'' என்று கேட்டபடி நண்பர்கள் என்னிடம் அன்புடன் வந்தபோது, அதுபோன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

மகிழ்ச்சியைத் தொடர்ந்து அனுபவிக்க முடியவில்லை. காரணம் வீட்டைவிட்டு இந்தக் கூட்டுக்குள்ளே வந்துவிட்டோமே என்ற கவலையல்ல; போட்டுக்கொள்ளப் பொடியில்லை! என்ன செய்வேன்? உனக்குத் தெரியுமே, தம்பி! நான் அந்தக்கெட்டபழக்கத்துக்கு ஆட்பட்டுஅல்லற்படுவது; கடை வீதியா, சண்முகம் கொண்டுவா, அம்பாள் வாங்கிவா என்று சொல்ல? சிறை!!

என் சங்கடத்தை அறிந்துகொண்ட அடிகள் ''இதுதானே வேண்டியது! இதோ'' என்று கூறி ஒரு சிறு காகிதப் பொட்டலம் கொடுத்தார்—பொடி!! நெடி குறைந்துபோன நிலை! பக்குவமாகத்தான் மடித்து வைத்திருந்தார்; ஆனால், காகிதத்தில் இருந்ததால் பொடிபதம் கெட்டுக் கிடந்தது-எனினும் எனக்கிருந்த பசி, அசல் சண்முகம் இதனிடம் என்ன செய்யும் என்று களிப்புடன் கூறச் செய்தது. இந்தப் பொடிப் பொட்டலத்தை நான் என்றுமே மறப்பதற்கில்லை. முதல் சிறை அனுபவம்—மூக்குப் பொடிக்கே அலைய நேரிட்டது முதல் அனுபவமல்ல!

நாலு மாதமும் நாங்கள் அங்கு, தமிழ்! தமிழ்! தமிழ்! என்ற உணர்ச்சி வயமாகி இருந்துவந்தோம், பெரியாருடன் பன்னிரண்டு மணி நேரம் (இரவில்தான் தனித்தனியாகப் போட்டுப் பூட்டிவிட்டார்களே) ஒன்றாக இருக்க, பேச, கேட்க பழக அருமையான வாய்ப்பு. இரசமான விருந்து.சுவையுள்ள காலமாக அந்த நாலுமாதங்கள் இருந்தன.

சிறை செல்கிறேன் என்பதறிந்த என் கெழுதகை நண்பர் புலவர் அருணகிரிநாதர், அங்கு நிரம்ப நேரம் கிடைக்கும், பல்வேறு விஷயங்களைப் படிக்க இது தூண்டுகோலாக இருக்கும் என்று கூறி, என்னிடம் *அபிதான சிந்தாமணி* எனும் புத்தகம் கொடுத்திருந்தார். அவர் உனக்கு அவ்வளவாகத் தெரிந்திருக்கக் காரணமில்லை, தம்பி, பொதுவாழ்வுத்

துறையிலே துவக்கச் சட்டத்தில் எனக்குற்ற தோழராக இருந்தவர் - அவரே ஒரு அபிதான சிந்தாமணி — மணிக் கணக்கில் பேசிக்கொண்டே இருப்போம், பலபல விஷயங் களைக் குறித்து. எல்லா விஷயங்களைப் பற்றியும் ஏதேனும் ஓரளவுக்குக் கூறும் வகையான கல்வியும் கேள்வியும்படைத்த வர்—எனவே அவர், சிறையில் என்னோடு இருப்பதுபோலவே எனக்குத் தோன்றிற்று அபிதான சிந்தாமணியைப் படிக்கும் போதெல்லாம். அந்த 'அபிதான சிந்தாமணி'யை நான் மறப்பதற்கில்லை. இப்போதும் 'அபிதான சிந்தாமணி'யைக் காணும்போதெல்லாம், எனக்கு அந்த நாலு மாதக் கடுங்கா வல் நினைவிற்கு வரும்; நினைவிலே அந்தச் சம்பவம் தோன்றியதும், எனக்குள்ளாகவே ஓர் மகிழ்ச்சி, கொள்கை! கொள்கை! என்று கொக்கரித்துக்கொண்டிருந்துவிட்டு, அடக்குமுறை கிளம்பியதும் ஓடிவிடும் 'கோழை உள்ளம்' இல்லை. அழைத்தார்கள் அறப்போரில் ஈடுபட்டான், சிறைத் தண்டனை பெற்றான், என்று எவ்வளவு குரோத எண்ணம் கொண்டவர்களும ஒரு சமயமில்லாவிட்டாலும் மற்றோர் சமயம் சொல்லிக் கொள்வார்களல்லவா! முதல் சிறை அனு பவத்தின்மீது அபிதானசிந்தாமணி, இரண்டாவது முறை என்ன தெரியுமோ? கேளேன் அதையும்.

**ஆலாபனம்**

ஆச்சாரியார் கவர்னர் ஜெனரலாகிவிட்டார்; சென்னை வரு கிறார்பவனிக்காக; கூண்டோடு பிடிபட்டுச்சென்னைச்சிறையில் கொண்டுபோய் வைக்கப்பட்டிருந்தோம்—1948 இல்! நிர் வாகக் கமிட்டியினர் அவ்வளவு பேரும்—அதிகநாட்க ளில்லை—ஒரு வாரம்தான்! அதற்குள் ஆச்சாரியார் வந்தார், பவனி நடத்தினர், கருப்புக்கொடியை வெண்புரு பறக்கவிட் டுக் கொண்டு வானத்திலே வட்டமிடக் கண்டார், கட்டுக் காவல் பலமாக இருந்தும், அத்தனையையும் துளைத்துக் கொண்டு சென்று சிலர் கருப்புக்கொடி வீசிடக் கண்டார். நாங்கள் உள்ளே இருந்தோம். பெரியார் இருக்கிறார்; சம்பத்துஅதுபோதுதான் ஆபத்தான டைபாய்டிலிருந்துவிடு பட்டு அவன் துணைவி கண்டு பரிதாபப்படத் தக்க (இப்போது பயப்படுவதாகக் கேள்வி! உருவம் கண்டு!) நிலையில் எலும் புக்கூடாக இருக்கிறன். மற்றும் பலர் எல்லோரும்; குடும்பம் முழுவதும்: இருமி இளைத்து ஈளைகட்டிய நிலையில் இருந்த நமது மனதுக்குகந்த அழகிரிசாமி அண்ணன் உட்பட.

நானும் அழகிரி அவர்களும் அப்போது பக்கத்துப் பக்கத்து அறை.

இரவு நேரத்தில், எனக்கு விருந்து கிடைக்கும்—பக்கத்து அறையிலிருந்து,

''காணக் கண் கோடி வேண்டும்''—என்று ஆரம்பிப்பார் ஓரடி பாட! பலே! பலே! ஒன்ஸ்மோர்! என்று நான் இந்தப் பக்கத்து அறையிலிருந்து கூவுவேன்.

''தூங்கவில்லையா இன்னும்—அடே அப்பா! நீ தூங்கினால்தான் நான் பாட முடியும்; நான் பாடுவதைக் கேட்டு விட்டுக் காலையில் கேலி செய்ய நினைக்கிறாய்—இடங் கொடேன்'' என்பார். ''அண்ணேன்! உண்மையாக நன்றாகவே இருக்கிறது. கொஞ்சம் ஆலாபனையும் நடக்கட்டும்'' என்பேன்—அழகிரி அவர்களின் ஆலாபனமும் அருணசலக் கவிராயர் இயற்றிய கீர்த்தனையும் கிடைக்கும். இரண்டாம் முறையாகக் கண்ட சிறை அனுபவத்திலே எனக்குக் கிடைத்த இந்த ஆலாபனத்தையும், நான் எப்போதும் மறந்திட முடியாது. எப்படி முடியும்? எவ்வளவு சுவை என்கிறீர்கள்— நித்த நித்தம்!

அலாதியானதோர் வகையான சுவை கிடைத்தது மூன்றும் முறை சென்றபோது—இதுவும் சில நாட்கள்தான்—இந்தச் சுவை, ஆறு பிஸ்கட்டுகளால் கிடைத்தது, அதைக் கேட்கிறாயா தம்பி, கூறுகிறேன்.

**ஆறு பிஸ்க்கட்டுகள்**

''ஆறு நூறு அபராதம், கட்டத் தவறினால் நாலு மாத சிறைவாசம்'' என்று தீர்ப்பளிக்கப்பட்டது: அபராதம் செலுத்தவில்லை, சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன், திருச்சியில்; எனக்குக் கிடைத்த வாய்ப்பு எப்படிப்பட்டது தெரியுமா தம்பி, பெரியாரும் அதே நாளில், அதேவிதமான தண்டனை பெற்று, அதே சிறைக்கு வந்தார், இருவரையும் ஒரே போலீஸ்வானில்தான் ஏற்றிச் சென்றார்கள்.

திராவிடர் கழகமாக இருந்தபோது இப்படித்தானே நடந்திருக்கும், இதிலே என்ன ஆச்சரியம் என்று சொல்லுவாய், தம்பி! இது, திராவிட முன்னேற்றக் கழகமாக நீயும் நானும் மாறின பிறகு, நடைபெற்ற நிகழ்ச்சி - 1949 இல்.

'ஆரிய மாயை' எனும் ஏடு தீட்டியதற்காக எனக்குச் சிறை.

''பொன்மொழிகள்'' தீட்டியதற்காகப் பெரியாருக்குச் சிறை.

திருச்சி கோட்டாருக்கு இப்படி ஒரு காட்சியைக் காண வேண்டுமென்று ஆசைபோலும். இரண்டு தனித்தனி வழக்குகள்; தனித்தனியாகத்தான் விசாரணைகள்; எனினும் 'தீர்ப்பு மட்டும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் அளிக்கப்பட்டது.

பிரிந்து நெடுந்தூரம் வந்துவிட்ட என்னை, அன்று அந்தக் கோர்ட்டில், பெரியாருக்குப் பக்கத்திலே நிற்கச் செய்து, வேடிக்கைப் பார்த்தது வழக்கு மன்றம். போலீஸ் அதிகாரிகள் அதை தொடர்ந்து, ஒரே வானில் ஏற்றிச் சென்றனர்; அதைத் தொடர்ந்து திருச்சி மத்திய சிறையிலே இருந்த அதிகாரி, பெரியார் கொண்டுவந்திருந்த சாமான்களைக் கணக்குப்பார்த்துச் சரியாக இருக்கிறதா என்று கூறும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். என் வாழ்க்கையில் நான் மறக்க முடியாத சம்பவம்; எனக்கு உள்ளூரப் பயந்தான்!

கேள்விக்கணையுடன் நிறுத்திக்கொள்ளாமல், அன்புக் கணையையும் ஏவினால், என்னால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும் என்றெல்லாம் அச்சப்பட்டேன். ஆனால் இடையிடையே ஒரு தைரியம் எனக்கு; பெரியார் அவ்விதமெல்லாம் எண்ண மாட்டார்—அவர் மனதில் அந்த அளவுக்கு விரோதத்தை வடித்தெடுத்துப் பாய்ச்சிவிட்டிருக்கிறார், அந்த வித்தையிலே விற்பன்னர்; எனவே பயமில்லை என்றிருந்தேன்.

பக்கத்துப் பக்கத்து அறை; பகலெல்லாம் திறந்துதான் இருக்கும்; பலர் வருவார்கள், இங்கு சிறிது நேரம், அங்கு சிறிது நேரம். இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள், நாங்கள் இருவரும் பேசிக் கொள்கிறோமோ என்று: அவர் அறைக்கு உள்ளே இருக்கும்போது நான் வெளியே மரத்தடியில்! அவர் வெளியேவர முயற்சிக்கிறார் என்று தெரிந்ததும் நான் அறைக்கு உள்ளே சென்றுவிடுவேன்.

இப்படிப் பத்து நாட்கள்!!

நாளைய தினம் எங்களை விடுவிக்கிறார்கள்—முன் தினம் நடுப்பகலுக்கு மேல், ஒரு உருசிகரமான சம்பவம் நடைபெற்றது.

பெரியாருக்கு வேலைகள் செய்துவந்த கைதி என் அறைக்குள் நுழைந்து, "ஐயா! தரச்சொன்னார்" என்று சொல்லி என்னிடம் ஆறு பிஸ்க்கட்டுகள் கொடுத்தான். கையில் வாங்கியதும், என் நினைவு பல ஆண்டுகள் அவருடன் இருந்தபோது கண்ட காட்சிகளின்மீது சென்றது.

மறுநாளே திடீரென்று 'விடுதலை' கிடைத்தது.

அந்த வேடிக்கையையும் கேள் தம்பி.

எங்களை விடுதலை செய்யப்போகிறார்கள் என்ற செய்தி, உள்ளே எங்களுக்குத் தெரிவதற்கு முன்பே, வெளியே தெரிந்துவிட்டிருக்கிறது. எனவே, எங்களை அழைத்துச்

செல்ல நண்பர்கள் வெளியே 'முஸ்தீபுகள்' செய்யத் தொடங்கிவிட்டிருந்தனர். நமது கழகத்தார் முஸ்தீபுகளிலே மும்முரமாக ஈடுபட்டு, நேரத்தை மறந்துவிட்டனர்;எனவே, சிறைக்கதவு திறக்கப்பட்டு எங்களை வெளியேஅனுப்பியதும், வாசற்படி அருகே, பெரியாரை அழைக்க வந்தவர்கள் கொண்டுவந்த 'மோட்டார்' தான் இருந்தது. அதற்கு என்னை யும் அழைத்துச் சென்றனர்; இது போதாதென்று, 'போட்டோ' எடுப்பவர் ஒருவர் ஓடிவந்தார்—இருவரும் அப் படியே, நெருக்கமாக நில்லுங்கள் என்று, போட்டோ எடுப் பவர்களுக்கே உரித்தான சாமர்த்தியத்துடன்கூறி, போட் டோவும் எடுத்துவிட்டார், அது வெளியிடப்படவில்லை; வெளியிடாதிருந்தது நல்லது தான் என்றே சொல்லுவேன், அவ்வளவு திகைப்பு என் முகத்தில் இருந்தது, அவர் எப்படி இருந்தாரோ, எனக்குத் தெரியாது. வேதாசலம் அவர்கள் வீடுவரையில் சென்று, அவர் இறங்கிக்கொண்டார். நான் அதே மோட்டாரில் சாம்பு இல்லம் சென்றேன்.

கவனித்தாயா, தம்பி, எனக்கு ஏற்பட்ட இந்த அனு பவத்தை.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு தனி அமைப் புக்குப் பெரியதோர் ஆபத்து,இந்தப் பத்து நாட்கள் என்று நண்பரொருவர் கூறினர். உண்மைதான். நான் அவ்வளவு சுலபத்திலே மனதைக் கரையவிட்டு விடுபவன்தான்.ஆனால் பத்து நாட்கள் அவருடன் பேசி,மீண்டும் பழைய நேசத் தைப் பெறுவதற்கான வாய்ப்பு என்னைத் தட்டித்தட்டி அழைத்த போதும்,நான் அந்தச் சபலத்துக்கு இடம் கொடுக் காமலிருந்தேன். காரணம் கிராதகன் என்பதல்ல, நான் ஒரு அமைப்புக்குப் பொறுப்பாளியாக்கப்பட்டு விட்டதால், நான் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும், அந்த அமைப்பை உருக்குலைக்கக் கூடியதாக இருக்கக் கூடாது என்ற நேர்மை யான எண்ணத்தினல்தான்.

*நாலுசக்லெட்!*

மும்முனைப் போராட்டத்திலே ஒரு நாள், எனக்கு நண்பர் குருசாமியுடன் சேர்ந்து சிறையில் இருக்கும் வாய்ப் புக் கிடைத்தது. அவர் சிறையில் கீழ்வரிசை அறையிலே தங்கியிருந்தார்—நான் தம்பிகளுடன் மேல் அறையில், மாடியில்! பார்! பார், இதிலே கூடக் கீழ்மேல் பேசுகிறன் என்று கூறிவிடப் போகிறர்கள்.தம்பி,குருசாமிக்கு அப்போது உடல் நலம் இல்லை, எனவே மாடி ஏறவில்லை. அந்த ஒரே நாளில் எனக்குச் சுவையானதோர் அனுபவம்—அதையும் நான் மறப்பது இயலாது.

என்னைக் காண நண்பர் சிலர் வந்தனர்—அதே சமயத்தில் தோழர் குருசாமி அவர்களைக்காண தோழியர் குஞ்சிதமும், ரஷியாவும் (விரைவில் டாக்டர்!) வந்திருந்தனர். சந்தித்தோம்—கம்பிகள் இடையில்! கம்பிகள் மட்டுமா, அமைப்புகளே வேறுவேறு ஆகிவிட்ட நிலைமை. தோழியர் குஞ்சிதம் அவர்கள் நாலு சாக்லெட்டைத் தந்தார்கள்! அதைவிடச் சுவையுள்ள உணவு எனக்கு அவர்கள் இல்லத்தில் பலமுறை கிடைத்தது உண்டு. ஆனால், அந்த நாலு சாக்லெட்டுக்கு உள்ள சுவையே அலாதியானதல்லவா.

*ஐயாயிரவர்*

தம்பி! எனக்கு ஏற்பட்டது போன்ற பல்வேறு வகையான சுவையுள்ள சிறை நினைவுகளை இப்போது பெறக் கூடியவர்கள் ஐயாயிரம் தோழர்கள் உள்ளனர், நமது கழகத்தில். அவர்கள் இன்று ஒரு அமைப்பைக் கட்டிக்காக்கும் பெரும் பொறுப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். தத்தமது தனி உணர்ச்சிகள், அமைப்பின் தரத்தையும் தன்மானத்தையும் உயர்த்துவதாக இருத்தல் வேண்டும் என்ற நேர்மையுணர்ச்சியுடன் இருக்கிறார்கள். அவர்களின் அனுபவம், சாதாரணமானதல்ல; நடாத்திய அறப்போரும் சாமான்யமானதல்ல.

நாம் அடக்குமுறைகண்டு அஞ்சுபவர்களா, அதனை எதிர்கொண்டு மார்பில் ஏற்றுக் கொண்டவர்களா என்பதை, பெற்றுள்ள தியாகத் தழும்புகள் நமக்கெல்லாம் எடுத்துக் காட்டுகின்றன—பிறர் தரும் தீர்ப்புத் தேவையில்லை—நாம் பட்ட தடியடியும், சிறைவாசக் கொடுமையும், நினைவிலே எப்போதும் இருக்கிறது.

ஒரு பெரும் போராட்டத்தை நடத்திடத் தக்க அமைப்பு முறையும் ஆற்றலும் நமக்கு உண்டா? நாம் இப்போதுதானே பிரிந்து வந்து புதுப்பாசறை அமைத்திருக்கிறோம், என்ற அச்சமும் சந்தேகமும் எனக்கு இருந்தது—அதிலும் எங்கள் ஐவரை முதலிலேயே கூண்டுக்குள்ளே தள்ளி மூடிவிட்ட பிறகு, என் சந்தேகம் அதிகமாகிவிட்டது.

"சம்பத்து! சரியாக நடக்குமா...?" என்று கேட்பேன் ஆயாசத்துடன்.

"நீங்கள் உள்ளேவந்துவிட்ட பிறகு, கிளர்ச்சி நடப்பதற்குத் தங்கு தடை ஏது, ஜோராக நடக்கும்" என்பான் குறும்புடன்.

"ஒரு ஐந்நூறு பேர் சிறைப்படுவார்களா?—"என்று கேட்பேன் தைரியத்தோடல்ல.

"ஐந்து நூறு......இருக்கும்......ஆயிரம்கூட இருக்கலாம்" என்று உற்சாகத்தை மெள்ளமெள்ள வரவழைத்துக் கொண்டு பேசுவார் நெடுஞ்செழியன்.

பத்திரிகைகளைப் பிரித்தோம், ஏ! அப்பா! நாம் சம்பந்தப் பட்ட இயக்கமா இது—என்று நான் ஆச்சரியப்பட்டேன்—பத்திபத்தியாக—பக்கம் பக்கமாக—கிளர்ச்சிச் செய்திகள்—நூறு, ஐந்நூறு, ஆயிரம், இரண்டு, மூன்று என்று வளருகிறது ஐயாயிரம் என்று சொல்லத் தக்க அளவிலே வளர்ந்தது. தடியடிபட்டோர், துப்பாக்கிக் குண்டடிபட்டோர், என்ற வகையில் செய்திகள் உருவெடுத்தன. தமிழகம் மட்டுமல்லாமல், இந்திய பூபாகம் முழுவதிலுமே, இந்தக் கிளர்ச்சி பற்றிய பரபரப்பான செய்தியைத்தான் கவனித்தன. அமெரிக்க நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் 'செய்தி' வெளிவந்தது என்றால், பார்த்துக்கொள் தம்பி, கிளர்ச்சி எந்த அளவு வலுத்து இருந்தது என்று.

தம்பி! எந்தப் போராட்டத்தையுமே தங்கள் போராட்டத்துக்குச் சமமாகாது என்று எண்ணி, ஏளனம் பேசுவதும், தாங்கள் துவக்கும் போராட்டத்திலே தான் மற்றவர்கள் வலிய வலிய வந்து சேரவேண்டுமே தவிர, பிறர் நடத்தும் போராட்டத்தில் கலந்து கொள்வதோ, அது முடியாது என்றால் இன்முகம் காட்டுவதோகூடத் தேவையில்லை, என்றும் பேசுபவர்களல்லவா, கம்யூனிஸ்டுகள். அந்த அதி தீவிரக் கட்சியின் தலைவர்களிலே இருவர், M.L A-க்கள். மணலி கந்தசாமியும், ஈரோடு கே.டி. ராஜு அவர்களும் சிறையில் என்னைச் சந்தித்து, வெளியே நடைபெறும் நமது போராட்டம் பற்றித் தங்கள் மகிழ்ச்சி, நம்பிக்கை, பாராட்டுதல் ஆகியவைகளைத் தெரிவித்துச் சென்றனர் என்றால், கிளர்ச்சியின் தன்மை எப்படி இருந்திருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அன்புள்ள,

31—7—1955.

கடிதம் : 13.

# அளவுகோல் எது?

*பெரியாரின் கொடி எரிப்புப் போராட்டம்-பெரியார் தன்மைகள்.*

தம்பி,

நாடு பெருங் கொந்தளிப்பில் சிக்கிவிடும், திராவிடர் வீடுகளில் இளைஞர் பலர் துப்பாக்கிக்கும் தடியடிக்கும் இலக்காகி இம்சிக்கப்பட்டது பற்றியும், சிறையில் போட்டு அடைக்கப் பட்டனர் என்பது குறித்தும் பேசிடும் காட்சிகள் இருக்கும், கலாம் செய்வோருக்கும் குழப்பம் விளைவிப்போருக்கும் நல்ல வேட்டையாடும் வாய்ப்பு ஏற்படும். சச்சரவுகள், சமர், சந்து முனை அடிதடிகள், உருட்டுக் கண்ணினர் மிரட்டும் குரலினர் ஆகியோருக்கெல்லாம் நிரம்ப வேலை கிடைத்து வேண்டத் தகாத நிகழ்ச்சிகள் பல நெளியும் என்றெல்லாம் நீயும்நானும் அச்சப்பட்டுக் கொண்டிருந்தோம், சென்ற கிழமை

பெரியார் சிறைப்படுவதுடன், அவர்மீது பயங்கரமானது என்று கருதப்படும் தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, வழக்கு நடைபெறும், என்று அஞ்சினோம்.

டில்லிமந்திரி பந்த் மிரட்டிய போதும் சரி, பெரியார் தமது போர் பற்றிய விளக்கமளிக்கையில் 300 பேர் சாக வேண்டி நேரிடலாம், 1000 பேர் காயப்படவேண்டி நேரிடக் கூடும், ஒரு பத்தாயிரம் பேர் சிறை செல்லவேண்டி ஏற்படக்கூடும் என்று கூறினர்—அதனைக் கேட்டபோதும் உண்மையிலேயே நான் பதறிப் போனேன்.

எப்படியோ ஒன்று நமக்கெல்லாம் நிம்மதியும் நாட்டுக்கு அமைதியும் கிடைத்திடத்தக்க விதமாக நிலைமைஉருவெடுத்தது—மகிழ்கிறேன், தம்பி, உண்மையிலேயே பூரிப்படைகிறேன்.

அதிர்ச்சி தரும் அமளிகள், மயிர்க் கூச்செறியத்தக்க கிளர்ச்சிகள், மூக்கின்மீது விரல்வைத்து ஆச்சரியப்படத் தக்கதானபோராட்டங்கள் ஆகியவைகளின்மூலமாகப்பெறக் கூடிய புதுவலுவைவிட, நாட்டு மக்களிடம், குறிப்பாக இன்னமும் காங்கிரசிலுள்ள திராவிட மக்களிடம் கொள்கையைப் புகுத்துவதிலே பெறுகிற வெற்றியையே நான் பெரிதும்

விரும்புகிறவன். அப்படிக் கூறுவதால் போரே கூடாது என்பவனல்ல; போரில் கலந்து கொள்ளாதவன் என்றே போர் வாடைஅடிக்கும்போதுபுதுடில்லிக்குஉற்போக வேட்டைக்கு ஓடிவிட்டவனென்றே பொருள் கொள்ளப் பொறுப்புள்ள யாரும் துணிமாட்டார்கள்—எதையும் துணிவுடன் கூறிடும் போக்கினர் பற்றி நான் பொருட்படுத்தப் போவதில்லை.

காங்கிரஸ்காரர் மனதில், வேதனை, வெறுப்புணர்ச்சி, பகை உணர்ச்சி மூட்டிவிடக்கூடிய வகையிலே கிளர்ச்சிகள் அமைவதை, நான், இன்று அல்ல, எப்போதுமே விரும்பியதில்லை. இந்த என் எண்ணத்தை எடுத்துரைக்க என்றும் தயங்கினதுமில்லை.

ஆகஸ்டு முதல் நாள் அய்யா அவர்கள் சொன்னபடி கொடி கொளுத்தப்பட்டிருந்தால், நிச்சயமாக அவரைத் தூசி கூட அணுகாது. அவரைப் பொறுத்தமட்டில் எத்தகைய எதிர்ப்பும் பகையும் துரும்பு; எனவே, அவருக்கு ஒரு சிறு குறைபாடும் ஏற்படாது ஆனால். அன்று, மூண்டிருக்கக்கூடிய பகை உணர்ச்சியும் வெறுப்புணர்ச்சியும் நிச்சயமாக திராவிட இயக்கத்தைப் பல ஆண்டுக் காலத்துக்குப் பழிக்கும் பகைக்கும் உள்ளாக்கிவிட்டிருக்கும். 'பரவாயில்லை, அவர்கள் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது' என்று சொல்லும் அளவுக்கு நம்மை நெருங்கி வந்துகொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்கள், நாம் கூறும் எதையும் ஏற்றுக் கொள்ளலாகாது என்ற அளவுக்கு நம்மை விட்டு விலகிவிடுவார்கள்.

தம்பி, ஒரு கொள்கையை அடிப்படையாக வைத்துப் பணியாற்றும்போது நாளாகவாக எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக அந்தக் கொள்கை ஒரு சிலரிடம் பதிந்து விடுகிறது என்பது மட்டுமல்ல, வெற்றிக்கு வழி, நாளாகவாக எவ்வளவுக்கெவ்வளவு விரிவடைகிறது, பரவுகிறது, மாற்றாரை உற்றார்ஆக்குகிறது, என்பதுதான் வெற்றிக்குப் பெரிதும் துணை செய்யும்.

இந்த முறையிலேதான், நான், பலகாலமாகவே, காங்கிரஸ் கட்சியில் இன்று உள்ள திராவிடத் தோழர்களில்—அந்தக் கட்சியாலேயே வாழ்ந்து தீரவேண்டியவர்கள் தவிர—மிகப்பலரை நம்மிடம் கொண்டுவந்து சேர்க்கும் வகையான கிளர்ச்சி வேண்டும் என்று கூறிவருகிறேன்.

கோழைத்தனம் என்கிறார், பெரியார்.

ஏறக்குறையப் பதினைந்து ஆண்டு பயிற்சிக்குப் பிறகும்—பெரியாரிடம்தான்—பார் தம்பி! என்னை விட்டுக் கோழைத்தனம் போகவில்லை என்றால், (பெரியாரே கூறுகிறார்?) என் போன்றவர்களையே ஏராளமாகக் கொண்டுள்ள திராவிடக்

சமுதாயத்துக்கு, ஏற்றதான ஓர் திட்டமல்லவா தீட்டவேண்டும், தாங்கிக் கொள்ள வேண்டுமே, தம்பி!

ஒரு படைத் தலைவரின் ஆற்றலும் அஞ்சாமையும், இடுக்கண் கண்டு கலங்காத போக்கும், ஒரு படையிலுள்ள கோழைகளையும் வீரர்களாக்கிவிடும் - வரலாறு அத்தகைய சம்பவங்கள் பலவற்றைக் காட்டுகிறது—ஆனால், தம்பி, உற்றுக் கவனித்தால் உனக்கு உண்மை விளங்கும்—இவைகள் சம்பவங்கள்! அவ்வளவுதான்!

போர் முறை என்பது இந்தச் 'சம்பவங்களை' இலக்கணமாகக் கொள்வது அல்ல.

எதிரே ஒரு பெரிய படை, தம்பி, எல்லாப் போர்க்கருவிகளுடனும். இந்தப்புறம் ஒரு சிறு படை, பழுதான படைக்கலங்களுடன். ஒரு சிறு கணவாய்தான இடையில். அதைக் கடந்து அப்பெரும்படை வந்துவிட்டால் இந்தப் படை சின்னா பின்னமாகிவிடும்—என்று வைத்துக் கொள்—தம்பி, நீயும நானும் அந்தச் சிறிய, ஆனால் சீரிய படையில் இருப்பதாக எண்ணிக்கொள்—நமது படைத்தலைவர் அந்தச் சமயத்தில், அபாரமான வீரதீரம் காட்டி, கணவாயைக் கடந்து, பெரும் படையினைத் துளைத்துக்கொண்டு செல்ல ஆயத்தமாகி வருக! என்று உத்தரவிட்டு முன்னேறுகிறார், என்றால், பெரியபடை கண்டு பீதி கொள்ளத் தக்க வகையில், சிறிய படை தழலெனப் பாயும், கணவாய் இரத்த ஆறாக மாறும், உலக வரலாற்றிலே வீரத்துக்கு ஓர் ஒப்பற்ற சம்பவம் பொறிக்கப்பட்டு விடும்.

இதைத்தான் நான் சம்பவம் என்கிறேன். இத்தகைய சம்பவம் பற்றிப் படிக்குந்தோறும் படிக்கப் பக்கம் நின்று கேட்குந்தோறும், வீரம் வீறிட்டெழச் செய்கிறது. என்றாலும், தம்பி, சிறிய படை கணவாயில் பாய்ந்து சென்று பெரிய படையைத் தாக்கி வெற்றி தேடுவதுதான், போர் முறை என்று இலக்கணம் அமைத்துக் கொள்ளமாட்டார்கள்.

போர்க்களத்து எடுத்துக்காட்டினைக் கூறினால், என்னமோ போல இருப்பதானால், தம்பி, இதோ இந்த உதாரணத்தை வேண்டுமானால், கேள்.

கட்டுக் காவலில் உள்ள கட்டழகி, மாடியில்.

அவளைக் காதலிக்கும் ஆணழகன், பக்கத்துத் தோட்டப் புறத்தில்.

கண்ணும் கண்ணும் பேசிவிட்டது—பெற்றோர் பேயராகி விட்டனர் - நெஞ்சைத் தொட்டிடும் காதற் கடிதம் தீட்டியிருக்கிறான் அந்த நேரிழையாளுக்கு; அதை நேரிடையாகத் தரமுடியாது; எனவே, அதனைச் சிறு கல்லில் சேர்த்துக் கட்டி

விட்டெறிகிருன்—அது அவள்மீது பட்டபோது, கல்லே மல ராகி விடுகிறது—கண்களில் ஒத்திக் கொள்கிருள்—

இது காதலருக்கு ஒரு சம்பவம்,

ஆனல், காதலுக்கே இதுதான் இலக்கணம் என்று கொண்டுவிடக் கூடாதல்லவா.

போரிலும் காதலிலும் சந்தர்ப்பங்கள், சில சம்பவங்களே உருவாக்கும்; அந்தச் சம்பவங்களே மட்டுமே கொண்டு, அவைகளுக்கு இலக்கணம் வகுத்துக் கொள்ளக்கூடாது.

அதே முறையிலேதான், கொடிகளே எரிப்பதும், கோட் டைக் கொடிமரத்தை வெட்டிச் சாய்ப்பதும், குத்தீட்டி வீசு வதும், கொல்லும் வேழத்தை ஏவுவதும்—எல்லாம் சம்பவங் கள்—விடுதலேப் போரிலே—பல நாடுகளிலே.

அந்தச் சம்பவங்கள், திட்டமிட்டு நடைபெற்றவை அல்ல.

அந்தச் சம்பவங்களேக் கொண்டு, ஒரு போர்முறை வகுக் கப்படுவதில்லே

இந்த எண்ணம் எனக்கு மேலிட்டதால்தான், ஆகஸ்ட் டில் நடைபெற இருந்த அந்தக் காரியம், அவசியமற்ற பகை யையும், அணேக்க முடியாத குரோதத்தையும், போக்க முடி யாத பழியையும் உண்டாக்கிவிடும் என்று அஞ்சினேன்.

காரணம் எதுவாகவேனும் இருக்கட்டும், அந்தச் சம்ப வம் நடைபெறவில்லே. கடைசிநேரத்தில், கொடி கொளுத் துவதைப் பெரியார் நிறுத்திக் கொண்டார்.

எனக்குள்ள பிரச்சினே, போதுமான வாக்குறுதி பெற்றுக் கொண்டு நிறுத்திஞரா, இல்லேயா என்பதல்ல. என் மகிழ்ச்சி கொடி கொளுத்துவது நிறுத்தப்பட்டது என்பதில்தான்.

பெரியாருக்கு இன்று உள்ள பெரும் செல்வாக்கு சாமான் யமானதல்ல—அதைக் குறைத்துமதிப்பிடும்கயவனல்ல நான் —காங்கிரசிலே உள்ளவர்களிலேயே சில பலருக்கு இன்று செல்வாக்கு இருப்பதை,உதாரணமாகக் காமராஜருக்கு நல்ல செல்வாக்கு இருப்பதை ஒப்புக் கொள்ளும் நான், பெரியா ருக்கு உள்ள செல்வாக்கையா குறைத்து மதிப்பிடுவேன். அவருக்கு இன்றுள்ள செல்வாக்கும், அதனே ஈட்டிட அவராற் றியுள்ள அரும் பெரும் பணியும் அபாரம். எதற்கும் அஞ்சு பவரல்ல! எதிர் நீச்சலில் பழகியவர்! கொடி கோட்டை வாச லில் உள்ளதை கொளுத்த வேண்டுமென்ருலும், அதனுல் ஏற் படக் கூடிய ஆபத்துபற்றித் துளியும் கவலேப்பட மாட்டார். அது அவருக்குச் சேவையால் கிடைத்தது மட்டுமல்ல, அவரு டைய சுபாவமே அத்தகையது. அந்தக் குறுகுறுப்பான கண் களிலேயே நான் பல சமயங்களில் கோபம் கொந்தளிக்கக்

கண்டிருக்கிறேன், அடிக்கடி அலட்சியத்தைக் கொட்டக் கண்டிருக்கிறேன், சில வேளைகளில் பரிவு பச்சாதாபம் தோன்றிடக் கண்டிருக்கிறேன். ஒருபோதும் அந்தக் கண்களிலிருந்து பயம் கிளம்பக் கண்டதில்லை. நானொன்றும், தம்பி, பத்து கெஜத் தொலைவிலே இருந்து அவரைப் பார்த்துப் பூரித்தடும் இரசிகனல்ல. பக்கத்திலேயே பத் தாண்டுகளுக்கு மேலாக இருந்தவன்; அவரைப் பல கோணங்களிலே இருந்து பார்த்தவன்—பல பிரச்சினைகள் குறித்த அவருடைய பிரத்தியேகக் கருத்துக்களை அறிந்தவன்—'மேஸ்திரி' வேலையல்லவா பார்த்திருக்கிறேன்.

எனவேதான், திராவிட இயக்கத்தில் வகுக்கப்படும் போர்த்திட்டம், அவருடைய ஆற்றலை அளவு கோலாகக் கொண்டு மட்டும் அமையக் கூடாது, எந்தக் கொள்கைக்காக இயக்கம் நடைபெறுகிறதோ, அந்தக் கொள்கைக்குத் தீராப் பகையைத் தேடிப் பெறுவதாக இருத்தல் ஆகாது-பரவலான அளவில் செல்வாக்குப் பெறத்தக்கதும்; பகைக் கூடாரத்தில் உள்ளவர்களின் உள்ளத்திலும் பரிவு ஊட்டக் கூடியதுமான தாகத் திட்டம் இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். பிரிந்த பிறகு ஏற்பட்ட பித்தமல்ல இது, ஒன்ருக இருந்த நாள்தொட்டு எனக்குள்ள கருத்து.

துளைத்துவிட்டார்! துளைவிட்டார்! என்று இனிப்புப் பண்டத்தைச் சப்பிக்கொண்டு களிப்புக் கூச்சலிடும் சிறுர் போல, பெரியார், கடற்கரைக் கூட்டத்திலே தி.மு.க.வையும் குறிப்பாக என்னையும் துளைத்தெடுத்தார்என்று மகிழ்ச்சியுடன் கூறுகிருர், குத்தும் குணுளர். அவருக்கு மகிழ்ச்சி கிடைப்பது பற்றி எனக்கு எப்போதுமே அதிருப்தி இருந்ததில்லை.

நான் 'துளைக்கப்பட்டேன்' என்று எந்தக் கடற்கரைப் பேச்சுபற்றி அந்த நண்பர் களிப்படைகிருரோ, அந்தக் கடற்கரை மணல் அறியும், பெரியார் குறித்து இவர் கொண்டிருந்த கருத்துகளை. பழங்கதை—பழங்கதையாகவே போகட்டும்.

என்னை ஏசட்டும், பரவாயில்லை.—நான் தாங்கிக் கொண்டு பழக்கப்பட்டுவிட்டேன்.

ஆனால் ஆகஸ்ட்டு நடைபெற்றிருந்தால், அதனல் ஏற்பட கூடிய பகை உணர்ச்சி, திராவிடர் இயக்கத்துக்கு நிச்சயமாக ஊறு செய்திருக்கும்.

காங்கிரஸ் வட்டாரத்திலே கிளம்பக்கூடிய பகை உணர்ச்சியும், பொதுமக்கள் மனதிலே கிளம்பக் கூடிய அருவருப்பு உணர்ச்சியும், பெரியாரை அசைக்காது!

அவர் அத்தகைய விரோதப் பெருவெள்ளத்தை எதிர்த்து நிற்க வல்லவர்.

ஆனால், அவர் விரும்புகிற கொள்கைக்காக இருந்து பணியாற்றும் இயக்கம் இருக்கிறதே, தம்பி, திராவிட இயக்கம், அது விரோதப் பெருவெள்ளத்தால் மெத்தப் பாதிக்கப்பட்டு விடும்.

எனவேதான், கோழை என்றோ காட்டிக்கொடுப்பவன் என்றோ, வஞ்சகன் என்றோ, பிஞ்சு சொத்தை என்றோ, எதைச் சொல்லி என்னை ஏசினாலும் பரவாயில்லை, இயக்கத்துக்கு மட்டும், அதிர்ச்சி தராமலிருந்தால் போதும் என்று கருதினேன்.

பெரியாருக்கு உள்ள அஞ்சாமையும், எதிர்நீச்சுத் தன்மையும். எத்தகைய நிலைமையையும் சமாளிக்கும் திறமையும், எவருடைய விரோதம். குரோதம், பகையாயினும்சரி, எத்தகைய பூசலாயினும் சரி, இவைகளைத் துச்சமெனக் கருதிடும் நெஞ்சழுத்தமும், இயக்கத்தில் நிரம்பி, ததும்பி இருக்கிறது என்று நான் நம்பவில்லை. பெரியாருக்கும் அந்த நம்பிக்கை இல்லாததால்தான், அடிக்கடி அவர் இப்படிப்பட்ட சமயத்தில் என்னையே நம்பி இதிலே ஈடுபடுகிறேன் என்று வெளிப்படையாகவே எடுத்துக் கூறி இருக்கிறார்.

நாம் மேற்கொண்டுள்ள நாட்டு விடுதலை வெற்றிபெறுவதற்கு, இத்தகைய ஒப்பற்ற ஒரு தலைவரின் உள்ளத் திண்மை மட்டும் போதாது, மேலும் மேலும் வலுவு பெற்ற வண்ணம் ஒரு கட்டுப்பாடான இயக்கம் வளர்ந்தாக வேண்டும். அந்த வளர்ச்சியை ஆகஸ்ட்டுக்கெடுத்துவிட்டிருக்கும் -- என்பதனால் தான், நான். அதை விரும்பவில்லை

பெரியார், எப்படிப்பட்ட 'வெறுப்பை'க் காங்கிரஸ் வட்டாரம் வெளிப்படுத்தினாலும் தாங்கிக் கொள்ளக் கூடியவர்— இயக்கம் தாங்கிக் கொள்ள முடியாது—இது, தம்பி, அங்கு உள்ள சிலருக்குப் பிடிக்கவில்லை – நான் இதைக்கூறும்போது பெரியாருக்கு நான் ஏதோ ஊறு தேடுவதாகக் கருதுகிறார்கள். அவர்பால் கொண்ட அன்பைக காட்டிக்கொள்வதற்கு, எளிதான, சுவையுள்ள வழி உன்னையும்என்னையும் ஏசுவதுதான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில். பெரியாருடைய திறமையையும் அவர்பெற்றுள்ள செல்வாக்கையும் இமமி அளவும் நான் குறைத்து மதிப்பிடாததால்தான். அவர் தன் நிலைக்குத் தகுந்த திட்டம் தீட்டும்போது, அது முறையல்ல, இயக்கத்தின் இன்றைய நிலைமைக்குத் தக்கபடியானதும், அதன் எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்காத முறையிலும் திட்டம் வேண்டும் என்று கேட்கிறேன்—ஓஹோ! நீ யார் கேட்க, என்பார்கள்! வினயமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களையும் பெரியாருக்குச் சமமானவராகவும்,(உள்ளூர, அதைவிட உயர்ந்த திறமையுள்ளவராகவும்) அவருக்கு

ஏற்றதத்தனையும் தமக்கும் உடன்பாடே என்று சொல்வது தான், தாங்களும் பெரியார் அளவுக்கு வளர்ந்து விட்டதாகக் காட்டிக் கொள்வதற்கான வழி என்று கருதுபவர்களாகவும் உள்ளவர்கள்தான், அவர் கூறும் திட்டத்தை அப்படியே ஒப்புக்கொண்டு—அதற்காகச் 'சபாஷ்' பட்டம் பெறுகிறுர்கள்.

> பெரியாரின் நிலே வேறு! இயக்கத்தின் நிலே வேறு! பெரியாரால் தாங்கிக்கொள்ளக் கூடியதை எல்லாம் இயக்கமும் தாங்கிக்கொள்ள முடியும் என்பது தப்புக் கணக்கு.

பெரியாருக்கு உள்ள தன்மையையும் திறமையும், இயக்கத்தில் உள்ள தங்கள் ஒவ்வொருவருக்கும் அதே அளவிலும் வகையிலும்இருக்கிறதுஎன்றுஎண்ணிக்கொள்வது, அவரைப் பூரணமாக அறியாததால் ஏற்படும் தவறு; தங்களேப்பற்றி மிகைப்படுத்திக் கணக்குப் போடுவதால் ஏற்படும் தவறுமாகும்.

தம்பி! அண்ணன் தம்பி இருவர்—அண்ணன் ஊர்ப் பெரிய தனக்காரன்—எங்கும் கலியாணம் கார்த்தி என்றதும், பஞ்சாயத்து பாகப்பிரிவினே என்றதும், அண்ணன்தான் செல்வான்—அமளி அடங்கும், ஊர் சீர்ப்படும்.

தம்பி, ஏருண்டு தானுண்டு என்று இருப்பவன்.

தம்பி, அண்ணன் தனக்கேற்றது செய்கிருன், நாம் நமக்கு ஏற்றது செய்கிரேும் என்றுதான் 'தலேயணே மந்திரம்' ஏறுகிற வரையில் எண்ணிக் கொண்டிருந்தான். அது தலேக்கேறியதும் 'ஏன்! நீ மட்டும் தான் ஊர்ப் பெரிய தனம் பார்க்க வேண்டுமா—நான் என்ன நம்ம குடும்பத்து உழவு மாடா?' என்று அண்ணனிடம் வம்புக்கு நின்ருன். அண்ணன் சூக்ஷமம் தெரிந்து கொண்டான்—''தம்பி! நீயே இனி, ஊர்ப் பெரிய தனக்காரர் வேலேயைப் பார். நான் காடு கழனியைக் கவனித்துக் கொள்கிறேன்—எதற்கும் இரண்டோர் நாள் என்னேடு வா? ஊரில் நடைபெறும் நிகழ்ச்சிகளே நான் எப்படி எப்படிக் கவனிக்கிறேன் என்பதைத் தெரிந்துகொள் வாய்'' என்று கூறி அழைத்துச் சென்ருன்.

அன்று ஒரு சாவு—மகன் கோவெனக் கதறி அழுகிருன், தாய் இறந்ததற்காக.

ஊர்ப் பெரிய தனக்காரனுன அண்ணன், அவனேத் தேற்றி, ''என்னப்பா செய்யலாம்! எவ்வளவு அருமையான குணம், அம்மாவுக்கு எங்களிடமெல்லாம் எவ்வளவு அன்பு தெரியுமா? அதிகம் சொல்வானேன், அவர்கள் உனக்குத் தாய் அல்ல, எனக்கும் தாயாராகத்தான் இருந்தார்கள்'' என்ருன்,

தம்பி, கேட்டுக்கொண்டான்—பூ! பூ! இவ்வளவுதானு, பெரிய தனக்காரன் வேலை – என்றுஎண்ணினுன்—மறுநாளே பட்டத்துக்கு வந்துவிட்டான்.

எட்டாம் நாள் வேருேரிடத்தில் ஒரு இழவு.

மனைவியைப் பறிகொடுத்த கணவன், மண்ணில் புரண்டு அழுகிருன்—"ஐயோ! அவள் போனபிறகு நான் எப்படிவாழ்வேன்—எனக்கேன் சாவுவரக்கூடாது! என்ஆசைக்கனியே! அமுத நிலவே!" என்றெல்லாம் கூறிக் கதறுகிருன். பெரிய தனக்காரனுன தம்பி. அருகே சென்ருன்.அவனை அணைத்துப் பிடித்தபடி, "அழாதே அப்பா! அழாதே! என்ன செய்யலாம்! எவ்வளவு நல்லவர்கள், எவ்வளவு அன்பு! அதிகம் சொல்வானேன், அவர்கள் உனக்கு மட்டுமா மனைவியாக இருந்தார்கள், எனக்கும்தான்" என்ருன்.

சாவு வீடு, படுகளமாகிவிட்டது.

"அண்ணு அண்ணு! எனக்கு வேண்டவே வேண்டாம் இந்தப் பெரியதனக்கார வேலை" என்று சொன்னுன் தம்பி.

கதைதான்—ஆனுல் தம்பி! பெரியார் தனது ஆற்றலுக்குத் தகுந்ததைச் செய்யும்போது,அதை நானும் செய்வேன், என்னுல் முடியும் என்று சொல்லிக் கிளம்புவது, சரியாகாது என்பதற்கான பாடம் இந்தக் கதையில் இருக்கிறது.

இயக்கம் உள்ள நிலையையும், அதன் எதிர்காலவளர்ச்சியையும் கருத்தில் கொண்டுதான் நான் ஆகஸ்ட்டை விரும்பவில்லை, பெரியாரைச் சரியாக மதிப்பிடாததால் அல்ல, மிக மிகச் சரியாக மதிபபிட்டதால்தான்.

எனவே, ஒரு இயக்கம் நடத்தத் திட்டமிடும் கிளர்ச்சி, அதன் தலைவரின் தனிப்பெருந் தன்மையை மட்டும் அளவுகோலாகக் கொண்டு அமைதல் கூடாது, அந்த இயக்கத்தின் இன்றைய நிலைக்கு ஏற்றதாகவும், எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்காததாகவும் இருக்க வேண்டும் என்கிறேன். நன்ருக எண்ணிப்பார், தம்பி! நன்ருக—ஒரு முறைக்கு இருமுறை படித்து விட்டு.

அன்புள்ள,

7—8—1955

அண்ணாதுரை

கடிதம் : 14.

# ஆலையில்லா ஊரில்..

*போராட்டங்களைப்பற்றி அண்ணா — இந்திப் போராட்டம்— பெரியாரிடம் தி.மு.க. பற்றிய தவறான செய்திகள்.*

தம்பி,

நீ மிகவும் பொல்லாதவன்! ஒரு பெரிய 'போராட்டம்' உருவாகிக்கொண்டிருக்கும்போது சும்மா இருந்தாய்—சரி, ஒரு சமயம் திகைப்பினால் அவ்விதம் இருக்கிறாய் என்று எண்ணிக்கொள்வோம்—போராட்டம் முடிந்து, அதன் 'பலா பலன்' பற்றிய கணக்குப் பார்க்கும் இந்தக் கட்டத்திலாவது, உன் கருத்துரையைக் கூறுவாய் என்று எண்ணினேன்—நீயோ அப்படி ஒரு போராட்டம் நடந்ததாகவே கவனிக்க மறுக்கிறாய்—மிகப் பொல்லாதவன்!!

உனக்குத் தெரியுமா? நாம் அந்தப் போராட்டத்திலே கலந்துகொள்ளாததால், நம்மைக் 'கோழைகள்' என்று ஏசுகிறார்கள்!!

என்னடா தம்பி, சிரிக்கிறாய். இது என்ன புதிதா! கோழைகள் என்ற வார்த்தைகளைவிட மிகமிகக்கேவலமான, நஞ்சுகலந்த நிந்தனைகளை எல்லாம் கேட்டிருக்கிறோமே, இது எம்மாத்திரம், என்கிறாய் போலும்.

உண்மைதான், நமது கழகத் தோழர்கள் பக்குவப்பட்டு விட்டார்கள்!!

சிறுசொல் கேட்டுச்சீறும் கட்டம், கண்டனம் கேட்டுக் குமுறும் கட்டம், போய்விட்டது.

நாம் பதில் கூறவேண்டியது நமது நெஞ்சுக்குத்தான், நம்மை வஞ்சகர் என்று கூறிடும் போக்கினருக்கு அல்ல! உடலில் காய்ச்சல் இருக்கிறதா இல்லையா என்பதை அறிய, நாம் நமது உடலைத்தான் பார்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, அடுப்படியைத் தொட்டுப் பார்த்துமல்ல, ஐஸ் கட்டியைத் தொட்டுப் பார்த்துமல்ல.

கோழைகள்!! நாம்!!

தடியுடன் உள்ள போலீஸ்காரர்கள் சிரிப்பார்கள்!

சிறை அதிகாரிகள் சிரிப்பார்கள்!

நாம் பெற்ற தியாகத் தழும்புகளுக்கு முடியுமானல், அவை இடி இடியெனச்சிரித்து, அவர்களைப் பார்த்து ஏளனம் செய்யும்!!

தம்பி, காங்கிரஸ்காரர்கள் தண்டவாளப் பெயர்ப்பு, தபாலாபீஸ் கொளுத்துதல் போன்ற முறையில் ஆகஸ்ட்டுப் போராட்டம் நடத்தினர் 1942 இல்! நாம் கலந்து கொள்ள வில்லை. நாம் என்ருல் தம்பி, நானும், நீயும் மட்டுமல்ல—தி.க. தி.மு.க. என்றுள்ள இரண்டும் ஒன்ருக இருந்ததே, அந்தக் குடும்பம் பூராவும். நாம் பயங்கொள்ளிகள், அடக்குமுறைக்குப் பயந்து ஓடிவிட்டோம், என்ரு பொருள்! அந்த முறைகள் சரியல்ல என்று மனதார நம்பினேம்—வீணை கலகம் கலவரம் குழப்பம் பொருட் சேதம், இவைதான் மிச்சம் என்று எண்ணினேம். எனவே ஒதுங்கி நின்ருேம். அதுபோலத்தான் இப்போது, கொடி கொளுத்தும் காரியத்தில் தி.மு.க. கலந்து கொள்ளவில்லை—இது கோழைத்தனம் என்று கூறுவது எந்த வகையில் பொருந்தும்.

வேண்டுமானல், தமிழ் நாட்டு அரசியலில் இது வாடிக்கை—ஒருவர் மற்றவருடைய கருத்தை அறியும் அளவுக்குக்கூட பாசம் நேசம் கொள்ளாமல் ஒரு திட்டம் தீட்டிவிட்டு, அதன் காரணமாக அதிலே கலந்துகொள்ள மறுப்பவர்களைக் கோழைகள் என்று ஏசுவது தமிழகத்தின் வாடிக்கை, என்று கொள்ளவேண்டியதுதான்! தங்கள் ஆகஸ்டில் சேராததற்காகக் காங்கிரஸ்காரர்கள் திராவிடரைக் கோழைகள் என்று ஏசினர்! இப்போது, நடைபெறும் கிளர்ச்சிகளில் கொடி கொளுத்துவதில் மட்டுமல்ல, எந்தப் போராட்டத்திலாயினும் சரி, நாம் சேராமலிருந்தால், கோழைகள் என்று ஏசுகிருர்கள்! இது பொருளுள்ளது என்று கருத முடியுமா? நீண்டகாலமாக இருந்துவரும் வாடிக்கை—பழக்கம் - என்று தான் கொள்ளவேண்டும்.

நமக்கென்று ஒரு அமைப்பு இருக்கிறது. நாம் கூடிக் கலந்து பேசிச் சில பல கிளர்ச்சிகள் நடத்தியுமிருக்கிருேம். இனியும் நடத்துவதற்கான முயற்சி இருந்துவருகிறது. இதை எல்லாம் கவனிக்காமல், அவரவர்கள் துவக்கும் கிளர்ச்சிகளில் நாம் கலந்துகொள்ள வேண்டுமென்று கூறுவதும், கலந்து கொள்ளாதபோது கண்டிப்பதும், ஏன் என்று யோசித்ததுண்டா. தம்பி! நாம், அவ்வளவு அருமையாகப் பணியாற்ற கூடிய பக்குவம், பயிற்சி, திறம் படைத்தவர்கள் என்ற எண்ணம், எல்லா முகாமிலும் இருக்கிறது—எனவே எல்லோர் கண்ணும் நம்மீது விழுகிறது என்று பொருள்!

ஆமாம், தம்பி, எவ்வளவு கடுமையான கிளர்ச்சிக்கும் ஈடு கொடுக்கக் கூடியவர்கள் என்பதை மும்முனைப் போர்

நன்றாக எடுத்துக் காட்டிவிட்டது—எனவேதான், யார் எத்த கைய போராட்டம் துவக்கினாலும், நாம் வரவேண்டும் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்—ஆவல் அதிகமாகி, அது நிறைவேறாதபோது கோபம் அதிகமாகிறது-கண்டனம் வீசுகிறார்கள்! வேறென்ன!

பிறர் மனம் மகிழும்படி நடந்துகொள்வது நல்லதுதான் —பண்புகூடத்தான்அது—ஆனால் தன்மானம என்ற ஒன்றும் இருக்கிறதே, ஒரு அமைப்பின தன்மானம், அது அழைக்கப் பட்டது, அதைக் கலந்து திட்டம் தீட்டப்பட்டது என்று நிலைமை இருந்தாலல்லவா நிலைக்கும், தழைக்கும்!

போர் முடிந்துவிட்டது! பலாபலன் தெரிந்துவிட்டது!! என்ன காண்கிறோம் தம்பி. காமராஜரின் அறிக்கை!!

0 0 0

யூனியன் பார்லிமெண்டு சபாநயாகர், மாவ்லங்கர் இந்தி கட்டாயத்தின் மூலம் நுழைக்கப்படாது என்று சேலத்தில் மே 31-இல் பேசி இருக்கிறார், (மெயில்—ஜூன் 1)

0 0 0

இந்தியைத் திணிக்கவில்லை—திணிக்கமாட்டோம். இந்தி படிக்கும்படி தூண்டுகிறோமே தவிர, கட்டாயப்படுத்தவில்லை என்பதாக யூனியன் தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் மே 28-இல் திருச்சூரில் தெரிவித்திருக்கிறார். (மே 29-மெயில்)

0 0 0

உத்யோகத்தை நாடுபவர்களுக்குத் தொல்லை வராதபடி தான் இந்தியைப் பக்குவமாகப் பரப்புவோம், என்று யூனியன் டிப்டி போலீஸ் மந்திரி தத்தார் தெரிவிப்பு, மே .4, மெயிலில் காணக்கிடக்கிறது.

0 0 0

இந்தியை மக்கள்மீது கட்டாயப்படுத்தித் திணிக்கும் பிரச்சினைக்கே இடமில்லை என்று மே 11-இல், பூரியில், யூனியன் மந்திரி கேஸ்கர் தெரிவித்திருப்பது, இந்துவில் வெளிவந்திருக்கிறது.

0 0 0

இந்தியைத் திணிக்கமாட்டோம் கட்டாயப்படுத்தமாட்டோம்—தமிழ் நாட்டு மக்கள் தாமாக இந்தியில் பயிற்சி பெற்று வருகிறவரையில் காத்துக்கொண்டிருப்பேன்—என்பதாக, யூனியன் மந்திரி கேஸ்கர் மதுரையில் ஜூலை ௬-இல் பேசியிருக்கிறார். இந்தத் தெரிவிப்பு மெயிலில் வெளியாகி இருக்கிறது.

0 0 0

தென் இந்தியாமீது இந்தியைத் திணிப்பது சர்க்கார் நோக்கமல்ல என்று குடி அரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத், ஹைதராபாத்தில், ஜூலையில்தான் பேசியிருக்கிறார்.

நேரு பண்டிதர், பல தடவைகளில் இந்தி வெறியர்களின் போக்கைக் கண்டித்திருக்கிறார்.

எந்த மொழியும் சொந்த மொழிக்கு ஈடாகாது என்று பலமுறை பண்டிதர் பேசி இருக்கிறார்.

வடநாட்டிலேயே, பல தலைவர்கள் வங்கம்—மராட்டியம்—கலிங்கம்—பாஞ்சாலம்—ஆகிய பகுதியினர், இந்தி வெறியைக் கண்டித்துப் பேசினர்.

மொழி அல்லது கல்வி சம்பந்தமான விழாக்கள் நடைபெறும்போதெல்லாம், இந்தி திணிக்கப்படமாட்டாது என்று டில்லி தர்பாரினரே பேசுகிறார்கள்; இனியும் பேசப் போகிறார்கள்.

தாலமுத்து நடராசன் உயிர் குடித்ததோடு, தமிழகத்தைப் பொறுத்தவரையில், கட்டாய இந்தி மடிந்தது என்று திட்டவட்டமாகக் கொள்ளலாம்.

மத்ய சர்க்காரின் நிலையைப் பல தடவைகளில் இது சம்பந்தமாகத் தெளிவுபடுத்திவிட்டனர்—'ராஜ்ய சர்க்காருக்கு யுக்தம்போல்' நடந்துகொள்ளும் உரிமை தரப்பட்டிருக்கிறது.

எனவேதான், ஆந்திரத்தில், ராஜ்ய சர்க்கார் இந்தியைக் கட்டாய பாடமாக்கிவிட முடிந்தது; சென்னை இராஜ்யத்தில். இந்தி கட்டாய பாடம் ஏன் ஆக்கவில்லை என்று ஆந்திராவைச் சுட்டிக்காட்டி, மத்ய சர்க்கார் கேட்கவில்லை.

'கட்டாய இந்தி' மத்ய சர்க்காரின் திட்டமாகவும் இன்று இல்லை; சென்னை ராஜ்யமும் அதைத் திட்டமாகக் கொள்ளவில்லை—அது போன்ற நோக்கமோ முயற்சியோ இல்லை.

இந்த நிலையில், இந்தியைக் கட்டாய பாடமாக்குவதில்லை, திணிப்பதில்லை என்று வாக்குறுதி ஏன் நமக்கு?

எனவே, இப்போது கொடி கொளுத்துவதாகக் கூறி ஓர் போர்ச் சூழ்நிலையை உருவாக்கி, அதனைக் காட்டி, காமராஜர் அறிக்கை என்ற 'வரம்' பெற்றதாகக் கருதிப் பூரிப்படைய நமக்கு மனம் இடந்தரவில்லை—அது பெரியாருக்குப் பெருமை தருவது என்று கூறி, அவருடைய பெருமையைக் குறைத்திடவும் விருப்பம் எழவில்லை—அந்தக் காரியத்தை அவருடைய இன்றைய நண்பர்கள், ஒத்துழைப்பாளர்கள், திறம்படச் செய்துவருகிறார்கள்—அந்தச் சிரமத்துக்காகப் பணமும் பெறுகிறார்கள்!!

அந்த நண்பர்கள், பெரியாரிடம், தி.மு.க. பற்றி, மிக மிகத் தவருன கணக்குகளைத் தருகிருர்கள்—உண்மையை மறைக்கிருர்கள்.

அவர்களின் கணக்குப்படி, திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு அரை டஜன் சிறுவர்கள் கொண்டது!!

இராயபுரத்தில் எங்கோ ஒரு இடத்திலே கிடப்பது!

அது, கரைந்து, கலந்து, குலைந்து, நலிந்து, மெலிந்து, மாண்டுபோகும் என்று 'நல்வாக்கு' கொடுத்தவண்ணம் இருக்கிருர்கள்—ஆறு ஆண்டுகளாக!!

அதிலிருந்து, அவர் விலகினர், இவர் விலகப் போகிருர்—என்று கரடி விட்டு, பெரியாரைக் களிப்படையச் செய்கிருர்கள்.

'அதுகளுக்குச் செல்வாக்கே இல்லை! என்கிறீர்களே, மாநாடு நடத்துகிருர்கள், ஆயிரம் பத்தாயிரம் என்று மிச்சம் காட்டுகிருர்களே, எப்படி முடிகிறது?' என்று பெரியார் கேட்கிருர். அத்துடன் விடுகிருரா, நீங்களும் பிரமாதமாக என்னிடம் நம்பிக்கை ஊட்டிவிட்டு, மாநாடு போடுகிறீர்கள், மிச்சம் என்ன என்ருல், சொச்சம் தரவேண்டி இருக்கிறது என்கிறீர்கள், பந்தல்காரனுக்கும் பாண்டு வாத்யககாரனுக்கும்!—என்று கேட்கிருர். என்ன செய்வார்கள், என்ன சொல்லித் தப்பித்துக்கொள்வார்கள்.

''அது...அவர்கள் சினிமாக்காரரை, நாடகக்காரரைக் காட்டிப் பணம் திரட்டுகிருர்கள்......அதனுலேதான்........' என்று இழுத்துப் பேசுகிருர்கள்—அவர் அவர்களைக் கோபத்துடன் பார்த்துவிட்டுக் கனைத்துக் காட்டுகிருர்—பொருள் உண்டு அதற்கு, நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் குதிரை மீதமர்ந்தல்லவா, மாநாடுகளின் ஊர்வலம் நடக்கிறது—அது அவருக்குத் தெரியாதா—சினிமாக்காரர் கலந்து கொள்வதால், தி மு.க. ஜொலிக்கிறது என்ருல், சினிமாக் காரர்களே கண்டு பாராட்டும் நடிகவேள் இருக்கும் இடத்துக்கு அல்லவா, ஆதரவு பெருகி வழிய வேணடும்!

இதுபோலவே, ஒவ்வோர் உண்மையும் அவரிடமிருந்து மறைக்கப்படுகிறது.

ஜனவரியோடு ஒழிந்துவிடுவார்கள்! மார்ச் வந்தால் மாண்டுபோவார்கள். ஜூனில் ஜன்னி பிறந்துவிடும்—ஜூலையில் ஒழிந்துபோவார்கள்-ஆகஸ்டு அவர்களை அழித்தே போடும்—என்று சூனியக்காரன், கோழி முட்டைக்கு மஞ்சள் குங்குமம் தடவி, எதையோ முணுமுணுத்துவிட்டு, இதைக் கொண்டுபோய் மாட்டுக் கொட்டிலில் மூன்றடி ஆழக் குழியில் புதைத்துவிட்டு வந்துவிடுகிறேன், மூன்று மணி நேரத்தில்,

அவன் வாயிலும் மூக்கிலும் இரத்தம் கக்கி இறந்துபடுவான் பாருங்கள் என்று கூறிவிட்டு, கூலியை வாங்கி முடிபோட்டுக் கொண்டு சாராயத்தை வெறி ஏறும் அளவுக்குக் குடித்துவிட்டுப் போகும் கதைபோல, இதோ ஏழு கட்டுரை, மூன்று பிரசங்கம் இவைகளாலேயே ஒழித்துக் கட்டிவிடுகிறேன் பாரும் என்று பெரியாரிடம் பேசி, அவரை நம்பச் சொல்கிறார்கள்.

ஒவ்வோர் ஊரிலும் உள்ள முக்கியஸ்தர்களின் பெயரைக் கூறி, "அவர் நமது கழகம்—தங்களிடம் நிரம்பப் பக்தி—வெளிப்படையாக வரமாட்டார், ஆனால் மனதுக்குள்ளே, நிரம்பக் கொள்கைப் பற்று—நெற்றியிலே குங்குமப் பொட்டு இருக்கும், ஆனால், குடி அரசு படிக்காவிட்டால் தூக்கம் வராது—" என்று பெரியாரிடமும் புளுகி வைக்கிறார்கள்.

அந்த ஊரில், எவ்வளவு பேர் இருக்கிறார்கள்—அந்தப் பயல்களுக்கு?—என்று பெரியார் கேட்கிறார். உடனே அவர்களுக்கு ஒரு ஆள்கூடக் கிடையாது என்று கூறிவைக்கிறார்கள்.

வடநாட்டுக் கடைகளை மறியல் செய்வோம்—அவர்கள் கலந்துகொள்ளமாட்டார்கள், உடனே, வடநாட்டுக் கடைக்காரனை விட்டுவிட்டு, அவர்கள்மீது பாய்வோம், ஒழித்துக் கட்டிவிடலாம், 9 கட்டுரை போதும் என்று கூறுகிறார்கள். 9 9 கட்டுரைகள் தீட்டுகிறார்கள், ஒழிவதாகக் காணோம்—ஓய்ந்தால் தேய்ந்தோம் என்ற அச்சத்தில் மேலும் சில கட்டுரைகள் தீட்டி, அவர்களை ஒழிக்கப் பயன்படாவிட்டாலும், நமக்கு எழுதும் பழக்கம் வளரட்டும் என்ற அளவில் திருப்தி அடைந்து, இவ்வளவு எழுதும எனக்கு இன்னும் ஓர் இருபது என்று பெரியாரிடம் சென்று இளிக்கிறார்கள்.

இவைகளைப் பெரியார் அறியாமலில்லை!

ஆனால் என்ன செய்வது? ஆலையில்லா ஊரில் இலுப்பைப் பூ, சர்க்கரை என்பார்களே! அதுதான்! தெரிகிறதா, தம்பி!!

அன்புள்ள,

14—8—1955

அண்ணாதுரை

கடிதம்: 15.

# இந்திராணி சேலை!

*சர்க்கார் திட்டங்களில் ஊழல்—பார்லிமெண்ட், பத்திரிகை கருத்துகள்.*

தம்பி,

புராண மதிபடைத்த ஓர் மன்னன்—மந்தகாச வாழ்வால் மதியை மங்கவைத்துக் கொண்ட மந்திரிமார்கள்—அந்தச் சபைக்கு வந்தான் ஒரு சாகசக்காரன்! "அரசே!" என்றான், "என்ன?" என்று தர்பார் முறையில் கேட்டான் மன்னன்!

"அரசரே! நான் எத்தனையோ இராஜாதிராஜக்களைப் பார்த்தேன், அவர்களோடு பழகினேன்—ஆனால் ஒருவருக்காவது, தங்களுக்கு உள்ளது போன்ற வீரதீரம், பராக்கிரமம் இல்லை, எனவே தங்களைக் கண்டதும், அது தங்களுக்கே உரியது என்று தீர்மானித்து விட்டேன், என் காணிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன், காவலா!" என்றான். காவலன், "காணிக்கையை ஏற்றுக் கொள்ளும்படி ஒருவன் கேட்பது கண்டு மகிழ்ந்து, அங்ஙனமே ஆகுக! காணிக்கைப் பொருள் யாது?" என்று கேட்டான்.

"ஈரேழுபதினாலு உலகத்திலும் இதற்கு ஈடு கிடையாது வேந்தே."

"அப்படியா! மெத்தப் புகழ்கிறாயே! என்ன அது! நவரத்தின மாலையோ—முத்துப் பல்லக்கோ—தந்தக்கட்டிலோ, தங்கப் பாளமோ ..."

"மன்னா! இதெல்லாம் சாமான்ய மன்னர்களுக்கு! தங்களுக்கு நான் தரப்போவது.........?"

"என்ன! என்ன அது?"

"இந்திராணி தேவியாரின் எழில் மிக்க சேலை—தங்கள் பட்ட மகிஷி பூரிப்படைய!... "

"இந்திராணி தேவியார்!"

"ஆமாம் அரசர்க்கரசே! தேவேந்திரனுடைய பார்யாள், சாட்சாத் இந்திராணிதேவி, தவமிருந்து பெற்ற சேலை. அதை அணிந்து கொண்டால், அரசே! வெள்ளை யானை கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும். கற்பக விருட்சம், காமதேனு, குற்றேவல் புரியும்—அப்படிப்பட்ட மகிமை வாய்ந்தது......"

"அப்படியா.. ...நம்ப முடிய வில்லையே......"

"இப்போது நம்ப வேண்டாம் மகாராஜா! சேலையை நான் இந்தச் சபையிலே. பிரித்துக் காட்டப் போகிறேனே, அப்போது நம்புங்கள்—இப்போது ஏன்! ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா!!"

"தேவேந்திரனுடைய தேவியின் சேலை......"

"தங்கள் திருச்சபையில் கொண்டு வந்து காட்டப் போகிறேன்......"

"யார்? நீ?"

"உரு கண்டு எள்ளற்க, மன்னா! உண்மையைப் பொறுத்திருந்து பாரும்."

"எப்போது கொண்டு வருவாய்?"

"ஆறேழு மண்டலம் பூஜை—அது முடிந்ததும் அந்த அற்புதமான சேலை......"

இந்த உரையாடலுக்குப் பிறகு, சாகசக்காரனுக்கு, அரண்மனையில் சகல வசதிகளும் செய்து தரப்பட்டன பூஜை நடத்தி வந்தான்! மலர்களை விடப் பழங்கள் அதிகம் செலவாயின, பூஜைக்கு!! தேனும் பாலும் குடம் குடமாக! தேவ பூஜைக்குத் துணை செய்ய தத்தைகள்!! பொன், கேட்கும் போதெல்லாம். இப்படிப் போக போக்கியமாக சாகசக்காரன் இருந்து வநதான்—ஆறு மண்டலம் முடிந்தது. ஏழும் வந்து சென்றது—மன்னன் இன்னும் ஏன் தாமதம் என்றான்; "மன்னா! பூஜை முடியவில்லையே, ஆறேழு மண்டலமாகும் என்றேனே மறந்தீரா?" என்றான் சாகசக்காரன், "நான் எப்படி மறப்பேன், நேற்றோடு ஏழு மண்டலம், இருநூற்று எண்பது நாட்கள் முடிந்தனவே" என்றான் மன்னன்; பெருஞ் சிரிப்பொலி கிளம்பிற்று, "மன்னா! ஆறேழு மண்டலம் என்றேன்—தாங்கள் அதன் தாத்பரியத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆறேழு—நாற்பத்திரண்டு—நாற்பத்திரண்டு மண்டலங்கள்—நாற்பத்திரண்டு நாற்பது நாட்கள்—என்று விளக்கமுரைத்தான்—மன்னன் திடுக்கிட்டுப்போனான்—எனினும் என்ன செய்வது—இந்திராணியின் சேலை—அதன் மகிமையால், வெள்ளை யானை, காமதேனு, கற்பக விருட்சம்!! சரி!—என்றான்—சாகசக்காரன இராஜபோகத்தில் மூழ்கினான். நாட்கள் நகர்ந்தன—கடைசியில் அவன் சொன்ன நாள் வந்தது, "நாளை தர்பாரில்!" என்று சாகசக்காரன் தவயோகி பாணியில் சொன்னான்.

மன்றம் கூடிற்று—மன்னன் ஆவல் நிரம்பிய கண்களுடன்!!

சாகசக்காரன், உள்ளே நுழைந்தான்—ஓம்! என்றான் மும்முறை! மேலே பார்த்தான், கரத்தை உயர்த்தினான், ஆஹா! என்றான், கண்களில் ஒத்திக்கொண்டான், எழுச்சி மயமான நிலை பெற்றவன் போலாகி, என்னை நம்ப மறந்தீர்களே காவலனே! இதோ பாரும்! வானவில் இதனிடம் என்ன செய்யும்—? ஆஹா! பார்த்துக் கொண்டே யுகக் கணக்கில் இருந்துவிடலாம போலிருக்கிறதே! என்ன பளபளப்பு! எத்தகைய ஜொலிப்பு! தொட்டால் வெண்ணெய் மீது கைபடுவது போலிருக்கிறதே" என்று பேசலானான்—மன்னன் திகைத்தான்—மந்திரிகள் மருண்டனர்—ஏனெனில், சாக்சக்காரன் வெறுங்கையுடன் தான் தெரிகிறான்!

"இந்திராணியின் சேலை.........எங்கே......" என்று மன்னன் இழுத்தாற்போலக் கேட்டான்.

"இதோ மன்னவா! என்னுடைய சித்து முறைக்கு மெச்சிச் சிவனார் அருளிய வரத்தின் விளைவு—வண்ணச் சேலை—இதோ—இதோ " என்று கூறியபடி சேலையைப் பிரித்துக் காட்டுவதுபோலப் பாவனை செய்தான்!

"எனக்குத் தெரியவில்லையே..." என்று ஏக்கத்துடன் கூறினான் மன்னன்.

"திகைத்தவன் போலானான் சாகசக்காரன்—பயந்தகுரலில்—'மன்னா! தங்களுக்குத் தெரியவில்லை என்றா கூறுகிறீர்கள்......" என்றான். "ஆமாம் தெரியக் காணோமே..." என்றான் மன்னன். "ஐயகோ! ஒரு விஷயத்தைக் கூற மறந்தேன், அறிவிலி நான்! அரசே! யாருடைய அன்னை பத்தினியோ, அப்படிப்பட்டவர்களின் கண்களுக்குத்தான் இது தெரியும் உத்தமியாயிற்றே உமது அன்னை—உமக்குத் தெரிந்தாக வேண்டுமே" என்றான்—மன்னனுடைய மாதாவின் மீது மாசு உண்டு—மன்னனுக்கும் அது தெரியும்—எனவே, குட்டு வெளிப்பட்டு விட்டதே என்று குமுறி, "ஆஹா!" அற்புதம! அற்புதம்! இதெல்லவா தேவப்பிரசாதம்!" என்று கூறியபடி, சாகசக்காரன் கையிலிருந்து சேலையைவாங்கினான் (பாவனைதான்!) மந்திரிகளிடம் காட்டினான். அவர்களோ, மன்னனுக்கு ஒத்து ஊதினர்! சாகசக்காரன் வெற்றிபெற்றான்.

0 0 0

திட்டங்கள் தீட்டும் காங்கிரசாட்சியினர். இது போலவே 'இந்திராணி சேலை' காட்டுகிறார்கள் தம்பி. தெரியவில்லையே என்றால், உனக்குத் தேசபக்தி இல்லை அதனால்தான் தெரியவில்லை என்கிறார்கள். நமக்கேன் இந்த வீண்பழி என்று பயந்து, பலபேர், தங்களைத் தேசபக்தர்கள் என்று காட்டிக் கொள்வதற்காகவே, "தெரிகிறது! தெரிகிறது!" என்று குதூ

கலம் காட்டிப் பேசுகிறார்கள். பரிதாபமாகத்தான் இருக்கிறது.

ஆகஸ்ட்டு தீ பற்றிய சிந்தனையில், நீயும் இருந்தாய், நானும் இருந்தேன்—ஆகையால், உனக்கு, முன்பே இதைக் கூறமுடியாமல் போய்விட்டது.

காங்கிரஸ் தீட்டும் திட்டங்கள், எவ்வளவு அவலட்சணமாக இருக்கிறது என்பதைப் பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்பு ஒரு சம்பவம் காட்டிற்று.

சர்க்காருடைய 'மேற்பார்வை' பெற்று, நிதி உதவி பெற்று, தொழில்களின் பராமரிப்புக்கும் வளர்ச்சிக்கும் ஒரு அமைப்பு இருக்கிறது.

தொழில்துறை நிதிக் கார்ப்பரேஷன்.

திட்டம் அருமையானது, வரவேற்கத்தக்கது.

வளர்ச்சி பெறக்கூடிய ஒரு தொழில், அதற்குத் தேவையான முதல்—பணம்—கிடைக்காததால், குன்றிப்போகக் கூடாது, சர்க்கார் அதற்கு நிதி அளித்து, அதனைக் காப்பாற்ற வேண்டும் என்பது திட்டத்தின் நோக்கம்.

தம்பி, தாய்ப்பால் குடிக்கிறது குழந்தை! எதுவரையில்? வேறு உணவுகளை உண்டு ஜீரணித்துக் கொள்ளும் 'பக்குவம்' பெறுகிற வரையில்.

தொழில் துறைக்குச் சர்க்கார் அளிக்கும் உதவியும், அதைப் பெறும் தொழிலமைப்பு, வளரும் பக்குவத்தைப் பெறுவதற்காகத்தான்.

இந்த நல்ல திட்டம் எவ்வளவு இலட்சணமாக நடைபெற்றிருக்கிறது, தெரியுமா? டில்லி சட்டசபையில், சரமாரியாகக் கண்டனக் கணைகள்! காங்கிரசின் எதிரிகள் தொடுத்தது அல்ல. காங்கிரஸ் உறுப்பினர்களே கணைவிட்டுத் துளைத்தனர்.

ஊழல், திறமைக் குறைவு, நெளிகிறது!

நாற்றமடிக்கும் அளவுக்கு நிர்வாகம் மோசமாக இருந்திருக்கிறது.

ஒரு கண்ணாடித் தொழிற்சாலை—வடக்கே—சோடேபூர் என்ற ஊரில்! இது, திட்டத்தின்படி உதவி நிதி கேட்டது.

சர்க்காருக்கு, இப்படிப்பட்ட திட்டங்களுக்காகப் பணம் இருக்கிறது—வெற்றி வியர்வைதான் அது!

ஏழையின் குருதி எவ்வளவு அக்ரமமாகப் பாழாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேள் தம்பி, நாம் எப்படிப்பட்ட ஆட்சியிலே சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது தெரியும்.

தேசியம் பேசி, நம்மிடம் பகை காட்டும் காங்கிரஸ் நண்பர் களையும், இதைப்பார்த்து, சிந்தித்து, கருத்தளிக்கச் சொல்.

சோடேபூர்க் கண்ணாடித் தொழிற்சாலைக்கு 21-இலட்ச ரூபாய் தந்திருக்கிறார்கள்—பல தவணைகளில்.

21 இலட்சத்தையும் வாங்கிச் சாப்பிட்டு ஏப்பம் விட்டான பிறகு, துளியும் அச்சமின்றி, யார் நம்மை என்ன செய்ய முடியும் என்ற துணிவுடன், அந்தத் தொழிற்சாலையைக் குன்றவைத்து, அதற்குப் போட்டியாக இருந்த வேறோர் கண்ணாடித் தொழிற்சாலைக்கு, மிகக் குறைந்த விலைக்கு விற்று விட்டார்கள்!

அக்ரமத்தின் தன்மை தெரிகிறதா? பசுவுக்குப் பருத்தியும் புல்லும் வைக்கப் பணம் தருகிறான் ஒரு தர்மதாதா!

பசுவுக்கு அது தரப்பட்டால், மதுரமான பால் கிடைக்கும் என்று எண்ணுகிறான் உதவி அளித்தவன்.

அதற்காகத்தான் உதவி. ' நல்ல தரமான பசு; நல்லபடி தீனி வைத்தால், கொழுத்து வளரும், தீஞ் சுவைப்பால் அளிக்கும், அதற்காகச் செலவிடப் பணம் எங்களிடம் இல்லை,'' என்று கூறித்தான் 'தர்மம்' கேட்டுப் பெற்றனர்.

பசுவோ, எலும்புந்தோலுமாகி விடுகிறது.

பிறகு அதனை, 'கசாப்பு' கடைக்காரருக்கு மலிவான விலைக்கு விற்று விடுகிறார்கள்.

' எத்தன்! கடினசித்தன்! பொது மக்கள் துரோகி என்றெல்லாம், நீ கண்டிக்கத் துடிப்பாய். தம்பி, நீயும் நானும் என்ன, டில்லி சட்டசபையில்,

சுசேதா கிருபளானி
சோதிராம் கித்வானி
தாகூர்தாஸ் பார்க்கவா
மோகன்லால் சாக்சேனா
துளசிதாஸ் கிசன்சந்து
எச். வி. காமத்
எஸ். என். தாஸ்
டி. என். சிங்

இப்படிப்பட்டவர்கள் இடித்துரைத்தார்கள்.

இவ்வளவுக்கும் சூகா எனும் மந்திரி, அமைதியாக ''அது சரி! என்ன செய்யலாம்! அவ்வளவு மோசம் இல்லை! ஊழல் ஏற்பட்டு விட்டது! கவனக்குறைவால் வந்த கேடு! அதைப் பெரிதுபடுத்தாதீர்கள்! போனது போகட்டும்!''—என்று இந்த முறையில்தான் பேசியிருக்கிறார்.

ஜனநாயகம், தக்கமுறையில் தழைத்து, ஒரு பலம் பொருந்திய எதிர்க்கட்சி இருந்திருக்குமானல், குகாவும் அவருடைய கூட்டுத் தோழர்களும், வெட்கித் தலைகுனிவது மட்டுமல்ல, மிரண்டு பணிந்திருப்பார்கள்.

ஆனல், இப்போதுதான் எல்லாம் காங்கிரஸ்மயம்; காங்கிரசுக்கோ நேரு அபயம், என்று நிலைமை இருக்கிறதே!

கண்டிக்கிருர்கள்! புள்ளி விவரம் காட்டுகிருர்கள்!

பசுவோ சாகடிக்கப்பட்டு விட்டது! பாபிகளா இப்படியும் அக்ரமம் செய்யலாமா? யார் இந்தத் தீய காரியம் செய்தவர்கள்? பிடித்திழுத்து வாருங்கள் விசாரணை செய்து தண்டிப்போம், என்று பேசுகிருர்கள்.

ஆனல் அந்த ஆசாமியோ, சர்க்காரிடம் சன்மானம், விருது, சான்று பெற்று, வேறு இடம் தேடிச்சென்றிருக்கிருர்.

பொறுப்பற்றவர்கள், பொது மக்களிடம் துளியும் அச்சமில்லாதவர்கள், தட்டிக்கேட்க யார் இருக்கிருர்கள் என்று எண்ணும் நெஞ்சழுத்தக்காரர்கள், என்றெல்லாம் சொல்லும்போது, கோபம்கொதித்தெழுகிறது காங்கிரஸ்கட்சியினருக்கு. ஆனல் சோடேபூர் சம்பவத்துக்கு அவர்கள் என்ன சமாதானம் கூறுகிருர்கள்?

இலட்சக் கணக்கில் கோடிக் கணக்கில் பணம் பாழாகிறது.

பகற் கொள்ளைக்காரனவது, போலீஸ் தாக்குமோ, ஊரார் ஒன்று திரண்டு வந்து எதிர்ப்பரோ என்று அஞ்சி அஞ்சிக் காரியம் செய்ய வேண்டி இருக்கிறது. ஏமாளித்தனம் அரச பீடத்தில் இருப்பது கண்டு, எத்தர்கள், ஒரு சிரமுமின்றி, துளியும் நடுக்கமின்றி, அடிக்கிருர்கள் கொள்ளை. ஆகுமா? என்று கேட்டாலோ, "இதோ ஆசியாவின் ஜோதியின் ரஷிய விஜயம், படம் பார், பத்தாயிரம் அடி, கலர்" என்று கூறி, இந்த 'அபின்' போதும் மக்களை மயக்க என்று எண்ணுகிருர்கள். முறையும் சரியல்ல, நீண்ட காலத்துக்குப் பலன் தரத்தக்கதுமல்ல.

0 0 0

"பாராளுமன்றத்தில் தொழிலுதவி நிதிக் குழுவின் நிருவாகத்தைப் பற்றி நடந்த வாதம் சில முக்கியமான கருத்துக்களை வற்புறுத்தியுள்ளது. அவை நிருவாகத்தின் ஒழுங்கீன விவரங்களைவெளியிட்டதோடு கூட, இந்திய அரசாங்கம்அவற்றைக் குறித்துத்தக்க நடவடிக்கை எடுக்க வில்லையென்றும்,

நிருவாகத்தை ஆராய்ச்சி செய்த விசாரணைக் குழுவின் ஆலோசனைகளுக்கும் மதிப்புக் கொடுக்கவில்லையென்றும் குறிப்பிடுகின்றன.

0 0 0

நிதிக்குழுவின் நிருவாக ஒழுங்கீனங்களை, கணக்குத் தணிக்கையாளர்கள் விளக்கிக் கூறியிருந்தும், அரசாங்கம் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

0 0 0

எடுத்துக்காட்டாக சோடேபூர் கண்ணாடித் தொழிற் சாலைக்கு ரூ. 2,000,000 சிறு தொகைகளாக 21 தவணைகளில் கொடுக்கப்பட்டது சோடேபூர் தொழிற்சாலை நிருவாகம் வேண்டுமென்றே ஒழுங்கீனமாக நடத்தப்பட்டதென்றும்,அத ணல் பெரு நட்டம் ஏற்பட்டதாகக் காட்டப்பட்டதென்றும், பின்னர் அதனுடைய போட்டித் தொழிற்சாலை அதிபருக்கு மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டதென்றும், விசாரணைக் குழுவின் முன்னர் சான்று கூறப்பட்டது. இவ்வளவு ஊழல் களுக்கும் காரணமாயிருந்த நிருவாக ஆணையாளருக்கு, அவரு டைய ஒப்பந்த காலம் முடிந்த பிறகு, ஆறுமாத ஊதியத் தொகையை இலவசமாக அளித்து, அவருக்கு ஒரு நற் சான்று பாராட்டுரையும் அரசினர் வழங்கியிருக்கிறார்கள்! பொதுமக்கள் நிதி இங்ஙனம் மோசடி செய்யப்பட்டதற்கு அர சாங்கமும் உடந்தையாயிருந்ததாகத்தான் கொள்ள வேண்டு மென்று, பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற காங் கிரசுக் கட்சித் தலைவர்,பண்டித் தாகூர்தாசு பார்க்கவா. சுட்டிக் காட்டியிருக்கிறார்.

0 0 0

உத்தரப்பிரதேசக் காங்கிரசுக்குத் தலைவர் திரு. மோகன் லால் சாக்சேனா,காந்தி நினைவு நிதியிலிருந்து ரூ 1,65,00,000 தொழிலுதவி நிதியில் முதலீட்டாக வைக்கப்பட்டதென்றும், ஏழை மக்களிடமிருந்து சிறிது சிறிதாகச் சேகரிக்கப்பட்ட இத் தொகை ஒழுங்கீனமான முறையில் விரையமாக்கப் பட்டிருக் கிறதென்றும் கூறியிருக்கிறார்.

0 0 0

அரசாங்கத்தின் நேரடியான மேற்பார்வையிலிருந்த நிதியே இக்கதியை அடைந்திருக்கிறதென்றால்,பொதுமக்கள் யாரை நம்ப முடியும்?

0 0 0

'தமிழ்நாடு' தலையங்கத்தில் உள்ள கருமுத்துக்கள் இவை!

'தமிழ்நாடு' பாரதமாதாவின் முரசு அல்ல; அது அப்படித்தான் எழுதும்' என்று கூறித் தப்பித்துக் கொள்ள வெட்கத்தால் வேதனைப்படும் காங்கிரசார் முயல்வர், தம்பி, அவர்களுக்கு இதோ, இவைகளைக் காட்டு.

''கார்ப்பொரேஷன் 1948-ம் ஆண்டு முதல் வேலைசெய்து வருகிறது.

0 0 0

ஆரம்பமானது முதல் இதுவரை சுமார் ரூ. 21 கோடி கடன் தரப்பட்டுள்ளது.

0 0 0

ஆனால் எவ்வளவு தூரம் கடன் உதவிபெற்ற ஸ்தாபனங்கள் வேரூன்றியுள்ளன என்பதைத் தெரிவித்து கொள்வதற்கான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. இதற்கிடையே இந்த ஸ்தாபனம் வேலை செய்யும் விதத்தைப் பற்றிப் புகார்கள் கிளம்பி ஸ்ரீமதி கிருபளானி தலைமையில் ஒரு விசாரணைக் கமிட்டியைசர்க்கார் நியமித்ததும், அதன் யாதாஸ்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் வெளியானதும் வாசகர்கள் அறிந்ததே.

0 0 0

அதன் நிர்வாக டைரெக்டர் தம்மிஷ்டப்படி நடந்து கொள்ள முடிந்தது என்பது பொதுப்படையான புகார்.

0 0 0

இதுவரை இருந்து வந்த ஏற்பாட்டின் கீழ் டைரெக்டர்கள் தமக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை காண்பித்து அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகப் பல மெம்பர்கள் புகார் செய்தனர்.

0 0 0

ஒரு கண்ணாடித் தொழிற்சாலைக்கு ரூ 21 லக்ஷம் கொடுத்தும் அது வேலை செய்யாமல் நின்று போயவிட்டது.

0 0 0

உத்தரவாதப்படி டிவிடெண்டு தருவதற்காகச் சென்ற ஆண்டில் ரூ. 4 லக்ஷத்துக்குமேல் சர்க்கார் தம் கையைவிட்டுத் தரவேண்டிய தாயிற்று இம்மாதிரி கார்ப்பரேஷன் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை இந்த வகையில் சர்க்கார் நஷ்டப்பட்ட தொகை ரூ. 21 லக்ஷம். இவை யெல்லாம் திருப்தி கரமான நிர்வாகத்தின் அறிகுறிகளல்ல.

0 0 0

இது சர்க்கார் பொறுப்பேற்று நடத்திவைக்கும் ஸ்தாபனம், 14 டைரெக்டர்களில் சர்க்கார் நேரடியாகவும் ரிசர்வ் பாங்கு

மூலமாகவும் 6 பேரை நியமிக்கிறார்கள். இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்கள் கூட்டுறவு பாங்குகள் முதலியவை மற்றவர்களை நியமிக்கின்றன. எல்லோரும் பெரிய ஆசாமிகள். கடன் தருவதோ அயனான சொத்தின் ஆதாரத்தின் மீது. அதன் மதிப்பில் 60% அளவுக்குத்தான். இந்த ஸ்தாபனம் சரிவர நடைபெறாமல் சர்க்கார் வருஷா வருஷம் பையை அவிழ்க்க வேண்டியிருக்கிறது என்றால், கடன் தரும் விஷயமாக வேறு துறைகளில் சர்க்கார் பரவலாக செயல்படுவதற்கு முன் எவ்வளவு சிந்தனையும் ஜாக்கிரதையும் அவசியம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.''

'தினமணி' கக்கிடும் தீச்சுடர்கள் இவை!!

எப்படி இருக்கிறது காங்கிரசாட்சியிலே உள்ள நிர்வாக இலட்சணம்.

ஜீப்கார் ஊழல்
டிராக்டர் ஊழல்
உரபேர ஊழல்
ரெடிமேட் வீடு ஊழல்
இலண்டன் மாளிகை ஊழல்

தம்பி, எந்தச் சர்க்காரும் வெட்கப்படக்கூடிய அளவு இருக்கிறது—வளர்ந்தும் வருகிறது, சர்க்கார். துணிந்து யாராவது இத்தகைய ஊழல்களை எடுத்துக் காட்டிக் கண்டித்தால், மூடி மறைக்கவும், மிரட்டி அடக்கவும், நேருவைக் காட்டி மயக்கவும்தான் முயலுகிறதே தவிர, இத்தகைய ஊழல்களை ஒழித்துக்கட்டத் துணிவும் கொள்ளவில்லை; அத்தகைய தூய எண்ணம் இருப்பதாகத் தெரியவும் காணோம்.

நேரு பண்டிதருக்கோ இவைகளெல்லாம் கடுகு!

அவருடைய கண்ணோட்டம், உலக சமாதானத்தின் மீது ஆழப் பதிந்து விட்டதாம.

இங்கே, நிர்வாகத்தில் ஊழல் நெளிகிறது; பொது மக்களின் பணம் விழலுக்குப் பாய்கிறது; ஜனநாயகம் கேலிக் கூத்தாக்கப்படுகிறது.

21 இலட்ச ரூபாயைச் சோடேபூர் கண்ணாடித் தொழிற்சாலைக்குக் கொட்டி அழுத இந்த அமைப்பு, இதுவரையில், 21 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது—தொழில்களின் வளர்ச்சிக்கு!!

என்னென்ன வளர்ந்ததோ! யார் கூறமுடியும்!!

இந்த ஊழல்களில் நூற்றில் ஒரு பங்கு நடைபெற்றால் கூட, தம்பி, மற்ற ஜனநாயக நாடுகளில், மந்திரி சபைகள் கவிழும், மக்கள் சீறி எழுவர்!! சீனா போன்ற நாடுகளிலே, ஊழ

லுக்குக் காரணமாக இருந்தவர்கள் சுட்டுத் தள்ளப்படு வார்கள்.

இங்கே, சோடேபூர் கண்ணுடித் தொழிற்சாலை நிர்வாகிக்கு, அவருடைய பதவிக்காலம முடிந்தபிறகு, மேற்கொண்டு ஆறுமாதச் சம்பளம் கொடுத்து, அவருடைய அருமை பெருமையைப் பாராட்டி நற்சாட்சிப் பத்திரமும் கொடுத்து அனுப்பினுர்களாம்! !

இந்த வெட்கக்கேட்டுக்கு, என்ன கூறுகிருர்கள், காங்கிரசார்! !

அன்புள்ள,

அண்ணாதுரை

21—8—1955

கடிதம்—16

# எழிலோவியம்

## தலபுராணங்கள்—குற்ருலத்தின் எழில்

தம்பி,

முத்தனையார் வரம் பழித்தோர்
முதுகுரவர்க்கு இடம் புரிந்தோர்
முக்கண்ணனை நத்தனை, நான் முகத்தோனை இகழ்ந்தோர்
பல்லுயிர் செகுத்தோர்
நன்றி கொன்ருேர்
கத்தனை விட்ட மர்க்களத்திலோடினேர்,
நம்பினர்க்குக் கபடம் செய்தோர்
எத்துணை பாதகரேனும்
வடஅருவி படிந்தவர்
வீடு எய்துவர்

இது தெரியாது எனக்கு, இங்கு புறப்பட்டபோது; தெரிந்திருந்தால், வேறு சிலருக்கு முன்கூட்டியே 'சிபாரிசு' செய்திருக்கலாம்; இங்கு வந்து 'தலபுராணம்' படித்தபோது தான், இது இத்தனை பெரிய 'பாவமன்னிப்பு' இடம் என்பது தெரிந்தது! பாவம் செய்தவர்களுக்கே, கறைகழுவிவிடப்படுகிறது என்ருல், பாவி என்று பாதகர்களால் ஏவிவிடப்பட்ட பாமரரால் தூற்றப்படுபவர்களுக்கு பலன் நிச்சயமாகக் கிடைக்கத்தானே செய்யும்! இங்கு, நான் பலர் குளித்துக் குதூகலிப்பதைக் காண்கிறேன். காவி உடையும் பொன்னிற

மேனியும், கருத்துச் சுருண்டு கவர்ச்சிகரமாகக் காட்சி தரும் தாடியுடன் கூடிய 'தருமபுர'த்தையும் காண்கிறேன், துள்ளித்திரியும் பருவத்தினர், துவண்டு போகும் நிலையினர், தொங்கு சதையினர், தோலால் எலும்புக் கூட்டினைப் போர்த்திருப்போர், சீமான்கள், அவர்களைச் சீமான்களாக்கியதால் சீரழிந்து கிடப்போர், மதி முகவதிகள், அது அற்ற நகைப்பொதிகள், பலர், பலப்பலர்! அனைவருக்கும் இன்பம் அளித்திடும் அந்த அழகிய அருவி, என்றென்றும் இதேவள்ளற்றன்மையோடு இருந்திடுவதாக என்று வாழ்த்துவதுடன், நம் திருவிடத்தில் என்னென்ன இயற்கை எழில் காணக் கிடக்கிறது என்பதை எண்ணி எண்ணிப் பூரிப்படைகிறேன்.

தலபுராணம் எத்தனையோ இடங்களுக்கு இருக்கத்தான் செய்கிறது. படிப்போர், அகமும் முகமும் மலர்ந்து, நந்தம் நாட்டின் சிறப்புத்தான் என்னே! இத்தனை இடங்கள் உள்ளனவே பாவங்களைப்போக்க, என்று இறும்பூதெய்துகின்றனர்-தம்பி—நான் உள்ளபடியே வெட்கப்படுகிறேன், வேதனையுமடைகிறேன்—இவ்வளவு இடங்கள் தேவையாக இருக்குமளவுக்கா இங்கு பாபம் மலிந்து குவிந்து வளர்ந்து கிடக்கிறது என்பதை எண்ணிடும்போது. தத்தமது பார்வைக்குக் கொண்டு வரப்பட்ட இடங்களை, விடம்பரப்படுத்தும் முறையில், தலபுராணங்களை ஆக்கினரேயன்றி, பிற எந்தநாட்டுக்கும் தேவையில்லாதிருக்கும் போது இங்குமட்டும் ஏன் இத்தனை பாபம் போக்கும் பதிகளும்நதிகளும்! இங்குள்ளோர் பாவச் செயல்களில் விடாமல் ஈடுபட்டுக் கிடக்கும் இழி தன்மையிலா உளர் என்பதுபற்றி எண்ணிப் பாராதாரில்லை. ஏனோ?

0 0 0

"ஐயா! உம்மை போட்டோ எடுக்கப் போகிறேன்."

"என்னையா? ஏன்..."

"ஏன் என்பது கிடக்கட்டும். போட்டோ எடுத்துக் கொள்வதாலே உமக்கென்ன நஷ்டம், கஷ்டம், பணம் தர வேண்டாம்; இலவசமாகவே போட்டோ எடுத்துத் தருகிறேன்."

"இலவசமாக!......ஆச்சரியமாக இருக்கிறதே..."

"நேரமாகிறது!......அப்படியே அந்த மரத்தடியில் நில்லும்...இதோ பாரும் சட்டையைக் கழட்டி விடும்..."

"சட்டையைக் கழற்றிவிடுவதா? ஏனய்யா! சட்டை நன்றாகத்தானே இருக்கிறது..."

"அடா அடா! பெரிய தொண தொணப்பு ஆளாக இருக்கிறீரே. சட்டையில்லாமல் தானய்யா போட்டோ எடுக்க

வேண்டும்...இதோ பாரும்......ஊரெங்கும், நாடெங்கும்...... உம் போட்டோவை ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் அச்சிட்டு ஒட்டப் போகிறோம், தெரிகிறதா! எங்கும் உம் போட்டோ! மதில் சுவர்களில், மாட மாளிகைகளில், கடை வீதிகளில், வண்டிவாகனங்களில், சினிமாக் கொட்டகையில், சிங்காரப் பூந்தோட்டங்களில், எங்கும் உம் போட்டோ இருக்கும்...''

''புரியவில்லையே......சரி......நான் போட்டோ எடுத்துக் கொள்ள மாட்டேன்...''

''பத்து ரூபாய் இனும் தருகிறேன்...''

''உஹூம்...முடியாது...என்னமோ சூக்ஷமம் இருக்கிறது. ஐம்பது கொடுத்தால்தான் நான் ஒப்புக்கொள்வேன்.''

''பேராசைக் காரரய்யா நீர்! இருபது தருகிறேன்...''

''ஐம்பதுக்குச் சம்மதமானல் பேசு...இல்லையானல் போகலாம்...''

''சரி! சரி!...கழற்று சட்டையை......கைகளைத் தொங்க விடய்யா,...போதும்......சிரிப்புக் கூடாது...சும்மா பாரும் போதும்...''

போட்டோ எடுக்கப்பட்டது.

சில நாட்களுக்குப் பிறகு எங்கு பார்த்தாலும் விளம்பரத் தாட்கள்! போட்டோ படத்தின் கீழ்...இப்படிப்பட்ட கடுமையான குஷ்டரோகியும் எமது குஷ்ட விநாசனி தைலம் பூசிக் கொண்டால் முப்பது நாளில் பொன்னிற மேனி பெறுவர்!— என்று விளம்பரம் காணப்பட்டது. ஐம்பது ரூபாய் பெற்றுக் கொண்ட அப்பாவியை அவனுடைய நண்பர்களே கூட 'குஷ்டரோகி' என்று எண்ணி ஒதுக்க ஆரம்பித்தனர்!!

0 0 0

மருந்து விளம்பரத்துக்காக, அப்பாவியைக் குஷ்ட நோயாளனுக்கிக் காட்டியதுபோல, ஆறுகளுக்கும், திருக்குளங்களுக்கும், சோலைகளுக்கும், ஊர்களுக்கும் கீர்த்தியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, 'தலபுராணங்கள்' புனையப்பட்டன! அதனல், அந்தத் தலங்களின் மகிமை தெரிவதைவிட, விளக்கமாக, பாவச்செயல் புரிவோர் மிகுத்திருக்கிருர்களா என்று எண்ணித்தான் நம் போன்ருர் ஆயாசப்பட வேண்டி இருக்கிறது.

பாரேன் தம்பி, துவக்கத்தில் உள்ள பாடலை, பாவங்களின் பட்டியலைக் கொடுத்து, இவ்வளவு பாபங்களையும் போக்கும் பதி இது என்று கூறப்பட்டிருக்கிறது.

பாவங்களைப் போக்கிடும் என்று மட்டும் கூறினால் போதாது, என்றெண்ணி, 'தலபுராணக்காரர்' எல்லாப் பருவத்தினரின் பாபமும் போக்கப்படும் என்று வேறு கூறுகிறார்.

அறியாமல் இளமையில் செய் பாவமெலாம் நண்பகலில் ஆடத்தீரும்!

காளையராய் மனதறியச் செய்த பாவம், சிறுகாலை படிந்திடில் போம்!

வறிதான புன்மாலை படிந்தார்க்கு முதுமையில் செய் மாபாவம் போம்!!

முப்பொழுது ஆடில், எழுபிறப்பும் பெயர்க்கும்!!!

இவ்வளவு மகிமை கூறப்பட்டிருக்கும் குற்றாலத்தில் இருந்து கொண்டு இதை எழுதுகிறேன், தம்பி!

இருந்துகொண்டு என்றால் சாதாரணமாகவா!

சிங்கம்பட்டி ஜெமீன்தார் மாளிகையில் இருந்துகொண்டு எழுதுகிறேன்.

அழகான மாளிகை! நான் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கும் கூடம், 'தர்பார்' நடத்துவதற்கான இடம்! ஜெமீன்தாரரின் உருவப்படங்கள் என்னை நோக்கியபடி!! நுழைவு வாயலில், அவர் புலியுடன்—யானையுடன்—இருக்கிறார்—படங்கள்—வேட்டையில் அவர் சாகடித்தவை!

ஏதேது! அண்ணனுடைய நிலை 'ரொம்பரொம்ப' உயர்ந்து விட்டது போலிருக்கிறது, சிங்கம்பட்டி ஜெமீன் அரண்மனையிலல்லவா இருக்கிறார், என்று எண்ணிக்கொள்வாய். தம்பி, என் நிலை உயர்ந்துவிடவில்லை, சிங்கம்பட்டி ஜெமீன் நிலை அவ்விதமாகி விட்டது!!

சிங்கம்பட்டியின் இந்தச் சிங்கார மாளிகை போடி நாயக்கனூருக்கு வந்து சேர்ந்து, இப்போது ஒருவர் மொத்த வாடகைக்கு எடுத்து, 'சீசனின்' போது, அன்றாட வாடகைக்கு விடுகிறார். அந்த முறையில், இந்த மாளிகையின் ஒரு பகுதியை நாளொன்றுக்கு நாலு ரூபாய் வாடகைக்கு என நண்பர் மதுரை டாக்டர் அருணாசலம் எடுத்திருக்கிறார். அவருடைய விருந்தினன் நான்! புரிகிறதா! உன் அண்ணனுடைய நிலை உயர்ந்ததன் காரணம்!!

கட்டினால் என்ன, கட்டிடத்தில்தங்கியிருந்தால் என்ன, இடம் எழில் நிரம்பியதாக இருப்பதால், களிப்பூறத்தான் செய்கிறது. இங்கு நின்று பார்த்தால், எதிரே தெரியும் சிறு குன்று, பச்சைப்பசேலென்றிருக்கிறது. அந்தப் பச்சைப் பட்டாடை அணிந்த பாவைக்கு முத்தாரம்போல அருவி! காலை

யில் நீர்வீழ்ச்சி மாலையில் மக்கள் எழுச்சி!! காலையில் குளிக்கிறேன்! மாலையில் களிப்படைகிறேன்! காலையில், மலையும் அதன் பசுமையும், அருவியும் அதன் குளிர்ச்சியும், என்னிடம் ஏதேதோ பேசிடக் கேட்கிறேன். மாலையில், இத்தகைய இன்பக் காட்சிகளின் இல்லமாக உள்ள தாயகத்தின் நிலை பற்றி மக்களிடம் நான் பேசுகிறேன்!!

செந்நெல்லுக்கு வரப்பு, வாழை!
வாழைக்கு வரப்பு, கரும்பு!
கரும்புக்கு வரப்பு, கதலி!
கதலிக்கு வரப்பு, கமுகு!
கமுக்கு வரப்பு, தாழை!

தம்பி. குற்றாலம்பற்றிய படப்பிடிப்பு இது! காண்போருக்கு கவிதை வடிவில் உள்ள காட்சி, அப்படியே தெரியத்தான் செய்கிறது.

வளம் கொஞ்சும் இடம் இங்குகுறிப்பிடத்தக்க அளவுள்ள வயல், குற்றால நாதருக்கும் குழல் வாய்மொழி அம்மைக்கும் சொந்தம்!

இந்த வயலின் செல்வம், தக்க முறையிலே 'குத்தகை' விடப்படாததால், முழுவதும் நாதனுக்குச் சேருவதில்லையாம்!!

பூ! பூ! குத்தகை முறையிலே குற்றம் கண்டுபிடித்துவிட்டார்களே, குறும்பர்கள்!! நமது ஆதீனத்துக் குத்தகைமுறையினை அறியின் இம்மாந்தர் இதனினும் அதிகமாகக்கூடக் கண்டிப்பர்! ஆயினென்! இவர்தம் கண்டனத்துக்காக, எமது முறையினை மாற்றிக்கொள்ளவா இயலும், என்று கூறுபவர் போல, 'தருமபுரம்', நீர்வீழ்ச்சியில் குளித்திடக் காண்கிறேன்! மூவர் உடனிருக்கிறார்கள், அவருக்கு 'சேவை'புரிய. அவரோ காச்கி உடையற்ற, ராணுவ வீரர் போலவே, அந்த வழுக்குப் பாறைகளிலும், கூழாங்கற்களிலும் நடந்து செல்கிறார்? ப்யூக் கார் காத்துக் கொண்டிருக்கிறது அவருக்காக!! முறை மாறித்தான் விட்டது! ஆனால், அவருக்கு நலன் அளிக்கும் துறையில் மட்டும் தான்! அரன் அருளை, ஆயிரக் கணக்கான வேலி நில உருவில் பெற்று வாழும் ஆதீனகர்த்தா அவருடைய, 'இரும்புப் பல்லக்கில்', ஏறுகிறார். திருவருள் கண்டதும் கடுவேகத்துடன் காமக்குரோத மதமாச்சாரியாதிகள் பறந்து செல்கிறதாமே, அது போல, 'ப்யூக்' செல்கிறது. போகட்டும்!! இதோ நீர் விழ்ச்சி!!

வேகம் குறைவு, சாரல் சுகம் அவ்வளவு இல்லை, தண்ணீரின் அளவும் குறைவு என்கிறார் பொன்னம்பலனார்—அவருக்குக் குறைவாக இருப்பது, எனக்கு அதிகமாகத்தானே இருக்

கும்! என் உடல் சிவந்து விடுகிறது—தம்பி சம்பத் பொன் குன்றாக இருக்கிறான்!!

எல்லோரும் குளிக்கிறார்கள்! களிப்புடன் விடுதி செல்கிறார்கள்! மீண்டும் வந்து குளிக்கிறார்கள்! மீண்டும் மகிழ்ந்து விடுதி செல்கிறார்கள்!! மீண்டும் குளிக்கிறார்கள்!!

ஐந்தருவி எனும் இடத்தில் அதிகக் கூட்டம் இராது என்றனர்—ஆனால் அங்கும் பெரிய கூட்டம் குவிந்துவிட்டது—சாரல் முடிகிற நேரமாம். எனவே சந்தர்ப்பத்தை இழந்துவிட மனமில்லாதவர்கள், ஒவ்வொரு நாளும், பல்வேறு இடங்களிலிருந்து வந்த வண்ணம் உள்ளனர்!

*சேல் குதிக்கும் மலர்ச் சோலை! தேன் குதிக்கும் நான்கு திக்கும்!*—என்று கூறப்பட்டிருப்பது, மொழியின் அழகுக்கு மட்டுமல்ல, இடத்தின் எழிலுக்கு முற்றிலும் பொருத்தந்தான்! எரிமலை இல்லை, நீர்வீழ்ச்சி உண்டு! பாலைவனம் இல்லை, சோலைவனம் எங்கும்!!—திருவிடம் இப்படியல்லவா இருக்கிறது, சொக்க வைக்கிறது காண்போரை. அதன் நிலையை எண்ணிடும்போதோ நெஞ்சு நோகிறது.

தம்பி, இங்கு உட்கார்ந்துகொண்டு, எழிலைப் பருகி, இன்புற்று இருக்கும்போதுதான், ஏடா! மூடா! இதுதானா திராவிடம்! இதோ பார், உன் திராவிடம்! என்று இடித்துக் கூறுவதுபோல, நாளிதழ்கள் காட்டுகின்றன. முதலமைச்சர் காமராஜரும், நிதி அமைச்சர் சுப்பிரமணியனாரும், டில்லி சென்று, 400 கேட்டு 200 பெற்று, திரும்பிய சோகக் காதையை!!

கொற்றம் நம்மிடமில்லாததால், நமக்கு இழைக்கப்படும் கொடுமை இங்ஙனம் உளதன்றோ, என்று எண்ணிடும்போது, குற்றாலத்துக் குளிர்ச்சியும், உள்ளத்து வெப்பத்தைப் போக்கிட இயலாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

"என்னைக் குறை சொல்லாதே மகனே, நான் உனக்கு எல்லாம் அளித்திருக்கிறேன். இதோ பார், என் அன்புப் பெருக்கு" என்று தாயகம் கூறுவதும் தெரிகிறது—அருவி வடிவில். சேதியோ, செந்தேளாகிறது.

வண்டாடு மலர்க் கூந்தல் வாராடுங் களப முலை
கண்டாடு மாதர் இதழ், கனியாடு மதுரமொழி
விண்டாடும் கிளிப்பிள்ளை வியந்தாடும் மடப்பூவை
கொண்டாடும் குயிற்பேடை கூத்தாடும்
பசுந்தோகை.

குற்றாலம், தம்பி, குற்றாலம்! இங்கு அருவி அழகு! ஆனால் திருவிடத்தின் பொலிவு இஃதொன்றேதானா? அதோ காவேரி! இதோ தாமிரபணி! வைகைக்குத்தான் என்ன! இந்த ஆற்றோரங்களிலே வளர்ந்த பண்பாடு எத்தகையது! இதோ

உழவர், இதோ கற்றுணர்ந்த பெரியோர்கள் சிற்றறிவினரின் செயல்கண்டுவருந்தித்தலைகுனிந்துவிடுதல்போல, செந்நெல் கற்றைகள். பழமுதிர் சோலைகள், வாளை துள்ளும் வாவிகள், எல்லாம். எனினும் ஆயிரம் மைல் 'யாத்திரை' நடத்தியும், அரும்பெருந் தலைவரே, ஆசியாவின் ஜோதியே, என்று அர்ச் சித்தும், நமது ஆட்சியாளர்கள் பெறுகிற தொகையோ இரு நூறு – ஆறுயிரத்தில் இருநூறு. குற்றலம் இருந்தென்ன, கொடைக்கானல் எழில் காட்டி என்ன, ஒத்தைக் கல் மன்று, 'ஊட்டி'யாகி உல்லாசமளித்தென்ன, எல்லாமிருந்தென்ன, எமக்கென்று ஓர் அரசு இல்லையே, என்றெண்ணி ஏங்கத் தான் செய்கிறது.

அவர் கூறுகிறர், தான் கண்ட அற்புதமான காட்சியை.

*இருண்ட மேகம் சுற்றிச் சுருண்டு சுழியெறியுங் கொண்டையாள்.*

கார்நிறக் கூந்தல் என்று வண்ணத்தை மட்டுமல்ல, அது ...சுருண்டு சுழித்து அழகுற இருக்கிறதாம்.

விழி, இலேசானதா? நெஞ்சைச் சூறையாடுகிறதாமடா, தம்பி

*குழை யேறியாடி நெஞ்சைச் சூறையாடும் விழிக் கெண்டையாள்.*

கேட்டாயா? கெண்டை மீன்போன்ற கண்கள் என்று மட்டும் சொல்லவில்லை, அந்தக் கெண்டைகள் நெஞ்சைச் சூறையாடுகின்றனவாம்.

*அரும்பு இதழினுள், கரும்பு மொழியினுள், முல்லைப் பல்லினுள், பிறை நுதலினுள்!*

அழகு சரி, பருவம்? என்று கேட்பரே, இதோ அதை யும் கூறுகிறர்.

*மங்கைப் பருவத்தாள்,* மங்கைப் பருவத்தாள் என்றுல் என்ன செய்கிறது தெரியுமோ அந்தப் பருவம், *அறிவை மயக்குமொரு கருவம் இருக்கும் மங்கைப் பருவத்தாள்...* அறிவை மயக்குகிறதாம்.

மதி முகம் அவளுக்கு, முத்துப் பற்கள், அந்த முத்து வரிசையை எட்டிப் பார்பபது போலிருக்கிறதாம் அவள் மூக்கி லொரு முத்து—*பல்வினமுகை எட்டிப் பார்க்கும் மூக்கிலொரு முத்திலுள்.*

உற்சாகத்தின் உச்சி சென்று அவர் கூறுகிறர். *கச்சுக் கிடக்கினும் தித்திச்சுக் கிடக்கும் இரு .....*

குற்றலக் குறவஞ்சி ஆசிரியர் இப்படி ஒரு வசந்தவல்லி யைக் காட்டுகிறர்.

எங்கே அந்த எழில் மங்கை? முத்துப் பல்லினுள் எங்கே? துடியிடை எவ்விடம் உள்ளாள்? கனகவல்லி எங்கே? மதி முகவதி எவ்விடம் இருக்கக் காண்கிறீர்? பூ இதழா, பொன் மேனியா, அறிவை மயக்கும் பருவத்தாள் என்கிறீரே, அவளைக் காணுமுன்பே அறிவு மயக்க மேலிடுகிறதே, எங்கே உள்ளனள் அந்த ஆரணங்கு?

அவள் என் நெஞ்சைச் சூறையாடுவது இருக்கட்டும், புலவரீர்! உமது கவிதை என் நெஞ்சைச் சிதறடிக்கிறதே, எங்கேஅந்தச்சிற்றிடை,கூறுக,என்றுகேட்டிடத்தோன்றும், குற்றாலக் குறவஞ்சி படிக்கும்போது. நான் அந்த மாளிகைக் கூடத்திலே அமர்ந்து குறவஞ்சியைப் படித்தபோது, தம்பி, கவி தீட்டிக் காட்டிய அந்த பெண் பாவையை அல்ல, நமது திரு இடத்தைத்தான் எண்ணிக்கொண்டேன் அத்துணை எழில் நிரம்பிய நாடு. ஆயின், என்ன நிலை இன்று என்று எண்ணும்போது, இன்று திருவிடம் இருக்கும் நிலையினைப் படம் பிடித்தளிக்க ஓர் புலவர் முன்வரக்கூடாதா என்றுகூட எண்ணினேன்.

குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் தீட்டியது, வசந்தவல்லி எனும் கற்பனைக் காரிகைப் பற்றி! அந்தக் காரிகை, குற்றால நாதருக்குக் காணிக்கையாகிவிடுவது, நூலின் பொருள்.

வசந்தவல்லிபோன்றே கண்டோரை கவர்ச்சிகொள்ளச் செய்யும் எழில் ததும்பும் நம்நாடு இன்று வடவருக்கல்லவா கால் வருடக் காண்கிறோம்.

வசந்தவல்லி வருகிறாள், பந்தாடி மகிழ்கிறாள், குற்றால நாதரின் கோலம் கண்டு காதல்கொள்ளுகிறாள், குறத்தி வருகிறாள், குறி சொல்கிறாள், நாதனைத் தேடிப் பெற்றுக் கூடி மகிழ்கிறாள், என்று நூல் எடுத்தியம்புகிறது.

அங்ஙனம் இருத்தலுக்குப் பதிலாக, இத்துணை அழகு ததும்பும் வசந்தவல்லி வந்தாள், பந்தாடி நின்றாள், அவளை ஓர் மலைப் பாம்பு விழுங்கிற்று, இடைவரை உள்ளே, மற்றப் பகுதி மேலே, அவள் அலறுகிறாள், துடிக்கிறாள், அது கேட்டு ஓடிவந்தவர்கள் மலைப்பாம்பின அழகு கண்டு மயங்கி நின்றனர், மங்கை நல்லாளின், கண்களிலே நீர் ததும்பிற்று, அவர்களோ, மலைப்பாம்பு, மெள்ள மெள்ள அவளை உள்ளுக்குக் கொண்டு செல்லும் திறத்தினைக் கண்டு வியந்தனர், என்று நூல் இருந்திருக்குமேல், எவ்வளவு வேதனை கொள்வோம்: தம்பி, தாயகத்தின் இன்றைய நிலை அங்ஙனமன்றோ இருக்கிறது. என் செய்வோம், திரு இடத்தின் எழிலை எங்கு நோக்கினும் காண்கிறோம், காணுந்தோறும் காணுந்தோறும், இத்துணை எழில்மிக்க நாடு, அடிமைப்பட்டுக் கிடக்கிறதே என்ற எண்ணமன்றோ மேலிடுகிறது. அடிமையின் கரத்திலே

ஆணிப் பொன்னுபரணம் இருத்தல்போல. வடவருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் திராவிடத்திலே எழில் இருக்கிறது அந்த எழிலோவியங்களில் ஒன்றுதான் குற்றாலம்!

அன்புள்ள,

28—8—1955

அண்ணாதுரை

கடிதம் : 17

# துறவி - காவியில்லை!

***ஆரியத் தவசிகளும், துறவிகளும்—மேல்நாட்டு எலினுர் அந்தனி கதை.***

தம்பி,

இயற்கை தீட்டித் தந்துள்ள 'எழிலோவியம்' குற்றாலம், கண்டேன், களித்தேன் என்று கூறினேன் அல்லவா, நினைவிருக்கிறதா, அருவியில், 'தருமபுரம்' கண்டேன் என்று குறிப்பிட்டிருந்ததை. அந்தத் 'துறவியைக் கண்டதும், என் எண்ணம், துறவறத்தின் மீது சென்றது. இதோ பாரேன், நாமெல்லாம்படுகிற தொல்லைகளை. திராவிடம் ஏன் தனி நாடாக இல்லை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் நமது பலம பொருந்திய மந்திரிமாாகள், டில்லியால் இளித்த வாயராக்கப்பட்டு விட்டார்களே! என்ன வெட்கக் கேடு இது? சேலத்து இரும்பும் நெய்வேலி நிலக்கரியும் நமக்குப் பயன் படவில்லையே, எவ்வளவு அநீதி இது? என்றெல்லாம் கவலைப் படுகிறோம்; கோவாவில் படுகொலை, பீகாரில் சித்திரவதை, பஞ்சாபில் அடக்குமுறை, என்ற இவைகளைப் பற்றி எல்லாம் எண்ணுகிறோம். நெஞ்சில பாரம் அதிகமாகிறது, இதோ 'தருமபுரத்' துறவியானதால், இத்தகைய சுமைகளைத் தாங்கித் தத்தளிக்க வேண்டிய தொல்லைக்கு ஆளாகாமல், மந்திரமாவது நீறு! சுந்தரமாவது நீறு! என்று கீதமிசைத்துக் கொண்டு, (மெல்லிய குரலில்-மனதுக்குள்ளாகவே சில வேளைகளில்) உமையொரு பாகனை எண்ணிப பெருமிதம் கொண்டு, சிவானுக்கிரகத்தைப் பருகி, பொன்னார் மேனியராக விளங்கி,

காமாட்சி
மீனாட்சி

விசாலாட்சி
நீலாயதாட்சி
சிவகாமசுந்தரி
குழல்வாய்மொழி
குவளைக்கண்ணி
கோமதி
குமாரி

என்று அம்மைக்கு அஞ்சலி செலுத்தியும், திரிபுரமெரித்தவிரி சடைக் கடவுளே! என்றும், பாகுகனிமொழி மாது குறமகள் பாதம் வருடிய மணவாளா! என்று முருகனைத் தோத்தரித்தும், 'அருக்கு மங்கையர் மலரடி வருடியும் கருத்தறிந்தபின் அரைதனில் உடைதனை அவிழ்த்தும் ஆங்குள அரசிலை தடவியும் அழியாதே' என்று அறநெறி உரைத்துக் கொண்டும், திருக்கோலம் காட்டியும், அடியார் தரும் காணிக்கையைக் குவித்துக் கொண்டும், கோலோச்சமுடிகிறது. பண்டங்களின் விலை வீழ்ந்தாலும் ஏறினாலும், மேட்டூர் அணையில் நீர்மட்டம் குறைந்தாலும் கூடினாலும, எது பற்றியும் கவலையின்றி இவைகளைப்பற்றி எண்ணி ஏங்கிடச் 'சாமான்யர்கள்' உளர், நாம் சதாசிவத்தின் பூலோகப் பிரதி பிம்பமாகக் காட்சி தருவோம் என்று கூருமற் கூறிக் கொலு வீற்றிருக்க, அவரால் முடிகிறது. துறவி! எனவே அவருக்கு எதுவும் துரும்பு! வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும்போது ஏன் அவர் ஏழையர் உலகுக்கு வந்துற்றிடும் இடர்ப்பாடுகள் பற்றி ஏக்கம் கொள்ளப் போகிருர்! விடைஏறும் எம்மான், அவருக்கு அளித்துள்ள பதவி இருக்கும்போது, பஞ்சமும் பட்டினியும், பசியும் கொட்டுவதாலே பதறிப் பரதவிக்கும் பாமரரின் நிலையிலா அவர் இருக்கவேண்டும்! செச்சே! சிவனருள் சாமான்யமோ! செய்வருக்கும் சில பல மனக்குறை எழக்கூடும்! கோட்டையில் கொடிகட்டி ஆள்வோருக்கும் சிற்சில வேளைகளில் தொல்லையும் துயரமும் தாக்கிடும். இந்தத் துறவிக்கோ, எல்லாம் இன்பமயம்! எங்கும் இன்பமயம்! காலையிலே, மாலையிலே, காகம் கரையும் வேளையிலே மடத்திலே, வேறு இடத்திலே, எங்கும், சிவானுபவம், சுகானுபவம்! துறவிக்கன்றோ கிட்டும் இத்தகைய தேன் சொட்டும் வாழ்க்கை!

தம்பி, துறவிக்குக் கிடைக்கும் இந்த 'இன்ப வாழ்வு' பற்றிய எண்ணம், எனக்கு மேலிட்டதால், நான் முன்னாளில் துறவியின் நிலை இருந்த தன்மை பற்றியும், இந்நாளில் துறவி என்பது எத்தகைய பக்குவமான பதவியாக மாறிவிட்டது என்பது பற்றியும் எண்ணிடலானேன். அரண்மனையில் பிறந்த இளங்கோவும் துறவிதான்! இதோ இன்று அடுப்படி உழன்றோர்கூட துறவிகளாவதன் மூலம், அரண்மனை அந்

தஸ்துப் பெறுகிறார்கள்! துறவி இளங்கோ தமிழில் காவியம் இயற்றினார்—சிலம்பு ஒலிக்கிறது! இன்றையத் துறவிகளின் சன்னதியில்,

நூபுரம் கலீர் கலீரென
நேத்திரம் சுரீல் சுரீலென
பாத்திரம் பளா! பளாவென!

தோத்திரங்கள் நடைபெறுகின்றன என்று கேள்விப்படுகிறோம்.

ஒருவேடிக்கை தெரியுமா, தம்பி! துறவி—தவசி—என்று இரு சொற்கள் கேட்டிருக்கிறோமல்லவா—முன்னது பெரிதும் தமிழகத்துக்கே உரிய தனிப்பண்புக்கு உறைவிடமாகவும், பின்னது ஆரிய கலாச்சாரத்தின் இருப்பிடமாகவுமே, ஆதி நாட்களிலேயே இருந்து வந்திருக்கிறது.

இன்பமான வாழ்க்கையில் இருப்பதற்கான நிலை இருந்து, அதனைத் துறந்திடும் பெரியோன், துறவி! அத்தகைய துறவிகளைத் தமிழகம் அந்நாளில் கண்டது. கொலு மண்டபத்தில் வீற்றிருக்கும் வாய்ப்பும், கோகில மொழியாள் கொஞ்சிட, மஞ்சமதில் மிஞ்சு சுகம் பெறுவதற்கான வசதியும், நிரம்ப இருந்ததைத் துறந்தார் இளங்கோ அடிகள்! பட்டுப் பட்டாடையைத் துறந்து, காவி அணிகிறார்! வரி கட்டினாரா?கப்பப் பணம் தப்பின்றி வந்து சேர்ந்ததா? கரிப்படையில் குறைவேதேனும் உளதோ! வேற்படைத் தலைவனைக் காணோமே, எங்கே?—என்று கேட்டு அரச காரியத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும் நிலை இருந்தது, இதனைத் துறந்தார், செந்தமிழின் சிறப்பினை விளக்கிடும் சிலம்பு சமைத்தளித்த சீலர். கணிகையர் குலத்துதித்த மணிமேகலை, துறவுக்கோலம் பூண்டு மக்களின் பசிப்பிணிப் போக்கிடப் பாத்திரமேந்தி நின்றதுடன், மக்கள்தம் பவப்பிணி ஒழித்திடும் மார்க்கம் போதித்து வந்தது பற்றிப் படித்துப் பெருமிதம் கொள்கிறோம். துறவு இத்தகைய தூய்மைக்கு நிலைக்களனாக, தொண்டுக்கு வாய்ப்பாக, இருந்தது. எல்லாத் துறையிலும் செம்மை கண்ட நந்தம் நாட்டிலேதான்! ஆனால் ஆரிய பூமியிலோ! தவசிகள் உண்டு! துறவிகளின் எண்ணிக்கையை விட மிக அதிகம்! துறவிகள் மனிதருள் மனிதராக, ஆனால் மாமனிதராக இருந்து வந்தனர்! ஆரியத் தவசிகளோ, மனிதருள் தெய்வங்களெனக் கருதப்பட்டு வந்தனர். காடு சுற்றியும் கானாற்றின் கீதம் கேட்டு இன்புற்றும், கல்சொல்லும் கவிதையையும் காரிருளைப் போக்கிடும் மதிதரும் அன்புரையையும் மக்களுக்கு உய்யும் வழி கிடைத்தற்கான அறநெறியையும், அருளினர், நந்தம் நாட்டுத் துறவிகள்! அடி வீழ்ந்து வணங்கிட மன்னர்களும், கேட்டபோது நவநிதி கொட்டித்தரக் காவலரும், ஆடிடும் அணங்குகளும், பாடிடும் பாவையரும்,

பணிவிடைக்காகப் பட்டுடுத்திப் பார்வையால் கொல்லும், பசுங்கிளிகளும், தேவை என்று நமது துறவிகள் கேட்டதில்லை —அந்நாளில்! மலரம்பு பட்டதால் துடித்துக் கிடக்கும் பட்டத்தரசர்களுக்கு, மட்டற்ற மகிழ்ச்சியூட்டும் மாமந்திரம் கூறிடும் ஆற்றலற்றவர்கள் நமது துறவிகள்! ஆரியத் தவசிகளோ! பர்ணசாலைகள், ஆற்றோரத்தில் சோலையின் நடுவில், சாலைப் பக்கத்தில்! தென்றல்சாமரம் வீச,தேமாங்கனி குலுங்கும் பூங்காவிலிருந்து கிளியும் நாகணவாய்ப்புள்ளும், குயிலும் புருவும் பிறவும் இசை பயில, மான்கள் துள்ளித் திரிய, மன்னர்கள் கைகட்டி, வாய்பொத்தி நின்று, கேட்டது தர, பணிவிடைப் பெண்கள் புடைசூழ, பத்தினிகளுடன் 'ரசானுபவத்தைப்' பருகி இன்புற்று வாழ்ந்து வந்தனர். ஈசனை மறந்தனரோ எனின், இல்லை, இடையிடையே யாகம், யோகம், உண்டு. வேள்விப் புகை கானகத்தை மணக்காடாக்கும் - தவசியின் பர்ணசாலைகளைச் சிங்காரக் கூடமாக்கும்! தேவலோக மேனகை தொட்டிட, காமம் துளிர்த்தது ஆஸ்ரமத்திலன்றோ! திலோத்தமையும் ரம்பையும், ஊர்வசியும் மற்றமற்றவிண்ணுலகத்து ஆடலழகிகளும், ஆட்கொல்லிகளும் அடிக்கடி வந்து, தடைகாட்டி, கனகப் பந்தினை ஆட்டி, காவி கமண்டலமேந்திகளைப், பம்பரமாக்கி கலகலவெனச் சிரித்து, பொலபொலவெனக் கண்ணீர் உகுத்து, இன்பப் பெருக்கால் ஆஸ்ரமங்களை இந்திராதிதேவர்களும் கண்டு பொருமைப் படத்தக்கதான புனித ஸ்தலங்களாக்கி உள்ளனர்.

"கோழி கூவிற்று கோகிலமே! ஆறு சென்று அனுஷ்டானுதிகளை முடித்துக் கொண்டு வருகிறேன்! அன்னமே! ஏன் எழுந்திருக்கிருய்! கமண்டலத்தை நான் தேடி எடுத்துக் கொள்கிறேன். ஆயாசம் நிரம்ப இருக்கிறது ஆருயிரே! நீ சற்று நேரம் அயர்ந்து நித்திரை செய்" என்று கூறிவிட்டு அவர் செல்ல, அவள் கண் அயர்ந்த நிலையில், "அன்னமே! சொர்ணமே! கன்னலே மின்னலே! கட்டித் தங்கமே! எட்டிப் போகாதே என் இன்பமே!" என்று மீண்டும் கொஞ்சுமொழி கேட்ட பாவை, கேட்டார்க்குக் கேட்டது அருளும் வள்ளல் போல் மன[illegible]றிந்து நடந்துகொள்ள, அந்த விருந்து உண்ட நிலையில், அவன் ஆஹாஹாம்! போட, புதுமையா இருக்கிறதே! இதுநாள் வரை நான் கண்டறியாத பேரின்பமாக வன்றோ இது உளது! என்றெண்ணி, அந்தப் பூவை புளகாங்கிதமடைய, கபடமறிந்த கௌதமன், கல்லாக்கிய, அந்தக் கட்டழகி அகலிகை கண்ணுயிரம் உடையான் என்று இன்று பாமரர் கொண்டாடும் இந்திரனைக் கூடிச் சுகித்த இடம் தவசியின் ஆஸ்ரமமன்றோ! அங்கம் தங்கம்! ஆடும் முல்லை!

பாடும் கண்கள்! தேடும் இதழ்! என்றெல்லாம் பரவசப் பட்டுக் கூறி, கெண்டை அழகும் கொண்டை அழகும், இடையின் நெளிவும் தொடையின் தரமும், அங்கம் ஒவ்வொன்றிலும் பருவ கருவம் பதிந்து கிடக்கும் பான்மையும் இருத்தலைக் கண்டு, துஷ்யந்தன் மனமகிழ்ச்சி கொண்டு, மானும், அன்னமும் மிரண்டோட, மலர்கசங்ககனிசிதற, கன்னியர் வெட்கத்தால் கண் பொத்திக் கொண்டு வேறுதிக்கு நோக்கி ஓடிட, துடியிடையாளைத் தொட்டிழுத்து முத்தமிட்டுப் பட்டத்தரசியாக்குவேன்! கட்டிக்கரும்பே! என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்! என்று கனிமொழி பேசி, கன்னியின் புதுப்பார்வையால் துளைக்கப்பட்ட கட்டுடலின்மீது பட்ட காமன் கணைகள் பொடிபட இன்பம் பெற்று இகத்தில் இதோ பரம் கண்டேன் என்று பூரித்துக் கூறிச் சகுந்தலையை வாரி அணைத்துக் கொண்ட இடம், கண்வரின் ஆஸ்ரமம் அல்லவோ!! அத்திரியும் பிறரும், தவசிகளில் குறிப்பிடத்தக்க எவர் பற்றியும் கூறப்பட்டுள்ள புண்யகாதைகளில் இந்தப் 'புனிதம்' ததும்பிடக் காண்கிறோம். தவசிகள் இருந்தநிலை, பலஆண்டுக் காலம் பகலென்றும் இரவென்றும் பாராமல், ஊணும் உறக்கமும்கூட மறந்து தொழில் நடத்திப் பெரும் பொருள் ஈட்டி, இனித் தம்மிடம்குவிந்துள்ள செல்வம், சிதையாது குறையாது என்ற நிலை பிறந்ததும், பாரிசு சென்று, என்னைப் பார் என் அழகைப்பார் கண்ணாலே! என்று இதழால் கூறிடும் இன்ப வல்லிகளுடன் காமக்களியாட்டத்தில் ஈடுபடும் கனவான் போன்று பெரிதும் இருப்பதைக் காணலாம். ஆரியத் தவசிகள், ஆசாபாசங்களை விட்டொழித்தவர்களாகவோ, காமக் குரோதாதிகளைச் சுட்டெரித்தவர்களாகவோ, பற்று அற்றவர்களாகவோ காட்டப்பட்டு இல்லை! மாபெரும் போர் பல புரிந்த பிறகு மன்னர்கள் பெறக்கூடிய மதுநிகர் இன்பத்தை இந்தத் தவசிகள், மகேசனுக்கு எம்மிடம் மட்டற்ற அக்கறை உண்டுஎன்று கூறுவதாலேயே பெற்றனர்! அவர்களுக்கு குலச் சண்டை, குடும்பச்சண்டை, குமரிகளால் மூண்டிடும் குத்து வெட்டு, யாருக்கு யார் சீடர், என்பது பற்றிக் கிளம்பிடும் சச்சரவு சமர், யாருடைய அந்தஸ்து பெரியது என்பதுபற்றிய அமளி, எல்லாம் உண்டு!! காட்டு ராஜாக்கள் என்று கூறி, அது எத்தகையது என்பதுபற்றி எண்ணிப்பார்த்துத்தெரிந்து கொள்க என்று கூறிடத் தோன்றுகிறது, தம்பி, அவ்வளவு கோலாகலமாக இருந்து வந்தனர் ஆரியத்தவசிகள்! ஆரியத் தவசிகள் துறவிகளல்ல மிகமிகக் கர்விகள் என்பதைத்தான் அவர் பற்றிய சிலபல கதைகள் காட்டுகின்றன!

இன்று தமிழகத்தில் உள்ள துறவிகள், இளங்கோ காட்டிய வழியில் செல்கின்றாரில்லை, செல்லும் திறனும் இருப்பதாகத்

தெரியவில்லை, அவர்தம் நெஞ்சை இன்று ஆட்கொண்டிருப்பது, அன்றைய ஆரிய தவசிகள் முறைதானே என்று எண்ணத்தக்க வகையில், காரியம் பல நடைபெற்று, மூடி மறைக்கப்பட்டதுபோக, புடைத்து வெடித்து வெளியே சில தெரிந்திடக் காண்கிறோம். துறவிகள் தவசிகளாகிவிட்டனர்.

தம்பி, துறவிகளின் நிலைபற்றிய எண்ணம் குடைந்தநிலையிலிருந்த எனக்கு, ஒரு துறவி பற்றிய சிறு ஏடு படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ஜெரோம்-கெ-ஜெரோம்—என்பவர், ஆங்கிலஉரைநடையாசிரியரில் கீர்த்தி பெற்றவர். நகைச்சுவை ஏடுகள் தீட்டுவதில் சமர்த்தர். அவர்தம் ஏடுகள், பல்வேறு மொழிகளிலே வெளியிடப்பட்டன. அவருடைய புத்தகமொன்று படித்தேன், குற்றாலத்தில்.

கதைதான்! மிகமிகச் சாதாரணமான கதை! அதிலே சரசம் சாகசம், சதி துப்பறிதல், கொலை வஞ்சம் தீர்த்தல், இயற்கை வருணனை,வழக்கு மன்ற வாதம், இவைகள் ஏதும் கிடையாது. ஒரு சாமான்யனுடைய மிகச் சாதாரணமான கதை. கொல்லன் மகன் ஒருவன், உழைப்பாலும் திறமையாலும் ஏழ்மையை விரட்டி அடித்து, செல்வவானான வாழ்க்கை வரலாறு. காதல், நெஞ்சை அள்ளத்தக்க வகையில் இல்லை! நள்ளிரவு சந்திப்புகள், நயவஞ்சகனின் எதிர்ப்பு, ஏந்திழையாள் உகுத்த கண்ணீர்,இவன் இதயத்தைத் துளைத்திடுவது இதெல்லாம் இல்லை. சாதாரண கதை. சரி, கேளேன், கதையைத்தான்.

அந்தனிஜான் என்பது நூலின் பெயர்; கதாநாயகன் பெயரும் அதுதான்.

அந்தனி, ஒரு கொல்லன் மகன்! தந்தை கடுமையாக உழைக்கிறார். போதுமான வாழ்க்கை வசதி கிடைக்கவில்லை. தாயார் பாடுபடுகிறார். குடும்பம், தட்டித்தடுமாறி நடந்து கொண்டிருக்கிறது. சிறுவனாக இருப்பது முதலே, அந்தனி, சுறுசுறுப்பும் அறிவுத் திறனும் மிகுந்தவனாக இருக்கிறான். எதையும் துருவித்துருவி ஆராய்கிறான், ஏன்? ஏன்? என்ற கேள்விதான் அவனுக்கு அரிச்சுவடியாக அமைகிறது.

முறைப்படி அந்தனியைப் படிக்க வைக்கிறார்கள்; கல்வியில் அவன் கருத்தூன்றிப் பலன் காண்கிறான்.

அவன் மாமன், ஒரு முரடன் ஊரார். அவனை நாத்திகனென்கிறார்கள். அவனிடம் அந்தனி, அன்பு கொள்கிறான்.

அந்தச் சிற்றூரில் ஒரு சீமான் குடும்பம்!

சீமான் வழக்கறிஞர், வணிகர், இதனாலேயே சீமானானவர்; நல்லவர்; பிறருக்கு உதவிபுரியும் நன்னெஞ்சினர்.

அவருக்கு ஒரு மகன், ஒரு மகள். மகள் பெயர், பெட்டி.

அந்தக் குடும்பத்தின் உதவி கிடைக்கிறது, அந்தனிக்கு பெட்டி அந்தனியிடம் பாசம் கொள்கிருள். அது காதலாக மலரும் என்று பலரும் கருதுகிருர்கள்!

தொழிலில் தேர்ச்சிபெற்று, அந்தனி, தன் குடும்ப நிலையை உயர்த்துகிருன்.

ஊழியனுகச் சேர்ந்தவன், நாளா வட்டத்தில், சீமானுடைய தொழிலில் பங்காளனுகிருன்; பணம் குவிகிறது; படாடோபம் தலைதூக்கவில்லை; பண்பு கெடாத வகையில் வாழ்க்கை நடத்துகிருன்.

எல்லோரும் அந்தனி, சீமானின் மருகனுவான் என்று எதிர்பார்க்கிருர்கள். பெட்டியும் மறுத்திருக்க மாட்டாள். எனினும் அந்தனியின் மனம் வேருர் மங்கையை நாடுகிறது. பெட்டி கண்ணீர் பொழியவுமில்லை, ''காதகா! பாதகா! கனவு கண்டதெல்லாம் பொய்த்துப்போய் விட்டதே! இனி என் எதிரே நிற்காதே! என் மாளிகையில் உனக்கு இடம் கிடையாது. நட, நட!'' என்று கனல் கக்கவில்லை. எலினுர் மணமகளாகிருள்.

குடும்பம் குதூகலமாக நடந்து வருகிறது—குழந்தைகள் பிறக்கின்றன.

சீமானும் அவன் மகனும் இறந்து படுகிருர்கள்.

அந்தனி, ஏழைகளுக்கு இதம் தரும் பணிகள் பல செய்கிருன்.

புகழ் பெறுகிருன்—எனினும் அவன் மனதில் சாந்தி இல்லை.

கடவுள் பற்றி அவன் சிறு வயது முதல் சிக்கல் நிரம்பிய சிந்தனையில் ஈடுபடுகிருன்.

முடிவில், கடவுள் தன்மை பற்றி இதுவரை கூறப்பட்டு வந்த கொள்கைகள் பொருளற்றவை என்று உணருகிருன்.

ஏழைகளுக்கு உதவுவதற்காகப்பொருள் ஈட்டுவது முறை தான் என்று எண்ணிக்கொண்டிருந்தவன், அதுவும் தவறு என்று உணருகிருன்.

உண்மையான தொண்டு, தன்னலமற்றதாக இருத்தல் வேண்டும் என்று உணருகிருன்.

மிகுந்த செல்வ நிலையில் இருந்தவன், அனைத்தையும் துறந்துவிடத் தீர்மானிக்கிருன்.

மீண்டும் ஏழைகளிடையே சென்று, எளிய வாழ்க்கை நடத்திக் கொண்டு, அவர்களுக்கான பணியாற்றமுனைகிருன்.

பெட்டி, அவனுடைய போக்கை ஆதரிக்கிருள்.

சுகபோகமும், செல்வநிலையும் இழந்தாலும்பரவாயில்லை, அந்தனிக்குத் துணைநிற்பதுதான் அறிவுடைமை அன்புடைமை என்று எலினுரும் முடிவு செய்கிருள்.

அந்தனி, துறவியாகிருன்! மனைவி, குழந்தைகள், உண்டு!! தொழில்நடத்துகிருன், தன்வாழ்க்கைக்கான வசதி பெற! தொண்டுபுரிகிருன்! அவனுடைய துறவு, ஏழைகளுக்கு ஓர் நல்வாய்ப்பாகிறது.

தம்பி! இதுதான் கதை!! ஒரு கவர்ச்சியும் தெரியவில்லை அல்லவா!! இச்சொலியும் விம்மலும்,முழக்கமும் முணுமுணுத்தலும், கூடிப்பிரிதலும் கொண்டாட்டமும் ஏதுமில்லை. எனினும், இந்தக் கதையின் மூலம், ஜெரோம்-கெ-ஜெரோம், அளிக்கும் கருத்து, உண்மையிலேயே, படிப்போரை, புதியதோர் உலகுகொண்டு சேர்க்கிறது.

உண்மைத் துறவு, என்ன என்பதை உணரமுடிகிறது!

இக்காலத் துறவிகளைக் கண்டு, என்னே! காலத்தின் கோலம்! என்று ஏங்கும் மனத்தினருக்கு, அந்தனி கதை, உண்மைத் துறவு நிலை எங்ஙனம் மேம்பாடுடையதாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

குப்பை மேட்டில் பிறந்த அந்தனி, கோலாகலமான வாழ்க்கை நடத்துவதற்கான வசதியைப் பெறுகிருன்.

கொல்லன் பட்டறையில் பிறந்தான், கோட்டை போன்ற மாளிகையைப் பெறமுடிந்தது.

நாற்றமடிக்கும் சேரியில் பிறந்தான், உல்லாச உலகிலே இடம் பெற்ருன்; ஏழையர் விடுதியில் நாற்றம் குறையவும், சிறிதளவேனும் அவர்களுக்கு ஏற்றம் கிடைக்கவும், அவன் வழிகண்டான்.

எனினும், இறுதியில், அவன் தன்னலமறுப்பு ஒன்றின் மூலமாகத்தான் ஏழையர் உலகுக்கு உய்வுதேட முடியும் என்று உணருகிருன்—துறவியாகிருன்!

அவன் விரும்பி இருந்தால்,சீமானுகவும் தர்மவானுகவும், மதத் தலைவனுகவும், ஊராள்வோனுகவும் வாழ்ந்து கொண்டிருக்க முடியும்.

உழைப்பால் உயர்ந்தோன்—என்று ஊரார் அவனைப் பாராட்டினர்.

ஏழையாகப் பிறந்தாலென்ன, அறிவு இருந்தால், அந்தனி போல அந்தஸ்தான நிலை பெறமுடியும் என்று அனைவரும் கூறினர்.

அவன் ஒரு எடுத்துக்காட்டாக, விளங்கினுன்,

எனினும், உடைமைகளை உதறிவிட்டு, உயர்ந்த இடத்தை விட்டு விலகி, எளிய வாழ்க்கையையும் ஏழையர் உலகிலே ஒரு இடத்தையும் மீண்டும் கொள்கிருன்—துறவியாகிருன்.

துறவின் மூலம், அவன் வானுலகில் இடம் கேட்டானில்லை—வணங்கத்தக்க தெய்வத்தினிடம் வரம் கேட்க அல்ல, அவன் துறவியானது. துடிக்கும் ஏழையர்க்குத் தொண்டாற்றத் துறவியாகிருன்.

அந்தத் துறவியுடன், நாம் காணும் ஆதீனத் துறவிகள், அஷ்ட ஐஸ்வரியத்தைப் பெற்று ஆனந்த வாழ்வு நடாத்தும் துறவிகள், ஆகியோரை ஒப்பிடும்போது, நெஞ்சு நெகிழத் தான் செய்கிறது.

அந்தனிஜான் கதையில் சிறுசிறு சம்பவங்கள் மூலம், ஆசிரியர், அரிய கருத்துக்களை அள்ளித் தருகிருர்.

இந்தச் சம்பவங்களின் மூலம், படிப்படியாக. அருள்நெறி எவ்வகையில் இருக்கும் என்பதையும், கடவுட் கொள்கை பற்றிய கருத்துக்களில் எவ்வளவு பொய்ம்மையும் பொருளற்றவையும் உள்ளன என்பதையும் ஆசிரியர் அழகுற எடுத்து விளக்குகிருர்.

அந்தனி சிறுவனுக இருந்தபோது ஒரு சம்பவம்—கவனி தம்பி! கருத்துக்கு விருந்து!

ஒரு மாலை, ஆறேழு பேர்கூடி, பஜனை செய்துகொண்டிருந்தனர்.

கடவுள், பரமண்டலத்தில் இருக்கிருர். அவருடைய சன்னிதானத்தின் முன்பு அனைவரும் தொழுது நிற்கவேண்டும். ஆண்டவனிடம் 'பயபக்தி விசுவாசம்' இருக்கவேண்டும்—என்று ஒரு மாது கூறினுர்கள்.

சிறுவன் அந்தனிக்கு, தொழிலகக் கதவைத் திறந்து வைத்துவிட்ட நினைவு வந்தது; ஓடிச்சென்று கதவை மூடிக்கொண்டு உள்ளே வந்தான்.

அருள் பாலிக்கும் ஆண்டவன்
அனைவரும் போற்றுதும் வாரீரோ

என்று பஜித்தனர்.

அந்தனியின் தாயார், அடிக்கடி வெளியே சென்று, பல பண்டங்களை பெற்றுக்கொண்டு வருவதுண்டு. எங்கே, யார் தருகிருர்கள், என்பது சிறுவனுக்குத் தெரியாது. ஆனல் நல்லதைத் தருபவர் ஆண்டவன் என்று பஜனை நடத்தியோர் கூறிடக் கேட்டதால், தன் தாயாருக்கு இந்தப் பொருளைத்

தருபவரும், ஆண்டவனுகத்தான் இருக்கவேண்டும் என்று அந்தப் பிஞ்சு உள்ளம் எண்ணிற்று.

அவனுக்கு எப்படியும் ஆண்டவனைப் பார்த்துவிட வேண்டுமென்று ஒரே ஆவல்.

அனைவருக்கும் அருள்பாலிக்கும் ஐயன் என்றல்லவா அனைவரும் பஜிக்கின்றனர்; அத்தகையவரைக் காண வேண்டும் என்று ஒரே துடிப்பு.

ஆண்டவனல்லவா, நம் தாயாருக்குப் பண்டம் அளிக்கிருர்; அவரை தரிசிக்கவேண்டும்— என்று எண்ணிக்கொண்டான்.

"அம்மா! இன்று என்னையும் அழைத்துக்கொண்டுபோ" என்று கெஞ்சினன்; தாயும், அந்தனியை உடன் அழைத்துச் சென்றனர்.

நீண்டதூரம் சென்ற பிறகு ஒரு மாளிகையை அடைந்தனர்; அங்கு ஒரு முதியவர் இருந்தார்; தாய் அவருக்கு வணக்கம் கூறினள். முதியவர் சிறுவனுடைய முதுகில் தட்டிக் கொடுத்து, பணம் கூடக் கொடுத்தார்.

தாயார் உட்பக்கம் சென்றுவிடவே, சிறுவன் கூடத்தில் இருந்தான். வேறு மாதர் சிலர் அவனுக்குப் பாலும் பலகாரமும் கொடுத்தனர். சிறிது நேரம் கழித்துத் தாயார், ஒரு சிறு மூட்டையுடன் வந்து, சிறுவனை அழைத்துக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டாள்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுச் சிறுவன், "அவர் அப்படி ஒன்றும் பிரமாதமான தேஜசுடன் இல்லையே அம்மா!" என்ருன், "யார்?" என்று தாயார் கேட்டாள்; "ஆண்டவன்!" என்று சிறுவன் கூறினன். தூக்கிவாரிப்போட்டது தாயாருக்கு. என்னடா சொல்லுகிருய்? ஆண்டவன் கீண்டவன் என்று என்னமோ சொல்கிருயே, என்ன அது? என்று அவள் கேட்க, சிறுவன், மாளிகையைச் சுட்டிக்காட்டி "அவர் தானம்மா, ஆண்டவன்! அவர்தானே நமக்கு நல்ல பொருளெல்லாம் தருகிருர் ஆண்டவன்தான் அனைவருக்கும் நல்லது தருகிருர் என்று பேசிக்கொண்டிருந்தீர்களே நீங்களெல்லாம். நான் கேட்டுக்கொண்டுதானே இருந்தேன்" என்று அந்தனி விளக்கமளித்தான் அவன் தாய்க்கு நீண்ட நேரம் வரையில் என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

"அவர் ஆண்டவன் அல்ல! சர். வில்லியம் கூப்பர்! அவரிடம் நான் ஊழியம் செய்திருக்கிறேன்" என்று நீண்ட நேரத்துக்குப் பிறகு கூறினள்.

"ஒரு விதத்தில் நமக்கு இந்தப் பொருளை ஆண்டவன் தான் கொடுக்கிருர் என்று கூறவேண்டும். சர். வில்லியம்

மனதிலே ஆண்டவன்தானே, கருணை பிறக்கச் செய்கிறார்; அதனால்தானே நமக்கு சர். வில்லியம் இந்த உதவியை செய்கிறார்; எனவே நமக்கு ஆண்டவன்தான் இந்தப் பொருளை எல்லாம் தருகிறார் என்று சொல்லவேண்டியதுதான்!''— என்று மேலும் விளக்கமுரைத்தாள் அன்னை.

சிறுவன் ஒரு கணம் யோசித்துவிட்டு, ''ஆனால்,அம்மா! இந்தப் பொருள், சர். வில்லியமுடையதுதானே'' என்று கேட்டான்.

''ஆமாம்! ஆனால் ஆண்டவன்தான் அவருக்கு அவைகளைக் கொடுத்தார்'' என்று தாயார் கூறினாள்.

கடவுள் இப்படி சுற்றி வளைத்து நடந்துகொள்வது சரியான வழியாக அந்தோனிக்குப் படவில்லை.

''ஏனம்மா, கடவுள் நமக்கு இந்தப் பொருள்களைத் தர மாட்டேனென்கிறார்! நம்மிடம் அவருக்கு ஆசை இல்லையா?'' என்று சிறுவன் கேட்டான்.

என்ன பதில் கூறமுடியும்! பாபம்! அந்த மாது சரி,சரி, இப்படியெல்லாம் கேட்கக்கூடாது; தெரிகிறதா; என்று கூறித்தான் சிறுவனை அடக்க முடிந்தது! ஆனால் மனம்? சிந்தனை?

இன்னும் சர்வ சாதாரணமாக 'மேதைகள்' கூறிடும் வகையிலேதான், அந்தனியின் தாயார் பேசுகிறார்கள்!

கொடுக்கும் ஆள் யாராக இருந்தாலும், கொடுக்கும் கரம் ஆண்டவனுடையது என்பதுதான், எங்கும் எவரும் பேசும் தத்துவம்! அந்தத் தத்துவத்தைக் கூறிவிட்டு, அந்த மேதைகள் தமது அறிவுத் திறனைக்கண்டு, தமக்குத் தாமே பாராட்டிக்கொள்கிறார்கள்!

சிறுவனல்லவா, கேட்கிறான்—ஏனம்மா! ஆண்டவன், இப்படி சுற்றிவளைத்து வேலை செய்கிறார். நமக்கு உதவி செய்ய விரும்பினால், ஏன் நேரடியாகச் செய்யக்கூடாது!— என்றல்லவா கேட்கிறான்.

அவன் வாயை, அன்னை அடக்கிவிடுகிறார்கள்! அந்த அன்னை மட்டுமா—இன்று மேதைகளும் சிக்கலான, சங்கடமான, அடிப்படையை ஆராயும் விதமான கேள்விகளைக் கேட்பவர்களின் வாயை அடைக்கத்தான் முனைகிறார்கள்.

வாய் மூடிக்கொண்டான், அந்தனி! ஆனால் மனம்? சிந்தனை? சும்மாவா இருக்கும்! அடக்க அடக்க, வேகமாக வேலை செய்கிறது.

0 0 0

நியூட் மாமாவை, நாஸ்திகன் என்று பலரும் கூறினர், அந்தப் பாளையத்துக்குப் பணியாற்றவந்த பாதிரிமார்கள் ஒவ்

வொருவரும், இந்த நாத்திகனைத் திருத்தி வெற்றி காண வேண்டுமென்று வெகு பாடுபட்டனர். ஆனால் நியூட் மாமாவோ, பிடிவாதமாக இருந்து வந்தார்!

நரகத்தில் சிக்கி அவன் நாசமாகப்போவது திண்ணம் என்று பலர் பேசுவர்; நரகம் என்றால் கொடியவர்களைத் தண்டிக்கும் இடம் என்று அந்தனி கேள்விப்பட்டிருக்கிறான்! நியூட் மாமாவைப் பார்த்தாலோ, கொடியவராகவே தெரிய வில்லை! எனினும் அவர் நரகத்தில் தள்ளப்படப்போவது நிச்சயம் என்று மாமியே கூறுகிறார்கள்!

"மாமி! மாமா, மிகவும் கொடியவரா?"

"கொடியவரல்லடா! எவ்வளவோ கொடியவர்களை நான் பார்க்கிறேன், உன் மாமா அப்படிப்பட்டவரல்ல"

"அப்படியானால்,அவர் ஏன் நரகம் செல்லவேண்டும்?"

"போகத் தேவையே இல்லையே! அவராக அல்லவா, பிடிவாதம் பிடிக்கிறார்! நம்பிகை கொண்டாரானால். காப்பாற்றப்படுவார்! நரகம் போகத் தேவையே இல்லையே"

"நம்பிக்கையா? எதை நம்பச் சொல்கிறீர்கள்?"

"விவரமாகச் சொல்ல எனக்கு நேரமில்லை சொல்வதை நம்பினால் போதும்; உன் மாமா அதைத்தான் செய்யமாட்டேனென்கிறார்"

"யார் சொல்வதை நம்பவேண்டும் என்கிறீர்கள்?"

"எல்லோரும் சொல்வதைத்தான். நானே எத்தனையோ முறை சொல்லி இருக்கிறேன்—கேட்டால்தானே. ஏதேது நீயும் உன் மாமனைப்போலவே கேள்விகளாக அடுக்கிக் கொண்டே போகிறாயே, இப்படி எல்லாம் பல கேள்விகள் கேட்கக்கூடாது – தெரிகிறதா!"

சிறுவனுடைய வாயை மாமி அடக்கிவிட்டாள். ஆனால் மனம்? சிந்தனை? தூங்கிவிடுமா என்ன? அது கொதித்துக் கொண்டேதான் இருந்தது.

அன்னையும், மாமியும் சிறுவனுடைய சந்தேகத்தைத் துடைக்கவில்லை. விருப்பம் இல்லாததால் அல்ல, அவர்களால் இயலவில்லை! இப்போது மட்டுமென்ன? எந்த மேதை, விளக்கம் அளிக்கிறார்—சந்தேகத்தை நீக்குகிறார். சீறுகிறார், சபிக்கிறார். போக்கிரித்தனமான பேச்சு இது, நாத்திகப் போக்கு, என்று நிந்திக்கிறார்.

0 0 0

"மாமா! நீ, ஏன் நம்பிக்கை கொள்ளக் கூடாது?"

"எதை நம்புவது?"

"எல்லோரும் நம்புவதைத்தான்"

"அவர்களை நம்பாதே அந்தனி, நம்பாதே. அவர்கள் நம்பிக்கையுடன் இருப்பதாகச் சொல்கிறார்களே தவிர, உண்மையில், அவர்கள் யாருக்கும், நம்பிக்கை கிடையாது. சும்மா, அப்படிச் சொல்லி வைக்கிறார்கள். ஏதோ அந்த நம்பிக்கை மூலம் பலன் கிடைக்குமென்று எண்ணி அவ்விதம் சொல்கிறார்கள்."

சிறுவனுடைய சிந்தனையையும் கிளறிவிட்டான்; அருகே இருந்த நெருப்பையும் கிளறிவிட்டபடி, மாமன் மேலும் பேசலானான்.

"அவர்கள் எதெதில் நம்பிக்கை இருப்பதாகச் சொல்கிறார்களோ, அவற்றிலே அவர்களுக்கு உண்மையான நம்பிக்கை இருந்தால், இந்த உலகமே உத்தமபுரியாகி இருக்குமே! அதைத்தான் நான் அவர்களிடம் பல முறை கேட்கிறேன். பதில் கூறினதில்லையே அவர்கள், கூறமுடியாதே!"

மாமன், பேச்சை நிறுத்தவில்லை.

"போகப்போக நீ அவர்களுடைய போதனைகளை எல்லாம் தெரிந்துகொள்வாய்.

*உன்னைப்போல் பிறரையும் நேசி*

*அனைத்தையும் ஏழை எளியோருக்கு கொடு*

அவர்களுக்கு ஆண்டவன் கூறுவது இது. அவர்கள் அதுபோல நடந்துகொள்வதை நீ கண்டது உண்டா? அவர்கள் நம்பிக்கை கொள்வதைக் காண்கிறபோது, நானும் நம்பிக்கை கொள்வேன்."

0 0 0

பஞ்சம், வேலை நிறுத்தத் தொல்லை, குளிர் கொட்டுகிறது. வறுமை போட்டியிடுகிறது. நிலக்கரிச் சுரங்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேலை நிறுத்தம் முடிவடைந்தது. அப்பாடா, என்று ஆறுதல் கூறுவதற்குள் எஃகுத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் கிளம்பிவிட்டது, மொத்தத்தில் ஏழைகளுக்குக் கடுமையான சோதனைக் காலமாக இருந்தது. அந்தனிக்கு, கடவுள் ஏன் இதை அனுமதிக்கிறார் என்று ஆச்சரியம். மாமியிடம் பேசுகிறான்.

"கடவுள் ஏன் இதனைத் தடுத்து நிறுத்தக்கூடாது!!"

"எதை நிறுத்துவது?"

"வேலை நிறுத்தத்தைத்தான் மாமி! ஏன் கடவுள் அனைத்தையும் சரியாக வைத்திருக்கக்கூடாது? அவரால் முடியாதா."

"ஏன் முடியாது. நிச்சயமாக முடியும். அவர் மனது வைத்தால் ஆகாத காரியம் உண்டா?"

"ஏன் அவர் மனது வைக்கவில்லை, மாமி! அனைவரும் ஆனந்தமாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்ப வில்லையா!"

"அனைவரும் ஆனந்தமாக வாழ வேண்டும் என்பது தானடா, அவருடைய விருப்பம். ஆனால் மக்கள் கெட்டவர் களாக இருக்கிறார்கள்; பிறக்கும் போதே கொடியவர்களா கிறார்கள்!"

"ஏன் நாமெல்லாம் பிறக்கும்போதே கொடியவர்களாகப் பிறக்கிறோம். ஆண்டவன்தானே நம்மை எல்லாம் படைக் கிறார்!"

"அனைவரையும் அவர்தான் படைத்தார், அதிலென்ன சந்தேகம், எல்லாம் அவர் சிருஷ்டி!"

"ஏன், அவர் நம்மை நல்லவர்களாகப் படைக்கவில்லை?"

"அவர், நல்லவராகத்தான் அனைவரையும் படைத்தார் ஆதாமும் ஏவாளும், அவர் படைத்தபோது பரிசுத்தப் பிறவி கள்! ஆனால் அவர்கள் ஆண்டவனுடைய கட்டளையை மீறி, (பாபப்) பழத்தைத் தின்று தொலைத்தனர். இல்லையானால் நாமெல்லாம் நல்லவர்களாகவும் பிறந்திருப்போம். ஆனந்த மாகவும் வாழ்ந்து கொண்டிருப்போம்."

"ஆதாம் என்பவன்தான் முதல் மனிதன்! அப்படித் தானே மாமி!"

"ஆமாம்! ஆண்டவன் ஆதாமைப் படைத்தார், நல்ல வனாகத்தான்."

"எவ்வளவு காலத்துக்கு முன்பு நடந்தது மாமி, இந்தச் சிருஷ்டி."

"ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு!"

"மாமி! தவறு செய்துவிட்டேன், மன்னித்து அருளுக! என்று ஏன் ஆதாம் கூறி, ஆண்டவனுடைய மன்னிப்பைப் பெறவில்லை?"

"விபரீதம் நேரிட்டுவிட்டதே. ஆதாம் என்ன செய்யமுடி யும்? பழத்தைத் தின்றான பிறகு, பகவானிடம் முறையிட்டு என்ன பலன்?"

"சாத்தான், ஆதாமையோ ஏவாளையோ, கெட்ட நினைப் புக்கொள்ளும்படி தூண்டினானே, ஏன் கடவுள் அதைத் தடுக்கவில்லை? கடவுள் சர்வசக்தி உள்ளவர்தானே! சாத் தானை ஏன் அழித்திருக்கக் கூடாது!"

மாமி, மருண்டு போனாள்! போக்கிரிப்பயல், என்னென்ன கேள்விகளைக் கேட்கிறான்! என்று கோபங்கூட வருகிறது.

"சரி, பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிறது. போ, போ" என்று கூறி, அவனை அனுப்பிவிடுகிறாள். அந்தனியும்

வாயை மூடிக்கொண்டு செல்கிருன்! வாய் மூடிக்கிடக்கிறது! ஆனுல், மனம்? சிந்தனை?

மாமி மருண்டு போகிருள் மேதைகள் இன்று மிரட்சியுற்று 'ஈதேது பயங்கரமான புரட்சி தலைவிரித்தாடுகிறதே!' என்று பேசுகிருர்களே, அதுபோல.

ஆனுல் அந்தனியின் உள்ளத்திலே ஊறிய எண்ணங்கள் மாமியும் பிறரும் அடக்க அடக்க, வேகமாக வளர்ந்தது.—மடியவில்லை.

அந்தனி உழைப்பால் உயர்ந்து, ஊராரின் நன்மதிப்பைப் பெற்ருன்—ஆனுல் சுயநலம் அவனை அடிமைப்படுத்தி விடவில்லை-சுகபோகத்தில் அவன் மூழ்கிவிடவில்லை.பக்தர்களின் பேச்சிலே, சகல அறிவும் இருப்பதாகக் கருதும் போக்கினனுக அந்தனி இருந்திருந்தால், செய்த புண்யத்தின் பலனுக ஆண்டவன் தனக்குஇந்த நல்லநிலையை அருளினுர்,எனவே அவருக்கு மேலும் சேவைசெய்ய வேண்டும் என்று கருதி, ஆலயத் திருப்பணியில் மும்முரமாக ஈடுபட்டு, பெரிய பக்திமான் என்று விருந்து பெற்றிருக்கக்கூடும்! ஆனுல் அவனே ஒரு சந்தேகி! சிறு பருவ முதலே. எனவே அவனுக்கு மனதிலே சிக்கல் குறையவில்லை! எல்லாம் அவன் விட்டவழிப்படி நடக்கும் என்று எண்ணி, சோம்பித் திரியவில்லை.

0 0 0

துணைவி நோய்வாய்ப்பட்டதால் அந்தனி துயர்க்கடலிலாழ்ந்தான். ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டால் அவர் ஆபத்தைப் போக்குவார்,எதையும் சாதிக்கவல்லவரல்லவா சர்வேஸ்வரன், என்று எண்ணிடுபவனல்லவே! எனவே, அந்தனி 'பூஜை'கள் செய்து, தன் துயரைத் துடைத்துக் கொள்ள முயலவில்லை. மாருக, ஏழைகளுக்கு இதம் தரும் தொண்டாற்றினுல், அதன்மூலம் இறைவனுடைய அருளைப் பெற இயலும் என்று எண்ணி, மும்முரமாக அந்தப் பணியில் ஈடுபடலானுன்.

ஏழை மக்களின் இருப்பிடம்தான், சேச்சே! எவ்வளவு கேவலமாக இருக்கிறது! எங்கும் ஒரே அசுத்தம்! நோய் அவர்களைப் பிய்த்துப் பிடுங்காமலா இருக்கும்! படுகுழிகள்! அதன்மீது படுதாக்கள் போர்த்தப்பட்டுள்ளன. இந்தச் சேரிகளை ஒழித்திடவேண்டும்.இந்த 'நரகத்துக்கும்' ஏழைகள் எவ்வளவு'வாடகை'கொட்டி அழவேண்டி இருக்கிறது,பணம் பிடுங்கும் செல்வர்களுக்கு! இந்த அக்ரமத்தை ஒழித்துக்கட்ட வேண்டும். ஏழைகளைக் கசக்கிப் பிழியும் கொடுமையாளர்களிடமிருந்து மீட்கும் திட்டம் காணவேண்டும். மலிவான, அதேபோது சுத்தமான விடுதிகள் அமைக்கவேண்டும்.ஏழை

களின் வாழ்வில் ஒரு குளிர்ச்சியும் மலர்ச்சியும் காணவேண்டும்—என்று எண்ணினான். அந்தனி.

லாண்டிரிப் என்பான் கட்டிட வேலையில் நிபுணன், அந்தனிக்கு நண்பனுனான். திறமையுள்ளவன் மட்டுமல்ல, புதிய தத்துவங்களில் நாட்டமுள்ளவன், லாண்டிரிப்.

மக்கள் பணியே மகேசனுக்கு உகந்த பூஜை!

ஏழைகள் இதயத்தில் களிப்பூட்டும் பணிபுரிதலே பகவானுக்குத் தேர், திருவிழா, யாவும்!

தூய உள்ளமே கோயில்! நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம்!

மக்களிடம் சகோதரத்துவம் மலரவேண்டும்; அதற்கு அன்பு ஆட்சி செய்தல் வேண்டும்.

ஒரு பகுதி மக்களைச் சேற்றிலும் சகதியிலும் நெளியும்படி விட்டு வைப்பது சமுதாய முழுவதையுமே நாசமாக்கும்.

பிறரையும் மகிழ்ச்சியுடன் வாழச் செய்தால்தான், நாம் மகிழ்ச்சியுடன் வாழ முடியும்.

இவைகளே லாண்டிரிப் போற்றி வளர்த்துவந்த கருத்துக்கள்.

சர்வ வல்லமை உள்ளவர், சர்வேஸ்வரன், ஏன் மனிதனை அறிவுச் சூனியனுகவும் குற்றங்கொள் கலமாகவும் படைக்க வேண்டும்!

சுயநலம், பேய்க்குணம், வெறிச்செயல், இவைகளிலே மூழ்கிடும் போக்கினனுகும் நிலையில் மனிதனைப் படைக்காமல் துவக்கத்திலேயே மனிதனை, 'நித்யானந்தத்தை! அனுபவிக்கத்தக்க, ஆற்றலைப் பெறக்கூடியவனுகவும், அருங்குணவானுகவும், ஏன் படைத்திருக்கக் கூடாது!

இது, அந்தனியின் மனதிலே நீண்ட நாட்களாக இருந்து வரும் சிக்கல்.

கிறிஸ்துவின் புனிதக் காதை மூலம், இந்தச் சிக்கலைப் போக்கிக் கொள்ள முடியவில்லை. கிறிஸ்துவின் புனித மொழிகளின்படி நடந்து கொள்பவர்களே, மிகமிகக் குறைவு! மேலும், தவறுகளைச் செய்துவிட்டுப் பிறகு அதனைத் திருத்தும் நிலையில் ஏன் கடவுள் இருக்கவேண்டும், முறை அல்லவே என்று அந்தனி எண்ணினான்.

லாண்டிரிப் சொன்னுன்: ''நான் வணங்கத்தக்க கடவுள் ஒருவர் உண்டு; பூவுலகத்தையும் பரமண்டலத்தையும் சமைத்தவர் அல்ல அவர்; விண்மீன்களையும் பிரபஞ்சத்தையும் படைத்தவரல்ல! கடியாரம் காண்கிறோம், அதை ஆக்கினவன் ஒருவன் உளன் என்பது அதன் மூலம் தெரிகிறது, என்கிருர்

கள். தத்துவம் சரி! ஆனால் என் உள்ளத்துக்கு உகந்த ஈசன் பிரபஞ்சத்தைப் படைத்த பெரியவன் அல்ல, ஆக்கவும் அழிக்கவும வல்ல பரம்பொருள் என்கிறார்களே, அதனிடம் என் மனம் இலயிக்கவில்லை. உலகின் கேடுகளைக் களைந்திட, உழைத்திடும் உத்தமனாகவும், அந்தத் திருத்தொண்டிலே, என்னைப் பங்கு கொள்ளும்படி செய்பவனாகவுமுள்ள, காப்பாளனை, உழைப்பாளனை, நான் கர்த்தனாகக் கொள்கிறேன். இது நாள் வரையில், மக்கள், தங்கள் மனதிற்குப் பட்ட வகையிலே தாமே ஆக்கிக்கொண்ட கடவுளைத் தொழுது வருகிறார்கள்; சர்வசக்தி வாய்ந்தவர்! தேஜஸ் மிகுந்த தேவாதி தேவன்! வரம் அருளும் வல்லமை படைத்தோன்! தீயோரைத் தண்டிக்கும் ஆற்றல் மிக்கோன்! என்றெல்லாம் பூஜிக்கிறார்களே, அந்தக் கடவுளை அல்ல நான் தொழுவது. என் 'கடவுள்' கேட்ட வரம் அருளுபவரல்ல, அவர் என்னிடமிருந்து, அன்பு, நேர்மை, தூய்மை இவைகளைக் கேட்பவர், என்று கூறினான். அந்தனியின் மனதிலே புதிய கருத்துக்கள் தூவப்பட்டன என்றே சொல்லலாம். கடவுளைப் பற்றிய கருத்துரைகளில், இது அந்தனிக்கு ஒருவகையில் பிடித்திருந்தது.

0 0 0

எலினார், பிழைத்துக்கொண்டாள். ஆபத்து, விலகிவிட்டது. அந்தனியின் உள்ளத்திலே சொல்லொணாத மகிழ்ச்சி. ஆண்டவன் அருள் பாலித்துவிட்டார். நான், ஏழைகளுக்காகத் தொண்டாற்றினேன்; தூயவர், என்பால் திருநோக்கைத் திருப்பி, என் ஆவியை என்னிடம் ஒப்படைத்து விட்டார்; என் இதயராணி பிழைத்துக்கொண்டாள். பெரியவர்கள் சொல்லிச் சென்ற தத்துவங்கள் முற்றிலும் உண்மைதான். சத்யவாக்குத்தான் அவை.

நீ இன்னின்ன நல்ல காரியங்களைச் செய், நான் அதற்கு ஈடாக உன் மனைவிக்குவந்துற்ற ஆபத்தைப் போக்குகிறேன், என்ற முறையில் ஆண்டவன் நடந்து கொண்டாரே, வியாபார ஒப்பந்தம் போலல்லவா இது இருக்கிறது—சரியாகுமா இந்த முறை—என்று கேட்பர்; ஒப்பந்தம் என்றே வைத்துக் கொண்டால்தான், என்ன தவறு! எனக்கு எலினாரிடம்உள்ள பாசத்தையேசாக்காக்கிக்கொண்டு, கடவுள், என் மூலம் ஏழைகளுக்கு நலன் கிடைக்கச் செய்திருக்கிறார்; இதிலே என்ன குற்றம் காணமுடியும்? என் மக்களுக்காக நீ, இன்னின்ன நலன்களைச் செய்துகொடு. நான் உன் இல்லக்கிழத்தியின் இன்னுயிரை மீட்டுத் தருகிறேன் என்று கடவுள் கூறுகிறார் என்றே வைத்துக் கொள்வோம்; இதிலே தவறு என்ன — என்று அந்தனி எண்ணி மகிழ்ந்தான். ஆனால் மகிழ்ச்சியும்

திருப்தியும் நிலேத்து நிற்கவில்லே, மீண்டும், அந்த நீண்ட காலச் சிக்கல்தான் தலேதூக்கிற்று.

எல்லாம் சரி, ஏன் சர்வேஸ்வரன் தன் சிருஷ்டியான கேவலம் மனிதனுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளுகிற முறையில் நடந்து கொள்ளவேண்டும், விநாடிப் போதில் அவர் விரும்பிஞல், சாதிக்கக்கூடிய காரியங்களே, ஏன் ஆண்டவன், சுற்றிவளேத்து நிறைவேற்றப் பார்க்கிருர்? துவக்கத்திலேயே, எதையும் குற்றமற்ற முறையிலே படைத்திருக்கலாமே.ஏன் ஆண்டவன் சிருஷ்டியிலே ஆயிரத்தெட்டு அலங்கோலங்கள், மனிதனே இரத்த வெறி கொண்டலேயும் நியிலேல் படைத்திடுவானேன், பிறகு அந்த வெறியை ஒழித்து அவனேச் சன்மார்க்கத்தில் செல்லச் செய்வதற்கு பல்வேறு வழிவகைகளே அருளுவானேன்—அந்தனியின் உள்ளத்திலே, எழும்பிய இந்த அலே அடங்க மறுத்தது.

லாண்டிரிப் சொன்ன கடவுட் தத்துவம் அந்தனியின் உள்ளத்தைத் தொட்டது.

சர்வ வல்லமை உள்ள ஆண்டவன்,மனிதனிடம் எதைத் தான் எதிர்பார்க்கவேண்டும், ஏன் எதிர்பார்க்க வேண்டும். மண்பாண்டம் செய்பவனுக்கு எவ்வகையில் நன்றி கூறுவது என்று களிமண் எண்ணுவது போலல்லவா இருக்கும்,சர்வேஸ்வரனுக்கு நன்றி கூறவேண்டும் என்று மனிதன் எண்ணிஞல்!

ஆண்டவனேத் தொழுவது, தோத்தரிப்பது, மண்டியிடுவது.இவைகளால் அவருக்கு என்ன பயன்? நமது வாழ்த்துதலும் வணக்கமும் அவருக்கு எற்றுக்கு?எது எது எப்படிஎப்படி நடைபெறவேண்டும் என்பதனேத்தையும் அவர் எப்போதோ தீர்மானித்துத் தீட்டிவைத்திருக்கிருர் என்ருல், அவருடைய திரு அருளேத் தேடிப்பெறத் தொழுகை நடத்துகிரேம் என்று கூறிக் கொள்வதிலே பொருள் என்ன இருக்கிறது?

இத்தகைய கடவுட் கோட்பாட்டைவிட,லாண்டிரிப் கூறுவது, பொருத்தமுடையதாகத் தெரிகிறது.

மனிதனுக்காகப் பாடுபடும் மாவீரஞக, மனிதனே நேசிக்கும் தோழஞக, மனிதனே மாண்புள்ளவஞக்கும் மகத்தான சேவை செய்யும் நண்பஞகக் கடவுளேக் கொள்வது, சாலச் சிறப்புடையதாகத் தெரிகிறது. அத்தகைய ஈசனே அறிய முடிந்தால்? இன்பம்தான்.

0 0 0

இங்ஙனம் ஒவ்வொரு சம்பவத்தின்போதும்,அந்த அடிப்படைக் கேள்விதான் கிளம்பிற்று.ஏன் ஐயனுடைய சிருஷ்டியிலே இவ்வளவு அலங்கோலம்? ஏன் கொடுமைக் குணங்களேப் பிறந்திடச் செய்கிருர்? பிறகு மனிதனேக் கொடுமை

யாளனுகாதிருக்க வேண்டுமென்றுவிரும்புகிருர்? அந்தனிக்கு இது, ஆண்டவன் வேண்டுமென்றே படுத்துக் கொண்ட வீண்வேலை என்று தோன்றிற்று. பாதிரிமார்களால், சிறுவனுக அவன் இருந்த நாள்களிலேயே, விளக்கமளிக்க முடியவில்லை. இப்போது அவர்கள் எப்படிப் பதிலளிப்பார்கள்.

பெட்டி, பலநாடுகள் சென்று வருவது வாடிக்கை.

பெட்டிக்கு, மணமாகவில்லை—அந்த நினைப்பும்எழவில்லை, எனவே, அடிக்கடி, பலநாடுகள் சென்று, அறிவுக்கு விருந்து பெற்று மகிழ்ந்தாள். ஒருநாள், அவளிடம், அந்தனி, இந்த அடிப்படை விஷயமாகப் பேசும்போது, அவள் ஒரு விளக்க மளித்தாள்.

0 0 0

சில ஆண்டுகளுக்கு முன்புநான் சான்பிரான்ஸிஸ்கோ விலிருந்து ஹாங்காங் போகையில், ஒரு சீனக்கனவானுடன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. மனிதனுடைய முன் னேற்றத்துக்குப் பெரிய தடைக்கல்லாக இருப்பது கடவுள் தான் என்று அந்த சீனப் பெரியவர் சொன்னுர். நான் திகைத்துப் போனேன்.

''தனக்காக வேண்டிய தனைத்தையும் கடவுள் தருவார்.

''நமக்கெல்லாம் புரியாத ஒரு முறையிலே,கடவுளின் திரு வருள் வேலை செய்கிறது, அதன் விளைவாக, பூலோகம் சுவர்க்க பூமியாகப் போகிறது.

''மனிதன் செய்யவேண்டிய தெல்லாம், பொறுத்திருக்க வேண்டும், பகவானிடம் நம்பிக்கை வைத்திருக்கவேண்டும். அவ்வளவுதான்.''

இங்ஙனம் மனிதன் வெறும் கருவி; ஆண்டவன் ஆட்டி வைக்கிறபடி ஆடும் பதுமை, என்று நம்பித்தான் மனிதன் நாசமாகிருன்.

மனிதன் கடவுளின்மீது பாரத்தைப் போட்டுவிட்டு சோம் பிக்கிடப்பதை விட்டு முயற்சியில் ஈடுபடுவானுனல்,மண்ணுல கில் விண்ணுலகம் காணலாம். ஆனுல் அதற்கு, மனிதன், தன்னலத்தை விட்டொழிக்க வேண்டும். அது கடினமானது; எனவே மனிதன், எளிதான வழி தொழுதுகிடப்பது,தேவன் எதையும் தனக்காகச் சாதித்துத் தருவான் என்று நம்பிக் கிடப்பது என்ற நிலைக்கு வந்து விட்டான். அதனுலேயே மனிதகுல முன்னேற்றம் குந்தகப்படுகிறது.கடவுளைத்தேடித் தேடி, இல்லை என்று தெரிந்து கொள்கிருன்.

கடவுள் நம் உள்ளத்திலல்லவா இருக்கிருர்.

நாம்தான் கடவுள்! மனித சக்தி மட்டற்றது. மனிதன் தன் தீயநினைவுகளைக் கட்டுக்குள்கொண்டுவரவும், களையவும் பழகிக் கொண்டால், விண்ணுலகு, மண்ணுலகில் மலரும்.

தன்னலத்தைத் தகர்த்தெறிவது; சாத்யமானதுதான். வரலாறு மனிதனுடைய பாதகச் செயலையும் தவறுகளையும் காட்டும் களஞ்சியம்தான் என்றாலும், மனிதகுல முன்னேற்றத்துக்குத் தடைகளாக உள்ளவைகளை மனிதனால் தகர்த்தெறிய முடிந்தது என்பதை விளக்கும் சம்பவங்களும் அதிலே சுடர் விட்டுக் கொண்டுள்ளன.

அன்பு! இதைத்தான் அனைவரும் உபதேசித்து வந்தனர். அன்பு காட்டுவது எளிதுதான்—வெறுப்பை மனிதன் சிரமப் பட்டு உள்ளத்தில் வளர்த்துக்கொண்டு வருகிறான். சிறிதளவு முயற்சி எடுத்துக்கொண்டாலும், அன்பு உள்ளத்தில் ஆட்சி புரியும். இப்போது சிறுபிள்ளைப் பருவமுதல், வெறுக்கக் கற்றுத் தரப்படுகிறது.

அன்புடன் வாழவேண்டிய மக்களிடம், இனம், நிறம், நாடு, மதம் எனும் பல்வேறு காரணங்காட்டி வெறுப்பை ஊட்டி ஊட்டிக் கெடுக்கிறோம். அன்பு அரசோச்சினால் அவனியே சுவர்க்கமாகும். ஐயன் செய்து தருவார் என்று இராமல், மனிதன் முயற்சிக்க வேண்டும். அவனால் முடியும். அவன் வெற்றி பெறத்தான் போகிறான்.''

சீனப் பெரியவர் சொன்ன சித்தாந்தத்தை பெட்டி, இவ்வாறு விளக்கியது, அந்தனிக்கு, ஓரளவு ஆறுதல் அளித்தது.

கடவுள் பற்றி எவ்வளவு கருத்தற்ற கொள்கைகளை மனித குலம் கொண்டிருக்கிறது, என்பதைச் சீனப் பெரியவர் எடுத்துக் காட்டினார். இதையே இப்போது நாம் கூறும்போது சீலர்கள் சீறுகிறார்கள்—ஆதினங்கள் ஆத்திரமடைகின்றன—ஆஸ்தீகர்கள்—அடி, உதை, என்றே கிளம்புகிறார்கள்.

0 0 0

பெட்டி, பேசியது கேட்ட அந்தனி சிந்தித்தான். மனதிலே புகுந்து விட்ட புனிதம் பற்றி அவன் பேசலானான்.

''உடைமைகள் அனைத்தையும் விற்று, ஏழைகளுக்குக் கொடுத்து விடு, என்று ஏசுநாதர் ஒரு இளைஞனுக்கு உபதேசித்தாரே, பெட்டி! ஏழைகளுக்காக அல்ல, அந்த இளைஞனுடைய நலனுக்காகவே ஏசு அதுபோல் கூறினார் என்று நான் சில வேளைகளில் எண்ணுவதுண்டு. ஏழைக்கு அந்த இளைஞன் தானம் தந்தால், ஏழையின் அல்லல் ஒரு கணம் துடைக்கப்படும். ஆனால் அந்த இளைஞனுக்குக் கிடைக்கும் பலனோ, மகத்தானது. அவன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

பெறுகிறான். அவனைப் பிணைத்து வைக்கும் பொருளை எல்லாம் அவன் நீக்கிவிட்டதும், நிம்மதி பெறுகிறான். உடைமைகளால் உள்ளத்துக்கு ஏற்பட்ட சுமை ஒழிந்து போகிறது. விடுதலை கிடைக்கிறது.

நான், சாத்தான் இருப்பதை நம்புகிறேன், பெட்டி! நாம் பாசுரங்களில் குறிப்பிடுகிறோமே, அந்தச் சாத்தான் அல்ல— கடவுள் சன்னிதானத்தில் கலாம் விளைவித்து அவரால் பூலோகத்துக்கு விரட்டப்பட்டுக் கிடக்கும் சாத்தான் அல்ல நம்மிடம் குடிகொண்டிருக்கும் தீய குணத்தைக் குறிப்பிடுகிறேன்.

வெறுப்புணர்ச்சி, பேராசை போன்ற தீய குணங்களை நமக்குத் தந்தது யார்?

மனிதன், கடவுளின் கட்டளைக்கா, சாத்தானுடைய கட்டளைக்கா, எதற்குக் கட்டுப்படுகிறான்? குழப்பம் ஏற்படுகிறது.

பெட்டி! தன்னலமறுப்புதான், சாத்தானை விரட்டும் வழி —உய்யும் மார்க்கம்.

நாம் போராட வேண்டும், கடவுளுக்குத் துணையாக நின்று போராட வேண்டும்.

சிலர் இந்தத் தூய பணிபுரியக் கிளம்பினால் போதும். பிறர் பிறகு வருவர்.

இன்பலோகமாம் சுவர்க்க பூமியில் இடம் பிடிக்க அல்ல, பெட்டி; உலகைக் காப்பாற்றப் பணியாற்ற வேண்டும்.

தீயகுணம் எப்படியும் தானால் மடிந்தொழியும், கடவுள் அதனை ஒருநாள் ஒழித்தே தீருவார் என்று எண்ணிப் பயனில்லை. தீய குணத்தை ஒழித்திட நாம் தீவிரமாகப் பணியாற்றித் தீரவேண்டும். கடவுள் தீயசக்திகளை ஒழிப்பதில் வெற்றி பெறவில்லை. அவரை மூலைக்கு ஒதுக்கி விட்டு, தீய சக்தி, மணிமாடத்தில் கொலுவிருக்கிறது. எனவே கடவுளின் காரியத்தைச் செய்ய, தன்னலத்தை விட்டொழித்துப் பணி புரியவேண்டும். துறவிகள் வேண்டும்.''

0 0 0

அந்தனி விளக்கம் பெற்று விட்டான் என்பதை மட்டும் இச் சம்பவம் காட்டவில்லை. தன்னலமறுப்புக்குத் அவன் துணிந்துவிட்டான் என்பதையும் இந்த உரையாடல் எடுத்துக் காட்டிற்று. பெட்டி, அவன் உள்ளத்தில் பெருநெறி தவழ்வதை உணர்ந்தாள்; வாழ்த்தினாள்.

வெற்றி கிடைத்துவிட்டது. போர் முடிந்துவிட்டது. எல்லாவற்றையும் துறந்துவிடுவது என்ற முடிவுக்கு அந்தனி வந்தாகிவிட்டது. உலகின் செல்வம் அனைத்தையும் குவித்து

ஏழைகளுக்குப் பகிர்ந்து அளித்தாலும், மீண்டும் தொல்லையும், துயரமும் தலைவிரித்தாட அதிக காலம் பிடிக்காது. தன்னலம் தலைதூக்கும். பேராசை பேயாட்டமாடும்

ஏழைகளுக்குக் காசு வீசிடும் கருணாமூர்த்திகள், பன்னெடுங்காலமாகவே இருந்து வருகிறார்கள். ஏழைகள் தொகையோ வளர்ந்து கொண்டே இருக்கிறது. பணம் சர்வ ரோக நிவாரணியல்ல. சேவை, தன்னலமறுப்பு இவை மூலமாகவே பலன் காண முடியும்.

எனவே, நான், என் தாயார் வசிக்கும் விடுதிக்குப் பக்கத்தில், ஒரு சிறு குடிலை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, அங்குதான், ஏழைகளின் தோழனாக வாழ்க்கையைத் துவக்கப் போகிறேன். அவர்களுக்கு உதவி செய்வதே வாழ்வின் குறிக்கோளாக்கிக்கொள்வேன். வழக்குகள் ஏழைகளுக்குள் கிளம்பினால், வழக்கறிஞனாக நான் சமரசம் செய்து வைப்பேன். என் தேவைக்கானதை நான் சம்பாதித்துக் கொண்டு, எளியோருடன் எளியோனாக வாழ்க்கை நடத்தப் போகிறேன்.

மனைவிமக்கள் இல்லாத துறவிகள் மட்டும் போதும், தூய்மையையும் வாய்மையையும் வெற்றி பெறச் செய்ய என்று கொள்வதற்கில்லை. குடும்பத்துடன் உள்ள துறவிகள் தேவை; நான் அத்தகைய துறவி ஆகப் போகிறேன்.

0 0 0

எலினர், எளிய வாழ்க்கையில் ஈடுபட, எல்லாம் இருந்தும் அனைத்தையும் துறந்து விட்டு அன்றாடம் தேடிப் பெற்று வாழ்க்கை நடத்துவதை ஏற்றுக்கொள்ளுவாளா?செல்வத்தைக் கண்டவள்! சுகத்தை அறிந்தவள்! எப்படிஇவைகளை விட்டுவிட மனம் வரும், என்றெல்லாம் அந்தனி எண்ணிக் குழப்பமுற்றான். ஆனால் அந்தக் குணவதியோ, அவன் கூறியதே செந்நெறி என்று உணர்ந்தாள்; தன்னல மறுப்பு, ஏழையர்க்குத் தொண்டாற்றுதல், உடைமைகளைக் கட்டிக் காத்து அவைகளுக்கு அடிமையாகிச் சிதைந்து போகாதிருத்தல், இவையே உண்மைத் துறவியின் இலட்சணம் என்பதை, அந்தனி மூலம் அறிந்தாள்; அகமகிழ்ச்சியுடன், அவன் துவக்கத் தொடங்கிய புதிய வாழ்க்கையில் துணை நிற்க இசைந்தாள். துணைவியுடன் ஏழையர்க்குத் தொண்டாற்றக் கிளம்பினான், அந்தத் துறவி.

0 0 0

தம்பி, 'தருமபுரத்தைக்'க் கண்ட அன்று, நான் கதையில் இந்தத் 'துறவி'யைச் சந்திக்கிறேன் என்றால், என் உள்ளம் எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்!

"வயலூரிலிருந்து நெல் வண்டிகள் வந்து விட்டனவா?

கோட்டையூரார் குத்தகைப் பணத்தைக் குறைவின்றிக் கொடுத்துவிட்டாரா?

பட்டணப் பிரவேசத்துக்கு இந்த ஆண்டு, செலவு எவ்வளவு என்று புள்ளி போட்டாகி விட்டதா?

வாழைத் தோட்டத்திலே புதிய வாயிற்படி வைத்தாகி விட்டதா?

முல்லைத் தோட்டத்திலே ஊஞ்சல் அமைத்துவிட்டார்களா?

சென்னை வழக்கு எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

கல்கத்தாவிலிருந்து மருந்து பார்சல் இன்று வந்து விட்டதா?

கனகாம்பரக் கலர் ஆடை வாங்கியாகிவிட்டதா?

கைவளைகள் எங்கே? தோடு மேலும் இரண்டு ஜதை வேண்டும்! தொங்கட்டம், பார்வையாக இல்லை!

தில்லைத் தாதன் வந்ததும் எனக்குச் சொல்லு.

கொல்லைப்புறக் கதவைத் தாளிட்டுவிட வேண்டாம்.

பல்லைக்காட்டி நிற்கும் பாக்கியத்துக்கு, பத்து கொடுத்துத் துரத்து.

ஏன், உரத்த குரலில் கத்திக் கத்தி என் உறக்கத்தைக் கெடுக்கிறார்கள், நால்வரின் பாடல்களை மனதுக்குள் படித்திடச் சொல்லு."

இன்றையத் துறவிகள் இங்ஙனம் பேசி இருந்திடக் காண்கிறோம்.

கதை மூலம், உண்மைத் துறவி எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பது குறித்து, ஒரு ஆங்கில ஆசிரியர் காட்டுகிறார்.

வெட்கப்படுவதா, வேதனைப்படுவதா—என்றுதான் தம்பி உன்னைக் கேட்கிறேன். நமது இயக்கத்தால் நாட்டிலே நாத்தீகம் தலைவிரித்தாடுகிறது என்று நாப்பறை கொட்டும் நல்லவர்களைக் கேள் தம்பி, துறவியின் இலட்சணம் என்ன என்று. காதிலே குண்டலம், கழுத்திலே தாவடம், சேவடியில் பாதுகை, உடலில் காவி, என்று கூறுவர். சரி ஐயன்மீர்; கோலம் கிடக்கட்டும், உள்ளம் எப்படி இருக்கவேண்டும் என்று கேள்.

உடைமைகள், அவை பற்றிய உரிமைகள், இவை பற்றிய எண்ணம் கொண்டிருப்பது, துறவு ஆகுமா? என்று கேள்.

இன்றைய ஆதினங்கள் அந்தனிபோன்ற துறவுகொண்டு தூய்மையான தொண்டாற்ற முன்வருவாரா என்று கேள்.

சிவனருளால், எமது காலம் வரையில், இந்தச் சுகபோகம் நிலைத்து இருந்தால்போதும் என்று எண்ணுவோரும், விடை ஏறும் பெருமானுடைய அருளால், வழக்கும் வல்லடியும் தாக்காதிருந்தால்போதும் என்று எண்ணுவோரும் துறவிகளாகத் 'தர்பார்' நடத்த அல்லவா காண்கிறோம்.

தம்பி, நான் ஏட்டிலே சந்தித்த துறவியை நாட்டிலே காண விழைகிறேன். உனக்கும் அப்படித்தான் தோன்றும். தேடினால் கிடைப்பார்களா என்று எண்ணுவதைவிட, தம்பி, நாம் அப்படிப்பட்ட 'துறவிகளாகிவிட வேண்டும். குடும்பம் இருக்கும், குடிகெடுக்கும் எண்ணம் இருக்காது. துணைவி இருப்பாள், நமது தொண்டுக்குத் துணைபுரிய. குழந்தைகள் இருக்கும், அன்புக்கான அரிச்சுவடியைஉணர்த்த. தொழிலில்ஈடுபடுவோம், வாழ்க்கை நடத்த. ஆனால் உடமைகளுக்குக் கட்டுப்பட்டுவிடாமல், தன்னலத்துக்கு ஆட்பட்டுவிடாமல், சுகபோகத்திலே ஆழ்ந்துவிடாமல், வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா, என்று கேட்கும் ஆற்றலையும், அத்தகைய கேட்டினைக் களைந்திட அறப்போர் நடாத்தும் திறத்தினையும் பெற்று, மடம் தேடாமல், தாவடம் அணிந்த சடம் ஆகாமல், காவி தேடாமல், அதனுள் மறைந்திடும் காமி ஆகாமல், தொண்டாற்றும் துறவியாக, மோட்ச சாம்ராஜ்யத்திலேஇடம் பிடிக்க அல்ல, நமது இதயத்திலே அன்புக்கு, இடமளித்து, அறநெறியை நாட்டிலே புகுத்தி, மக்களைப் புதியதோர் இன்பம் பெறச் செய்யும் புனிதத் தொண்டாற்றும் துறவியாக வேண்டும். நாட்டிலே இத்தகைய துறவிகளே இன்று அவசர அவசரமாகத் தேவை. ஏழையின் அழுகுரலை, எளியோரின் கண்ணீரை, பதிகம் பாடியும் மணி அடித்தும் போக்கிட முடியாது, தம்பி! முடியாது. துறவிகள் வேண்டும், புதிய துறவிகள். வெள்ளை உடை போதும், காவி தேடி அலைய வேண்டாம். காவிகளைத்தான் பார்க்கிறோமே!


அளக நிரை குலைய விழி குவிய வளை கல கலென
அமுத மொழி பதறி யெழ அணியாரம்
அழகொழுகு புளகமுலை குழைய இடை துவளமிக
அமுத நிலை அதுபரவ அதி மோகம்
உள முருக வரு கலவி தரு மகளிர் கொடுமையெனு
முறுகபட மதனில் மதி அழியாதே

என்று உலகுக்கு உருக்கமாக உபதேசம் செய்துகொண்டிருக்கிறார்கள்! உபதேசம்!

நாம், தொண்டாற்றும் துறவிகளாக வேண்டும்.

தருமபுரத்தையும் கண்டுவிட்டு, அந்தனி ஜான் என்ற ஏட்டையும் படித்த பிறகு, இந்த எண்ணந்தான் எனக்கு ஏற்பட்டது.

அன்புள்ள,



4—9—1955

கடிதம்: 18.

# 'ழ' கரமும் 'ற' கரமும்

*தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணச் சிறப்பு— மொழிவழி அரசு அமைதல்.*

தம்பி,

புதிதாகப் பதவியேற்ற பிரன்ச்சு அமைச்சர், அலுவலகத்தைப் பார்வையிடச் சென்றார்—முதல் அறையில் பணியாளர் இல்லை! இரண்டாவது அறையிலும் யாரும் இல்லை! மூன்றாவது அறையில்,நாற்காலியில் உட்கார்ந்தபடி ஒரு பணியாளர் உறங்கிக்கொண்டிருந்தார்! அமைச்சருடன் வந்தவர், உறங்கிக்கொண்டிருந்தவரை எழுப்புவதற்காக அருகே சென்றார். அமைச்சர் அவரைத் தடுத்து நிறுத்தி,"வேண்டாம்!வேண்டாம்!அவரை எழுப்பிவிடாதே! எழுந்தால், அவரும், மற்ற இருவரும் வெளியே சென்றுவிட்டது போல, அலுவலகத்தை விட்டுப் போய்விடப் போகிறார்!" என்று கூறினாராம்.

ஒருவர்கூட அலுவலகத்திலே இல்லாதிருப்பதைவிட, உறங்குபவர் நிலையிலாவது ஒருவர் இருக்கட்டும், என்று அமைச்சர் எண்ணிக்கொண்டார் போலும்!

பொறுப்பற்ற தன்மை எந்த அளவுக்கு இருந்தது என்பதை இந்த நிகழ்ச்சி விளக்குவதாக இருக்கிறது.

பிரன்ச்சு அமைச்சர் உறங்கிக் கிடப்பவரை எழுப்பிவிடாதீரய்யா, அவரும் வெளியே போய்விடப் போகிறார் என்று கூறி, வேதனையை நகைச்சுவையால் மாற்றினார்.

இன்று நமது திரு இடத்தில் ஒரோவழி ஒருவரிருவர், இங்கொன்றும் அங்கொன்றுமாக, மொழி, நாடு, இனம், என்பன குறித்து ஒருசிறிதுபேசும்போது,அவர்கள் இவ்வளவு

தாறு கூறுவது, அவர்களின் பொறுப்பும் பணியும் இந்த அளவோடு முடிந்துவிடல் வேண்டும், அவர்தம் அறிவாற்ற லுக்கு ஏற்ற அளவுக்கா இப்பணி இருந்திடக் காண்கிறோம் என்ற எண்ணம் நமக்கெல்லாம் எழத்தான் செய்கிறது; தம்பி! அத்தரத்தினர் மீது நீ கோபித்துக்கொள்ளும்போது, எனக்கு அந்தப் பிரன்ச்சு அமைச்சருக்கு ஏற்பட்டது போன்ற கவலை தான் பிறந்துவிடுகிறது.

இவர்களைக் கோபித்துக்கொண்டால், இவர்கள் இதனையும் கூறுதிருந்துவிடின் என்ன செய்வது - ஏதோ இதையாவது சொல்கிறார்களே—ஓரோர் சமயத்திலாவது பேசுகிறார்களே—சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, பாதுகாப்புச் சுவர்களையும் பக்குவமாக எழுப்பிகொண்ட பிறகேனும், சிலகூற வாய் திறக் கிறார்களே, இவர்களைத் தம்பி, கடிந்துரைத்தால், இதனையும் கூறாது இருந்துவிடுவரே என்ற அச்சம் எனக்கு.

பேராசிரியர் சேது(ப்பிள்ளை) அவர்கள் செந்தமிழின் சுவையினை நாட்டு மக்களுக்குவிருந்தாகஅளித்திடும்நல்லவர்! பொன்னுடை போர்த்தி அப்புலவரைப்பெருமைப்படுத்தினர். நான் அந்த நிகழ்ச்சிகளில்கலந்துகொண்டேனில்லைஎனினும், இருக்குமிடத்திருந்தே அவர் பெற்ற ஏற்றம் கண்டு இறும்பூ தெய்துபவன். அவர் அறியார் என்று எண்ணுகிறேன், அவரிடம் தொடர்புகொண்ட குழாத்தினரில் கூட—அவர் பால் பெருமதிப்புக்கொண்ட என்போன்றார் அதிகம் இரார்.

பேராசிரியர் சேது(ப்பிள்ளை) அவர்கள், தமிழின் ஒலி மாட்சி குறித்து, அழகுறப் பேசியிருக்கிறார்

தமிழ் மொழிக்கே அணியாக விளங்கிடும் 'ழ'கரம் 'ற'கரம் குறித்து எடுத்துக்கூறி, 'ழ' அளிக்கும் ஒலியின் இனிமையை எடுத்தியம்பி, இத்தகைய ஒலி மாட்சியை, பிறமொழிகள் பெற்றிராத ஒலிமாட்சியை, நந்தம் மக்கள், உணர்ந்து உவகைகொள்ளா திருத்தல் குறித்தும் அதன்உயர் வறியாது அதனைப் பாழ்படுத்திடும் போக்கினைக் கண்டித்தும் பேசியுள்ளார்.

*எழுந்திரு—எந்திரு என்றாகிவிட்டதையும்,*
*திருவிழா—திருவிஷா என்று கெடுவதையும்,*
*பழம்—பளம் ஆகிப் பாழ்படுவதையும்,*

கிழவி, கியவிஆகி 'ழ'கரம் கேலியாக்கப்படுவதையும், எடுத்துக்காட்டி, நமது தாய் மொழிக்கே அழகளிக்கும் 'ழ'கரம் இங்ஙனம் பாழ்படுத்தப்படுகிறதே, கொச்சை பேசி மொழியினைக் கொலை செய்கிறார்களே என்றுகூறிக், கசிந் துருகி நிற்கிறார்.

'ற'கரம் மற்றோர் அணி! இதனையும் பாழ்படுத்துகின்றனர், உரையாடலில்!

'ற'கரம் வன்மையான உணர்ச்சியைக் காட்டிடும் ஒலிக்குறி! இதனை உணராமல், 'ற'வை, படாத பாடுபடுத்துகிறார்கள் நம்மனோர். காற்று, காத்தாகிவிடுகிறது! நாற்று, நாத்தாகிறது! ஐயகோ! அம்மவோ! சிலம்பளித்த செல்வன்,

அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து
இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!

என்று கண்ணகி கூறுவதாகச் செப்புகிறாரே. ஆறு றகரம் ஒலிக்கிறது கேண்மின்—என்று எடுத்துக்காட்டுகிறார்.

மற்றும் பலகூறி, பேராசிரியர் மொழிவளம் பாழ்படுவது குறித்துக் கவலைப்படுகிறார்.

'ழ'கரம்—'ற'கரம் பாழ்படுகிறது!!

'ழ' தமிழ் மொழிக்கே தனிச் சிறப்பளிக்கும் அழகணி. இதனை அறியாதிருக்கும் தமிழர் தமிழழிப்போ ராகின்றனர்!

அவர்தம் போக்குக் கண்டு, மொழியின் சுவையினைப் பருகிடும் பேராசிரியர், கொதித்தெழுவதும், ஆகுமோ இந்தப் போக்கு எனக் கடாவுவதும், 'ழ'கரத்தின் அருமையினைக் கூறுவேன் கேண்மின், என்று அறைவதும் முறையே-குறை கூறுகின்றேனில்லை! அவர் ஆறு 'ற'கரம் ஒலித்திடும் சிலப்பதிகார அடிகளை நினைவுபடுத்தும்போது, உண்மையிலேயே, அந்த 'ற'கரங்கள், தமிழ்மொழியின் ஒலி மாட்சியையும், பத்தினிப் பெண்ணின் உள்ளத்தை ஆட்சி செய்த வீர உணர்ச்சியையும் ஒருசேர எடுத்துக்காட்டத்தான் காண்கிறோம். மறுப்பாரில்லை! அத்தகைய மாண்புமிகு மொழிக்கு நாம் உடையோம் என்றெண்ணிப் பெருமிதம் கொள்ளாமலில்லை!

மங்கை நல்லாளிடம் காணும் ஒயிலும், மயிலிடம் காணும் சாயலும், மொழியிடம் காணப்பெறும் ஒலி அழகுக்கு ஈடாகாதுதான்! அந்த ஒலி அழகு, கொச்சை பேசுவதால் செத்தொழிகிறது என்பது கண்டு கண்ணீர் வடித்திடத் தக்கதோர் நிலைதான். ஐயமில்லை! ஆனால்......!

மொழியின் 'ஒலி' மட்டுமா இன்று பாழ்பட்டுக் கிடக்கிறது.

'ஒளி' மங்கி மறைந்து கொண்டிருக்கிறது!

ஒலிகெட்டும் ஒளிமங்கியும் இருத்தல் மட்டுமல்ல, மொழியே கீழ்நிலைக்கு, தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கிறது.

பாவலரும் காவலரும் போற்றி வளர்த்த மொழி, அரச அவையிலும், ஆடலரங்கிலும், புலவர் மன்றமதிலும், பூங்கா

விலும், கடலின் மீதும், குன்றின்மீதும், களிறு ஏறுவோனும், காற்றை அடக்குவோனும், எங்கும் எவரும் பேசி மகிழ்ந்த மொழி, இன்று, எல்லாத் துறைகளிலும். பேராசிரியர் பெருங் கவலை கொள்வதுபோல, ஒலிமாட்சி இழந்து மட்டுமல்ல, நிலை இழந்து நிற்கிறது! கேட்பார் யார்? எங்குளர்? மொழியின் வளம் பேசிமகிழ்வோர் உளர்! ஒலி அழகுகாட்டி உவகை ஊட்டுவோர் உளர்! மொழியின் நிலை? அந்நிலைக்கு வந்துள்ள கேடு? அக்கேட்டினை மூட்டிடும் கெடுமதி கொண்டோர்! அவர்தம் அடிதொட்டு ஏற்றம்பெற எண்ணும் முதுகெலும் பற்றோர்! இவை குறித்து எடுத்தியம்ப யார் உளர்?

அவள் காற்சிலம்பு! கைவளை! அவள் மேனியில் இடம் கொண்டோம் என்பதால் கர்வம் கொண்டிருந்த சச்சு! அவள் கரம்பட்ட செம்பஞ்சுக் குழம்புக் கலயம்! அவள் தோகை மயிலெனச் சாய்ந்திருந்த மஞ்சம்!......என்று காட்டிக் காட்டி, பெருமூச்சுவிட்டு, கண்ணீரையும் சிந்தவிட்டு, அம்மங்கை நல்லாள் எங்கே? என்று கேட்பவனிடம், "அவளா? இமயத் தான் இழுத்துச் சென்றான் — என்னை எண்ணி எண்ணி அவள் சிந்தும் கண்ணீர் வெள்ளத்தில், அவன் ஓர்நாள் அழிந் தொழிந்து போவான்—உறுதி! உறுதி!உறுதி!—என்று கூறிப் பயன் என்ன? இருந்ததை இழந்தோம் என்பது கேவலம். இழந்திடுவோம் என்ற நிலையை முன்கூட்டி அறிந்திடாதிருந் தது மடைமை. அறிந்தபிறகு தடுத்திடும் முயற்சியில் ஈடு படாதிருத்தல் கொடுமை. இழந்தபின் காதணி, காலணி, காட்டிக் கண்ணீர் சிந்துவது, இவை யாவும் கூட்டிச்சேர்த்த சேறு அன்றோ!

மொழி இன்று தாக்கப்படுகிறது. சிறுகச்சிறுக அழிக்கப் பட்டு வருகிறது—அரச அவை அதனை எற்க மறுக்கிறது— அஞ்சல் நிலையத்தார் அதனை அடித்து விரட்டுகிறார் கள்—நாணயம் அதனைத் தாங்கிட மறுக்கிறது—நயாபைசா வருகிறது! இந்நிலையில், பழம் பளமானது பற்றியும், கிழவி கியவியானது பற்றியும். காற்றைக் காத்தாக்கி, நாற்றைநாத் தாக்கி விட்ட கொடுமை பற்றியும் எடுத்துப் பேசுவது, சாமான்யர்களுக்கே ஏற்றதாகாது என்றால், பேராசிரியர் களுக்கே இவ்வளவுதான் கூறமுடியும் என்று நாம் மன அமைதி கொள்ளமுடியும்! கேட்டால், இதனையும் கூறாது சேது(ப்பிள்ளை) பெரும் பேராசிரியர் வையாபுரி(ப்பிள்ளை) யாக வடிவமெடுத்து விடுவாரோ, என்றல்லவா அச்சம் பிறக் கிறது. எழுப்பி விடாதே இவனும் வெளியே போய்விடப் போகிறான், என்று கூறின பிரன்ச்சு அமைச்சன் போலல்ல வா, ஏதோ, இதனையாவது பேசுகிறாரே என்று எண்ணிக் கொள்ள வேண்டி இருக்கிறது. ஏனெனில் இது மிகப் பெரிய

வர்கள் மிகத் துணிவுடன் மிகப்பெரிய உண்மைகளை மிகச் சாமர்த்தியமாக மறைத்துவிடும் காலமாக இருக்கிறது! கால மாகவா? மிகப் பெரிய மனிதராவதற்கு, இஃதொன்றே யன்றோ, வழியாகவே அமைந்து விட்டிருக்கிறது.

தம்பி, பணிக்கர் தெரியுமல்லவா உனக்கு! சீனாவிலும், ஈஜிப்டிலும், பணியாற்றிய பெரியவர். அவர் கூறுகிறார் துணிந்து, மொழி, பண்பாட்டுக்கு உயிர் என்கிறார்கள்,மொழி மூலமாகத்தான் பண்பாடு உருவாகிறது வளருகிறது என்கி றார்கள், அது தவறு, பண்பாட்டினை எடுத்துக்கூறும் முறை களில் மொழி ஒன்று, அவ்வளவுதான்! என்கிறார்.கூறிவிட்டு, மொழிவழி அரசு கேட்பது தவறு, மிகப் பெருந்தவறு! என்று பேசுகிறார். அவர் சென்னையில் பல்வேறு இடங்களில் பேசி யிருப்பதிலிருந்து, அவர் மொழிவழி அரசு கேட்கவில்லை என்பது மட்டுமல்ல, ''எனக்கு என்ன வழி?'' என்று நேரு பண்டிதரைக்கேட்கிறார்என்பதும் நன்றாகத் தெரிகிறது.

'மொழிக்கும் பண்பாட்டுக்கும் தொடர்பு இல்லை' என்று துணிவுடன் கூறுகிறார் பணிக்கர்.

பண்பாடு, பாரதத்தில் இருக்கிறது, இராமாயணத்தில் இருக்கிறது. வங்க மொழிமூலம் ஓர் பண்பாடு, மராத்தி மூலம் மற்றோர் பண்பாடு, தமிழ்மூலம் தனியானதோர் பண் பாடு ஏற்பட்டுத் தழைத்திருக்கிறது என்று கூறுவது தவறு என்கிறார். மொழி குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கக் கூடிய ஓய்வோ வாயப்போ பெறமுடியாத அளவுக்கு, உலகு எங்கணும் ஓடோடிச்சென்று, உபசார மொழிகளைச் சொறிந்து உச்சி ஏறி நிற்கும் தலைவர்களுடன் உறவாடிடும் பணிக்கர், ''தொல்காப்பியம் என்றோர் ஏடு உண்டு ஐயா! அது எமது தொன்மையான பண்பாட்டினை உருவாக்கிய கருவூலம்'' என்று கூறினால், அவர் 'ஒரு சர்வதேச ரீதியான! 'புன்ன கையை வருவித்துக் கொண்டு, இதெல்லாம் பழைய—கஞ்சி என்று கூறிவிடுகிறார்! மொழியின் தொன்மை மென்மை, வளம், இவைகள் இடது கரத்தால் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியன என்கிறார். வலக்கரம் கொண்டோ, இராமாயண பாரதச் சேற்றிலே அமிழ்ந்து கிடக்கும் செந்தாமரை இதழ் களைப் பொறுக்கி எடுக்கும் பணியிலே ஈடுபடுகிறார். பெரியவர்! எனவே பெருந்துணிவுடன் இவ்வண்ணம் பேசு கிறார்! பேராசிரியர்களோ, 'ழ'கரம் பாழ்பட்டுவிட்டதே, 'ற' கரம் 'ட'கரமாகிவிட்டதே என்ற கவலையில் தங்களை மறைத் துக் கொள்கிறார்கள்!

இமயம் முதல் குமரிவரை, பணிக்கர், இராமனையும் கிருஷ்ணனையும் பார்க்கிறாராம். 'பாரதம்' முழுவதும் பகவத்

கீதை இருக்கிறதாம். எனவே, மொழிகளைக் கடந்து ஓர் பண் பாடு இருந்திடுவது புலனுகிறதாம்.

எப்படி, வாதம்? வாதத்தின் திறத்தை அல்ல தம்பி, நான் கவனிக்கச் சொல்வது. அந்தத் துணிவைக் கவனித் தாயா!! இராமனும் கிருஷ்ணனும், இமயம்முதல் குமரிவரை இருக்கிருர்கள்—எனவே மொழிவழி அரசு கேட்பதோ, மொழி வழி பண்பாடுகள் அமைகின்றன என்று கொள்வதோ கூடாது என்று வாதாடுகிருர்— இந்தத் துணிவு, எவரிடம் காட்டப்படுகிறது என்று கவனித்தாயா தம்பி! இங்கு, திரு இடத்தில்! திருஇடத்தில் மட்டுந்தான்!

லிஸ்பனிலிருந்து லெனின்கிராட் வரையில், இலண்டனி லிருந்து ஜிப்ரால்டர் வரையில், ஆட்டவாவிலிருந்து அடி லெய்ட் வரையில், என்று இப்படி குறுக்கும் நெடுக்குமாகப் பல கோடுகள் கீறிக்காட்டி, நீயும் நானும் கூறமுடியும். இங் கெல்லாம் ஏசுநாதர் தெரியும்! பைபிள் படிக்கப்படுகிறது! எனினும் இங்கெல்லாம் ஏசுவும்மேரி அன்னையும் தெரிவதால், பைபிள் இங்கெல்லாம் புனித ஏடாக இருப்பதால், ஓரே பண் பாடுதான் இருக்கிறது என்று அறிக, எனவே ஓரே அரசு அமைதலே பொருந்தும் என்று உணர்க என்று கூறி டவும், அமெரிக்கா, கானடா, மெக்சிகோ, பிரேசில், அர்ஜெண்டினு, இங்கிலாந்து, டென்மார்க், நார்வே ஸ்வீடன், ஸ்பெயின், பிரான்சு, இத்தாலி, என்றெல்லாம் தனித்தனி அரசுகளாக ஆகாது, ஓரே பண்பாடு. ஓரே அரசு என்று பணிக்கர் அங்கு எங்கும் பேசத் துணிவுகொள்ளமாட் டார். இங்குதான், எதையும் பேச எவரையும் அனுமதித்து விடுகிருேமே! பேசுகிருர்!

ஜாதி—வர்ணுஸ்ரமம்—சுவர்க்கம்—இவைபோன்றமுறை களே எமக்கு உரியன அல்ல, எனவேதான் எமது மொழியில் அச்சொற்களே இல்லை, என்று புலவர் பெருமக்கள் கூறு கின்றனர்.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வாணிபம் எமது முறையல்ல. எமது இலக்கியம் காண்போர் இதனினை அறிவர் என்று புலவர் பெருமக்கள் பேசுகின்றனர்.

எமது நிலமே, ஐந்தாகத் தரப்பட்டிருக்கிறது.

எம்மிடம் திணை ஒழுக்கம் உண்டு.

எமது ஆட்சிமுறை, போர்முறை யாவுமே தனியான பண்பாடு விளக்கமளித்திடும்.

இவ்விதமெல்லாம் பேசுகின்றனர்—முத்தமிழ் என்று யாம் இயல், இசை, நாடகம் என்று கூறும் நிலை பிற மொழி யாளருக்கு இல்லை என்று கூறிப் பெருமிதம் கொள்கின்றனர்.

எமக்கென ஓர் மொழி, அம் மொழிவழி எமக்கென்றோர் பண்பாடு, அப்பண்பாட்டுக்கு உறைவிடமாகவும் உள்ள ஓர் அரசு—இவற்றினுக்கெல்லாம் எம்மிடம் சான்றுகள் உள்ளன என்று சாற்றுகின்றனர். எனினும் இவர்தம் சான்றுகளைச் சருகு என்கிறார். சேற்றிலே சந்தன மணம் கமழ்கிறது என்கிறார், துணிந்து பணிக்கர்.

*அறிவு அறை போகிய பொறி அறுநெஞ்சத்து இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!*

என்பதில் காணக்கிடக்கும் 'ற'கரத்தின் பெருமையில் பேராசிரியர் நீந்திக் களித்திடுகிறார்—இன்று இறைமுறை பிழைத்தோன் வாயிலோனாக உள்ள பணிக்கர்கள் கண்ணீர் பொழிந்திடும் கண்ணகிகளை "வழக்காடவும் துணிந்தனையோ! அவன் தலை வெட்டுண்டதுபோல உன் நாவும் வெட்டுப்பட வேண்டியோ, எமது கொற்றத்தினைக் குறை பேசி நிற்கிறாய்" என்று கேட்கின்றனர். நமது பேராசிரியர்கள் அந்த வாயிலோன் எது செய்யினும் பரவாயில்லை, 'ழ' கரம் பாழ்படாது இருக்கிறதா என்று கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

லோக்சபா — ராஜப்பிரமுக்— ராஷ்டிரபதி—நயாபைசா! இவ்வண்ணம் படை எடுக்கின்றன, வழக்கில் நடமாட வேண்டிய சொற்கள்! 'ழ'வும் 'ற'வும் மட்டுமா, மொழியே பிழைப்பது கடினம் என்று நிலை பிறந்திருக்கிறது. கேட்கும் உரிமை உணர்ச்சி, அதற்கான உள்ள உரம் எழக்காணோம்! இரயில்வே நிலையங்களில் இந்தி, அஞ்சல் அட்டைகளில் இந்தி, நாணயங்களில் இந்தி, அலுவலகங்களின் பெயர் பொறிப் பலகைகளில் இந்தி, பட்டாளத்தில் இந்தி-என்று எங்கும் இந்தி நுழைக்கப்படுகிறது! ஆட்சி மன்றங்களிலிருந்து அங்காடிவரையில் இந்தி அரசோச்சக் கிளம்பிவிட்டது. கேட்பார் இல்லை!

> "தமிழ் இலக்கியம் எதையும் சார்ந்திருப்பதன்று. கலாச்சார உபயோகத்தில் அது தனித்துஇயங்கவல்லது.
>
> இந்திய இலக்கியங்கள்பற்றி, தென் இந்தியாவிலிருந்தே அதுவும் திராவிடர்கள் மூலம் முக்கியமாகத் தமிழ், மலையாளம் பேசும் மக்கள் மூலம்தான் ஐரோப்பாவில் அறிய முடிந்தது.
>
> 17-வது 18-வது நூற்றாண்டில், தமிழ் சமஸ்கிருதத்தை விட அதிகம் முன்னேறி இருந்தது.
>
> தமிழ்மொழி தவிர மற்ற மொழிகளெல்லாம் சமஸ்கிருதக் கலப்புடையன."

பிலியோஜாத் எனும் பிரன்ச்சு நாட்டு, மொழித்துறை ஆராய்ச்சியாளர் கூறுகிறார். நாள் பத்து ஆகவில்லை இங்ஙனம் இவர் சென்னையில் கல்லூரியில் நடைபெற்ற, தமிழ்க்கலைக்

கழகக் கூட்டமொன்றில் பேசி! பேராசிரியர் சேது(ப் பிள்ளை) அவர்களும் அந்த மன்றத்தில் அமர்ந்திருந்தார் என்று தெரிகிறது. எனினும், என்ன பயன்? ஏற்புடையது! ஈடில்லாதது! தனியாக இயங்கவல்லது! பண்பின் பெட்டகம்! இன்பஊற்று! என்றெல்லாம் கூறித்தான் என்ன பயன்? இந்தி இழிவுபடுத்துகிறது—அதனை இழிவென்று எண்ணாதீர், என்னைப்பாரும், என் சொல்லைக் கேளும், அடுத்த உத்தியோகம் கிடைக்கும்வரை நான் இப்படி 'அடப்பம்' தாங்கும் பணிபுரிபவன் அறிமின்! என்று கூறி வருகிறார் பணிக்கர்.

பணிக்கர்கள் இதுபோலப் பேசுவது கேட்டும், பாரத அரசில் பணியாரத்துண்டுகள் பெறுவதற்காகப் பல்லிளித்துக் கிடப்போர், மொழி, பண்பாடு, அரசு எனும் எதனை விட்டுக் கொடுத்தேனும், நத்திப்பிழைத்திடும்போக்கிலேசெல்வதைக் காணும்போதும், மிகுதியும் துக்கம் துளைத்திடுகிறது. அந்த வேளையில், ஓரோர் இடத்திலிருந்து உள்ளத்திலுள்ளதை ஒரு சிலர் துணிந்து கூற முன்வருவதுகாண்பது, பாலைவனத்திலே கிடைக்கும் நீரோடை போலாகிறது. மகிழ்ச்சி இனிப்பூட்டுகிறது. இதோ மற்றோர் தமிழாசிரியர்; 'ழ' கர 'ற' கரத்தோடு நிற்பவரல்ல, நம்மோடு நெடுந்தூரம்வருபவருமல்ல. எனினும், நாம் செல்லும் திசையைச் சுட்டிக்காட்டிடும் அளவுக்கு முன்னணி வருகிறார், டாக்டர் இராசமாணிக்கனார், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் உள்ளவர்.

> "இந்திய வரலாற்றுக் காலம் தோன்றிய நாள் தொட்டு வெள்ளையர் ஆட்சி ஏற்படும் வரையில், தமிழகம் இந்தியாவை ஆண்ட எந்தப் பேரரசாலும் ஆளப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கது. இந்தியாவின் பெரும் பகுதியை ஒரு குடைக்கீழ் வைத்தாண்ட அசோகன் காலத்திலும், தமிழகம் தனியாட்சி புரிந்தது என்பதை அப்பேரரசன் வெளியிட்ட கல்வெட்டுகளே தெரிவிக்கின்றன. இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தனிப்பட்டு இருந்த தமிழகம் தனக்கென ஒரு மொழியையும் அதற்குரிய இலக்கியங்களையும் தனிப்பட்ட பண்பாட்டையும் வளர்த்து வந்தது."

தமிழாசிரியர்கள் அனைவரும் இத்தகைய வரலாற்று உண்மைகளை எடுத்துக்கூறும் உள்ளத் திண்மை பெற்றுவிட்டால், மொழி ஆராய்ச்சித் துறையிலே அல்ல, ஆட்சியாளர்களுக்கு நேசத்தொடர்புகளை ஏற்படுத்தித் தரும் துறையிலே, பணியாற்றும்பணிக்கர் இவ்வளவுபதட்டமாகவாபேசிடுவார்!

ஏன், தமிழறிந்தோர் துணிவு பெறுதுள்ளனர்?

டாக்டர், அந்த நோயின் தன்மையையும் விளக்குகிறார்.

> "தமிழன் — தமிழனாக வாழ்தல் வேண்டும். அவன் தன் தாய் மொழியின் சிறப்பை அறிதல் வேண்டும்;

தமிழிலேயே தனக்குரிய சடங்குகளைச் செய்துகொள்ள வேண்டும் என்று தமிழில் வல்ல சான்றோர் கூறினால், இவர்கள் நாத்திகர்கள்— வடமொழியை வெறுப்பவர்— ஒருமைப்பட்டுள்ள சமுதாயத்தில் வேற்றுமையை உண்டாக்குகின்றனர் என்று ஒரு சாரார் பழி தூற்றுகின்றனர். இவர்களுக்குள்ள நாளிதழ்களின் செல்வாக்காலும், உயர் அலுவலரது மறைமுகமான செல்வாக்காலும், இச்சான்றோர் பலவாறு அழுத்தப்படுகின்றனர். தமிழருள்ளே அறிவற்ற புல்லுருவிகளை ஏவிவிட்டுத் தூற்றவும் செய்கின்றனர்''

இந்த அச்சம்தான் பலரை 'ழ'கர 'ற'கரத்தோடு நிறுத்தி விடுகிறது.

புல்லுருவிகள்! பொன்னுருவிகள்! கண் சிமிட்டிகள்! காசு வீசுவோர!-அந்தப் படைவரிசையில் உள்ளவர்கள் பல வகையினர். ஒன்றால் வீழ்த்த முடியாவிட்டால், மற்றென்றால்! அடிக்கும் கரத்தால் ஆகாததை அணைக்கும் கரம் சாதித்துத் தருகிறது. பலத்தால் முடியாததை பாவத்தால், பரதத்தால், சாதித்துக்கொள்ள முடிகிறது! எல்லாவற்றையும்விட 'பழி' தாக்கிடும் என்ற பயமே, பலரை வீழ்த்திடப் பயன்படுகிறது.

படித்திருப்பாயே தம்பி, பம்பாயில் பத்து நாளைக்குமுன்பு, ஒரு புனித விழாவன்று கடல்நீர் இனிக்கிறது என்று ஒரு புரளி கட்டிவிடப்பட்டதாமே. அந்தச் செய்தியை எவனே ஒரு எத்தன், தனக்குக் கிடைத்த ஏமாளியிடம் கூறி வைத்திருக்கிறன், கடல்நீர் இன்றுமட்டும் இனிக்கும் என்று அவ்வளவுதான், சாரை சாரையாக மக்கள் கடலை நோக்கிச் சென்று, நான் முந்தி நீ முந்தி என்று விழுந்தடித்துக்கொண்டு சென்று, கடல்நீர் பருகினராம்.

கடல்நீர் கரித்தது! முகம் சுளித்தது! குமட்டலும்வந்தது! எனினும் என் செய்வர்! கடல்நீர் இனிக்கும் என்றல்லவா கூறி இருக்கிறர்கள். எனவே கடல்நீர் கரிக்கிறது, இனிக்கவில்லை என்று கூறினால், பாபாத்மாவுக்கு அப்படித்தான்! புண்யாத்துமாவுக்குத்தான் இனிக்கும் என்று கூறிவிடுவரே என்று எண்ணி, ஏதும் கூருமலே இருந்துவிட்டனர்-பெரும்பாலோர்! துணிந்து சிலர் கூறினர், கடல்நீர் எப்போதும்போல் கரிக்கத்தான் செய்கிறது; இனிக்கும் என்று சொன்னது வெறும்புரளி என்று! ஆம்!— என்றுகூட பக்தர்கள் கூறவில்லையாம்—முகம் 'ஆம்' என்றதாம்!

அதுபோலத்தான் தம்பி, தேசத் துரோகி—நாட்டைக் காட்டிக் கொடுப்பவன்—சமுதாயத்தில் பிளவு மூட்டுபவன்— என்று பழி சுமத்துவரே என்று அஞ்சி, 'ழ', கர 'ற'கரத்தோடு நின்று விடுகிறர்கள்.

இந்தியப் பேரரசு, இந்தி தேசீய மொழி; என்பவைகளை மறுப்பது ஆபத்தாக முடியும் என்று அஞ்சிக் கிடப்பதும், 'ழ' கரத்தையும் 'ற'கரத்தையும் காத்திட நம்மாலான முயற்சி செய்வோம் என்று முனைவதும், பலனளிக்காது. வேரிலே கொதி நீர் ஊற்றும் காதகர்கள் இருக்கும்போது, இதழின் அழகு பற்றிப் பேசி மகிழ்வது பலன் தராது! 'ழ' 'ற' மட்டுமல்ல, தமிழ் மொழிக்கு, தமிழ்ப் பண்பாட்டுக்கு, தமிழகத்துக்கு ஆபத்து என்பதை அஞ்சாது எடுத்துரைக்க முன் வருதல் வேண்டும்.

*தம்பி!* பேராசிரியர்கள், 'ழ'கர 'ற'கரத்தோடு நின்றுவிட்டாலும், நீயும் நானும், நம் போன்ற சாமான்யர்களும், *கடல்நீர் கரிக்கிறது—பணிக்கர் பேச்சு புளிக்கிறது—டில்லி கொட்டுகிறது* என்ற உண்மைகளை எடுத்துரைப்போம். பேராசிரியர்களின் பெரும்புலமை நாட்டுக்குப் பலனளிக்கத் தவறிவிட்டாலும், நாம் நமது தூயதொண்டு மூலம், நாட்டு விடுதலைக்கான 'சூழ்நிலை'யை உருவாக்க வல்லோம்-அதிலே எனக்குள்ள உறுதி, நான் நாட்டு மக்களின் நல்லார்வத்தைக் காணுந்தோறும் காணுந்தோறும், வளர்கிறது, மிளிர்கிறது!!

அன்புள்ள,

11—9—1955. அண்ணாதுரை

கடிதம் : *19.*

## "எங்கள் நாடு"

*காகிதத் தொழிலில் வடநாட்டு முதலாளிகள்—திராவிடநாடு விடுதலையின் அவசியம்—இந்திய உபகண்ட வாழ்க்கை நிலை*

தம்பி,

*"எங்கள் நாடு!*
*இது எங்கள் நாடு!*
*எங்கும் புகழ் தங்கும் நாடு*
*வளம் பொங்கும் நாடு*
*வந்த எல்லார்க்கும்*
*இடம் கொடுத்து*
*ஏமாந்த நாடு!!"*

கவர்னர், சேலம் மாவட்டத்தில் ஒரு சிற்றூரில் இந்தப் பாட்டுக் கேட்டாராம்! பள்ளிச் சிறுமிகள் இந்தப் பாட்டுப்

பாடி, அதற்குத் தகுந்த நாட்டியமாடிக் காட்டினராம். தம்பி, கவர்னர் நல்ல கலாரசிகர்! திருவல்லிக்கேணி, மயிலை அடையாறு, இவைகள், நமது நாட்டுப் பண்பாடு இன்னதென்று அறியாத வெள்ளைக்காரர்களுக்கே 'கலாரசனை' ஊட்டினஎன்றால், நமது கவர்னருக்கு அதைஊட்டச்சிரமம்என்ன ஏற்பட்டிருக்கப் போகிறது. அவரும் கலா நிகழ்ச்சிகளிலே அடிக்கடி கலந்து கொள்கிறார். எனவே, பள்ளிச்சிறுமிகள் பாடிஆடிய போது, அவர் அரும்பும்-மணம் தருகிறது என்றெண்ணி இருக்கக்கூடும். கலை, கடற்காற்று வீசும் இடங்களிலே மட்டுமல்ல, சிற்றூர்களிலும் சிறப்புடன் விளங்க முடியும் என்று எண்ணி மகிழ்ந்திருப்பார். கலைவளர்ச்சிக்கு இந்தச் சிறுசுகளின் சிங்கார நடனம் ஒரு எடுத்துக்காட்டு என்பதுபற்றிக் கவர்னர் எண்ணிக் கொண்டிருந்திருப்பாரே தவிர, அந்தப் பாட்டின் பொருள்பற்றி அவர் சிந்தனையைச் செலவிட்டிருக்கமாட்டார்; பொருள் தெரிந்த சிலரும், எங்கே இந்தப் பாடலின் பொருள் கவர்னர் பெருமானுக்குத் தெரிந்துவிடுகிறதோ என்றுதான் கவலைப்பட்டிருப்பார்களே தவிர, பொருளை விளக்கி இருக்க மாட்டார்கள்.

எல்லா வளமும் பொங்கிடும் எழில் நாடு, எங்கள் தமிழ் நாடு! ஆனால் யாராரோ வந்தார்கள், வந்தவர்களுக்கெல்லாம் இடம் கொடுத்துக் கொடுத்து, ஏமாந்தநாடு இதுஎன்று, இரக்கமும் வெட்கமும் எழத்தக்கவிதமான பொருள்கொண்ட பாடல் அது. 'ஓர் இரவு' எனும் படக் காட்சியில் இருப்பது; பாடலைத் தீட்டியவர் முத்தமிழ்க் கலா வித்வரத்ன டி. கே. சண்முகம் அவர்கள். அவர்கூட, இன்றைய நிலையில், விரும்ப மாட்டார் என்று எண்ணுகிறேன், இப்படிப்பட்ட கருத்தமைந்த பாடலைத் தீட்டியவர் என்பதை வெளியே எடுத்துரைக்க. நிச்சயமாகக் கவர்னருக்குப் பொருள் எடுத்துரைக்கப்பட்டிருந்தால், அவர் கலையைக்கூடக் கண்டித்துவிட்டுப் போயிருப்பார்! கலையை, கவர்னர்கள், கண்ணுக்குக் குளிர்ச்சியும், காதுக்குவிறுவிறுப்பும், இதயத்துக்கு இன்பமும், நரம்புக்கு முறுக்கும், இரத்தத்துக்குச் சிறிதளவு சூடும் தருவதற்கான சாதனமாக்கிக்கொள்ள விரும்புவார்களே யன்றி, வேறு வகையாகப் புகுத்துவது கடினம் என்றுசொல்லத்தக்க கருத்துக்களை, கலைமூலம் புகுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் கொள்வார்கள்! செச்சே! கவர்னர்களுக்கு என்ன 'விதியா' இப்படி அல்லற்பட! ஆனந்தமாக வாழ, அவர்கள் அரும்பாடுபட்டு, அரசர்களையும், அரசாண்ட ஆங்கிலேயரையும் விரட்டி அடித்து, அரண்மனைகளைக் கைப்பற்றிக்கொண்டு, அறுவடை கண்டு அகமகிழ்கிறார்கள். அந்தநிலையில் உள்ளவர்களிடம், மக்களின் உளநிலையை மாற்றக் கலை பயன்பட வேண்டும் என்று சொன்னால், நிச்சயமாகக் கோபிப்பர்.

கவர்னர்கள் உணர மறுப்பர். கவிதை தீட்டியோரும் அக் கருத்தினை வலியுத்திக்கூற விரும்பார். பள்ளியின், பொறுப் பாளர்களும், பாடலின் பொருள் அறிந்தல்ல அதைத் தேர்ந் தெடுத்தது-ஆனால், தம்பி, நமக்கெல்லாம், அந்தச்செய்தியைப் பார்க்கும்போது, "என்ன பொருத்தம்! என்ன பொருத்தம்! 'வந்த எல்லார்க்கும் இடம் கொடுத்து ஏமாந்த நாடு!' என்ற பாடலை, வந்தமர்ந்து கோலோச்சும் கவர்னர் எதிரே பாடிக் காட்டினரே, எவ்வளவு அருமை! எத்துணைத் திறமை!" என்று எண்ணிப் பூரித்திடச் செய்கிறது.

வளமிருந்தும், எழில் நிரம்பியும், வரலாற்றுச் சுவடியில் நல்லிடம் பெற்றும் உள்ள நம்நாடு, வந்த எல்லார்க்கும் இடம் கொடுத்து ஏமாந்த நாடு—என்ற உண்மையை மட்டும், நாட் டின் பிரச்சினைகளிலே நல்லார்வம் காட்டும் இளைஞர்கள் உணர்ந்துகொண்டு விடுவார்களானால்...! தேனென இனிக்கி றது. தம்பி, நாம் செய்ய வேண்டிய பணி, இதுநாள் வரை இதனை உணராதிருப்பவரெல்லாம், இந்த உண்மையை உண ரச் செய்வதுதான்! ஓரளவுக்கு நமது முயற்சி வெற்றிபெற்றுக் கொண்டு வருகிறது—இல்லையானால், ஏமாற்றமும் மனச்சோர் வும் நம்மை எல்லாம் மண்ணாக்கி விட்டிருக்குமே! தமது முயற்சி வெற்றி பெறுவது கண்டு மனம் புழுங்குவோர், நமது மூக்கினைச் சொரிந்துவிடவும், தமது நாக்கினைத் தீட்டிக் கொண்டு நம்மை நிந்திக்கவும் முற்படுகிறார்களல்லவா! தம்பி, நாம் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதற்கு அறி குறிகள் அவை.

நம் நாடு—திரு இடம்—இன்று 'வடவருக்கு' பல்வேறு துறைகளிலும் அடிமைப்பட்டுக் கிடக்கிறது, என்ற பொது உண்மையை நாட்டவரில் மிகப்பெரும் அளவினர் உணர்ந்து கொண்டுவிட்டனர்; சிலர் திகைப்புற்றுக் கிடக்கின்றனர்; வேறு சிலர் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாமலிருக் கும் வரையில் மனதுக்குஅமைதி இருக்கும், பிறகுபுயலல்லவா புகும், நமக்கேன் வீண்வேலை என்றுஒதுங்கிக்கொள்கிறார்கள்; ஆர்வமுள்ளவர்களோ, அடிமைத்தனத்தின் பொருளைக் கண் டறிந்து விளக்கும் அரும்பணியில் ஈடுபட்டபடி உள்ளனர். ஒரு தம்பி, இதை எனக்கு அனுப்பி, வடநாட்டு ஆதிக்கம் எப்படி எப்படி வடிவமெடுத்திருக்கிறது பார், அண்ணா! என்று கூறுகிறார்.

"இந்திய உபகண்டத்தின் பெருமளவு உற்பத்தியில் ஓரளவு பெரிய பங்கு பெற்றிருப்பது காகிதத் தொழிலாகும். காகிதத் தொழிலின் முடிசூடா மன்னர்களாக இன்றைய நிலையில் காணப்படுவது—ஆளுகை நடத்துவது வடநாட்டுப் பெரு முதலாளிகளே.

**இந்தியாவின் வட பகுதியில்:—**

1. ரத்லம் ஸ்ட்ராபோர்டு மில்ஸ்
2. டிடாகூர் பேப்பர் மில்ஸ்
3. பெங்கால் பேப்பர் மில்ஸ்
4. இந்தியா பல்ப் பேப்பர் மில்ஸ்
5. ஸ்ரீகோபால் பேப்பர் மில்ஸ்
6. பெல்லார்பூர் பேப்பர் மில்ஸ்
7. ஸ்டார் பேப்பர் மில்ஸ்
8. ஓரியண்ட் பேப்பர் மில்ஸ்
9. ரோட்டாஸ் இண்டஸ்டிரீஸ்
10. இந்தியா பேப்பர் மில்ஸ்
11. போபால் ஸ்ட்ராபோர்டு மில்ஸ்
12. குஜராத் பேப்பர் மில்ஸ்
13. அரவிந்த் பேப்பர் ஸ்ட்ராபோர்டு மில்ஸ்
14. * டெக்கான் பேப்பர் மில்ஸ்
15. * சிர்பூர் பேப்பர் மில்ஸ்
16. * ஆந்திர பேப்பர் மில்ஸ்
17. * மைசூர் பேப்பர் மில்ஸ்
18. * காவேரி பேப்பர் மில்ஸ்
19. * புனலூர் பேப்பர் மில்ஸ்

இன்னும் பெயர் குறிக்க முடியாத வெகு சிறிய 4அல்லது 5-காகித ஆலைகள் இந்திய நாட்டில் உள்ளன. ஆகமொத்தம் உள்ள 23 ஆலைகளில் 4-தென்னகத்தில் உள்ளன. ஒன்று தக்காணத்தில் உள்ளது.

தென்னகத்தில் உள்ள ஆலைகளில் ஒன்று செயல்படுவது கிடையாது. மீதமுள்ள மூன்று ஆலைகளில் ஒன்று அரசாங்கத்துக்கு சேர்ந்தது—ஒன்று அரசாங்கத்தின் ஓரளவு மேற்பார்வையில் திறம்பட நடந்து வருகிறது-ஒன்று ஆங்கில முதலாளிகளுக்குச் சேர்ந்தது. தென்னக ஆலைகள் மூன்றும்-ஆந்திரத்தில் ஒன்றும் - கன்னடத்தில் ஒன்றும்—மலையாளம் (திருவாங்கூர்—கொச்சியில்) ஒன்றுமாகத் தமிழகத்தில் ஏதுமில்லாமல் வியாபித்தும் இருக்கின்றன.

ஆலைகள் தான் இல்லையென்றாலும் கூட, ஆலைகளின் ''ஏஜண்டுகளாவது'' தமிழர்களாக உண்டா என்றால் அதுவும் கிடையாது.

கண்ணாடிக் காகிதம் தயார் செய்யும் ஒரே ஒரு ஆலைமட்டும் தமிழர்களின் சொத்தாக திருவாங்கூர்—கொச்சியில்

செயல்பட்டு வருகிறது—அதுவும்கூடத் தமிழகத் தேவைக்கு சிறிது கூட "சப்ளை" செய்ய முடியாத நிலையில், வடநாட்டுக்கே பெருமளவு கட்டுப்பட்டுத் தொழில்படவேண்டிய நிலையில் இருப்பதாகச் சொல்லப்பட்டு வருகிறது. எனவே அது தமிழகத்தைப் பொறுத்தவகையில் இருந்தும் இராததாகவே தான் உள்ளது.

குறிப்பாக, 'அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்'களின் பட்டியலை நோக்குவோம்.

1. இந்திய நாட்டின் மிகப் பெரிய காகித ஆலைகளில் பெரியதான டிடாகூர் பேப்பர் மில்ஸுக்கு அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள், சௌத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.

2. ரத்லம் ஸ்ட்ராபோர்டு மில்ஸ்:லாலா கோபி கிருஷ்ண கோகுல்தாஸ்.

3. பெங்கால் பேப்பர் மில்ஸ் லிமிடெட்:வில்சன் அண்டு கோ லிமிடெட், முன்னர் விற்பனையாளர்களாகச் சொல்லப்பட்டு வந்தனர்.

4. இந்திய பல்ப் பேப்பர் மில்ஸ் லிமிடெட்: பேரி அண்டு கோ லிமிடெட்.

5. ஸ்ரீ கோபால் பேப்பர் மில்ஸ், பெல்லார்பூர்: ஜெய் தயாள் கபூர்.

6. ஸ்டார் பேப்பர் மில்ஸ்.

7. ஓரியண்ட் பேப்பர் மில்ஸ் லிமிடெட்: பிரிமியர் சப்ளையர்ஸ் லிமிடெட், ஈஸ்ட் அண்டு வெஸ்ட் டிரேடிங் கம்பெனி, ஜெ. பி. அத்வானி அண்டு கோ லிமிடெட்.

8. ரோட்டாஸ் இன்டஸ்டிரீஸ் லிமிடெட்: லாலா கோபி கிருஷ்ண கோகுலதாஸ்.

9. இந்தியா பேப்பர் மில்ஸ்.

10. போபால் ஸ்ட்ராபோர்டு மில்ஸ்: பரசுராம் ஜெதானந்த்.

11. குஜராத் பேப்பர் மில்ஸ்; ஜெ. தடானி அண்டு கோ லிமிடெட்.

12. அரவிந்த் ஸ்ட்ரா போர்டு: எ. எம். ஆறுமுகம்.

13. டெக்கான் பேப்பர் மில்ஸ் லிமிடெட்.

14. சிர்பூர் பேப்பர் மில்ஸ் லிமிடெட்: பிரிமியர் சப்ளையர்ஸ் லிமிடெட்.

15. ஆந்திரா பேப்பர் மில்ஸ்: டி. என். கங்கப்பா.

16. மைசூர் பேப்பர் மில்ஸ் லிமிடெட்.

17. காவேரி பேப்பர் மில்ஸ் லிமிடெட்.
18. புனலூர் பேப்பர் மில்ஸ் லிமிடெட்: W.A. பியர்ட் செல் அண்டு கோ லிமிடெட்.

கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களின் பட்டியலை நன்ருகக் கவனித்து வாருங்கள். ஏறக்குறைய 24/25 ஆலைகளின் பூரண விற்பனையாளர்களாக வடநாட்டார்களாகவும், ஒரு சிலவற்றிற்கு அன்னிய நாட்டினருமே விற்பனையாளர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, தென்னுட்டின் காகித வாணிபம் அனைத்தும் வட நாட்டினரின் கைக்குள் அடக்கப்பட்டு, தென்னுட்டுக் காகித வாணிபம் அனைத்தும் 'எடுப்பார் கைப்பிள்ளை'யின் நிலையை ஒத்ததாக அமைக்கப்பட்டு விட்டது—பரிதாபத்துக்குரிய செய்தி.

அவர்களின் கண்டு விரல் அசைந்தால், தென்னுட்டு காகித வாணிகமன்னர்கள் அனைவரும் மண்ணோடு மண்ணுக ஆக்கப்பட்டு விடுவார்கள் என்பது திடுக்கிடும செய்தியேயானுலும், உண்மையானதே. மறுக்கமுடியாத, பரிதாபத்துக்குரிய நிலை, அழிக்கப்படவேண்டிய நிலை என்றைக்கு வருமோ, அன்றேதான் நம் வாழ்வு விடியும். அந்நாள் எந்நாளோ''

0 0 0

வாழ்வு விடியவேண்டும்! அந்நாள் எந்நாளோ!!—என்று ஏக்கத்துடன், இந்தக் கோவை தம்பி குமுறுகிருர்-'காகிதம்' மட்டும்தான் இங்கு கவனிக்கப் பட்டது—இதற்கேகூட, இந்த ஏக்கக் குரல் கிளம்பிக் கொண்டிருக்கும்போதே ஒரு எக்காளம் கேட்கிறது—வடக்கே, மற்ருேர் புதிய காகித ஆலை துவக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி வெளிவந்திருக்கிறது.

காகித ஆலைகள் சம்பந்தப்பட்ட மட்டும்தானு இது? இல்லை,இல்லை! எந்தத் தொழிலிலும் வடநாடுதான் ஆதிக்கம் செய்கிறது—சர்க்கார் தீட்டும் எந்தத் திட்டமும் மேலும் மேலும் வடநாட்டைக் கொழுக்கச் செய்வதாகத்தான் இருக்கிறது—சர்க்காரே வடநாடு தானே! இந்தியா ஒரே தேசம் என்ற கண்ணேட்டம் வேண்டும்; வடக்கு, தெற்கு என்று பிரிப்பது தவறு, தீது, அறிவீனம் என்றுபேசுவதால் 'மேதை'ப் பட்டம் கிடைத்துவிடும் என்று கருதுபவர்கள் இருக்கிருர்கள்- ஆனுல், அவர்களின் தொகையும் குறைகிறது; அவர்களிடம் மக்களுக்கு அருவருப்பும் வளருகிறது'

வடநாட்டு முதலாளி - தென்னுட்டு முதலாளி என்று ஒரு பாகுபாடு உண்டா! மதியிலிகாள்! மார்க்சின் சித்தாந்தத்தை அறியாத வகுப்புவாத வெறியர்காள்! ஏழை எங்கும்வதைபடுகிருன். வடக்காக இருந்தால் என்ன,தெற்கு ஆனுல் என்ன?

வடக்கையும் வறுமை வாட்டுகிறது, இல்லாமை, போதாமை கொட்டுகிறது!—என்று பேசுகின்றனர் கம்யூனிஸ்டுகள்! காங்கிரஸ்காரர்களைவிடக் காரசாரமாகப் பேசி, வடநாட்டுக்குக் கங்காணி வேலை பார்க்கும் இந்தக் கம்யூனிஸ்டுகளின் வாயும் அடைபடும் விதமாக நிலைமை வளர்ந்து விட்டிருக்கிறது. வடநாடு-தென்னாடு என்று பேசுவது வர்க்கப் போராட்ட சித்தாந்தத்துக்கு உகந்ததல்ல என்று பேசிவந்தவர்கள், இன்று, நாடு மெள்ள மெள்ள, ஆனால் உறுதியுடன் போர்க்கோலம் கொள்வதையும், நாட்டை வடவருக்குக் காட்டிக் கொடுப்பவர்களைக் கயவர் என்று கண்டித்து அவர்தம் கருத்தினைக் கருக்கிடவும், பிடியினை நொருக்கிடவும் துடிதுடித்துக் கொண்டிருப்பதையும் கண்டு,கிலிகொண்டு,பொதுமக்களின் சீற்றத்தால் சின்னாபின்னமாக்கப்பட்டு விடுவோம் என்று அஞ்சி, இப்போது, தென்னாட்டுக்குத் தொழிற்சாலைகள் வேண்டும், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வேண்டும், நெய்வேலி நிலக்கரியை வெளியே கொண்டு வந்தாக வேண்டும், என்று 'முழக்கம்' கிளப்ப முன் வருகிறார்கள். உள்ள, இரும்புத் தொழிற்சாலைகள் போதாது, மேலும் ஒன்று வேண்டும், அது சிந்து நதி தீரத்திலோ, சீராளாவிலோ, அசாமிலோ, அமிர்தசரசிலோ, எங்கே அமைக்கிறீர்கள் என்பதுபற்றி எமக்குக்கவலை இல்லை; நாங்கள் அத்தகைய குறுகிய மனப் போக்கினரல்ல, எமது கண்ணோட்டம் பரந்து விரிந்து இருப்பது, எமக்கு வடக்கும் கிடையாது தெற்கும் கிடையாது, என்று பேசுவது, மிக விரைவில், சீந்துவாரற்றுப் போகும் நிலையைத் தந்துவிடும் என்று கிலிகொண்டு, சேலத்து இரும்பு, நெய்வேலி நிலக்கரி என்று பேசுகிறார்கள்—எங்களைக் ''காட்டிக்கொடுப்பவர்கள்''—''கயவர்கள்'' ''கங்காணிகள்'' என்று கண்டித்து எதிர்த்தொழித்திடக் கிளம்பிவிடாதீர்கள், நாங்களும், சேலம், நெய்வேலி இவை சார்பாக வாதாடுகிறோம் என்று கூறி, பல்லிளிக்கத் தொடங்கி விட்டனர்!

0 0 0

ஜனாப் ஜின்னா, பாகிஸ்தான் பரணி பாடியபோது, காங்கிரஸ்காரர்களைவிடக் கடுமையாகத் தாக்கினார்கள், கம்யூனிஸ்டுகள். நாடு துண்டாடப்பட விடமாட்டோம் என்று முழக்கமிட்டனர். பிரிவினை எதிர்ப்பு நாள் மாநாடு-மகஜர்—வெகுஜன எதிர்ப்பு—பொதுஜன அணிவகுப்பு—என்றெல்லாம் பலப்பல அதிர்வேட்டுகள் கிளப்பினர். 'ஆனைப்பட்ட காந்தியாரும், அதி வீரதீரர் படேலும், அலகாபாத் பண்டிதரும், பஞ்சதந்திரம் தெரிந்த ஆச்சாரியாரும் கிளப்பிய எதிர்ப்புகளே முறிய ஆரம்பித்தன—அவர்களே ஜின்னாவின் 'முகவாய்க்கட்டை'யைப் பிடித்துக் கொண்டு,கெஞ்சும் நிலைபிறந்

தது—ஏதேது கப்பல் கவிழ்ந்துவிடும் போலிருக்கிறது என்று தெரிந்ததும், கம்யூனிஸ்டுகள் தங்கள்போக்கைஅவசரஅவசர மாக மாற்றிக் கொண்டு பாகிஸ்தானுக்கு ஆதரவு த ரத்தக்க தீர்மானத்தை நிறைவேற்றிக் காட்டினர். எங்களை ஒன்றும் செய்துவிட வேண்டாம் என்று கெஞ்சுகிற தீர்மானமாக இருந்தது பத்திரிகை நிருபர்கள் ஜனுப் ஜின்னுவைக் கண்டு, கம்யூனிஸ்டு தீர்மானத்தை எடுத்துக் காட்டி, அவர் கருத்தைக் கேட்டனர். அவர் சொன்னுர், "பாகிஸ்தான் திட்டத்துக்கு ஆதரவு திரண்டு வராதிருந்த கட்டத்தில்,அதன் நியாயத்தை இந்த யோக்கியர்கள் மதித்து ஏற்றுக் கொண்டிருந்தால், நான் இந்தக் கம்யூனிஸ்டுகளுக்கு நன்றி செலுத்தி இருப்பேன்! என் திட்டத்தை விளக்கமறியாத முஸ்லீம்களும், வீம்புக்காரக் காங்கிரசாரும் எதிர்த்தபோது, கம்யூனிஸ்டுகள் அவர்களோடு சேர்ந்துகொண்டு என்மீது கல் வீசினர். இப்போது, பாகிஸ்தான் பெறப்போவது உறுதி என்ற கட்டம் பிறந்துவிட்டது. இப்போது இவர்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவுத் தீர்மானம் போட்டு என்ன எதிர்பார்க்கிருர்கள்! என்னுடைய நன்றியையா? பைத்தியக்காரர்கள்! அவர்களுக்கு இப்போதாவது தெளிவும் யூகமும்ஏற்பட்டதேஎன்று மகிழ்ச்சி அடைகிறேன்—அதுவே தவிர என் நன்றிக்குஅவர்கள் உரியவர்களல்ல" என்று கூறினுர்.சுருண்டு கீழே விழுந்த அந்தச் சூரர்கள், மறுபடியும் எழுந்து அவர் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. அவ்வளவு பலமானஅடிவிழுந்தது. அதே போக்கிலேதான், திராவிட நாடு விஷயமாகவும்,கம்யூனிஸ்டுகள் கையாண்டு வருகிருர்கள். வடக்காவது, தெற்காவது என்று 'பாரதம்' பேசி வந்தவர்கள், இப்போது தெற்கிலேயும் தொழில் வளரவேண்டும் என்று பேசத் தொடங்கியுள்ளனர்.

0 0 0

தாயகத்தைத் தருக்கர்கள் அடிமைப்படுகுழியில்தள்ளிய போது, செல்வத்தைச் சுரண்டியபோது, தொழில்களை நசுக்கியபோது, அறிவை அழித்தபோது, தன்மானத்தைஒழித்த போது, அடக்குமுறையை அவிழ்த்து விட்டபோது, உன்னை ஈன்றெடுத்து இயல்புகளை அளித்து, இயற்கைச்செல்வத்தால் உன்னை ஊட்டி வளர்த்த தாயகம் தலைவிரி கோலமாக்கப்பட்டு, மானமழியும் நிலைக்கு ஆளாக்கப்பட்டு, வடவரால் வதைக்கப்பட்டபோது, என்ன செய்து கொண்டிருந்தாய்? ஏதுமறியாத ஏமாளியாக இருந்தாயா? என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக்கிடந்தாயா? அங்ஙனமாயின், நீ ஓர் அப்பாவி! வீரக்குலத்திலே தப்பிப் பிறந்த பதர்! விளக்கமறியாத வீணன்! தூத்தூ! திருவும் அறிவும், வீரமும்

மாண்பும் பொங்கும் நாட்டிலேயா இத்தகைய ஏமாளி பிறந்திட வேண்டும்! உன் தாயகம், தன்னரசு இழந்ததை, தன் மொழி இழந்ததை, விழியைக் குளமாக்கிக் கொண்டதைக் கண்டறியும் அளவுக்குமா உனக்குக் கருத்துத் தெளிவு ஏற்படாமற் போய்விட்டது! ஏடா! மூடா!! உன்னைச் சுற்றிலும் அழகிய மலையும், எழிலோங்கும் ஆறுகளும், பச்சைப் பசேலென்ற வயலும்,பாங்கான பலதருக்களும்இச்சையூட்டத் தக்க எத்தனையோ வளமும் இருந்தும் வறுமை நம்மைவாட்டிடக் காரணமென்ன? உழைப்பு ஏன் வீணாக்கப்படுகிறது? உண்டுகொழுத்திடுபவன், உழைத்திடக் காணோமே, அது ஏன்? கொட்டிக் கொடுக்கும் வரிப்பணம் வேறு எங்கோ கொண்டு செல்லப்படுகிறதே, சரியா? பட்டியில் மாடுகள் போல, ஆளவந்தார்கள் உள்ளனரே, முறையா? என்றெல்லாம், எண்ணிப் பார்த்திடத் தெரியவில்லையா உனக்கு. பேதையே! அறிவுக் களஞ்சியத்தின் அழகினைக் கெடுத்திடும் அவமானச் சின்னமே! வெட்கப்படு! வெட்கம் வேலாகிக் குத்தட்டும் உன்னை! தலைகுனிந்து நட—தையலரும் தன்னரசுக்கான போர்புரிய முன்வந்த போது, 'அசை'போட்டுக் கொண்டு கிடந்தோமே என்றெண்ணி, முக்காடிட்டுக் கொண்டு நட! விடுதலைப் போரிலே வீழ்ந்துபட்ட வீரர், நடந்துசென்ற பாதையில்காணக்கிடக்கும்குருதிக்கறையிலே, கண்ணீர் சொரிந்து வேண்டிக்கொள்!

ஓர் நாள், இப்படி 'ஏமாளிகள்' கேட்கப்படுவர், திராவிட விடுதலை கண்ட பிறகு, விடுதலைப் போரினை வெற்றிகரமாக நடாத்திய மாவீரர்களால்!

திரு இடத்தின் இன்றைய தாழ்நிலையைஅறியுமளவுக்குத் தெளிவு அற்றுக் கிடக்கும் ஏமாளிகள் கண்டிக்கப்படுவர், ஆனால் அனுதாபத்தோடு! பரிதாபம்! அவன் கருத்துக் குருடன், ஆகவேதான் தந்தையர் நாட்டினை மீட்டிடும் தன் மானப் போரில் ஈடுபடாதிருந்தான், என்று எண்ணுவர். ஆனால் அறிவில் தெளிவு இருந்தும், உண்மைக்காகப் பரிந்து பேசவும், உரிமைக்காகப் போராடவும் முன் வராததுடன், எத்தகைய ஏசல், எதிர்ப்பு, இடர், இன்னல், பழி பாதகம், எதுவரினும் அஞ்சாது, அறப்போரில் ஈடுபட்டு, அன்னையின் கரத்தினில் விலங்குகளா! என்று ஆர்த்தெழுவோரை ,எதிர்த்திடும் அற்பர்கள், காட்டிக்கொடுக்கும் கயவர்கள், எதிரிகளுடன் கூடிக்கொண்டு கொலுப் பொம்மைகளாகும் துரோகிகள் இருக்கிறார்களே, இவர்களை, விடுதலைபெற்ற திராவிடம், சும்மாவிடாது!

பெற்ற தாயை மானமழித்திடத் துணிந்தவனுக்குத் தாள்பிடித்துக்கிடந்தவனே ,பிறந்த பொன்னாட்டை மாற்றான்

சீரழிக்கும்போது கண்டு, கரம் அசைக்காமல் அவனுக்குக் கட்டியம்கூறிக் கிடந்த கடையனே! உனக்கென்று ஒரு மொழியும், மொழிவழி ஓர் சீரிய வாழ்வும் அளித்து, உனக் சாகத் தென்றலையும் தேனையும், தினையையும் நெல்லையும், தீஞ்சுவைக் கனிகளையும் சுவைமிகு சுனைகளையும் கானுறுகளை யும் களிறுகளையும், ஓங்கி வளர்ந்த வரையினையும் சந்தனத் தருக்களையும், கடல் முத்தையும், கட்டித் தங்கத்தையும், மலர்க்கொல்லைகளையும், மான் கூட்டங்களையும், வேட்டைக்கு வேங்கையையும் வீட்டுக்கு ஆவினங்களையும், எங்கும் பச்சை யையும், உன் இச்சையைப் பூர்த்தி செய்ய எல்லா வளங்களை யும் தந்த தாயகத்தை, மாற்றான் வெள்ளாட்டியாக்கி, கூந் தலைக் கலைத்து, குங்குமத்தைக்குலைத்து, ஆடையைக்குறைத் துக் காலால் உதைத்து, ஏடி! வெள்ளாட்டி! தொட்டிழுக்கும் வேளையிலே, வெட்டுவேன் என்று பதட்டம் பேசுகிறாய், என் சுட்டு விரல் அசைத்தால், உன்னைச் சுக்கு நூறாக்க என் சூறுவளிப் படை கிளம்பும், உனக்கேன் ஒரு தனிக்கொற்றம், வீழ்ந்துகிட என் கொட்டகையில், பிழைத்துப் போ, நான் தரும் பிச்சையை உண்டு, பேய்க்கோலம் காட்டுவாயேல், வாட்டிடுவேன் சூட்டுக்கோலால்!-என்று கொக்கரித்தபோது, மாமிசப் பிண்டமே! உன் இரத்தம் கொதிக்கவில்லையா? இதயம் துடிக்க வில்லையா? உடல் பதறவில்லையா? கண்களை இறுக மூடிக் கொண்டாயா! எப்படி உன் மனம் இடம் தந்தது, தாயகத்தைக் காலின் கீழ் போட்டு மிதித்தவனுக் குக் கைகட்டி வாய்பொத்தி நிற்க! சிறு குத்தீட்டி கிடைக்க வில்லையா உனக்கு? ஒரு முழக் கயிறுக்கும் பஞ்சமா? ஆழ் கிணறோ, மலை உச்சியோ, கிடைக்காமலா போய்விட்டது? உயிரையும் வைத்துக்கொண்டு உன் அன்னைக்குப்பங்கம்விளை வித்தவனை எதிர்க்கும் வீரப்போரில் ஈடுபடாமலிருக்க உன்னால் எப்படி முடிந்தது? கோழையானால் கூடப் பரவாயில்லை, மன் னித்து விடலாம்! கொடியவனே! நீ, மாற்றான் கோட் டைக்குக் காவலாக அல்லவா நின்றிருந்தாய்? உன் உடன் பிறந்தானின் உடலைக் கழுகும் காக்கையும் கொத்தித் தின்ற வேளையில், கூடப் பிறந்த கேடே! நீ, மாற்றான் தந்து மது வையும் மாமிசத்தையும் உண்டு கிடந்தாயே! இயற்கையாகச் சுரக்க வேண்டிய நாட்டுப் பற்று? எழாத உள்ளத்தைக் கொண்டு, ஒரு உடலம் நிற்பதா—எம் கண்முன் நடமாடு வதா?-எமது தாயகம் இத்தகைய இழி மகனை, இனத்துரோகி யைச் சுமந்து கொள்வதா, விடுதலைப் போரிலே வீரர் கொட் டிய குருதியால் புனிதமாக்கப்பட்டுள்ள இந்த மண்ணில், மாபாவி! உன் நிழல் படுவதும், கேவலம்! ஓடிப்போ! மனித உருவம் தாங்கி நிற்கும் மிருகமே, எமது கோபம், வேலாக, வாளாக, தூக்குக் கயிறாக, துப்பாக்கிக் குண்டாக

மாறுமுன், ஓடிப்போ! கிழங்கு தோண்டித் தின்று பிழைத்துக் கொள்! கிழப்புலி கொன்று தின்ற மானின், மிச்சம் மீதி கிடைத்திடின், தின்று பசி போக்கிக்கொள்! வீரக் கோட்டத்தைக் களங்கப்படுத்தாதே! அகமும் புறமும்கண்டு அகமகிழ்ந்த தமிழர் திருநாட்டில், வாயும் வயிறும்பெரிது என்றெண்ணிக்கிடந்தவஞ்சகனே, உனக்கு இடம்இல்லை! ஓடிவிடு, ஓடிவிடு, காதலனைக் களத்திலே இழந்தகாரிகையரின்கண்ணீர் உன்னைச் சுட்டெரித்து விடும், பல்லிழந்த பாட்டியின் சொல்லம்பு கூட உன்னைச் சல்லடைக் கண்ணுக்கிவிடும். சிறுர் காணின், அவர் தம் விழி சிவந்திடும். உன்னைப்பற்றி மேலும் பேசிடின், எம் வாயும் நாறிடும். நாசகாலனே, நாட்டைக் காட்டிக் கொடுத்தவனே, ஓடு, ஓடு, உனக்கு ஏற்ற ஓர் உதவாக் கரை இடம் தேடி, ஓடு,''—என்றெல்லாம் கண்டிப்பர், கடமையை நிறைவேற்றி வெற்றி கண்டோர்—எதிர்கால இன்பத் திராவிடத்தில்.

0 0 0

மெல்லிய கோடுகள் தெரிகின்றன, கம்யூனிஸ்டுகளுக்கு—ஆகவேதான், மெல்லவும் முடியாமல்விழுங்கவும்முடியாமல், தென்னுட்டுக்குத் தொழில், சேலத்து இரும்பு, நெய்வேலி நிலக்கரி,—என்று பேசிப் பார்க்கிருர்கள்.

இப்போதும் இவர்களும், காங்கிரசிலே உள்ளவர்களில் சிலரும், தென்னுட்டுக்குத் தொழில் வளம் செய்து தர வேண்டும், திட்டங்கள் வகுப்பதில் ஓர வஞ்சனை காட்டுவது கூடாது, என்றுதான் டில்லியிடம் கேட்கிருர்கள், விண்ணப்பித்துக் கொள்கிருர்களே தவிர, ஏன் இந்தக் கேவல நிலை, தொட்டண்ணன் தோட்டத்திலே வெட்டண்ணன் மாடு மேய்வானேன், அதைக் கொஞ்சம் பிடித்துக்கட்டு என்று புட்டண்ணன் கெஞ்சிக் கிடப்பானேன், என்று எண்ண மறுக்கிருர்கள்.

வாழ வழி இருக்க, வளம் யாவும் குறைவின்றி இருக்க, வாழும் வழியை அமைத்துக் கொள்ளும் அறிவாற்றல் இங்கிருக்க, வாழ்ந்தவர்கள் நாம் என்பதை நினைவூட்ட வரலாறு இருக்க, எதற்காக, வடவரிடம் நமது பிடரியைக் கொடுத்துவிட்டு, பிறகு, "மெள்ள, மெள்ள" "வலிக்கிறது, வலிக்கிறது," என்று வேதனைக் குரலொலித்துக் கிடக்க வேண்டும்? இங்கு இல்லாத எதையும் நமக்காகப் பெற்றுத் தரும்படி, வடவரை நாம் கேட்டோமில்லை—இங்கு புகுந்து ஆதிக்கம் செலுத்திக் கொண்டு, எமது செல்வம் எமக்குப் பயன்படாமற் செய்யும் கொடுமையைத் தானே எதிர்க்கிருேம். மாதாவுக்கு மத்தாப்பூ வண்ணச் சேலையா கேட்கிருேம், அன்னையின் ஆடையை, அக்ரமக்காரனே, பிடித்திழுக்கத் துணிகிருயே, ஆகுமா இந்த

அக்ரமம் என்றல்லவா கேட்கிறோம். உரிமையைக்கேட்கிறோம் உபகாரம் அல்ல. இழந்ததைக் கேட்கிறோம், இரவல்பொருள் அல்ல; எம்மிடமிருந்து பறித்துக் கொண்டதைக் கேட்கிறோம் பிச்சை அல்ல; இந்த மூலக் கருத்தை உணரா முன்னம், வடவரின் கொட்டம் அடக்கப்படுவது முடியாத காரியமாகும். தம்பி! இந்த மூலக் கருத்தைத்தான் உன் துணைகொண்டு, நமது கழகம் நாட்டிலே பரப்பிக்கொண்டு வருகிறது. பளிச்செனத் தெரியாவிட்டாலும், விடிவெள்ளியின் வரவுக்கான வண்ணம், மெல்லிய அளவிலே தெரியத்தான் செய்கிறது.

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் வகுப்புவாதியா என்று கேட்டுப்பார் காங்கிரசாரை? பகைப்புயலால் பதவி ஆட்டம் கொடுத்தபோது, அதைக் காத்திட முடியாமற் போய்விட்ட பரிதாபத்துக்குரிய பெரியவர் என்று வேண்டுமானால் கூறுவார்கள்—அவரை வகுப்பு வாதி, பிளவு மனப்பான்மையினர் என்று காங்கிரசாரே கூற மாட்டார்கள். ரொம்ப பொறுமைசாலிகூட அவர். அதுமட்டுமல்ல, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று கருதுபவர். இல்லையானால், தம்பி, நாடாண்ட அந்த நல்லவர், முப்பதாண்டுகளுக்கு மேலாக மக்கள் தொண்டு புரிந்து உரம் பெற்றவர், இப்போது, ஒரு பள்ளிக்கூடம், குருகுலம் நடத்தினால் போதும், ஏதோ கண்ணைப் பறித்த கடவுள் இந்தக் கோலாவது கொடுத்தாரே என்ற முறையில், முதலமைச்சர் பதவி போனால் போகட்டும், ஏதோ குருகுல அதிபர் எனும் நிலையாவது கிடைக்கட்டும், என்று திருப்தி அடைவாரா? அவ்வளவு நல்லவராலேயே, வடநாடு நடந்து கொள்ளும் போக்கும், தென்னாடு புறக்கணிக்கப்படும் தன்மையும் கண்டு, சகித்துக் கொள்ள முடியவில்லை.

நம் ராஜ்யத்தில் எவ்வளவு வரிபோட முடியுமோ அந்த அளவுக்குப் போட்டாகிவிட்டது.

மத்ய சர்க்காரிடமிருந்து கிடைப்பது அதிகமாக இல்லை.

மத்ய சர்க்காரிடமிருந்து உதவி வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்பது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் குறைவு, தலைவிதி என்று நினைத்துக்கொண்டு, நாம் சும்மா இருந்து விடுகிறோம்.

மத்ய சர்க்காரிடம் இதை வற்புறுத்த வேண்டும்.

கட்சிச் சார்பில்லாமல் போரிடவேண்டும்—அழுகிற பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும். ஆகையினாலே தமிழ் நாட்டு மக்கள் அதிகக் கூச்சல் போடவேண்டும். அப்போது தான் ஏதாவது கிடைக்கும்.

நமது மந்திரிகள் மத்ய சர்க்காரிடம் சண்டை பிடித்து வெற்றி காண வேண்டும்.

ஆகஸ்ட்டு 23-ல், மேல் சபையில் பேசுகிறார் இதுபோல!

அழுகிற பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும் என்கிறார்! அழுகிற குழந்தைக்கு வாழைப்பழம் என்றோர் பழமொழி தெரியுமல்லவா தம்பி, அதாவது கிடைக்காதா என்று ஏங்கு கிறார் சுப்மரணியனார்.

''ஐந்து கண்ணன் பிடித்துக் கொள்வான்'' என்று மிரட்டுவது போல, ஐந்தாண்டுத் திட்டம் என்று டில்லி கூறி விடுகிறது!

இங்கே குழந்தை அழுகிறது—குடல் வற்றிப்போகி றது —அல்லது மிரட்டி அடக்கப்படுகிறது. அங்கே? வடக்கே?

வடக்காவது, தெற்காவது, எல்லா இடத்துக்கும் வறுமை பொதுவாகத்தான் இருக்கிறது என்று பொது உடைமை பேசு கிறார்களல்லவா, அவர்களின் முகத்தில் அறைவதுபோல, சர்க்கார் இலாகாவின் புள்ளி விவரமே பேசுகிறது. சராசரி வருமானம் தலைக்கு, வடக்கே 600—தெற்கே 300.

புள்ளி விவரங்கள்தான் பொது உடைமையருக்குப் பூஜா மாடப் பொருளாம். இதற்கு என்ன சொல்கிறார்கள், (0) வடக்கே—300 தெற்கே? வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்று சொல்லும்போது எல்லாத் திககுகளுக்கும் தம்மை காவலராக்கிக் கொண்டு விட்டதாக மனப்பால் குடிக் கும். 'மார்க்சால் மன்றம் ஏறியோர்' பேசுகிறார்கள், கேலி யுடன். வடக்காவது, தெற்காவது என்று.

600—300—இதற்கு என்ன விளக்கமளிக்கிறார்கள், 600 அங்கே. 300 இங்கே! என்றால் என்ன பொருள்?

மூன்று வேளை உணவு அங்கே; பகல் பட்டினி அல்லது இராப் பட்டினி, இங்கே. மானம் காப்பாற்றப்படும் அளவு ஆடை அங்கே, இங்கே அரை ஆடை. வடக்கு வாழ்கிறது, வளருகிறது—தெற்கு தேய்கிறது. தேயும் தெற்கில் இந்த 'மேதைகள்' வேறு மேய்கிறார்கள்.

பொதுப்படையான புள்ளி விவரம் போதாது என்று, போக்கை மாற்றிக்கொள்வதற்கு ஒரு மேலிடம் பார்த்துக் கிடக்கும் அந்த மேதைகள், கூறுவரேல், தம்பி, இதோ, விளக்கமான மற்றோர் புள்ளி விவரம், இதுவும் சர்க்கார் தருவதுதான், எடுத்துக்காட்டு.

விவசாயிக்கு சென்னையில் நாளொன்றுக்குக் கிடைக்கும் ஊதியம், சராசரி, ஆடவருக்கு 1—4—0, பெண்களுக்கு 0—12—0

பெப்சுவில் ஆடவருக்கு 2—8—0; பெண்ணுக்கு 1—8—0. மேற்கு வங்கத்தில் ஆடவருக்கு 1 12 0; பெண்டிருக்கு 1—4—0.

கொத்துவேலை கொல்லன்வேலை போன்ற வகைகளில் ஈடுபட்டவர்களுக்கு, இங்கு, 2 ரூபாயிலிருந்து 3 ரூபாய் வரையில் கிடைக்கிறது.


பெப்சுவில் நாலு முதல் ஐந்து வரையில் கிடைக்கிறது.

வடக்கு ஆதிக்கம் செலுத்துவதால் வந்துற்ற அவதியை விளக்க, இந்தப் புள்ளிவிவரம் போதாதா? போதும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்காதவருக்கு. நாட்டுப் பற்றினை இழந்து சோற்றுத் துருத்தியாவது கேவலம் என்ற உணர்ச்சிகொண்ட அன்பர்களுக்கு எம்மிடம் என்ன இருக்கிறது தெரியுமா, சக்கரம்—சம்மட்டி என்று 'விருதுகளை'க் காட்டியே வாழ்ந்துவிடலாம் என்று எண்ணிக் கிடப்பவர்களுக்கு, புள்ளி விவரம் மட்டும்போதாது, தம்பி, பன்னிப் பன்னிச் சொல்லியாகவேண்டும், பள்ளிச் சிறுமிகள் பாடிக் காட்டினார்களாமே கவர்னருக்கு, அதுபோலப் பாடியும் காட்டவேண்டாம், நாடகம் கூடத்தான். எல்லாம் எதற்கு?

எங்கள் நாடு
எழில் பொங்கும் நாடு
இனி எவர்க்கும் அடிமை அல்ல
எமக்கது சொந்த நாடு!
திராவிட நாடு!
திராவிடர்க்கே!

என்ற எழுச்சிப் பண்பாடி, தாயகத்தின் தளைகளைப் போக்கி, தன்னரசு காணத்தான். தம்பி, இத்தகைய உன்னதமான பணியாற்றும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது பற்றி எண்ணும்போது புத்தார்வம் பிறக்கிறதல்லவா?

அன்புள்ள,



18—9—1955

# கண்ணீரும் பன்னீரும்

*நேருவின் வருகைச் செலவு—வரவேற்பும் உபசாரமும்*
*தஞ்சை—திருச்சி—புயல் கொடுமை*

தம்பி,

கோட்டைமீது, கொடி மரத்துக்குப் பக்கத்தில் இருந்து கொண்டு பேசப்போகிருர் நேரு பண்டிதர், சென்னையில்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி மைதானத்திலே உள்ள மேடுபள்ளங்களைச் சமனுக்கி, பாதையைச் செப்பனிடு கிருர்கள், அங்கு பண்டிதர் பேசப்போகிருர்.

பண்டிதர் பவனிவர இருக்கிற 'ராஜபாட்டை'யைப் புதுப்பிக்கிருர்கள்—பல ஆயிரம் செலவு!!

பண்டிதர் செல்ல இருக்கும் திருச்சி, குடந்தை, மாய வரம், காரைக்கால், புதுவை, வேலூர் போன்ற ஒவ்வோ ரிடத்திலும் இதுபோன்ற ஏற்பாடுகள், எழிலூட்ட, இன்பம் காட்ட எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. கோகிலவாணி குரலும் குழலும் இழைந்து, ஊனும் உயிரும் உருகத்தக்க வகையிலே இசை அளிக்க,என்னென்ன பாடல்களை அளிக்க லாம்,

"எனது உள்ளமே, நிறைந்த தின்ப வெள்ளமே!"

"கண்டதுண்டோ கண்ணன்போல்!"

"மாலைப் பொழுதினிலே..."

"அழைத்துவா, போடி!"

இப்படிப் பல உண்டே, எதைப்பாடுவது. இந்தியாவின் முடிசூடா மன்னன் அவையில் என்று எண்ணி எண்ணி, இராத்தூக்கமிழந்து, அந்நாளின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கக் கூடும்.

அமைச்சர்கள் புதிய கதர்ச் சட்டைகள் தைத்துக்கொள் கிருர்களாம்!

போலீசும் பட்டாளமும், பவனி, பரணி, இரண்டுக்குமே தக்க ஏற்பாடுகளைக் கவனித்துக்கொள்ளும் காரியத்திலே,மும் முரமாக ஈடுபட்டுள்ளன.

காஞ்சிபுரத்தில் மட்டும் பண்டிதரின் பவனி பாங்கான முறையில் அமையவேண்டும் என்பதற்காக ஏறத்தாழ முப்பதினுயிரம் ரூபாய் செலவிடத் திட்டம் என்கிருர்கள்.

ஒரு தலைவரின் வருகைக்காக இவ்வளவு ஆர்ப்பாட்டமா, இத்துணைப் பெருஞ் செலவா, இருண்ட தெருக்களும், நாற்ற மடிக்கும் சேரிகளும் இருக்க, அவைகளைச் செப்பனிட்டு ஒளி தர முன்வராத ஆட்சியாளர்கள், பண்டிதரின் பவனிக்காகப் பாதைகளைச் செப்பனிடுவதற்கும் எழிலளிப்பதற்கும் இவ்வ ளவு பெரும்செலவு செய்யத்தான் வேண்டுமா? இல்லாமை யும், போதாமையும் நெளியும் நாட்டிலேயா இப்படி? பாலின்றி அழும் பச்சிளங் குழந்தையைக் கதறக் கதறத் தொட்டிலில் கிடத்திவிட்டு, பன்னீரில் குளித்திடப் பளிங்கா லான திருக்குளம் செல்லும் தாய், உண்டா?—என்றெல்லாம் கேட்டுப் பண்டிதருக்குப் அளிக்கப்படும் ராஜோபசாரத்தின் பொருட்டுப் பெருந்தொகை செலவிடப்படுவதை நான் கண்டிக்கவில்லை! பண்டிதருக்கு வைபவம் நடத்தும் சாக்கி லாவது, இதுவரை ஏறெடுத்துப் பாராமலிருந்த பாதைகளைச் செப்பனிடவும் பாங்கு அளிக்கவும் முன்வந்தனரே, என்று மகிழவும் செய்கிறேன்.

'ஏன் இவ்வளவு செலவு?' என்று கேட்டால், தம்பி! காங்கிரஸ்காரர்கள் கடும் கோபம் காட்டி, இங்குள்ள பாதை களைச் செப்பனிட்டோம், பண்டிதரின் பெட்டிக்கா பணம் போய்ச் சேருகிறது, நமது நகர்களின் சீருக்குத்தானே செல விடப்படுகிறது, அறிவிலிகாள்! இதனையுமா அறிந்தீர் இல்லை, என்ன மதியற்ற தன்மை! என்று கூறிக் கண்டிப்பர்.

வெள்ளைக்கார ஆட்சிக் காலத்தின்போது, கவர்னர், வைசிராய், ஆகியோர், இதுபோல 'விஜயம்' செய்வர். அப் போதெல்லாம், இதுபோலத்தான் பெரும் பணம் செலவிட்டு, பூசி மெழுகியும் புதுக் கோலம் காட்டியும்,பாதைகள் அமைத் தும், பாங்கினைச் சமைத்தும் காட்டுவர். திருவிழாக்கோலம் எழும்! அந்தச் சமயத்திலெல்லாம், கிளர்ச்சிக்காரர்களாக இருந்த காங்கிரஸ்காரர்கள்,

ஆடம்பரத்தைக் கண்டீரா?
அக்கிரமத்தைக் கேளீரோ?
கவர்னர் வருகிருனும் பணம் பாழாகிறது!
பரங்கி வருகிருன், பாதையைச் செப்பனிடுகிருர்கள்.
ஒரு தனி மனிதன் விஜயத்துக்குப் பணம் தண்ணீர் பட்ட பாடாகிறது, தர்மமா! கேட்பார் இல்லையா?
நம்மைப்போன்ற மனிதன், தேவனல்ல! அவன் வருகிருன் என்றதும், ஏன் இந்தப் பரபரப்பு, எதற்காகப் படாடோபம்!

பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடும் நாட்டிலே, பவனியாம, பவனி! வெட்கமில்லையா! வேதனையா யில்லையா! விசேஷ ரயிலாம்! பிரத்யேகப் பாதையாம்! அலங்கார மேடையாம்! போலீஸ் அணிவகுப்பாம்! எவ்வளவு ஆடம்பரம் பார்த்தீர்களா! ஏழையின் பணம் பாழாகும் விதத்தைக் கண்டீர்களா!

ஏழை எளியவர்கொட்டுவது கண்ணீர், ஏய்த்துப் பிழைப்பவன் குளித்திடப் பன்னீர்! ஏனென்று கேட்டிட வீரர் இல்லையா, விவேகி இல்லையா, தீரர் இல்லையா, ஆண் மகன் இல்லையா? என்றெல்லாம் சிலர் முழக்கமிட்டனர், முணு முணுத்தனர் பலர், பத்திபுத்தியாக எழுதித் தள்ளினர் சிலர் பாமர மக்கள் பதைத்தனர், பதறினர், பணம் பாழாகிறது! பணம் பாழாகிறது!! என்று கொதித்தெழுந்து கூறினர்.

கவர்னர், வைசிராய் ஆகியோரின் 'விஜய'த்தைச் சாக்காகக்கொண்டு, நமது நகரங்களைத்தானே அழகுபடுத்துகிறார்கள், நமது பாதைகளைத்தானே செப்பனிடுகிறார்கள், இது நமக்கு மறைமுகமாகக் கிடைக்கும் நன்மைதானே, என்று அப்போது வாதாட, தேசியவாதிகளின் மனம் இடம் தரவில்லை!

இப்போது நேரு பண்டிதரின் பவனி, நித்திய நிகழ்ச்சியாக இருக்கிறது.

பிரத்யேக விமானம்! ஸ்பெஷல் இரயில்! ஸ்பெஷல் கார்!

மக்களைக் காணமட்டுமல்ல, மலை உச்சி ஏறி மகிழ, மலர்த் தோட்டம் கண்டு இன்புற, அலங்காரப் படகு மூலம் ஆறுகளை கடந்து ஆனந்தம்கொள்ள, கிராமிய நடனம்கண்டு களிப்படைய, குகைச் சித்திரங்களைக் கண்டு வியந்திட, கோயிற் சிற்பங்களைக் கண்டு ஆச்சரியப்பட, கொலு மண்டபங்களைக் காண, கோட்டைகளின் மீதேறிக் காட்சி தர, கோலாகல வரவேற்பு வைபவங்களில் கலந்துகொள்ள—இன்னோரன்னவற்றுக்கெல்லாம், நேரு பண்டிதருக்கு நேரம் கிடைக்கிறது. இவர் இத்தகைய காட்சிகளைக் கண்டு களித்திடும் ஏற்பாடுகளைச் செய்வனே செய்துதர ஏற்படும் செலவு பெரும் பாரமாகிறது—எனினும், எற்றுக்கு இந்த ஆடம்பர ஆரவாரம், பயனற்ற படாடோபம், பாமரரை வஞ்சிக்கும் பகட்டு, பணம் பாழாகும் விழாக்கள், என்று எண்ண மறுக்கிறார்கள்; துணிந்து எவரேனும் கேட்டாலோ, ஏடா! மூடா! என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்? எங்கள் நேருவுக்கு இதுவும் செய்வோம், இதற்கு மேலும் செய்வோம்! என்று கூறி மிரட்டுகிறார்கள்.

நேருவுக்காக நடத்தப்படும் பவனிகள், வைபவங்கள், வரவேற்புகள், கொண்டாட்டங்கள், கோலாகலங்கள்போன்ற வைகள், வெள்ளைக்காரன் காலம் தொட்டு இருந்து வருகிற, ஏகாதிபத்திய முறையாகும்! அன்று ஏகாதிபத்திய முறையினைக் கண்டித்தவர்கள், இன்று அதே முறையைக் கையாண்டு, களிப்பும் பெருமையும் அடைகிருர்கள். அன்றும் இன்றும், ஏழை கண்ணீர் வடித்த வண்ணமே இருக்கிருன்!

தம்பி, ஒரு கதை உண்டு. பரம ஏழையாக இருந்த ஒருவன், தேவாலயத்தின் அருகே பாதையில் நடந்து, பிச்சை எடுத்துக்கொண்டிருந்தாஞம்! கந்தல் ஆடை, கையில் திரு ஓடு, கண்ணில் காமாலை, கைகால்களில் புண்-இந்தக் கோலத்தில். ஆண்டவனின் அடிபணிந்து அர்ச்சித்து அபிஷேக ஆராதனைகள் செய்வித்து அருளைப் பெறுவதற்காகப் பிரபுக்கள் பட்டுடை அணிந்து, பளபளக்கும் அணி பணி பூண்டு, பொன்னவிர் மேனியரோடு வண்டி வாகனங்களில் செல்வர்; இதைக் கண்ட பிச்சைக்காரன், மனம் நொந்து, "ஆண்டவனே! ஏதோ என்னை இல்லாதவனுகவும், இவர்களைச்சீமான்களாகவும் படைத்துவிட்டாய். அதுவே அக்ரமம். அது போதாதென்று, இருவருக்கும் பொதுவாக ஒரு பாதையையும் அமைத்திருக்கிருயே. ஏழைகள் செல்வதற்கு ஒரு பாதை, சீமான்கள் பவனிக்காக மற்ருேர் பாதையாவது அமைத்திருக்கக் கூடாதா? என் கண்ணிலே, இந்தப் பளபளப்பும் மினுமினுப்பும், தகத்தகாயமும் தெரியாமல் இருந்தாலாவது, வேதனை குறையுமே!" என்று சொல்லிக் கொண்டாஞம்.

எப்படியோ, அவன் ஒருபெரும் சீமாஞகிவிட்டான்—பட்டுடை! பரிமளகந்தம்! பல்லக்கு! பாவையர்! எல்லாம் கிடைத்துவிட்ட நிலை! பல்லக்கில் செல்கிருன், பரம ஏழையாக இருந்தவன், 'பரம்பொருளின்' அருள் பெற! பாதையிலே, பஞ்சை பராரி, ஏழை, நடைப்பிணம், கண்டான்! கண்களை இறுக மூடிக்கொண்டு, கலக்கத்துடன், "கடவுளே! இதென்ன கொடுமை? ஏன் இப்படிபட்ட 'கோர' மான காட்சி என் கண்ணில் படும்படி செய்கிருய்! நான் என்ன குற்றம் இழைத்தேன்! இறைவா! இந்த ஜென்மங்கள் எமது கண்களிலே தெரிந்து இதயத்தைத் தாக்காதிருக்கும் வண்ணம், இதுகளுக்கென்று ஒரு தனிப் பாதையும், உன் அருளைப் பெற்ற எமக்கென்று ஒரு தனிப் பாதையும், அமைத்துத்தரக் கூடாதா!" என்று இறைஞ்சிஞஞம்.

பஞ்சை பிரபுவானதும், பஞ்சைகளைப் பார்ப்பதும் வேதனை என்று எண்ணுகிருன்—அதற்காக ஆண்டவனிடம் கோபித்துக்கொள்கிருன்!

பஞ்சை பிரபுவர்னதும் அவன் மனதிலே எத்தகைய நஞ்சு நெளிகிறது பார், தம்பி!

காங்கிரஸ்காரர்கள், தேசீயத் திருக்கோயிலிலே பூஜை நடாத்திய காலம் தீர்ந்துவிட்டது; இப்போது அவர்கள் பவனி வரும் பிரபுக்களாகி விட்டனர்—நெஞ்சமெலாம் நஞ்சாகிவிட்டது—என் செய்வது?

வஞ்சியர் பாடி ஆடி மகிழ்வூட்ட, சீமான்கள் பூச்சக்கரக் குடை பிடிக்க, ஆளவந்தார்கள் சாமரசம் வீச, வைபவங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன! உற்சவம் நடத்துகிறார்கள். உபதேசம் கிடைக்கிறது!! ஊர் மக்களின் வறுமையும் வேதனையும், எப்போதும்போலத்தான் இருந்து வருகிறது!!

தஞ்சை திருச்சி மாவட்டங்களிலே, தம்பி, பெரும் புயலடித்து படுநாசம் விளைந்ததே, நினைவிலிருக்கிறதா? நெற் களஞ்சியம், பொய்யாத பொன்னியால் பாலூட்டப்பட்டு வளரும் தஞ்சை. அங்கு ஊரெலாம் வெள்ளக்காடாகி, பெருமரங்கள் சாய்ந்து,பேய்க்காற்றால்ஏழைகள் இருப்பிடங்களெல்லாம், பிய்த்தெறியப்பட்டு, பெருஞ்சேதம் விளைந்த சமயம். அந்த நேரத்தில், பண்டிதர் வந்தார்! 'வாரீர் தலைவரே! எமக்கு வந்துற்ற அவதியைக் காணீர் பண்டிதரே! பூந்தோட்டம் அழிந்து கிடக்கும் கொடுமையைக் காணீர்! பொன்னியின் செல்வர்கள் புலம்பிக் கிடக்கும் கோரத்தைப் பாரீர்! கண்ணீர் துடைத்திடுவீர்! கஷ்டத்தைப் போக்கிடுவீர்! காவலரே! வாரீர், வாரீர்! வேதனை குறையும், நம்பிக்கை மலரும். ஒரு நல்ல வார்த்தை, சிறிதளவு ஆறுதல்மொழி கூறவாரீர்! புயலே! கடலே! பேய்க்காற்றே! பெருவெள்ளமே! எம்மை அழித்திடக் கிளம்பினீர்! அழிவையும் ஏவினீர்! எனினும், அஞ்சற்க! அஞ்சற்க! உமக்கு வந்துற்ற இன்னலைத் துடைத்திடுவேன்! இடுக்கண் வருங்கால் நகுக! அழிவை ஒழித்திடுவேன், அல்லலைத் துடைத்திடுவேன்! என்று எமக்கு ஆறுதலளித்திட எமது அருமைத் தலைவர், நேரு பண்டிதர் வருகிறார், என்று கூறி, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, நம்பிக்கை பெறுவோம்! வருக பண்டிதரே! வருக! எம்மை வாழ்விக்க வந்த பெம்மானே வருக, ஈடில்லாத் தலைவரே! இணையில்லா வீரரே! வருக! வருக!' என்று அழைத்தனர்.

நேரு பண்டிதர் வந்தார்—தென்னகத்துக்கு!

தஞ்சை தலைவிரிகோலமாகக் கிடக்கிறது. பண்டிதரோ நேரே, சிந்தைஅணிஒவ்வொன்றும்சிலிர்த்திடும் கவர்ச்சியூட்டும் கேரளம் சென்றார். குன்றின்மீதேறி, பளிங்குமாளிகையில் அமர்ந்து, அங்குள்ள அடவியில், கரியும் கரியும்களியாட்டம் நடாத்திடும் காட்சியை,வேங்கைசீறி வேழத்தைத் தாக்

குவதை, புலிக்கு அஞ்சிப் புள்ளிமான்கள் சிட்டாகிப் பறப்பதை, காட்டெருமைக் கூட்டம் பெருமரங்களைச் சாய்ப்பதை, வர்ணஜாலமிக்க விந்தைப் பறவைகள் விதவிதமான ஒலி கிளப்பி மகிழ்வதை, இந்த "ஆரண்ய" அழகினைக் கண்டு அக மகிழ்ந்திருந்தார்! திருவிதாங்கூர் மன்னரின் பிரத்யேக விருந்தினர்!

கேரள நாடு! மன்னரின் விருந்தினர்! குன்றின்மீது மாளிகை!! இன்பத்தேன் பாயாதிருக்குமோ!! இதைக் காண வந்த நேருவை, ஐயோ! அப்பா! அம்மா! ஐயகோ! என்று தஞ்சை அழைத்தால், வருவாரா? வரவில்லை! புயல் தஞ்சைப் பூங்காவை அழித்த போது ஏற்பட்ட வேதனையை விட அதிகமாகத்தான் வேதனை, நேரு பண்டிதர் அந்தச் சமயத்தில் 'ஆரண்யரசம்' பருகிய சேதி கேட்டவர்களுக்கு! வெள்ளைக்காரன், இதுபோலச் செய்யத் துணியவில்லை. செய்திருந்தால், ஆயிரம் ஆயிரம் மேடைகள் அதிர்ந்துவிடும்! நேரு செய்தார்—ரோமாபுரி தீப்பிடித்து எரியும்போது நீரோ மன்னன் யாழ் வாசித்து மகிழ்ந்தான் என்பார்களே, அது போல!

அண்ணனுக்கு நானென்ன மட்டமா! என்று கேட்பது போல, விஜயலட்சுமி அம்மையாரும், அவர் குடும்ப அலங்காரவதிகளுடன், சீர்கெட்டுப் பேர் கெட்டு, ஊர்விட்டு ஊர் ஓடி சிரமப்பட்டுச் சிதையும் தமிழர்களை, பிடரியில் கால் வைத்து உதைத்துத் தள்ளிடும் போக்கில், கொத்தலாவலை சர்க்கார் நடந்து கொண்ட நேரமாகப் பார்த்து, விருந்து வைபவத்தில் கொண்டாட்டமாகக் கலந்துகொண்டார்; குமரிகளோ, கடையும் இடையும், நடையும் உடையும், மேனாட்டு மங்கையரை வெட்கிடச் செய்கிறது பார் என்று கூறுவதுபோல, கோலம் காட்டி, ஆங்கிலமுறை நடனமாடி, அகமகிழ்ந்தனர்!!

வெளிப்படையாக, வெட்கமின்றி, யார் கேட்கமுடியும் என்ற துணிவுடன்தான், வடநாட்டு வன்கணாளர்கள், 'தர்பார்' நடத்துகிறார்கள்! வாயடைத்தும், கைகட்டியும் நிற்பதுதான் தேசீயம் என்று கருதப்படுகிறது—ஆகுமா இத்தகைய அக்ரமம் என்று கேட்கத் துணிபவரையோ, தங்கள் கோபப் பார்வையாலேயே சுட்டுச் சாம்பலாக்கி விடலாம் என்று எண்ணுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள்!

கோட்டைமீது ஏறி, கவர்னரும் முதல் மந்திரியும் புடை சூழ அமர்ந்து, நேரு பண்டிதர் பேசப் போகிறார்.

என்ன பேசுவார்! பஞ்சசீலம், பாரதத்தின் புகழ் பாரெலாம் பரவிடும் பெருமை, உழைப்பின் மேன்மை, கோவாக் கொடுமை, கொரியாவில் நமது கடமை, ஆப்பிரிக்க சர்க்

காரின் மடைமை, ரஷிய உபசாரத்தின் இனிமை,இவைபற்றி எல்லாம் பேசப் போகிறார்! ஏழ்மை, அறியாமை, மார்க்கத் துறையிலே உள்ள மடைமை, திராவிடத்துக்கு இழைக்கப் பட்டுள்ள கொடுமை இவைபற்றிப் பேசிட முன்வாரார்— இவை பற்றிப் பேசுவோர்மீது சினம் கொட்டத் தவறமாட் டார்!

சிறுபிள்ளைத்தனம்
பைத்யக்காரர்கள்
அர்த்தமற்ற ஆபாசம்

என்றெல்லாம் ஏசுவார்! எதிர்ப்புகளை அழித்தொழிப் போம் என்று எக்காளமிடுவார்!

பண்டிதரைக் காணச் செல்லும் பெருங்கூட்டமும்,அவருக் குப் பாரிலே கிடைத்திடும் புகழ் மாலை, அவருக்காகப் பிற நாட்டார் நடத்திய விருந்துகள், வைபவங்கள், அறுபதைத் தாண்டியவர் இருபதுவயது வாலிபர் என உற்சாகமாகக் காணப்படும் காட்சி, அவருடைய மேனியிலே தெரியும் மினு மினுப்பு, கண்களிலே உள்ள குறுகுறுப்பு, ஆகியவை பற்றிப் பேசி மகிழ்வர்—அவரிடம் தான் இந்திய பூபாகம் எட்டு ஆண்டுகளாக ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. எனவே மக்க ளின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் பொறுப்பாளர் அவரே! அந் நிலையில் உள்ளவர்,இவ்வளவுகவர்ச்சி பெற்றவராக இருந்தும் மக்களைச் சொக்கிடச் செய்யவும் பிற அரசுகளின் நேசத்தைப் பெறவுமான திறமை இருந்தும், அவருக்கு, எதிர்ப்பு என்பது உருவான முறையில்எங்கும் இல்லாதிருக்கும் நிலையில்,நாட்டி னுக்கு எந்த அளவுக்கு வாழ்வளித்திருக்கிறார் – வறுமையை ஓட்டிட,வாட்டத்தைப் போக்கிட,அறியாமையை அகற்றிட, இல்லாமையை ஒழித்திட என்னென்ன காரியங்களில் ஈடுபட் டார், என்ன சாதித்துள்ளார் என்பது பற்றி, எண்ணிடப் போவதில்லை – காட்சியில் சொக்கி நிற்பர்! மறுக்க முடியாத உண்மை ஒன்று இருந்திடக் காண்கிறோம்—காந்தியாருக்குப் பிறகு, பாமர மக்கள், நேரு பண்டிதரிடம்தான், அளவற்ற பாசம் கொண்டுள்ளனர். இந்த அளவுக்கு. பாமரரின் பாசத் தைப் பெற்றுள்ள தலைவர்கள்,இன்று இங்கும் சரி, வெளிநாடு களிலேயும் சரி,அதிகம் பேர் கிடையாது!நேரு பண்டிதரைக் காணும்போது, உவகை கொண்டு நமது மக்கள்முகமலர்ச்சியு டன்அவரை வரவேற்கத் திரண்டிடுவதுபோல,ஈடனுக்கோ, ஐசனவருக்கோ,அவர் தம் நாட்டிலே உண்டா என்பதுகூடச் சந்தேகம் தான். திறந்த காரில் நின்ற வண்ணம் தெருவின் இருமருங்கிலும் ஆர்வத்துடன் ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் முதியவரும் சிறுரும் அணிவகுத்து நிற்கும் காட் சியைக்கண்டு புன்னகைகாட்டியும்பூச்செண்டுவீசியும், நேரு

பவனி வருவதுபோல ஈடனும் பிறரும் பவனி வருவதில்லை. அந்த நாடுகளிலெல்லாம் மக்கள், உற்சவம் கொண்டாடும் கட்டத்தைக் கடந்து விட்டனர்; இங்கு உற்சவம் விமரிசையாக நடைபெற்ற வண்ணம் இருக்கிறது. பல திருவிழாக்களிலே, நேரு பவனியும் ஒன்ருகக் கருதப்பட்டு, விழாக் காட்சிகளிலே கவர்ச்சி கண்டு, அதோ பார் பொய்க்கால் குதிரை, இதோ பூத நடனம், அதோ கொம்பு ஊதுகிருர்கள், இங்கே பார் கோணங்கி கூத்து, என்று சுட்டிக்காட்டிசிரித்து மகிழ்வதுபோல, அதோ பார் நேரு சிரிக்கிருர், ஆமாம், ஆமாம், எதையோ உற்றுப் பார்க்கிருர், மாலையை வீசுகிருர் பார் மாதர் பக்கமாக, மகள் இந்திரா நேருவின் முகம் மலர்கிறது பார், அதோ அந்த மோடாரில் கேவல்சிங், இது கிளப்வாலா, அந்த ப்யூக்கில் இருப்பவர்தான் காமராஜர் என்று காட்சிகளைக் காட்டி காட்டிப் பேசி மகிழ்கிருர்கள். இவ்வளவு நேசத்தையும் பாசத்தையும், உற்சாகத்தையும்உற்சவத்தையும் பெறுகிற நேரு பண்டிதரால், இதோ வறுமையை ஒழிக்கும் திட்டம், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வழி, புதிய தொழிற்சாலைகள், வாழ்வுக்கு புதிய வசதிகள், தருகிறேன் மகிழ்ச்சி பெறுவீர்!......என்னிடம் இத்துணை அன்பு கொண்ட நண்பர்களே! நம்பிக்கை வைத்திருக்கும் நல்லவர்களே! உங்கள் நல்வாழ்வுக்காக நான் சாதித்துள்ள காரியங்களின் பட்டியலைக் கூறுகிறேன் கேண்மின் என்று எடுத்துக் கூறுகிருரா, கூற முடிகிறதா, கூறும் வழி இருக்கிறதா, என்ருல்? இல்லை, இல்லை, அதுதான் இல்லை. அன்பு சொரிகிருர்கள் மக்கள்; அகமகிழ்கிருர் நேரு. பிறகு அகில உலகச் செய்திகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துக் கூறிவிட்டு, ஆகவே 'ஜெய் இந்து' என்று முழக்கமிடச் சொல்லி விட்டுப் போய்விடுகிருர்—திருவிழாக் கோலம் கலைகிறது, தெருக்களில் எப்போதும் போலத் திகைத்தவன், தத்தளிப்பவன், வாழ்க்கைக்கு வழி தேடி அலைபவன், வறுமையால் வாட்டப்படுபவன்! மாடெனஉழைத்திடும் மனிதஉருவங்கள், வாலிபத்தை வயோதிகமாக்கிக் கொண்ட வறுமையாளர்கள், பிணிகொண்டோர் பிச்சைக்காரர் ஆகியோர் ஊர்ந்து சென்ற வண்ணம் உள்ளனர். கண்ணீர் வற்றிவிடவில்லை; கை பிசைந்து கொள்வது நின்று போவதில்லை. கண்டோம் களித்தோம் நேரு பண்டிதரை, நமக்குற்ற இன்னல் ஒழிந்திடக் கண்டோம், இன்பம் பெருகிடக் கண்டோம், இதனை நமக்கு அளித்திட்ட ஏந்தலைப் போற்றுதும், அவர்ஆட்சியின் மாட்சியைப் போற்றுதும், என்று கூறிட மக்களால் முடியவில்லை!


பாமரரின் நிலைஇதுஎனின், இந்தியப் பேரரசு எந்த முறையில் நடத்தப்பட்டுவருகிறது, எவ்விதமான எதேச்சாதிகாரம்

கொழுந்து விட்டு எரிந்து ஜனநாயக மலரினைக் கருக்கி விடுகிறது? எந்தகைய அடக்கு முறைகள் அவிழ்த்து விடப்பட்டிருக்கிறது, அதன் விளைவாக விடுதலைவேட்கையும் உரிமை ஆர்வமும் கொண்டவர்கள் எவ்வளவு கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்? தீட்டப்படும் திட்டங்களிலே உள்ள தவறுகளை எடுத்துக் காட்டுவோரும், அவை நிறைவேற்றப்படுவதிலே ஏற்படும் ஒழுங்கீனங்களைச் சுட்டிக் காட்டுவோரும் எவ்விதம் அலட்சியப் படுத்தப்படுகிறார்கள், ஆட்சி முறையின் காரணமாக ஏழை மேலும் ஏழை ஆக்கப்படுகிறான்? இலட்சாதிகாரி கோடிஸ்வரனாகிறானே, முறையா, என்றுகேட்போர் மீதுகண்டனம் எப்படி வீசப்படுகிறது என்பனவற்றை அறிந்துகொள்ளும் அளவுக்கு அரசியல் அறிவு படைத்தவர்களோ, நேருவின் பவனியிலே உள்ள கவர்ச்சிக்கும் நாட்டு மக்களுடைய வாழ்வின் முன்னேற்றத்துக்கும் ஒருதொடர்பும் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டுள்ளனர் எனினும் அந்தப் பெருங்கூட்டம், விழாக்கோலம், கவர்ச்சி ஆகியவைகளைக் கண்டதும் திகைப்புற்று, இவ்வளவு மகத்தான செல்வாக்குப் பெற்றிருக்கும் பெருந்தலைவரை, மக்களை மயக்கும சக்தியை இந்த அளவுக்குப் பெற்றுள்ள நேரு பண்டிதரை, அண்டிப் பிழைத்தால்தான் வாழ்வு, எதிர்த்தாலோ, மூலையில் தள்ளப்பட்டு விடுவோம் என்று அஞ்சி, அவர்களும் கோலாகலத்திலே கலந்து கொள்வதே சாலச் சிறந்தது என்று எண்ணி விடுகிறார்கள்! காங்கிரஸ்காரர்களோ, பெருமழை பெய்து, தெருவெல்லாம்தண்ணீர் ஆறெனை ஓடும்போது, பாதையிலேஇருந்த ஆபாசங்கள் அடித்துக்கொண்டு போகப்பட்டுத் தெரு துப்புரவாவது போல, நேருவின் பவனியால் ஏற்படும் உற்சாக வெள்ளம், காங்கிரசாட்சியினால் ஏற்பட்டுள்ள அல்லலை, அவதியை, அதிருப்தியை, அவலட்சணத்தை, எதிர்ப்பை, எரிச்சலை, ஒரே அடியாகத் தள்ளிக் கொண்டு போய்விடும், எங்கும் காங்கிரஸ் கட்சியின், மதிப்பும் செல்வாக்கும் ஓங்கித் தழைத்திடும், மாற்றார் உற்றாராவர் உற்றார் உவகையால் துள்ளிக் குதிப்பர், ஊராளும் முறையினால் ஏற்பட்ட உற்பாதங்களையும் மறந்து மக்கள் காங்கிரசுக்கு ஆதரவு தருவர், அன்பினைச் சொரிவர் என்று எண்ணிக் கொள்கிறார்கள்.

இவர்களின் அச்சத்துக்குக் காரணம், நேருபண்டிதரால் பாமரரைப் பெருமளவுக்குத் திரட்ட முடிவதால், அவருடைய செல்வாக்கை எதிர்த்தால், மக்கள் தம்பால் கசப்படைவர் என்பதுதான். இன்றைய நிலையைத்தான் இவர்கள் எண்ணிப் பார்க்கிறார்களே தவிர, உண்மையை எல்லா மக்களும் உணர்ந்து, நாம் வஞ்சிக்கப்பட்டோம் இம்சிக்கப்பட்டோம் ஏமாற்றப்பட்டோம் என்பதை அறிந்து கொதித்தெழப்

போகும் ஓர் நாள் வந்தே தீரும் என்பதையும், அந்நாளில், எமக்குக் கொடுமைகளும்துரோகமும்இழைக்கப்பட்டபோது, அந்த நேருவுக்குப் பராக்குப் பாடிக்கொண்டும், பல்லக்குச் சுமந்து கொண்டும் இருந்தவர்தானே நீர்! எம்மை இம்சித்த போது அவரிடம் இளித்துக் கிடந்தவரல்லவா நீர்! எமக்குத் துரோகம் இழைக்கப்பட்டபோது அவர்முன் துதிபாடி நின்றீரல்லவா! விளக்கமறியாதாருக்கு விளக்க வேண்டும் என்ற பொறுப்பை மறந்து, கும்பலில் கூடிக் குலவினுல், நமக்கும் சுவைத்திடச் சில கிடைக்கும் என்றுதானே அவர்பின்னேடு சுற்றித் திரிந்தீர் என்று கேட்கப் போகிருர்கள் என்பதை மறந்தேவிடுகிருர்கள். அதனுல்தான், அறிந்ததைக் கூறவும் அச்சப்பட்டுக்கொண்டு 'அடைப்பம்' தாங்கி, அதிலேயே ஆனந்தம் தேடிக்கொள்கிருர்கள். இழைக்கப்படும் கொடுமையை எதிர்த்திடத் துணிவும், மக்களிடம் எடுத்துக்கூறிடும் நெஞ்சு உரமும் கொண்டவர்களின் அளவு குறைவுதான், தம்பி. ஆனுல் அவர்கள் தமது கடமையைக் கலக்கமின்றிச் செய்து கொண்டு வருகிருர்கள். அரசியலில் புதுப் புதுக் காற்ருடிச் சண்டைகளைக் கிளப்பிக் கொண்டு இருப்பதில்லை. நிழலை உருவமெனக் கூறிப் போராட்டம் நடத்துவதில்லை. பிரச்சினை எதற்கும் பரிகாரம் தேடும் முழு உரிமை எமக்கே பிறருக்கு இதிலே பின்னேடி வரத்தான் சலுகை அளிக்கப்படும் என்று பேசிடுவதில்லை. தொடர்ந்து, திராவிடருக்கு இழைக்கப்படும் கொடுமையை, துரோகத்தை, மக்களிடம் எடுத்துக் கூறி, அவர்களின் மனமயக்கத்தைப் போக்கிய வண்ணம் உள்ளனர். தம்பி! அந்த அரும்பணியாற்றிடும் அஞ்சா நெஞ்சினர் கொண்ட கழகத்தில்தான், நானும் நீயும் இருக்கிறோம்.

அன்புள்ள,



25—9—1955

# உலாவும் ஊழலும்!

*எகிப்ட் நாட்டுப் போர்க்கருவி விற்பனை முறையில் ஏமாற்றுதல்—இந்திய அரசின் தொழில்துறை ஊழல்—கணக்காய்வாளர் காட்டும் பல அரசு ஊழல்கள்.*

தம்பி,

ஒரு 'போர்க்களம்' காணலாம், புறப்படு.

காணமட்டுமா! என்ன அண்ணா! இது! என்னை என்ன கட்கம் ஏந்தத் தெரியாதவன், கடும் போருக்கு ஏற்றவனல்ல என்று எண்ணிக்கொண்டாய்? மாற்றான் முன் மண்டியிடும் பரம் பரையினனா? மறத்தமிழனன்றோ! என்றெல்லாம் கேட்டு விடாதே, நான் உன்னை, முடிந்துபோன போர் பற்றிய 'செய்தி'யைக் கேட்கச் சொல்கிறேன்—நீ 'போர் முரசு' கேட்கிறது என்றெண்ணி ஆர்த்தெழுந்துவிடாதே.

ஒரு களம்—இருதரப்புப் படைகள், எதிர் எதிர்!

"துப்பாக்கிகள் தயாரா? தோட்டாக்களைப்பொருத்தி விட்டீர்களா? 'குதிரை'யைச் சரிபார்த்துக் கொண்டாகி விட்டதா? சரி! ஏறு! முன்னேறு! ஏறு, முன்னேறு! தாக்கு! உம், தாமதம் ஏன்? தாக்கு!! சுடு! வேகமாக!"

படைத் தலைவன் இதுபோலக் 'கட்டளை' பிறப்பித்து விட்டான். படைகள், பாய்ந்தன எதிரியை நோக்கி. வேட்டுகள் கிளம்பின! துப்பாக்கிகள், பீரங்கிகள் முழக்கமிட்டன!

எதிரிப்படை வரிசையிலிருந்து, ஏளனச் சிரிப்பொலி கிளம்பிற்று!

வேட்டுகள் கிளம்புகின்றன! தோட்டாக்கள் பறக்கின்றன! துப்பாக்கிகள் முழக்கமிடுகின்றன! படை பாய்ந்து முன்னேறுகிறது! எதிரிப் படையோ, 'கெக்கலி' செய்கிறது, கை கொட்டிச் சிரிக்கிறது!! ஏன் தெரியுமா, தம்பி! துப்பாக்கி சுடுகிறது, ஆனால் ஆளைச் சாகடிக்க மறுக்கிறது! வேட்டுகள் கிளம்பிவேகமாகப்பாய்கின்றன, ஆனால்யாரையும்பிணமாக்க மறுக்கின்றன. *அழிவுக் கருவிகள், 'அஹிம்சா' விரதம்பூண்டு* **விட்டன!** **வாண** வேடிக்கை போன்ற சத்தம் கேட்கிறதே

தவிர, ஆளைக் கொல்லும் 'சக்தி' இல்லை, தோட்டாக்களுக்கு! துப்பாக்கிகள், பார்வை அளவில் நேர்த்தியாகவே உள்ளன! ஆனால் அவைகளை நம்பிக் களத்திலே கடும்போரில் ஈடுபடச் சென்ற படை வீரர்களை, காட்டிக் கொடுத்துவிட்டன! வெடிக்கின்றன, ஆட்களைச் சாகடிக்க மறுக்கின்றன!

தோட்டா இல்லாத துப்பாக்கி என்று கேலி மொழி பேசுவர்! தோட்டாவும் துப்பாக்கியும், பலாத்காரச் செயலிலே ஈடுபட மறுத்திடும் நிலைக்கு' என்ன கூறுவது?

கண்டனர் எதிரிகள்—'வெத்து வேட்டுகளை'த் தாக்கினர் கொன்று குவித்தனர்!

வீரம் இருக்கிறது நிரம்ப, ஆனால், 'வஞ்சகம்' அந்த வீரர்களை, இந்தக் கதிக்கு ஆளாக்கிற்று.

நம்மை நாசமாக்கும் எதிரி, இங்கே இல்லை, களத்தில் இல்லை, அவன் நம் நாட்டிலே இருக்கிறான். அரண்மனையில் அழகிகளின் ஆலிங்கனத்தில் சுகமனுபவித்துக் கொண்டிருக்கிறான். நம்மைக் களம் சென்று கடும் போரிடும்படி கட்டளையிட்ட காவலன், கட்டழகிகளைத் தொட்டிழுத்து—முத்தமிட்டு மகிழ்கிறான்—தொலையட்டும் — இதழ்கொத்தி இன்புறுகிறான் ஒழியட்டும்-கொய்யாக் கனிகளின் கோலாகலத்திலே தன்னை மறந்து கிடக்கிறான்—கிடக்கட்டும் காமாந்தகாரன்—ஆனால் நம்மிடம் அவன் தந்தனுப்பிய போர்க்கருவிகள் இப்படியா இருப்பது! ஆளைச் சாகடிக்க முடியாத ஆயுதமா! வெடிச் சத்தம் கிளம்புகிறது.எதிரியைச்சாகடிக்கும்சக்தி காணோமே! வெத்து வேட்டுகளைக் கொடுத்தா, வெஞ்சமருக்கு நம்மை அனுப்புவது? மாற்றானிடம் காட்டிக் கொடுத்தானே, மன்னவன் என்ற பட்டம் பெற்றுக் கிடக்கும் அந்த மாபாவி! என்று கொதித்துக் கூவினர். களத்தில் பிணமலை! இரத்தமும் கண்ணீரும் பீறிட்டெழுந்த நிலை. வஞ்சகத்தால் வீழ்ந்தோம், எதிரியிடம் ஒரு எத்தனால் காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டோம். சித்திரவதைச் சாவடிக்கு நம்மைத் துரத்திவிட்டு, சிற்றிடையாளுடன் சித்திர மண்டபத்தில் காதல்சிந்துபாடிக் கொண்டிருக்கிறான், மாமிசமலை.

தாயகமே! உன் பொருட்டு எதையும் இழக்கத் தயங்கோம். இன்னுயிர் தரத் தயார். ஆனால் எமது உயிர் பிரியு முன், தாய் நாடே! உன்னை இழிவு படுத்தக் கிளம்பும் எதிரியின், உயிரைக் குடித்திட வேண்டாமா; போரிட்டு மடியத் தயார், அன்னையே! போரிட்டு மடியச் சித்தமாக இருக்கிறோம், ஆனால், இதோ பாரும், எமக்குத் தரப்பட்டுள்ள போர்க்கருவிகளை! வெத்து வேட்டுகளை! எதிரியிடம் எங்களைக் காட்டிக் கொடுக்கும் கருவிகளை!

வீரம் இருக்கிறது; பிறந்த நாட்டைக் காப்பாற்ற! ஆனால் ஒரு வேந்தன் இருக்கிறானே, எங்களை எதிரியிடம் காட்டிக் கொடுக்க. படைக்கலத்தைப் பார். தாயே! பார், பஞ்சை நாடு, பராரி நாடு, போர்க்கருவிபெற வழியில்லை என்றுகூறட்டும். கரங்களே துப்பாக்கி—பாய்ந்து சென்று, மாண்டவர் போக, மீதமுள்ளோர் எதிரி மீது பாய்ந்து, குரல் வளையை நெரித்தே கொன்று போடுகிறோம். ஆனால், அரசன் செய்ததென்ன, அருமையான படைக்கலங்கள் என்று கூறி, இந்த 'ஓட்டை ஒடிசல்களை', 'வெத்து வேட்டுகளை'க் கொடுத்து, களம் அனுப்பினானே!

தாயகமே! நீயே கூறு, யார் நம் எதிரி? எதிரே? இருந்து போரிடும் படையா, எழில் அரண்மனையில் இருந்துகொண்டு, எம்மைக் காட்டிக் கொடுக்கிறானே அந்த வேந்தனா? யார், ஒழிக்கப்படவேண்டும்? போரிடும் படையா? முதுகிலே கட்டாரிகொண்டு குத்துவது போன்ற துரோகமிழைத்த அந்தத் தூர்த்தனா? இறந்து படுகிறோம், தாயே! இறந்து படுகிறோம். எதிரியால் கொல்லப்பட்டவர்களாகவல்ல, எம்மை ஆள்வதற்கென்று ஏற்பட்ட எத்தனால் இந்தக்கதிக்குஆளானோம்.

தம்பி! நாடகமேடையானால், இவ்விதமெல்லாம், 'வீரர்கள்' பேசமுடியும்—கொட்டகை அதிரும், பணம் குவியும். இது களம்! ஓட்டை ஒடிசல், வெத்து வேட்டுகள், தொட்டு இழுத்ததும் துண்டாகிப்போகும் கருவிகள்—இப்படிப்பட்ட படைக் கலங்களைக் கொடுத்து, எதிர்த்து வந்த படையுடன் போர் நடாத்தும்படி ஈஜிப்ட் படை அனுப்பப்பட்டது! சித்திரவதைக்கு ஆளாயிற்று! தோல்வி கண்டனர், துயரம் துளைத்தது, வெட்கம் வேலாகக் குத்திற்று!

படைக்குத்தேவையான 'கருவிகளை'ச் சேகரிந்தளிக்கும் பொறுப்பு மன்னனுடைய உரிமைகளில் ஒன்று! மன்னனோ, அவனுடைய "கோப்பை தூக்கிகள்" "குறிப்பறிந்து கோல மயிலினைக்கொண்டு வருவோர்" ஆகியோரிடம் 'ஆயுதம் வாங்கித்தரும்' பணியினை ஒப்படைத்திட, அவர்கள், கொள்ளை அடித்திடும் குணத்தினராதலால், 'வெத்து வேட்டு'களையும் 'ஓட்டைஒடிசல்களையும்' கொண்டு வந்து குவித்து, கொற்றவனிடம் கோடிப் பொன் பெற்றுப் போயினர்! மதியற்ற மன்னன், மக்களின் வரிப்பணத்தால் திரண்ட நிதியைப்பாழாக்கியதுடன், நாட்டின் கண்மணிகளைக் களத்திலே கண்டதுண்டமாகும்படிச் செய்தான்—நாட்டுக்கும் இழி நிலை பிறந்தது!

இத்தாலி நாட்டில், அரசு இழந்து, அரசும் ஈடாகாது என்று கூறத்தக்க எழில் படைத்த காதற் கிழத்தி நாரிமணையும் பிரிந்து, அரண்மனையின் அலங்கோல வாழ்வின் விளைவாகக் கிடைத்த தொங்கு சதை உடனிருந்து குலுங்க, கண்

டோர் உதடசைத்துக் கேலி செய்யப் பரூக் உலவிக் கொண்டிருக்கிருன். பழுதுபட்ட படைக் கலங்களை, விற்ற அந்த 'பரம தயாளர்' எங்கே இருக்கிருர்கள், தெரியுமா?

பாதகம் விளைவித்த பரூக், பட்டமிழந்தான்—காதகர்கள் கெட்டொழிந்தனர்—'ஓட்டை ஒடிசலை' விற்ற அந்தப் படுபாதகர்கள், என்ன ஆயினர்?

கோடிக்கணக்கான பொருள் நஷ்டம் மட்டுமல்ல, ஆயிரக் கணக்கான அரும் உயிர்களைக் குடித்த, அந்தக் கொடியவர்கள், கண்டு பிடிக்கப்பட்டு, நானிலம் காரி உமிழத்தக்க நிலை பெற்றனரா? எங்கே உளர் அந்த எத்தர்கள்? என்ன கதிக்குத் துரத்தப்பட்டனர்? கண்டித்தால் மட்டும் போதாதே அந்தக் கயவர்களை, கடுமையாகத் தண்டிக்கவும் வேண்டுமே! பழுதுபட்ட படைக்கலனை விற்பனை செய்த பாதகர் யார்? எங்கு உளர்? என்று கேட்டுப்பார், தம்பி! காங்கிரஸ் நண்பர்களை! கோபம் பிறக்கும்!

> அனியாயமாக ஆயிரமாயிரம் உயிரைப் பலிவாங்கிய அந்தப் பாதகர்கள், இப்போது! 'பாரத நாட்டிலே' இருக்கிருர்கள், தம்பி!
>
> ''கைதிகளாகவா?'' என்று கேட்கிருய் உன் நெஞ்சில் நேர்மை அவ்வளவு சுரக்கிறது! நேரு மகான், அவர்களைக் 'கைதிகளாக' அல்ல, 'ஆசிரியர்களாக' இங்கு அமர்த்தி வைத்திருக்கிருர்! அக்ரமம், அனியாயம் அடுக்காது—என்றெல்லாம்! என்னைப் பார்த்து முழக்கமிட்டு என்ன பலன், தம்பி; இந்திய சர்க்காரின் ஆதரவில் அரவணைப்பில், அந்த 'ஆயுத கர்த்தாக்கள்' இப்போது இருக்கிருர்கள்.
>
> ஈஜிப்ட் நாட்டுக்கு, 'பழுதுபட்ட' போர்க்கருவிகளை விற்பனை செய்த மகானுபாவர்கள், சுவிட்சர்லாந்து நாட்டுக் கம்பெனியார்.

'பாரத நாட்டு'க்கு, படைக் கருவிகள் தயாரிக்கும்தொழிலகம், சர்க்காரால் அமைக்கப்பட்டு, இதுவரை ஏராளமான பொருளை விழுங்கி இருக்கிறது.

இந்தத் தொழிலகத்தில் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ளவும், ஆயுத உற்பத்திக்கான 'அருங் கலை'யைக் கற்றுத் தரவும், பெரும் ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு அமர்ந்திருப்பவர்கள், இந்த சுவிட்சர்லாந்து கம்பெனியைச் சேர்ந்தவர்கள்.

எந்தக் கம்பெனி, கொள்ளை அடிக்கும் போக்கில், ஈஜிப்ட்டுக்கு பழுதுபட்ட போர்க் கருவிகளை விற்பனை செய்து, அந்த நாட்டுக்குத் துரோகம் விளைவித்ததோ, அதே கம்பெனியினர் தான், இங்கு ஆயுதத் தொழிற்சாலைக்கு ஆசிரியர்கள்.

வழுக்கி விழுந்தவள், 'பத்தினிகள் பள்ளிக்கு' த்தலைமை ஆசிரியை.

எவ்வளவு பொறுப்பற்ற போக்கு! எத்துணை அலட்சிய சுபாவம்!

அக்ரமம் செய்த அந்தக் கம்பெனியாரிடம், ஆயுதம் தயாரிக்கும் தொழில் அமைக்கும் பொறுப்பு ஒப்படைத்தனர்—ஆண்டுகள் உருண்டோடின—இலட்சு இலட்சமாகப் பணம் கரைந்தது-ஆயுதம் உருவாகச் செய்தனரோ? இல்லை ஆயுதம் செய்வதற்கான தொழில் நுட்பத்தை, இங்குள்ளவர்களுக்குக் கற்றுத் தந்தனரோ? அதுவும் இல்லை. என்ன செய்கிறார்கள்? ஊதியம் பெறுகிறார்கள்! உண்டு கொழுக்கிறார்கள்; நேரு சர்க்காருடைய ஏமாளித்தனத்தை எண்ணி எண்ணிக் கேலி செய்து கொண்டிருப்பார்கள். வேறென்ன செய்வர்?

நாம் யார், நமது நடவடிக்கை எத்தகையது என்பதைத் தெரிந்தும், நம்மை அழைத்து வந்தார்களே, இவ்வளவு 'இளித்தவாயர்' இருக்கும்போது, நமக்கென்ன குறை என்று எண்ணிக் கொள்வர்.

> இந்தத் தொழில் அமைப்பு பெருமளவுக்கு நஷ்டம் கொடுத்து விட்டது.
>
> எதிர்பார்த்த தரத்திலோ, அளவிலோ, கருவிகள் உற்பத்தி செய்யப்படவில்லை. தொழில் நுட்பத்தை, இங்குள்ளவர்களுக்குப்போதிக்க, சுவிட்சர்லாந்து நிபுணர்களால் முடியவில்லை.

டில்லி பார்லிமெண்டில் அமைச்சர், வெட்கமின்றி, ஒப்புக் கொள்கிறார்; ஒப்புக்கொண்டு, கூறுகிறார்: இது சகஜம், போகப் போக எல்லாம் சரியாகிவிடும். நஷ்டம், கஷ்டம், இவைகளைப் பார்த்தால் ஆகுமா? இவைகளைத் தாங்கிக்கொள்ளத் தான் வேண்டும்.

தம்பி, தாங்கிக்கொள்ளத்தான் வேண்டுமாம்.

கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டினாலும், இந்த இயந்திரத் தொழில் அமைப்பு சரிப்பட்டு வராது என்று ஸ்காயிப் எனும் பிரிட்டிஷ் நிபுணர் கூறிவிட்டார். இந்த பிரிட்டிஷ் நிபுணரை வரவழைத்து, இந்தத் தொழில் அமைப்புகளைப் பரிசீலனை செய்து கருத்துரை அளிக்கும்படி கேட்டுக் கொண்டது, நேரு சர்க்காரே தான்.

தாங்கிக் கொள்வதாமே தம்பி! எவ்வளவு தாங்கிக் கொள்வது! எத்தனை ஊழல்களை, எத்துணை பொருள் நஷ்டத்தை, எத்தகைய நாற்றங்களை!

தம்பி, செப்டம்பர் 18-இல் புது டில்லியிலிருந்து, பொதுக் கணக்கு கமிட்டி எடுத்துக் காட்டுவதை, சுதேசமித்திரன் வெளியிடுகிறது—படித்துப் பார்.

"அபிவிருத்தி திட்டங்களுக்குப் பணத்தைச் செலவழிக்கும் விஷயத்தில் சர்க்கார் மிகுந்த பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென்று பொதுக் கணக்குக் கமிட்டி தனது யாதாஸ்தில் குறிப்பிட்டிருக்கிறது. பார்லிமெண்டு அனுமதிக்கும் பணத்துக்கு மேல் ஒரு அணுகூட அதிகமாகச் செலவழிக்கக் கூடாதென மந்திரி சபைகளுக்கு மேற்படி கமிட்டி அறிவுறுத்தியிருக்கிறது.

பாகிஸ்தான் கொடுக்க வேண்டிய கடன் சம்பந்தமாக இந்திய சர்க்கார் அந்த நாட்டுடன் உடனே ஒரு ஒப்பந்தத்துக்கு வரவேண்டுமெனக்கமிட்டி தெரிவித்திருக்கிறது(பாகிஸ்தான் இந்தியாவுக்கு 300-கோடி ரூபாய் கொடுக்க வேண்டும்.)

வருமான வரி விஷயமாக சர்க்கார் காட்டியுள்ள சலுகையையும் கமிட்டி கண்டித்திருக்கிறது. அமுக்கி வைக்கப்பட்ட பணம்சம்பந்தமாக சரியான வருமான வரி விதிக்கப்படவில்லையென்றும், விதிக்கப்பட்ட வரியால்கிடைத்தபணம், கிடைக்க வேண்டிய பணத்தில் 15-சதவிகிதமே யென்றும்கமிட்டி அபிப்பிராயம் சொல்லியிருக்கிறது.

பிரிட்டிஷ் கம்பெனி விஷயத்தில் சர்க்கார் கையாண்ட கொள்கையும் கண்டிக்கப்பட்டிருக்கிறது. முன்னாலே தயார் செய்த பகுதிகளைக்கொண்டு வீடு சிருஷ்டிக்கும் முறையைக் கையாளும் மேற்படி கம்பெனி கட்டிய வீடுகள் சாதாரண முறையில் கட்டப்படும் வீடுகளைவிட அதிக விலையாகியிருப்பதைப் பற்றிக் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது.

தேசத்துக்கு புட்டிப்பால் வாங்கி அதனால் சர்க்காருக்கு ஒரு லட்ச ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கிறது. புட்டிப்பால் வாங்கிய அதிகாரிகள்மீது நடவடிக்கையெடுக்கவேண்டுமென கமிட்டி கூறியிருக்கிறது.

வெளிநாடுகளில் இந்தியத் தூதராலயங்களில் இருக்கும் இந்திய அதிகாரிகள், பொய் சர்டிபிகேட் காட்டி அலவன்ஸ் வாங்குவதையும் கமிட்டி தீவிரமாகக் கண்டித்திருக்கிறது.

2 பவுன் முதல் வைத்து ஆரம்பித்த ஒரு உதவாக்கரை கம்பெனியோடு சர்க்கார் உடன்படிக்கை செய்து கொண்டு 17000 பவுன்களை அளித்திருக்கிறார்களென்றும், அதுவும் அந்தக் கம்பெனிக்கு டைரக்டரான ஒருவர் கையெழுத்தின்மேல் பணம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், பணம் வாங்கின தேதியில் தான் அவர் டைரக்டராயிருப்பதாகவும்,இப்படிப் பணம்

கொடுத்திருப்பது கண்டிக்கத்தக்க தென்றும், கமிட்டி கூறுகிறது.

கொள்ளை போகிறது பணம் இவ்வண்ணம்; கோட்டை மீதேறிப் பேச வருகிறார் கோமான்.

நாற்றமடிக்கிறது ஊழல், நாட்டிலே பவனி வருகிறார் நேரு பண்டிதர்.

1—9—55-ல், கணக்கு ஆய்வாளர்கள், ரயில்வேதானியக் கடையில் நிர்வாக ஊழலின் விளைவாக ஆறு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதை எடுத்துக் காட்டினர்.—நேரு என்ன செய்தார்? சோவியத் நாட்டிலே தான் கண்ட சோபிதத்தை எடுத்துரைத்தார்—வாயைப் பிளந்துகொண்டு மக்கள் கேட்டுக் கொண்டிருந்தனர்—ஊழல் நிர்வாகத்தின் பொறுப்பாளர்கள், கண்ணைச் சிமிட்டிக்கொண்டு, புன்னகை செய்தனர்.

தானியம் வாங்கிய விலை 11 கோடி. விற்பனையானது 5 கோடி ரூபாய்க்கு; ஆறு கோடி நஷ்டம்.

ஆறு கோடி நஷ்டமா, அனியாயம், அனியாயம் என்று பேச்சு எழுந்ததும், பண்டிதர், பாரெல்லாம் பஞ்ச சீலம் எனும் கொள்கையை வரவேற்பதுபற்றிப் பேசலானார்.

4000 ரூபாய் பெறுமானமுள்ள ஓட்டை விமானத்தை மெருகு கொடுத்து 1,60,000 ரூபாய்க்கு விற்பனை செய்ததுடன், பழுது பார்த்த செலவு, டைரக்டர் ஊதியம்என்று பல புள்ளிகள் கொடுத்து பெரும் தொகையைப் பெற்றுக் கொண்டது, விமானக் கம்பெனி, சர்க்கார் விமானத் தொழிலை தேசீயமயமாக்கிய போது.

தம்பி, பெரிய விஷயங்களிலே தான் 'கோட்டை' விடுகிறார்கள் என்று எண்ணிக் கொள்ளாதே—மிகமிகச் சாமான்யர்கள்கூட ஏமாறாத விஷயத்திலெல்லாம், 'சர்வதேசப் புகழ் பெற்ற நேரு சர்க்கார்' எளிதாக ஏமாறுகிறது.

குடி இருந்து கொண்டு வாடகை தராமலிருப்பது அக்ரமம்; வாடகை வசூலிக்காமலிருப்பது ஏமாளித்தனம்! அல்லவா?

நேரு சர்க்கார், குடி இல்லாமலே வாடகை செலுத்துகிறது!

இதைக் கண்டிக்க எனக்கு வார்த்தை தெரியவில்லை—காங்கிரஸ் நண்பர்களையே கேட்டுத் தெரிந்துகொள்!

4,60,000 ரூபாய் வாடகை செலுத்தியிருக்கிறது சர்க்காருடைய தபால் தந்தி இலாகா—கல்கத்தாவில் இரண்டு கட்டிடங்களுக்கு.

1948-லிருந்து 1952 வரையில் வாடகை தந்திருக்கிருர்கள்—ஒருநாள் கூட அதிலே வாழவில்லை!


தபால் தந்தி இலாகா அலுவலத்துக்காகத்தான் 'பிரம்மாண்ட'மான இரண்டு கட்டிடங்களை வாடகைக்கு எடுத்தனர்; ஏற்கனவே உள்ள அலுவலக் கட்டிடம் கலகி விட்டதால், புதுப்பித்துக் கட்டத் திட்டமிட்டனர். புதிய கட்டிடம் எழும் வரையில் வாடகைக் கட்டிடம் தேவைஎன்றுஎண்ணி, பெரிய மாளிகைகள் இரண்டை வாடகைக்கு எடுத்து, ஒழுங்காக, வாடகைப்பணம் செலுத்தி வந்தனர்;அவ்விதம்செலுத்திய வாடகைப் பணம் தான் நாலு இலட்சத்து அறுபதினுயிரம். ஆனால் திட்டமிட்டபடி, பழைய கட்டிடத்தை இடிக்கவுமில்லை, வாடகைக் கட்டிடத்துக்கு அலுவலகத்தார் குடிபோகவுமில்லை. வாடகைப் பணத்தை மட்டும்கட்டிக்கொண்டுவரத் தவறவில்லை! ஏறக்குறைய ஐந்து இலட்ச ரூபாய் வாடகை செலுத்தியான பிறகு, கணக்கு ஆய்வாளர் பார்த்து, வீணுக ஏனய்யா வாடகை தருகிறீர்கள் என்று கேட்ட பிறகுதான், இந்திய சர்க்காருக்கு, காலியாக இருக்கும் கட்டிடத்துக்கு வாடகை செலுத்தி வந்த ஏமாளித்தனம் தெரிந்தது. தெரிந்து? ஐந்து இலட்சம் கரைந்தது.

இவ்விதம் பாழான பணம், கோணலாகிப் போன திட்டம், நாற்றமடிக்கும் ஊழல், வளர்ந்தபடி இருக்கக் காண்கிருேம். வெட்கமின்றி அமைச்சர் சொல்கிருர் 'தாங்கிக்கொள்ள வேண்டும்' என்று.

ஊழல்கள் பெருகிய வண்ணமுள்ள பண்டிதரின் உலாவோ, நடந்தபடி இருக்கிறது!!

அன்புள்ள,

2—10—1955.



# ஆரியம் இருக்கும் இடம்!

*'விடுதலை'யில் ஆரியர் பற்றிய செய்தியும், அரசும்—சென்னை அரசு போஸ்டர் வாபஸ் பெற்றமை.*

தம்பி,

ஆரியரை நடுத்தெருவில் நாள் முழுதும் போட்டு உதைத்தாலும் கேட்பதற்கு இன்று நாதி கிடையாது!

என்ன அண்ணா! இப்படி ஒரே போடு போடுகிறாயே! இவ்விதமெல்லாம் கூறும் வழக்கமோ -கருதும் சுபாவமோ கிடையாதே, என்ன காரணம் இவ்வளவு மோசமான நடையிலே பேச, என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா, உனக்கு.

பலே! பலே! இது ரோஷமான பேச்சு! இது வீரனின் முழக்கம்! இவ்விதம் பேசினால்தான் பிரச்சினை தீருமே தவிர, மயிலே மயிலே இறகு போடு என்றால் போடுமா? என்று கேட்டுக் களிப்பால் துள்ளிக் குதிப்போரும் இருக்கிறார்கள்.

தம்பி! நீ கலக்கமடையவும் காரணமில்லை, அவர்கள் களிப்படையவும் தேவையில்லை .ஏனெனில், ஆரியரை நடுத்தெருவில் நாளெல்லாம் போட்டு அடித்தாலும் இன்று கேட்பதற்கு நாதி இல்லை என்ற மணிவாசகம் என்னுடையது அல்ல! 'விடுதலை'யில் வெளிவந்த வீர முழக்கம் அது; 28—9—55-ல்!!

அக்ரகாரங்கள் இந்த வீராவேச உரை கண்டதும் இடி கண்ட நாகமாக வேண்டுமென்று எண்ணினாரோ, அல்லது படை வீரர்களுக்குச் சிறிதளவு உணர்ச்சிப் பானம் கிடைக்கட்டும் என்று கருதினாரோ, எதற்காக இவ்விதம் தீட்டினாரோ, நானறியேன்- ஆனால் ஆரிய இனத்தை நடுவீதியில் போட்டு அடித்தாலும் ஏன் என்று கேட்க நாதி இல்லை என்று எழுதியவருடைய 'கைவலி' தீருவதற்கு முன்பே, நாடாளும் காங்கிரஸ் தலைவர்கள், ஆரியரின் முகம் சிறிதளவு சுளித்துவிடுகிறது என்று தெரிந்ததும், நடு நடுங்கிப் போகிறார்கள் எனும் உண்மை, இப்போது தெரிகிறது.

*வீரம் தேவை—நிச்சயமாக!*

போர் முழக்கம் வேண்டும் அவ்வப்போது உணர்ச்சி யூட்ட!

உள்ள நிலைமைக்குத் துளியும் பொருத்தமோ பொருளோ அற்ற வகையில், ஓங்காரக் கூச்சலிடுவது, சுவைக்கு உத வாது, என்பதை எடுத்துக்காட்டும் சம்பவம் ஒன்று நடை பெற்றிருக்கிறது.

ஆரியர்—சமூகத்திலே அனைவராலும் வெறுத்துஒதுக்கித் தள்ளி விடப்பட்டது போலவும், கள்ளர், கயவர், கை ஏந்தி நிற்போர், ஆகியோர் எவ்வண்ணம் காரி உமிழப்பட்டும், கண்டோரால் ஏசப்பட்டும்,கடிந்துரைக்கப்பட்டும், தாழ்நிலை அடைவரோ, அதுபோல ஆரியரின் நிலை ஆகிவிட்டது போலவும், அவர்களை எவ்வளவு கேவலமாக நடத்தினாலும் அடித்து விரட்டினாலும், ஏனென்று கேட்க ஒருவரும் இல்லை என்று கூறத்தக்க அளவுக்கு, ஆரியரைஅன்னியர், அக்ரமக் காரர், அகற்றப்பட வேண்டியவர்கள், விரட்டப்பட வேண்டியவர்கள் என்ற முடிவுக்குச் சமூகத்தில் பெரும்பகுதி யினர், அல்லது குறிப்பிடத்தக்க அளவினர் வந்துவிட்டது போலவும் எண்ணிக்கொண்டு, 'ஆரியரை நடுத்தெருவில் நாள் முழுவதும் போட்டு அடி அடி என்று அடித்தாலும் ஏன் என்று கேட்பதற்கு நாதி இல்லை' என்று தீட்டுகிருர். தீ! தீ! தீ! என்று மும்முறை சொன்னதும் எந்தத் திக்கு நோக்கி கூறுகிருரோ, அது பற்றி எரிந்து போகும் என்று எண்ணிடும் இயல்புடையவர்.

'விடுதலை'யில் இந்த மணிவாசகம் வெளிவந்ததினு லேயே, இது பெரியாரின் கருத்து என்று கொண்டு விடுவதற் கில்லை. ஏனெனில், பெரியார் 'விடுதலை'யிலேயே எனக்கு விருப்பமில்லாத கருத்துகள் சில வேளைகளிலே வந்து விடு கின்றன, அவைகளை என் கருத்துக்கள் என்று நம்பி விடா தீர்கள். என் கையெழுத்திட்டு வெளிவரும் தலையங்கத்தில் காணப்படும் கருத்துத்தான் என் கருத்து, என்பதாகக் கூறி யிருக்கிருர். எனவே ஆரியரை நடுவீதியில் போட்டு உதைத்தாலும் ஏன் என்று கேட்பதற்கு நாதி இல்லை என்ற அருமையான கண்டு பிடிப்புப் பெரியாருடையது என்று கூறு வதற்கில்லை! பெரியார் ஸ்தானத்தை வேகமாக எட்டிப் பிடித் திடுவதாகக் கொட்டாவி விடும் குணுளர் அவ்விதம் கருதக் கூடும்!!

*திரிலோகமும் புகழும் சுந்தரன்!*

*தீரன்! வீரன்! கெம்பீரன்! உதாரன்!*

என்று நள்ளிரவில் நாலுவீதி கேட்கும்படி உரத்தகுரலில் பாடிவிடுபவன், போர்க்களத்தில் பெற்ற அரிய அனுபவத்

திஞல் அவ்விதம் பாடுகிருன் என்று பொருள்கொள்வார் உண்டா! அதுபோல, வீரமூட்ட, இதுபோல ஆரியராவது மண்ணாங்கட்டியாவது! நடுவீதியில் அடித்தாலும் கேட்க நாதி ஏது என்று பேசுவதன்மூலம், சமூகத்தில் தன்னம்பிக்கை அற்று, தாசர் நிலைபெற்று, எடுப்பார் கைப்பிள்ளையாய், ஏவல்புரிபவராய், எடுபிடியாய்க் கிடப்பவர்களின் உள்ளத்தில் வீரம் முளைத்திடச் செய்யலாம் என்பதற்காகக் கூறி இருக்கக் கூடும். அல்லது, ஆரியர் உண்மையிலேயே பெற்றிருக்கும் செல்வாக்கும் வலிவும் வளருவது கண்டு அச்சப்பட்டு, வீரதீரமாகப் பேசி அந்த அச்சத்தை மறைத்துக் கொள்வதற்கும் இந்த முறை கையாளப்பட்டிருக்கக் கூடும்; இவ்விதமாகக்கூட இல்லாமல், ஏதோ இன்றைய 'அயிடம்' அது, காரசாரமாக இருக்கிறதா இல்லையா பார்த்துக்கொள் என்ற போக்கிலே எழுதப்பட்டுமிருக்கலாம்; எக்காரணம் கொண்டு எழுதப்பட்டிருந்தாலும், நாடாளும் காங்கிரஸ் தலைவர்களுடைய போக்கைக் கவனிக்கும்போது, இந்த வீராவேசப் பேச்சுத் துளியும் பொருந்துவதாகக் காணேம்.

நாதியில்லை! என்று துந்துபி முழக்கம் கேட்கிறது! ஆரியர் தாக்கப்பட்டாலும் கேட்க நாதி இல்லை என்று முழக்கமிடும் நேரத்தில், 'சென்னை ராஜ்ய சர்க்கார்' என்ன செய்கிறது, தம்பி! கவனித்தாயா? ஆரியரின் மனதிலே ஒரு துளி சஞ்சலம், முகத்திலே ஒரு சிறு கோபக்குறி, பேச்சிலே ஒரு விதமான வருத்தம் தெரிந்ததும், கிடுகிடுவென ஆடி முகத்தைத் துடைக்கவும், முகமன் கூறவும், ஐயா! வருந்தற்க! பிழை பொறுத்திடுக! தவறு ஏற்பட்டிருந்தால், எடுத்து இயம்பிடுக! ஏற்ற முறையில் கழுவாய் தேடிக்கொள்ளக் காத்துக் கிடக்கிறோம்! உமது உள்ளத்தில் ஒரு துளி வேதனை தோன்றிஞலும் உலகம் தாங்காதே! கோபம்கொண்டு ஐயன்மீர்! எம்மீது சாபத்தை வீசாதீர்! சரணம் ஐயா! சரணம்!— என்று கெஞ்சிக் கூத்தாட முன் வருகிறது. விடுதலையார் கூறுகிருர் வீதியில் போட்டு அடித்தாலும் ஆரியருக்காகப் பரிந்து பேச நாதி இல்லை என்று. நாடாளும் தலைவர்களோ, நான், நீ, என்று போட்டி போட்டுக்கொண்டு முன் வருகிருர்கள், ஆரியரின் முகக் கோணலைப் போக்க; மனவருத்தத்தை நீக்க!!

ஆரியர், அடித்து ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்று சமூகமே முடிவு கட்டிவிட்டது என்ற பொருள்பட அன்பர் எழுதுகிருர்; அவருடைய அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமான தலைவர்களோ, 'தாசானு தாசர்' களாகி, ஆரியரின் தயவுக்குத் தவம் கிடக்கும் போக்கினராக உள்ளனர்!

காரணம் காட்டாமல் நண்பர் 'காரசாரமாக' எழுதிவிட வில்லை; காரணம் காட்டுகிறார், நம்பிக்கையுடன். ஆரியரை நடுத்தெருவில் போட்டு அடித்தாலும் ஏன் என்றுகேட்க நாதி இல்லை என்கிறார், ஏன் என்ற காரணமும் கூறுகிறார்.

ஆரியர் செத்த பாம்புகளாகிவிட்டனர்!

பாம்பு உயிரோடு இல்லை, எனவே, அதைப் போட்டு அடிப்பதால் ஆபத்து இல்லை!!

அந்தத் 'துணிவு'கொண்டு அடிக்கும் வீரனை, ஏன் என்று யார் கேட்கப் போகிறார்கள்—கேட்க மாட்டார்கள்!

ஆனால், செத்த பாம்பை யாரும் அடிக்க மாட்டார்கள்!

கூட்டுக்கோல்கொண்டு குப்பை மேட்டில் தள்ளுவர்; குப்பை குளம் போட்டுக் கொளுத்துவர்!

பிரத்யேகமான இயல்பு படைத்த வீரர்தான் 'செத்த பாம்பு' கண்டதும் அடிப்பார்!

ஆரியர் செத்த பாம்பு ஆகிவிட்டனர்—அதாவது செல்வாக்கு படுசூரணமாகிவிட்டது—எனவே அவர்களை எப்படித் தாக்கினாலும் ஏன் என்று கேட்க 'நாதி' இல்லை, என்று எழுதி, மகிழ்கிறார்.

ஆரியர் செத்த பாம்பானது எப்படி?

அதற்கும் காரணம் காட்டுகிறார்—ஆரியர்களின் அட்டகாசம் பல நூற்றாண்டுகளாக இங்கு எல்லைமீறிய நிலையிலிருந்தது. ஆனால் சு.ம. இயக்கத்துக்குப் பிறகு இவர்கள் செத்த பாம்புகளாகி விட்டனர்!

படித்து, வீரஉணர்ச்சி பெறச் சொன்னார்களா, பிரித்துப் பிரித்து விளக்கமும் பொருத்தமும் பார்க்கச் சொன்னார்களா! அதிலும் நான் எழுதுவதை!!—என்று அந்த சோர்விலாச் சொற்போர்க் கோமான் கோபத்துடன் கூறக்கூடும்—நமக்கு அப்படி ஒரு பழக்கத்தைப் பெரியார் ஏற்படுத்திவிட்டதாலே இந்தத் தொல்லை—யார் கூறினாலும், பொருள் இருக்கிறதா, பொருத்தம் இருக்கிறதா, முன் பின் சொன்னதற்கு முரணாகாமல் இருக்கிறதா, மூலக் கருத்தினைக் கெடுத்திடாத வகையில் அமைந்திருக்கிறதா, என்றெல்லாம் பார்க்கச் சொல்கிறது! இடி ஓசை கேட்கும்போது, ஆதிதாளமா, ரூபகமா என்று யாரும் ஆராய வேண்டியதில்லை. ஆனால் மன்றத்தில் அமர்ந்து, இசைபாடும்போது, தாளம் சரியாக இருக்க வேண்டும் என்று தானே யாரும் எதிர்பார்ப்பார்கள்—அந்த முறையிலே, நான் பார்க்கிறேன், தம்பி, வேறென்ன!

ஆரியருக்கு நாதி இல்லை,—இந்தப் பேருண்மையை நாட்டுக்கு அளிக்கிறார்.

நாதி இல்லை என்பதை விளக்க உதாரணம் தருகிறார், ஆரியரை அடித்தாலும் கேட்க ஆள் இல்லை—என்று கூறுகிறார்.

சந்து முனையில், இருட்டு வேளையில், ஒண்டி சண்டியாக வரும் ஆரியரை அடித்துவிட்டு ஓடிவிடும் அற்ப காரியத்தை அல்ல அவர் கூறுவது, வாசகத்தைக் கவனி, தம்பி!

நடுத்தெருவில் நாள்முழுதும் போட்டு உதைத்தாலும் கேட்பதற்கு இன்று நாதி கிடையாது!

நாள்முழுதும்!

இதற்குக் காரணம், ஆரியர் செத்த பாம்பு ஆனது!

ஆரியர் செத்தபாம்பு ஆனதற்குக் காரணம், சு.ம. இயக்கம்!

சரி! தம்பி! இப்படி வாதம் நடத்திப்பார். சு.ம. இயக்கத்தின் பலனாக ஆரியர் செத்தபாம்பு ஆகி விட்டார்களென்றால், செத்தபாம்பை அடிக்கக் கிளம்புவானேன். நடுத்தெருவில், நாள் முழுவதும் செத்தபாம்பைப் போட்டு அடித்துக் கொண்டு கிடப்பானேன்!

கோபத்தால் ஒரு தாவு தாவுவார் நண்பர், இவ்விதம் வாதாடினால். எனவே அவருக்கு அல்லல் வேண்டாம், அந்த வாதத்தை இந்த அளவுடன் நிறுத்திக்கொள்வோம்.

நாதி இல்லை என்கிறாரே, அது பொருந்துகிறதா, என்று இந்தக் கிழமை சட்டசபை நடவடிக்கையைப் படித்துவிட்டு எனக்குக் கூறு தம்பி!

நடுத்தெருவில் நாள் முழுவதும் அடித்தாலும், கேட்க நாதி இல்லை என்ற அரிய உண்மையை, செயல்மூலம் செய்து காட்டிடும், அரும்பெரும் காரியத்தை அவர்கள் செய்யவிட்டு விடு—அவர்களுக்கே அந்த ஏகபோக உரிமை இருக்கட்டும்!

ஆரியரை இப்போது யாரும் அடிக்கவில்லை! சர்க்கார் சில பிரச்சாரத் தாட்களை அச்சடித்தனர். நாதி இல்லை! நண்பரின் திருவாக்கல்லவா இது! சர்க்கார், அச்சடித்தார்கள், ஆரியர் எச்சரித்தார்கள்; சர்க்கார் அச்சடித்ததை அழித்தொழித்தார்கள்.

நடுவீதியில் நாளெல்லாம் போட்டு அடித்தாலும் கேட்பதற்கு நாதி இல்லா நிலைக்கு இது எடுத்துக்காட்டா, தம்பி! எண்ணிப்பார்!

தீண்டாமை ஒழிப்பு சர்க்கார் திட்டத்திலே ஒன்று—மிக முக்கியமானதுங் கூட! அரசியல் சட்டம் இதை வலியுறுத்து

கிறது. நாட்டு மக்களுக்கு இதை எடுத்துக்காட்டி, நல்லறிவுச் சுடர் கொளுத்த, அரிஜன இலாகாவின் மூலம், சர்க்கார், பிரசாரத் தாட்கள் வெளியிட்டு, நாடெங்கும் அனுப்பினர். தம்பி! சர்க்கார் வெளியிட்டதை அநேகமாக நீ கண்டிருக்க மாட்டாய், நமது கழகம் அதுபோல அச்சிட்டு அனுப்பியது கண்டிருப்பாய்! இப்போதும் ஒரு முறை, அதைப் பார், தம்பி! அதிலே, ஆரியரை இழிவுபடுத்துவது என்ன காண்கிறோம்!!

மோட்ச லோகம் என்ற புரட்டுப் பேசி என்னிடம்பறித்த பொருளை மூட்டை கட்டிக்கொண்டு போகிருயா, முழு மோசக்காரா! இறக்கு மூட்டையை! எடு ஓட்டம்!! என்று கேட்டு, ஒரு சிறு கூட்டம், ஆரியனை அடித்து விரட்டுவது போலப் 'போஸ்டர்' அல்ல அது.

ஐயா! உலகோரே! உங்கள் நாட்டிலெல்லாம் இல்லாத ஒரு அதிசயம் காணீர் இதோ இவன், பிரமனின் முகத்தில் பிறந்தவன்! என்று கூறி, ஆரியரை, மற்ற நாட்டவரிடம் காட்ட, அவர்கள் கைக் கொட்டிச் சிரித்து, மடத்தன மிக்கவனே! அப்படியா கூறினாய்? என்று கேட்டுக் கேலி செய்வது போன்ற, பிரசார போஸ்டர் அல்ல!!

பிச்சைக்காரன், கோலம்,பெருந்திண்டிக்காரன் கோலம் காட்டிடும் போஸ்டர்கூட அல்ல!

தீண்டாதவனை, தொடாதே என்று கூறும், வைதீகன் சர்க்கார் சட்டப்படி, சிறையில் தள்ளப்படுகிருன் என்பதை விளக்கும் போஸ்டர்!

இது, ஆரியருக்கு ஆத்திர மூட்டிவிட்டது! செத்த பாம்பு, படமெடுத்தாடிற்று! சென்னை சர்க்கார், 'நாக பூஜை' செய்து, 'சினம் விடுக! பிழை பொறுத்திடுக' என்று கெஞ்சுகிறது!

டால்மியாபுரம், கல்லக்குடி ஆக்கப்படவேண்டும் என்பதற்கான கிளர்ச்சி, பொதுமக்களிடம் பரவி இருந்தது போல,

இரயில்வே ஸ்டேஷன் போர்டுகளில் இந்தி ஆதிக்க மொழி இருப்பது அக்ரமம்,அதனை அழித்திடவேண்டும் என்பதற்கான கிளர்ச்சி நாட்டில் வலிவுடன் வடிவெடுத்ததுபோல,

தமிழரின் எல்லையைப் பிற மொழியாளர் பறித்திடும் அக்ரமத்தை அனுமதிக்க மாட்டோம் என்ற கிளர்ச்சி, நல்லோர் உள்ளத்தை எல்லாம் தொட்டு, நாட்டிலே நல்ல நிலை அடைந்தது போல,

ஆஹா! ஆரியரை இங்ஙனம் அவமதிப்பதா, அரசாங்கம் இந்த அக்ரமத்துக்கு இடம் தருவதா, என்று கோபித்துக்

கொதித்தெழுந்து பொதுமக்கள் கேட்டனரா, என்ருல் இல்லை!

பார்ப்பனர்கள் சிலர்—அதிலும், சர். சி. பி. இராமசாமி ஐயர், இராமசாமி சாஸ்திரிகள், இராஜகோபாலாச்சாரியார், அனந்தராமகிருஷ்ண ஐயர், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, வி. டி. இரங்கசாமி ஐயங்கார் போன்ற பிரபலஸ்தர்கள்கூட அல்ல; சிலர் கூடினர், சீறிப்பேசினர், திருச்சியில் நகர்ச்சதுக்கத்தில்—'இந்து' ஒரு குட்டித் தலையங்கம் தீட்டிற்று. அவ்வளவுதான்! சர்க்கார், சத்தம் வரும் திக்கு நோக்கிச் சரணம்! சரணம்!! என்று கூவுகிறது!!

துக்க தினம் கொண்டாடுவோம்—இந்த போஸ்டர் எமது மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது—உடனே வாபஸ் பெறுக—என்று 'செத்த பாம்புகள்' கூறின. உடனே, சகல கட்சிகளையும் அணைத்துக்கொள்ளும் சரசாங்கிச் சர்க்கார், அடியற்ற நெடும்பனையாகிறது!

*நாதி இல்லை!*

பார்த்தாயா தம்பி, நாதி, யாருக்கு இல்லை என்பதை!!

30,125 போஸ்டர்கள் அச்சிட்டனர், 5000 ரூபாய் செலவிட்டனர். ஆரியர் ஒரு சிறு கண்டனம் கிளப்பினர், அவ்வளவுதான், சர்க்கார், பாய் சுருட்டிக்கொண்டது! இந்த நிலைமைக்கு என்ன பெயர்? நாதி இல்லை என்பதா!

பார்ப்பனரின் மனம் புண்படக் கூடாது என்று சர்க்கார் கருதுவதுகூட ஆச்சரியமல்ல, உமது மனம் புண்படும்படி அந்த போஸ்டர் இல்லையே என்று விளக்கம் கூறக்கூடச் சர்க்கார் அச்சப்படுகிறதே, அதுதான் உண்மையிலேயே ஆச்சரியம்!

தீண்டாமை எனும் கொடுமை, ஆரிய மார்க்கத்தின் விளைவு—ஆரிய மார்க்கத்தின் பாதுகாவலர் ஆரியர். ஆகவேதான் ஆரிய உருவம் பொறித்தோம்—இதை ஆட்சேபித்துப் பேசுவது அறிவற்ற செயலாகும். சர்க்கார் இத்தகைய அறிவற்ற செயலை மதிக்காது, தன் திட்டத்தை மாற்றிக்கொள்ளாது என்று எடுத்துரைக்கும் ஆண்மையாளர் அங்கே காணோம்—நடுவீதியில் போட்டும் அடித்தாலும் கேட்க நாதி இல்லை என்று பேசும் வீரம் இங்கே இருக்கிறது, ஏட்டில்! அந்த ஏடு, ஆட்சிக்குக் 'கேடயம்' ஆகி மகிழ்கிறது! தம்பி! ஆரியர் கைகொட்டிச் சிரித்திட இதைவிட வேறு என்ன வேண்டும்?

வைதீகர்கள் தீண்டாமையை ஆதரிக்கிருர்கள்; அவர்களுக்குச் சட்டத்தை நினைவுபடுத்தவே, இந்தப் போஸ்டர்.

இதிலே பொறிக்கப்பட்டுள்ள உருவம், பார்ப்பனருடையது என்று பார்ப்பனர் ஏன் கருதவேண்டும்?

தோழர் விநாயகம் M.L A. இதைக் கேட்டார்—அந்த நேர்மையை நான் பாராட்டுகிறேன்.

உச்சிக் குடுமியும் பூணூலும் பார்ப்பனருக்கு மட்டும் தானு, வன்னிய குல க்ஷத்திரியரிலே சிலருக்கு இல்லையா? ஆசாரி குலத்திலே இல்லையா? என்று தோழர் விநாயகம் எடுத்துக் கேட்டதுடன், சர்க்கார் இந்த எதிர்ப்புக்கு மறுப் பளிக்காமல், முதுகெலும்பற்ற முறையில், நடந்து கொண் டதை இடித்துரைத்தார். அவர் எடுத்துக் காட்டியபடி, "உச்சிக் குடுமியும் பூணூலும்" ஆரியரல்லாதவர்களிடமும் இருந்திடக் காண்கிருேம—பொதுவாக, பண்டைப் பெருமை யும் இந்து மத மாண்பும், உச்சிக் குடுமி பூணூல், மடிசஞ்சி போன்ற கோலத்தில் இருப்பதாகக் கருதுபவர்கள், ஆரியக் கோலத்தில் உள்ள திராவிடர்கள் இருக்கத்தான் செய்கிருர் கள். போஸ்டர், பார்ப்பனரைக் குறிப்பிட்டு அல்ல, வைதீ கத்தைக் குறிப்பதாக இருக்கிறது என்று சர்க்கார் விளக்கம் அளித்திருக்கலாம்—ஆனல் முதுகெலும்பு இல்லை, முப்புரியின ரின் கோபத்தைத் தாங்கிக்கொள்ளும் சக்தி இல்லை; எனவே சரணுகதி அடைகிறது!

தம்பி! இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பார்ப்பன ரல்லாதாருக்கு 'வேலைகள்' கொடுத்ததாம் இந்தச் சர்க்கார்—இதற்கே வெண்சாமரம் வீசுகிருேம் என்கிருர்கள்-வேடிக்கை அதுகூட அல்ல, நாங்கள் ஏன் வெண்சாமரம் வீசுகிருேம் தெரியுமா. நீ வெண்சாமரம் வீசலாம் என்று எண்ணுகிருய், உனக்கு அந்த இடம் தரக்கூடாது, என்பதற்காகவே நாங்கள் வெண்சாமரம் வீசுகிருேம் என்று வாதாடுகிருர்களே, அது தான் வேடிக்கை. போகட்டும் வலி எடுக்கும் வரையில் வீசட் டும், ஆனல் ஒன்று! பார்ப்பனரல்லாதாருக்கு வேலைகள் கொடுத்துவிடுவதால், ஆரிய ஆதிக்கத்தை ஒழித்துவிடமுடியு மென்ருல், அந்தத் திட்டத்தை மட்டுமே மலை என நம்பிவந்த ஜஸ்டிஸ் கட்சி போதுமென்று இருந்துவிட்டிருக்கலாமே!

ஆரிய ஆதிக்கம் என்பது அவ்வளவு எளிதாக, சிலபதவி களைப் பார்ப்பனரல்லாதார் பெறுவதன் மூலமாக மட்டுமே போகக்கூடியதுமல்ல, ஆரியரை அடித்து விரட்டுவோம், நடு வீதியில் நாள்முழுதும் அடித்தாலும் கேட்க நாதி கிடையாது என்று பேசிவிடுவதால் போகக்கூடியதுமல்ல.

ஆரியர் ஆதிக்கம் செலுத்துவதற்குக் காரணம், ஆரியம், ஆரியரிடம் மட்டுமல்லாமல், திராவிடச் சமு தாயத்தினரிடம்இன்னும் பெருமளவுக்கு இருப்பதனுலும் ஆரியத்திடம் அச்சப்படும் நிலையில் ஆளவந்தார்கள் இருப்பதினுலும்தான். எனவேதான் தம்பி! நமது

கழகம், ஆரியரை ஒழித்திடும் வேலையை அல்ல, ஆரியத்தை ஒழித்திடும் வேலையில் ஈடுபடுகிறது! இது ஆரியரை ஆதரிக்கும் அற்பத்தனம் என்று கூறுவோர், நாம் மனித உருவம் பெற்றிருப்பதே சகிக்க முடியாத அக்ரமம் என்ற அளவுக்குத் 'துவேஷம்' கொண்டவர்கள்.

ஆரியம், அனந்தாச்சாரியிடம் மட்டும் இல்லை, அம்பலவாண முதலியாரிடமும் இருக்கிறது; ஆதிசேஷ செட்டியாரிடமும் இருக்கிறது. நெய்யாடிவாக்கம் முதலியாரிடமும் இருக்கிறது. குன்னியூர் ஐயரிடமும் இருக்கிறது! விநாயகம் எடுத்துக் காட்டியபடி, உச்சிக் குடுமியும் பூணூலும் கூட ஆரியரிடம் மட்டுமல்லவே, படையாச்சிகளிடம் இருக்கிறது, நாயுடுகளிடம் இருக்கிறது; ஏன், காமராஜரின் நாடார் சமூகத்தில் கூட பழமை விரும்பிகளிடம் இருந்திடக் காண்கிறோம். எனவேதான் ஆரியரை ஒழிப்பது என்பது நமது திட்டமாகாமல், ஆரியத்தை ஒழிப்பது நமது திட்டமாக இருக்கிறது. இதிலே நமக்குத் தெளிவும் நம்பிக்கையும் ஏற்படும் வகையில் பெரியார் அறிவுரை கூறியிருக்கிறார். நாம் அந்தப் பாதையில் செல்கிறோம்.

ஆரியம், ஆரியரிடம் மட்டுமல்ல, திராவிடரிடமும் புகுத்தப்பட்டிருக்கிறது; அதைப் புகுத்தி, பாதுகாத்துவரும் பணியில், ஆரியர், ஆரியக் கோலத்தில் இல்லாவிடினும்கூட ஈடுபடக் காண்கிறோம். எனவே, ஆரியம் களையப்படுவதற்கான அறிவுப் பிரச்சாரத்தைத் திறம்பட நடத்துவதுதான் முறையே தவிர, அக்ரகாரத்தில் தீ மூட்டுவதல்ல என்று கூறுகிறோம்.

'போஸ்டர்' விஷயத்திலே, 'சர்க்கார்' இந்த அளவுக்கு ஆரியரிடம் அச்சப்பட்டு அடிபணிகிறது என்றால், அக்ரகாரத்தைக் கொளுத்த பெட்ரோல் டின்கள் வாங்கித் தரும் என்று எதிர்பார்த்தா, அதற்குச் சாமரம் வீசிக்கொண்டு கிடப்பது! தமிழரிடம் பற்றும் பரிவும் கொண்ட ஒரு சர்க்காருக்காக நாம் தவம் கிடந்தது கண்டு காலதேவன் கருணைகொண்டு, காமராஜர் சர்க்காரை நமக்கு அருளி இருப்பதுபோலவும், இந்தச் சர்க்காருடைய சக்தியைத் துணைகொண்டு, ஆரியரை ஒழித்திடும் காரியத்தைக்கூடச் சாதித்துக்கொள்ளலாமென்றும் பகற்கனவு காண்போருக்கு, இந்த சர்க்காரும் ஏனைய சர்க்கார் போலவே ஆரியருக்கு அடிபணியும் சர்க்கார்தான் என்பதைச் சென்ற கிழமை சட்டசபைப் பேச்சு எடுத்துக் காட்டுகிறது.

எனவே தம்பி! நாம் ஆரியத்தை, அறிவுச் சுடரால் அழித்தொழிக்க வேண்டும்—அந்த ஆரியம் அக்ரகாரத்தில் மட்டுமில்லை!

எட்டிப் போடா சூத்திரப் பயலே!—என்ற ஐயர் பேச்சும் ஆரியம்தான்!

கிட்டே வராதே சேரிப் பயலே!என்று பேசும் முதலியார் முடுக்கும் ஆரியம்தான்!

படையாச்சிக்கு இவ்வளவுஉயர்வா? என்றுகேட்கும் பேச்சும் ஆரியந்தான்!

மறவர் முன்பு மட்டு மரியாதையோடு நட! தேவர் வருகிறார், எழுந்து நில்! நாடார் அழைக்கிறார், ஓடிவா! செட்டியார் கேட்கிறார், தட்டாமல் கொடு!—என்று ஆரியம், பலப்பல முறைகளிலே தலைவிரித்தாடுகிறது, தம்பி, பல முறைகளில்!

ஆரியம், ஒரே இடத்தில், ஒரே கூட்டத்தாரிடம், ஒரே முறையில் இருக்குமானால், அந்த ஒரு இடத்தை, ஒரு கூட்டத்தை, ஹிட்லர், யூதர்களை விரட்டினானே, அதுபோலச் செய்துவிடவேண்டும் என்று பேசுவது, ஓரளவுக்காவது பொருத்தமானதாகத் தெரியக்கூடும். ஆனால், ஆரியம், இருக்கும் இடம், அக்ரகாரம் மட்டுமல்ல!

பாரேன், தம்பி! ஆரிய ஆச்சாரியார் விலகினார், திராவிடக் காமராஜர் வந்தார் என்று, 'உருவம்' கண்டு உள்ளம் பூரித்துக் கிடந்தது என்ன ஆயிற்று! ஆரியம் திராவிட உருவினர் ஆட்சியிலும் இருந்துகொண்டு, வெற்றி! வெற்றி! என்று கொக்கரிக்கிறதே!

எனவே, நமது மணி தம்பி! அக்ரகாரத்தை நோக்கிப் படை எடுத்து அதை 'பஸ்மீகரம்' செய்துவிடப் போவதாகக் கூறிவருவது அல்ல; ஆரியம் இருக்கும் இடம் எல்லாம் அறிவு சுடர்கொளுத்தி அதன்மூலம், ஆரியத்தை ஒழிப்பதுஆகும்!

உடல் படபடவென ஆடாது. உள்ளம் 'கிடுகிடு'வெனக் குதிக்காது! பேச்சிலே, எள்ளும் கொள்ளும் வெடிக்காதே!—இந்தத் திட்டத்தில் என்பார்கள்—ஆனால், வெற்றிக்கு வழி நாம், கொண்டிருப்பதுதான், அது இராயபுரத்து 'அரைடஜன் சிறுவர்கள்' தீட்டியதுமல்ல, பெரியார் தந்த திட்டம்!!

அன்புள்ள,

9—10—1955

அண்ணாதுரை

# அத்தர் வியாபாரம்

*லெனின் கிராடு முன்னும் பின்னும்—பல்கலைக்கழகத்தில் இராதாகிருட்டிணன் கருத்துரை—திராவிடர் இழிநிலை.*

தம்பி,

லெனின்கிராட் பல்கலைக் கழக மாணவர்களும், பேராசிரியர்களும், மதம் வேண்டும்! மதம் வேண்டும்! அற்புதமான இந்து மதம் எமக்கு வேண்டும்! என்று நெஞ்சு நெக்குருகக் கூறினீர்—தெரியுமா உனக்கு!

உனக்குத் தெரியுமா என்று கேட்கிறேனே, எனக்கே தெரியாது—இப்போதுதான் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

லெனின்கிராட்—பெயரே இயல்பைக் கூறுவதாக இருக்கிறது—இலட்சியபுரி அது!

மதமெனும் பேய்ப்பிடித்தாட்ட, செல்வவான்களின் செருக்கிலே சிக்கிச் சீரழிந்து, மூடத்தனத்தில் உழன்றுகிடந்த மக்களை, ரஸ்புடீன் எனும் பெரும்புரட்டன் ஆட்டிப்படைத்து வந்தான். தூணிலும் துரும்பிலும், கல்லறையிலும் காறுறு பாயும் காடுகளிலும், பிலங்களிலும்பிம்பங்களிலும, தேவனைக் கண்டனர்-கண் மூடிக்கிடந்தமக்கள்; காலடிவீழ்ந்து காணிக்கைக் கொட்டினர் மத குருமார்களுக்கு! கபட வேடதாரிகளோ, கைகூடாக் காதலுக்கும் பிடிபடாக் கோட்டைக்கும், நவநிதிபெறுவதற்கும், 'நல்லவிளைவு' கிடைப்பதற்கும்—எதற்கும் பிரார்த்தனை—ஆசி தாயத்து—மந்திரக் கயிறு—கவசம் தருவர்—மக்கள் ஏமாற்றப்பட்டோம் என்று எண்ணினதில்லை, எம்மான் அருளை இவர் மூலம் பெற்றோம் என்றெண்ணிப் பூரித்தனர். வறுமை வாட்டும், குளிர் கொட்டும், குழந்தைகள் 'கோ' வெனக் கதறும், குமரிகள் உடலை விற்று உருமாறி உழல்வர்.—கோயிலில் மணிகள் ஒலிக்கும், குருவின் பவனி கோலாகலமாக நடைபெறும், 'தர்மதாதா'க்கள் திருவிழா நடத்துவர், ஆசி அளித்திடும் அருளாளர்கள் அரண்மனை போன்ற மாளிகைகளில், ஏராளமான எடுபிடிகளும் பொறுக்கி எடுக்கப்பட்ட பொற்கொடிகளும் புடைசூழ கொலு வீற்றிருப்பர்!

கயற்கண்ணழகி ஒருவளைக்கண்டு, நெஞ்சம் நெகிழ்ந்து, பெருமூச்செறிந்து, அந்தக் கட்டழகி! கன்னல் மொழியாள்!

மின்னல் இடையாள்! பேசும் பேரின்பம்! எனக்குக் கிட்டிட மார்க்கமொன்று காட்டிட வேண்டும், மாதவம் செய்தவரே! மனிதகுலத்தை உய்விக்க வந்த மகானே! என்று இறைஞ்சி, பொன்னும் பொருளும் காலடியில் கொட்டி, கண்ணீர் சிந்தினால், மூவாசையைத் துறந்து, துறந்ததால் மூலத்தை உணர்ந்து 'மேலோன்' என்ற விருதுபெற்ற 'குருமார்கள்' காதற்கனியை அந்தக் கனவான் பெறுவதற்கான 'ஆசி' அருளுவார்!! கட்டணம், காரிகையின் அழகுக்குத் தக்கபடி! காளையைத் துளைத்திடும் காமக் கணையின் கூர்மைக்கு ஏற்ற வண்ணம் அமைந்திருக்கும்!

ஏழை எளியோர்களை ஏறெடுத்துப் பாரார்போலும் இந்தக் 'குருமார்' என்று எண்ணிவிடாதே தம்பி! ஏழைக்கும் குருமார்களுக்கு இரையாகிடும் வாய்ப்புக் கிடைத்திடும்

"அம்மை நோய் ஐயனே, என் ஐந்தாண்டுப் பாலகனுக்கு அருகே நெருங்கவே முடியவில்லை! அவன் போடும், 'ஐயோ-அம்மா'வைக் கேட்க முடியவில்லை! ஆவி துடித்திடும் நிலை!" என்று ஏழை அழுதபடி கூறுவான், அருளை விற்றிட அங்காடி வைத்திருந்த அதிசய மனிதர்கள், 'சக்திக்கேற்றபடி' காணிக்கைத் தரச் சொல்லுவர்—ஜெபமாலையால் புனிதப்படுத்தப் பட்ட ஆடை, அருளாலயத் தோட்டத்து மூலிகை, அபிஷேக நீர்—இப்படி ஏதேனும் தருவர்! இவ்வளவு எதற்கு! விளைச்சல் சரியாக இருப்பதற்காக, நிலத்தில், 'மந்திர நீர்' தெளித்திடும் கைங்கரியம் செய்யும் மகான்களும் இருந்தனர்!

அப்படிப்பட்ட நாட்டிலே, லெனின் பிறந்தார்—பாடுபட்டார்—வெற்றி பெற்றார் அதனை எடுத்துக் காட்டவே அந்த எழில் நகருக்கு, லெனின் கிராடு என்று பெயர்!

கூனன், ஏறு நடையோனானான்! விழியற்றவன், கனல் கக்கும் கண்ணினனானான்! ஊமை, பேசினான்! கொடுமை ஒழிந்தது! புதுமை பூத்தது! புதுமுறை ஏற்பட்டது! மதத்தைக் காட்டி ஏய்த்த மாபாவிகளை, மக்களின் திரண்டெழுந்த சக்தி மண்ணோடு மண்ணாக்கிற்று!

அத்தகைய லெனின் கிராடு நகரில், சாமான்யர்கள்கூட அல்ல, பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், மாணவர்களும், மதம் வேண்டும்! என்று இன்று கேட்கிறார்கள் என்று இந்தியக் குடிஅரசுத் தலைவருக்குத் துணைசெய்பவராக விருது பெற்றுத் திகழும் வேதியர், வேத வேதாந்த வித்தகர், வியாகர்ணப் பண்டிதர், தத்துவாசிரியர், இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுகிறார்!

"அப்படியா! ஆஹா! ஆண்டவன் கருணையே கருணை! நாத்திகம் நசித்ததா! நாதன் அருளை நாடுகின்றார்களா! ஈசன் பெருமையே பெருமை! ஈதன்றோ அருமை!—என்று ஆதீனங்

களும் அருளாலய அதிபர்களும் மட்டுமல்ல, சுட்ட சட்டியை ஏந்திப் பிழைத்திடுவோரும், காவிகட்டியதால் வயிறு நிரம்பிற்று என்று எண்ணுவோரும், மொட்டைத் தலையரும், காவடிச் சாமியாடிகளும் கூடக் களிநடனம் புரிவர்!

டாக்டர் இராதாகிருஷ்ணனேகூட, பெருமிதத்துடன் தான் பேசுகிருர்—பரோடாவில் இந்தத் திங்கள் பத்தாம் நாள்.

> *லெனின் கிராடு பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும், மாணவர்களையும், நான் என் வழிக்குக் கொண்டு வந்து விட்டேன். வாதாடினர் திறமையாக—என் எதிர்வாதம் கேட்டுத் திடுக்கிட்டனர்! கடாவினர், நான் வீசிய பதில்களைக் கண்டு கவிழ்ந்தனர்! அப்பப்பா! என்னென்ன கேள்விகள், எத்தனை குறுக்குக் கேள்விகள்! இவ்வளவுக்குப் பிறகு, அவர்கள் ஆம்! ஆம்! தாங்கள் கூறும் மதத்தை நாங்களும் விரும்புகிருேம்—ஏற்றுக் கொள்ள இசைகிருேம் என்று கூறினர்—என்கிருர்.*

பாமர மக்காள்! பாமர மக்காள்! பண்டித ஜவஹர் ஏதேதோ நாடுகளில் பவனி வருகிருர், தலைவர்களைக் காணுகிருர், வெற்றி மாலை சூடுகிருர், என்றெல்லாம் பேசிக் கிடக்கிறீர்களே, நான் என்ன செய்திருக்கிறேன், எத்தகையவெற்றி பெற்றிருக்கிறேன், எத்தகையவர்களை நம் வழிக்குத் திருப்பி இருக்கிறேன் என்பதை அறியாமற் கிடக்கிறீர்களே, கூறுகிறேன் கேண்மின், லெனின் கிராடு நகரப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும் மாணவர்களையும் நான் மதத்தைஏற்றுக் கொள்ளச் செய்திருக்கிறேன்—மகத்தான வெற்றி அல்லவா, அகிலம் புகழத் தக்க வெற்றியல்லவா இது! லெனின்கிராடில் மதத்துக்கு இடம கிடைக்கும்படி செய்துவிட்டேன்! மதம் மக்களுக்கு அபின் என்று எங்கு பேசப்பட்டதோ, அங்கு, மதம் தேவைதான்! எங்களுக்கும் மதம் வேண்டும்! என்று பேசச் செய்துவிட்டேன், இந்த மகத்தான வெற்றி பெற்றதும், சாமான்யமான முயற்சியால் அல்ல, மெத்தச் சிரமப்பட்டு, விளக்கமளித்து, தர்க்கம் நடத்தி, கேள்விக் கணைகளைத் தூளாக்கி, சந்தேகத்தைத் துடைத்து, பிறகு வெற்றி பெற்றேன்!—என்ற கருத்துப்பட டாக்டர் இராதாகிருஷ்ணன் பேசியிருக்கிருர்.

*தம்பி, என்ன சொன்னதால், இந்த 'வெற்றி' கிடைத்தது தெரியுமா! அதைத் தெரிந்துகொள்ள, ஒரு சிறுகதை, கூறுகிறேன் கேள்.*

யாருக்கும் அடங்காத, எவரையும் எதிர்க்கும் முரடன் ஒருவன் இருந்தானும் ஒரு ஊரில்! (ஊருக்கு ஒரு முரடன்

போதுமல்லவா!) எதிரே யார் வந்தாலும், கன்னத்தில் ஒரு அறை கொடுப்பானும். பற்கள் முப்பத்து இரண்டும் பொல பொல வெனக் கீழே உதிர்ந்து போகுமாம். அப்படிப்பட்டவனிடம் அந்த ஊரிலேயே, 'தொடைநடுங்கி' என்றுயாவராலும் எள்ளி நகையாடப்பட்டு வந்த ஒருவன், சென்றுனும்—சவாலுக்கு! ஒரு நாள்! ஊரே அதிசயப்பட்டது! ஒருமணி நேரத்துக்கெல்லாம், வெற்றி! வெற்றி! என்றுகூவியபடி, ஊருக்குள் வந்தான். வந்தவனை ஊரார் சூழ்ந்து கொண்டு என்ன சேதி! என்ன சேதி! என்று ஆவலோடு விசாரித்தனர். அவன் பெருமையாக என்னை அவன் அடிக்கவில்லை! என் பற்களை உதிர்க்கவில்லை என்று சொன்னனும்!

"எதிர்ப்பட்டவர்களை எல்லாம் கன்னத்தில் அடித்து பற்களை உதிரச் செய்பவன், உன்னைமட்டும், சும்மாவிட்ட காரணம் என்ன?" ஊரார் கேட்கிருர்கள்!

"காரணமா? என் சாமர்த்தியம்தான்!" என்றுன் தொடை நடுங்கி.

"என்ன நடந்தது! எப்படி அவனைச் சமாளித்தாய்? விவரமாகச் சொல்லு" என்று கேட்டனர் ஊர் மக்கள். அவன் சொன்னுன்.

"நேராக அவனிடம் சென்றேன். கன்னத்தில் அடிக்க கையை ஒங்கினுன்! நிறுத்து! நிறுத்து! உன்னுல் என்னை அடித்து, என் பற்களை உதிர்க்க முடியாது என்றேன். என்ன சொன்னுய்! என்ன சொன்னுய்! என்று அவன் கொக்கரித்தான். நீ கொக்கரித்து என்ன பலன்? நிச்சயமாகச் சொல்கிறேன் உன்னுலே, என் பற்கள்உதிரும்படிஅடிக்கமுடியாது! பந்தயம் கட்டுகிறேன் என்றேன். அவனுக்குப் பிரமாதமான கோபம், அடே அற்பப்பயலே! சுருள் கத்திசுப்பன், அரிவாள் கந்தன், சம்மட்டி சதாசிவம் போன்ற சூரனெல்லாம், என் 'அறை' பட்டதால், 'பொக்கை' வாயர்களாகிப் போனுர்கள்! நீ சுண்டைக்காய்! என் முன்னுலே சூரத்தனமா பேசுகிருய்! என்று மிரட்டினுன், கண்களை உருட்டினுன், நான்; "அப்பா நீ அசகாயச் சூரனுக இருக்கலாம்! நீ கொடுத்த அறையிலே, வீராதி வீரனுக்கெல்லாம் பல் போயிருக்கலாம். ஆனுல், என்னை அறைந்து என் பற்களை உதிரச் செய்யமட்டும் உன்னுலே முடியாது; இது உறுதி—என்ன பந்தயம் வேண்டுமானுலும் கட்டுகிறேன்" என்றேன். அவனுக்குத் தலைகால் தெரியாத கோபம் வந்துவிட்டது—"ஆஹா! பந்தயமா உன் பற்களை என்னுல் உதிர்க்க முடியாமல்போனுல், இனிஒருவனையும் நான் கன்னத்தில் அடிப்பதில்லை!—என்றுன், சத்தியமாகவா என்றேன். ஆமாம், என்று கூறிவிட்டு கையை ஓங்கினுன்.

உடனே நான், ''நிறுத்து! நிறுத்து!'' என்று கூறியபடி என் வாயைத் திறந்து காட்டினேன்! பயல் கல்லாகிப் போனான்! ஏன் தெரியுமா? என் வாயிலே ஒரு பல்கூடக் கிடையாது! எனக்குத்தான் பற்கள் இல்லையே! என்னசெய்வான்! தோற்று விட்டான்! அட பாவிப் பயலே இந்தச் சூது தெரியாமல் போய்விட்டதே? எங்கே உன்னுடைய பற்கள்? என்று கேட்டான்; பற்களை உதிரச் செய்யும் சூரப்புலி நீ ஒருவன்தானா, நேற்றிரவே என் பற்களை உதிர்த்து விட்டாள், என் மனைவி, என்றேன். உண்மையும் அதுதான். அவன் 'இடி இடி' எனச் சிரித்துவிட்டு, பல்லே இல்லாதபோது, பல்லை எப்படி உடைக்க முடியும். பயலே, நீ கெட்டிக்காரன்தான், என்று என்னைப் பாராட்டினான்.

இது அவன் சொன்ன கதை. கேட்ட ஊர் மக்களும் கை கொட்டிச் சிரித்தனர். ஏற்கனவே மனைவி கொடுத்த அறையால் பல்லை இழந்துவிட்ட காரணத்தால், அறை கொடுத்துப் பற்களை உதிரச் செய்யும் முரடனை அவனால் 'ஜெயித்திட' முடிந்தது. அதுபோல டாக்டர் இராதாகிருஷ்ணன், லெனின்கிராடு பல்கலைக்கழகப் பேராசிரியர்களிடமும், மாணவர்களிடமும் நடந்து கொண்டதால் வெற்றி கிடைத்திருக்கிறது.

புதிய அறிவின் காரணமாக, மதத்திலே எந்தெந்த ஆபாசங்கள் புரட்டுகள், உள்ளனவோ அவைகளெல்லாம் உதிர்ந்து போய்விட்டன—தத்துவம் மட்டும்தான் மிச்சமாக இருக்கிறது—அந்த தத்துவத்தைக் காட்டி, இந்துமதத்தை ஏற்றுக்கொள்ள என்ன தடை என்றுகேட்டிருக்கிறார். என்ன சொல்வார்கள்? என்னசொன்னான் கதையில் வரும் முரடன்! அது போலத்தான்.

*லெனின்கிராடு* பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மாணவர்களும் இவரிடம் என்னென்ன கேள்விகளைக் கேட்டனர்—என்ன பதிலளித்தார் என்பதுபற்றி, இந்த வேதாந்தி தம்முடைய பரோடா சொற்பொழிவிலே கூறவில்லை.

> மதம் என்றால், சத்தியத்தை, நற்குணத்தை, அழகை நாடிக் கண்டறிவது என்று சொன்னேன்; அந்தப் பேராசிரியர்களும் மாணவர்களும், சரி சரி! சந்தோஷம்! இதுதான் மதம் என்றால், அந்த மதத்தை நாங்களும் விரும்புகிறோம் என்று கூறினர் என்று இவர் கூறுகிறார்.

பற்கள் இருந்தால், கொடுக்கிற அறையில், பொலபொலவென உதிர்ந்திருக்கும், பற்கள் இல்லை. எனவே அறைவிழவில்லை – *கதையில்*.

'பாரதத்தில்' மதம் என்பதன் பெயரால் என்னென்ன இருக்கிறது, எத்தகைய இழிதன்மைகள், கொடுமைகள், மடை

மைகள், ஆதிக்கம், என்பதை எல்லாம், காட்டாமல், மதம் என்றால் உண்மையை உணருவது, நற்குணத்தை நாடுவது, அழகை அடைவது என்று கூறினர். கூறவே, இதுதானு, மதம், இம்மதம் எமக்கும் சம்மதமே என்றனர், லெனின் கிராடு மக்கள்.

*சத்தியம்—சன்மார்க்கம்—அழிவில்லா அழகு!* இதை யார் இல்லை, என்பர். எவர் வேண்டாமென்பர்! உண்மையை உணரவும்,உத்தமனுக வாழவும் வழி வகுப்பதே மதம் என்று கூறுவதை யார் மறுப்பர்! லெனின் கிராடு வாசிகளிடம், 'மதம்'—பாரதத்தில் என்னென்ன 'வடிவம்'கொண்டு இருக்கிறது,என்னென்ன நினைப்புகளுக்கு இடமளிக்கிறது,எவ்விதமான நடவடிக்கைகளைச்செய்யச் செய்கிறது,என்பனவற்றை விளக்கி, சித்தரித்துக் காட்டிவிட்டு, இதுதான் மதம், எமது மதம், எமது முன்னேர்கள் காலமுதல்,சிதையாமல் இருக்கும் மதம்,என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் பேசிவிட்டு, பிறகு, மதம் வேண்டுமா? என்று கேட்டிருந்தால், தெரிந்திருக்கும், வேடிக்கையாகவும் இருந்திருக்கும் பற்களோடு போயிருந்தாலல்லவா,தெரிந்திருக்கும்—கதையில் நாம் கண்ட 'தொடை நடுங்கி' அவன்தான், பற்களை ஏற்கனவே அவனைப் பதியாகக் கொண்டிருந்த பஜாரிக்கு அர்ப்பணித்து விட்டானே.

டாக்டர் இராதாகிருஷ்ணன் போன்றவர்கள், ஊரும் உலகமும் தம்மையும் தமது திறமையையும் மெச்சும்படியாக நடந்து கொள்வதற்காக, அங்கெல்லாம் சென்று, மதமென்றால்,

அன்பு
அறிவு
உண்மை
பண்பு
அழகு

என்றெல்லாம், பேசிவிடுகிறர்கள், இங்கு அவர்கள் காண்பது என்ன?

ஆமை
அனுமான்
வராகம்
காளை

போன்ற வாகனுதிகளிலே ஏறும் *சாமிகள்!*

அவைகளைச் சுமந்து, 'காப்புக் காச்சி'போல உடலம் படைத்தவர்கள்! மேலே அமர்ந்து மேனியில் பூசப்பட்டுள்ள சந்தனக் குழம்பை 'விசிறி' ஆறவைக்கும் விப்பிரர்.

காவடி
மோடி
சூலம்
வீதியில் புரள்வது
வேல்குத்தி ஆடுவது
மொட்டை அடித்துக்கொள்வது
கண்ட குட்டையில் புரள்வது!

இவை போன்றவைகள்!

சத்யம்
சன்மார்க்கம்
அழகு
லெனின் கிராடிலே இது பேச்சு,
வெண் பொங்கல்
புளியோதரை
தயிரன்னம்
அக்கார வடிசல்

ஆரியருக்கு

மானியம் விடுவது
காணிக்கை
கொடுப்பது

திராவிடர் செய்யும் திருப்பணி!


கேள்விகள் கேட்டனர் என்கிறார்—பதிலும் அளித்தாராம், சொல்கிறார்.

தம்பி, அங்கு என்னென்ன கேள்விகள் கேட்டார்கள் என்பதை அவன் கூறவில்லை. போகட்டும். இங்கு, நீயோ நானோ கேட்கும் கேள்விகளுக்கு இவரும் இவரைப் போன்றாரும் பதில் கூறுவாரா, சபிப்பர்.

கேட்க வேண்டியது ஒன்று இரண்டா, ஓராயிரம் உண்டே, எதற்குத்தான் பதிலளிக்க முடியும்.

இங்கே உள்ள குப்பை கூளத்தைக் கூட்டிச் சுத்தம்செய்ய முடியவில்லை, அங்கே போனாராம்,அற்புதமாகப் பேசினாராம், வெற்றி பெற்றாராம். பளா, பளா, அடுக்களை நாற்றத்தைக் கழுவாமல் அத்தர் வியாபாரம் செய்யப் போனது போலல்லவா இருக்கிறது.

அன்புள்ள,



16—10—1955

# போலீஸ்! போலீஸ்!

*பண்டித நேருவின் போக்கு—மொழிவழி அரசின் அவசியம்.*

தம்பி,

"எங்கெங்கு கொதிப்பும் கொந்தளிப்பும் ஏற்படக் கூடும் என்று தெரிகிறதோ, அங்கெல்லாம் பலமான பாதுகாப்பு அமைத்துக்கொள்ள வேண்டும்; அது குறித்து, உடனே எமக்குத் தெரிவிக்க வேண்டும்"

போலீஸ் பாதுகாப்பு அமைத்துக் கொள்வதென்றால் என்ன என்பதைத்தான், எல்லோரும் அறிவார்களே! பொதுக் கூட்டத்திலே போலீஸ் வளையம் இருக்கும்! அத்துமீறிப் பேசினார்கள் என்ற காரணம் காட்டி வழக்குகள் தொடரப்படும். தடியடி, துப்பாக்கி, இவைகளெல்லாம் கிளம்பும்.

கல்லக்குடியிலும் தூத்துக்குடியிலும் நாம் அனுபவித்தோம்.

பிற கட்சிக்காரர்கள் பிற இடங்களிலே கண்டனர்.

*போலீஸ் பாதுகாப்பு!* தம்பி! வெள்ளைக்கார ஏகாதிபத்யம் எந்தமுறையைக் கையாண்டு வந்ததோ அது இன்னும் மடிந்துபடவில்லை. மாறாக, புது மெருகுடன் புறப்படுகிறது.

கொதிப்பும் கொந்தளிப்பும் உள்ள இடங்களிலேபோலீஸ் பாதுகாப்பு பலமாக இருக்கட்டும் என்றால், அதன் பொருள், மக்கள் தங்கள் மனக்குறையை எடுத்துக் கூறினால், குமுறலை வெளியிட்டால், பிடி, அடி, சுடு, விடாதே என்பதுதான்.

கொதிப்பும் கொந்தளிப்பும், மக்களிடம் ஏன் ஏற்பட்டது. மக்களுடைய இயல்பா அது, பொழுது போக்கா! பாடு பல பட்டு கிடைப்பதைக் கொண்டு குடும்பம் நடத்திச்செல்வோம் என்ற பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொண்டுவரும் மக்கள், அமைந்திருக்கிற சர்க்கார் கேட்கும் வரி கொடுத்து, காட்டும் வழி நடந்து, திட்டும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டுவரும் மக்கள், ஏன்கொதிப்புஅடைகிறார்கள்? என்ன காரணத்தால் கொந்தளிப்பு ஏற்படுகிறது, அந்தக் கொதிப்பையும் கொந்தளிப்பையும் போக்குவதற்கான வழிவகை என்ன என்பதுபற்றி எண்ணிப் பார்த்திடாமல், அதற்கேற்ற முறை

யில் காரியமாற்ற முன்வராமல், "கொதிப்பா? கொந்தளிப்பா? சரி! சரி! சரியான முறையிலே போலீஸ்பாதுகாப்புஅமைத்து, பயல்களின் கொட்டத்தை அடக்கிவிடு!"—என்று கட்டளை பிறப்பித்திருக்கிறது டில்லி. ஆமாம், தம்பி! டில்லி சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கு அனுப்பியுள்ள 'தாக்கீதின்' கருத்தினைத்தான் நான் துவக்கத்திலே குறித்திருக்கிறேன்.

நேரு பண்டிதரின் நேர்த்தி மிக்க குணங்களைப் பாராட்டி, அவருடைய 'பவனி'யைக் கோலாகலமான விழாவாக்கிக் கொண்டாடி, மகரதோரணம் கட்டி, ஊரெல்லாம்அழகாக்கி, பாதைகளைச் செப்பனிட்டு, மரங்களுக்கும் சாயமடித்து, மட்டற்ற உற்சாகத்தோடு மகோற்சவம் கொண்டாடினார்களே, அந்த மக்களுக்கு – ஏலக்காய் மாலையும், பொன்னாடையும், ரோஜாவும், மல்லியும், வரவேற்பும் வாழ்த்தும் பெற்றுக் கொண்டு சென்றாரே அந்தப் பண்டிதர், சுடச் சுடத்தருகிறார், உடனடியாகத் தெரிவித்துக்கொள்கிறார்,தமது நன்றியறிதலை! போலீஸ் படை தயாராக இருக்கட்டும்! யாரார், இது அறமல்லவே, அழகல்லவே என்று கூறுகிறார்களோ, அவர்கள் மீது, எங்கெங்கு ஏன் என்ற குரல் கிளம்புகிறதோ அங்கெல்லாம் போலீஸ் கண் பாயட்டும்;எங்கெங்கு மனக்குறை வெளியிடப்படுகிறதோ, அங்கெல்லாம் போலீஸ் இருக்கட்டும்; உடனே அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, எனக்கு அறிவித்து விடவேண்டும்! – என்று கூறி இருக்கிறார்!

கொதிப்பும் கொந்தளிப்பும் ஏற்பட இருக்கிறது என்பதைப் பண்டிதர் உணருகிறார்: ஏனெனில் பண்டிதரின் போக்குத்தான், இந்த கொதிப்புக்கும் கொந்தளிப்புக்கும் காரணமாக அமைந்திருக்கிறது! கொதிப்பும் கொந்தளிப்பும் கிளம்பப் போகிறது, ஆகவே போலீஸ் படைகளை அனுப்பி, அடக்கு! அடக்கு முறையை அவிழ்த்துவிடு,என்கிறார் அகில உலகிலும் பவனி வந்து சாந்தி,சமாதானம், சமரசம் போன்ற பேருண்மைகளைப் பேசிவரும், பஞ்ச சீலர்!

கொதிப்பும் கொந்தளிப்பும் கொள்ளக் கூடும்—காரணம் கண்டறிக; குறை கூறுவர், சமாதானம் கூறுக; துயர் அடைவர், துயர் துடைத்திடுக!—என்று கூறுவார் எமது பண்டிதர், அதிகார வெறியும் ஆணவப் போக்கும், ஏகாதிபத்தியத் திமிரும் கொண்டவர்களன்றோ, மக்களிடம் கிளம்பும் கிளர்ச்சியைத் தடுக்கஅடக்குமுறைவெறிநாய்களை அவிழ்த்துவிடுவர்; காலமெல்லாம் விடுதலைக்குப் போராடிய கர்மவீரன், காந்தி அடிகளின் வாரிசு, மனிதருள் மாணிக்கமாம் எமது நேருவா, வெள்ளையன்போல் வெறியாட்ட மாடுவார், என்று பேசிடும் காங்கிரஸ் அன்பர்கள், முக்காடிட்டுக் கொள்ள வேண்டியவகையிலே,நேருசர்க்காரின்உத்தரவு உருவெடுத்திருக்கிறது,

கொதிப்பும் கொந்தளிப்பும் கிளம்பினால், குண்டாந் தடியும் குண்டு மாரியும் புறப்படும் என்று!

அஹிம்சையை அவனிக்கே போதித்த அண்ணல் காந்தியின் ஒப்பற்ற வாரிசே, வருக!

அவனி புகழும் அன்பு நெறியை, அறநெறியை, போர் வெறி கொண்டு அலையும் வல்லரசுகளுக்கும் ஊட்டி வெற்றி கண்ட, முடிசூடா மன்னா வருக!

மக்களாட்சியின் மாண்பினை அறிந்து ஒழுகும் மனிதகுல மாணிக்கமே வருக!

இவை போன்ற புகழ் மாலைகளை, அவர் 'பெரும்பாரம்' என்று கூறத்தக்க அளவு சூட்டி மகிழ்ந்தனர், மக்கள், பெருந் தன்மையுடன். அவர்களிடம் கொதிப்பும் கொந்தளிப்பும் கிளம்பும் எனத் தெரிகிறது, எனவே உடனே அடக்கிடப் போலீசை ஏவுக! என்று கட்டளையிடுகிறார் கண்ணியர்!

தம்பி! வெள்ளைக்காரன் போடும் உத்தரவுபோல இருக்கிறதே என்று கேட்கிறாயா! ஆமாம். இன்றைய டில்லி ஆட்சி நிறத்திலே சற்றுப் பழுப்பே தவிர, நடவடிக்கையிலே அதற்கு அண்ணன் என்பதை அடிக்கடி நினைவூட்ட,துப்பாக்கிச் சத்தம் கிளப்பியபடிதானே இருக்கிறது துரைத்தனம்!

எதாவது ஒரு பிரச்சினை எழுப்பினால்,மக்கள் உள்ளத்தை அந்தப் பிரச்சினை உலுக்கினால்,வெள்ளைக்கார ஆட்சி முதலில் 'கவனியாமல்' இருக்கும்,பிறகு அலட்சியமாகச் சில'புத்திமதி கூறும்,பிறகு கண்டிக்கும், எச்சரிக்கை விடும்;பிரச்னை குறித்து மக்களிடம் அக்கறை தொடர்ந்து இருக்குமானால், மக்களைச் சில காலம் செயலற்றவர்களாக்குவதற்காக ஒரு தந்திரம் செய்யும்—அதுதான் கமிஷன் அமைப்பது என்பது!

''பிரச்சினை,சிக்கல் நிறைந்தது—பலர் பலவிதமான கருத்துரை கூறுகின்றனர்—உண்மை எது பொய்யுரை எது என்பது விளங்கக் காணோம்—எனவே இது சம்பந்தமான எல்லா உண்மைகளையும் அறிந்து ஆய்வுரை வழங்கஆண்டிப் பட்டி வேந்தர் தோண்டியப்பர், ஆஸ்தீக பூஷணம் ஆனந் தாச்சாரி, மவுலானா மவுலவி ஷருபுதீன், மேரிமாதா கல்லூரிப் பேராசிரியர் ஜோசப் ஆகியோர் கொண்ட கமிஷனை நியமித் திருக்கிறோம்'' என்று அறிக்கை வெளியிடுவர்!

'கமிஷன்' அமைக்கப்படுகிறது என்றால், 'பிரச்சினை' குறித்து, எந்த நடவடிக்கையும் எடுக்காதே என்பது மட்டுமல்ல, பேசாதே,சிந்திக்காதே,என்பது பொருள்!காலங்கடத்தும்மார்க்கம்! கவனத்தை வேறு பக்கம் திருப்பிவிடும் தந்திரம்! துரைமார் சர்க்கார் இதை அடிக்கடி கையாண்டனர்; இப்போது அவர்களே மூக்கின்மீது விரல்வைத்துஆச்சரியப்படும்

வகையில், அந்தத் தந்திரத்தை நேரு சர்க்கார் கையாண்டு வருகிறது!

ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் அமைப்பு இத்தகைய தந்திரத்திலே ஒன்றுதான்!

இங்கு மக்கள், சாத்பூரா மலைச்சாரலிலிருந்து குமரி வரையிலும், கேட்டது ராஜ்ய புனரமைப்பு அல்ல!

*மக்கள், கேட்பது மொழிவழி அரசு!*

மொழிவழி அரசுக் கிளர்ச்சி வலுப்பெற்றது; வெள்ளையர் போலவே வடவர் அழைத்துள்ள சர்க்கார், ஒரு 'கமிஷன்' அமைத்தது. கமிஷனுக்குச் சர்க்கார் இட்ட வேலை, மொழி வழி அரசு எங்ஙனம் இருத்தல் வேண்டும்என்பதல்ல;ராஜ்யப் புனரமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்பதாகும்!

மொழிவழி அரசு என்ற மக்கள் கோரிக்கையை மதித்து அதன்படி நடத்திடத் துரைத்தனத்தார்முடிவு செய்திருப்பார்களானால், எல்லைக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்; ராஜ்ய புனரமைப்பு என்ற ஏமாற்று வேலைக்கு இடம் ஏற்பட்டிருக்காது!

ஆனால் டில்லி சர்க்கார், மக்கள் குரலுக்கு மதிப்பளிக்க விரும்பவில்லை,மழுப்பவும், காலத்தை ஓட்டவும்,கவனத்தை வேறு பக்கம் திருப்பவுமே விரும்பினர்:எனவேதான்,ராஜ்யப் புனரமைப்பு கமிஷன் அமைத்தனர்.

அப்போதே இதனைக் கண்டித்தனர், விளக்கமறிந்தோர்; ஆட்சியாளர்களின் ஆதரவு தேடி அலையும் அடிவருடிகளோ, மொழிவழி அரசுபற்றி இப்போது ஏதும் கிளர்ச்சி வேண்டாம், இதோகமிஷன்அமைந்துவிட்டது;நியாயம் கிடைக்கும்;நேரு ஆட்சியிலே நீதி கிடைக்கும், என்று நல்வாக்குக் கொடுத்தனர்.

'கமிஷன்' தன் அறிக்கையைநீட்டிவிட்டது; நாட்டிலே பல்வேறு இடங்களில் கொதிப்பும் கொந்தளிப்பும் கருவில் உருவாகிவிட்டன; இது தெரிந்ததும், கொந்தளிப்பு கிளம்பக் கூடிய இடங்களுக்குப் போலீஸ் படைகளை அனுப்புக! என்று டில்லி உத்தர பிறப்பித்து விட்டது!!

கண் விழித்துக் கொண்டால், அவன் தலை மீது போடுவதற்கு, பாராங்கல் ஒன்றை முதலிலேயே தயாராக வைத்துக் கொள்—என்று கைதேர்ந்த திருடன், ஆரம்பக்காரனுக்குச் சொல்வானாம்!!

மாகாண சர்க்காருக்கு மத்திய சர்க்கார், கூறுகிறது,மக்கள் கிளம்பினால், உடனே மண்டையிலடித்து உட்கார வைக்கத் தக்க முறையில், போலீஸ் ஏற்பாடு தயாராகட்டும் என்று!

கமிஷன் வெளியிட்ட அறிக்கை, நிச்சயமாகக் கொதிப்பையும் கொந்தளிப்பையும் உண்டாக்கும் என்பதை நேரு நன்ருக அறிவார்!

மக்களுடைய உரிமை மண்ணுக்கப்படும் போது, நீதி புறக்கணிக்கப்பட்டு, நியாயம் நசுக்கப்படும் போது, கொதிப்பும் கொந்தளிப்பும் மட்டுந்தாஞ. புரட்சியே வெடித்திருக்கிறது என்பதையும், அதனை அழித்தொழித்திட போலீசும் படையும் பாய்ந்தோடித் தாக்கியும் முடியாது போயிற்று என்பதையும் வரலாற்றுச் சுவடி எடுத்துக் காட்டத்தான் செய்கிறது. எனினும், நேரு பண்டிதர், மக்களிடம் தாம் ஊட்டிவிட்ட 'போலித் தேசிய அபின்' அவர்களைச் செயலாற்றவர்களாக்கி விட்டது; அவர்களுக்கு, தங்களுக்குள்ளாகவே தகராறுகளை வளர்த்துக் கொள்ளவும். சிண்டு பிடித்துச் சண்டையிடவும், சிறு மதி கொண்டு சச்சரவு கொள்ளவும், கூடிக் கெடுக்கவும், காலை வாரிவிடவும், காட்டிக்கொடுக்கவும் தான் விருப்பமும் பயிற்சியும் இருக்கிறதே தவிர, அவர்கள் தமக்குள் ஒன்றுபட்டுக் கொடுமையைக் களைந்திட, அக்ரமத்தை எதிர்த்திட, அடிமைத் தளைகளை நொறுக்கிட ஆற்றலுடன் போரிட மாட்டார்கள், என்று நம்புகிருர் மக்களைப்பற்றி மதோன்மத்தர்கள் கொண்ட கருத்தைத்தான் இந்த மனிதகுல மாணிக்கமும் கொண்டிருக்கிறது! எனவே தான், போலீஸ்! போலீஸ்!! என்று டில்லி கொக்கரிக்கிறது!

*மொழி வழி அரசு* என்பதுஇன்று நேற்று முளைத்ததல்ல!

காந்தீயக் கழனியிலே பயிரிடப்பட்டதாகும்!

அதற்கும் முன்பேகூட, விடுதலைக் கிளர்ச்சிக்கானமுயற்சி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே, *மொழி வழி அரசு* மக்கள் மன்றத்திலே உலவிற்று.

பாரத மக்களே! பரங்கியின் ஆட்சியை நீக்கிட வாரீர்!– என்று மட்டும் கூறிஞரில்லை, பாலகங்காதர திலகர்! —அவருடன் இருந்தோரும் அவர் வழி வந்தோரும் விளக்கமாகவே பேசினர், மக்கள் வீறு கொண்டு எழத்தக்க வகையில் மொழி வழி அரசு அமைய வேண்டும் என்ற குறிக்கோளுடன்.

சுயராஜ்யப் போர்ப்படை திரட்டிப் பணியாற்றிய சோர்விலாத் தலைவர்கள், எந்தெந்த இடத்தில் எந்தெந்த மொழியாளர்களைக் கண்டனரோ, அவர்களுடைய வரலாற்றை ஏடுத்துக் காட்டித்தான், உணர்ச்சியூட்டினர்!

சேரனும் சோழனும் பாண்டியனும் ஆண்ட செந்தமிழ் நாட்டவரே! இன்று செக்குமாடுகளென நம்மை நடத்தும் வெள்ளையன் ஆதிக்கத்தை எதிர்த்திட வாரீர்! என்று கூவி அழைத்தனர்.

மாவீரன் சிவாஜியின் வழி வழி வந்த வீரர்காள்! மராட்டியம் இன்று மமதை நிறைந்த வெள்ளேயன் பிடியிலேசிக்கிச் சீரழிவதைப் பார்த்தும் உங்கள் இரத்தம் கொதிக்கவில்லேயா! எங்கே சிவாஜி ஊட்டிய வீரம்! அந்த மாமன்னன் தந்த விடுதலே உணர்ச்சி மங்கிக் கிடக்கிறது.மராட்டிய மாவீரர்காள்! மடிந்து போகவில்லே! மாற்ருனே ஓட்டிட வாரீர்! மராட்டியத்தின் கீர்த்தியை மீண்டும் நிலே நாட்டிட வாரீர்!—என்று தான் அழைத்தனர்!

விஜய நகர சமஸ்தான காலத்தைக் கவனப்படுத்தித் தான் ஆந்திரர்களே அழைத்தனர்!

ரஞ்ஜித் சிங்கின் அருமை பெருமைகளே எடுத்துரைத்தனர், பாஞ்சாலத்தில்!

ஷா ஆலம் சக்கரவர்த்திக்கு வெள்ளேயர் இழைத்த கொடுமைகளே எடுத்துக் கூறித்தான், டில்லி வட்டாரத்தினரை, இஸ்லாமியரை அழைத்தனர்!

இங்ஙனம், மொழிவழி அமைத்திருந்த அரசுகளின் முன்னுள் சிறப்புகளே எடுத்துக் காட்டித்தான், போர்முகாம் அமைத்தனர்!

இது போதாது என்று, காந்தியார், தெளிவுபட, திட்டவட்டமாகத் தெரிவித்தார்,சுயராஜ்யம் கிடைத்ததும்,'மொழி வழி அரசு' தான் அமைக்கப்படும் என்று.

அன்று முதல் இன்று வரை, 'மொழி வழி அரசு' என்ற பிறப்புரிமைக் கிளர்ச்சி இருந்து வருகிறது.

மக்களுடைய கிளர்ச்சிக்கு மதிப்பளிக்கும் மாண்பு இருந்திருக்குமாளுல்,'மொழி வழி அரசு' திட்டத்தை நடைமுறைக்குக்கொண்டுவர நேரு சர்க்கார் முனேந்திருக்குமே தவிர, மூக்கில் கொஞ்சம் நாக்கில் கொஞ்சம் அறுத்து எடுத்து ஒட்டு வேலே நடத்தச் சொல்லும் ராஜ்ய புனரமைப்புக் கமிஷனேயா நியமித்திருக்கும்!!


மொழி வழி அரசு என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டால்,எந்தெந்த இடத்தில் எந்த மொழியாளர் தொடர்ச்சியானபிரதேசத்தில் வசிக்கின்ருர்கள் என்பதைக்கண்டறிந்து அந்த வகையிலே எல்லேகளே நிர்ணயிக்கும் வேலேநடந்திருக்கும்: ராஜ்ய புனரமைப்பு என்ற 'கபட நாடகம்' நடைபெற்றிருக்காது.

பொறுப்பற்ற முறையில், மக்களுடைய உரிமையை உதாசீனம் செய்துவிட்டு, அவர்களுக்கு அநீதி இழைக்கும் திட்டத்தை நீட்டி, இதைக் கண்டு மக்கள் குமுறிஞல், சும்மா விடக்கூடாது கூப்பிடு 'போலீசை' என்று கூவுவது! இதற்கா

நேரு சர்க்கார்! இந்த நேர்த்தியான முறையிலே ஆட்சி நடத்துகிருர் என்று மகிழ்ந்தா தம்பி, ஊரெல்லாம் உற்சவம் கொண்டாடினார்கள், உலகெலாம் சுற்றி · வரும் அந்த மலைமகனுக்கு! !

அன்புள்ள,

23—10—1955.



கடிதம் : 25

# போலீஸ்! போலீஸ்!

*தேவிகுளம் பீர்மேடு சிறப்பும் அது பற்றிய பிரச்சினையும்—காமராஜரின் போக்கு—அவர் தேர்தல் முறை.*

தம்பி,

பச்சை மாமலைகள்!
பாங்கான காட்சிகள்!
பாடும் அருவி?
பயமற்ற மிருகங்கள்!
ஓங்கி வளர்ந்த மரங்கள்!
தேயிலைத் தோட்டங்கள்!
முக்கனி குலுங்கும் பழத் தோட்டங்கள்!
தேக்கங்கள்!
தேனாறுகள்! !

தமிழகம் தந்திடும் எழிலோவியங்களைக் கண்டு, என்னை மறந்து கிடந்ததால், சென்றகிழமை உன்னுடன் அளவளாவும் வாய்ப்பினைப் பெற்றேனில்லை. மலைவளமும், காட்டு வளமும், கானாறுகளும், களிறுகளும், மான்கூட்டமும், மலர்த்தோட்டமும், புரண்டோடும் பேராறுகளும், கெம்பீரமாகக் காணப்பட்ட நீர் நிலைகளும், சிந்துபாடிடும் சிங்காரச்சிற்றருவிகளும், வாளை துள்ளிடும் வாவிகள், கெண்டை புரண்டிடும் ஆறுகள், பொன்பூத்திடும் வயல்கள், —தம்பி!—கண்ட காட்சிகள், எதைக் கூறுவேன், எப்படிக் கூறிஞல், எழிலை விளக்கிட முடியும்! கண்கண்டது—கருத்தில் நின்றது—கவி அல்ல பாடிக் காட்ட, ஓவியனல்ல தீட்டித்தர!! அத்தகைய காட்சிகளை,

3500 அடி உயரம் ஏறிச் சென்று கண்டிடும் வாய்ப்புப் பெற்றேன் சென்றகிழமை! சென்றது, மாநில மாநாட்டுக்கான நிதிபெற! கண்டது தமிழருக்கு இயற்கை அளித்துள்ள பெரு நிதியை!!

பாண்டி மண்டலத்தில் பல்வேறு இடங்களில் சென்று பற்றும் பரிவும், பாசம் கொள்ளத்தக்க வகையிலே வழங்கிடும் தோழர்களைப் பெருமளவில் கண்டு மகிழ்ந்து விட்டு, பாண்டி நாட்டுடன் ஒட்டிக் கிடப்பினும், அரசியல் நிர்வாகத்தின் கொடுமையினால் வெட்டுண்டு கிடக்கும் *பீர்மேடு* 'தாலூக்காவிலுள்ள வண்டிப் பெரியாறு எனும் இடம் சென்று, அங்கு அரும்பாடுபட்டு, நமது அகம் மகிழும் வண்ணம் கழகத்தைக் கட்டிக்காத்து வரும் தோழர்களிடம் அளவளாவி மகிழ்ந்தேன்.

*போலீஸ்! போலீஸ்!!* என்ற கூக்குரலை, நான் அங்கு செல்வதற்கு ஒரு கிழமைக்கு முன்பிருந்தே, ஆங்குள்ள சிலர் கிளப்பினராம்! தந்திகள் பறந்தனவாம், தடை உத்தரவு பிறப்பிக்கச் சொல்லி! கூட்டம் நடத்த அனுமதி தரக் கூடாது—குழப்பம் விளையும்- கொந்தளிப்பு மூண்டுவிடும் என்று கூறினராம் மலையாள நண்பர்கள்! பாவம்! அவர்கள் மருட்சி அடைந்துள்ளனர்! வண்டிப் பெரியாறு கூட்டம், தேவிகுளம், பீர்மேடு தாலூக்காக்களின் மீது தமிழரின் 'படை எடுப்பு'க்கான ஏற்பாடு என்ற அச்சத்தில், மலையாளத் தோழர்கள் திருவிதாங்கூர் சர்க்காருக்குத் 'தந்திகள்' கொடுத்திருந்தனர். எனினும் 'பனம்பள்ளி' சர்க்கார் பதட்டம் கொள்ளவில்லை; கூட்டம் நடைபெற்றது; மலையாளத் தோழர்களுக்கு 'விளக்கம்' தரும் வேலையை ஓரளவுக்குச் செம்மையாகவே செய்து முடித்தேன்.

தம்பி! தேவிகுளம் பீர்மேடு வட்டாரத்திலே காணப்படும், மலைவளமும், காட்டுவளமும் உண்மையிலேயே, திருவிதாங்கூர் சர்க்கார் திகில்கொண்டு, தீப்பட்ட குழந்தை போல் துடிதுடித்துக் கதறச் செய்யும், வகையில்தான் அமைந்திருக்கிறது!

ஏலமும், தேயிலையும், வாழையும் வகைவகையான பயன் தரும் தருக்களும், காணக்காட்சியாக இருக்கிறது எங்கும்! அதோ ஓர் மேகக் கூட்டம்—வெண்மை நிறத்துடன்—மறு விநாடி பழுப்பேறுகிறது—மெள்ளமெள்ள அணிபணி பூண்ட ஆரணங்கு, 'ஜடை' பாரம் தாங்காமல், இடை துவள நடை பயிலும் அழகுடன் உலவுகிறது - உள்ளத்தைச் சிலிர்த்திடச் செய்யும் ஓர் மென்காற்று வீசுகிறது—உடனே கருமுகில் ஆகி விடுகிறது—சூல் கொண்ட மேகம், மழை முத்துக்களை உதிர்த்

திட அவை தமை ஏற்றுத் தாலாட்டுகின்றன, தருக்களும் செடிகொடிகளும்!

தம்பி! ஓங்கி வளர்ந்திடும் மரங்களும், பலன் பல தரும் தருக்களும் கீழேயும் தான் காண்கிறோம். மலை மேலும்தான் உள்ளன—ஆனால், மகத்தானதோர் வித்யாசம் இருந்திடக் காண்கிறோம். கடிமணம் புரிந்தவன் காதலைச் சொரிந்தும், கன்னல் மொழியை வழங்கியும், இன்ப வாழ்வு நடத்திடுவதால், எழில் குலுங்கிடக் காட்சி தரும் ஏந்திழையின் முகத்திலே காணப்படும் விளக்கொணாததோர் 'தகத்தகாயம்' இந்தத் தருக்களிலும் செடி கொடிகளிலும், புல்பூண்டு, உதிர்ந்து கிடக்கும் சருகுகளிலும் கூடக் காண்கிறேன். இங்கே நாம் எப்போதும் காணும் தருக்களிடம், கடமைத வருத கணவனின் பராமரிப்பிலே இருக்கும் பாவையரிடம் காணப்படும், பொறுப்பு தெரிகிறது; அங்கு தம்பி! கண்ணாளன் பொழிந்திடும் காதலால் காரிகை கொண்டிடும் 'பொலிவு' தெரிகிறது இலையில்? மலரில், செடியில், கொடியில்! !

சிவப்பு, வெளிர் சிவப்பு, நீலம், வெளிர்நீலம், பச்சை, ஊதா, மஞ்சள், பொன்நிறம் தம்பி! வண்ணம் வகைவகையாகக் கொட்டிக் காட்டப்பட்டிருக்கும் ஓர் அற்புதமான ஓவியச் சாலைபோல், அங்கு மலர்கள்? ! மலர்த் தோட்டங்களை அங்கு யாரும் அமைத்திடும் முயற்சியில் ஈடுபட்டில்லை—அவர்கள் காயும் கிழங்கும், கனிவகையும், தேயிலையும், ஏலமும், இவை போன்றவையும் பயிரிட்டுப் 'பலன்' காணத்தான் பாடு பல படுகிறார்கள். அவர்களின் உழைப்பின் திறம் கண்டு உளம் கனிந்து, புன்னகை பூத்திடும் முகத்தினளாகி நிலமகள், அவர்களின் உள்ளத்துக்கு உவகை தர இந்த மலர் சொரிகிறாள் மகிழ்ந்து, என்று கூறவேண்டும் போலிருக்கிறது. உடன் வந்த தோழர்களில் பலருக்கு அந்த மலர்களின் பெயர்களே கூடத் தெரியவில்லை—எனக்குத் தெரியாது என்ற துணிவில் சிலர், மலர்களுக்கு ஏதேதோ பெயர் கூறினர்.

தேயிலை தோட்டங்களால் பெரும்பொருள் ஈட்டிடும் முதலாளிமார்கள் யாரையும் நான் பார்க்கவில்லை. ஆனால் அந்த மாமலைகளைப்பணத்தோட்டங்கள் ஆக்குவதற்காகப்பாடுபட்டு பாடுபட்டு, மேனி கருத்துக்கிடக்கும் தமிழ்ப் பாட்டாளிகளை ஏராளமாகக் கண்டேன். தேயிலைச் செடிகளை அவர்கள் வளர்த்திடும் திறத்தினையும், அதற்கு 'நோய்நொடி' வராமல் பாதுகாத்திடும்வகையினையும் கூறித், தமிழ்த் தொழிலாளர்களின் இரத்தம் இந்தச் 'செல்வம்' விளைவதற்காக எவ்வளவு கொட்டப்பட்டது என்பதை, என்னிடம், தோட்ட வேலை அனுபவமுள்ள நண்பரொருவர் எடுத்துச் சொன்னபோது தான் எனக்குப் புரட்சிக் கவிஞர்,

*சித்திரச் சோலைகளே!*
*உமைத் திருத்த இப்பாரினிலே*
*எத்தனை தோழர்கள் நம்*
*இரத்தம் சொரிந்தனரோ வேரினிலே!*

என்று பாடியிருக்கிருரே, அந்தக் 'கவிதை'யின் முழுப்பொருள் விளங்கிற்று.

புலியும் பிறவும், களிறும் காட்டெருமைகளும் ஏராள மாக உலவிடும் பெருங்காடுகளாக இருந்த நாட்களில், அந்தப் பகுதியில், தருக்களை மலைப்பாம்புகள் தழுவிக் கொண்டு கிடக் குமாம். காட்டாறுகள் சிலவேளைகளில் கரிக்குட்டிகளை உருட் டிக் கொண்டோடுமாம். அங்கு காபியும் தேயிலையும், ஏலமும் இன்னபிறவும் பயிரிட்டுப்பணம் பண்ண இயலும் என்ற எண் ணம் எழக்கூட முடியாத நிலை இருந்ததாம்! தமிழர்கள் எடுத் துக் கொண்ட பெருமுயற்சியும், அளித்த கடும் உழைப்பும் தான், காடு கனியும் நிலையைத் தந்தது என்று விளக்கமளித்த னர்; வியப்புற்றேன்! !

காடுகளை அழித்தும் களிறுகளை விரட்டியும், காட்டெரு மைகளால் தாக்குண்டும், கடும் புலிகளுடன் போராடியும் தமி ழர்கள் அமைத்துக்கொடுத்த இடங்களே இன்று 'கண்ணன் தேவன்' தேயிலைத் தோட்டங்கள், என்றனர்!

பாராட்டுவதா, பரிதாபப்படுவதா! அகமகிழ்வதா அனு தாபப்படுவதா!!—என்று தெரியாமல் திகைத்தேன்! தமிழர் பலரின் இன்னுயிரைக் குடித்து விட்டுத்தான், தோட்டங்கள் துரைமார்கள் கொழுத்திடத்தக்க செல்வத்தைக் கொடுத்துள் ளன!! நான் சென்று அன்றிரவு தங்கி இருந்த இடத்துக்குப் பெயரே, ஆனைக்கல் என்றால், தம்பி! இடத்தின் முன்னாள் இயல்பு எவ்வண்ணம் இருந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாமல்லவா—ஓரளவுக்கேனும். அன்றிரவு கூட்டம் முடிந்தது, 'ஆனைக்கல்' தோழர் லியான் அவர்களுடைய இல் லத்தில் அன்பு விருந்து உண்டான பிறகு, இரவு எட்டுமணிக் குக் 'கீழே' செல்ல விரும்பினேன்—தோழர் லியான், வேண் டாம் மூடுபனி பாதையைக் குறுக்கிடக்கூடும், அதுகூடப் பர வாயில்லை, வழிதவறி வரும் யானை குறுக்கிடும், பிறகு என்று பீதியுடன் கூறினார்—நான் தைரியமாக வாதாடிவிட்டு, பாதுகாப்பு உணர்ச்சியுடன் பயணத்தை 'ரத்து' செய்துவிட்டு, இரவுப் போதை அங்கு கழித்துவிட்டு, விடிந்தபிறகுதான் பயணத்தைத் துவக்கினேன். ஆனால், தோழர் லியான் எதிர் பாராத வேறோர் ஆபத்து குறுக்கிட்டது—அது கூறுமுன், தம்பி, வேறுசில கூறி விடுகிறேன்.

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் எனும் தமிழர் பகுதிகளைத் தமிழகத்துடன் சேர்த்தாக வேண்டும்என்

பதற்கா, எத்தகைய கஷ்ட நஷ்டமும் ஏற்கும் துணிவு கொண்ட உள்ளம் படைத்தவர்கள் நாஞ்சில் பகுதியில் நமது கழகத்தில் ஏராளமாக உள்ளனர் என்று மட்டுமே எண்ணிக் கொண்டிருந்தேன்—இப்போது இதற்கான ஆர்வம் கொண்ட தமிழர்கள் மலையில் மட்டுமல்ல, அதைத்தொட்டுக்கொண்டும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டும் உள்ள பெரியகுளம் தாலுக்கா முழுவதிலும் ஏராளமாக உள்ளனர் என்பதைத் தெரிந்து கொண்டேன். மலை அடிவாரமாக உள்ள கூடலூர், ஓர் நல்ல பாசறை. கம்பம்—தேவாரம்—கோம்பை—போடி—பெரியகுளம்—இங்கெல்லாம், நமது கழகம் மிக வலிவும் பொலிவும் கொண்டதாக இருக்கிறது. பொதுவாகவே பெரியகுளம் வட்டாரத்தினர், மலை மீதுள்ள ஏலத் தோட்டங்களின் உரிமையாளர்கள்—அந்த வட்டாரத்து வாழ்க்கைத் தரமே, மலையில்அவர்களுக்கு உள்ள தொடர்பைப் பொறுத்துத் தான் இருக்கிறது. இந்தப் பகுதியில் உள்ள பெரும் செல்வர்கள், காமராஜர் தமது பாதுகாப்பாளர் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்! ஆனால், தேவிகுளம் பீர்மேடு பகுதிகளுக்கான கிளர்ச்சிக்கு வீரர்கள்—தியாகிகள்—அஞ்சா நெஞ்சுடன் அறப்போரில் ஈடுபடவல்லோர் தேவைப்படும்போது, நமது கழகம்தான், பணியாற்ற முடியும். வாய்ச்சொல் அருளவும், வழிவகை கூறவும் தலைவர்கள் பிறமுகாம்களில் கிடைக்கக்கூடும். ஆனால், காரியமாற்றவும் கடும் கிளர்ச்சிகளில் ஈடுபடவும், கழகம்தான் முன்வரவேண்டிய வாய்ப்புப்பெற்றிருக்கிறது. மலைமீதுள்ள தமிழ்த் தோழர்களிடம் நாம் பெறக்கூடிய ஆதரவினைவிட, அளவிலும் வகையிலும் அதிகமான அளவு பெரியகுளம் வட்டாரத்திலே திரட்ட இயலும்—திரட்டிட வேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

ஒன்று மட்டும் முன்கூட்டியே தெரிந்துகொள்வது, களம் அமைக்க பெரிதும் உதவக்கூடியது என்று எண்ணுகிறேன்-திருவிதாங்கூர்சர்க்கார்எளிதில் இடமளிக்காது-இணங்காது!-தமிழரின் உரிமையைப் பறிப்பது அறமாகாது என்று கருதும் நேர்மை மலையாளநாட்டு தலைவர்களில் ஒருவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை-தமிழர்களைக் கூலிகள்-பிழைக்கவந்தவர்கள்-அன்னியர்கள்-என்று மலையாளிகள்கருதும்படி-(ஏசும்படி மட்டுமல்ல) பலமான பிரச்சாரம் நடைபெற்றிருப்பதுடன், விளைவுபற்றி எண்ணிப்பாராமலேயே வீரத்தை வீம்பாக்கிப் பேசிடும் வித்தகர் சிலரால், தமிழர்—மலையாளி மனமாச்சரியம், கொழுந்துவிட்டெரியும் நிலையும் இருக்கிறது—இதனை மறைத்தும் பயனில்லை—குறைத்து மதிப்பிடுவதும் தவறு—இந்த மாச்சரியம் மேலும் வளரும் தன்மையில் கிளர்ச்சிகள் உருவாக்கப்படுவதும்,அங்கு உள்ள தமிழர்களுக்குப் பேராபத்

தாக முடியும். மற்றுமொன்று விளக்கமாக்கப்பட வேண்டும்—வண்டிப் பெரியாறு கூட்டத்தில் நான் இதனை வலியுறுத்திக் கூறினேன்—மத்ய சர்க்கார் பிரித்தாளும் சூழ்ச்சியைத் திறம்பட நடத்தவே திட்டமிட்டுவிட்டிருக்கிறது. எனவே, தமிழர்—மலையாளி மனமாச்சரியம் வளருவதை, டில்லி புன்னகையுடன் பார்த்துக் கொண்டு, 'மோதுதல்' ஏற்பட்டால் போலீஸ்! போலீஸ்! என்று கொக்கரித்து அடக்குமுறையை அவிழ்த்துவிடவே செய்யும்.

தமிழர், தெலுங்கர், மலையாளி, கன்னடியர்—என்போர் திராவிடர் என்ற இன உணர்வுகொண்டு, கூட்டாட்சிக்கான வேட்கை கொள்வர். அது, நமது ஏகாதிபத்தியத்திட்டத்தைத் தகர்த்துவிடும் என்ற கிலி டில்லிக்கு ஓரளவுக்குஏற்பட்டசமயமாக, இந்த 'மொழிவழி அரசு'ப் பிரச்சினை கிளம்பிற்று—இதிலே, தமிழரும் மலையாளியும்,மனமாச்சரியம் கொள்வதும், தமிழரும் ஆந்திரரும் தகராறு மூட்டிக் கொள்வதும், தமிழர் கருநாடகத்தார் மனக்கசப்புக் கொள்வதும், டில்லிக்கு, மிக மிக மகிழ்ச்சி யூட்டுகிறது. டில்லியின் எதேச்சாதிகாரம், மார்வாடி ஆதிக்கம், நேருஏகாதிபத்தியம், வடநாட்டுச்சுரண்டல், எனும் 'பேச்சு' ஓரளவுக்கு நிறுத்தப்பட்டு, தேவிகுளம் யாருக்குச் சொந்தம், திருப்பதியை ஆந்திரர் கொள்வதா, பெல்லாரியை இழப்பதா, காசர்கோடு களவாடப்படுவது அக்ரமம், என்று இத்தகைய பிரச்சினைகள் முன்னணிக்கு வந்துசேரும், என்பதற்கான அறிகுறி கண்டு, டில்லி களிப்படைகிறது! 'மொழிவழி அரசு' நேர்மையுடனும் உரிமை முறைப்படியும் அமைவதற்கான 'அமளி'யை மூட்டிவிட்டு விட்டால், இதற்காக இவர்கள் ஒருவருடன் ஒருவர் அடித்துக்கொண்டு கிடப்பர்—நாம் தப்பித்துக் கொள்ளலாம் என்பதே டில்லியின் திட்டம். பிரித்தாளும் சூழ்ச்சியைப் பிரிட்டிஷாரிடமிருந்து வடநாட்டுத் தலைவர்கள் நன்ருகக் கற்றுக்கொண்டிருக்கிருர்கள்.

தேவிகுளம் பீர்மேடு பிரச்சினைக்கான கிளர்ச்சியின்போது மக்கள் மன்றத்திலே, வடநாட்டுச் சர்க்காரின் இந்தப் பிரித்தாளும் சூதுபற்றி எடுத்துரைத்து, உண்மைப் பகைவன் யார் என்பதைச் சுட்டிக் காட்டும் வேலையை, பிறகட்சிகள்செய்யும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை! நேருவின் நெரிந்த புருவத்தைக் காணவும் அஞ்சுகிருர்கள் அந்த வீரர்கள்! அந்தக் காரியத்தைச் செய்யும் 'தனிஉரிமை'யைநாம்தான் நிறைவேற்றித் தீர வேண்டும் என்று எண்ணுகிறேன். இதற்கான ஆர்வம்; இந்தப் பகுதியில் மிக வளமாக இருக்கிறது.

நல்லார்வம் கொண்ட தோழன் ஒருவன்தான், எங்களை மலைமீது மோடார் வானில் கொண்டு சென்ருன்—ஆர்வம்

அவனைச் சளசளவென்று பேசச் செய்தது கலகல வென்று சிரிக்க வைத்தது, பட படவென்று நடந்துகொள்ளச் செய்தது. வண்டியோ 'லொட லொட!!' அதை அவன் பொருட்படுத்தியதாகவும் தெரியக்காணோம்.நாங்கள் அதனைக்கவனிக்கவும் முடியாத நிலையில்,காட்சியின் கவர்ச்சியிலே சிக்குண்டு கிடந்தோம்.மலையினின்றும் கீழே வண்டிவருகிறது – உதைத்துக் கொள்கிறது,உறுமுகிறது—உருளைகளிலே ஏதோ சிக்கிக் கொண்டு விட்டது போன்ற சத்தம் கேட்கிறது—ஆர்வம் நிரம்பிய அந்தத் தோழனே, எவ்வளவு பழுதுபட்ட வண்டியும் தன் கைவண்ணத்தினால் செலுத்த முடியும் என்பதை எடுத்துக் காட்டும் ஒரே நோக்கம் கொண்டவனாகக் காணப்பட்டான். என் செய்வது?

'பழுதுபட்டிருக்கிறதோ?' என்று கேட்கிறார் தோழர் லியான், ஏதோ ஓர் மோட்டார் உறுப்பின் பெயரைக் குறிப்பிட்டு—அவன் அலட்சியமாகக் கூறுகிறான், இதுதானா! பிரேக்கே கூடத்தான் சரியாக இல்லை! என்று.

வண்டி உருண்டோடி வருகிறது-கீழே அல்லவா இறங்குகிறோம். இரண்டு வண்டிகள் ஒரு சேரச் செல்ல முடியாத பாதை; வளைவுகள். ஒரு புறம் மலைகள், மறுபுறம் பெரும் பெரும் பள்ளங்கள்; கீழே இன்னும் இறங்க வேண்டியது 1500 அடி இருக்கும். திடீரென்று மோட்டார் உருளுவது, தேய்ந்தும் ஊர்ந்தும்செல்வது போலாயிற்று. பாதையிலே வண்டி எக்காரணத்தாலோ ஒட்டிக்கொண்டுவிட்டது போன்ற ஒரு நிலை. ஒரு திருப்பம் வந்தது, 'பன்ச்சர்' ஆகிவிட்டது போலிருக்கிறது என்று கூறி வண்டியை நிறுத்தச் சொல்லுகிறேன். வண்டி தானாகவே நின்றுவிட்டது;எந்தச்சக்கரத்திலே'பன்ச்சர்' ஆகிவிட்டதுஎன்று பார்க்கக் கீழேஇறங்கினேன்—உடனிருந்த தோழர்கள் பொன்னம்பலனாரும் மதியழகனும் இறங்கினர். நான்கு சக்கரங்களில் எது கெட்டுக் கிடக்கிறது என்று பார்க்கிறோம். வண்டியில் மூன்று சக்கரங்கள் மட்டுமே உள்ளன! பின் சக்கரங்களிலே ஒன்றுகாணோம்! திகைத்துப்போய் நின்றோம் நீங்கள் என்னை விட்டுவிட்டாலும்நான்உங்களிடம் வந்து சேராமல் இருப்பேனா என்றுகூறுவதுபோலஅந்தச்சக்கரம் பின்புறம் உண்டு வந்து கொண்டிருந்தது. 'அச்சு' முறிந்துவிட்டது; 1500 அடி பள்ளம் கீழே. எதிரே திருப்பம்; பாதையோ வளைவு! வண்டியிலேயோ மூன்று சக்கரங்கள்!

அவ்வழி வந்தவர்கள் அனைவரும் இக்காட்சி கண்டு திடுக்கிட்டுப் போயினர். 'அவர்கள் பேசிக் கொண்டதைக் கேட்ட பிறகுதான், எவ்வளவு ஆபத்தான நிலை ஏற்பட்டது என்பதும், எவ்வளவு எதிர்பாராதவிதத்தில் தப்பித்துக் கொண்டோம் என்பதும் எங்களுக்கே தெரிந்தது.

தம்பி! நமது இயக்கத் தோழர்களிடம் நல்லார்வம் நிரம்ப இருக்கிறது—அதுபோலவே, நம்மிடம்உள்ள சாதனங்கள் பழுதுபட்ட நிலையில் உள்ளன—ஆர்வம்தான் துணை நிற்கிறது—நாலுக்கு மூன்று என்றாகும் போது, எப்படியோ நமது பயணம் நடந்தேறிவிடுகிறது. ஆனால், எத்தனை நாளைக்குஇது போல,என்று எண்ணாமலிருக்க முடியவில்லை. எனவே, நாம் நமது ஆர்வம் திறமை ஆகியவற்றினைச் செம்மையாக வைத்துக் கொள்வதுபோலவே,'சாதனங்களை'யும்செம்மையாக்கிக் கொள்ள வேண்டும்.

திருவிதாங்கூர் சர்க்காரிடமிருந்து, தமிழ்ப் பகுதிகளைப் பெற எடுத்துக்கொள்ள வேண்டியமுயற்சி இருக்கிறதே, அது ஏறத்தாழ நான் குறிப்பிட்ட இந்தப் 'பயணம்' போன்றது. முதலமைச்சர் காமராஜர் எமக்கு வண்டி ஓட்டிக்கொண்டு வந்த நண்பர் போலவே,அச்சுமுறிந்தாலும்அதையும்கவனிக்காமல் இருந்திடும் அலட்சியப் போக்கிலேதான் நடந்துகொள்கிறார். நிபுணர்களைச் சிந்திக்கவைக்கும் பிரச்சினையாக இருக்கட்டும், மக்களின் மனதிலே குழப்பமும் கொந்தளிப்பும்மூட்டிடத்தக்க பிரச்சினையாக,இருக்கட்டும், எவ்வளவு இன்றியமையாத பிரச்சினையானாலும், இடர்மிகுந்த தானாலும், இவருக்கு மட்டும் சர்வ சாதாரணமாகத்தான் எந்தப் பிரச்சினையும் காணப்படுகிறது. எதுபற்றியும் ஒரு அக்கரையற்ற தன்மை, அலட்சியப் போக்குக் காண்கிறோம்.

*ஆகட்டும் பார்ப்போம், அதற்கென்ன அவசரம், அது என்ன முக்கியம், அதுதானா வேலை, ஏன் இந்தப் பிரச்சினை, என்ற பேச்சிலேயே மன்னராக இருக்கிறார்!*

பிரச்சினைகளின் சிக்கல் புரியாததால் இவ்விதம் இருக்கிறாரா, புரிந்து, நம்மால் என்ன செய்யமுடியும் என்று திகைத்துப்போய்,அந்தத் திகைப்பை மறைத்துக்கொள்ளஇவ்விதம் பேசித் தொலைக்கிறாரா, என்பதும் புரியவில்லை!

தமிழ்நாடு என்று சென்னை இராஜ்யத்துக்குப் பெயர் இருக்கவேண்டும் என்று,நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் கூறுகின்றன—அவருடைய 'சகாக்களே' கூடத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கூறுகிறார்கள். ஒரு துளி பரபரப்பு,சிறிதளவு மனஎழுச்சி கொஞ்சம் ஆர்வம் தெரிகிறதா? இல்லை! இல்லை! தமிழ்நாடு என்று பெயரா? ஏனாம்? அதற்கென்ன இப்போதுஅவசரம்? தெலுங்கரும் மலையாளிகளும், சென்னை இராஜ்யத்தை தமிழ்நாடு என்றுதான் அழைப்பார்கள்! நாமே நம்மைத் தமிழ்நாடு என்று அழைத்துக் கொள்ள வேண்டுமா!—என்று கேட்கிறார்.

பெரியார் 'தமிழ் நாடு' என்ற பெயர் பெறக்கூட முடியாவிட்டால்,நாம் எதற்குத்தான் யோக்கியதை பெற்றவர்கள்

என்று இடித்துக் கேட்கிறார், காமராசர் இளிக்கிறாரே தவிர, ஒரு பிரச்சினையாகவே கொள்ள மறுக்கிறார்.

குடகு தனி அமைப்பாக இருத்தல் வேண்டும்—அதைக் கருநாடகத்துடன் இணைத்தல் கூடாது என்று கிளர்ச்சி இருக்கிறது—ஒரு ராஜ்ய முதலமைச்சராயிற்றே என்பதால் இவரிடம் இதுபற்றி முறையிடுகிறார்கள், என்ன பதிலளிக்கிறார் தெரியுமா இந்த நிபுணர்! குடகு தனி அமைப்பாக இருந்தால் என்ன, கருநாடகத்தின் நிர்வாகத்தில் இருந்தால் என்ன, இதற்கு ஏனய்யா தகராறு, இது ஒரு பிரமாதமான பிரச்சினையா? என்று கேட்கிறார்.

தேவிகுளம், பீர்மேடு ஆகியவற்றினைத் தமிழர்கள்பெறப் பாடுபடுவீர்களா? என்று கேட்கிறார்கள்—பதில் என்ன தெரியுமோ? அதற்கான முயற்சியைச் சென்னை சர்க்கார் கவனித்துக்கொள்கிறது—அதுபற்றி நீங்கள் யாரும் வீணாக மனதை அலட்டிக்கொள்ள வேண்டாம்—முயற்சிப்போம்; பெறமுடியாதுபோனாலும் குடி முழுகிப் போகாது; நாமெல்லாம் 'இந்தியர்'கள் தானே, எந்த இடம் யாரிடத்தில் இருந்தால்என்ன?

மைசூர் மைசூர் மக்களுக்கே, என்கிறார்களே அது அவருக்குப் பிடிக்கவில்லையாம்!

வேங்கடம் முதல் குமரி வரை என்று தமிழர் பேசுகின்றனரே அதுஅவருக்கு'அற்ப' விஷயமாகத்தோன்றுகிறதாம்!

சென்னை ராஜ்யம் என்ற பெயர் கூடாது, தமிழ் நாடு என்றுதான் இருந்தல்வேண்டும்என்கிறவிஷயம், சின்ன விஷயமாகி விடுகிறது இந்தப் பெரியவருக்கு!

வடநாடு வளருகிறது தெற்கு தேய்கிறதே என்று பொருளாதார நிபுணர்களெல்லாம்கூடக் கலக்கமுற்றுப் பேசுகிறார்களல்லவா, அந்தப் பிரச்சினையும் இவருக்குத் தேவையற்ற பிரச்சினையாகத் தெரிகிறது! தொழில்கள் வடக்கே இருந்தால் என்ன, தெற்கே இருந்தால் என்ன, எல்லாம் இந்தியாவில் தானே இருக்கிறது என்று மிகமிக அலட்சியமாகப் பேசிவிடுகிறார்.


அவருக்குப் பாவம், இத்தகைய பிரச்சினைகளில்உண்மையிலேயே பழக்கம் இல்லை. எனவே அக்கறை எழக் காரணம் இல்லை! இவை போன்ற பிரச்சினைகளைப்பற்றிக் கவனித்தாக வேண்டிய இடத்திலே அவர் அமர்ந்துவிட்டதால், இவரிடம் இவைகளுக்கெல்லாம் விளக்கம், பரிகாரம், கேட்கிறார்கள். அவருக்கோ ஆச்சரியமாகவும் இருக்கிறது, அருவருப்பாகவும் இருக்கிறது. அவர் கடந்த முப்பதாண்டுகளாக ஒரேஒரு பிரச்சினையைத்தான் அறிந்திருக்கிறார், இன்றும் அவருக்கு அந்த ஒரே பிரச்சினையிலேதான் அக்கறைஇருக்கிறது-மாடு! மாடு!! மாடு!!

சிங்கம்—ஒட்டகம்—சைகிள்—ஆலமரம்—குடிசை—கதிர் அரிவாள்—தாமரைப்பூ!—இவைகளெல்லாம் தோற்கவேண்டும், 'மாடு' வெற்றிபெற வேண்டும்.. இது ஒன்றுதான் அவருடைய பிரச்சினை—இதிலேதான் அவருக்கு அக்கரை—இதற்குத் தகுந்த திறமையையும் வசதிகளையும் பெற்றுக்கொள்வதிலேதான் அவர் காலங்கழிக்கிறார்—இந்த நோக்கம் வெற்றி பெறுவதற்கான தொடர்புகள்—துணை—தோழமை—கூட்டு—இவைகளிலேதான் அவர் அபாரமான அறிவாற்றலைக் காட்டுகிறார்—இதுதானே ஒரு ராஜ்ய முதலமைச்சருக்கு வேலை என்று கேட்டவரிடம், இதைவிட வேறு வேலை என்ன இருக்கிறது என்று, அவர் கேட்கவே செய்தாராம்!

ஒவ்வோர் 'ராஜ்ய' முதல்வர்களும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், எமக்கு இந்தத் திட்டம் வேண்டும், இவ்வளவு தொகை வேண்டும்-இராஜ்யங்கள் புதிதாக அமையும்போது இன்னின்ன பகுதிகள் வேண்டும்,இன்னின்ன உரிமைகள் வேண்டும் என்று கேட்டும், கிளர்ச்சி நடத்தியும் வருகிற நேரமாகப் பார்த்து,இவர் செய்தது என்ன?ஒட்டகத்தை நுழைய விடாதீர்கள், சிங்கத்தை விரட்டுங்கள்; அருணாசலம் நல்லவர்,ஆண்டியப்பன் வேண்டியவர், மாடு நல்ல பிராணி மறவாது'சூடு போடுங்கள்' என்று இந்த 'வேலை'யைத்தான் செய்து கொண்டிருந்தார். இதுதான் இவருக்கு உகந்த வேலை, இதற்குமட்டுமே இவர் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறார். எனவே நேருவாகப் பார்த்து, நியாயத்துக்குக் கட்டுப்பட்டு, தமிழரின் உரிமைகளைத் தந்தால்உண்டேதவிர, தம்பி! காமராஜர் தமது திறமையினால், தமிழரின் உரிமையைப் பெற்றுத் தருவர், என்று என்னால் துளியும் நம்பமுடியவில்லை. கேட்பார்—புள்ளி விவரம் தரப்படும், அதைத் தபாலில் அனுப்புவார்—டில்லி இணங்க மறுத்தால் சரி, போனால் போகட்டும் தேவிகுளம், இங்கு இருந்தால்என்னஅங்குஇருந்தால் என்ன என்று கூறிவிடுவாரே தவிர, தமிழர் உரிமை, தமிழகம், இவைபற்றித் துளியும் அக்கரை காட்டமாட்டார். நாம்தான் அவரைப் பச்சைத் தமிழர் என்று பாராட்டுகிறோம்—அவர், மொழி,இனம்.நாட்டு உணர்ச்சிகளுக்குத்தமது உள்ளத்தில் இடமளித்துப் பழக்கப்பட்டவரே அல்ல-அவருக்குச் சுறுசுறுப்பும் தெம்பும் தரக்கூடிய ஒரே பிரச்சினை, 'ஓட்டு வேட்டை' ஒன்றுதான். வேறு எதிலும் அவருக்கு அக்கரையும் கிடையாது,பயிற்சியும் ஏற்பட்டதில்லை—வேறு எல்லாப் பிரச்சினைகளும் அவருக்குச் 'சின்ன விஷயம்'—ஆகட்டும் பார்க்கலாம்—அதனால் என்ன, என்பவைகளே! !

அன்புள்ள,

6—11—1955.



# குன்றெல்லாம் கேட்கிறது!

*நாகநாட்டு விடுதலைக் குரல்—திராவிட நாட்டுப் பிரிவினை.*

தம்பி,

*அமைச்சர் வருகிறார்! நேரு பண்டிதரிடம்கூட நெரித்த புருவத்துடன் பேசும் நிலைபெற்ற அமைச்சர் வருகிறார்!!*

உள்நாட்டுப் பாதுகாப்புப் பொறுப்பு யாரிடம் இருக்கிறதோ, அப்படிப்பட்ட அமைச்சர் வருகிறார்.

உள்நாட்டுப் பாதுகாப்புப் பொறுப்பு என்றால், சாமான்யமானதா! இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம் விதித்திடும் ஆற்றல் இந்த அமைச்சரிடம்இருக்கிறது என்பது பொருள்!

'ஜாலியன்வாலா' நடக்கட்டும் என்று அவர் உத்தரவிட்டால் போதும், நூற்றுக்கணக்கான 'டயர்கள்' ஓடோடிவந்து தமது திறமையினைக் காட்டி, பட்டமும் பதக்கமும் பெற்று அவருக்குப் பணிவிடை புரியக் காத்துக் கிடக்கிறார்கள் என்று பொருள்!

வீடுகளைத் தரைமட்டமாக்குங்கள்! விம்மிடுவோருக்கு விலங்கிடுங்கள்! வீரம் பேசுவோரின் விலாவை நொறுக்குங்கள்! கண்டனக் குரல் கிளம்பினால், காட்டு மிருகங்களை வேட்டையாடுவது போல், துரத்தித் தாக்குங்கள் என்றெல்லாம் கட்டளைகள் பிறப்பிக்கும் வாய்ப்புப் பெற்றிருக்கிறவர் என்று பொருள்!

இந்தியத் துணைக்கண்ட முழுவதும் உள்ள 'போலீஸ் படைகள்' அவர் சுட்டுவிரல் காட்டும் திக்குநோக்கித் தாவும்! அது போதாதென்று அவர் கருதினால், பட்டாளத்தையும் வரவழைக்க முடியும்.

கடும் தண்டனை!
கடும் தண்டனை!
காலை மாலை கன்றுக்குட்டிக்குப்
பாலை ஊட்டாதே!
இந்தக் காவலன் இட்ட தடையை மீறி
வாலை ஆட்டாதே!
ஆட்டினால், கடுந்தண்டனை!

என்ற உடுமலைக் கவியின் பாடலைச் சொர்க்க வாசலில் கேட்டதுண்டல்லவா—அதுபோன்ற தடை உத்தரவுகள் போடவும், கடுந் தண்டனைகளை விதிக்கவும் 'உரிமை' பெற்றவர் என்பது பொருள்!

பேச்சிலே, காரம் அதிகம்! போக்கு, பாதுஷா போன்றது!

இத்தகைய அமைச்சர் பண்டித பந்த் பவனி வருகிறார், உமது பிரதேசத்தைப் பார்வையிட வருகிறார் பராக்! பராக்! பச்சைப் பந்தல்களைப் போடுங்கள்! பாதைகளைச் செப்பனிட்டு வையுங்கள்; தோரணங்கள் கட்டுங்கள்! மலர்களை வாரித் தூவுங்கள்! மாலைகள் பலப்பல தொடுத்திடுங்கள்! அவர் அக மகிழ்வது உமக்குத்தான் நல்லது! புன்னகை பூத்த முகத்துடன் அவரை வரவேற்றால், புதுவாழ்வு கிடைத்திடும் உங்கட்கு. புகை கிளம்பக் கூடாது; பகை தெரியக் கூடாது. வருகிறவர், சாதாரண அமைச்சர் அல்ல; போலீஸ் மந்திரி!

தம்பி! நாக நாடு சென்றார், டில்லியில் தர்பார் நடாத்தும் பண்டித பந்த். அவர் 'விஜயம்' பற்றிய செய்தியை மிகச் சிரமப்பட்டு அசாம் சர்க்கார் பரப்பி, பண்டிதரின் பவனியை இரம்மியமான தாக்க முயன்றனர்.

நாகநாடு, உனக்குத் தெரியும்—விடுதலைக் கிளர்சித் தீ கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் இடம் என்பது.

குற்றேவல் புரிந்து கிடந்திடும் வர்க்கமல்ல நாங்கள், நத்திப் பிழைத்திட மாட்டோம், கோடி கொட்டிக் கொடுத்தாலும் மாற்றானின் அடிவருட மாட்டோம், எமக்கு வீரவாழ்வு வேண்டும், தனி அரசு வேண்டும் என்று கூறிடும் விடுதலை வீரர்கள், அசாம் மாநிலத்துடன் இணைக்கப்பட்டுக் கிடக்கும் குன்றுகள் சூழ்ந்த நாகநாட்டிலே உள்ளனர். அவர்களின் விடுதலைக் கிளர்ச்சி காலை அரும்பி மாலை கருகும் என்று டில்லியில் பலமுறை 'ஆருடம்' கணித்தனர். எல்லா ஆருடமும் பொய்த்துப் போய்விட்டன. விடுதலைக் கிளர்ச்சி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த வண்ணம் இருக்கிறது —ஏன் வளராது! குன்றேறி அந்நாட்டுக் குமரர்கள் காணும் தாயகத்தின் எழில், அடவிகளில் அருவிகளில், வயல்களில் வாழ்க்கை முறைகளில் தெரியும் தனித்தன்மை அவர்களைத் தன்னரசு பெற்றாகவேண்டும் என்ற ஆர்வத்தைக் கொள்ளச் செய்கிறது. பதவிக்குப் பல்லிளிக்கும் போக்கும், அடக்கு முறைக்கு அஞ்சிடும் தன்மையும், மலைக் காற்றினை உண்டு வளம்பெற்றுத் திகழும் அந்தமக்களிடம் எழமுடியாதல்லவா! தங்கத்தால் செய்த கூண்டு எனினும் தத்தை சிறையை விரும்புவதில்லையே. இரும்பை ஒடித்திடும் ஆற்றல் இல்லை என்பதையும் அறியாமல், சிறகடித்த வண்ணமல்லவா இருப்பது காண்கிறோம்,

பச்சைப் பசுங்கிளியே! உனக்குப் பாலும் பழமும் தந்திடுவேன்! என்று கொஞ்சினாலும் கிளியின் நினைவு

அத்தனையும், பூங்காமீது இருக்கும் அளவுக்கு,அன்புபொழிந்திடும் அந்தப் பூவையிடம் இருப்பதில்லையே!

பூனைக்கு, நித்த நித்தம் ஒரு கிள்ளை'யைக் கொடுத்துக் கொண்டேனும், எஜமான் சொல்வதைச் சொல்லும் கிளிப்பிள்ளை நாகநாட்டிலே இல்லை!

மனிதர்களின் தலையைச் சீவி, மண்டை ஓடுகளை மாலைகளாக்கிப் போட்டுக்கொள்ளும் மகா பயங்கரமான காட்டுமிராண்டிகள் இந்த நாகர்கள் என்று இழிமொழி பேசுவோர் உளர் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் இன்று ஈடுபட்டிருப்பது தலைகளை நொறுக்கிடும் தன்னிகரற்ற தூய பணியில்—தலைகளை வெட்டும் வேலையில் அல்ல!

நாகநாடு நாகருக்கே! என்கிறார்கள்; டில்லிக்கு வியப்பாக இருக்கிறது!

மலையும் காடும், ஒரு நாடா? பொன்னும் பொருளும் குவிந்தா கிடக்கின்றன? தொழிலும் வாணிபமும் பெருகியா இருக்கின்றன? மாடமாளிகை கூடகோபுரம் உண்டா? மணி அணி அணிந்திடும் சீமாட்டிகளும் அவர்தம் மஞ்சத்தில் மிஞ்சுசுகம் காணும் பிரபுக்களுமா உள்ளனர்?

ஒரு டாடா, ஒரு பிர்லா, ஒரு டால்மியா உண்டா? பசும் புல் சோலை இருக்கிறது; பல பொருள் தரும் ஆலை உண்டா? பெற்றெடுத்த செல்வத்தைத் தாய்மார் முத்தமிடுவது இருக்கலாம், எழிலரசிகளின் மார்பகத்திலே புரளும் முத்து மாலைகள் உண்டா? இராஜ பவனங்கள் இல்லை! இரசாயனச் சாலைகள் இல்லை! இந்நிலையில் உள்ளபோது, நாகநாடு நாகருக்கு என்று முழக்கமிடுகிறார்களே! என்ன பேதைமை! என்ன பேதைமை! என்று டில்லி வியப்படைகிறது. நாகர்களோ, என்னென்ன இல்லை இல்லை என்று கூறி இழித்தும்பழித்தும்பேசுகிறார்களோ,அவைகளையும்அவைகள் அனைத்தையும் மிஞ்சக் கூடியனவற்றையும் பெற்றிடும் பேராற்றல் எமக்கு உண்டு. கட்டுண்டு கிடந்தால் இழிநிலை தான் நீடிக்கும். எமக்கென்று ஓர் கொற்றம் அமைந்திடின், ஏற்றம் பெறுவோம்—இதிலே சந்தேகம் கொள்வோர் எமது கட்டுடலைக் காண்பீர், கனல் கக்கும் கண்களைக் காணீர்; தோள் வலுவைக் காண்பீர், இயற்கை எமக்கென்று அளித்துள்ள ஓர் நில அமைப்பைக் காணீர், என்று கூறுகின்றனர்.

கடலில் முத்து, காட்டிலே சந்தனம், வயலில் எருதுகள், வாவியில்அன்னங்கள்,ஆறுகளில்வாளைகள்,அவைகளைமயக்கிடும் குவளைகள், தாமரை பூத்த குளம், தேன் சிந்தும்தோட்டம், வேழமும் வேங்கையும் ஒன்றோடொன்று போரிட்டுக் களம் அமைக்கும் காடுகள், அவைகள் மயங்கிடும் வண்ணம் பார் முழுதும் ஏர் முனையிலே என்று பண்பாடும் உழவர் தரும் செல்வம், தங்கம், இரும்பு, நிலக்கரி—காவிரி பெண்ணை, கோட்டை கொத்தளம்,சிலம்புமேகலை,செழியன்வள்ளுவன்,

—எனும் எதை எதையோ காட்டி, திராவிடநாடு திராவிடருக்கே, என்று நாம் முழக்க மிடுகிறோம்!

புனலிடைமூழ்கிப் பொழிலிடை உலவிப் பொன்னார் இழையும் துகிலும் பூண்டு—நமது மாதர் காட்சி தருவதைக் காட்டுகிறார் புரட்சிக் கவிஞர். புல்லர்கள் இக் காட்சி கண்டு மாசு கொண்ட மனத்தினராகிவிடுவரோ என்று அஞ்சுபவர் போல, எமது தாயகத்துத் தையலர் பொன்னுடை பூண்டவர், பொழிலினில் உலவிடுபவர், ஆனால் அப்பா! அவர்கள் கனிமொழி பேசி இல்லறம் நாடும் காதல் மாதர் என்று இயல்பை எடுத்துக் காட்டுகிறார்! இவ்வளவும் கேட்டுவிட்டு, இறுமாந்து கிடக்கும் வடவர், நாக நாட்டினரின் முழக்கத்தை மட்டுமா எளிதில் கவனிப்பர்! எங்கோ ஓர் மூலையில் கிளம்பும் காட்டுக் கூச்சல் என்றுதான் அலட்சியமாகக் கருதுவர், என்றுதான் தம்பி! நீ எண்ணிக்கொள்வாய். உண்மை அதுவல்ல! நம்மைவிட, நாகநாட்டினரால் டில்லி அதிபர்களின் கவனத்தை ஈர்த்திட முடிந்திருக்கிறது மட்டுமல்ல—டில்லிக்குக் கலக்கமேஏற்பட்டிருக்கிறது. நாடுகளிலே நல்லறிவுப் பிரசார முறைகளின் மூலம் நடைபெறும் விடுதலைக் கிளர்ச்சியை, அப் பாவிகளைத் தட்டிக்கொடுத்தும், அற்பர்களுக்கு 'பவிஷு' கொடுத்தும், அடுத்துக் கெடுப்போரைத் தூக்கி விட்டும், கெடுத்திட, குலைத்திட முடிகிறது, ஓரளவுக்கேனும்! காணுங் காட்சி அனைத்தும் நெஞ்சு உரத்தை வழங்கும் தன்மையில் அமைந்துள்ள அந்த மலை மண்டிலத்து மக்களிடம், இந்த முறைகள் பலன் தரவில்லை!

டில்லி, புன்னகை காட்டுகிறது, பொன்னை வீசுகிறது—நாகநாடு ஏறெடுத்துப் பார்க்க மறுக்கிறது.

நண்பர்களே! நாகர்களே! எங்கே இருக்கிறீர்கள்? உங்களைக் காணவே வந்துள்ளோம்—என்று உபசார மொழி பேசுகிறது டில்லி. குன்றுகளிலே, இங்கும் அங்கும் தெரிகிறார்கள். சிறிது நேரத்தில் எல்லாக் குன்றுகளிலும் தெரிகிறார்கள், பாதைகள், மலைகளுக்கிடையில்! மலைகளுக்குத் துணையோ காடுகள்! இடையிடையே உள்ள சிற்றூர்களிலேயோ, நாகர்கள். அவர்களின் உள்ளமோ, வீரம் நிரம்பிய பெட்டகம். டில்லி திகைக்கிறது.

நாகர்களின் தலைவன் பிசோமீது டில்லி, வகைவகையான கணைகளை வீசிப் பார்த்தது. பாராளு மன்றத்தின் பளபளப்பு, இராஜபவனச் சிறப்பு, பதவிப் பசை—எதனாலும் இந்த மாவீரனை மயக்க முடியவில்லை.

வெளிநாட்டாரின் கையாள் என்று பழி சுமத்தினர்—வெற்றுரை என்று கூறி, எள்ளி நகையாடினர் நாகர்கள்.

கிருஸ்தவப் பாதிரிமார்கள் சிலர் தூண்டிவிடும் கிளர்ச்சி இது என்றனர்—இப்பொய்யுரையைக் கூறிட உங்கட்கு வெட்கமாக இல்லையா என்று கேட்டனர், நாகர்.

நாகநாடு, வளமும் வசதியும் குறைந்த நிலையில் இருக்கிறது—நல்ல பாதைகள்—நவீன சாதனங்கள்—சமூக சேவை அமைப்புகள்—இவைகளுக்கெல்லாம் நாங்கள் பணம் தருகிறோம் வேண்டியமட்டும்—பெற்றுக்கொண்டு, நாட்டை அழகுபடுத்தி மகிழுங்கள் என்று டில்லி கூறிப் பார்த்தது. வழுக்கி விழுந்த வனிதை அல்லவா, மாலைக்கும் சேலைக்கும் மயங்குவாள்? நாகர்கள், டில்லியின் உதவித் தொகையைத் தீண்ட மறுத்தனர்.

ஊராட்சி மன்றங்கள் அமைக்கிறோம்—அவைகளிலே அமர்ந்து உங்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்து கொண்டு, உரிமையைச் சுவையுங்கள் என்றனர்! கெண்டையை வீசி வராலைப் பிடித்திடும் தந்திரம் என்று கண்டு கொண்டனர்; தேர்தல்களை வேண்டாமென்றனர்.

டில்லியின் ஒப்பற்ற தலைவர்கள், 'இராணுவம்' புடை சூழப் பவனி வந்தால், காட்சி கண்டு கவர்ச்சி அடைவர் என்று எண்ணி, அந்த முறையையும் கையாண்டு பார்த்தனர்—பலன் இல்லை.

பிசோ, நாகர்களை மலைச்சாரல்களில், அடர்ந்த காடுகளில், சிற்றூர்களில், திரட்டிஞன்—தாயக விடுதலை ஆர்வத்தை ஊட்டிய வண்ணமிருந்தான். இப்புறமிருந்து டில்லியின் படைகள் தாக்கியதால், மலைப் பாதைகள் வழியாகக் காடு பல கடந்து, பர்மா சென்றனர் நாக நாட்டு விடுதலை வீரர்கள்; இந்தியாவின் நேசத்துக்குப் பாத்திரமாக இருக்கும் பர்மாவைத் தட்டிக் கொடுத்து, அங்குத் தஞ்சம் புகுந்த நாகர்களைத் துரத்திப் பிடித்தது டில்லி. இந்த முறைகளால் பலன் கிடைக்காது போகவே, பிரிட்டிஷாரின் பிரித்தாளும் திட்டத்தைக் கையாண்டு, நாகர் தேசீயக் கழகம் எனப்படும் பாசறையில் பிளவு ஏற்படுத்தி, அதன் பயனுக விடுதலைக் கிளர்ச்சியை நசுக்கலாம் என்று முனைந்தது டில்லி-பத்து தலைவர்கள் கிடைத்தனர் என்று மகிழ்கிறது! அவர்களையோ நாகர்கள், 'துரோகிகள்,' 'தூர்த்தர்கள்' என்று கூறுகின்றனர்.

இந்தப் பத்துத் தலைவர்களும், நாகநாடு கோரிக்கையை மறுக்கவில்லை! பிசோவின் பலாத்கார முறையைக் கண்டிக்கிருர்கள்! ஆனல் பிசோ பலாத்காரம் என் கொள்கை அல்ல என்று முன்பே திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர்.

அசாம் மாகாண முதலமைச்சர் விஷ்ணுராமமேதி என்பவரைக் கண்டு பேசிப் பலாத்காரத்தைக் கண்டித்து பிசோ அறிக்கையே தந்திருக்கிருர்! எனினும் நாகர் விடுதலைக் கிளர்ச்சி என்பது பயங்கரமானதோர் பலாத்தார இயக்கம் எனவே அதனை ஒடுக்கியே தீருவோம் என்று டில்லி கொக்கரித்த வண்ணம் இருக்கிறது.

இந்நிலையிலேதான், தம்பி! பண்டித பந்த் கிளம்பினார் நாக நாட்டுக்கு வருகிறார். அமைச்சர், வரவேற்பு வளைவுகள் அமையுங்கள் என்று அசாம் சர்க்கார் மும்முரமான பிரசாரத்தில் ஈடுபட்டனர். நாகர்களில் மயக்கத்தில் சிக்கக்கூடியவர்களைப் பிடித்திழுத்து வைத்து, பழகிய யானையைக் கொண்டு காட்டிலே யானைகளைப் பிடிக்கிறார்களாமே, அந்த முறைப்படி வேலைசெய்து பார்த்தனர். நாகர் விடுதலைக் கழகமோ, அமைச்சருக்காக ஏற்பாடாகும் வரவேற்பு வைபவங்களில் யாரும் கலந்து கொள்ளாதீர்கள் என்று அறிக்கை வெளியிட்டது. நெஞ்சு உரத்தையும் நேர்மைத் திறத்தையும் கவனித்தாயா தம்பி! வருகிறவர், பெரிய தலைவராக இருக்கலாம்—புகழ் தாங்கியாக இருக்கலாம்—பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எனும் சிங்கத்தை அதன் குகைக்குள்ளே பிடரியைப் பிடித்தாட்டிய பெரு வீரனாக இருக்கலாம்—ஆனால், நாகர்களைப் பொறுத்த வரையில், அவர் வெறுக்கப்படவேண்டிய பகைவன் என்பதிலே ஐயமில்லை. ஆகவே, வரவேற்பு விழாவில் கலந்து கொள்ளாதீர்கள் என்று நாகர் தலைவன் கூறுகிறார்—டில்லி அறிக்கையே, நாகர் தலைவனின் அறிக்கை வெற்றி பெற்றது ஓரளவுக்கு என்று குறிப்பிடுகிறது. தம்பி! இதற்குப் பொருள் என்ன தெரிகிறதா? பண்டித பந்த் பவனி வந்தார்—தோரணங்களைக் கண்டார்—கொடி அலங்காரம் தெரிந்தது—அதிகாரிகள் அசடு வழிய நின்றனர்—ஆனால், நாகர்கள் சேர்ந்தவில்லை. இஃதல்லவா நாட்டு விடுதலை உணர்ச்சி வீறுடன் இருப்பதற்கான அறிகுறி! இங்கே? எண்ணும்போது வெட்கமும் பிறக்கிறது, வேதனையும் கொட்டுகிறது. டில்லி பாராளுமன்ற உறுப்பினர், திருச்சிப் பிரமுகர், கொடை பல தந்த குணவான், பெரியாரின் பேராதரவு பெற்ற சீமான், நேரு பண்டிதர் வந்தபோது, அவருக்கு மாலை சூட்டி, மகிழ்வூட்டி, பெருமிதம் அடையத் துடியாய்த் துடித்தாரம்—மனுச் செய்துகொண்டு, மாலை தயாரித்து மாளிகையை அலங்கரித்துவிட்டு, மாவீரன் நேரு வருகிறார், அவருக்கு மரியாதை செய்வோம் என்று ஆவலுடன் இருந்தாராம்—மனு நிராகரிக்கப்பட்டது—எமது மாபெருந் தலைவருக்குத் தாங்கள் அணிவிக்க விரும்பும் மாலையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதை அறிவித்துக்கொள்கிறோம் என்று சர்க்கார் அதிகாரிகள் கூறிவிட்டனராம்!

தம்பி! மதுரம் M.P. தரும் மாலையை ஏற்றுக்கொள்ள நேரு பண்டிதருக்கு நேரம் கிடைக்கவில்லை—பாட்டுக்கார அம்மாளைக் காணவும், ஆட்டம் ஆடும் அம்மாவிடம் பேசவும் இத்தனை பெரிய தலைவருக்கு நேரம் கிடைத்தது! என்று பெரியார் பேசினது தெரிந்தபோது, எனக்குக்கூட உருக்கமாகத்தான் தெரிந்தது! ஆனால், வேறொன்றைப் பார்க்கும்போது, வேதனைதான் பிறக்கிறது! நாகநாட்டுத் தலைவரிடம் எழுந்துள்ள நாட்டுப்பற்றுணர்ச்சி, விடுதலை வேட்கை, வீரா

வேசம், மதுரம் அவர்களிடம் இருந்திருந்தால், மாலையும்கையு மாகவா காத்துக்கொண்டிருந்திருப்பார்? இங்கே மாலையும் கையுமாக மதுரம்! நேரமில்லை இதற்கெல்லாம் என்று கூறி அலட்சியப்படுத்தும் நேரு! தம்பி! நாகநாட்டிலே, வருகிறுர் அமைச்சர், வரவேற்று உபசரியுங்கள் என்று சர்க்கார் சங்கு ஊதுகிறது; நாகநாட்டுத் தலைவன், நமக்கு அந்த வரவேற் பிலே வேலை இல்லை என்று கூறுகிறுர்; நாகர்கள் நமது விடுத லைக் கிளர்ச்சியை ஒடுக்கும் பகைவனை நாம் வரவேற்பதா— மானக்கேடல்லவா என்று கூறுவதுபோல, வரவேற்பிலே கலந்துகொள்ளாது ஒதுங்கிவிடுகிறுர்கள்.

நாக நாடு! திராவிட நாடு ஒப்பிடும்போது, என்ன தோன்றுகிறது, தம்பி?

தம்பி! அதுமட்டுமல்ல, கோலாகலமாகப் பவனி வந்தார் அமைச்சர்—நாக நாட்டு விடுதலை வீரன், அவரைச் சட்டை செய்யவில்லை—சென்று பார்க்கவில்லை!

நாக நாடு எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பண்டித பந்த் தெரிந்துகொள்ள இதைவிட வேறென்ன வேண்டும்?

நாக நாடு நாகருக்கே! என்ற திட்டத்தை விட்டுவிடு கிறேன், (டில்லி ஆதிபத்தியத்துக்கு) இந்திய குடியாட்சிக்குக் கட்டுப்படுகிறேன் என்று வாக்களித்துவிட்டு, அமைச்சரைப் பேட்டி கண்டு பேசலாம் என்றனராம் அதிகாரிகள். பிசோ இணங்கவில்லை, என்று பத்திரிகைச் செய்து கூறுகிறது! இணங்காததை வார்த்தைகளால் சொல்லி இருக்கமாட்டார் தம்பி! ஒரு அலட்சியமான புன்னகை மூலமே பதிலளித் திருப்பார்! பைத்யக்காரர்களே! நாக நாடு நாகருக்கே எனும் என் இதயகீதத்தை இழந்துவிட்டு, இந்த உற்சவ மூர்த்தி யைத் தரிசிக்கவா? என்ன பைத்யக்காரத்தனம்! வெள்ளையனை எதிர்த்துச் சுயராஜ்யப் போர் நடத்தினீர்களாமே, உங்களுக்கு விடுதலை உணர்ச்சியின் மாண்பு விளங்காத காரணம்என்ன? கண்ணை விற்றுவிட்டுச் சித்திரம் வாங்குவதாம்! என்றெல்லாம் புன்னகை பேசியிருக்கும்,

"வறுமையை ஓட்டுவோம்—வாட்டத்தைத் துடைப் போம்—புது வாழ்வு அளிப்போம்—மான்யம் தாராளமாக வும் ஏராளமாகவும் அளிக்கிறோம்-தயக்கமின்றிக் கேளுங்கள் —தனிநாடு என்ற மனப்பான்மை கூடாது—இந்தியாவில் இருந்தால் எல்லா வசதியும் கிடைக்கும்"—என்றெல்லாம் பண்டித பந்த் பேசினாராம்.

அமைச்சரைச் சூழ்ந்து நின்றிருந்த அதிகாரிகள், இடை யிடையே (ஏற்பாட்டின்படி) கை தட்டி ஆரவாரம் செய்திருப் பர்! ஆனால், நாக நாட்டு விடுதலை வீரன் பிசோ? எந்தக் குன்றின்மீது நடந்து சென்றுகொண்டே வீர சுதந்திரம் வேண்டி நின்றுர், பின்னர், வேறொன்று வேண்டுவரோ! என்ற பண் பாடியபடி புதிய பாசறைகளை அமைப்பதற்காக ஏறு நடை போட்டுக்கொண்டிருந்தானே! இங்கே அலங்காரப்

பந்தலின்கீழ் அமர்ந்து, அமைச்சர், படை பலம், பண பலம் ஆகியவை பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது,

"தோழனே! விடுதலை கிடைத்திடும் அறிகுறி தெளிவாகி விட்டது..."

"வீரத் தலைவனே! மெத்த மகிழ்ச்சி; என்ன அறிகுறி கண்டீர்..."

"அறியாயோ, அதனை! நம்மை அடிமைகொண்ட அரசின் தலைவருள் ஒருவன் பவனி வருகிறான், நாக நாட்டில் "

"பெருமைக்குரியவரே! இதனையா நற்குறி என்கிறீர்? நமது தாழ்நிலையையன்றோ காட்டுகிறது இக்காட்சி?"

"இல்லை, நண்பனே! இல்லை! எதேச்சாதிகாரி பவனி வருகிறான், பவனியில் நமது மக்கள் இல்லை! பேசுகிறான் பிரமாதமாக, கேட்கும் நாகர் இல்லை!"

"மகிழ்ச்சி! மகிழ்ச்சி!"

"சீந்துவார் இல்லை!"

"தாங்கள் ஊட்டிய வீர உணர்ச்சி வீண் போகுமோ வீரத் தலைவ!"

"சீறினர்—சிந்தை நைந்தோமில்லை! தாக்கினர் அழிந்து படவில்லை. பிளவு மூட்டினர் - பதர் பறந்தது! மயக்க வந்தனர்—மன்றத்தில் நாகர் இல்லை. மகத்தான எழுச்சி, மகத்தான உணர்ச்சி! மலைகளே, கேண்மின்! வெண்மேகங்களே, காண்மின்! நாக நாடு நாகருக்கே! அந்தப் பிறப்புரிமையைப் பறித்திடப் படையும் பணமும், சிரிப்பும் சீற்றமும், பவனியும் விழாவும் பயன்படுமா, கூறுக!"

"நாக நாடு நாகருக்கே!"

"ஆமாம்! நண்பனே! நாக நாடு நாகருக்கே, என்ற முழக்கம், குன்றெல்லாம் கேட்கட்டும். குறைமதியுடையோர்கள் தெளிவு பெறும் அளவுக்குக் கேட்கட்டும்! எங்கும் எழட்டும் அந்த இலட்சிய முழக்கம்."

"தம்பி! இதுபோல உரையாடிக் கொண்டிருந்திருப்பர், நாகர்கள்!!

அங்கே அது! தம்பி! இங்கே நாம்,
மாலையிட வந்தபோது—எந்தன்
மன்னவன் மறுத்துவிட்டானே

என்று சோக கீதம் கிளம்பக் காண்கிறோம்! திரு இடமே! நாக நாட்டினைப் பார்த்தேனும் வீறுகொண்டெழு என்று கூறத் தோன்றுகிறது, பண்டித பந்த் நாகநாடு சென்று சீந்துவாரற்றுத் திரும்பிய 'சேதி'யைப்படித்தபோது. நான்மட்டும் முயன்றால் முடிகிற காரியமா? ஆகவேதான் தம்பி! உன்னிடம் கூறுகிறேன்! தம்பிஉடையான்படைக்கு அஞ்சான் அல்லவா!!

அன்புள்ள,

13—11—1955

அறிஞர்

# அண்ணாவின் நூல்கள்

தம்பிககு அண்ணாவின் கடிதங்களா—(முதற பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(இரண்டாம பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(மூன்றும் பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(நான்காம் பகுதி)

கைதி எண் — 6342

பார்வதி பி.ஏ.

ரங்கோன் ராதா

மாஜிக் கடவுள்கள்

காதல் ஜோதி

ஓர் இரவு

அண்ணாவின் சொற் செல்வம

★


# பாரி நிலையம்

184, பிராட்வே :: சென்னை-1

Jacket Printed at Neo Art Press, Madras-2